ஸ்ரீகலாவின்

இணையுமோ இருதயம்?



இணையுமோ இருதயம்?

ஸ்ரீகலா

அறிவு நிலையம் பதிப்பகம்

எண். 32/107, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
Email: arivunilayampathippagam@yahoo.com
செல்: 9003145746

இணையுமோ இருதயம்?

இணையுமோ இருதயம்?

மதுரை செல்லூரில் பரபரப்பான ஜன சந்தடியான தெருவில் இருந்த அந்த வீடு, காலை நேரப் பரபரப்பில் இருந்தது. பழைய கால கட்டை குத்திய அந்த வீடு, சமீபத்தில் தான் புதுப்பிக்கப்பட்டு இருந்ததை அதன் தோற்றப் பொலிவைப் பார்த்துச் சொல்லி விடலாம்.

வீட்டில் கமழ்ந்த சாம்பிராணியின் நறுமணம், அன்று வெள்ளிக்கிழமை என்பதைச் சொல்லாமல் சொல்லியது.

"எம் குலம் காக்க வந்த வீர அய்யனாரே... எல்லோரையும் நல்லா வையப்பா..." என்றபடி பூஜை

யறையில் இருந்த திருநீரைக் கை நிறைய எடுத்து நெற்றியில் பட்டை அடித்துக் கொண்டார், அந்த வீட்டின் தலைவர் தங்கவேலு.

"அய்யா..." என்ற குரலில், பூஜையறையில் இருந்து வெளி வந்தவர், வாசலுக்கு விரைந்தார்.

"அய்யா வணக்கமுங்க..." வயதான அந்த மனிதர் உடலைக் குறுக்கிக் கொண்டு மரியாதையாய் வணக்கம் கூற,

"ஏ பாண்டி... வாவே... வா... உள்ளாற வந்து உட்காரு..." தங்கவேலு அவரை வரவேற்று அமர வைத்தவர்,

"ஏத்தா ஈசு..." உள் நோக்கிக் குரல் கொடுக்க...

"என்னங்க...?" கணவனின் குரல் கேட்ட அடுத்த நொடி அங்கே ஆஜரானார், அந்த வீட்டின் எஜமானி அவரது மனைவி மாரீஸ்வரி.

வந்தவர் பாண்டியனைக் கண்டதும், "மச்சான்... சவுக்கியமா இருக்கீகளா...? அக்கா எப்படி இருக்கு...? கல்யாண வேலை எல்லாம் எப்படிப் போகுது...? ஏதும் ஒத்தாசை தேவைப்பட்டா சங்கடப்படாம சொல்லுங்க மச்சான்... நம்ம பயலுக எதுக்கு இருக்காக... ஒரு நடை அனுப்பி வைக்கேன்..."

"ஆத்தா... நீ ஐயாவுக்கு ஏத்த மகராசிம்மா... ஐயாவை மாதிரியே ஊருக்கு உதவுற குணம்..." பாண்டியன் மனம் திறந்து பாராட்டினார்.

"ஏத்தா... பேசிட்டே இருந்தா எப்படி...? காப்பி கொண்டு வந்து கொடுத்தா..." தங்கவேலு சொன்னதும்,

"சரிங்க..." என்றபடி உள்ளே சென்ற மாரீஸ்வரி யைப் புன்னகையுடன் பார்த்த பாண்டியன்,

"சொல் பேச்சு கேக்குற பொஞ்சாதி கிடைக்கவும் கொடுத்து வெச்சுருக்கணும் ஐயா... அதுல நீங்க கொடுத்து வெச்சவக... பொஞ்சாதி மட்டுமா... பிள்ளைகளும் முத்து மாதிரியில கிடைச்சு இருக்கு..."

பாண்டியன் பேச்சில் இருந்தது நூறு சதவீதம் உண்மை என்பதால், தங்கவேலுவின் கை அவரது பெரிய மீசையைப் பெருமையாய் நீவியது.

தங்கவேலு செல்லூரில் சொல்லிக் கொள்ளும் படியான முக்கிய ஆட்களில் ஒருவர். பல கடைகள், வீடுகள் கட்டி வாடகைக்கு விட்டிருக்கிறார். பத்து மதுபானக் கடைகள் சொந்தமாக இருக்கிறது. சொந்தமாக ஒரு திரையரங்கு இருக்கிறது. இத்தனை இருந்தும் அவரின் முக்கியத் தொழில்கள் கட்டப் பஞ்சாயத்து மற்றும் வட்டிக்குப் பணம் கொடுப்பது.

என்னதான் கட்டப் பஞ்சாயத்து என்றாலும், அவர் எப்போதுமே நியாயத்தின் பக்கம் நின்றுதான் பேசுவார். தன்னிடம் வரும் வழக்குகளில், அதைக் கொண்டு வரும் ஆட்களை வைத்தே அந்த வழக்கின் உண்மை நிலை என்ன என்பதைச் சரியாகக் கணித்து விடுவார். அதில் ஒரு சதவீதம் பொய் இருந்தாலும் அதை அவர் கையில் எடுக்க மாட்டார். செய்யும் தொழிலில் நேர்மை வேண்டும் என்பதில் அவர் கவனமாய் இருந்தார்.

அதேபோல்தான் வட்டித் தொழிலிலும்... எல்லோரும் மீட்டர் வட்டி, கிலோ மீட்டர் வட்டி என்று வட்டிக்குப் பணம் கொடுத்துக் கொண்டு இருந்த போது, முதலில் தனது சாதி சனத்துக்காகக் குறைந்த வட்டியில் பணம் கொடுத்தார்.

அவரின் குறைந்த வட்டி, நாளடைவில் அவருக்கு நிறைய வாடிக்கையாளர்களைப் பெற்றுத் தந்தது. அவர்களில் பெரும்பாலும் அன்றாடம் உழைத்து உண்ணும் ஏழை மக்களே. அதனால்தான் அவருக்கு மதுரை வட்டாரத்தில் தனி செல்வாக்கு இருந்தது.

தங்கவேலு - மாரீஸ்வரி தம்பதியினருக்கு மூன்று மக்கள். மூத்தவன் முத்துராம்... அவன் கூட்டுறவு அங்காடியில் வேலை பார்க்கிறான். அரைக்காசா இருந்தாலும் அரசாங்க உத்தியோகம் வேண்டும் என்று மாரீஸ்வரி புலம்புவதைக் கண்டு, அவன் அந்த அரசாங்க உத்தியோகத்தைத் தேர்ந்தெடுத்தான்.

அவனின் அமைதியான குணத்துக்கு அதுதான் சரி என்று அவனுக்குத் தோன்றியது. அவனின் மனைவி நித்யா... அந்தக் குடும்பத்துக்கு ஏற்ற மருமகள்... அவள் இந்த வீட்டிற்கு வந்த நான்கு வருடங்களில் கணவனு டனோ, இல்லை புகுந்த வீட்டினருடனோ எந்தச் சண்டைச் சச்சரவும் போட்டது கிடையாது. இதில் மாரீஸ்வரிக்கு மருமகளை நினைத்துச் சற்று பெருமைதான்.

முத்துராம் - நித்யா இவர்களின் ஒரே புதல்வன் அஜித். அவனோட பெயருக்குக் காரணம் அவனோட அருமை சித்தப்பாதான். அவனின் சித்தப்பா உதயகுமார் தங்கவேலு - மாரீஸ்வரியின் இரண்டாவது மகன்.

நடிகர் அஜித்தின் மிகப் பெரிய தீவிர ரசிகன். வக்கீலாக இருக்கிறான். தந்தை செய்யும் தொழிலுக்கு உறுதுணையாக இருக்குமே என்றுதான் அவன் வக்கீலுக்குப் படித்தது. இப்போது தன் தொழிலோடு தந்தையின் தொழிலையும் பார்த்துக் கொள்கிறான். அப்படியே குணத்தில் தந்தையைக் கொண்டு இருந்தான். எதற்கும் அஞ்சாதவன்... தைரியமானவன்... முரட்டுத்தன மானவன்.

முத்துராம், உதயகுமார் இவர்களின் ஒரே செல்லத் தங்கை சங்கீதா. அவளுக்கு ஒன்று என்றால், இரண்டு அண்ணன்களும் துடித்துப் போவார்கள். அந்தக் காலத்து சாவித்திரி, சிவாஜி பாசமலரை விட, இவர்களின் பாசமலர் கொஞ்சம் அதிகமாக இருக்கும். அவள் சென்னையில் உள்ள பொறியியல் கல்லூரியில் கடைசி வருடம் படிக்கிறாள். படிப்பு முடிய இன்னும் மூன்று மாதங்கள் தான் இருந்தன.

"சொல்லு பாண்டி... என்ன விசயம்...? காலையில வீடு தேடி வந்திருக்க..." தங்கவேலு பேச்சை ஆரம்பித்தார்.

"அது வந்துங்கய்யா..." தயக்கத்துடன் இழுத்தார்.

"என்ன பிரச்சினை, சொல்லுப்பா... எதுவா இருந்தாலும் நம்ம குமாரு பார்த்துக்குவான்..."

"ஐயா உங்க தயவுலதான் நம்ம பாப்பா மெடிக்க லுக்குப் படிக்குதுன்னு உங்களுக்கே தெரியும்..."

"அதான் தெரிஞ்ச சங்கதி ஆச்சே... மேலே சொல்லு," என்றபடி பார்த்தார் தங்கவேலு.

"காலேஜுல அவ சீனியர் பய ஒருத்தன் பாப்பாகிட்ட வம்பு பண்றான்... வம்புன்னா..." சொல்ல முடியாமல் அந்தப் பெற்றவரின் கண்கள் கலங்கின.

"வரம்பு மீறிப் பேசுறான் ஐயா... நம்ப புள்ளைங்க படிக்குதோ இல்லையோ, மானத்தோட வாழணும்ல... பேசாம படிப்பை நிறுத்திப்புட்டு மூத்தவ கல்யாணத்தோட அவளுக்கும் மாப்பிள்ளை பார்த்துக் கல்யாணத்தைப் பண்ணிப்புடலாம்னு பார்க்கிறேன்..." என்றவரின் குரலில், மகளை மருத்துவராக்கிப் பார்க்க முடியாத வேதனை தெரிந்தது.

"யோவ்... என்னய்யா பேசுற நீ... எவனோ செஞ்ச தப்புக்கு நம்ம வீட்டுப் புள்ள படிப்பை நிறுத்துவீகளோ... நீரு வீரனா இருந்தா அந்தப் பய படிப்பை முடக்கி வீட்டோட உட்கார வைக்கப் பாரும்...

"அதை விட்டுட்டு இப்படித் தலை குனிஞ்சு நிக்கக் கூடாதப்பு... அதான் நம்ம கொலத்துக்கு அழகு... நாம பொறந்த மதுர மண்ணுக்கும் கவுரத..." கோபத்துடன் பேசியவர், மீசையை நீவிக் கொண்டார்.

அதற்குள் மாரீஸ்வரி காபி கொண்டு வந்து கொடுக்க, "ஈசு... நாஞ் சொன்னேன்னு நம்ம குமாரை கூப்பிடாத்தா..."

தங்கவேலு, இரண்டாவது மகனை அழைக்கச் சொன்னார். அவன்தான் இதற்குச் சரியான ஆள் என்று நினைத்தார்.

"இதோ கூட்டியாறேன்..." சொன்ன மாரீஸ்வரி, மகனின் அறைக்குச் சென்றார்.

வெளியில் கிளம்புவதற்காக உடை உடுத்திக் கொண்டு, கண்ணாடியில் தலை சீவிக் கொண்டு இருந்த உதயகுமார், அன்னையின் வரவை உணர்ந்து திரும்பிப் பார்த்தான்.

"என்னம்மா...?" கேட்டபடி கைக்கடிகாரத்தைக் கட்டியவனைப் பெருமிதத்துடன் வருடியது அவரது கண்கள். உருவத்தில் மட்டும் இல்லாது, குணத்திலும் கணவனைக் கொண்டு இருக்கும் அவன் மீது அவருக்கு எப்போதுமே தனி வாஞ்சை உண்டுதான்.

வெள்ளை முழுக்கைச் சட்டையும், கறுப்புப் பேண்ட்டும் அவனை அவ்வளவு கம்பீரமாகக் காட்டியது.

"என் ராசா..." அவன் கன்னம் வழித்து திருஷ்டி கழித்தவர்.

"குமாரு... அப்பா கூப்புடுறாகப்பா..."

"இதோ போறேம்மா..." அடுத்த நொடி அறையை விட்டு வெளியேறித் தந்தையைத் தேடிச் சென்றான்.

"இதோ குமாரே வந்துட்டான்..." என்ற தங்கவேலு,

"குமாரு... பாண்டி சித்தப்பு என்னமோ சொல்றாருய்யா... அதை என்னன்னு கேட்டு விசாரிச்சுச் செய்யப்பா..."

"வாங்க சித்தப்பு..." என்று அவரை வரவேற்றவன், அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தபடி, "சொல்லுங்க சித்தப்பு..."

பாண்டியன், தன் மகளுக்கு நடந்த அநியாயத்தைச் சொல்லச் சொல்ல அவனுக்கு ரத்தம் கொதித்தது. "நம்ம தங்கச்சிகிட்ட வம்பிழுத்தவன நா பார்த்துக்கிடுதேன்... நீங்க கவலைப்படாதீங்க..."

அவருக்கு ஆறுதல் சொன்னவன், "மார்க்கெட்டுக்குப் போயிட்டு... கச்சேரிக்குப் போறதுக்கு முன்னாடி அப்படியே காலேஜுக்குப் போய் ரெண்டு தட்டு தட்டிட்டுப் போறேன்..."

"சின்னய்யன் சொன்னா சரிதேன்..." என்ற பாண்டியன், நன்றி கூறிவிட்டு விடைபெற்றுச் சென்றார்.

"குமாரு, அவனைப் போடுற போடுல நம்ம வீட்டுப் பொம்பளப் புள்ள கிட்ட மட்டும் இல்ல... இனி எந்தப் பொம்பளப் புள்ள கிட்டேயும் அவன் வாலாட்டக் கூடாது... என்ன...?" தங்கவேலு கர்ஜிக்க...

"ஆகட்டும்ப்பா... இதெல்லாம் ஜூஜூபி மேட்டரு... நா பார்த்துக்கிடுவேன்... நீங்க டென்சன் ஆவாதீங்க..." என்று அவரைச் சமாதானப்படுத்தியவன்,

"வாங்கப்பா... சாப்பிடப் போகலாம்... நேரஞ்சென்று சாப்பிட்டா உங்க உடலுக்கு ஒத்துக்காது..." என்றவனைப் பாசத்துடன் பார்த்த தங்கவேலு, எழுந்து தோளில் கிடந்த துண்டை உதறியபடி உள்ளே செல்ல, உதய் அவரைப் பின் தொடர்ந்தான்.

அந்நேரம் அங்கே வந்த முத்துராமைப் பார்த்தவர், "சின்னப்பு எங்கே...?" பேரனைக் கேட்டார்.

"உள்ளே ஸ்கூலு போகறதுக்கு அக்கப்போரு பண்ணிக்கிட்டு இருக்கான்... உங்க மருமவ அவகூட மல்லுக் கட்டிட்டு இருக்கா..." முத்து சலித்தபடி சொல்ல...

"விளையாடுற வயசுல படிக்கப் போட்டா... அவன் அடம் பிடிக்காம என்ன செய்வான்...? அவன் வயசுல நீ உங்கம்மா இடுப்பை விட்டுக் கீழே இறங்க மாட்டே... எல்லாத்துக்கும் அம்மா வேணும்... அந்த மாதிரிச் செல்லம் சொல்லிட்டுத் தீரிஞ்ச... அப்ப உம் மவன் எப்படி இருப்பான்..."

தங்கவேலு பேசியதைக் கேட்டு உதய்க்குச் சிரிப்பு வந்தது. வாய் மூடி அவன் சிரிப்பை அடக்க, அதைக் கண்டு முத்து அவனை முறைத்தான்.

"சரி, சரி... முறைக்காதே முத்து... நா போய் பார்க்கிறேன்... நீ அப்பாவைச் சாப்பிடக் கூப்பிட்டுப் போ..." என்று சொன்ன உதய், அண்ணனின் அறையை நோக்கிச் சென்றான்.

"அஜித்து கண்ணா... குளிக்க வாடா... இன்னைக்கு ஒரு நாளாவது நேரத்தோட ஸ்கூலுக்குக் கிளம்பு..." அறையின் நடுவில் இருந்த கட்டிலின் ஒரு பக்கம் இருந்து நித்யா கெஞ்சிக் கொண்டு இருக்க...

மறுபக்கம் நின்று இருந்த மூன்று வயசு அஜித், இடுப்பின் இருபுறமும் கையை வைத்துக் கொண்டு அம்மாவை முறைத்துப் பார்த்துக் கொண்டு இருந்தான்.

"நா ஸ்கூல் போ மாத்தேன்..."

"அடேய் படுத்தாதேடா..." மீண்டும் நித்யா தன் கெஞ்சலைத் துவங்க... அவனோ அறையின் வாயிலை நோக்கி ஓடினான். அங்கே வந்த உதய் அவனைப் பிடித்து, அப்படியே உயரே தூக்கிப் போட்டுப் பிடித்தவன்,

"டேய்... என்னடா ரகளை பண்ணுற...? அம்மா பாவம்ல... ஒரு நாளாவது ஒழுங்கா ஸ்கூலுக்குக் கிளம்பக் கூடாதா...?" அவனை மிரட்ட...

"போ... சித்து ஸ்கூல் வேணா..." தலையை இடமும் வலமும் ஆட்டித் தன் மறுப்பைத் தெரிவித்தான் சின்னவன்.

"டேய் அஜித்து... உனக்கு ஹன்சிகா பிடிக்குமா, இல்லை காஜல் அகர்வால் பிடிக்குமா...?" உதய் சின்னவனிடம் வெகு கவனமாகக் கேள்வி கேட்க... அதைக் கேட்டு நித்யா தலையில் அடித்துக் கொண்டாள்.

"கொழுந்தனாரே..." என்று பல்லைக் கடித்த நித்யா,

"சின்னப் பயகிட்ட பேசுற பேச்சா இது தம்பி... இந்த நடிகை எல்லாம் நீங்களே வெச்சுக்கோங்க... ஒண்ணும் தெரியாத எம் பையனைக் கெடுத்துறாதீக..." அவள் சொல்லி முடிக்கும் முன் அஜித்,

"எம்மி..." என்று சொல்லியவன், 'ஐ' படத்தில் வரும் 'மெரசலாயிட்டேன்' பாட்டை மழலையில் பாட...

"என்ன அண்ணி... உங்க சிங்கக்குட்டி உங்களை இப்படி அசிங்கப்படுத்திருச்சே..." அண்ணியைக் கேலியாய் நோக்கினான் உதய்.

"அடேய்... இங்கே வா... உன்னை என்ன பண்றேன் பாரு... இந்த வயசுல பாடுற பாட்டா இது...?" நித்யா மகனை அடிக்க வர... அவள் அடியிலிருந்து அண்ணன் மகனைக் காப்பாற்றியவன்,

"அஜித்து... நீ நல்லாப் படிச்சாதான் எமி மாதிரி பொஞ்சாதி கிடைப்பா... இல்ல அந்த அழுமூஞ்சி ஷைலுவை உனக்குக் கட்டி வெச்சிருவாங்க... படிப்பா இல்லை ஷைலுவா...?" அண்ணன் மகனிடம் பேரம் பேசினான் கை தேர்ந்த வணிகனாய். ஷைலஜா, நித்யாவின் அண்ணனின் ஒரு வயது மகள்.

"ஆயி ஷைலு... உவ்வே..." முகத்தில் அருவருப்பைத் தேக்கிச் சொன்ன அஜித்,

"நா ஸ்கூல் போவேன்..." உதய் கையில் இருந்து அன்னையின் கைக்குத் தாவினான்.

"ஏன்டா... என் அண்ணன் பொண்ணு உவ்வேவா...? உனக்குக் கொடுத்து வெச்சது அவ்வளவுதான்..." பிறந்த வீட்டின் செல்வச் செழுமையை நினைத்துப் பெருமூச்சு விட்டாள் நித்யா.

"அண்ணி... நாங்க எங்க பயலுக்கு ஷைலுவை விட பெரிய இடமாப் பார்ப்போம்ல..."

மகனை விட்டுக் கொடுக்காத சித்தப்பனாய்ப் பேசினான் உதய்.

"அஜித்து கதை இருக்கட்டும் தம்பி... நீங்க எப்போ கல்யாணத்தைப் பண்ணிக்கப் போறீக...? வயசு ஏறிட்டே போகுதுல்ல... சரி நீங்கதேன் மாட்டேன்னு சொல்றீகன்னு பார்த்தா... சங்கீ கல்யாணத்தையும்ல் தடை போடுறீக..."

"சங்கீ படிச்சு முடிச்சு ஒரு வேலைக்குப் போகட்டும் அண்ணி... நாலு பேரோட பழகி, வெளி உலகத்தை அது

பார்க்க வேணாமா...? அதுக்கு அப்புறந்தேன் அதுக்குக் கல்யாணம்..." வெளி உலகம் அறிந்தவனாய், அவன் தங்கையின் திருமணத்தை மறுத்தான்.

"ஆமாம்... என்னைப் பார்த்தா எப்படித் தெரியுது...? குடுகுடு கெழவன் மாதிரியா இருக்கு... என்ன ஒரு முப்பது வயசாச்சு... அவ்வளவுதானே... அதுக்குப் போய் ஏன் அண்ணி வயசாச்சுன்னு சொல்றீக... உங்க பையனுக்கு மட்டும் எமி ஜாக்சன் மாதிரி பொண்ணு வேணும்... எனக்கு வேணாமா...?

"எனக்கும் எமி மாதிரி தான் பொண்ணு வேணும்... சுண்டுனா ரத்தம் வரணும்... அந்தளவுக்குக் கலரா சும்மா செவ செவன்னு இருக்கணும் பொண்ணு... முடிஞ்சா அத மாதிரி ஒரு பொண்ணு பாருங்க... அடுத்த முகூர்த்தத்துல கல்யாணம் பண்ணிக்கிடறேன்..."

"அடியாத்தி..." முகவாயில் கை வைத்து அதிசயித் தவள்,

"கேட்டியா அஜீத்து... தொரைக்கு வெள்ளைக்கார பொண்ணு மாதிரில்ல பொண்ணு வேணுமாம்... வாழ்க்கை என்ன தனுஷ் படம்னு நினைச்சீகளா கொழுந்த னாரே... ஆடுகளம் படத்துல அவருக்கு வெள்ளைக்காரக் குட்டி கிடைச்ச மாதிரி உங்களுக்குக் கெடைக்கிறதுக்கு...

"நம்ம சாதி சனத்துல அப்படி ஒரு வெள்ளத் தோல் பொண்ணை எங்க போய்த் தேடுறது...? இதுல சுண்டுனா ரத்தம் வரணுமாமே... ஏந்தம்பி, அதுக்கு நீங்க மூட்டைப்பூச்சியைத் தான் கட்டிக்கணும்... எமி மாதிரி

பொண்ணாம்ல... எலி மாதிரி பொண்ணு அமைஞ்சிறப் போகுது கொழுந்தனாரே..." அவனைக் கேலி செய்ய...

"மூட்டைப்பூச்சி... எலி மாதிரி பொண்ணா... உங்களுக்கு ஏன் அண்ணி இந்தக் கொலைவெறி... அதுக்கு உங்க சித்தி பொண்ணு அந்தக் கருப்பி கருப்பாயியே எனக்கு ஓ.கே..."

"யாரு செல்வியையா சொல்றீக...?" ஆர்வமாய் நித்யா கேட்கும் போதே அஜித், நித்யாவின் முகத்தைத் தன் பக்கம் திருப்பி,

"ஷைலு நோ... குளி வா..." என்று மகன் தலையில் வலிக்காமல் குட்டியவள்,

"அடேய் அப்படி ஒண்ணும் உன்னைத்தான் கட்டிக்கிடணும்னு எங்க வீட்டுப் பொண்ணு ஒண்ணும் தவம் கிடக்கல... சும்மா சிலிர்த்துக்காதே..." மகனை அடக்க,

"சித்து... அம்மா..." உதய்யிடம் தன் தலையைத் தடவி, அம்மாவைப் பற்றிக் குறை சொன்னான் அஜித்.

"சித்து இருக்க பயமேன்... உனக்கும் எனக்கும் எமி மாதிரி பொண்ணுதான்... ஓ.கே. டன்..." கட்டை விரலைத் தூக்கிக் காட்டியவனை ஆயாசத்துடன் பார்த்தாள் நித்யா.

"தம்பி இப்பத்தேன் செல்வியை கட்டிக்கிடறேன்னு சொன்னீக... அதுக்குள்ள எமி பக்கம் சாஞ்சுப்புட்டீகளே... உங்களை நம்ப முடியாது தம்பி... எதுக்கும் என் சித்தப்பாரு கிட்ட அவளுக்கு வேற மாப்பிள்ளையைத் தேடச் சொல்றேன்..."

அவரது பேச்சில் அடி வயிற்றைப் பிடித்துக் கொண்டு, "ஹா... ஹா..." என்று சிரித்த உதய்...

"அண்ணி, சங்கீ கல்யாணம் முடியட்டும்... அதுக்கு அப்புறம்தான் எனக்குக் கல்யாணம்... எப்படியும் ஐந்து வருசம் சென்று பார்க்கலாம்..." நித்யாவிடம் கூறியவன், அஜித்திடம்...

"ஒழுங்கா ஸ்கூலுக்குக் கிளம்புனா ஈவினிங் சித்தப்பா வெளியில் கூட்டிட்டுப் போவேன்... ஓ.கே..." மகனிடம் ஒப்பந்தம் செய்து, அவனைக் குளிக்க அனுப்பி வைத்து விட்டு வெளியில் வந்தான்.

உணவு உண்டு விட்டு, நேரே அவன் சென்ற இடம் சந்தை... அங்கிருந்த கமிஷன் கடையைக் கடைப்பையன் திறந்து வைத்திருந்தான். பேருக்குத்தான் கமிஷன் கடை... அதன் முக்கியத் தொழில் வட்டிக்கு விடுவது. அங்கு வந்தமர்ந்த உதய், வட்டிக்குப் பணம் கேட்டு வந்தவர் களுக்கு ஒவ்வொருத்தருக்காய் அவரவருக்கு ஏற்ற தொகையைக் கையெழுத்து வாங்கிக் கொண்டு கொடுத் தான். கையெழுத்துத் தெரியாதவர்களிடம் கை நாட்டு... அப்போது அங்கே வந்தவனைக் கண்டு,

"அண்ணே... உனக்குப் பணம் கிடையாது... நீ கெளம்பு..." உதய் விரட்ட,

"ஏஞ் சின்னய்யன் இப்படி சொல்லுதீக... நா என்ன தப்பு செய்தேன்...?" அவன் பரிதாபமாகக் கேட்டான்.

"என்ன செஞ்சியா... ஆமாம், என்னதான் செய்யல நீ... நீ நம்ம ஏட்டுக் கிட்ட போய் அநியாய வட்டி வாங்கு

றோம்னு சொன்னியா இல்லையா...? ஏட்டு என்ன... நீ கமிஷனர்கிட்ட போய்க் கம்பளைண்ட் பண்ணாக் கூட உன்னால ஒண்ணும் பண்ண முடியாது...

"உன்ன நம்பிப் பணம் கொடுக்கிறதே பெரிசு... இதுல எங்களையே போட்டுக் கொடுக்கியோ... போ... அநியாய வட்டிக்குக் கடன் வாங்கித் தொழில் பண்ணிப் பாரு... அப்பத் தெரியும் எது நியாயம்... எது அநியாயம்னு..."

"அது ஏதோ போதையில ஒளறிட்டேன் சின்னய்யன்... இனிமேல் கொண்டு அந்தத் தப்பு நடக்காது..." அவன் கெஞ்ச...

"நா சொன்னா சொன்னதுதேன்..." தயவு தாட்சண்யம் பார்க்காமல் கடையை விட்டு எழுந்தவன், பையனைப் பார்த்துக் கொள்ளச் சொல்லி விட்டு அங்கிருந்து கிளம்பினான்.

இதுதான் உதய்... அவன் தந்தை போல் தொழிலில் இரக்கம் காட்ட மாட்டான். அதுவும் பண விஷயத்தில் அவன் சற்றே கறார் பேர்வழி.

நீதிமன்றம் செல்லும் முன் மருத்துவக் கல்லூரிப் பக்கம் தன் வண்டியைத் திருப்பினான். கல்லூரி வாசலில் நின்றவன், சித்தப்பாவிற்கு அழைத்தான்.

"சித்தப்பு... கலை கெளம்பிருச்சா..." அந்தப் பக்கம் பதில் சொன்னவுடன்,

"சரி சித்தப்பு... இனி நான் பார்த்துக்கிடுதேன்..." என்றவன், அலைபேசியை அணைத்துச் சட்டைப் பையில் போட்டவன், கலைவாணிக்காகக் காத்திருந்தான்.

கலைவாணி வந்ததும் அவள் அருகில் சென்றவன், "நீ முதல்ல போ கலை..." என்றவனைப் பயத்துடன் பார்த்த கலைவாணி,

"அண்ணே..."

"பயப்படாம போம்மா... நான் உன் பின்னாடியே வாரேன்..." அவளுக்குத் தைரியமூட்டியவன், அவளைக் கல்லூரிக்குள் அனுப்பினான்.

கலைவாணி பயந்து கொண்டே உள்ளே நுழைந்தாள். அவள் நினைத்தது போல், அவளது சீனியர் மாணவன் அங்கிருந்த மரத்தடியில் அவளின் வரவை எதிர்பார்த்து நின்று கொண்டிருந்தான். அவளைப் பார்த்ததும் கையைத் தட்டி அழைத்தவன்,

"கலை இங்கே வா..." அவன் அப்படி உரிமையாய் அழைத்தது கலைவாணிக்குப் பிடிக்கவில்லை.

'என்னமோ இவந்தேன் எனக்குப் பேரு வச்ச மாதிரி கூப்பிடுறதைப் பாரு... நாசமாப் போறவன்...' அவனைச் சபித்தபடி அங்கே சென்றாள். மனதிற்குள் அவனைச் சபித்தாலும்... இன்று என்ன பேச, செய்யக் காத்திருக்கிறானோ என்று அவளது மனம் படபடவெனப் பயத்தில் அடித்துக் கொண்டது.

"என்ன கலை... என்னைப் பார்த்தா அவ்வளவு பயங்கரமாவா இருக்கு...? இப்படி வியர்க்குது உனக்கு..." என்று கூறியபடி அவளின் நெற்றி வியர்வையை அவன் துடைக்க வர, அவள் அச்சத்துடன் பின்னுக்கு நகர்ந்தாள்.

"கலை... நான் கேட்டதுக்கு நீ பதிலே சொல்லல... டேட்டிங்குக்கு டேட் கேட்டேனே... எப்போ போகலாம்...?" ஆர்வமாய்க் கேட்டவனைப் பயத்துடன் பார்த்தவள், அவளையும் அறியாமல் அவளின் பார்வை, உதய் இருந்த திசையை நோக்கியது.

காதலையே ஏதோ பாவ காரியம் போல் பார்க்கும் குடும்பத்தில் பிறந்தவளிடம், கலாச்சார சீர்கேடான டேட்டிங்கைப் பற்றிப் பேசுகிறோம் என்ற லஜ்ஜை சிறிதும் இல்லாமல் நின்றிருந்தவன், "என்ன... எனக்கு பதில் சொல்லாம... வேற எங்கேயோ பார்த்துட்டு இருக்க..." தைரியமாக அவளின் கையைப் பிடிக்க வந்தான்.

அவளின் கையை அவன் பிடிக்க நினைக்க, ஆனால் அவனின் கையை மற்றொருவன் எலும்பு நொறுங்க பிடித்துக் கொண்டிருந்தான். ஆம்... உதய்தான் அவனின் கையைப் பிடித்துத் தடுத்திருந்தான்.

"என்னடா... உடம்பு எப்படி இருக்கு...? எங்க ஏரியாவுல வந்து எங்க வீட்டுப் பொண்ணு கையைப் பிடிச்சு இழுக்கிறியாம்.... அவ கன்னத்தைத் தொடுறியாம்... அவ முந்தானையைப் பிடிச்சு இழுத்து வம்பு பண்றி யாம்... நீ தைரியமான ஆம்பிளையா இருந்தா, என் கண் முன்னாடி பிடிச்சு இழுத்துப் பாருடா..." அவனைப் பிடித்துக் கலையின் முன் தள்ளிவிட... அவனோ உதய்யின் அஜானுபாகுவான தோற்றத்தில் அரண்டு போய் நின்று இருந்தான்.

"சாரி சார்... ஏதோ தெரியாம..." அவன் சொல்லி முடிக்கும் முன், அவன் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை விட்டவன்,

"ஏன்டா நாயே... தெரிஞ்சு வேற தெரியாம் வேற பண்ணுவியா... உன் தங்கச்சியைக் கூட்டியா... நானும் உன்ன மாதிரித் தெரியாம கேட்டுப் பார்க்குறேன்..." என்றவன்,

"ேட்டிங்கா கேக்குற... டேட்டிங்..." என்றபடி அவனை அடிக்க, அப்போதுதான் அவனின் விழி வட்டத்தில் அந்தப் பெண் விழுந்தாள்.

உதட்டில் புன்னகையுடன், கண்கள் இமைக்காமல், அவனையே பார்த்துக் கொண்டு நின்று இருந்தாள்.

'இவ என்ன லூசா... இப்படிச் சிரிச்சிக்கிட்டு நிக்கிறா...' மனதில் நினைத்தவன், வந்த வேலையைக் கவனிக்கத் துவங்க... அதான், அந்தப் பொறுக்கியை அடிக்கத் துவங்க, ஒரு கட்டத்தில் அடி வாங்க முடியாமல், அவன் கலைவாணியிடம் மன்னிப்புக் கேட்டு விட்டு ஓடியே போய் விட்டான்.

"வீரம் எல்லாம் பொம்பள புள்ள கிட்டத்தான்... பொட்டப்பய..." அவன் போன திசையைப் பார்த்து ஆத்திரத்துடன் சொன்னவன், கலையிடம் திரும்பி,

"நீ தைரியமா இரும்மா... திரும்ப ஏதாவது பிரச்சினை பண்ணா எனக்கு ஒரு போனைப் போடு... வீணா சித்தப்புவைத் தொந்தரவு பண்ணாதே... மனுஷன் பாவம்..."

"சரிண்ணே..." என்றவள், பயம் தெளிந்தவளாய் வகுப்பிற்குச் செல்ல... உதய்யும் கிளம்பினான்.

ஏதோ தோன்றத் திரும்பிப் பார்த்தவன் கண்ணில், மீண்டும் அவள் தென்பட்டாள் அதே புன்னகையுடன். 'இவளுக்கு என்னைக் கண்டா எப்படி இருக்கு...?' கோபம் கோபமாய் வந்தது அவனுக்கு.

"ஏ புள்ள... இங்கே வா..." அவளைக் கையாட்டி அழைத்தான்.

அவன் அழைத்ததும் அவள் கண்ணில் ஒரு மின்னல் வந்து போனது. சுற்றும் முற்றும் பார்த்தவள், ஆட்காட்டி விரலைத் தன் பக்கம் நீட்டி, 'என்னையா...?' என்பது போல் கண்களால் அவனிடம் கேட்க... அவளின் விழி பாவத்தில் அவன் சற்று அசந்துதான் போனான். பேசும் கண்கள் என்பதை அவன் இதுவரை கேள்விப் பட்டுத்தான் இருக்கிறான். ஆனால், இன்றுதான் அதை நேரில் பார்க்கிறான்.

தலையைக் குலுக்கித் தன்னைச் சமன் செய்து கொண்டவன், "உன்னத்தான்... வா..." என்று அவளை அழைக்க... அவள் புன்சிரிப்புடன் அவனை நோக்கி வந்தாள்.

'என்ன இந்தப் பொண்ணு... ஒரு ஆம்பள கூப்பிடுறானேன்னு கொஞ்சமாவது பயம் இருக்கா... ஈன்னு இளிச்சிட்டு வருதே...'

மனதுக்குள் அவளைத் திட்டினான். அவள் அருகில் வந்ததும், ஏற்கெனவே சற்று ஏற்றியிருந்த முழுக்கைச் சட்டையை மேலும் ஏற்றி விட்டபடி,

"என்ன லந்து கொடுக்கிறியா...? இங்கே என்ன காமெடி சீனா ஓடிட்டு இருக்கு... ஈன்னு பல்லைக் காண்பிக்கிறே... லூசா நீ... ஃபைட்டைப் பார்த்தா பொண்ணுங்க பயத்தைத்தான் காட்டணும்... இப்படிப் பல்லைக் காட்டக் கூடாது..." அவனின் அதட்டலைக் கேட்டு அவள் பயப்படவில்லை.

மாறாக அவள் பதில் சொல்லாமல் அவனை உற்றுப் பார்க்க, அவனால்தான் அவளின் கண்களைச் சந்திக்க முடியவில்லை. அந்தளவுக்குக் கூர்மையாய் தீட்சண்யத்துடன் அது இருந்தது.

"உனக்கு என்னதான் வேணும்..." தன் தடுமாற் றத்தை மறைத்துக் கொண்டு அவன் கேட்க...

அவள் எந்தவிதத் தடுமாற்றமும் இல்லாமல் தைரியமாக அவனை நோக்கிக் கை நீட்டினாள். அதில் அவன்தான் அதிர்ந்து போய் நின்றிருந்தான். அவனின் அதிர்ந்த தோற்றம், அவளுக்குச் சிரிப்பை வரவழைத்தது.

நமட்டுச் சிரிப்புடன் அவனைப் பார்த்தவள், நாக்கை வெளியில் நீட்டித் துருத்தி, அவனைப் பார்த்து அழகு காட்டியவள், அங்கிருந்து ஒரே ஓட்டமாய் ஓடி விட்டாள். அவளின் செயலில் அவன் அப்படியே திகைத்துப் போனான்.

இதுநாள் வரை அவனைக் கண்டு பயந்த பெண்களைத்தான் அவன் அதிகம் பார்த்து இருக்கிறான். இல்லை, கொஞ்சம் வெட்கப்பட்ட பெண்களைப் பார்த்து இருக்கிறான். இந்த மாதிரிச் சிரித்து அவன் மனதை மாயம் செய்த பெண்ணை அவன் இதுவரை கண்டதில்லை.

எந்தப் பெண்ணையும் கண்டு கொள்ளாத அவனைத் தன்னைக் கண்டு கொள்ளச் செய்தது மட்டும் இல்லாமல், தன் நினைவை அவன் மனதில் மழைச் சாரலாய்த் தூவிவிட்டுச் சென்றுவிட்டாள் அவள்.

என்னதான் தைரியமாக அவனை நோக்கிக் கை நீட்டிச் சுட்டிக்காட்டித் தன் மனதைக் கூறி விட்டாலும், அதற்கு மேல் நின்றால் அவன் ஏதும் சொல்லி விடுவானோ என்று பயந்து, தப்பித்தோம் பிழைத்தோம் என்று அங்கிருந்து ஓடி வந்து விட்டாள் அவள்.

அவளின் பயம் அவனின் கோபத்திற்கானது அல்ல... தன் காதலுக்கு அவன் ஏதும் அச்சாணிய மாய்ப் பேசி விடக் கூடாதே என்ற அச்சத்தில்தான் அவள் ஓடி வந்தது.

அவள் பெயர் உமாமகேஸ்வரி... மருத்துவக் கல்லூரியில் நான்காம் ஆண்டு படிக்கிறாள். இன்னும் மூன்று மாதத்தில் நான்காம் ஆண்டு முடிந்து ஐந்தாம் ஆண்டு இன்டர்ன்ஷிப் செய்ய வேண்டும். அதை அவளுடைய சொந்த ஊரில் செய்ய நினைத்து இருந் தாள்.

உதய்யைப் பார்த்த இந்த நொடி, தன் முடிவை மாற்றிக் கொண்டாள். அவள் இன்டர்ன்ஷிப் பண்ணப் போவது இந்த மதுரை மாநகரில்தான்... அதுவும் இந்த மதுரையின் வீர மைந்தனுக்காக.

வேகமாய் ஓடி வந்து, அங்கிருந்த ஒரு மரத்தின் பின் ஒளிந்து கொண்டவள், அவன் என்ன செய்கிறான் என்று அறிய மெல்ல எட்டிப் பார்த்தாள்.

திகைத்து நின்று இருந்த உதய், தன்னைச் சுதாரித்துக் கொண்டு அவளைத் தேடிச் சுற்றும் முற்றும் பார்க்க, எங்கும் அவளைக் காணவில்லை.

பின் ஏதோ யோசித்தவன், சிரித்தபடி தன் பின்னந் தலையைத் தட்டிக் கொண்டு அங்கிருந்து கிளம்பினான். அவனின் ஒவ்வொரு செய்கையையும் அவள் ஆசை யுடன் தன் கண்களால் படம் பிடித்துக் கொண்டாள். அந்தளவிற்கு அவன் மீதான அவளது நேசம், அவளை ஆட்டிப் படைத்தது.

ஐந்து நிமிடத்திற்கு முன்பு கூட யாராவது அவளிடம், 'நீ காதல் வயப்படுவாய்... அதுவும் சந்தித்த கணத்தில் இருந்து...' என்று சொல்லி இருந்தால், சரியான பைத்தியம் என்று அவர்களை அலட்சியப்படுத்தி விட்டுச் சென்று இருப்பாள். ஆனால், இப்போது அவளின் மனநிலையே வேறு.

"உமா..." பின்புறமாய் அழுத்தமாய் ஒலித்த தோழி ஜெயஸ்ரீயின் குரலில் திரும்பிப் பார்த்தவள், அவளின் உக்கிரமான பார்வையில் அசடு வழிந்தாள். ஜெயஸ்ரீயும் அவளும் முதல் வருடம் சேர்ந்ததில் இருந்து தோழிகள்... விடுதியிலும் ஒரே அறையில் தங்கி இருக்கிறார்கள்.

"சாரி ஜெய்..." அவளின் கையைப் பிடித்துக் கொண்டு உமா மன்னிப்பு வேண்ட...

"என்னடி நடக்குது இங்கே...?"

"ஹி... ஹி... அது வந்து..." மீண்டும் அவள் அசடு வழிய...

"சகிக்கலடி..." தலையில் அடித்துக் கொண்ட ஜெயா, அவளைக் கூர்ந்து பார்த்தாள்.

"உமா... அவன் கிட்ட நீ என்ன சொல்லிட்டு வந்திருக்கேன்னு தெரியுமா...? ஒருவேளை நீ சொன்னதை அவன் சீரியசா நினைச்சு, உன்னை லவ் பண்ணிட்டான்னா என்ன பண்ணுவ...? நீயே பார்த்த தானே... எப்படிக் காட்டுமிராண்டி மாதிரி நம்ம தினேஷைப் போட்டு அடிச்சான்...

"எப்பவும் தினேஷ் கூட இருக்கிற நம்ம பசங்க கூட அவன் அப்பியரன்ஸ் பார்த்துட்டு அமைதியா இருந் தாங்க... நீ என்னடான்னா அவன் கிட்டப் போய், 'நீ தான் வேணும்னு' கையைக் காட்டிட்டு வந்திருக்க...

"போச்சு... எல்லாம் போச்சு... நாளைக்கே அவன் கல்யாணத்துக்குப் பொண்ணு கேட்டு வந்து நிற்கப் போறான்... அவன் கனவிலேயும் நினைச்சுப் பார்த்து இருப்பானா... உன்னை மாதிரி அழகான பொண்ணு அவனுக்குக் கிடைக்கணும்னு..." ஜெயா புலம்புவதைக் கண்ட உமா கண்களில் ஒளியுடன்,

"இஸிட்...?"

"என்னடி... உனக்கு என்ன கிறுக்கா பிடிச்சிருக்கு...? நான் என்ன சொல்றேன்... நீ என்ன கேட்கிற...?"

"இல்ல... அவர் என்னைக் கல்யாணம் பண்ணிக்கப் பொண்ணு கேட்டு வருவார்னு சொன்னியே... அதைத் தான் கேட்டேன்..." என்ற உமாவை முறைத்தாள் ஜெயா.

"லூசாடி நீ...? ஏன் அந்தக் கருப்பண்ண சாமிக்கு உன்னைக் கட்டிக்கக் கசக்குதா என்ன? அவனை மாதிரி பெர்சனாலிட்டி உள்ளவனுக்கு உன்னை மாதிரியான அழகான பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்க விருப்பம் இல்லாம இருக்குமா என்ன...?

"இந்த விசயத்தில் அவன் லூசு இல்லைடி... ஆனா நீ நிச்சயம் லூசேதான்... அவன் ஆளும் மூஞ்சியும்... சரியான காட்டான்..." படபடவெனப் பொரிந்தவள், கடைசியாய்ச் சொல்லும் போது முகத்தைச் சுளித்தாள்.

"ஜெய்..." அழுத்தமாய்க் கண்டிக்கும் குரலில் கூப்பிட்ட உமா,

"வெளித் தோற்றத்தை வெச்சு ஒருத்தரைக் கணிக்காதே ஜெய்... அவர் தங்கச்சிக்காக நேரிடையாய் களத்தில் இறங்கிச் சண்டை போடுறார் பாரு... அந்த வீரம், தைரியம் எத்தனை பேருக்கு வரும்...? நாகரீகம்ங்கிற பேருல நாம சில விஷயங்களைத் தட்டிக் கேட்கிறதே இல்லை... ஆனா இவரை மாதிரி ஒருத்தர் ரெண்டு பேராலதான் நம்ம மண்ணோட மணம் மாறாம இருக்கு... எனக்கு அவரோட தைரியம் ரொம்பப் பிடிச்சிருக்கு..." என்றாள் கண்களில் காதல் வழிய...

"உண்மையாவா சொல்ற உமா...? எப்பவும் போல இதுல நீ விளையாடலையே..."

"சத்தியமாச் சொல்றேன்... நான் அவரை லவ் பண்றேன்..."

"அது எப்படிடி... பார்த்து ஐந்து நிமிசம் கூட ஆகலை... அதுக்குள்ள லவ்வா...?" வாயைப் பிளந்தாள் ஜெயா.

"லவ் பண்ண ஒரு செகண்ட் போதும்... ஆனா எனக்குத்தான் அஞ்சு நிமிடம் கிடைச்சு இருக்கே..." அந்த ஐந்து நிமிடத்தை என்னமோ ஐந்து வருடக்கணக்கில் இழுத்துச் சொன்ன உமாவை அதிசயமாய்ப் பார்த்தாள் ஜெயா.

"நான் இவ்வளவு நாளா தேடிட்டு இருந்தது இப்படி ஒரு வீரனைத்தான்... இப்படிப்பட்ட தைரியமான ஆளு தான் எனக்கு வேணும்..." என்றவளை வித்தியாசமாய்ப் பார்த்த ஜெயா,

"ஏன்டி... உங்க அப்பா என்ன ரௌடியா...?" என்றவளை அதிர்ச்சியாய்ப் பார்த்தாள் உமா.

"இல்லை... ஏன் ஜெய்?"

"அப்போ எதுக்கு ரௌடி மாதிரி ஒருத்தனைக் காதலிக்கிறேன்னு சொல்ற..." என்றவளைப் பார்த்த உமாவிற்கு உதட்டில் மர்மப் புன்னகை பூத்தது.

"இங்கே பாரு உமா... நீ பேசாம நம்ம விஷ்ணு வைக் கல்யாணம் பண்ணிக்கோயேன்... உனக்காக அவன் நாலு வருசமாக் காத்திட்டு இருக்கான்... ஆளும் பார்க்க பாலிவுட் ஹீரோ கணக்கா சும்மா ஜம்முன்னு

இருக்கான்... ரெண்டு பேரும் டாக்டர்ஸ் வேற... தொழிலும் ஒத்துப் போகும்... நல்ல அண்டர்ஸ்டாண்டிங்கும் இருக்கும்..."

"ச்சே... ச்சே... அந்த விஷ்ணுவையா காதலிக்கச் சொல்ற... வேண்டவே வேணாம்ப்பா... உப்புச் சப்பு இல்லாத வெறும் வாழ்க்கை வாழ என்னால முடியாது... இதோ இவரைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா என் வாழ்க்கை உயிர்ப்பாய் இருக்கும்னு என் உள் மனசு சொல்லுது..."

"எப்படி உயிர்ப்பாய் இருக்கும்...? அவன் அருவாள் கேட்டா, நீ அதுக்கு அருவாளைக் கூர் பிடிச்சுக் கொடுப்பியோ...? அடுத்தவன் உயிரை எடுக்கிறது உனக்கு உயிர்ப்பா இருக்கா...?" கிண்டலாய்ச் சொன்னவளை, அதே கிண்டலுடன் பார்த்த உமா,

"அருவாளை எடுத்துக் கொடுக்கிறது மட்டும் இல்லை... அவரோட சண்டைக்கும் போவேன், போதுமா...? என்னமோ அவரை ரௌடி ரேஞ்சுக்குப் பேசுற... ஏதோ தங்கச்சிக்காகச் சண்டை போட்டா, என் ஆளை நீ ரௌடின்னு சொல்லுவியா...? இதை நான் முற்றிலும் ஆட்சேபிக்கிறேன்..." உமா சிலிர்த்துக் கொள்ள...

"நான் உன் காதலையே ஆட்சேபிக்கிறேன்... இதுல நீ என் பேச்சை ஆட்சேபிக்கிறியா... போடி போ... நல்லது சொன்னா கேட்கிறது இல்லை..." ஜெயா தன் பங்குக்கு முறுக்கிக் கொள்ள...

"ப்ளீஸ் ஜெய் குட்டி, கோச்சுக்காதே... என்னைப் புரிஞ்சிக்கோ.. என்னால மனசை மாத்திக்க முடியாது...

அவர்தான் என் புருசன்னு நான் பிக்ஸ் பண்ணி பத்து நிமிசமாச்சு...” என்ற தோழியைக் கண்டு ஆச்சரியமாய்ப் போய் விட்டது ஜெயாவுக்கு.

நான்கு வருடமாய் ஒருவன் அவள் பின் நாயை விடக் கேவலமாய்க் காதலைச் சொல்லிக் கொண்டு சுற்றுகிறான். அவனை ஏன், எதுக்கு என்று கூட ஏறெடுத்துப் பார்க்காதவள், பார்த்து ஒரு நிமிடம் கூட ஆகாத நிலையில் ஒருவன் மீது காதல் கொள்வது என்றால், நிச்சயம் அவள் இதில் விளையாடவில்லை என்று உறுதியாய்த் தெரிந்தது ஜெயாவுக்கு.

“நல்லா யோசிச்சுத்தான் சொல்றியா உமா...?” என்ற ஜெயாவின் கண்கள் உமாவை அளவெடுத்தது.

உமா பூசினாற் போன்ற தேகம் என்றாலும் நல்ல அழகி. பார்ப்பவர்களை அடுத்த நொடி தன் வசப்படுத்தும் பேரழகு உடையவள். அதிலும் துருதுருவென அலை பாயும் கண்களின் கடைக்கண் பார்வையில், அடியோடு சாய்ந்த காளைகளைக் கணக்கில் கொள்ள முடியாது.

மொத்தத்தில் அவள் நாகரிக உடை அணிந்த மகாலட்சுமி... ஆம்... இடை தாண்டிய கூந்தலை இறுகப் பின்னி இருப்பவள், அணிந்திருக்கும் உடையோ ஜீன்ஸ் பேண்ட் மற்றும் குர்தி. நெற்றியில் சிறிய பொட்டு, அதன் மேல் திருநீறும் கீழே சிறு தீற்றலாய்க் குங்குமமும் வைத்துக் கிழக்கும், மேற்கும் இணைந்த கலாசார முரண்பாட்டுக் கவிதைப் பெண் அவள்.

அவளை அதிநாகரிகம் என்றோ இல்லை பட்டிக்காடு என்றோ ஒதுக்கித் தள்ள முடியாது. இரண்டும் இணைந்த கலவையான அழகிய பெண்.

"நல்லா யோசிச்சுத்தான் சொல்றேன் ஜெய்..." என்றவள் முகத்தில் இருந்த தீவிரம், ஜெயா இதுவரை கண்டது கிடையாது.

"ம்ஹூம்... நாகூர் பாய் கடை பிரியாணி உளுந்தூர் பேட்டை நாய்க்குத்தான் கிடைக்கணும்னு இருந்தா அதை மாத்த யாராலை முடியும்... இட்ஸ் ஆல் இன் தி கேம்..." பெருமூச்சு விட்ட ஜெயாவை,

"ஏன்டி... என் ஆளை நாய்னா சொல்ற... உன்னை..." என்று உமா அடிக்க வர... அவள் கையில் அகப்படாமல் ஜெயா சிரித்தபடி வகுப்பை நோக்கி ஓடினாள்.

அங்கே இரு சக்கர வாகனத்தில் பயணித்துக் கொண்டு இருந்த உதய்யும் உமாவைப் பற்றித்தான் நினைத்துக் கொண்டிருந்தான். 'எவ்வளவு மப்பா இருந்தா என்ன வேணும்னு கேட்டதுக்கு 'நீ தான்னு' கையை நீட்டுவா... ஒரு வார்த்தை பேசலையே... ஆனா ஓராயிரம் வார்த்தை பேசின மாதிரி அதிர்ச்சி கொடுத்துட்டாளே...'

'அம்மாடி... ரொம்ப ஆபத்தான பொண்ணு போலிருக்கே... குமாரு, உனக்கு இது எல்லாம் தேவையா...? அவளை எல்லாம் நினைக்காம பேசாம ரோட்டைப் பார்த்து வண்டியை ஓட்டு...'

தன் மனதை மாற்றியவன், சாலையில் தன் கவனத்தைப் பதிக்க, அவன் மனக் கண்ணில் அவளது

விழிகள் வலம் வந்தது. அவள் முகம் எப்படி இருக்கும், உடை எப்படி இருப்பாள் என்பது கூட அவன் கருத்தில் பதியவில்லை. ஆனால், அவள் விழி செய்த மாயம் மட்டும் அவன் மனதில் அப்படியே காயமாய்த் தங்கி விட்டது.

நீதிமன்ற வளாகத்தில் வண்டியை நிறுத்தியவன் இறங்கும் முன், அவனுடைய ஜூனியர் அழகேசன் அங்கு வந்தான். அழகேசன் மாரீஸ்வரியின் தம்பி மகன்... உதய்யின் மீதுள்ள ஈர்ப்பால் சட்டம் படித்தவன். படிப்பு முடிந்த பின் அவனிடமே ஜூனியராய்ச் சேர்ந்து விட்டான்.

சேர்ந்ததுக்குப் பின்னர்தான் 'ஏண்டா இவனிடம் போய் ஜூனியராய்ச் சேர்ந்தோம்' என்று அழகேசன் நொந்து கொள்ளும் அளவுக்கு அவனைப் படுத்தி எடுத்தான். ஆனாலும் அதற்கு எல்லாம் அசராமல் தனக்கு இட்ட வேலையைச் செவ்வனே செய்தான் அழகேசன். இன்றுதான் அவன் முதன் முதலாய் நீதிமன்றத்தில் வழக்கைக் காணப் போகிறான்.

"மச்சான் குட்மார்னிங்..." என்ற அழகேசனை முறைத்தான் உதய்.

"அழகு... கோர்ட்டுக்குள்ள மச்சான்னு கூப்பிடச் கூடாதுன்னு சொல்லி இருக்கேன்ல..."

"அப்படித்தான் கூப்பிடுவேன்... உங்களுக்கு என்ன மச்சான் வந்தது? அது என்னோட ஏக போக உரிமை... யாருக்காகவும் என் உரிமையை விட்டுக் கொடுக்க முடியாது... அது நான் உயிராய் நினைக்கும் லாயர் தொழிலிலா இருந்தாக் கூட..." அவன் போர் முரசு கொட்ட...

"இதுக்குத்தான் இந்தச் சொந்தக்கார பயலுவள கிட்டக்கச் சேத்துக்கக் கூடாது... என்னமோ போ..." அலுத்துக் கொண்ட உதய்,

"ஆமாம்... இன்னைக்கு நடக்கிற கேஸுக்கு எல்லா டீடெய்ல்ஸும் எடுத்துட்டியா...? பாயிண்ட் பை பாயிண்ட்டா எழுதிக் கொண்டு வரச் சொன்னேனே... கொண்டு வந்திருக்கியா...?" உதய் கேட்கவும், அழகு அழுது விடுவது போல் அவனைப் பார்த்தான்.

"மச்சான், நீங்க கேஸை ஸ்டடி பண்ணலையா...?"

"அடேய்... அப்பவே நான் படிக்கிற காலத்துலேயே ஒழுங்கா ஸ்டடி பண்ணுனது கிடையாது... இப்பப் போய் இப்படிக் கேனப்பய மாதிரி கேள்வி கேக்குறியே..."

வாய் விட்டுச் சிரித்தவன், "நாந்தேன் முதல்லேயே சொன்னேனே... எங்க அப்பாருக்காகத்தான் லா படிச் சேன்னு... அவரு கேஸு இல்லாத நேரத்துல இடைக்கிடை மத்த கேஸ் எடுக்கிறேன்... மத்தபடி எனக்கு வக்கீலா வேலை பார்க்குறதுக்கு இஷ்டம் கிடையாது...

"நாட்டாமை வேலை பார்க்கத்தான் விருப்பம்... நீ ஜூனியரா வந்ததால இந்தக் கர்மம் பிடிச்ச கேசை எல்லாம் எடுக்க வேண்டி இருக்கு... அதுவும் உனக்காக..." என்றவனைப் பார்த்து,

"எனக்காகவா..." அதிர்ச்சி விலகாமல் வாயைப் பிளந்தான் அழகு.

"பின்னே, எனக்காகவா...?" என்று நக்கலுடன் கேட்டான்.

"எப்படிக் கேஸை நடத்துறதுன்னு உனக்குத் தெரிய வேணாம்... அது மட்டும் இல்லைடா அழகு..." உதய் ரகசியம் பேச... ஆர்வமாய்த் தன் காதைத் தீட்டினான் அழகு.

"உனக்கு யாரு சம்பளம் கொடுப்பா...? என் அப்பாரு பணத்தில் இருந்தா கொடுக்க முடியும்...? அதான் கேஸை நடத்துறேன்... இப்போ சொல்லு... உனக்குக் கொடுக்கிற சம்பளத்துக்கு நீ கேஸை நடத்தணுமா... இல்லை நான் நடத்தணுமா...?"

"நாந்தான் மச்சான்..."

"ஆனா பாரு... நான் பெருந்தன்மையா உனக்காக வாதாடுறேன்... ஆனா நீ அதுக்குப் பாயிண்ட்ஸ் கூட எடுத்துத் தரமாட்டேங்கிறே... தப்பு யாரோடது... உம் மேலேயா... எம் மேலேயா...?"

"எம் மேலேதான்..." என்ற அழகு, பரிதாபமாய், வழக்கு சம்பந்தப்பட்ட தகவல்களை உதய்யிடம் நீட்ட...

"இது நல்ல புள்ளைக்கு அழகு..." என்றபடி அதை வாங்கி மேலோட்டமாய் ஒரு நிமிடம் பார்வை பார்த்தவன், திருப்பி அழகேசனிடம் கொடுத்து விட்டு, நீதிமன்றம் நோக்கி நடக்க... உண்மையில் அழகு நொந்துதான் போனான்.

'இதுக்கா ரா முச்சூடும் கண் முழிச்சு டைய்ல்ஸ் கலெக்ட் பண்ணினேன்... இதுக்குக் குவார்ட்டர் போட்டுட்டு செகண்ட் ஷோ படத்துக்குப் போயிட்டு வந்து குப்புறடிச்சுப் படுத்துத் தூங்கி இருக்கலாம்...'

மனதில் தன் தலைவிதியை நொந்தபடி உதயைப் பின் தொடர்ந்தான் அவன்.

அழகேசன் நினைத்ததை விட அருமையாய் வாதாடி, எதிர்க்கட்சி வக்கீலைத் தலை சுற்ற வைத்தான் உதய்.

அழகு குறிப்பு எடுத்துக் கொடுக்காத சில தகவல் களைக் கூட அவன் சேர்த்து வாதாடியது கண்டு, உண்மையில் மலைத்துப் போய் நின்று இருந்தான் அழகு.

"என்ன மாப்புள்ள... முகம் பேஸ்த்து அடிச்ச மாதிரி இருக்கு.. சம்பளம் வராதோங்கிற கவலையா...? இந்தத் தடவை என் கைக் காசைப் போட்டு சம்பளம் தாரேன், கவலைப்படாதே... என்ன சொல்லுத...?" நீதிமன்றத்தில் இருந்து வெளியில் வந்த உதய் நக்கலடிக்க...

"மச்சான்..." உதய்யின் கையைப் பிடித்துக் கண்ணில் ஒற்றிக் கொண்ட அழகு...

"சும்மா சொல்லக் கூடாது மச்சான்... பின்னிப் பெடல் எடுக்கிறீகளே... விளையாட்டுக்குத்தானே அப்படிச் சொன்னீக..."

"அட, அடடா... என்ன ஒரு கண்டுபிடிப்பு..." அழகைச் சிலாகித்தவன்,

"இதைக் கண்டு பிடிக்கவா உனக்கு இத்தனை நாள் ஆகிருக்கு மாப்புள்ள..." சிரிக்காமல் உதய் கிண்டலடிக்க...

"போங்க மச்சான்... சும்மா கிண்டல் பண்ணாதீக..." அழகு நாணிக் கோணினான் பருவப் பெண் போல்.

"சரி, சரி... ரொம்ப வெட்கப்படாதே... நீ வெட்கப் படறதைப் பார்த்தா எனக்கே ஒரு மாதிரியா இருக்கு..." ஒரு 'மாதிரியில்' அவன் அழுத்தம் கொடுக்க...

"மச்சான்..." தன்னைப் பெண் என்ற அர்த்தத்தில் உதய் பேசியதால், கோபத்தில் அழகு சிலிர்த்துக் கொள்ள...

"இது ஆம்புளப் புள்ளைக்கு அழகு..." என்றவன்,

"அழகு... நீ நேரே ஆபீசுக்குப் போ... நான் வெளியில் போயிட்டு ஒரு மணி நேரஞ்சென்று வந்திர்றேன்..." என்றவன், தன் இருசக்கர வாகனத்தைக் கிளப்பிக் கொண்டு செல்ல...

'க்கும் அப்படியே நேரத்தோட போயிட்டாலும்... கேஸா கொட்டிக் கிடக்கு... ஆளில்லாத டீக்கடையில் டீ ஆத்துற மாதிரி நான் மட்டும் அங்கே போயி என்ன பண்ண...? பேச்சுத் துணைக்குக் கூட ஆள் இல்லாத கொடுமையை நான் எங்கே போய்ச் சொல்லுவேன்...' மனதுக்குள் நொடித்துக் கொண்டே தங்கள் அலுவல கத்துக்குக் கிளம்பினான் அழகு.

மதிய நேர உணவு இடைவெளியில் உமா, கலைவாணியைக் கண்டு விட்டாள். மிகுந்த ஆர்வத்துடன் கைதட்டி அவளைக் கூப்பிட்டாள். கலைவாணி திரும்பிப் பார்த்ததும்,

"இங்கே வா..." என்றாள்.

கலைவாணியின் பக்கத்தில் இருந்த அவளது தோழிகள், "வேணாம் கலை... அந்த அக்கா ஆம்பள புள்ளைக கூடச் சேர்ந்து ஃபர்ஸ்ட்டு இயர் புள்ளைகளை

எல்லாம் ராக்கிங் பண்ணாக... இப்ப உன்ன ராக்கிங் பண்ணத்தான் கூப்பிடுறாக... பார்த்துச் சூதானம் புள்ள..." அவளைப் பயமுறுத்த, அவள் போகவா வேண்டாமா என்று இருமனதாய் நிற்க...

"ஏய், இங்கே வா..." அதட்டலாய் உமா அழைக்க... அதற்கு மேல் நிற்கப் பயந்து, கலைவாணி அவளை நோக்கிச் சென்றாள்.

"உன் பேரு என்ன...?" எதிரில் நின்ற கலையை அளவிடுவது போல் பார்த்தாள் உமா.

"கலைவாணி..." சொல்லும் போதே அவளுக்கு வாய் தந்தியடித்தது.

"எதுக்குப் பயம் கலை... ரிலாக்ஸ்... ரிலாக்ஸ்..." உமா அப்படிச் சொன்னதும்தான் கலைக்கு இன்னமும் அதிகமாய் வியர்த்து வழிந்தது.

"ஆமா... இன்னைக்குக் காலையில உன் கூட ஒருத்தர் வந்தாரே... அவர் யாரு...?"

"அது என்னோட அண்ணா..."

"ஓ... உன்னோட அண்ணன் பேரு என்ன? என்ன பண்றாரு...?"

"இதெல்லாம் நீங்க எதுக்குக் கேட்குறீக...?" முயன்று தைரியத்தை வரவழைத்துக் கொண்டு கலை கேட்க...

"ஏன், நாங்க கேட்டா பதில் சொல்ல மாட்டியா...?" உமா பக்கத்தில் இருந்த ஜெயஸ்ரீ எகிற...

"ஜெய், சும்மா இருக்கமாட்டே... நான்தான் கேட்டுட்டு இருக்கேன்ல..." தோழியை அடக்கிய உமா, கலையைப் பார்த்தாள்.

"உம்... சொல்லு..." அவள் கேட்ட த்வனியே கலையை வாய் திறக்க வைத்தது.

"அண்ணா பேரு உதயகுமார்... வக்கீலா இருக்குக்கா..."

'உதய்...' அவன் பெயரை மெல்லமாய் உச்சரித்துப் பார்த்தது உமாவின் உதடுகள். தேனைப் போல் தித்தித்தது அவளுக்கு... அதற்குள் கலையின் 'அக்கா' என்ற விளிப்பு அவளை ஆங்காரப்படுத்தி விட்டது.

"ஏய் கலை... என்னை அக்கான்னு கூப்பிடாதே..." உமா கோபத்தில் கத்தி விட்டாள்.

உதய்க்கும் அவளுக்கும் இடையில் உள்ள உறவை நொடியில் மாற்றி விட்ட கலைவாணியின் மேல் அவள் கொலை வெறியில் இருந்தாள். உமாவின் ருத்ர தாண்டவத்தில் கலை பயந்து பின்னாடி ஓரடி நகர்ந்தாள்.

"கூல் பேபி, கூல்..." ஜெயா, உமாவை அமைதிப் படுத்த... அதில் சற்றுச் சாந்தமடைந்தாள் உமா.

"உனக்கும் உதய்க்கும் என்ன ரிலேசன்ஷிப்புன்னு அவளுக்குத் தெரியாதுல்ல... அதான் அவ உளறிட்டா..." உமாவைச் சமாதானப்படுத்திய ஜெயா,

"இங்கே பாரு கலை... நான் சுத்தி வளைச்சுப் பேச விரும்பல... எங்க உமா, உன்னோட அண்ணனைக்

காதலிக்கிறா... அப்போ உமா உனக்கு என்ன வேணும்...?" நேரிடையாய்த் தாக்கியவளின் பேச்சில் கலையின் தொண்டை பயத்தில் வறண்டு போனது.

"அ...ண்ண...ணி..."

"உமா, பார்த்தியா... சின்னப் பொண்ணுதானே... பக்குவமா எடுத்துச் சொன்னா கேட்டுட்டாப் பாரு... இனி நீயே இவளை டீல் பண்ணிக்கோ..."

அதில் முகம் மலர்ந்த உமா, "கலை... உங்களதுல மாமா மகன், அத்தை மகனை எப்படிக் கூப்பிடுவீங்க...?" ஆர்வமாய்க் கேட்ட உமாவைப் பார்த்து,

"உமா... இதெல்லாம் கொஞ்சம் ஓவரா இல்ல..." என்ற ஜெயாவின் தொடையில் நறுக்கென்று கிள்ளினாள் உமா. ஆவென்று கத்திய ஜெயாவைக் கண்டு கொள்ளாது,

"நீ சொல்லு கலை..." மீண்டும் உமா, கலையிடம் கேட்க...

"மச்சான்..."

"ம்... மச்சான்... இதுகூட நல்லாத்தான் இருக்கு..." என்றவள் கண்கள் கனவில் மிதக்க...

"பைத்தியம் முத்திடிச்சு..." ஜெயா நெற்றியின் பக்கவாட்டில் கையைக் கொண்டு போய் வைத்து ஆட்காட்டி விரலைச் சுழற்ற, அவளை முறைத்தாள் உமா.

"உங்க அண்ணா போன் நம்பர் இருக்கா...?" உமா ஆர்வமாய்க் கேட்கவும் உண்மையில் அரண்டு போனாள் கலை.

'என்ன... இந்தக்கா பாட்டுக்கு அண்ணனைக் காதலிக்கேங்குது... அண்ணா நம்பரைக் கேட்குது... இது மட்டும் அண்ணனுக்குத் தெரிஞ்சது... நான் செத்தேன்...' மனதுக்குள் அரண்டவள்,

"அண்ணா திட்டும்க்கா..." என்றாள் பயத்துடன்.

"என்ன சொன்ன...?" உமா கோபப்பட...

"அக்... இல்லை, இல்லை... அண்ணி..." தன் கொடுமையை எண்ணி நொந்து நூடுல்ஸ் ஆனாள் கலை.

"அது... அந்தப் பயம் இருக்கணும்..." என்ற உமா,

"போன் நம்பரைக் கொடு..." மறக்காமல் உதய்யின் அலைபேசி எண்ணை வாங்கிக் கொண்டவள்,

"நான் உன் கிட்ட பேசியது, கேட்டது எல்லாம் உன் அண்ணன்கிட்ட சொன்ன..." என்று நிறுத்தியவள்,

"அப்புறம் காலையில் ராக்கிங் பண்ணினானே... அவனை நானே கூப்பிட்டு உன்னை ராக்கிங் பண்ண வச்சிருவேன். என்ன, புரிஞ்சதா...?"

"புரிஞ்சது அக்... சாரி... அண்ணி..."

"பார்த்தியா ஜெய்... என் நாத்தனார் வெரி ஸ்மார்ட்ல..." உமா கலையைப் பற்றிச் சிலாகிக்க...

"கர்மம்டி..." தலையில் அடித்துக் கொண்டாள் ஜெயா.

"கலை... உன் அண்ணன் என்ன பண்றாங்க... என்ன செய்றாங்க... எங்கே போறாங்க, வர்றாங்க

அப்படின்னு எல்லா டீடெய்ல்ஸும் உடனுக்கு உடனே எனக்குத் தெரிவிக்கணும்..." உமாவின் வார்த்தைக்குக் கலை சரியென்று தலையாட்ட,

"இப்போ நீ போகலாம்... ஆனா நான் கூப்பிடறப்போ எல்லாம் , வரணும்... என்ன..." உமா சொன்னதும், விட்டால் போதும் என்று ஒரே ஓட்டமாய் ஓடிப் போய் விட்டாள் கலை.

அன்று மாலை அஜித்திடம் சொன்னது போல், உதய் அவனை அங்கிருந்த பெரிய மாலுக்கு அழைத்து வந்திருந்தான்.

அதில் இருந்த விளையாட்டுகள் அனைத்திலும் அவனை விளையாடச் செய்தவன், கடைசியாக அவனைப் ஃபுட் கோர்ட்டிற்கு அழைத்துச் சென்றான்.

"அஜித்... இங்கேயே சமத்தா உட்காரணும்... நான் போய் உனக்கு ஐஸ்கிரீம் வாங்கிட்டு வாரேன்..." என்றவன், அருகில் இருந்த மேஜையில் சின்னவனை அமர வைத்து விட்டு, அவன் ஐஸ்கிரீம் வாங்கச் சென்றான். அவன் அந்தப் பக்கம் நகர்ந்ததும், அஜித் அருகில் வந்து அமர்ந்தாள் உமா.

"ஹாய்..." அவளின் ஹாய்க்குப் பதில் சொல்லலாமா, இல்லை வேண்டாமா என்று அஜித் யோசித்துக் கொண்டு இருக்க... உமா தன் கைப்பையைத் திறந்து சாக்லெட் கட்டிகளை எடுத்துச் சீட்டுக் கட்டுகளைப் போல் விரித்துக் காண்பிக்க... அதில் சின்னவனுக்கு ஆசை வந்தது.

"ஹாய்..." என்றவன், அவள் கையில் இருந்த சாக்லெட்டுக்களைச் சுட்டிக் காட்டி, "சாக்கி தா..." என்று கைகளை நீட்ட... அவனின் செயலில் மயங்கிப் போனாள் உமா.

"எனக்குக் கிஸ் கொடு... உனக்குச் சாக்லெட் தர்றேன்..." என்று அவள் ஆசை காட்ட...

"சொரி..." என்ற சின்னவன், மேசை மீறி ஏறி அவள் பக்கம் வந்து, அவளின் இரு கன்னத்திலும் முத்தமிட, அதில் மனம் நெகிழ்ந்தவள்,

"சோ ஸ்வீட்... செல்லம்..." அவனைத் தூக்கி வைத்து முத்தமிட்டவள், தன்னிடம் இருந்த சாக்லெட்டுக்களை அவன் கையில் திணித்தாள்.

அதற்குள் ஐஸ்கிரீம் வாங்கிக் கொண்டு வந்த உதய், அவளைப் பார்த்ததும் வேகமாய் அங்கே வந்தான்.

"ஏய்... யாரு நீ...?" என்று அவளை அதட்டியவன்...

அஜித்தைப் பார்த்து, "டேய்... யார் எது கொடுத் தாலும் வாங்கிருவியா... முதல்ல அதைக் கீழே போடு..." என்று அதட்ட... அஜித்தோ சித்தப்பாவின் கோபத்தில் அழத் தயாரானான்.

உமாவுக்கு, உதய் பேசியது, கேட்டு மிகவும் மன வருத்தமாய்ப் போய் விட்டது. காலையில் இருந்து, தான் அவனின் நினைவாக இருக்க... அவனோ துளி கூடத் தன் ஞாபகம் இல்லாமல் இருக்கிறானே என்று அவளுக்கு மனதுக்குள் வேதனையாய் இருந்தது.

"ஏய்... உன்னத்தான்... முதல்ல எழுந்திரு..." என்று அவன் அதட்ட... அவளோ கலங்கிய விழிகளுடன் அவனை ஏறிட்டாள்.

அவளது விழிகளை நோக்கியவன், அப்படியே ஸ்தம்பித்தான். அவள் முகமோ தோற்றமோ காட்டாத அவளின் அடையாளத்தை, அவளது விழிகள் அவனுக்கு அடையாளம் காட்டிக் கொடுத்தது. காலையில் தன்னை கண நேரம் என்றாலும் தடுமாற வைத்த விழிகளை, அவன் சட்டென்று இனம் கண்டு கொண்டான்.

"ஏய் நீ... அங்கே கலை காலேஜ்ல..." என்று திணறியவனைக் கண்டு அவள் கண்கள் பளிச்சிட்டது. அவன் தன்னைக் கண்டு கொண்டதில் அவள் மனம் அடைந்த உவகைக்கு அளவே இல்லை.

"ம்... நானே தான் உதய்..." அவளின் உதய் என்றழைப்பு அவனை ஏதோ செய்தது. எல்லோருக்கும் அவன் குமாராய் இருக்க... அவள் உதய் என்று அழைத்தது அவனுக்கும் பிடித்துத்தான் இருந்தது.

"சித்து..." அஜித்தின் அழுகையில் தன்னுணர்வு பெற்றவன், அவனைச் சமாதானப்படுத்திக்கொண்டே...

"ஏய்... நீ என்ன லூசா... அப்போ என்னடான்னா நீ தான் வேணுங்கிற... இப்ப என்னடான்னா உதய்ங்கிற... உண்மையில் உனக்கு என்னதான்டி வேணும்...?" என்றவனைத் தீர்க்கமாய்ப் பார்த்தவள்,

"இப்பவும் சொல்றேன் உதய்... எனக்கு நீங்கதான் வேணும்... ஏன்னா, ஐ லவ் யூ..." அழுத்தமாய்ச் சொன்னவளை அடித்து விடுவது போல் பார்த்தவன்,

"ஓங்கி அடிச்சேன், காது செவுளு பிஞ்சிடும்... பொம்பளப் புள்ள அடக்கம் ஒடுக்கமா இருக்கப் பாரு... இப்படி ஐ லவ் யூ சொல்லிட்டுத் திரியாதே..." அவன் படபடக்க, அப்போது அருகில் சென்ற குடும்பத்தில் இருந்த பெரியவள் ஒருத்தி அஜித்தைக் கண்டு,

"க்யூட் பாய்..." என்று அவன் கன்னம் கிள்ளிக் கொஞ்சியவரைப் பார்த்து,

"ஹி... ஹி... அவன் அவங்க அப்பா மாதிரி..." என்று உமா அசடு வழிய... அவர் இவர்கள் மூவரையும் பார்த்துச் சிரித்தபடி,

"க்யூட் பேமிலி..." என்றார். உதயோ என்ன சொல்வது என்று தெரியாமல் திகைத்து நின்றான்.

"கூடிய சீக்கிரம் அடுத்து உன்னை மாதிரி பொண்ணைப் பெத்துக்கோம்மா..." என்று அவர் உமாவை வாழ்த்த, அதைக் கள்ளச் சிரிப்புடன் ஆமோதித்து ஏற்றுக் கொண்டாள் அவள். அதைக் கண்டு உதய்யின் ரத்த அழுத்தம் ஏகத்துக்கும் எகிறியது.

"ஏய்... என்ன பேசுறோம்னு தெரிஞ்சுதான் பேசுறியா...?" என்று கோபத்தில் அவன் சீற...

"ஐ லவ் யூ சொன்னவளுக்கு இது கூடவா தெரியாது மச்சான்... காதல்... அடுத்துக் கல்யாணம்... அதுக் கடுத்து..." கண்ணைச் சிமிட்டியவள்,

"குழந்தைதான்..." என்றவள், அதற்கு மேல் நின்றால் அவன் அடித்து விடுவானோ என்று,

"டேய் குட்டிப் பையா... பை..." என்று உதய்யைப் பார்த்துக் கொண்டே அஜித்தின் கன்னத்தில் அழுந்த முத்தமிட்டவள்,

"வாரேன் மச்சான்..." என்று அவனிடம் விடை பெற்று வேகமாய் அங்கிருந்து நகர்ந்தாள்.

உமா பேசியது, செய்தது எல்லாமே அவனை அதிர்ச்சியில் ஆழ்த்தியது. 'எவ்வளவு தைரியமா ஐ லவ் யூ சொல்லிட்டுப் போறா... உண்மையில் தைரியம் ஜாஸ்தி தான்...' என்று நினைத்தவனுக்கு, அவள் தன் பெயரைச் சொல்லி அழைத்தது ஆச்சரியத்தை அளித்தது.

'இவளுக்கு எப்படி எம் பேரு தெரியும்...?' என்று அவன் யோசிக்கும் போதே...

"சித்து... தூக்கு..." என்ற அஜித்தின் விளிப்பில் சுய நினைவு அடைந்தவன், அஜித்தைத் தூக்க, அவள் முத்தமிட்ட சின்னவனின் கன்னம் அவனின் கன்னத்தை உரசிச் செல்ல... என்னமோ அவளே தனக்கு முத்தமிட்டது போல் உதய்க்கு உள்ளுக்குள் குறுகுறுத்தது. அவனையும் அறியாமல் அவனின் கை கன்னத்தை அழுந்தத் துடைத்தது.

3

"சித்து... சாக்கி..." அஜித்தின் குரலில் தன் மோன நிலையில் இருந்து வெளியில் வந்தான் உதய்.

உமா வாங்கிக் கொடுத்த சாக்லெட்டுகள் அனைத்தும் மேசை மீது அநாதையாய் வீற்றிருந்தது.

விதவிதமாய் ரகம் ரகமாய் இருந்த அத்தனைச் சாக்லெட்டுகளும் அவனைப் பார்த்துக் கண் சிமிட்டிச் சிரித்தன.

"சித்து... சாக்கி..." மறுபடியும் ராகம் இழுத்தான் சின்னவன். ஆனால், இந்த முறை சித்தப்பாவைப் பாவம் போல் பார்த்தான். எங்கே சித்தப்பா அதை எடுக்க வேண்டாம் என்று சொல்லி விடுவானோ என்ற ஏக்கம் அவன் கண்ணில் தெரிந்தது. அதைக் கண்டதும் உதய்க்குச் சிரிப்பு வந்தது.

"ம்... எடுத்துக்கோ..." புன்னகையுடன் சொன்ன சிறிய தந்தையைக் கண்டு,

"தேங்க் யூ..." உதய்யின் கன்னத்தில் முத்தமிட்டு மழலையில் நன்றி கூறியவன், அங்கிருந்த சாக்லெட்டுக் களைத் தன் பிஞ்சுக் கைகளில் அள்ளி எடுத்தான். ம்ஹூம்... அது அனைத்தும் அவன் சிறிய கைகளில் அடங்காமல் நிரம்பி வழிய, சின்னவன் சித்தப்பாவைப் பரிதாபமாகப் பார்த்தான்.

"சித்து..." அஜித்தின் நிலை கண்டு சிரித்த உதய்,

"இரு... நான் போய்க் கடையில் கவர் வாங்கி யாறேன்..." என்று போனவன், அடுத்த நொடி கையில் சிறிய ப்ளாஸ்டிக் பை யுடன் வந்தான். அத்தனை சாக்லெட்டுகளையும் அவன் அதில் எடுத்துப் போட்டுச் சின்னவனிடம் நீட்ட, அஜித் முகம் கொள்ளாப் புன்னகை யுடன் அதை வாங்கிக் கொண்டான். அஜித்தைத் தூக்கிக்

கொண்டு நடந்த உதய்யின் மனதில் உமாவின் எண்ணங்களே...

"அஜித்து... என்னடா இது, இவ்வளவு சாக்லெட்டு... எப்ப இருந்து கொழுந்தனாரே நீங்க இவ்வளவு தாராளமானீக... அஞ்சு காசு செலவழிக்க அந்த யோசனை யோசிப்பீகளே..." உதய்யைச் சந்தேகமாய்ப் பார்த்தாள் நித்யா.

உதய்யைப் பற்றி அவளுக்கு நன்கு தெரியும். ஒற்றைக் காசைக்கூட வீணாய்ச் செலவழிக்க மாட்டான். எதையுமே தேவைக்கு வாங்கித்தான் அவனுக்குப் பழக்கம். அப்படிப்பட்டவன் சாக்லெட்டுகளில் பணத்தைப் போட்டு வீணடிக்க மாட்டான் என்பது அவளது எண்ணம். உதய் பதில் சொல்லும் முன் அஜித்,

"அம்மா... எம்மி அக்கா... சாக்கி..." என்று உமாவைப் பற்றின தகவல்களை அவன் விட்டு விட்டுச் சொல்ல, அதிர்ச்சியாய்ச் சின்னவனைப் பார்த்தான் உதய்.

'பயபுள்ள எப்படி எல்லாம் கோத்து விடுது பாரு...' என்று நினைத்த உதய், அடுத்து அண்ணி கேட்கப் போகும் கேள்விக் கணைகளுக்குத் தயாரானான். என்ன சொல்லிச் சமாளிப்பது என்று அவன் யோசிக்கும் போதே...

"எப்பப் பாரு... எமி எலின்னுட்டு... உன் வயசுக்கு எமி கேக்குதாடா எமி..." நித்யா அஜித் முதுகில் அடி போட... அதில் உதய்யின் மூச்சுச் சீரானது.

"குமாரு, சாப்பிட வாப்பா..." மாரீஸ்வரி மகனை அழைக்க...

"அம்மா... எனக்குப் பசிக்கல..." என்ற உதய், அதற்கு மேல் அங்கு இருந்தால் ஏதேனும் கேள்விக் கணை புறப்பட்டு விடுமோ என்ற பயத்தில், தனது அறைக்கு ஓடி விட்டான்.

உடையை மாற்றிக் கொண்டு படுக்கையில் விழுந்தவனுக்கு, அப்போதுதான் சின்னவன் சொன்னது ஞாபகம் வந்தது.

'அவ என்ன எமி மாதிரியா இருந்தா...?' என்று யோசித்தவனுக்கு, என்ன யோசித்தும் உமாவின் தோற்றத்தை ஞாபகப்படுத்த முடியவில்லை. ஆனால், அவளது கண்களின் காந்தப் பார்வை மட்டுமே ஞாபகத்தில் இருந்தது.

'எவ்வளவு தைரியமா... பார்த்து ஒருநாள் கூட ஆகாத ஒரு பையன் கிட்ட ஐ லவ் யூன்னு சொல்லுவா...? இவ என்ன மாதிரிப் பொண்ணு.... ஒரு வேளை ஐட்டமோ...?' ஆணின் மனநிலையில் இருந்து அவன் சிந்தித்தான்.

ஏனெனில், அவன் வளர்ந்த சூழ்நிலை அப்படி... காதலாக இருந்தாலும் அது ஆணின் பக்கத்தில் இருந்து தான் காதல் முதலில் வர வேண்டும் என்று நினைப்பவன். கல்லூரிக் காலத்தில் வலிய வந்து காதல் சொன்ன ஒரு பெண்ணைக் கிண்டலடித்தே அவ்ளைக் கல்லூரியை விட்டு ஓடச் செய்தான். மற்றும் ஒரு பெண் அவனிடத்தில் காதலைச் சொன்னதற்கு, அவளது கன்னத்தில் ஓங்கி அறை விட்டுத் தன் பதிலைச் சொன்னான்.

அதில் அவமானப்பட்ட அந்தப் பெண், அதன் பின் கல்லூரிக்கே வரவில்லை. அப்படிப்பட்டவனைத் தனது ஒவ்வொரு செயலாலும் அதிர வைத்துக் கொண்டிருந்தாள் உமா.

'என்கிட்ட காதலைச் சொல்ல எந்தப் பொட்டப் புள்ளைக்காவது தைரியம் இருக்கா...? ஆனா இவளுக்கு மட்டும் எப்படித் தைரியம் வந்தது...? அவளுகளை அடிச்ச மாதிரி இவளையும் அடிச்சிருக்கணும்...' என்று நினைத் தவன், தான் ஏன் அவளை அடிக்கவில்லை என்பதை யோசித்தான்.

'எங்கே, யோசிக்க விட்டாத் தானே அடிக்கிறதுக்கு... மின்னல் மாதிரி வந்தா... மின்னல் மாதிரி மறைஞ்சு போறா... அடுத்த தடவை மட்டும் இந்த மாதிரி லூசுத் தனமா உளறட்டும்... அதுக்கு அப்புறம் இருக்குக் கச்சேரி... இந்த உதய் யாருன்னு காட்டுறேன்... என் கையால தான்டி உனக்குச் சங்கு...' கோபமாய் அவன் நினைத்த நேரம்...

அவன் அலைபேசியில் குறுஞ்செய்தி வந்ததற்கான ஒலி கேட்க, அதை எடுத்துப் பார்த்தான்.

'குட் நைட் மச்சான்...' என்ற செய்தி அதில் வந்திருந்தது.

'மச்சானா... அது யாரு என்னை மச்சான்னு சொல்றது...?'

வெகு நேரம் யோசித்தவனுக்கு, அவளது 'மச்சான்' என்ற குரல் வெகு தாமதமாய்க் காதில் ஒலித்தது.

"போடி லூசு..." வாய் விட்டுச் சொன்னவன், அலைபேசியைப் படுக்கையில் தூக்கி எறிந்து விட்டு, விழிகளை மூடினான்.

காலையில் எழுந்தவன், உடற்பயிற்சியை முடித்து விட்டுக் கடைக்குத் தயாராகிக் கொண்டிருந்தான். அந்நேரம் அவன் அலைபேசியில் குறுஞ்செய்தி வர, அதைப் படித்தவனுக்குக் கோபம் கோபமாய் வந்தது.

'குட்மார்னிங் மச்சான்... ஐ லவ் யூ மச்சான்...' என்ற வாசகங்கள் அவனைக் கொதிநிலைக்குக் கொண்டு சென்றது.

"கொழுப்பு... உடம்பு பூராக் கொழுப்பு..." அவளைத் திட்டியவன்,

"எந்திரிச்சு குட்மார்னிங் சொல்ற நேரத்தைப் பாரு... மணி எட்டாச்சு... இந்நேரம் ஒரு பொட்டப் புள்ள எழுந்தா குடும்பம் நல்லா விளங்கிடும்... இதுல லவ்வு வேற..." அவள் காதலைச் சொன்னதுக்கு திட்டினானா, இல்லை தாமதமாக எழுந்ததுக்குத் திட்டினானா என்று அவனுக்கே விளங்கவில்லை.

'பேசாம அவளை கூப்பிட்டுப் பேசுவோமா...' என்று நினைத்தவன், பிறகு வேண்டாம் என்று முடிவு செய்து, அலைபேசியைச் சட்டைப்பையில் போட்டுக் கொண்டு அறையை விட்டு வெளியில் வந்தான்.

சமையலறைப் பக்கம் வந்தவன், அங்கு நின்று இருந்த கலைவாணியைக் கண்டதும் அதிசயித்தான்.

"என்ன கலை... அதிசயமா இருக்கு... உங்க அம்மா எப்படி எங்க வீட்டுக்கு உன்னை விட்டாக..."

"இல்லண்ணே... அஜித்தப் பார்த்து நாளாச்சுன்னு வந்தேன்..." அவள் எதுக்காக வந்து இருக்கிறாள் என்பது அவளுக்கு மட்டும்தான் தெரியும்.

இன்று சனிக் கிழமை ஆதலால், காலையிலேயே உமா கலையை அலைபேசியில் அழைத்து, உதய்யைப் பற்றிய தகவல்களைச் சொல்லச் சொல்ல, மனம் நொந்தவளாய்க் கலை அவனின் வீட்டிற்குக் கிளம்பி வந்தாள்.

"அம்மா... டிபனை எடுத்து வை..." உணவு மேசையில் அமர்ந்து கொண்டு உதய் குரல் கொடுக்க...

"வாரேன் குமாரு... எதுக்கு இப்படிக் கத்துற...?" என்றபடி தட்டில் தோசைகளை எடுத்துக் கொண்டு அங்கே வந்தார் மாரீஸ்வரி.

"அப்பா சாப்பிட்டாராம்மா...?"

"இன்னும் நேரஞ் செல்லட்டும்னு சொல்லிட்டாக... நீ வெளியில போற புள்ள, நேரத்தோட சாப்பிடு..." மகனுக்கு பரிமாறிக் கொண்டே மாரீஸ்வரி சொல்ல...

"கலை, நீயும் சாப்பிட வா..." தங்கையை அழைக்க...

"நா வீட்டுல சாப்பிட்டு வந்திட்டேன்..." மறுத்தவள், தனது அலைபேசியில் உமாவிற்குக் குறுஞ்செய்தி அனுப்பினாள்.

அங்கே உமா என்ன நினைத்தாளோ என்னமோ... உணவு அருந்திக் கொண்டு இருந்த உதய்க்குப் புரை யேறியது.

"பார்த்துச் சாப்பிடக் கூடாதா குமாரு..." மாரீஸ்வரி அவன் தலையில் தட்டியபடி தண்ணீரை எடுத்துக் கொடுத்தார்.

அந்த நேரம் பார்த்து உமா கலைக்கு, 'உதய் என்ன பண்ணுகிறான்' என்று கேட்டுக் குறுஞ்செய்தி அனுப்ப... அதைக் கண்டு கலைக்குக் கோபம் வந்து விட்டது.

'இந்தக்கா என்ன லூசா... இப்பத்தான் அண்ணா சாப்பிடுதுன்னு சொன்னேன்... அதுக்குள்ள என்ன பண்ணுதுன்னு கேட்டா...?' வந்த எரிச்சலில் உதய்க்குப் புரையேறி விட்டது என்ற செய்தியை அனுப்ப... அடுத்த நொடி உதய்யின் அலைபேசி அலறியது. அவன் அதை உயிர்ப்பித்துக் காதில் வைத்ததும்,

"என்ன மச்சான்... பார்த்துச் சாப்பிடக் கூடாதா...?" என்றவளின் குரலில், அவனது கைகள் உணவு எடுத்துச் செல்ல மறந்து வேலை நிறுத்தம் செய்தது.

"எப்பவுமே என் நினைப்பா மச்சான்... அதான் புரையேறிச்சோ..." அவளின் வார்த்தையில் மீண்டும் அவனுக்குப் புரையேறியது.

"என்ன குமாரு... இன்னைக்கு என்னாச்சு... இப்படிப் பொரையேறுது..." மாரீஸ்வரி மகனின் தலையைத் தட்ட வர... அவரின் கையைத் தடுத்தவன், உண்ணாமல் எழுந்தான்.

"குமாரு... சாப்பிட்டுப் போப்பா..."

"பசிக்கலை..." கையைக் கழுவிக் கொண்டே கூறிய வன், நேரே தனது அறைக்குச் சென்றான். அறைக் கதவைத் தாளிட்டவன்,

"ஏன்டி, உம் மனசுல என்ன நினைச்சிட்டு இருக்கே... அடுத்த தடவை நேர்ல பார்த்தேன்... உன்னைக் கொன்றே புடுவேன்..." ஆத்திரம் தாங்காமல் அவன் கத்த, மறுமுனையில் அமைதி நிலவியது. சிறிது நேரம் சென்று,

"என் மேல கோபப்பட்டுச் சாப்பிடாம வந்திட்டீங் களா... ஐ அம் சாரி... ப்ளீஸ் சாப்பிடுங்க... எனக்காக... நான் பிறகு கால் பண்றேன்..." என்றவள், அவனின் பதிலை எதிர்பார்க்காமல் அழைப்பைத் துண்டிக்க... அவளின் வார்த்தை தந்த தாக்கத்தில், அவன்தான் ஓய்ந்து போய்க் கட்டிலில் அமர்ந்தான்.

அவள் குரலில் இருந்த குற்றவுணர்வு, பணிவு இதை எல்லாம் விட, அதில் இருந்த அக்கறை எல்லாம் அவனின் மனதை ஏதோ செய்தது. அவள் கோபப்பட்டால் அவனும் பதிலுக்குக் கோபப்படலாம். ஆனால், அவனின் கோபத்திற்கு உடனே அடங்கிப் போகிறவளிடம் அவனால் கோபப்பட முடியவில்லை. அதற்காக அவளது காதலை யும் அவனால் ஏற்றுக் கொள்ள முடியாது.

அவனுக்கு இந்தக் காதல் கருமாந்திரத்தில் எல்லாம் நம்பிக்கை இல்லை. காதல் என்பது அவனைப் பொறுத்த வரையில், அந்த வயதிற்குரிய உடல் தேவை மட்டுமே. காதலைப் பற்றி அப்படிப்பட்ட உயர்ந்த சிந்தனை

டையவனிடத்தில் அவள் காதலை எதிர்பார்த்தால்...? அதற்கு நிச்சயம் அவன் பொறுப்பல்ல... அது அவளுடைய தவறு.

நேரே அவளைச் சந்தித்து, 'இந்தக் காதல் எல்லாம் எனக்குச் சரிப்பட்டு வராது' என்று சொல்லி விடலாமா என்று கூட யோசித்தான். அதன் பின் அந்த யோசனையைக் கை விட்டான். அவளைச் சந்திக்காமல் தவிர்த்தாலே, அவளே அவனை விட்டு விடுவாள் என்று தப்புக் கணக்குப் போட்டான்.

ஆனால், ஒன்று மட்டும் உண்மை... சற்று நேரத்திற்கு முன் அவள் மீது இருந்த அவனது கோபம் இப்போது சுத்தமாக இல்லை.

அறையில் இருந்து வெளியில் வந்தவனைத் தம்ளர் நிறையப் பாலுடன் மாரீஸ்வரி எதிர் கொண்டார்.

"சாப்பிடத்தான் இல்லை... இந்தப் பாலையாவது குடி குமாரு..." என்று தம்ளரை அவர் நீட்ட...

அவனின் காதுக்குள், 'எனக்காக...' அவளது குரல் ஒலிக்க, மறுக்காமல் அதை வாங்கிக் குடித்தான். அவளுக்காகத்தான் அவன் பாலைப் பருகினான். ஆனால், அதை ஒத்துக் கொள்ளத்தான் அவனுக்கு மனம் இல்லை.

"எல்லாம் ரெடியா மாப்ளே..." அழகிடம் கேட்டுக் கொண்டே திரையரங்கிற்குள் நுழைந்தான் உதய். ஒவ்வொரு சனிக்கிழமை இரவும் அவர்களது திரையரங்கில் அந்த வார இறுதியைக் கொண்டாடும் வண்ணம் மது விருந்து, சீட்டாட்டம் எல்லாம் அரங்கேறும்.

மது விருந்து மட்டுமல்ல... திரையரங்கில் அன்று திரையிடப்படும் படமும் வேறு மாதிரி இருக்கும். இதில் உதய் மற்றும் முத்துவின் நண்பர்களோடு அழகேசனும் கலந்து கொள்வான். தங்கவேலுக்கு இது தெரிந்தாலும் பெரிதாகக் கண்டு கொள்வது இல்லை.

மாரீஸ்வரி புலம்பினாலும், 'இளந்தாரி பயலுவ கொஞ்சம் அப்படி இப்படி இருக்கத்தான் செய்வாய்ங்க...' என்று கூறி, அவரின் வாயை அடைத்து விடுவார்.

"எல்லாம் ரெடி மச்சான்... நம்ம கூட்டம் வந்ததும் கச்சேரியை ஆரம்பிச்சிர வேண்டியதுதான்..." உற்சாக மாய்ச் சொன்னான் அழகு. அவன் உயிர் வாழ்வதே இந்த வாரயிறுதி நாளுக்காகத்தானே...

நண்பர்கள் அனைவரும் ஒன்று கூட, வழக்கம் போல் கச்சேரி களை கட்டியது. அவரவர் அந்த வாரம் நடந்த நகைச்சுவைக் கலாட்டாக்களைச் சுவைபடக் கூற... அரட்டை சுவாரசியமாய்ச் சென்றது. அரட்டையோடு அரட்டையாக, மதுபானம் அவர்களின் வயிற்றுக்குள் வேகமாய்ச் சென்றது.

உதய்யும் தன் பங்கு மது பானத்தை உள்ளே தள்ளிக் கொண்டிருக்க, அவனின் அலைபேசி இன்னிசை யாய் இசைத்து, அவனின் கவனத்தைக் கலைக்க...

"ச்சு... இந்த நேரத்தில் யாரு...?" எரிச்சலுடன் அவன் அலைபேசியை உயிர்ப்பித்துக் காதில் வைக்க...

"மச்சான்..." என்று மறுபக்கம் வந்த குரலில் திடுக்கிட்டவன், நண்பர்களைப் பார்த்து, "ஒரு நிமிஷம்..." என்று வேண்டிக் கொண்டு வெளியில் வந்தவன்,

"என்னடி வேணும் உனக்கு...? அர்த்த ஜாமத்துல கால் பண்ணுற..." போதையில் குழறலாய் ஒலித்தது அவனது குரல்.

"குடிச்சிருக்கீங்களா...?"

"ம்... நான் குடிப்பேன்... உனக்கு என்ன வந்திச்சி..." அவனின் வார்த்தைகள் அவளுக்குக் கோபத்தை அளித்தது.

"ம்... கல்யாணத்துக்கு அப்புறம் குடிச்சிப் பாருங்க... குடிக்கிற அந்த வாயில சூடு வைக்கிறேன்..."

அவளின் வார்த்தையில் அவன் ஏற்றியிருந்த போதை அப்படியே இறங்கியது. "ஏய்... என்னடி, லந்தா பண்ற... நான் அப்படித்தான்டி குடிப்பேன்... குடிக்கிறது மட்டுமல்ல இதோ இப்ப பிட் படம் பார்க்கப் போறேன்... அது முடிஞ்சதும் அப்படியே அம்சமான ஒரு ஜட்டத்தோட சும்மா ஜல்சா..." மேற்கொண்டு அவன் பேசும் முன்,

"ஸ்டாபிட் உதய்..." கத்தியவள்,

"இப்படி எல்லாம் சொன்னாப் பயந்து பின் வாங்கிடுவேன்னு நினைச்சீங்களா... நெவர்... இன்னைக்குக் காலக்கட்டத்துல இப்படிப் பசங்க இல்லைன்னாதான் அதிசயம்... எனக்கு நம்பிக்கை இருக்கு... நம்ம கல்யாணத்துக்கு அப்புறம் உங்களை மாத்த என்னால முடியும்...

"அதே மாதிரி வேற பொண்ணோட நினைப்பு வராத அளவுக்கு உங்களை என் கைக்குள்ள வச்சிக்கிற வித்தை எனக்குத் தெரியும்..." என்றவளின் வார்த்தைகள்,

அவனின் மனதை இதமாய் வருடத்தான் செய்தது. அவளது உறுதியான வார்த்தைகள், அவனை அசைத்துப் பார்க்கத்தான் செய்தது.

"என்ன உதய்... அமைதியாய் இருக்கீங்க...?" பேச்சில்லாமல் மௌனமாய் இருந்தவனை, அவள் அவ்வாறு கேட்க...

"பேச என்ன இருக்கு...?" என்றான் முயன்று வரவழைத்த எரிச்சலுடன்.

"ஓ.கே. உதய்... குட் நைட்..." சொன்னவள், ஒரு நொடி தயங்கி...

"இப்போ என்ன பண்ணப் போறீங்க...? நீங்க சொன்ன மாதிரி பிட் படம், ஐட்டம்..." கேட்டவளின் குரலில் சொல்லொண்ணா துயரம் ஒளிந்திருந்ததோ...

"இல்லை, வீட்டுக்குப் போறேன்..." என்றான் அவனையும் அறியாமல். அந்தளவிற்கு அவளது குரலில் இருந்த துயரம் அவனையும் துயரப்படுத்தியது.

"தேங்க்ஸ் உதய்..." என்றவளின் நன்றி கலந்த மகிழ்ச்சி அவனையும் தொற்றிக் கொண்டது. அலை பேசியைத் துண்டித்தவன் உள்ளே சென்று,

"நான் வீட்டுக்குப் போறேன்... நீங்க இருந்து என்ஜாய் பண்ணுங்க..."

"மச்சான்... நீயில்லாம பார்ட்டி களை கட்டாதுடா..." அவனது நண்பர்கள் அவனைத் தடுக்க...

"இல்லடா... தலை வலிக்கிற மாதிரி இருக்கு..." வராத தலைவலியை வந்த மாதிரி காட்டிக் கொண்டான். அதற்கு

மேல் நண்பர்கள் கூட்டம் அவனை வற்புறுத்தவில்லை. வீட்டிற்கு வந்து படுத்தவனுக்கு, என்றும் இல்லாத அளவுக்கு மனதில் ஒரு நிறைவு ஏற்பட்டது.

மறுநாள் காலையில் உதய் எழும்போதே தன் தந்தையின் கோபக் குரலைக் கேட்டபடி எழுந்தான். அவசரமாய் முகத்தைக் கழுவிக் கொண்டு வெளியில் வந்தவன், அங்கு கண்ட காட்சியில் திகைத்தான்.

"இங்கே பாருண்ணே... தேவையில்லாம என் விஷயத்துல தலையிடாதே... நான் பண்ற பஞ்சாயத்துல நீ வீணா மூக்கை நுழைக்காதே... அப்புறம் மருவாதை கெட்டுரும்..." தங்கவேலுவை நோக்கிக் கையை ஆட்டிப் பேசிக் கொண்டிருந்தான் ராஜரத்தினம்.

ஒரு காலத்தில் தங்கவேலுவின் கீழே வேலை பார்த்தவன், பின் பிரிந்து சென்று தனக்கு என்று தனி வழியை ஏற்படுத்திக் கொண்டான். அவன் தங்கவேலு வைப் போல் நியாயம் அநியாயம் பார்ப்பது இல்லை.

பணம் மட்டுமே அவனது குறிக்கோள். அப்படிப் பணம் ஒன்றை மட்டுமே குறிக்கோளாய்க் கொண்டு ஒரு விசயத்தில் அநியாயத்தின் பக்கம் அவன் நிற்க... நியாயத்தின் பக்கம் நின்ற தங்கவேலு, அதை நியாயத்திற்குச் சார்பாய் முடித்துக் கொடுத்தார். அதற்குத் தான் அவன் கோபம் அடைந்து, அவர் வீடு தேடி வந்து கத்திக் கொண்டு இருக்கிறான்.

"டேய்... நீ யாருடா எங்க அப்பாருவைக் கை நீட்டிப் பேசுறதுக்கு...?" என்று உதய் கத்த...

"நீ ஊடால பேசாத... சின்னப்பய சின்னப்பயலா இரு..." என்று அவனை அடக்க...

"என்னடா சொன்ன..?" உதய் எகிற...

"சும்மாயிரு குமாரு..." தங்கவேலு அடக்கவும்தான் உதய் சற்று அடங்கினான்.

ராஜரத்தினம், தங்கவேலுவிடம், "கடைசியா என்னதா சொல்றண்ணே..."

"என்னத்தைச் சொல்லச் சொல்ற...?" தங்கவேலு அழுத்தமாய்ப் பார்த்தார்.

"இனிமேற் கொண்டு என் வழியில தலையிடாதே..."

"நானா தலையிடலை... அவுகளா என் கிட்ட வந்தாக... விசாரிச்சுப் பார்த்து அவுக பக்கம் நியாயம் இருக்குன்னு தெரிஞ்சதுக்கு அப்புறமாத்தான் நா தலையிட்டேன்... முதல்ல நீ நியாயம் எது... அநியாயம் எதுன்னு தெரிஞ்சு பஞ்சாயத்தைக் கையில் எடு..." அவர் திட்டவட்டமாய்க் கூற, அதில் ஆத்திரமடைந்த ராஜரத்தினம்,

"உம்ம உயிரோட விட்டாத்தானே தலையிடுவீரு..." என்றபடி இடுப்பில் சொருகி இருந்த கத்தியை எடுத்துக் கொண்டு தங்கவேலு மேல் பாய... கண்ணிமைக்கும் நேரத்தில் அவன் மேல் பாய்ந்த உதய், அவனின் கையை மடக்கித் திருப்பிக் கத்தியை அவனின் கழுத்தில் வைத்து அழுத்த, அதில் ராஜரத்தினம் உயிர் பயத்தில் அலறினான்.

"வேணாம் குமாரு... அவனை விடு..." தங்கவேலு சொல்ல...

"அப்பா... இவனைக் கொன்னாத்தான் என் ஆத்திரம் அடங்கும்..." கத்தியைப் பிடித்து அவனின் கழுத்தில் வைத்து அழுத்த... அவனின் கழுத்தில் லேசாக ரத்தம் கசிந்தது.

"விடுன்னு சொல்றேன்ல..." தங்கவேலுவின் அதட்டலில் உதய் தன் கையைத் தளர்த்த... தப்பித்தோம் பிழைத்தோம் என்று ராஜரத்தினம் வெளியில் ஓடி விட்டான்.

"நீங்க செய்றது கொஞ்சம் கூட நல்லாயில்ல... இந்த இடத்துலேயே அவனைப் போட்டுத் தள்ளி இருக்கணும்... என்னமோ போங்கப்பா..." எரிச்சலுடன் மொழிந்தவன், வீட்டிற்கு வெளியில் வந்தான்.

அங்கே ஓரமாய் நின்று கொண்டிருந்த கலையைக் கண்டதும் அவனுக்கு வித்தியாசமாய்த் தோன்ற, அவளருகில் வந்தான்.

"இப்பத்தேன் இங்கே வந்தேன் அண்ணி... இதோ போயிட்டுச் சொல்றேன்..." அவளது பேச்சில் அவனுக்கு ஏதோ புரிய, பின்னால் இருந்து அவளது அலை பேசியைப் பிடுங்க... எதிர்பாராமல் அவனைக் கண்டதும் கலை பயத்துடன்,

"அண்ணே..."

"ஷ்..." வாயில் விரல் வைத்து அவளை அடக்கி யவன், அலைபேசியைக் காதில் வைத்தான்.

"கலை... இன்னைக்கு உங்க அண்ணன் எங்கே போறாருன்னு கேட்டுச் சொல்லு... எனக்கு அவரைப்

பார்க்கணும் போல இருக்கு...” உமாவின் குரலில் அவனுக்கு எல்லாம் புரிந்து போனது. அவன் கலையை முறைத்துப் பார்த்தான்.

“அண்ணே... அந்தக்கா எனக்குச் சீனியர்... சொன்னதைச் செய்யலன்னா ஆம்பள பயலுவள வெச்சு ராக்கிங் பண்ணுவேன்னு மிரட்டினாக... அதேன்...” அவளுக்கு அழுகை வெடித்தது.

மறுமுனையில் இருந்த உமாவுக்கு எல்லாம் விளங்கியது.

“உதய் சாரிப்பா... சும்மா அவளை மிரட்டத்தான் அப்படிச் சொன்னேன்... என் நாத்தனாரை நான் மிரட்டுவேனா...” அவன், அவள் பேச்சைக் காதில் வாங்காமல்,

“நா உன்னப் பார்க்கணும்... இன்னும் அரை மணி நேரத்துல ரெடியா இரு... உன் காலேஜுக்கு நா வாரேன்...” என்றவன், அவள் பதிலை எதிர்பாராமல் அலைபேசியை அணைத்தான்.

“யாரு அண்ணின்னு சொல்லச் சொன்னாலும் சொல்லிருவியா...” கலையைக் கடிந்தான்.

“அண்ணே... அவுக அண்ணின்னு சொல்லலன்னா வையுறாகண்ணே... நா என்ன பண்றது...?” இன்னமும் அழுகையை நிறுத்தவில்லை அவள்.

“சரி, சரி. நீ அழுவாதே... இதை நான் பார்த்துக் கிடுறேன்... கண்ணைத் தொடைச்சுட்டு உள்ளாற போ...” என்றவன், உமாவைச் சந்திக்கத் தயாரானான்.

உதய் சொன்ன நேரத்திற்கு முன்பே வந்து காத்திருந்த உமா, நகத்தைக் கடித்தபடி அவனின் வருகைக்காகப் பரபரப்பாய்க் காத்திருந்தாள். சொன்ன நேரத்திற்கு அங்கு வந்த உதய், அவளை முறைத்தபடி வண்டியை நிறுத்தி விட்டுக் கீழே இறங்கினான்.

'மச்சான் கோபமா வர்ற மாதிரி இருக்கே... எப்படிச் சமாளிக்கப் போற உமா...?' உதய்யின் கோபம் கண்டு அவளுக்கு மலைப்பாய் இருந்தது. ஆனாலும் முன்னே வைத்த காலைப் பின்னே வைக்க அவள் விரும்ப வில்லை. அதனால் அவனை எதிர்கொள்ள வேண்டிய தைரியத்தை ஏற்படுத்திக் கொண்டு, அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

"இந்தாப் பொண்ணு..." அவன் ஆரம்பிக்க...

"உமா... உமா மகேஸ்வரி..." அதற்கும் முறைத்த வன்,

"இங்கே பாரு உமா... இந்தக் காதல் கத்தரிக்காய் எல்லாம் எனக்குச் சரிப்பட்டு வராது... காலேஜில என்கிட்ட லவ்வு சொன்ன ரெண்டு பொண்ணுங்களை ஓட ஓட விரட்டி அலற வச்சிருக்கேன்... ஏதோ உன்கிட்ட மட்டுந்தான் நா அமைதியா கேட்டு இருக்கேன்... நீ பண்றது, பேசுறது எதுவுமே சரியில்லை... அதுக்கான ஆளு நானில்லை..."

"ஏன், என்னைப் பிடிக்கலையா...?" தான் அவ்வளவு சொல்லியும் அவள் இப்படிக் கேட்டது, அவனுக்கு எரிச்சலை உண்டு பண்ணியது.

"நான் என்ன சொல்லுறேன்... நீ என்ன பேசுத..." என்றவன், அவளின் கண் பாவத்தில் பேச்சை இழந்தான். அவளது விழிகள் இறைஞ்சிய காதல் யாசகம், அவனின் மனதைப் பிழிந்தது.

முதன் முறையாய் அவளை உற்றுப் பார்த்தான். அழகாய் இருந்தவளின் அழகு, அவனின் மனதைப் பித்தம் கொள்ளத்தான் செய்தது. மொத்தத்தில் அவளின் அழகு அவனைத் தடுமாறச் செய்தது என்னமோ நிஜம். இருந்தாலும் தன்னைச் சமாளித்துக் கொண்டு,

"உன்னை மாதிரி பொண்ணை எல்லாம் தூரத்துல பார்த்து சைட் அடிக்கலாம்... இதே இது, வாழ்க்கை முச்சூடும் வாழறதுக்குச் சரிபட்டு வராது... ஏதோ சுமாரான அழகுள்ள பொண்ணுதான் எனக்குச் சரிப்பட்டு வரும்... எனக்குன்னு சொல்றதை விட என் வீட்டுக்குன்னு சொல்றது சரி... உன்ன மாதிரி அழகுள்ள பொண்ணு என் வீட்டோட பொருந்திப் போக முடியாது... தாமரை இலை தண்ணி மாதிரிதான் நீயும் நானும் ஒட்டவே முடியாது...

"சரி, அதை விடு... நீ டாக்டரு... நா வக்கீலு... நீ நல்லாப் படிக்கிற ஆளு... நான் எல்லாம் சுமாரா படிக்கிற ஆளு... ப்ளஸ்டூல அறுநூறு சொச்சம் எடுத்து லா காலேஜ் சேர்றதுக்கே ததிங்கிணத்தோம் போட்டவன் நான்... சேர்ந்தாப்புல நாலு வார்த்தை இங்கிலீசுல பேச வராது...

"இப்படிப் படிப்பு, அழகுன்னு எந்தப் பொருத்தமும் இல்லாத நமக்குள்ள எங்கே இருந்து காதல் வரும்...? நீ வேணும்னா காதல்னு சொல்லிக்கோ... என்னைக் கேட்டா வயசுக் கோளாறுன்னுதான் சொல்லுவேன்...

"நீ உனக்கு ஏத்தவனாப் பார்த்து... இல்ல இங்கேயே பாக்குருக்குப் படிக்கிற நல்ல பயலாப் பார்த்து லவ் பண்ணிக் கல்யாணம் பண்ணிக்கோ... உங்க ரெண்டு பேத்துக்கும் சேர்த்து நானே க்ளினிக் கட்டிக் கொடுக்கி றேன்... இந்த மாதிரி லவ்வு கிவ்வுன்னு என் பின்னால சுத்தாதே... எனக்கு போன் பேசாதே..." நீளமாய் மூச்சு விடாமல் பேசியவனைக் கண்ணிமைக்காமல் பார்த்த உமா,

"எல்லாம் சொன்ன நீங்க, உங்களுக்கு என்னைப் பிடிக்குதா இல்லையான்னு ஒரு வார்த்தை சொல்ல லையே..." என்றவளை எரிச்சலுடன் பார்த்தவன்,

"இம்புட்டு நேரம் நான் என்ன ராமாயணமா படிச்சிட்டு இருந்தேன்... அதத்தானே சொல்லிட்டு இருந் தேன்..."

"என் படிப்பு, அழகு இதுதான் உங்களுக்கு ஒத்து வராதுன்னு சொன்னீங்க... அதே மாதிரி உங்க குடும்பத் துக்கும் ஒத்து வராதுன்னு சொன்னீங்க... ஆனா என்னைப் பிடிக்கலைன்னு ஒரு வார்த்தை கூட நீங்க சொல்லலையே... அப்போ என்னை உங்களுக்குப் பிடிச்சுத்தானே இருக்கு..."

முதன் முறையாய் தனது வாழ்க்கையில் பதில் சொல்ல முடியாமல் திணறினான் உதய். இந்த மாதிரி அழகுள்ள பெண்ணை வேண்டாம் என்று கண்ணில்லா தவன் கூடச் சொல்ல மாட்டான். அதற்கு உதய்யும் விதி விலக்கு அல்ல.

ஆனால், உமா அவனுடைய குடும்பத்துடன் என்றுமே ஒட்ட முடியாது. அவளைப் பார்த்தாலே தெரிகிறது அவளது குடும்பக் கலாசாரம் வேறு என்று... காதல், திருமணம் என்பது இரு உள்ளங்களின் சேர்க்கை மட்டுமல்ல... இரு குடும்பத்தின் உறவை இணைக்கும் பாலமும் கூட.

"நீ என்ன நினைச்சாலும் பரவாயில்லை... என்னோட கல்யாணம் என் குடும்பத்துச் சந்தோஷத்துக் காக மட்டும்தான்... என்னோட சந்தோஷத்துக்காக இல்லை... என்னால உன்னைக் காதலிக்க முடியாது..." என்றவன், அவளின் பதிலை எதிர்பாராமல் வண்டியை கிளப்பிக் கொண்டு சென்றான்.

எந்த நேரத்தில் இந்த வார்த்தையைச் சொன் னானோ... அதே வார்த்தை பலிக்கப் போவதை இருவரும் அறிந்திருக்கவில்லை.

"போ மச்சான் போ... நீ எவ்வளவு தூரம்தான் போவேன்னு நானும் பார்க்கிறேன்..." என்றவள்,

"இன்னும் அரை மணி நேரத்தில் நீ அலறி அடிச்சிட்டு என் முன்னால வந்து நிற்கலை... என் பேரு உமா மகேஸ்வரி இல்லை..."

அவள் சபதம் போட்டது போல் அடுத்த அரை மணி நேரத்தில் உதய் அவள் முன் நின்று இருந்தான். அவளோ வெற்றிப் புன்னகையுடன் அவனைப் பார்த் தாள். அவனோ கொலை வெறியுடன் நின்று கொண்டு இருந்தான்.

சாலையில் கண்களைப் பதித்து இருந்தாலும் உதய்யின் மனம் உமாவையே சுற்றிச் சுற்றி வந்தது.

'என்ன இல்லை அந்தப் பெண்ணிடம்.? அப்படி என்ன இருக்கிறது தன்னிடம்... எதற்காக அவள் இப்படித் தன்னை விடாமல் பின் தொடர்கிறாள்?' என்ன யோசித்துப் பார்த்தும் அவளின் காதலுக்கான விடைதான் அவனுக்குக் கிட்டவில்லை.

அவளை மாதிரி அழகான, அம்சமான பெண்களை அவன் திரைப்படத்தில்தான் பார்த்து இருக்கிறான். அந்த மாதிரிப் பெண்களைத் தூரத்தில் பார்த்து ரசிக்கலாம்...

ஆனால், அவளையே கல்யாணம் பண்ணி குடும்பம் நடத்துவது எல்லாம் இயலாத காரியம்... அவனைப் பொருத்தவரையில், அவனுக்கு வரப் போகும் மனைவி, அவன் சொல் பேச்சு கேட்டு, அவனுக்கு அடங்கி, அவனின் குடும்பத்தாருடன் ஒத்துழைத்து அனுசரித்து வாழ வேண்டும்.

இதெல்லாம் அவளால் முடியுமா...? அவனுக்கு வரப் போகும் மனைவியால் குடும்ப ஒற்றுமையில் சிறு கீறல் கூட விழ அவனுக்கு விருப்பம் இல்லை.

அதற்குத் தன் பெற்றோர் பார்க்கும் பெண்தான் தனக்குச் சரிப்பட்டு வரும் என்று அவன் மனம் உறுதியாய் நம்பியது.

அவள் கடைசியாய் பேசியது அவன் காதில் ஒலித்துக்கொண்டே இருந்தது.

'என்னைப் பிடிக்கலைன்னு ஒரு வார்த்தை கூட நீங்க சொல்லலையே... அப்போ என்னைப் பிடிச்சுத் தானே இருக்கு...'

அப்போது அவள் கண்ணில் தெரிந்த பாவம், அவனை ஏதோ செய்தது. அந்த ஏதோ ஒன்றுதான் காதல் என்பதை அவன் இன்னமும் உணரவில்லை.

அப்போது பின்னால் வந்த கார்க்காரன் ஹார்ன் அடிக்க, அதில் தன்னுணர்வு பெற்றவன், வண்டியின் வேகத்தை அதிகப்படுத்தினான். 'பார்த்து முழுசா மூணு நாளாகல... அதுக்குள்ள இந்தப் பாடு படுத்தறாளே... இதுல வாழ்க்கை முச்சூடும்ன்னா... நினைக்கவே மூச்சு முட்டுதே... அப்பா சாமி... ஆளை விடும்மா...' அவளின் நினைவை வலுக்கட்டாயமாய்ப் பின்னுக்குத் தள்ளியவனுக்கு, இவ்வளவு நேரம் இருந்த மனக்கலக்கம் இப்போது இல்லை.

'வேண்டாம் என்றால் வேண்டாம் தான்... அவனுக்கு ஏற்ற பெண் எங்கோ இருப்பாள்... எதற்கு இவள் பின்னாடி காதல் என்கிற பேரில் அலையணும்...?' என்று நினைத்தவன், வண்டியை நிறுத்தி விட்டுக் கடைக்குள் நுழைந்தான்.

கடைக்குள் நுழைந்து கணக்குப் புத்தகத்தை எடுத்துக் கணக்குப் பார்க்க உட்கார்ந்தவனை வேலை செய்ய விடாமல், அவன் அலைபேசி சிணுங்கியது.

"முதல்ல இந்த செல்போனைக் கண்டுபிடிச்சவனைத் தூக்குல போடணும்..." எங்கோ உள்ள எரிச்சலை அதில் காண்பித்தவன், அதை எடுத்துக் காதில் வைத்தான்.

"குமாரு... நான் தான்யா ஏட்டு பேசறேன்..." அவன் இருக்கும் ஏரியாவில் காவல் நிலையத்தில் இருந்து ஏட்டு பேசினார்.

"அண்ணே... சௌக்கியமா...? என்ன விஷயம், சொல்லுங்கண்ணே..."

"இங்கே ஒரு பொண்ணு உன் மேலே கம்ப்ளைண்ட் கொடுத்திருக்கு..."

"கம்ப்ளைண்ட் எல்லாம் நமக்குப் புதுசாண்ணே... என்ன கம்ப்ளைண்ட்டாம்..." அசால்ட்டாய்க் கேட்டான். அவர்கள் தொழிலில் இதெல்லாம் சகஜம்.

"இது புதுசாத்தான் இருக்கு குமாரு..." அவரின் பேச்சில் அவன் துணுக்குற்றான்.

"என்ன அண்ணே சொல்றீக...?"

"ஆமாம் குமாரு... அந்தப் பெண்ணை நீ கெடுத்துட்டதா சொல்லுது... நல்லவேளை நம்ம இன்சு இல்லாததால், நான்தான் கேசை எடுத்தேன்..." அவர் சொன்னதுக்கு எல்லாம் அவன் பயப்படவில்லை.

"அண்ணே... நல்லா விசாரிச்சுப் பாருங்கண்ணே... வேற யாரையாவது சொல்லியிருக்கப் போகுது..."

"இல்லய்யா... நல்லா விசாரிச்சிட்டேன். அது உன்னைத்தான்பா சொல்லுது..." அதில் அவனுக்குக் கோபம் தலைக்கேறியது.

"அப்போ கம்ப்ளைண்ட் வாங்கிட்டு அதை மெடிக்கல் செக்கப்புக்கு அனுப்புங்க... அப்போ தெரியும், அது சொல்றது உண்மையா இல்லையான்னு..."

"குமாரு... கோபப்படாம நா சொல்றதைக் கேளு... பொண்ணு பார்க்க அழகா இருக்கு... நம்ம இன்சு வேற ஒரு மாதிரி... இப்போ அவரு வர்ற நேரம் வேற..." அவர் சொன்னது எதுவும் அவன் காதில் விழவில்லை. 'சூப்பர்' என்ற வார்த்தை மட்டுமே அவன் காதில் விழுந்தது.

'ஒரு வேளை அவளா இருக்குமோ...?' அவன் மனதில் திகிலடித்தது.

"அண்ணே... அது பேரு என்னண்ணே..." என்று கேட்டான், உயிரைத் தன் கையில் பிடித்துக் கொண்டு...

"தெரியலையே... இருய்யா கேட்டுச் சொல்றேன்..." என்றவர் சிறிது நேரம் சென்று,

"உமா மகேஸ்வரியாம்..." அவர் சொல்லி முடிக்கும் முன்,

"அண்ணே... தெரிஞ்ச பொண்ணுதான்னே... ஏதோ வெவரம் புரியாம கிறுக்குத்தனம் பண்ணுது... நான் பத்து நிமிசத்துல அங்கே வந்திர்றேன்..." என்றவன், சொன்னது போல் பத்தே நிமிடங்களில் அங்கு இருந்தான்.

காவல் நிலையத்துக்குள் நுழைந்தவன் விழிகள், உமாவைத்தான் தேடியது. ஏட்டின் முன் அமர்ந்து அவருடன் சிரித்துப் பேசிக் கொண்டு இருந்தவளைக் கண்டு, அவனுக்குக் கொலைவெறி வந்தது. வேக எட்டுகள் வைத்து அவள் அருகில் வந்தவன்,

"உமா..." என்றான் அதட்டலாக. அவனின் அழைப்பில் திரும்பியவள் முகம், அவனைக் கண்டதும் பூவாய் மலர்ந்தது.

"உதய்..." சந்தோஷத்துடன் அவள் எழ...

"அண்ணே... நா பொறவு வந்து பேசறேன்... இப்போ இவளைக் கூட்டிட்டுக் கெளம்பறேன்..." அவருக்குமே அவன் கூறியது சரி என்று படவே,

"முதல்ல அதைச் செய் குமாரு..." அவனிடத்தில் சொன்னவர்... அவளிடம்,

"இந்தாம்மா... இப்படி விசுக்குன்னு பொட்டப்புள்ள போலீசு ஸ்டேசன் கிளம்பி வரக் கூடாது... எதுவா இருந்தாலும் குமாரு கூடப் பேசித் தீர்த்துக்கோ..." என்று அறிவுரை கூற... அவள் சிரிப்புடன் அதை ஏற்றுக் கொள்ள... அவனோ,

"அண்ணே... நீங்களுமா அது சொல்றதை நம்புறீக..." சலித்தவன்,

"கெளம்பு..." பல்லைக் கடித்தபடி அவளிடம் சொன்னான்.

அவளுடன் இணைந்து வெளியில் வரும் போது, "இங்கெல்லாம் எதுக்கு வந்த...? இதுல கம்ப்ளைண்ட் வேற... நா உன்னைக் கெடுத்தேனா..." கடிந்தவனைப் பார்த்து,

"இல்லையா பின்னே... யாரைப் பார்த்தும் மயங்காத என்னை மயக்கிட்டீங்கல்ல... உங்க மனச்சாட்சியைத் தொட்டுச் சொல்லுங்க, நீங்க என் மனசைக் கெடுக்கல.. அதைத்தான் நான் அவர்கிட்ட சொன்னேன்... அப்ப விறைப்பா போனீங்கல்ல... இப்போ எப்படி என்னைத் தேடி வரவழைச்சேன் பார்த்தீங்களா... இதுதான் உமா...

போகப் போகப் பாருங்க... இந்த உமா யாருன்னு..." என்றவளைக் கண்டு கோபம் கோபமாய் வந்தது.

அதற்குள் அந்த இன்ஸ்பெக்டர் உள்ளே நுழைந்தான். உதய்யைக் கண்டதும், "என்ன குமாரு இந்தப் பக்கம்...?"

பேச்சு உதய்யிடம் இருந்தாலும் அவனின் பார்வை பூவை மொய்க்கும் வண்டு போல் உமாவை மொய்த்தது. அவனது அளவிடும் பார்வை உதய்க்குக் கோபம் உண்டு பண்ணியது.

"ஒரு வேலையா ஏட்டுக்கிட்ட பேச வந்தேன்..." என்றவன், "கெளம்பறேன் இன்சு..."

"குமாரு... குட்டி சோக்கா இருக்கு... யாருன்னு சொல்லவே இல்லையே..." அவன் கேட்டதும், உமா அவனைப் பார்வையால் எரித்தாள்.

அவனது பேச்சில் மனதில் மூண்ட ஆங்காரத்துடன் உமாவைத் திரும்பிப் பார்த்த உதய், அவள் அந்த இன்ஸ்பெக்டரை முறைப்பதைக் கண்டு,

'ஏழரையக் கூட்டாம விட மாட்டா போலிருக்கே... எல்லாம் இவளால வந்தது...' மனதில் எழுந்த எரிச்சலுடன்...

"நம்ம ஆளு தாண்ணே..." வேண்டும் என்றே அசடு வழிந்தபடி...

"நம்ம ஆளா..." அந்த இன்ஸ்பெக்டராகப்பட்டவன் வடித்த ஜொள்ளில், அந்தக் காவல் நிலையம் ஜொள்ளில்

மிதந்தது. அதைக் கேட்டு உதய்யின் முகம் பாறை போல் இறுகியது.

"இல்ல இன்சு... இவ என் ஆளு..." என்றவன், அவளின் கையைப் பிடித்துக் கொண்டு வெளியில் வர.. உமாவோ அவன் பிடியில் இருந்து தன் கையை விடுவிக்கப் போராடினாள்.

"எதுக்குக் கையைப் போட்டு இந்தக் குலுக்கு குலுக்குற... பெருசா ஏட்டுக்கிட்ட சொன்னேல்ல... நா உன்னை கெடுத்துட்டேன்னு... கையைக் கூட பிடிக்காம எப்படிக் கெடுக்க முடியும்..." நேரிடையாய் அவன் அப்படிப் பேசியதில், லஜ்ஜையுற்ற அவளின் முகம் சிவந்தது.

தனது வண்டியைக் கிளப்பியவன், "ஏறு..." அவன் அதட்ட... மறுபேச்சு இல்லாமல் அவள் ஏற, அவனது வண்டி சாலையில் பறந்தது. நேரே அவளது கல்லூரியில் அவளை இறக்கி விட்டவன்,

"ஒரு நிமிஷம்... நா உன் கூடப் பேசணும்..." என்றான் இறுக்கமான குரலில்.

"ம்..." அவள் சொன்னதும், உள்ளே சற்று தள்ளி நடந்தவர்கள், ஆட்கள் நடமாட்டம் குறைவாய் இருந்த பகுதியில் இருந்த மரத்தடியில் வந்து நின்றனர்.

"நீ பண்ணிய கூத்துக்கு எனக்கு வர்ற ஆத்திரத் துக்கு உன்னைக் கொன்னே போடணும்..." என்றவன், ஆத்திர மிகுதியில் அவளின் கழுத்தை நெறிக்கக் கையைக் கொண்டு போனவன்,

பின், "ச்சே..." என்று கையை உதறி, அவளை விட்டுத் தள்ளி நின்றான்.

"என்னதான் புள்ள உனக்குப் பிரச்சினை...? பொட்டப்புள்ள இப்படியா போலீஸ் ஸ்டேசனுக்கு ஒத்தையாப் போவ... பார்த்தேல்ல அந்த இன்சோட பேச்சும் பார்வையும்... நா மட்டும் அங்கே வராம போயிருந்தேன்னு வையி... அவன் பார்வையில செய்ததைச் செய்கையில் செஞ்சிக் காட்டியிருப்பான்..." என்று அவளைத் திட்டியவன்...

"எவ்வளவு தைரியம் இருந்தா நா உன்னைக் கெடுத்துட்டேன்னு சொல்லுவ... எந்தப் பொண்ணும் சொல்லக் கூடாததை நீ சொல்றேன்னா... நீ எந்த மாதிரியான பொண்ணு...? உன்னை நான் எந்த மாதிரி எடுத்துக்கிடது... எங்க ஊருலல்லாம் உன்னை மாதிரி பொண்ணுங்களுக்கு வேற பேரு... நீ அலையறதுக்கு நா ஆளில்ல... அதுக்கு வேற ஆளைப் பாரு... பார்த்து முழுசா மூணு நாளாகல... காதலாம் காதல்...

"இப்போ உள்ள காதலைப் பத்தி எனக்கும் தெரியும்... படிக்கிற வரை பொழுது போக ஒருத்தன்... அதுக்கப்புறம் கல்யாணம் பண்ண வேறொருத்தன்... இப்போ என்னைக் காதலிக்கிறேன்னு சொல்ற நீ... நாளைக்கே கல்யாணம்னு வரப்போ... உனக்கு ஏத்த மாதிரி ஒருத்தனைத்தான் தேடுவ...

"நாங்க உங்களைக் காதலிச்ச பாவத்துக்குக் காதல் படத்துல வர்ற பரத் மாதிரி சட்டையை கிழிச்சிட்டு ரோட்டுல

தரியனுமாக்கும்... இவ்வளவு சொல்லியும் நாந்தான் வேனும்ன்னா இப்பவே எங்கூட வா... பாண்டியன் மாட்டல்ல ரூம் போடுறேன்... ஜாலியா இருந்துட்டு வரலாம்... அதுக்கப்புறம் என்னைத் தொந்தரவு பண்ண மாட்டேல்ல..."

தான் இவ்வளவு பேசியும் அமைதியாய் இருந்தவளைப் புரியாமல் அவன் பார்த்தான். வேறொரு பெண்ணாய் இருந்து இருந்தால் நடந்து இருக்கும் கதையே வேறு... அவன் கன்னம் இரண்டும் பழுத்திருக்கும்... ஆனால், உமாவோ அவனை அழுத்தமாய்ப் பார்த்துக் கொண்டு நின்று இருந்தாள். அதில் அவனது கோபம் மேலும் அதிகரித்தது.

"என்னப் பார்த்துட்டு இருக்க... நான் சொன்னதுக்குச் சம்மதம்தானா...? அப்போ கிளம்பு..." என்றவனை முன்பை விட அழுத்தமாய்ப் பார்த்தாள்.

"இப்போ கூட உங்களால என்னைப் பிடிக்கலைன்னு என் முகத்தைப் பார்த்துச் சொல்ல முடியலை இல்ல..." கூர்ந்து பார்த்தவளின் பார்வையின் தீட்சண்யத்தைத் தாங்க முடியாமல், வேறு பக்கம் பார்த்தான் உதய்.

"நீங்க பேசின பேச்சை வேற எவனாவது பேசியிருக்கணும்... அவன் குடலை உருவி மாலை போட்டு இருப்பேன்..."

அவளது பேச்சில் அவன் கண்கள் மின்ன, அவளைத் திரும்பிப் பார்த்தான்.

"ஆனா பேசியது நீங்களாப் போயிட்டீங்களே... அதான் சும்மா விடறேன்..." என்றவளைப் பார்த்து,

"ஆங்... என்ன பண்ணிருவ... உன்னால முடிஞ்சதைச் செய் பார்ப்போம்..." தெனாவட்டாய்க் கூறியவனைக் கண்டு,

"நிச்சயம் நீங்க பேசிய பேச்சு ஒவ்வொண்ணுக்கும் தண்டனை உண்டு..." என்றவள் நிறுத்தி,

"என் கழுத்துல தாலி மட்டும் கட்டுங்க மச்சான்... பாண்டியன் ஹோட்டல் என்ன... உங்க வீட்டுக்கே வந்து குடும்பம் நடத்தறேன்..." என்று கண்ணைச் சிமிட்டியவளைக் கண்டு ஆத்திரம் வந்தது அவனுக்கு.

"நீயெல்லாம் பொம்பளையில சேர்த்தி இல்லைடி..." என்றான் வெறுப்பாய்.

"ஓ... அப்படியா...! பிடிக்கலைன்னா பிடிக்கலைன்னு சொல்லிட்டுப் போயிட்டே இருக்க வேண்டியதுதானே மச்சான்... எதுக்கு நிற்க வெச்சு இம்புட்டு நீளமாப் பேசிட்டு இருக்கீங்க... நீங்க சொன்னீங்களே... உங்க கிட்ட லவ் சொன்ன ரெண்டு பொண்ணுங்களை ஓட ஓட விரட்டினேன்னு... அதே மாதிரி என்னையும் ஓட ஓட விரட்ட வேண்டியதுதானே..." என்றவளின் பேச்சுக்கு அவனிடத்தில் பதில் இல்லை.

"நான் போலீஸ் ஸ்டேஷன்ல இருக்கேன்னு தெரிஞ்சதும் எதுக்கு அடிச்சுப் பிடிச்சிட்டு ஓடி வரணும்...? அந்த இன்ஸ்பெக்டர் கிட்ட எதுக்கு என்னோட ஆளுன்னு

பொல்லணும்...? இதோ இப்ப கூட என்னை எதுக்கு உங்க வாய்க்கு கூட்டிட்டு வந்து விடணும்... இந்த அக்கறை எல்லாம் காதல் இல்லாம வேற என்னவாம்..." ஒற்றைப் புருவத்தை உயர்த்தி அவள் கேட்க...

அவனுக்கே விடை தெரியாத விஷயங்களை அவள் கேட்டால், அவன் என்ன என்று பதில் சொல்வான். ஆனாலும் இதற்கு மேலும் அவளைத் தன் பின்னே அலைய வைப்பதில் அவனுக்கு விருப்பம் இல்லை.

"ஏதோ பொட்டப் புள்ளன்னு பரிதாபப்பட்டு வந்தேன், போதுமா... நீ நினைக்கிற மாதிரி எதுவும் இல்லை... இப்போ உனக்கு என்ன வேணும்...? என் மனசில காதல் இல்லைன்னு தெரியணும்... அவ்வளவுதானே...

"இங்கே பாரு புள்ள... நா உன்னைக் காதலிக்கலை... எனக்கு உன்னைப் பிடிக்கல... இனிமேற் கொண்டு எம் பின்னாடி வராதே... அதுக்கு மேலேயும் எம் பின்னாடி நீ வந்த... மருவாதை கெட்டுரும்... இனி நீ யாரோ... நான் யாரோ..." என்றவன் கிளம்ப எத்தனிக்க... அவனைக் கை நீட்டித் தடுத்தவள்.

"இந்த உமாவை அவ்வளவு லேசுல விட்டுட்டுப் போயிட முடியாது.,. கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி மீட் பண்ணினோமே... அப்போ இதே வார்த்தையை நீங்க சொல்லியிருந்தா, நானும் சரின்னு போயிருப்பேன்... ஆனா என்னை இந்தளவுக்குக் கேவலமாப் பேசியதுக்கு அப்புறம் நான் உங்களை விட்டுப் போவேன்னு எப்படி நினைக்கிறீங்க...

"நீங்க பேசிய பேச்சுக்குத் தண்டனை உண்டுன்னு சொன்னேன்ல... அந்தத் தண்டனை என்னைக் காதலிக்கிறதுதான்... என்னைக் கேவலமாப் பேசிய இதே வாயால என்னைப் பார்த்து 'ஐ லவ் யூ'ன்னு சொல்ல வைக்கல... என் பேரு உமா மகேஸ்வரி இல்ல..." அழுத்தம் திருத்தமாய்ப் பேசியவளைக் கண்டு ஏளனமாய் வளைந்தது அவனது உதடுகள்.

"அப்படி மாத்தும் போது சொல்லு... உனக்கு நல்ல பேரா நானே செலக்ட் பண்ணித் தாரேன்..." என்றவன், அவளைத் திரும்பிப் பார்க்காமல் நடந்தான். அவன் போவதைப் பார்த்துக் கொண்டிருந்த உமாவின் கண்கள் கலங்கியது.

"உமா..." ஜெயஸ்ரீயின் கைகள் ஆதரவாய் அவளின் தோளில் படிந்தது. தோழியைக் கண்டதும் கலங்கிய கண்களை இமை தட்டிச் சரி செய்து கொண்டவள்,

"நீ எப்போ வந்த ஜெய்...?" வலிய வரவழைத்துக் கொண்ட உற்சாகத்துடன் உமா கேட்க...

"அவன் இந்தளவுக்குக் கேவலமாப் பேசிட்டுப் போறான்... நீ என்னடான்னா அவன் கன்னத்துல ரெண்டு அப்பு அப்புறதை விட்டுட்டு, நீங்கதான் வேணும்னு அந்தக் காலத்து ஹீரோயின் மாதிரி டயலாக்ஸ் பேசிட்டு இருக்க...

"நீ இப்படிக் கெஞ்சுறதால தான் அவன் மிஞ்சிட்டுப் போறான்... உன் அருமை தெரியாத லூசுப் பய அவன்..."

ஜெயாவிற்கு ஆற்றாமை தாங்கவில்லை. உமாவிற்கு அப்படி என்ன குறைச்சல் என்று அவனிடம் கெஞ்சுகிறாள் என்று.

"நாங்க பேசியதை எல்லாம் கேட்டியா ஜெய்..."

"கேட்டேன் கேட்டேன்... அவன் பாண்டியன்ல ரூம் போடுறேன்னு சொன்னதையும் என் ரெண்டு காதால கேட்டேன், போதுமா...?" தோழியின் வெறுப்பான வார்த்தையில் உமாவின் தலை தானாகக் குனிந்தது.

"அவன் பேச்சிலேயே தெரியுது... அவனோட தராதரம்... தேர்ட் க்ரேட் ரோக் மாதிரி..." முகத்தில் அருவருப்பைக் காட்டினாள் ஜெயா.

"பேசினது அவர்தானே ஜெய்... பேசிட்டுப் போகட்டும்... என்னைப் பேசறதுக்கு அவருக்கு இல்லாத உரிமையா...?"

"ம்... பேசுவான்... பேசுவான்... ஏன் பேச மாட்டான்...? நீ இப்படி வலியப் போய் மேல விழுந்து பழகினா பேசத்தான் செய்வான். அதுக்காக எது வேணும்னாலும் பேசுவானா அவன்...? பேசின நாக்கை இழுத்து வச்சு அறுக்க வேணாம்... எல்லாம் உன்னைச் சொல்லணும்... நீ கொடுக்கிற இடம்..."

கோபத்தில் கத்தியவள், பின் தன்னை நிதானப் படுத்திக் கொண்டு தன்மையாக, "இப்படிப்பட்டவன் உனக்கு வேணுமா உமா...?"

"எஸ் ஜெய்... உதய்தான் எனக்கு வேணும்..." தீர் மானமாய் சொன்னவளின் முகம் தீவிரமாய் மாறி யிருந்தது. அவளது கண்களில் யாரையோ பழி தீர்க்கும் வெறி இருந்தது. அதை ஜெயஸ்ரீயால் உணர்ந்து கொள்ள முடியவில்லை. தோழியை ஆயாசத்துடன் பார்த்தாள் அவள்.

"ஹலோ... உள்ளே யாராவது இருக்கீங்களா...?" வாசலில் இருந்து குரல் கொடுத்தாள் உமா. உள்ளே இருட்டாக இருந்ததால், அவளது கண்ணுக்கு எதுவுமே புலப்படவில்லை. அவள் உதய்யின் அலுவலகத்திற்கு வந்திருந்தாள்.

"இம்மாம் பெரிய மனுஷன் உட்கார்ந்து இருக்கிறது உன் கண்ணுக்குத் தெரியலையாக்கா...?" அந்தச் சிறிய அறையின் மூலையில் இருந்து குரல் வந்தது.

குரல் வந்த திசையை நோக்கிக் குத்துமதிப்பாய்க் கணித்து உள்ளே சென்ற உமா, "யாரது... கண்ணுக்கே தெரியல...?"

"நல்லாப் பாருக்கா..." என்று கோப்புகளுக்கு இடையில் அமர்ந்து இருந்த அழகேசன் எழுந்து நிற்க...

அறையின் இருட்டோடு அவனின் கரிய நிறமும் ஒத்துப் போக, உமா பயத்தில் அலறினாள்.

"அக்கா கத்தாதே... பக்கத்துல இருக்கிறவன் என்னைத் தப்பா நினைச்சிக்கப் போறான்..." பதறிய அழகு, வேகமாய் மின்விளக்கைப் போட்டான்.

மின்விளக்கின் வெளிச்சத்தில் அழகைப் பார்த்ததும் நிம்மதிப் பெருமூச்சு விட்ட உமா, "ஏன்பா... உள்ளே ஸ்ட்ரெட்டா இருந்தா லைட்டைப் போட்டு வேலை பார்க்க மாட்டியா...?"

"அந்த சோகக் கதையை ஏன் கேட்குறக்கா... என் சீனியர் இருக்காரே என் மச்சான்..." அவன் ஆரம்பிக்கும் முன்னேயே,

"அய்... அவர் உனக்கும் மச்சானா...?" என்றாள் ஆதூகலத்துடன்.

"அட ஆமாக்கா... அதுதானே இங்கே கொடுமை... படுபாவி லைட்டைக் கூடப் போட விட மாட்டான்... கஞ்சப் பிசினாறி..." பேசிக்கொண்டே போனவன்,

"ஆமாம், நீ என்ன சொன்னக்கா...? என் மச்சான் உனக்கும் மச்சானா...?" அவன் அவளைக் குழப்பமாய்ப் பார்க்க...

"அந்த சோகக் கதையை ஏன் கேட்கிற தம்பி..." என்றவள், தான் உதய்யை விரட்டி விரட்டிக் காதலிப்பதை அவனிடம் உருக்கமாய் கூறினாள்.

"உமா... நான் உனக்கு அண்ணனாகணும்... அதனால என்ன அண்ணேன்னு சொல்லு..." அவளுக்கு ஆறுதல் சொல்வதை விட்டுட்டு, அவன் தன் கதையைப் பேச...

"அடிங்... இப்போ இதுதான் ரொம்ப முக்கியம்... எனக்கு நீ தம்பிதான்..."

"உமா, இது அநியாயம்... நா உன்னை விட ஒரு வருசம் மூப்பு..." அழகு பாவமாக...

"அதுக்கு..."

"இப்படித் தம்பின்னு கூப்புட்டு அசிங்கப்படுத்தாதே..."

"சரி, சரி. பொழைச்சுப் போ... ஆனா உன்னை அண்ணேன்னு கூப்பிட முடியாது... பேர் சொல்லித்தான் கூப்பிடுவேன்..."

"தம்பிக்கு இது பரவாயில்ல... அழகுன்னே கூப்பிடு..."

"சரி அழகு... உன் சீனியர் எப்பவுமே இப்படி விறைப்பாத்தான் இருப்பாரா...?"

"அப்படின்னு சொல்ல முடியாது... மச்சான் வீட்டில எல்லாம் ஜாலியாத்தான் இருக்கும்... என் கிட்டேயும் அப்படித்தான்... இவ்வளவு ஏன்... அவுக அத்தைப் பொண்ணு, மாமா பொண்ணுக கிட்ட கூட லந்து பேசிட்டு வம்பிழுத்துட்டுதான் அலையும்... ஆனா உன் கிட்ட மட்டுந்தான் மச்சான் அப்படி நடந்துக்குது... அதான் எனக்கு ஆச்சரியமா இருக்கு... சூப்பர் ஃபிகர் உன்னை ஏன் வேண்டாங்குது...?"

"ஏய்... என்ன லந்தா...?" மதுரை பாஷையில் அவள் அவனை மிரட்ட...

"உமா... சூப்பரா மதுரை பாஷை பேசுற..." அழகு அவளைப் பாராட்ட...

"எல்லாம் மச்சான் கூட பேசின சகவாசம்தான்... அதை விடு. என்னை ஏன் மச்சானுக்குப் பிடிக்க மாட்டேங்குது... அதைச் சொல்லு..."

"அதானே எனக்கும் புரியலை..." என்று சொல்லியவன், தீவிர சிந்தனையில் ஆழ்ந்தான். அவளும் அவனோடு சேர்ந்து யோசனையில் மூழ்கினாள்.

அந்நேரம் அலுவலகத்திற்குள் உள்ளே நுழைந்த உதய், உமாவை அங்கே கண்டதும் துணுக்குற்றான். 'இவள் எங்கே இங்கே...?' நினைத்தவனுக்கு அவள் மேல் கோபம் வந்தது.

"என்ன யோசனையெல்லாம் பலமா இருக்கு..." மேசையில் இருந்த கோப்பை எடுத்து இருவருக்கும் இடையில் தொப்பென்று போட்டான்.

அதில் சிந்தனை கலைந்த அழகு, "மச்சான்..." என்று பவ்யத்துடன் எழுந்து நிற்க...

அவனை முறைத்துப் பார்த்த உதய், உமாவை என்ன என்பது போல் பார்த்தான்.

உமாவோ அவனைக் கண்டு கொள்ளாமல் அழகேசனைப் பார்த்தவள், "கேஸ் என் பக்கம் நிக்குமா இல்லையா அழகு..." அதிமுக்கியமான கேள்வியைக் கேட்க...

உதய் அழகைக் கேள்வியாய்ப் பார்க்க..."எந்தக் கேஸு...?" என்று தெரியாமல் விழித்தான் அழகு.

"நான் சொல்றது அந்தக் கேஸ் அழகு..."

'அந்த' என்பதில் அவள் அழுத்தம் கொடுக்க...

"ஓ... அதுவா...! ஜெயம் உனக்குத்தான் தங்கச்சி..." அவர்கள் பாசமலரைக் கண்டு உதய்யால் சகிக்க முடியவில்லை.

"என்ன கர்மமோ... முதல்ல அவளைப் பேசி வெளியில அனுப்பு..." என்றவன்,

"பட்டப்பகல்ல லைட் போட்டதால இந்த மாச கரெண்ட் பில் உன் சம்பளப் பணத்துல இருந்துதான் கட்டுற... அப்படியே இந்த ஒரு மாசத்துக்கு உனக்கு ஃபேனும் கட்..." என்ற உதய், தனது அலுவலக அறைக்குள் செல்ல... அழகு பரிதாபமாய்த் தொப்பென்று நாற்காலியில் சாய்ந்தான்.

"ஏற்கெனவே அது கட்... இது கட்டுன்னு சம்பளமே கண்ணுல காட்டுறது இல்ல... இதுல இல்லாத சம்பளத்துல எங்கே இருந்து கரண்ட் பில் கட்டுறது... பாரு உமா... இந்த அநியாயத்தைக் கேட்கிறதுக்கு யாரும் இல்ல..."

"நான் எதுக்கு இருக்கேன் அழகு... நான் பார்த்துக்கிறேன்..." என்றவள் உள்ளே செல்ல முயல...

"வேணாம் உமா... மச்சான் வஞ்சிறப் போறாக..." அழகு தடுக்க...

"அதெல்லாம் நான் பார்த்துக்கிறேன்..." என்றவள், உதய் இருந்த அறைக்குள் நுழைய... அழகு தலையில் கை வைத்தபடி அமர்ந்து விட்டான்.

"குட் ஈவினிங் மச்சான்..." என்றபடி தன் முன் அமர்ந்தவளை முறைத்தான் உதய்.

"நான்தான் உனக்கான பதிலைச் சொல்லிட்டேன்ல... பொறவு எதுக்கு என்னைத் தொந்தரவு பண்ற..."

"உங்களுக்குக் கொடுத்த டைம் முடிஞ்சுப் போச்சு... இது என்னோட டைம்... இதுல நான் ஜெயிச்சே தீருவேன்..." தீவிரமாய் முகத்தை வைத்துக் கொண்டு சொன்னவளை, என்னதான் செய்வது என்று அவனுக்குத் தெரியவில்லை.

"அழகுக்கு நம்ம விஷயம் தெரிஞ்சு போச்சு..." சாவகாசமாய்ச் சொன்னவளைக் கண்கள் தெறித்து விடுவது போல் பார்த்தான் உதய்.

"என்னாது..."

"ம்... ம்..." பாவம் போல் தலையாட்டியவளைப் பார்த்து,

"நீ ஏதும் அவன் கிட்ட உளறுனியா...?" பல்லைக் கடித்துக் கொண்டு அவன் கேட்க...

"நான் ஏதும் சொல்லலப்பா..." தோளைக் குலுக்கிய வள்...

"உங்க ஜூனியர் ரொம்ப் ஸ்மார்ட்..." அவள் சொல்லும்போதே அவனுக்குப் பற்றிக் கொண்டு வந்தது.

'ஏன் நான் ஸ்மார்ட்டு இல்லையாக்கும்...?' நாக்கு நுனி வரை வந்த வார்த்தைகளை, முயன்று தன்னுள்

புதைத்துக் கொண்டான். அழகு மேல் காதில் புகை வராத குறையாக அவனுக்குப் பொறாமையாக இருந்தது.

"என்னைப் பார்த்ததும் அவரா விஷயத்தைக் கெஸ் பண்ணிக்கிட்டார்..." அழகின் பெருமையை அவள் பேச...

'அவன்தானே... ஈரைப் பேனாக்கி... பேனைப் பெருமாளாக்குற வித்தை தெரிஞ்சவன். உன் விஷயத்தைப் பத்திக் கேக்கவா வேணும்... இந்நேரம் இதுக்குக் கண்ணு மூக்கு வச்சு அழகா ட்ரெஸ் போட்டு ஊருக்குள்ள வலம் வர விட்டிருப்பானே...' மனதுக்குள் நினைத்தவன், அவளை முறைத்தபடி அமர்ந்து இருந்தான்.

"எதுக்கும் அவரை ஜஸ் பண்ணி வச்சிக்கோங்க... இல்லாட்டி உங்க வீட்டிலேயும் என்னைப் பத்திச் சொல்லிடப் போறாரு..."

"அதுக்கு..." எரிச்சலை அடக்கிக் கொண்டு அவன் கேட்க...

"அவரோட சம்பளத்தைக் கட் பண்ணாம ரெண்டு மடங்கா கொடுத்துருங்க... விஷயம் காதும் காது வச்ச மாதிரி முடிஞ்சிரும்..."

"இதுக்குத்தான் இவ்வளவு பில்டப்பா... அவன் சொல்லி விட்டானா... இதுக்கு எல்லாம் நான் பயப்பட மாட்டேன்... முதல்ல நீ எழுந்திரு..." கோபத்துடன் உதய் படபடக்க...

"ஹலோ மச்சான், ரிலாக்ஸ்... நான் ஏன் சொல்றேன்னா... இனி நான் அடிக்கடி இங்கே வருவேன்

பாருங்க, அதுக்குத் தான்..." என்றவள், அவன் கோபமாய்ப் பேசும் முன் அறையை விட்டு வெளியில் வந்தாள்.

போகும் முன், "அழகு... இது என்னோட போன் நம்பர்... எனக்கு அப்பப்ப இங்கே உள்ள நிலவரத்தைச் சொல்லு..."

"உமா... என் சம்பளம்..."

"அது கட்டாயம் கிடைக்கும் மகனே..." என்று ஆசிர்வதிப்பது போல் அவள் வலது கையைத் தூக்க...

"உமா மகேஸ்வரி சரணம்... நீ சொன்னது மட்டும் நடந்தா உன் போட்டோ முன்னாடி மொட்டை அடிச்சிக்கிறேன்..."

"போட்டோ எதுக்கு, நானே வர்றேன் பக்தா..." என்றவள் அழகிடம் விடைபெற்றுச் செல்ல... உள்ளிருந்து ஜன்னல் வழியாகப் பார்த்துக் கொண்டிருந்த உதய்க்கு உதட்டில் புன்னகை பூத்தது.

"கிறுக்கு பயபுள்ள..." சிரித்தபடி தனது நாற்காலி யில் அமர்ந்தவனுக்கு, என்றும் இல்லாத அளவுக்கு மகிழ்ச்சியாய் இருந்தது.

அடுத்து வந்த தினங்கள், உமா நேரம் கிடைக்கும் போது எல்லாம் அவனின் அலுவலகத்துக்கு வந்தாள். அழகுக்கும் அவளுக்கும் இடையில் மெல்லிய நட்பு ஒன்று உருவாகி இருந்தது. அழகுக்கு, அவள் தன் சம்பளத்தை பிடித்தம் இல்லாமல் வாங்கிக் கொடுத்தாள் என்பதில் அவள் மேல் ஒருவித மரியாதை வந்தது.

தினமும் உமாவின் வருகையில் உதய் எல்லா வற்றையும் மறந்து இருந்தான் என்பது அழகுக்குத் தெரியாமல் போனது. அதில் ஒன்றுதான் அழகின் சம்பளப் பிடித்தம் என்று...

உதய் தன்னையும் அறியாமல் உமாவை ரசிக்கத் துவங்கினான். சில சமயம் அவள் அவனைக் கண்டு கொள்ளாமல் அழகோடு பேசிக் கொண்டிருந்தால் கடுப்பாகிப் போவான்.

"படிக்கிறதுக்கு ஒண்ணும் இல்லையா...? உன்னை நம்பி நோயாளி வந்திட்டாலும்... போ, படிக்கிற வேலையைப் போய்ப் பாரு..." கடுப்பில் அவன் திட்டும் போது அவளின் கண்களும் அழகின் கண்களும் விஷமத்துடன் சந்தித்துக் கொள்ளும்.

அடி மேல் அடி வைத்தால் அம்மியும் நகரும் என்பதற்கேற்ப, உதய்யின் மனதில் மெல்ல மெல்ல உமா காற்றைப் போல் அவன் அனுமதி இல்லாமல் உள்ளே நுழைந்தாள். முதலில் எல்லாம் வேப்பங்காயாய் அவனுக்குக் கசந்தவள், இப்போது எல்லாம் மாங்கனி யாய் இனிக்கிறாள்.

அவனின் காலைப் பொழுது அவளின் குட்மார்னிங் குறுஞ்செய்தியில் தொடங்கி, அவனின் இரவுப் பொழுது அவளின் குட்நைட்டில் முடிந்தது. மொத்தத்தில் அவள் அவனுக்கு இன்றியமையாதவளாகிப் போனாள் என்றால், அது மிகையில்லை. ஆனால், அதை அவன் உணரத் தான் சந்தர்ப்பம் அமையவில்லை.

அதற்கும் சந்தர்ப்பம் ஒருநாள் வந்து சேர்ந்தது. அன்று வழக்கம் போல் எழுந்து அலுவலகத்துக்குக் கிளம்பியவனுக்கு எதையோ இழந்த உணர்வு... அது எதனால் என்று அவனால் சரியாகக் கணிக்க முடியவில்லை. வீட்டிலும் சரி... அலுவலகத்திலும் சரி... எல்லாம் நன்றாகத்தான் சென்று கொண்டிருந்தது. ஆனாலும் அவன் மனதில் ஏதோ ஒரு வெறுமை.

அன்றைய நாள் பொழுதை வெறுமையாய்க் கழித்தவன், மாலையில் தன் அலுவலகத்துக்குச் சென்றவனின் கண்கள் அவனையும் அறியாமல் உமா அமர்ந்திருக்கும் நாற்காலியைப் பார்த்தது. அங்கே அவள் இல்லாததைக் கண்டு அவன் உள்ளம் தவித்தது.

அப்போதுதான் அவனின் மன வெறுமைக்கான காரணம் அவனுக்குப் புரிந்தது. காலையில் இருந்து அவளது குறுஞ்செய்தி வரவில்லை. அதனால்தான் அவனுக்கு எதையோ இழந்தாற் போன்று ஒரு உணர்வு வந்திருக்கிறது.

"அழகு... அவ எங்கேடா...?"

"எவ மச்சான்...?" புரியாதது போல் கேட்டான் அழகேசன்.

"இவன் வேற நேரங்காலம் தெரியாம விளையாண்டுக்கிட்டு..." எரிச்சலில் பல்லைக் கடித்தவன்,

"அதான் உந்தங்கச்சி..."

"தேனையா கேட்குறீக மச்சான்..." விழி விரித்து ஆச்சரியம் காட்டினான் அழகு. தேன்மொழி அவன் உடன் பிறந்த தங்கை.

'அடேய்... நா கேட்டது உமாவைடா... உன் சொந்தத் தங்கச்சியை இல்ல... அந்த மூக்குறிஞ்சி பத்தி எனக்கு என்ன கவலை...' மனதில் எரிச்சல் பட்டவன்,

"உமாவைக் கேட்டேன் மாப்பிள்ள..."

'அப்படி வழிக்கு வாங்க மச்சான்... இன்னும் எத்தனை நாளைக்கு உங்க மனசை மறைக்க முடியும்...' மனதில் நினைத்த அழகு,

"தெரியல மச்சான்... திடீர்னு ஆளைக் காணோம்..."

அவள் மருத்துவ முகாமுக்காகப் பக்கத்துக் கிராமம் ஒன்றிற்குச் சென்று இருக்கிறாள் என்பது அழகுக்கு நன்கு தெரியும். இருந்தாலும் உதய் தன் மனதை உணர வேண்டும் என்பதற்காக அவன் பொய் உரைத்தான்.

"ஓ..." என்றவன் ஒன்றும் பேசாமல் உள்ளே சென்றான்.

அடுத்து வந்த பதினைந்து நாட்களாக உமாவைக் காணவில்லை. அவளைப் பார்க்காமல் உதய்தான் பித்துப் பிடித்தது போலானான். அதே சமயம் அவள் மேல் கோபம் கோபமாய் வந்தது அவனுக்கு.

'இப்படியா ஒருத்தி சொல்லாமக் கொள்ளாம காணாமப் போய் மனுசனைத் தவிக்க விடுவா...'

எங்குள்ள ஆத்திரம் எல்லாம் அவள் மேல் திரும்பியது. 'வரட்டும் அவ...' மனதிற்குள் கறுவிக் கொண்டான். அவன் நினைத்தது போல் அவள் வரவே இல்லை.

ஒருநாள் சாலையில் செல்லும்போது, உமா ஆட்டோவில் செல்வதைக் கண்டான். அவளைக் கண்ட மகிழ்ச்சியில் அந்த ஆட்டோவை அவன் பின் தொடர, அது அவளது கல்லூரிக்குள் நுழைந்தது. அவனும் தன் வண்டியை நிறுத்தி விட்டு, அவளிடம் ஆவலுடன் பேசச் சென்றவன், அங்கே கண்ட காட்சியைக் கண்டு அப்படியே நின்றான்.

உமா அவளது வயதை ஒத்த ஆண் மகன் ஒருவனுடன் பேசிச் சிரித்தவாறு ஆட்டோவில் இருந்து இறங்கினாள். அதைக் கண்டதும் உதய்க்குக் கோபம் வந்தது. அந்த இளைஞன் அந்த ஆட்டோவில் திரும்பிச் சென்றதும், உமா தனியே நடந்து வர, அவன் வேகமாய் அவள் அருகே சென்றான்.

"ஏய் நில்லுடி..." உதய்யின் குரலில் முக மலர்ச்சி யுடன் திரும்பியவள், அவனின் தோற்றம் கண்டு அதிர்ந்து போய் நின்றாள்.

இதற்கு முன்னர் பல தடவை உதய் அவளிடம் கோபப்பட்டு இருக்கான்தான். அதை இல்லை என்று சொல்வதற்கு இல்லை... அப்போது கூட அவன் இந்தள வுக்குக் கொந்தளித்து அவள் கண்டது கிடையாது.

கண்கள் இரண்டும் கோவைப் பழங்களாய்ச் சிவந் திருக்க, தன் முழு உயரத்துக்கும் நிமிர்ந்து நின்றவனின் தோற்றம், அவனின் குல தெய்வமான அய்யனார் சாமியை ஒத்திருந்தது. அதைக் கண்டு அவளுக்கு உள்ளுக்குள் குளிரெடுத்தது. முதன் முறையாக... தைரிய மான உமாவே பயத்தில் உடல் நடுங்க நின்றிருந்தாள்.

"ஏன்டி... உன் காதலுக்கு ஆயுசு ஒரு மாசம் தானோ... நான் பதில் சொல்லலைன்னதும் வேறு ஒருத்தனைத் தேடிட்டுப் போயிட்டியோ... இதுக்குத்தான் இந்தக் கர்மம் பிடிச்சக் காதலை நான் வெறுத்தேன்... நீயா வந்து மேல விழுந்து பழகுவ... இப்போ நீயா விலகிப் போவ... பார்த்துட்டு சும்மாப் போறதுக்கு நான் என்ன கேனையா...?

"இனி நீ விரும்பினாக் கூட என்னை விட்டுப் போக முடியாது... அப்படிப் போய்த்தான் பாரேன்... போற காலை வெட்டிப் போட மாட்டேன் வெட்டி... என்னடி பேச மாட்டேங்கிற... மச்சான் மச்சான்னு தெனமும் வந்து என் உசுர எடுப்பியே... இப்போ சொல்லு மச்சான்னு..." என்றவன், ஆத்திர மிகுதியில் அவளின் கழுத்தில் கையை வைத்து அழுத்த, அவள் நிற்க முடியாமல் அருகில் இருந்த மரத்தின் மீது சாய்ந்தாள்.

"எனக்கு நீதான்.ஃ. உனக்கு நான்தான்... இதை அந்தக் கடவுள் முடிச்சுப் போடல... இதோ இந்தக் குமாரு போட்ட முடிச்சு... இனியொரு தரம் என்ன விட்டுப் போய்ப் பாரு... அப்புறம் என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது..."

அவன் பேசப் பேச... உமாவிடம் குடி கொண்டு இருந்த பயம் தன்னால் விடைபெற்றுப் போனது. பழைய தைரியம் மீள, அவனைக் கூர்ந்து பார்த்தவளின் உதட்டில் அவனின் மனதை அறிந்து கொண்டதற்கு அடையாள மாக ரகசியப் புன்னகை ஒன்று பூத்தது.

இப்போது உமாவிற்கு உதய்யின் ரௌத்திரம் அச்சத்தைக் கொடுக்கவில்லை. மாறாக மன நிம்மதியை, மகிழ்ச்சியைக் கொடுத்தது. அவளுக்குச் சந்தோஷத்தில் வாய் விட்டு அழ வேண்டும் போல் இருந்தது.

கை கூடவே கூடாதோ என்று ஏங்கிய காதல், கை கூடிய உவகை அவள் முகத்தில் நன்கு தெரிந்தது. மொத்தத்தில் அவள் பலவித உணர்ச்சிக் கலவையாய் நின்று கொண்டு இருந்தாள். கண்களில் நீர் திரள, உதட்டில் உறைந்த புன்னகையுடன் அவள் அவனைக் காதலாகப் பார்த்திருக்க... அவனோ இன்னமும் கோபம் குறையாமல், அவளை முறைத்துக் கொண்டு இருந்தான்.

"இப்ப கூட நீங்க என்னைப் பிடிக்கலைன்னு சொல்லவே இல்லையே...?" அவனது பதில் தெரிந்தே கேள்வி கேட்டவளின் முகம், சூரியனைக் கண்டதும் மலரும் அந்த சூரியகாந்தி பூவைப் போல் மலர்ந்திருந்தது.

அவள் இந்தக் கேள்வியைக் கேட்டாலே எப்போதும் அவளது கண்களைப் பார்க்க முடியாமல் தடுமாறும் உதய், இன்று கம்பீரமாய் அவளது கண்ணோடு கண் நோக்கி,

"பிடிக்காமத்தான் உன் கிட்ட வந்து பேசிட்டு இருக்கேனா... பிடிச்சிருக்குடி... இந்த உலகத்துலயே உன்னைத்தான் எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு... என் குடும்பத்தை விட உன்னைத்தான் அதிகமாப் பிடிச் சிருக்கு... போதுமா...?" காதலைக் கூட கடுமையாய்ச்

சொன்னவனைக் கண்டு, அவளின் இதழ்களில் புன்னகை நிரம்பி வழிந்தது.

எந்தக் குடும்பத்தைக் காட்டி, 'நீ எனக்குச் சரிப்பட்டு வர மாட்டே...' என்று சொன்னானோ, அந்தக் குடும்பத்தை விட அவளை அதிகமாய்ப் பிடித்து இருப்பதாய் அவன் சொல்லியது, அவளது தூய்மையான காதலுக்குக் கிடைத்த பரிசு இல்லாமல் வேறு என்ன...

"என்னடி இளிப்பு வேண்டிக் கிடக்கு... நான் கேட்டதுக்கு முதல்ல பதிலைச் சொல்லு... உன்னை வந்து விட்டுட்டுப் போனானே அவன் யாரு...?" அவன் தன் கேள்வியிலேயே நின்றிருந்தான்.

உதய்யின் இந்த உரிமைப் போராட்டம் கூட அவளுக்குப் பிடித்துத்தான் இருந்தது.

'நீ எனக்கு மட்டுமே சொந்தமானவள்...' என்ற அர்த்தத்தில் அவன் பேசிய பேச்சு, அவளுக்குத் தேனாக இனித்தது. அவளுக்கு வேண்டியது இதுதானே... அவளுக்கே அவளுக்கான அவன்... அவன் மட்டுமே அவளுக்கு வேண்டும்.

"அவன் பேரு விஷ்ணு... என் கூடப் படிக்கிறான்... என்னை நாலு வருஷமாக் காதலிச்சிட்டு இருக்கான்..." அவள் சொல்லி முடிக்கும் முன் உதய்யின் கை அவளின் கழுத்தை மேலும் இறுக்கியது.

"என்னடி சொன்ன...? எம்புட்டுத் தைரியம் இருந்தா அவன் உன்னைக் காதலிப்பான்...?" கோபத்தில் அவன்

கர்ஜிக்க... அதற்கு எல்லாம் அசராமல், அசையாமல் நின்றாள் உமா.

"அவன்தானே காதலிச்சான்னு சொன்னேன்... நான் காதலிச்சேன்னு சொன்னேனா...?" அவளின் பேச்சில் அவனின் பிடி தளர்ந்தது. அவள், வலித்த தன் கழுத்துப் பகுதியைத் தடவி விட்டபடி,

"அம்மாடி... எல்லாத்திலேயும் முரட்டுத்தனம் தானா...?" அதற்கும் அவளைப் பார்த்து முறைத்தவன்,

"முரட்டுப்பயன்னு தெரிஞ்சுதானே காதலிச்ச..."

"ம்... ம்... அதுதான் உங்க கிட்ட எனக்குப் பிடிச்ச விஷயமே..." கண்கள் மின்னக் கூறியவளைக் கண்டு, அவன் உதடுகள் வளைந்தது, உள்ளத்தில் பொங்கிய உவகையில்...

அவள் அருகே நெருங்கி வந்தவன், "அப்படி என்னடி என் கிட்ட இருக்குன்னு என் பின்னாடி வர...? எல்லாமே எனக்குக் கனா மாதிரி இருக்கு... இப்படி சும்மா கும்முன்னு இருக்கிற ஃபிகரு நீ... எனக்கே எனக்குச் சொந்தம்னா என்னாலே நம்பவே முடியலையடி..." என்றவன் கிறக்கத்துடன் இன்னமும் நெருங்கி வர... அவனின் உதடு அவளது முன் நெற்றியை லேசாக உரசியது.

"உதய்... டிஸ்டன்ஸ் மெயின்டெயின் பண்ணுங்க..." என்றவள், தன் கைப்பையை அவனுக்கும் தனக்கும்

இடையில் கொண்டு வந்து, அதாலேயே அவனைத் தள்ளி விட்டாள்.

"என்னாது டிஸ்டன்ஸ் மெயின்ட்டெயின் பண்ணணுமா... காதல்னா சும்மான்னு நினைச்சியா... அப்பப்போ கட்டிப் பிடிக்கணும்... அப்பப்போ கிஸ் அடிச்சிக்கணும்... அதெல்லாம் இல்லாம காதலா.. போடி போ... அப்படி ஒண்ணும் உன் லவ்வு எனக்கு வேணாம்... உன்னை காதலிக்கிறதுக்கு அதோ போறாளே அந்தப் பொண்ணைக் காதலிச்சிட்டுப் போறேன்... சூப்பரா எனக்கு ஒத்துழைப்பா..."

"தாராளமா போங்க மச்சான்..." கையைக் கட்டியபடி சொன்னவளை அதிசயமாய்ப் பார்த்தவன்,

"உனக்கு என் மேல கோபம் வரல..."

"ம்ஹூம்..." தலையை மறுப்பாக அசைத்தாள்.

"இல்ல புள்ள... நீ கோபப்பட்டாத்தான் எங்களை மாதிரி ஆம்பிளைகளுக்கு கிக்கா இருக்கும்... ஆம்பளைங் கிற முறுக்குல உடம்புல ஜிவ்வுன்னு ஒரு ஃபீலிங் பாயும் பாரு... அப்பப்பா... அத வார்த்தையில சொல்ல முடியாது..." கண்ணை மூடி ரசித்தவன் முதுகில், தன் கைப்பையைக் கொண்டு செல்லமாகத் தட்டியவள்,

"நீங்க பேசிய பேச்சுக்குத்தான் இந்தத் தண்டனை... பாண்டியன் ஹோட்டல்லேயா ரூம் போடுவீங்க... அதனால லவ் பண்ற வரைக்கும் உங்க சுண்டு விரல் நகம் கூட என் மேல் படக்கூடாது..." திட்டவட்டமாகச் சொன்னவளின் பேச்சு, அவனுக்குள் கோபத்தை உண்டு பண்ணியது.

"அதுக்காக நான் மன்னிப்பு கேட்கணும்னு எதிர்பார்க்கிறியா...? அதெல்லாம் கேக்கமாட்டேன்... பார்க்குற எல்லாப் பொண்ணுங்களையும் நான் படுக்கக் கூப்பிடல... உன்னைத்தான் கூப்பிட்டேன்... உன்னை மட்டுந்தேன் கூப்பிடுவேன்.. உன்னை என் மனசு ஏத்துக்கப் போயித்தான் அப்படிப் பேசினேன்... ஆம்பளைக்கும் கற்பு இருக்கும்மா..." என்றவனின் பேச்சில் அவள் கண்கள் கலங்கின.

"நீங்க சொல்றது உண்மைதானா...? நீங்க எனக்கு மட்டும்தானே சொந்தம்..." அவளின் கலங்கிய கண்கள் அவனின் மனதைப் பிசைந்தது. அவளை அணைத்து ஆறுதல் கூற விளைந்த மனதைக் கட்டுப்படுத்த முடியாமல், கையை அவள் புறம் கொண்டு சென்றவன், அதைச் செய்ய முடியாமல்,

"ம்... தொடக்கூடாதுன்னு சொல்லிட்டல்ல..." வேண்டா வெறுப்பாய்க் கையைக் கீழே போட்டவன்,

"இதுல என்ன சந்தேகம் உமா...? நான் சொல்றது அத்தனையும் உண்மை... நான் உனக்கு மட்டுந்தேன் சொந்தம்..."

உமாவிற்குப் பேச்சு வரவில்லை... "ம்... ம்..." என்று தலையசைக்க மட்டும்தான் முடிந்தது. அவள் எதிர்பார்த்தது இத்தகைய அன்பைத்தானே. அவள் தேடியது கிடைத்து விட்டது. அதுவே அவளுக்குச் சந்தோஷமாக இருந்தது. அவளுக்கே அவளுக்கு என்று அவன்... அந்த நினைவே தித்திப்பாய் இருந்தது அவளுக்கு.

"பாத்தியா... பேச்சு வாக்குல அந்தப் பொறம்போக்கு பத்திச் சொல்லாம விட்டுட்டியே..." அவளின் அமைதி அவன் மனதைக் கஷ்டப்படுத்தியதோ என்னமோ... அவன் பேச்சை மாற்றினான்.

"யாரு... விஷ்ணுவையா சொல்றீங்க...?"

"அந்தப் பொறம்போக்கைத்தான் சொல்றேன்..." என்றவன் குரலில் அப்பட்டமாய்ப் பொறாமை வழிந்தது. அதைக் கண்டு அவளுக்குச் சிரிப்பு வந்தது.

"அவன்தான் என்னைக் காதலிச்சான்... நான் இல்லை... நான்தான் மதுரைக்கார மச்சான் கிட்ட தலைகுப்புற கவுந்துட்டேனே..." கண்களில் காதல் வழிய பார்த்தவளைக் கண்டு, அவனுக்குப் பெருமிதமாய் இருந்தது. தன்னை ஒரு கதாநாயகன் போல் உணர்ந்தான்.

"இன்னைக்குத் திரும்பவும் காதல் சொல்ல ஆரம்பிச்சவனை வெளியில் கூட்டிட்டுப் போய் நம்ம காதல் கதையைச் சொன்னேன்... அவன் புரிஞ்சிக்கிட்டு ஆல் த பெஸ்ட் சொல்லிட்டுப் போயிட்டான்..."

"அவ்வளவு தானா... நா என்னமோ ஏதோன்னு பயந்துட்டேன்... உன்னைக் காணாம இந்தப் பதினைஞ்சு நாளாத் தவிச்சுப் போயிட்டேன்.. திடீர்னு உன்னை ஒரு பையன் கூடப் பார்த்ததும் என்னை அறியாமல் கோபம் வந்திருச்சு..."

அவன் வந்ததில் இருந்து 'ஐ லவ் யூ' என்று சொல்லவில்லை... காதலிக்கிறேன் என்று பிதற்ற

வில்லை... ஆனால் அவனின் ஒவ்வொரு செயலிலும், பேச்சிலும் தன்னைக் காதலிப்பதை உணர்த்திக் கொண்டிருந்தவன் மேல் அவளுக்குக் காதல் பல்கிப் பெருகியது.

"என்ன, நான் பேசிட்டே இருக்கேன்... நீ பேன்னு முழிச்சிட்டு இருக்க..." தன் முகத்தருகே கையை ஆட்டி அவன் கேட்கவும்தான் அவளுக்கு உணர்வு வந்தது.

"நான் அழகுகிட்ட சொல்லிட்டுத்தானே கேம்ப் போனேன்... அவன் சொல்லலியா...?"

'அழகு...' அதைக் கேட்டுப் பல்லைக் கடித்தான் உதய். அவ்வளவு கேட்டும் பதில் சொல்லாமல் அவன் தன்னிடம் விளையாண்டு இருப்பது கண்டு அவனுக்குக் கடுப்பாக இருந்தது. 'இருக்குடா மாப்புள்ள உனக்கு...' மனதில் வன்மம் கொண்டான்.

"நான் கேட்டதுக்குத் தெரியலன்னுல்ல சொன்னான்... பொய்ப் புளுகுனி..."

"ஓ... கேம்ப் போயிட்டு வந்து பார்த்தா காய்ச்சல் வந்திருச்சு..." என்றவளைக் கண்டு பதட்டமாக,

"காய்ச்சலா...? டாக்டர் கிட்ட போனியா...? இல்லன்னா வா, நான் கூட்டிட்டுப் போறேன்..." என்று படபடத்தவனின் அக்கறை, அவளை இதமாய் வருடிச் சென்றது.

"ஹலோ... நாங்களும் டாக்டர்தான்..." கெத்தாகச் சொல்ல...

"ஹி... ஹி... மறந்துட்டேன் புள்ள..." அசடு வழிந்தான்.

"வழியுது, துடைச்சுக்கோங்க..." என்று அவள் அவனைக் கிண்டலடித்தாள்.

"நெசமாவே இப்போ காய்ச்சல் சரியாயிருச்சா...?" அவளை அளவிட்டவாறு கேட்டவன், கண்கள் அவளின் உடல் மாற்றத்தை நன்கு கவனித்துப் பார்த்தது.

வெளியில் வாடி வதங்கிய கொடி போல் கண்களில் கருவளையம் விழுந்து, உடல் மெலிந்து கறுத்து இருந்தவளைக் கண்டு அவனுக்கு மனம் கலங்கியது. அவனுக்கே தன் உணர்வுகளைக் குறித்து ஆச்சரியமாக இருந்தது.

எதற்கும் கலங்காத தான் அவளின் தோற்ற மாற்றத்திற்குக் கலங்குவது என்றால், அவள் தன் மனதில் எந்தளவுக்குச் சிம்மாசனமிட்டு அமர்ந்து இருக்கிறாள் என்பதை அவன் உணர்ந்து கொண்டான். தாமதமாக வந்தாலும் அவளின் காதலுக்குச் சற்றும் சளைத்தது அல்ல அவனின் காதல்...

"ம்... நவ் ஐம் பெர்பெக்ட்லி ஆல்ரைட்... நீங்களே பாருங்களேன்..." தன்னை ஒரு சுற்று சுற்றிக் காண்பித்த அவளின் செய்கை, அவனின் மனதைக் கொள்ளை கொண்டது. கள்ளம் கபடமில்லா அவளின் குணம் அவனை அதிகமாய் ஈர்த்தது.

"அப்போ சரி..." என்றவன், "எங்கூட வரியா...?"

"எங்கே...?" சந்தேகமாய்ப் பார்த்தாள் அவள்.

"நிச்சயமாய்ப் பாண்டியன் ஹோட்டலுக்கு இல்ல..." அவளைப் பார்த்து நமட்டுச் சிரிப்புச் சிரித்தவன்,

"உன் பாசமலரைப் பார்க்கத்தான்..."

அவன் அலுவலகம் என்றதும் சரி என்று உற்சாகமானவள், உடனே அவனுடன் கிளம்பினாள். அவனின் வண்டியில் ஏறியவள், அவனுக்கும் தனக்கும் இடையில் சிறிது இடைவெளி விட்டு அமர, அவன் கடுப்பானான்.

"இப்பத்தான் மொத மொதலா என் கூட வாரியோ... ஏற்கெனவே வந்திருக்க தானே...?"

அன்று காவல் நிலையத்தில் இருந்து அழைத்து வந்ததைச் சொல்லுகிறான் என்று புரிந்தவள்...

"ஆமாம், அதுக்கென்ன...?"

"அப்புறம் எதுக்குத் தள்ளி உட்கார்ந்துக்கிற..." என்று எரிச்சல் பட்டவன், "பக்கத்துல வந்து உட்கார்ந்தா கொறஞ்சா போயிருவ..."

"ம்... இதுக்குத்தான் இந்தக் கோபமா...? நான் சொல்லியிருக்கேன்ல... என்னை தொட்டுப் பேசக் கூடாதுன்னு... எப்பவுமே நமக்கு இடையே டிஸ்டன்ஸ் கீப் அப் பண்ணணும்..." என்றவள், ஞாபகமாகத் தன் கைப்பையைத் தங்களுக்கு இடையில் வைத்துக் கொள்ள...

"பெரிய சீனப் பெருஞ்சுவரு பாரு...அதை அப்படியே தூக்கி எறிஞ்சேன்னு வை..." கடுப்பாய் மொழிந்தவன்,

"சட்டத்திட்டம் எல்லா உனக்குத்தான்... எனக்கு இல்ல..."

அவள் எதிர்பாராத நேரத்தில் அவளின் கைப் பையை அகற்றியவன், பின்னுக்குத் தள்ளி அமர்ந்தவன், அவள் மேல் சாய்ந்தவாறு பக்கவாட்டுக் கண்ணாடி மூலம் அவளைப் பார்த்து கண் சிமிட்டினான். அவனது செயலில் கோபமுற்றவள், அவனை முறைக்க முயன்று தோற்றாள்.

"அடாவடி மச்சான்..." சிரித்தபடி முணு முணுத்தவ ளின் வார்த்தை அவனின் காதில் விழ, முகம் கொள்ளாப் புன்னகையுடன் வேகமாய் வண்டியை முடுக்கினான் அந்த அடாவடிக் காதலன்.

மச்சான்... தங்கச்சி... இருவரும் இணைந்து வருவதைக் கண்ட அழகேசன், வாயைப் பிளந்தபடி அமர்ந்திருந்த நாற்காலியில் இருந்து எழுந்து நின்றான்.

"நாங்களேதான்..." இருவரும் ஒருமித்தக் குரலில் கூற... அதிர்ச்சியில் நெஞ்சைப் பிடித்தான் அழகு.

"வடக்கும் தெக்கும் எப்போ ஒண்ணு சேர்ந்தீங்க...? அதிசயமாய்ப் பார்த்த அழகின் அருகில் வந்த உதய் அவன் முதுகில் அடி மொத்தினான்.

"ஏன்டா மாப்புள்ள... எல்லாம் தெரிஞ்சு இருந்தும் என் கிட்ட விஷயத்தைச் சொல்லாம மறைச்சிட்டல்ல... உன்னை..." மேலும் அடிக்க...

"மச்சான் வுடுங்க..." அலறியவன்,

"நான் அப்படிச் சொல்லப் போயித்தான் நீங்க தங்கச்சியைப் பார்க்காம ஃபீல் பண்ணீங்க..." அழகு

சொல்வது போல், உமாவைக் காணாமல் தவிக்கப் போய்த்தான் அவளைத் தேடி அவன் போனது...

"ஏதோ எனக்கு உதவுனியேன்னு உன்னைச் சும்மா விடுறேன்..." உதய் தன் கெத்தை விட்டுக் கொடுக்காமல் சொல்ல...

"சரி, சரி... நீங்க இடத்தைக் காலி பண்ணுங்க மச்சான்... நான் தங்கச்சி கிட்ட உங்க காதல் கதையைக் கேக்கணும்..." அழகு உதய்யை விரட்ட...

"ஆமாம் உதய்... நான் அழகு கூட பேசிட்டு வர்றேன்..." என்ற உமா, அழகு அமர்ந்திருந்த மேசையின் முன்புறம் இருந்த நாற்காலியில் சட்டமாய் அமர... அதில் கடுப்பான உதய்,

"உமா... காதலிக்கிறவன் கூடத்தான் காதலி பேசணும்... இப்படி அண்ணன் கூட இல்ல..."

"ஹலோ மச்சான்... நீங்க காதலிக்கிறதுக்கு முன்னாடி இருந்தே நாங்க பாசமலர்கள்... எங்களை யாராலேயும் பிரிக்க முடியாது..." அழகு தன் உரிமையை நிலை நாட்ட...

"அதானே...?" என்று அழகுக்கு 'ஹைபை' கொடுத்த உமா,

"இதுக்கு முந்தி நான் இங்கே வந்தப்போ யார் என்னோட பேசியது... நீதானே... அப்போ உனக்குத் தான் முதல் உரிமை..." ஓரக் கண்ணால் உதய்யைப் பார்த்தபடி அவள் சொல்ல...

"ம்... இவன் ஒருத்தனையே என்னால சமாளிக்க முடியல... இப்ப அறுந்தவாலு நீயும் இவன் கூட கூட்டா... நான் தொலைஞ்சேன்..." செல்லமாய் அலுத்துக் கொண்டவன்... உள்ளே தனது அறைக்குச் செல்லாமல், அங்கேயே இருந்து வழக்கு சம்பந்தப்பட்ட கோப்புகளைப் பார்க்க அமர்ந்தான்.

உமாவும் அழகும் அவன் ஒருத்தன் இருப்பதை மறந்து அரட்டையில் மூழ்கியிருக்க... இடைக்கிடை அவர்களை நிமிர்ந்து பார்த்தவன் முகத்தில் மகிழ்ச்சி நிரம்பி வழிந்தது.

"அண்ணே, எப்படி இருக்கீக...?" வீட்டிற்குள் நுழையும் போதே குதூகலமாய் ஒலித்த சங்கீதாவின் குரலில் உதய் உற்சாகமானான்.

"எப்போ சங்கீ வந்த...?" வாஞ்சையுடன் தங்கையைப் பார்த்தான்.

"இப்போ தான்ணே... ஒரு மணி நேரத்துக்கு முன்னே வந்தேன்..."

"சொல்லியிருந்தா நான் பஸ் ஸ்டாண்டுக்கு வந்திருப்பேனே..."

"நம்ம ஊருல எதுக்குண்ணே பயம்...?" என்றவளைப் பார்த்து அவனுக்கு அதிசயமாய் இருந்தது. முன்பு எல்லாம் பயந்து போய்ச் சென்னை வரை வந்து விடச் சொல்லும் தன் சின்னத் தங்கையா இவள் என்று அவனுக்கு வியப்பாய் இருந்தது.

"ம்... வளர்ந்துட்டீகல்ல அதான்..."

"இல்லையா பின்னே..." என்றவள், தன் கையில் இருந்த கவரை அவன் கையில் வைத்து,

"படிச்சு முடிச்சதும் வேலை கிடைச்சுடுச்சுண்ணே... அப்போ நான் வளர்ந்துட்டேன் தானே..."

"நெசந்தேன்..." மகிழ்ச்சியுடன் அதைப் பிரித்துப் பார்த்தவன் மனம் நெகிழ்ந்து போனான்.

"குமாரு.. உந்தங்கச்சி கிட்ட சொல்லுப்பா... படிப்புத்தான் முடிஞ்சிருச்சுல்ல... காலாகாலத்துல கல்யாணம் பண்ணிப்புடலாம்... அதுக்குச் சம்மதிக்கச் சொல்லு... மாட்டவே மாட்டேன்னு மல்லு கட்டுறா..." அவனின் அன்னை, அவனைச் சிபாரிசுக்கு அழைக்க... அவனோ,

"எம்மா... எந்தக் காலத்துல இருக்க... பொட்டப்புள்ள அடுப்படில இருந்தது எல்லாம் அந்தக் காலம்... அவ வேலைக்குப் போயி வெளி உலகத்தைப் பார்க்கட்டுமே... கல்யாணம் எப்ப வேணும்னாலும் பண்ணலாம்... மாப்பிள்ளைக்கா பஞ்சம்..."

"அப்படியா ராசா... நாளையில இருந்து நீ சோத்தப் பொங்கு... நான் வெளி வேலைக்குப் போயிட்டு வாரேன்..." என்றவரைப் புரியாமல் பார்த்தான் அவன்...

"எம்மா... எதுவா இருந்தாலும் புரியும்படியாச் சொல்லு..."

"நீதானே சொன்ன... பொட்டப் புள்ளைக அடுப்படியில இருக்கக் கூடாதுன்னு... நானும் எங்க வூட்டுக்கு ஒத்த பொட்டப்புள்ளதான்..."

தாயின் பேச்சில் அவனுக்குச் சிரிப்பு வந்தது.

"சிரிக்காதே குமாரு... எத்தனை உசரத்துக்குப் போனாலும் பொம்பளப் புள்ள பொம்பளப்புள்ள தான்யா... சங்கீக்குக் கல்யாணம் பண்ணிட்டு உனக்குப் பண்ணச் சரியாக இருக்கும்..."

அவரின் பேச்சிற்கு உதய்யும் ஒத்துக் கொள்ளவில்லை. சங்கீதாவும் ஒத்துக் கொள்ளவில்லை... பஞ்சாயத்து தங்கவேலுவிடம் சென்றது. மகளின் ஏக்க முகம் அவரை ஏதோ செய்ய...

"இங்கே வாம்மா..." மகளை அருகில் அழைத்தவர்,

"வேலைக்குப் போகணும்னு ஆசைப்படுறியா...?"

அவளுக்குத் தந்தையிடம் சிறு பயம் உண்டு. ஆனாலும் அண்ணன் இருக்கும் தைரியத்தில் அவள் 'ஆம்' என்று தலையசைக்க...

"சரி... கொஞ்சு நாளு வேலைக்குப் போ... அதுக்குப் பொறவு நாங்க சொல்றதைக் கேட்கணும், என்ன..."

இந்த மட்டும் அவர் சம்மதித்தது அவளுக்குப் பெரியதாய்த் தோன்ற, சந்தோஷத்துடன் தலையை ஆட்டினாள். உதய்க்கும் நிம்மதியாய் இருந்தது.

"அண்ணே..." உதய்யைத் தனியே அழைத்த சங்கீதா,

"நீங்க யாரையாச்சும் காதலிக்கிறீர்களா...?" அவளது கேள்வியில் அவன் திடுக்கிட்டான்.

"இல்லையே..." அவசரமாய் மறுத்தான்.

"ஏய்... ஏய்... பொய் சொல்லாதீக... அம்மா உங்க கல்யாணத்தைப் பத்திப் பேசும் போது, நீங்க அப்படியே கனவுல மெதந்ததை நான் பார்த்துக்கிட்டுதான் இருந்தேன்..." என்றவள், அவனின் முகத்தைக் குறுகுறுவெனப் பார்க்க...

"ரொம்ப படிச்சா இப்படித்தான் கற்பனை ரெக்கை கட்டிப் பறக்கும்... போய் வேலையைப் பாரு..." வலிக்காமல் அவள் தலையில் கொட்டியவன், சிரித்தபடி நகர்ந்தான்.

அறைக்குச் சென்று கண்ணாடியில் முகம் பார்த்தவன், 'காதலிச்சா முகத்துல காதலு தெரியுமா...?' முகத்தை அப்படியும் இப்படியும் திருப்பிப் பார்க்க... அவனுக்கு ஒன்றும் வித்தியாசம் தெரியவில்லை. அப்படித் தெரிவதற்குக் கண்ணாடியில் அவன் முகம் அல்லவா தெரிய வேண்டும். அவனுக்குத்தான் கண்ணாடியில் உமாவின் முகமல்லவா தெரிந்தது.

அலுவலகத்திற்குள் நுழைந்த ஹரிஹரன், தனக்கு வணக்கம் தெரிவித்தவர்களுக்கு எல்லாம் லேசாகத் தலையசைத்தபடி அவர்களின் வணக்கத்தை அங்கீகரித்தபடி நடந்தவனின் கால்கள், சங்கீதாவின் அருகில் வந்ததும் வணக்கம் சொன்ன அவ்ளைப் பார்த்து ஒரு நொடி தயங்கி நின்று, அடுத்த நொடி வேகமாய்த் தனது அறையை நோக்கிச் சென்றது.

"டேய் மச்சி... யாருடா அது...? புதுசா இருக்கு..."

தனது நண்பனும் தொழிலில் பங்குதாரருமான சபரீஷிடம் கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தான் ஹரி.

"யாரு... அந்த நாட்டுக்கட்டையா...?" குரலில் எள்ளலுடன் கேட்டான் சபரீஷ்.

ஹரியும் சபரீஷும் தொழிலை மட்டும் பங்கு போட்டுக் கொள்ளவில்லை... மது, மாது என்று எல்லாவற்றையும் சேர்ந்தே இருவரும் பங்கு போட்டுக் கொண்டனர். அந்தளவுக்கு ஒற்றுமையான நண்பர்கள்.

"ஷ்... அப்படிச் சொல்லாதேடா... நல்ல ஹோம்லியா இருக்கா... இந்த மாதிரி ஹோம்லியான பொண்ணுங்களை டச் பண்ணி ரொம்ப நாளாச்சு... ட்ரை பண்ணிப் பார்க்கலாமா...?" கண் சிமிட்டிச் சிரித்த ஹரியைப் பார்த்து,

"மச்சி, வேண்டாம்டா... பொண்ணு மதுரைப் பக்கம்... ஏதாவது விவகாரம் ஆச்சு, ஆளுங்க அருவாளைத் தூக்கிட்டு வந்திருவாங்க..." நல்ல நண்பனாய் ஹரியை எச்சரித்தான் சபரீஷ்.

"உனக்கு வேணாம்னா ஒதுங்கி நின்னு வேடிக்கைப் பாரு..." என்றவன் தொலைபேசியை எடுத்து, சங்கீதாவை அவனைச் சந்திக்கும்படி பணித்தான்.

"குட்மார்னிங் சார்..." இருவரையும் பார்த்து வணக்கம் சொன்னவளைக் கண்ணிமைக்காமல் பார்த்தான் ஹரி. அவளைப் போன்ற ஒரு பெண்ணை அவன் பார்த்தது இல்லை. ஏதோ ஒன்று அவனை அவளிடத்தில் ஈர்த்தது.

"எங்க கம்பெனியில ஜாயின் பண்ணதுக்கு ரொம்ப சந்தோஷம்... கம்பெனி முன்னேற உங்களோட ஒத்துழைப்பை நான் எதிர்பார்க்கிறேன்..."

ஒத்துழைப்பு என்ற வார்த்தையை அழுத்திச் சொன்ன ஹரியைக் கண்டு விகல்பம் இல்லாமல் புன்னகைத்தவள், "ஷ்யூர் சார்..."

"நீங்க போகலாம்..." ஹரி சொன்னதும் அவள் விடை பெற... சபரீஷ் அவனைப் பார்த்து ஏளனமாய்ச் சிரித்தவன்,

"என்ன மச்சி ஒத்து வரலையா...?"

அதைக் கேட்டு மந்தகாசமாய் சிரித்த ஹரி, "அவள் ஆள் எப்படின்னு ஸ்டடி பண்ணினேன்டா... நாம நினைக்கிற மாதிரியான ஆள் அவள் இல்லை... மடங்கிற டைப்பா தெரியல..."

"அதைத் தானேடா நானும் சொல்றேன்..."

"இவளை எல்லாம் வேற மாதிரி மடக்கணும்டா... இந்த ஹரி எடுத்த காரியத்தை வெற்றிகரமா முடிக்காம விட மாட்டேன்..." என்று சொன்ன ஹரியின் முகத்தில், தான் நினைத்ததை அடைந்தே தீர வேண்டும் என்ற வெறி நிறைந்திருந்தது. ஹரி விரித்த வலையில் இருந்து சங்கீதா தப்பிப்பாளா...?

"உம்மா..." அழுத்தமாய் ஒலித்த உதய்யின் குரலில் உமாவிற்குச் சிரிப்பு வந்தது. அவள் விடுமுறையில் அவளின் சொந்த ஊருக்கு வந்திருந்தாள்.

"உதய்... நீங்க உமாங்கிறீங்களா இல்லை உம்மாங்கிறீங்களா... உங்களுக்கு உமா வேணுமா... இல்லை உம்மா வேணுமா...?" சொல்லி விட்டுக் களுக் என்று சிரித்தவளின் சிரிப்பு, அவளைக் காணாமல் வறண்டிருந்த உதய்யின் மனதைச் சாரலாய் நனைத்தது.

"ரெண்டுந்தான்டி..." என்றவனின் குரல் கிறக்கமாய் ஒலித்தது.

"எப்போ உமா வருவ...? உன்னைப் பார்க்காம இருக்க முடியலை..."

"நான் இங்கே வந்து ஒரு நாள்தான் ஆகுது... அதுக்குள்ள இப்படிச் சொன்னா எப்படி உதய்...? உடனே நான் கிளம்பினா வீட்டுல சந்தேகம் வராதா...?" என்றவள்,

"எனக்கும் உங்களைப் பார்க்கணும் போலிருக்கு... ஐ மிஸ் யூ உதய்..." அவளின் வருத்தம் அவன் மனதைப் பாதிக்க, அவன் வேறு பேச்சிற்குத் தாவினான்.

காதலர்கள் பேசுவதற்கு விஷயங்களா இல்லை... பூ மலர்ந்ததில் இருந்து மாடு கன்னுக்குட்டி போட்ட வரை அவர்கள் பேச எத்தனையோ கதைகள் இருந்தது. இன்பக் கனாவில் மூழ்கி முத்தெடுத்துக் கொண்டிருந்தவனை,

"உதய்... அப்பா வர்ற மாதிரி இருக்கு... நான் அப்புறமாப் பேசுறேன்..." உமாவின் பதட்டக் குரல் அவனையும் பதட்டமடையச் செய்தது. அவன் பதில் பேசும் முன் அழைப்புத் துண்டிக்கப்பட்டு விட்டது.

மீண்டும் மீண்டும் அவன் அவளுக்கு அழைக்க, அவளின் அலைபேசி அணைத்து வைக்கப்பட்டு

இருந்தது. அடுத்து வந்த ஒரு வாரமும் அவளிடத்தில் இருந்து எந்தவிதப் பதிலும் இல்லை... அவளுக்கு என்னானதோ ஏதானதோ என்று உதய்தான் அதிகமாய்த் தவித்துப் போனான். ஒரு வாரம் கழித்து அவனின் அலுவலகத்துக்கு வந்த உமாவைக் கண்டதும், மகிழ்ச்சியும் தவிப்புமாய் வேகமாய் அவள் அருகே சென்றவன்,

"என்ன உமா இது... போன் கூடப் பேசாம என்னைத் தவிக்க விட்டுட்டியே..." தவிப்புடன் அவளின் கையைப் பிடித்துக் கொண்டு உலுக்க... அதில் அவள்,

"ஷ்..." என்றபடி வேதனையில் முகத்தைச் சுழித் தாள். அவளின் செயல் அவனுக்கு வித்தியாசமாய் இருக்க...

"என்னடி...?" அவளின் கையை ஆராய்ச்சியாய்ப் பார்த்தான்.

"ஒண்ணும் இல்லை..." என்று புன்னகைத்தவளின் புன்னகை, அவளின் கண்களை எட்டவில்லை என்பதை உணர்ந்தவன்,

"என்ன காட்டு...?" அவள் அணிந்திருந்த குர்தியின் கைப்பகுதியை அவன் தூக்க...

"உதய்..." என்றாள் கண்டிப்புடன்... அவளை ஒரு பார்வை பார்த்தவன், அலுவலகக் கதவை அடைத்து விட்டு வந்து,

"ஏன், நான் பார்க்கக் கூடாதா...?" என்றவன் அவள் பேச்சை மதியாமல், அவளின் கையின் துணியை ஏற்றிப் பார்த்தவன் அதிர்ந்து போய் நின்றான்.

வெண்மையான அவளின் உடலில் சிவப்பு நிறத்தில் வரி வரியாகத் தடித்துக் கனிந்திருந்தது... யாரோ அவளைப் பெல்ட்டால் அடித்து இருக்கின்றனர்.

"யாருடி இப்படிச் செஞ்சது...?" கொலைவெறியில் ஒலித்தது அவனது குரல்...

"அப்பா..." அவளின் சொல்லில் அவன் இன்னமும் அதிர்ந்தான்.

"ச்சே... பொட்டப்புள்ள கிட்டப் போய் வீரத்தக் காட்டுறானே உன் அப்பா... அவன்லாம் மனுஷனே இல்லை..." கோபமும் பதட்டமுமாய்க் கேட்டவன்... அவளின் காயங்களை வருடியபடி,

"வலிக்குதா...?"

"ம்... ரொம்ப..." என்றவள், பாவமாய் அவனின் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள்.

அன்று அவளின் வாடிய முகத்தைக் கண்டே கண் கலங்கியவன் அவன்... இன்று தன் குறும்புத்தனத்தைத் தொலைத்து விட்டு, வேதனையுடன் இருந்தவளின் நிலை அவனை மேலும் நிலைகுலையச் செய்தது. அவனின் கண்களில் இருந்து சொட்டிய கண்ணீர், அவளின் நெற்றிப் பொட்டில் விழுந்து வழிந்தோடியது.

"உமா..." என்று கதறியபடி அவளை அணைத்துக் கொண்டான்.

"உதய்..." உமா தன் கட்டுப்பாட்டை எல்லாம் மீறி அவனின் நெஞ்சில் முகம் புதைத்து விம்மினாள். அதைக் கண்டு அவனின் அணைப்பு மேலும் இறுகியது.

'இனி எல்லாமுமாய் நானிருப்பேன் உனக்கு...' என்பது போலிருந்தது அவனது இறுகிய அணைப்பு.

கதவு படபடவெனத் தட்டப்பட்ட சத்தத்தில் உதய்யும் உமாவும் அவசரமாய் விலகினர். கதவைத் திறக்க எழுந்த உதய், பின்பு ஏதோ தோன்ற உமாவின் புறம் திரும்பி அவளின் கைப்பகுதித் துணியை கீழே இறக்கி விட்டு, அவளது அழுத விழிகளைத் துடைத்து விட்டான்.

"இனிமே நீ எதுக்கும் அழக்கூடாது உமா... நான் இருக்கேன் உனக்கு..." என்றவன், அவளின் கலைந்திருந்த பக்கவாட்டு முடியைக் காதோரமாய் ஒதுக்கி விட்டு, அவளைப் பார்த்துப் புன்னகைத்தான்.

"ம்... ம்..." தலையை மேலும் கீழும் அசைத்தவளின் கண்களில் கண்ணீர் திரண்டது.

மீண்டும் கதவு தட்டப்படவும், உதய் அவசரமாய்ச் சென்று கதவைத் திறந்தான். அங்கே அழகுதான் நின்று கொண்டு இருந்தான். அவ்வளவு நேரம் கதவைத் தட்டியும் திறக்காததால், கடுப்புடன் உள்ளே நுழைந்த அழகு, அங்கு தனித்து இருந்த இருவரையும் கண்டு இன்னமும் கடுப்பானான்.

"பூட்டிய அறைக்குள்ள நீங்க ரெண்டு பேரும் என்ன பண்ணுறீக..." உதய்யைச் சந்தேகமாய்ப் பார்த்தவன் உமாவிடம்,

"ஏம்மா தங்கச்சி... மச்சான் ஆம்புள... ஆனா நீ பொட்டப்புள்ள. பட்டப் பகல்ல இப்படிச் செய்யலாமா...?" கடிந்தவனின் அக்கறை உமாவிற்குப் பிடித்து இருந்தது.

"டேய் மாப்புள்ள... என்ன நடந்ததுன்னு தெரியாம உளறாதே..." அழகின் பேச்சு எரிச்சலை வரவழைக்க, அவனைக் கடிந்தான் உதய்.

உதய் சொன்னதும்தான் அழகு உமாவைக் கூர்ந்து பார்த்தான்... அழுது அழுது முகம் சிவந்து பேரய் அமர்ந்து இருந்தவளைக் கண்டு, அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

"மச்சான்... தங்கச்சியை என்ன பண்ணுனீக... உமா உனக்கு இந்த அண்ணன் இருக்கேன்மா... என்ன நடந்திச்சு சொல்லு... மச்சான்னு கூட பார்க்க மாட்டேன்... அருவாள எடுத்துச் சீவிப்புடுதேன் சீவி..." அவனின் கள்ளங்கபடமற்ற அன்பில் உமாவுக்கு உள்ளம் சிலிர்த்தது.

"தேங்க்ஸ் அழகு... எனக்கு அண்ணன் இல்லாத குறையைத் தீர்த்து வச்சிட்டே... உங்க மச்சான் ஒண்ணும் பண்ணல... அந்தளவுக்கு அவருக்குத் தைரியம் இருக்கா என்ன...? அப்படியே மச்சானுக்குத் தைரியம் இருந்தாலும் உன் தங்கச்சி இதுக்கு எல்லாம் ஒத்துக்குவேனா..."

கலகலவெனப் பேசிய உமாவைக் கண்ணிமைக் காமல் பார்த்தான் உதய். சற்று நேரத்திற்கு முன், தாய் மடி

ஓடி ஆறுதல் அடையும் கன்று போல் தன் நெஞ்சில் சாய்ந்து அழுதவளா இந்த உமா என்று அவனுக்குச் சந்தேகமாக இருந்தது.

அவள் துறுதுறுவெனக் குறும்பாய்ச் சிரித்தபடி இருப்பது, தன் மன வேதனையை மறைக்கத் தானாகப் போட்டுக் கொண்ட முகமூடியோ என்று அவனுக்குத் தோன்றியது.

"அதானே... எந்தங்கச்சியா கொக்கா...?" சட்டைக் காலரைத் தூக்கிய அழகை முறைத்த உதய்,

"ஏன்டா... என் மேலே உனக்கு நல்ல எண்ணமே வராதா...?" அழகின் முதுகில் நாலு அடி போட்டான்.

"ஐயோ, தங்கச்சி காப்பாத்து..." உமாவின் பின்புறம் அழகு ஒளிய, உதய் அவனை விடாமல் சட்டையைப் பிடித்து இழுத்து அடிக்க, அதைக் கண்டு அவள் வாய் விட்டுச் சிரித்தாள்.

அதைச் சகோதர வாஞ்சையுடன் பார்த்த அழகு உதய்யிடம்,

"மச்சான்... உமா ரொம்ப நல்ல பொண்ணு... அது அழுது நான் ஒரு நாள் கூடப் பார்த்ததில்லை... இன்னைக்கு அழுத முகத்தோடப் பார்க்கவும் எனக்குத் திக்குன்னு ஆயிருச்சு... அதான் அதைச் சிரிக்க வைக்க அப்படிப் பேசிட்டேன்... என்னைத் தப்பா எடுத்துக்காதீக..." என்றவன்,

"அது கவலை என்னன்னு கேட்டு, அதைத் தீர்க்குற வழியைப் பாருங்க மச்சான்..." மெல்லிய குரலில் உமாவிற்குக் கேட்காவண்ணம் பேசினான்.

அழகின் பேச்சு உதய்யின் மனதை நெகிழ்த்த, "மாப்புள்ள..." என்று அணைத்துக் கொண்டான்.

"அழகு... உன் பாசமலர் நான் இங்கே இருக்கேன்... நீ என்னடான்னா உன் மச்சானைக் கட்டிப் பிடிச்சிட்டு இருக்க... டூ பேட்..." உமா அழகைக் கிண்டலடிக்க...

"ஆத்தாடி பாசமலரு... உனக்கு ஏத்தா இம்புட்டுப் பொறாமை... உம் மச்சானை நீயே கட்டிப் பிடிச்சுக் கோத்தா..." உதய்யை அவள் பக்கம் தள்ளிய அழகு,

"மச்சான்... என் எதிராளி வூட்டு விருந்துக்குப் போறேன்... கறி சோறு போடுறாய்ங்க... போய் ஒரு வெட்டு வெட்டிட்டு வந்திர்றேன்... வாரேன்..."

"அது என்ன அழகு எதிராளி... பங்காளி கேள்விப் பட்டு இருக்கேன்... இந்த எதிராளி... கேள்விப்பட்டது இல்லையே..." உதட்டைப் பிதுக்கியவளை ஏளனமாய்ப் பார்த்த அழகு,

"ஹய்யோ... ஹய்யோ... நீயெல்லாம் டாக்டருக்குப் படிச்சு... டாக்டராகி... ம்... காலக்கொடுமை..." என்று தலையில் அடித்தவன்,

"என் வீட்டு எதுத்த வூட்டுக்காரந்தான் என் எதிராளி... மச்சான்... புள்ளைக்கு நம்ம பக்கத்துப் பழக்கம் வழக்கம் எல்லாம் சொல்லிக் குடுங்க... ஒண்ணுந் தெரியாத பச்ச மண்ணா இருக்கு..."

"போடா அரட்டை..." உதய் சிரித்தபடி அவனை விரட்ட...

"அழகு... என்னைப் பார்த்துக் காலக்கொடுமைன்னு சொல்லிட்டல்ல... உனக்குக் கறிசோறுல கறியே கிடைக்காது... இது என்னோட சாபம்..." உமா சாபம் கொடுக்க...

"எதுக்கும் நான் நேரத்தோட போறேன்..." கறி கிடைக்காமல் போய்விடுமோ என்ற பயத்தில் அழகு அவசரமாய் அங்கிருந்து கிளம்ப... உமா அவனைச் சிரித்தபடி பார்த்துக் கொண்டு இருந்தாள்.

"உதய்... அழகு சான்சே இல்ல... அழகுக்கு நோ சப்ஸ்டிட்யூட்..."

உதய்யிடம் இருந்து பதில் வராமல் போகவும் அவள் அவனைப் பார்க்க, அவனும் அவளைத்தான் பார்த்துக் கொண்டு இருந்தான். ஒற்றைப் புருவத்தைத் தூக்கி, என்ன என்பது போல் அவள் பார்க்க...

"கையில மட்டுந்தான் அடிபட்டு இருக்கா... இல்ல..." அவனது கண்கள் அவளது மேனியை அலச... அதில் தலை குனிந்தவள்,

"உடம்புலயும்தான்..." அதைக் கேட்டதும் அவனுக்குப் பேச்சு வரவில்லை. இவ்வளவு அடியை வாங்கிக் கொண்டு எப்படி இந்தப் பெண்ணால் இப்படிச் சிரிக்க முடிகிறது என்று அவனுக்கு உள்ளுக்குள் வேதனையாக இருந்தது.

"டாக்டருக்குப் படிக்கிற அளவுக்கு நீ பெரிய புள்ள... உங்க அப்பா அடிச்சா எதுத்துக் கேட்க மாட்டியா...? இப்படித்தான் என்னை அடிச்சிக்கோன்னு நிப்பியா...?"

அதைக் கேட்டதும் அவளை ஏறிட்டுப் பார்த்தவளின் விழிகளில் அடிபட்ட வலி ஒன்று தோன்றி மறைந்தது. முகத்தில் அவ்வளவு வேதனை... அவளின் வேதனையை உணர்ந்தவன், அவள் அருகில் இருந்த நாற்காலியில் அமர்ந்து,

"உம் மனசுக்குள்ள என்ன இருக்குன்னு சொன்னாத்தான் எனக்குத் தெரியும் உமா... இத்தனை நாளுல நாந்தான் என்னைப் பத்தி எல்லாத்தையும் சொல்லி இருக்கேன்... ஆனா நீ உன்னைப் பத்தி ஒரு வார்த்தை பேசல... சரி, இப்பவாச்சும் உன்னைப் பத்திச் சொல்லு..." என்றவனைப் பார்த்தவள் முகத்தில் தோன்றிய உணர்வை, அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை.

"என்ன சொல்ல... எல்லாம் என் தலைவிதி..." சொன்னவளின் வார்த்தையில் விரக்தி பரவியிருந்தது.

"அதைத்தான் கேக்குறேன்... உன் வீட்டு அட்ரசைக் குடு... இப்பவே போய் அந்த ஆளை உண்டு இல்லன்னு ஒரு வழி பண்ணிடறேன்..." கோபத்தில் கொந்தளித்த வனைக் கண்டு, அவள் முகத்தில் மகிழ்ச்சி மலர்ந்தது.

"ச்சு... அதெல்லாம் வேணாம் உதய்... என்னை அந்த நரகத்தில் இருந்து மீட்டெடுப்பீங்களா...? என்னைக் கல்யாணம் பண்ணிப்பீங்களா...? கை விட்டுற மாட்டீங் களே..." அவள் அப்படிக் கேட்டதும்...

"என்ன உமா... என்னப் பார்த்து இப்படி ஒரு கேள்வி கேக்குற... நான் உன்னைக் கல்யாணம் பண்ணாம வேற யாரைப் பண்ணப் போறேன்..." கடிந்தான் அவன்.

"அப்போ சரி... இப்பவே பண்ணிக்கலாமா...?"

அவளின் கேள்விக்கு உதய்யால் உடனடியாகப் பதில் சொல்ல முடியவில்லை. ஏனெனில் அவனின் தங்கை திருமணம், அதற்குப் பதில் சொல்ல முடியாமல் தடை போட்டது.

"சங்கீ கல்யாணம் முடிஞ்சதும் அடுத்த செகண்ட் உன் கழுத்துல நான் தாலி கட்டுறேன் உமா... அது வரைக்கும் பொறுமையா இரு..." என்றவனின் பேச்சில் அரை மனதாய்த் தலையை ஆட்டினாள் அவள்.

அவள் முகம் சுரத்தே இல்லாமல் இருப்பதைக் கண்டு, "நான் ஏமாத்திருவேன்னு பயப்படுறியா...?" அவன் கேட்டதற்கு, இல்லை என்று தலையாட்டியவள்,

"இன்னும் எத்தனை நாளைக்கு இந்தச் சித்ரவதை அனுபவிக்கணும்னு தெரியலை..."

வருந்தியவள் கையைப் பிடித்து ஆறுதலாய்த் தட்டிக் கொடுத்தான் உதய். அவனின் பிடியில் இருந்து மெல்லக் கையை உருவியவளைக் கண்டு, அவனுக்குச் சிரிப்பு வந்தது.

"கொஞ்ச நேரத்துக்கு முந்தி என் மாருல சாய்ஞ்சு அழுத புள்ளையை நீ பார்த்தியா உமா..."

அவனது கிண்டல் பேச்சில் அவளது முகம் வெட்கத்தில் சிவந்தது. முகத்தில் வெட்கமும் உதட்டில் சிரிப்புமாய் இருந்தவளைப் பார்க்கப் பார்க்க அவனுக்குத் தெவிட்டவில்லை. தன்னுடைய அலைபேசியை எடுத்து, அவளைப் புகைப்படம் எடுத்துக் கொண்டான்.

"இப்போ எதுக்கு போட்டோ எடுத்தீங்க..." இடுப்பில் கை வைத்து முறைத்தவளை...

"நீ வெட்கப்படுறது உலக அதிசயம்... அதான் இந்த வரலாற்று முக்கியத்துவ நிகழ்ச்சியை என் செல்போன்ல கல்வெட்டாய்ப் பதிஞ்சுக்கிட்டேன்..." சிரிக்காமல் கூறிய வனைக் கோபமாய்ப் பார்க்க முயன்று தோற்றவள்,

"உதய்..." தரையில் காலை உதைத்துக் கொண்டு சிணுங்க... அதை அவன் விருப்பத்துடன் ரசித்தான்.

"உமா... நான் சொல்லுதேன்னு தப்பா நினைக் காதே... நான் வேணா நீ படிக்க உதவி பண்றேன்... நீ உங்க வீட்டை விட்டு வந்திடேன்... நானே உனக்குத் தங்குறதுக்கு வசதி எல்லாம் பண்ணித் தாரேன்... அப்புறம் சங்கீ கல்யாணம் முடிஞ்சதும் நாம கல்யாணம் பண்ணிக்கலாம்..." என்றவனைப் பார்த்தவள் முகத்தில், பெருமிதம் நிரம்பி வழிந்தது.

'இவன் என்னவன்...' என்ற கர்வத்தில் அவள் நெஞ்சம் விம்மியது.

"தேங்க்ஸ் உதய்..." மனதார நன்றியுரைத்தவள்,

"நான் என் வீட்டை விட்டு உங்க கூட வரணும்னா... அது உங்க மனைவியாத்தான் வருவேன்..." சொன்னவ ளிடம், அவனால் தன்னுடன் வா என்று உறுதியாய், உரிமையாய் அழைக்க முடியாத தன் நிலையை எண்ணி மனதுக்குள் சபித்தான்.

"கூடிய சீக்கிரம் சங்கீ கல்யாணத்தை முடிச்சிட்டு உங்கழுத்துல தாலி கட்டுறேன்..." உறுதியாய் அவளிடம்

சொன்னவன், சொன்னது போல் வீட்டில் சங்கீதாவின் திருமணப் பேச்சை எடுத்தான்.

"ஆத்தா மீனாட்சி... இப்பவாவது இவங்கண்ணைத் தெறந்தியே..." மகனின் மனமாற்றம் மாரீஸ்வரிக்கு மகிழ்ச்சி அளித்தது.

தங்கவேலுவும் சரி என்று சம்மதித்தார். இன்று மாப்பிள்ளை பார்த்து நாளை திருமணம் முடிப்பது இல்லையே... தீர விசாரித்துச் செய்வதற்கு நாட்கள் பிடிக்கும் என்று தெரிந்தவராய், சங்கீதாவின் ஜாதகத்தைக் கையில் எடுத்தார்.

விஷயம் கேள்விப்பட்ட சங்கீதா, உதய்யை அலைபேசியில் அழைத்துக் கோபப்பட, அவனோ...

"அண்ணனுக்காக இதைச் செய்யமாட்டியா சங்கீ..." என்றும் இல்லாத திருநாளாய் அண்ணனின் உருக்கமான பேச்சு அவள் மனதை அசைக்க...

"ஏண்ணே இப்படிப் பேசுதீக... உங்களுக்காக நான் இதைச் செய்ய மாட்டேனா..." என்றவள்,

"ஏதோ விஷயம் இருக்கு... என்னன்னு சொல்லுங்கண்ணே..." அதற்கு உதய் மௌனம் சாதிக்க..

"என்னை நம்பலாம்ணே... நான் அம்மா, அப்பாகிட்ட கூடச் சொல்ல மாட்டேன்..."

அவள் கேட்டதும் அவனுக்கும் தன் மனப்பாரத்தை யாரிடமாவது பகிர்ந்து கொள்ள வேண்டும் போல் தோன்ற, உமாவைக் காதலிப்பது, அவளின் நிலை, எல்லாவற்றையும் அவளிடம் சொன்னான்.

"அண்ணே... உனக்காக நான் கல்யாணம் பண்ணிக்கிறேன்... மாப்புள்ள எப்படி இருந்தாலும் பரவாயில்லை..."

"அதென்ன எப்படி இருந்தாலும்... எந்தங்கச்சிக்கு ராசா மாதிரில்ல மாப்புள்ள பார்ப்பேன்..." என்றவன், சிறிது நேரம் அவளிடம் பேசிவிட்டு அலைபேசியை வைத்தான். அவனின் மனம் நிறைந்து இருந்தது. உமாவைக் கைப்பிடிக்கும் நாள் வெகு தொலைவில் இல்லை என்று அவனுக்குத் தோன்றியது.

"சித்து... வெளியில கூட்டிப்போ..." என்றபடி வந்த அஜித், அவன் காலைக் கட்டிக் கொள்ள சிரித்தபடி அவனைத் தூக்கிக் கொண்ட உதய், அவனை அழைத்துக் கொண்டு வெளியில் சென்றான்.

அன்று சங்கீதா வேலைக்குச் சென்று அமர்ந்ததும் ஹரியிடம் இருந்து அவளுக்கு அழைப்பு வந்தது. உடனே அவனைப் பார்க்க அவள் செல்ல, அங்கே சபரீஷ் இல்லாமல் அவன் மட்டும் தனித்து இருந்தான்.

"சார் குட்மார்னிங்..."

"மார்னிங் சங்கீதா... டேக் யுவர் சீட்..." அவள் அமர்ந்ததும்,

"இந்த ட்ராயிங் நீங்கதானே வரைஞ்சது..." மடிக் கணினியை அவள் புறம் திருப்பியபடி கேட்டான். அது அவள் வரைந்ததுதான்.

"ஆமாம் சார்..." தனது வேலையில் ஏதேனும் தவறு இருக்குமோ என்று அவளுக்கு வியர்த்து வடிந்தது.

"குட் வொர்க் மிஸ் சங்கீதா... குறைந்த இடத்தில் எல்லா பெசிலிட்டிசுடன் ஒரு ஆபீசை நீங்க ட்ராயிங் பண்ணியது... உண்மையில் எக்சலெண்ட்... உங்களை மாதிரியான திறமையானவங்கதான் எங்க கம்பெனிக்கு வேண்டும்... உங்க இந்த ப்ராஜெக்ட்டை கூடிய சீக்கிரம் நாங்க லான்ச் பண்ணப் போறோம்... கங்கிராட்ஸ்..." என்று கையைக் குலுக்குவதற்காக அவன் தன் கையை அவள் புறம் நீட்ட... அவளும் இயல்பு போல் தன் கையைக் கொடுக்கும் போது... சட்டென்று ஹரி தன் கையை இழுத்துக் கொண்டான்.

அவள் புரியாமல் அவனைப் பார்க்க... "உங்களுக்கு இதெல்லாம் பிடிக்காது இல்ல... சாரி..." என்றவன் கை கூப்ப... அவளுக்கு அவன் மேல் மதிப்பு வந்தது. அவனைப் பிரமிப்புடன் பார்த்தபடி அவள் வெளியில் செல்ல... ஹரி உதட்டில் நிறைந்த சிரிப்புடன் நாற்காலி யில் சாய்ந்தான்.

மாலை அலுவலகம் முடிந்து செல்லும் போது வேண்டும் என்றே அவள் மின்தூக்கியில் நுழையும் போது, அவனும் அவளுடன் நுழைய, இருவரின் தோளும் ஒன்றுடன் ஒன்று உரசிக் கொண்டது. அவள் பதறிப் போய் அப்படியே நிற்க...

"சாரி... நீங்க போங்க..." அவன் தன் கையை மின் தூக்கிப் பக்கம் காட்ட... அவள்,

"நீங்க போங்க சார்... நான் ஸ்டெப்ஸ்ல போய்க்கி றேன்..." என்று படியை நோக்கிச் செல்ல எத்தனிக்க...

"சங்கீதா..." அழுத்தமாய் அவளை அழைத்தவன்,

"நீங்க போங்க..." என்றவன், அவளின் பதிலை எதிர்பாராமல் படியை நோக்கிச் சென்றான். அவன் முதுகைச் சிறிது நேரம் வெறித்துப் பார்த்தவள் மின்தூக்கியினுள் நுழைந்தாள்.

அவன் கீழ்த்தளத்திற்கு வரும் வரை காத்திருந்தவள், அவனைக் கண்டதும் அவன் அருகே வந்தாள். அவளை ஆச்சரியப் பார்வை பார்த்தவன்,

"நீங்க இன்னுமா போகல...?"

"தேங்க்ஸ் சொல்லிட்டுப் போகலாம்னு நினைச்சேன்... தேங்க்ஸ் சார்..."

"ஓ.கே. தேங்க்ஸ் அக்சப்டட்..." என்றவன்,

"அப்புறம்..." அதற்கு என்ன பதில் கூறுவது என்று தெரியாமல் விழித்தவள்,

"வர்றேன் சார்..." என்றவள் ஓட்டமும் நடையுமாய்ச் செல்ல... நீண்ட பின்னல் அங்கும் இங்கும் ஆட, அவள் செல்லும் அழகைப் பார்த்துக் கொண்டிருந்தவன் விழிகள், அவளை அங்குலம் அங்குலமாய் ரசித்துப் பார்த்தது.

அடுத்து வந்த தினங்களில் சங்கீதாவை அழைத்த ஹரி, "இப்படி ரூமுக்குள்ளேயே இருந்து ட்ராயிங் பண்ணினா போதுமா... பீல்ட் வொர்க் பார்க்க வேணாமா..." என்க... அவள் மகிழ்ச்சியுடன் சம்மதித்தாள்.

அவள் சம்மதம் கிடைத்ததும் அவளைத் தன் உதவியாளருடன் அனுப்பி வைத்தான். நாட்கள் மெல்ல

நகர்ந்தது. சங்கீதாவிற்கு ஹரியின் மேல் நல்ல மதிப்பு வந்தது. அவளுக்கு சபரீஷை விட ஹரியை மிகவும் பிடித்தது.

கடினமான வேலையைக் கூடச் சிரித்தபடி வேலை வாங்கிய அவனது குணம், அவளுக்குப் பிடித்திருந்தது.

அன்றொரு நாள் சங்கீதா வெளி வேலைக்குச் செல்வதற்காகக் காருக்காகக் காத்திருந்தாள். அப்போது அங்கு வந்து காரிலேறப் போன ஹரி அவளைக் கண்டதும் நின்று, "எங்கே போறீங்க...?"

"வேளச்சேரி சைட்டுக்கு சார்..."

"நானும் அங்கேதான் போறேன்... வாங்க..." என்று சொல்ல... அவள் எதையும் யோசிக்காமல் சரி என்றாள்.

போகும் வழியில் அவளின் குடும்பத்தைப் பற்றி விசாரித்தான். அதற்கு அவள் பதில் அளித்துக் கொண்டு வரும் போதே அவர்கள் செல்லும் இடம் வந்து விட, இருவரும் காரை விட்டு இறங்கினர்.

மாலை வரை அங்கேயே இருந்து வேலை செய்தவனைக் கண்டு அவளுக்குப் பிரமிப்பாய் இருந்தது. முதலாளி என்ற கெத்தில் அவன் இருக்காமல், தொழிலாளியோடு தொழிலாளியாகக் களத்தில் இறங்கி வேலை செய்தவனை என்றும் இல்லாத அளவுக்கு இப்போது பிடித்து இருந்தது அவளுக்கு.

எல்லோரும் சென்று விட, கடைசியாய் இவர்கள் இருவரும் கிளம்பினர். பத்தாவது மாடியில் இருந்து

ஒவ்வொரு மாடியாய் கீழே இறங்கும் போது, சங்கீதா பழக்கம் இல்லாததால் தட்டுத் தடுமாறி இறங்கினாள்.

அதைக் கண்டதும் அவன் மூளையில் ஒரு திட்டம் பளிச்சிட, அவளுக்குப் பின்னால் வந்தவன் அவளது காலை அவளுக்கே தெரியாமல் லேசாக இடறி விட, அதில் தடுமாறித் தடுப்புச் சுவர் இல்லாத படியின் மறுபக்கம் விழப் போனவள், மரண பயத்தில் ஹரியின் சட்டையை இறுக்கிப் பிடிக்க... அதில் தடுமாறிய அவன், அவளது இடையில் கை கொடுத்துச் சமாளித்து அவளைத் தன் பக்கம் இழுத்தான்.

அவன் இழுத்ததில் நிலை தடுமாறியவள், அவன் மேலேயே விழ, அவளது செயலில் அவன் சுவரோடு ஒன்ற, சங்கீதாவின் பூவிதழ் அவனின் கன்னத்தில் அழுந்தப் பதிந்தது. அதில் திகைத்துப் போய் நின்றவள், அவன் ஏதும் சொல்வானோ என்ற அச்சத்தில் விழி விரிய நின்றாள். ஆனால், அவனை விட்டு விலகவில்லை. அதைச் செய்ய முடியாத அளவுக்கு அவள் மூளை மரத்துப் போயிருந்தது.

ஹரிக்குத் தான் நினைத்தது நடந்தது குறித்துச் சந்தோஷமாக இருந்தது. தன் அருகில் அச்சத்தில் விழி விரிய நின்று இருந்தவள் கோலம் அவனை மயக்கியது.

அவள் தன் கன்னத்தில் இதழ் ஒற்றிய போது வானத்தில் பறப்பது போன்ற ஒரு உணர்வை அவனுக்குத் தந்தது. அவளின் இடை மேலிருந்த கையை எடுக்காமல், அவளையே அவனும் பார்த்துக் கொண்டு இருந்தான்.

சங்கீதாதான் தன்னை சுதாரித்துக் கொண்டு, "சாரி... தெரியாம..." என்ன சொல்வது என்று தெரியாமல் திக்கித் திணற...

"நான் உன்னை மாதிரியில்ல... தெரிஞ்சே கொடுப்பேனே..." என்றவன் சிரித்தபடி அவளின் கன்னத்தில் முத்தமிட... அவனது தைரியமான செயலில் அவளது கண்கள் கலங்கியது.

"நான் அந்த மாதிரிப் பொண்ணு கிடையாது..." என்றவளின் கண்ணில் நீர் வழிந்தது. அவனிடம் இருந்து அவள் விலக முற்பட, அவனது பிடி உடும்பாய் இறுக்கிப் பிடித்து இருந்தது அவளை.

"நான் அப்படி ஏதும் உன்னைச் சொன்னேனா...?" என்றவன் அவள் அழுவது தாங்காமல், அவளது கண்ணீரைத் துடைத்து,

"ஐ லவ் யூ கீத்து..." அவள் புறம் குனிந்து அவளது காதோரம் கிசுகிசுக்க... சட்டென்று கண்களில் கண்ணீரோடு அவனை ஏறெடுத்துப் பார்த்தவளின் பார்வை, முதன் முறையாய் அவனை அடியோடு சாய்த்தது.

அவளின் விழி வீச்சில் மயங்கியவன், தாங்க முடியாத தாபத்தில், 'ஐ லவ் யூ பேபி...?' என்றபடி தனது இதழை அவளின் இதழோடு பொருத்தினான். முதலில் எதிர்த்த சங்கீதா, மெல்ல மெல்ல அவனது அணைப்பில் அடங்கினாள்.

வெகுநேரம் கழித்து அவன் அவளை விடுவிக்க, அவள் நிற்க முடியாமல் அந்தப் படியிலேயே தொய்ந்து போய் அமர்ந்தாள். அவளின் மனம் ஓவென்று அடித்துக் கொண்டது.

'என்ன சங்கீதா பண்ற... உன் வூட்டுக்கு இந்தக் காதல் எல்லாம் ஒத்து வருமா... அதுவும் பொட்டப்புள்ள உன் காதல் நிறைவேறுமா...?' அவள் யோசிக்கும் போதே...

'ஐயோ... இதுக்குப் பேருதான் காதல்... அப்படின்னா இவரை எனக்குப் பிடிச்சிருக்கா...? அதனாலதான் அவர் முத்தம் கொடுக்கிறப்போ எதுக்காம அடங்கி நின் னேனோ...? எப்போ இருந்து அவர் என் மனசுல நுழைஞ் சாரு...?' விடை தெரியாத பல கேள்விகள் காளானாய் சடுதியில் முளைத்தது அவளது மனதில்.

தன் மனதை எண்ணிப் பயம், அதைவிட இந்தக் காதல் கை கூடுமோ என்ற அச்சம் எல்லாமும் சேர்ந்து சங்கீதாவுக்கு அழுகை அடக்க மாட்டாமல் பொங்கிக் கொண்டு வந்தது. வாய் விட்டுக் கதறியவளைக் கண்டு ஹரிக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை.

அவனுக்குப் பெண்ணின் கண்ணீர் எல்லாம் புதிது. அவன் இதழொற்றலுக்கு அடிமையாகி அவனுடன் படுக்கையைப் பகிர்ந்து கொண்ட பெண்களைத்தான் அவனுக்குத் தெரியும். பெண்களைச் சந்தோஷப்படுத்தத் தெரிந்தவனுக்கு... அழும் பெண்களை எப்படிச் சமாதானப் படுத்துவது என்று தெரியாது.

அதனால் அழும் சங்கீதாவை எப்படிச் சமாதானப் படுத்துவது என்று தெரியாமல், சிறிது நேரம் விழித்தவன், மெல்ல அவள் அருகில் அமர்ந்தான்.

"கீத்து..." அவளின் கையைப் பிடிக்க... அதை அவள் உருவிக் கொள்ள முயன்றாள். ஆனால், அவனோ விடாமல் அதைப் பற்றியபடி,

"கீத்து... நீ சின்னப் பொண்ணு இல்லை... லவ்வுன்னா என்னன்னு தெரியாம இருக்கிறதுக்கு... பிடிச்சிருக்குன்னா சரின்னு சொல்லு... இல்லை, ஓங்கி என் கன்னத்துல அறைஞ்சு பிடிக்கலைடான்னு சொல்லு... இந்த இரண்டும் இல்லாம நீ இப்படி அழுதா எனக்கு என்னமோ மாதிரி இருக்கு..." என்றவன், உண்மையாய் உணர்ந்து தன் மனதில் இருந்து சொன்னான்.

அவள் பதில் பேசாமல் அழுது கொண்டு இருக்க...

"என்னைப் பிடிக்கலையா...?" என்றவன் அவளின் கையை எடுத்துத் தன்னைத் தானே அடிக்கப் போக... கையை இழுத்துக் கொண்டவள்,

"வேணாம்..." என்றாள் மெல்ல... அதிலேயே அவளது மனம் தெரிந்து விட, அவனது மனம் லேசானது...

"என்ன வேணாம்...? நானா...?" அவளின் பதில் தெரிந்தே உல்லாசமாக வினவினான்.

"இல்லை... இல்லை..." அவசரமாக மறுத்தவளைக் கண்டு, அவனின் பார்வை மாறியது...

"பிடிச்சிருக்கா கீத்து..." தாபமும் ஏக்கமும் கலந்து வழிந்தது அவனது குரலில்.

"ம்..." என்றவள்,

"என்னைக் கைவிட்டுற மாட்டீங்கல்ல..." எதிர்பார்ப்பு நிறைந்த குரலில் கேட்டவளை ஏமாற்ற, ஏனோ அவனுக்கு மனம் வரவில்லை.

"பிராமிசா... உன்னைக் கைவிட மாட்டேன்..." அவளின் கை மீது அவன் சத்தியம் செய்ய, அவள் முகம் மலர்ந்தது.

"அவ்வளவுதானா கீத்து..."

"என்ன வேணும்...?" அவள் குரல் அவளுக்கே கேட்கவில்லை.

"ஒரு ஐ லவ் யூ... ஒரு ஹக்... ஒரு கிஸ்..." கண் சிமிட்டி அவன் கேட்க... அவள் வெட்கத்தில் தலை குனிய... அவளின் வெட்கம் கூட அவனுக்குப் புதியதாய் இருந்தது.

"நீ கொடுக்கலைன்னா என்ன... நான் கொடுக்கி றேன்..." என்றவன், அவளிடம் தான் கேட்டதை அவளுக் குக் கொடுக்க ஆரம்பித்தான்... அதேபோல் கறார் பேர்வழி யாய் அவளிடம் இருந்து வசூலிக்கவும் தவறவில்லை.

மறுநாள் அலுவலகத்தில் இருவரின் பார்வைப் பரிமாற்றத்தையும் கவனித்த சபரீஷ், நண்பனைப் பார்த்து, "என்னடா மச்சி... சொன்ன மாதிரி கரெக்ட் பண்ணிட்ட போல..." கண் சிமிட்டிக் கேட்க...

"எதையாவது லூசுத்தனமா பேசாதேடா... சும்மா இரு..." ஹரி அவனை அதட்ட...

"மடங்கிருச்சுன்னா எனக்கும் ஷேர் பண்றது... நாட்டுக்கட்டையா இருந்தாலும் அம்சமாதான் இருக்கா..." அசிங்கமாய்ச் சிரித்தவனைக் கொலைவெறியுடன் பார்த்தான் ஹரி.

"அவளைப் பத்தித் தேவையில்லாம அசிங்கமா பேசாதே மச்சி... அவ அந்த மாதிரிப் பொண்ணு இல்ல..." என்ற ஹரியைக் கூர்ந்து பார்த்த சபரீஷ்,

"என்ன... அவளை லவ் பண்றியா...? ஆனா உனக்கும் லவ்வுக்கும்தான் தூரமாச்சே... தேவையில்லாம வலியப் போய் மாட்டிக்காதே மச்சி... அப்புறம் உன் இஷ்டம்..." என்றவன் வெளியேற... ஹரி தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்து விட்டான்.

சங்கீதா அருகில் இல்லாத போது அவள் வேண்டும் என்று பேயாட்டம் போடும் அவனது இளமை உணர்வுகள், அவளை அருகில் கண்டதும் எஜமானியைக் கண்டதும் குழைந்து வாலை ஆட்டும் நாயைப் போல் அல்லவா அடங்கிப் போகிறது.

அந்த நேரம் அவளது அருகாமையை, பேச்சை ரசிக்கும் அவனது மனம், அவளின் உடலுக்கு மோகம் கொண்டு அலைவது இல்லை. ஒரு பெண்ணால் தன் உணர்வுகளைக் கட்டுப்படுத்த முடிகிறது என்றால் அதற்குப் பெயர் என்ன...?

காதலை வார்த்தையாய்ச் சொல்லத் தெரிந்தவனுக்கு, அதை உணர்ந்து கொள்ளத் தெரியவில்லை.

காதல் என்பது உடல் தேவையைத் தாண்டிய மனதின் தேடல் என்பதை அவன் உணர வெகுகாலம் ஆகுமோ...!

"குட்மார்னிங் டாட்..." தந்தைக்குக் காலை வணக்கம் சொன்னபடி உணவு மேஜையில் வந்தமர்ந்தான் ஹரி.

"மார்னிங் ஹரி... பிசினஸ் எல்லாம் எப்படிப் போயிட்டு இருக்கு...? எந்தப் பிரச்சினையும் இல்லையே?"

மகாதேவன் கேட்டுக் கொண்டு ஓட்ஸ் கஞ்சியை ஸ்பூனில் எடுத்து வாயில் வைத்தார்.

வெறும் மகாதேவன் என்றால் யாருக்கும் தெரியாது. அமைச்சர் மகாதேவன் என்றால் அனைவருக்கும் தெரியும்.

கல்வித்துறை அமைச்சராக இருக்கிறார். அவரின் மகன்தான் இந்த ஹரிஹரன்.

"நத்திங் டாட்... அஸ் யூசுவல் போயிட்டு இருக்கு..." என்றவன்,

"மாம்... தினமும் பிரெட் தானா... இன்னைக்காவது இட்லி, பூரின்னு வெரைட்டியா கண்ணுல காட்டக்கூடாதா..." அன்னை அபிநயாவிடம் அவன் அலுக்க...

"அதெல்லாம் சாப்பிட்டா வெய்ட் போடும் ஹரி..." என்றபடி அங்கிருந்த கண்ணாடி தம்ளரில் பழச்சாறை நிரப்பினார்.

"போங்க மாம்... இதை ஒண்ணைச் சொல்லியே என் வாயை அடைச்சிடுங்க..." என்று சலித்தவன், பிரட்டை எடுத்து வெண்ணெயைத் தடவ ஆரம்பித்தான்.

"ஹரி... பூஜா இன்னைக்கு வர்றேன்னு சொல்லி இருந்தா... ஏர்போர்ட் போய்ப் பிக்கப் பண்றியா...?"

பூஜிதா அவனது மாமா மகள்... அபிநயாவின் அண்ணன் மகள்.

"நோ மாம்... எனக்கு வேற வேலை இருக்கு... நீங்களே போங்க..." என்றவனுக்குச் சங்கீதாவுடன் கட்டுமானப் பணி நடக்கும் இடத்திற்குச் செல்ல வேண்டிய முக்கிய வேலை இருந்தது.

இப்போது எல்லாம் அவனது மனம் யாருடனும் நேரம் செலவழிக்க விரும்பவில்லை. சங்கீதாவுடன் மட்டுமே நேரம் செலவழிக்க விரும்பியது. அதைப் பெற்றோரிடம் கூடச் சொல்ல அவனுக்கு மனம் வர வில்லை.

"ஹரி..." கண்டிப்புடன் அழைத்த அபி...

"பூஜாவை நீ இப்படி அவாய்ட் பண்றது எனக்குச் சுத்தமாப் பிடிக்கல... என்னைக்கு இருந்தாலும் அவள் தான் உன் வொய்ப்... அதை நீ நல்லா ஞாபகம் வச்சிக்கோ..."

"ஐயோ... கல்யாணத்துக்கு அப்புறமும் எனக்கு பிரெட் தானா... உங்களுக்கு மகனாப் பிறந்ததை விட அப்படி நான் என்ன பாவம் பண்ணினேன்னு என்னை

இப்படிக் கொடுமைப்படுத்துறீங்க மாம்..." போலியாக அலறியவனை முறைத்த அவனது அன்னை,

"எப்போ இருந்து ஹரி இப்படி லோக்கலா திங் பண்ண ஆரம்பிச்ச..."

"மாம்... மனதுக்கு பிடிச்சதைச் சாப்பிடணும்... மனது நிறைஞ்சு தூங்கணும்... இதைக் கொடுக்காத பணமும் உங்க ஹை கிளாசும் இருந்து எதுக்கு...? நான் இப்படித்தான் மாம்... எனக்கு வர்றவ சமைக்கத் தெரிஞ்சவளா இருக்கணும்... உங்களை மாதிரி சமைக்கத் தெரியாத உங்க அண்ணன் பொண்ணு எனக்கு வேணாம்..."

"ஹரி, என்ன இது... மாமை எதிர்த்துப் பேசிட்டு... அவள் உன்னோட நல்லதுக்குத்தானே சொல்றா... நமக்குன்னு பிரஸ்டிஜ் இருக்கு ஹரி... அதை மெயின் டெயின் பண்ணணும்..." என்ற தந்தையை ஆழ்ந்து பார்த்த ஹரியின் முகத்தில் இருந்த உணர்வைப் புரிந்து கொண்டவருக்கு முகம் கறுத்துப் போனது.

"ஹரி..." கணவனின் முக மாறுதலைக் கண்டு அபிநயா மகனைக் கண்டிக்க...

"மாம்... என்னை என் போக்குல விடுங்க... என் விஷயத்தில் அநாவசியமா மூக்கை நுழைக்காதீங்க..." அவனும் கடுமையாய்ப் பேச...

"உன்னை உன் இஷ்டத்துக்கு விடப் போய்த்தான் இப்படி ஊர் மேய்ஞ்சிட்டு இருக்க... இப்பவே எனக்கு ஒரு

முடிவு தெரிஞ்சாகணும்... என் அண்ணன் மகளைக் கல்யாணம் பண்ணப் போறியா இல்லையா...?" என்ற கேள்வியைத் தீர்க்கமாய்ப் பார்த்தவன்,

"உங்க அண்ணன் மகளைக் கல்யாணம் பண்ணிக்கிறதுக்கு நான் ரோட்டுல போற ஏதோ ஒரு பிச்சைக்காரியைக் கல்யாணம் பண்ணிக்குவேன்... ஆனா உங்களோட பேட் லக்... இப்போதைக்கு எனக்குக் கல்யாணம் பண்ணிக்கிறதுல இஷ்டம் இல்லை..." என்றவன்,

"இப்போதைய வாழ்க்கையே எனக்குச் சந்தோஷமாகத்தான் இருக்கு..." தீர்மானமாய்ச் சொன்னவன், எழுந்து செல்ல... பெற்றவர்கள் இருவரும் அவனை என்ன சொல்லித் திருத்துவது என்று தெரியாமல் திகைத்துப் போய் இருந்தனர்.

"ஜெய் குட்டி தூங்கிட்டியா...?" தன் பக்கத்தில் தலை வரை இழுத்துப் போர்த்திக் கொண்டு உறங்கிக் கொண்டிருந்த ஜெயஸ்ரீயை உமா எழுப்ப... தூக்கம் கலைந்ததில் கடுப்பான ஜெயா, போர்வையை விலக்கிக் கொண்டு அவளை முறைத்தாள்.

"ஏன்டி, தூங்கிட்டு இருக்கிறவளைப் பிடிச்சு எழுப்பி உயிரை வாங்குற...? இப்ப உனக்கு என்னதான்டி வேணும்...?" தலையைச் சொறிந்து கொண்டு எழுந்து அமர்ந்தாள்.

"பட்டுக்குட்டி... கோச்சுக்காதே... இன்னும் ஒரு அரை மணி நேரம் முழிச்சிட்டு இரேன்..."

உமா கெஞ்சவும், ஜெயா அவளைப்பரிவில் நேரத்தைப் பார்த்தவள், கொலைவெறியுடன் அவளைப் பார்த்தாள்.

"இது உனக்கே நல்லா இருக்கா ? மா... மணி இப்ப என்ன தெரியுமா... ரெண்டுடி..."

"ம்... தெரியுமே... டூ தர்ட்டிக்கு என் மச்சான் பிறந்தாராம்... அதுக்குத்தான் முழிச்சிட்டு இருக்கேன்... தனியா முழிச்சு இருந்தா தூக்கம் தூக்கமா வருது... அதான் பேச்சுத் துணைக்கு உன்னை..."

அவள் சொல்லி முடிக்கும் முன், அருகில் இருந்த தலையணையை எடுத்து அவளை அடி மொத்தினாள் ஜெயா.

"உனக்கு வேணும்னா அவன் பர்த்டே முக்கியமா இருக்கலாம்... ஆனா எனக்கு இல்லை... அவனை நீ காதலிச்சதே தப்பு... இதுல பிறந்த நாள் வேறயா... உன் மச்சான் பிறந்த நாளை நீயே கொண்டாடு..." என்றவள், தலையணை, போர்வையை எடுத்துக் கொண்டு ஹாலில் சென்று படுத்தாள்.

இந்த வருடம் இன்டர்ன்ஷிப் என்பதால், இருவரும் தாங்கள் வேலை பார்க்கும் மருத்துவமனை அருகிலேயே வாடகைக்கு வீடு எடுத்துத் தங்கி இருந்தனர்.

ஜெயஸ்ரீ, உமாவை விட்டுப் பிரிய மனம் இல்லாமல், அவளின் சொந்த ஊரான சேலத்தை விட்டு விட்டு மதுரையில் தங்கி இருக்கிறாள்.

உமாவிற்கு உறக்கம் வரவில்லை. கையிலிருந்த அலைபேசியையே பார்த்துக் கொண்டிருந்தாள். எல்லோரும் பிறந்த நாள் என்றால், பன்னிரண்டு மணிக்குத் தான் வாழ்த்துச் சொல்வார்கள். ஆனால், உமா சற்று வித்தியாசமாக உதய் பிறந்த நேரத்தில் வாழ்த்துச் சொல்ல விரும்பினாள்.

சரியாக மணி இரண்டரை ஆனதும் உதய்யின் அலைபேசிக்கு அழைத்தாள். வெகுநேரம் அழைத்தும் அவன் எடுக்காததால் அழைப்பைத் துண்டித்தவள்,

"தூங்குமூஞ்சி மச்சான்..." என்று அவனைத் திட்டியபடி மீண்டும் அவனை அழைக்க, அந்தோ பரிதாபம்... அப்போதும் அவன் எடுக்கவில்லை.

சுமார் பத்து முறை முயன்று பதினோறாவது தடவை எடுத்தவன், தூக்கம் கலையாத குரலில், "ஹ... லோ..."

"மச்சான்... ஹேப்பி பர்த்டே டூ யூ..." வாழ்த்தியவளின் குரலில், அவன் அடித்துப் பிடித்துக் கொண்டு எழுந்து அமர்ந்தான்.

"ஏய் உம்மா... நீ எப்படி இந்த நேரத்துல..." ஆச்சரியக் குரலில் கூவியவன்,

"தேங்க்ஸ்டி..." என்றான் மனமார...

"எத்தனை தடவை கால் பண்ணினேன் தெரியுமா? தூங்குமூஞ்சி, எடுக்கவே இல்லை..." உமா அவனைக் குறைப்பட்டுக் கொள்ள...

"ஏன்டி இந்த நேரத்துல பேய்தான் கால் பண்ணும்... நீ கால் பண்ணுவேன்னு எனக்குத் தெரியாமப் போச்சே..." அவன் கிண்டலடித்தான்.

"உதய்..." திடீரென்று அவள் குரல் குழைந்து வர...

"உதய்க்கு என்னடி வச்சிருக்க..." அவனின் குரலும் குழைந்தது.

"ம்... நிறைய வச்சிருக்கேன்... ஆனா அது சர்ப்ரைஸ்..." என்றவள்,

"நாளைக்கு நீங்க ப்ரீயா...?"

"நீ கேட்டு நான் மாட்டேன்னு சொல்லுவேனா... ஃப்ரீ பண்ணிக்கிட்டாப் போச்சு..." அதைக் கேட்டு அவள் மனம் நெகிழ்ந்தது.

"தேங்க்ஸ் உதய்... அப்போ நாளைக்கு மீட் பண்ணலாமா...? எத்தனை மணிக்கு வருவீங்க...?"

"நீயே சொல்லு... நான் வாரேன்..."

"நாளைக்குக் காலையில நாம அழகர் கோயிலுக்குப் போவோம்... ஈவினிங் வரை அங்கேயே இருப்போம்..." என்றவளை இடைமறித்தவன்,

"என்னாது... அழகர் கோயிலா... குரங்கு கூட்டத்தைப் பாக்க நான் வரலை... இங்கேயே ஏதாவது கோயிலுக்குப் போகலாம்... அப்படியே சினிமா... அதுக்கப்புறம் எங்கேயாவது லஞ்ச் முடிச்சிட்டு வரலாம்..." என்றவனின் பதிலில் அவள் அமைதி காத்தாள்.

"உமா பதில் சொல்லுடி..."

"எனக்கு நாளைக்கு நாள் பூராவும் உங்க கூடவே இருக்கணும் போலிருக்கு... அதுவும் தனிமையில..."

அவளின் பதிலில் அவன் வாயடைத்துப் போனான். ஏனோ அவன் மனம் மகிழ்ச்சியில் இறகைப் போல் லேசானது.

"என்னை அந்தளவுக்குப் பிடிக்குமா உமா...?" நெகிழ்ச்சியுடன் வந்தது அவனது குரல்.

"ம்... கல்யாணத்துக்கு அப்புறம் இதே கேள்வியை கேட்டுப் பாருங்க மிஸ்டர்... உதயகுமார்... அப்போ சொல்றேன்... எந்தளவுக்கு உங்களை எனக்குப் பிடிக்கும்னு..." மயக்கும் குரலில் கூறியவளின் மயக்கம் அவனையும் தொற்றிக் கொண்டது.

"ம்... அப்படியா... அதுக்கு அச்சாரமா மச்சானுக்கு ஒரு முத்தம் கொடேன்... உம்மா..."

"ம்ஹூம்... நான் மாட்டேன்பா..." என்றவள், அவன் கெஞ்சக் கெஞ்ச அலைபேசியை அணைத்து விட்டாள்.

இருவரின் மனமும் மகிழ்ச்சியில் நிறைந்திருக்க இருவருக்கும் தூக்கம் தூரப் போனது.

காலையில் எழுந்த உதய் கிளம்பிக் கொண்டு அறையை விட்டு வெளியில் வர, அண்ணன் மற்றும் அஜித்தின் வாழ்த்தோடு அவனது பிறந்த நாள் களைகட்ட ஆரம்பித்தது. அவனது அன்னை மாரீஸ்வரி சர்க்கரைப் பொங்கல் செய்து அவனுக்கு ஊட்ட, தந்தையோ

காலையிலேயே குல தெய்வத்தைப் போய் வழிபட்டு வந்து திருநீறைப் பூசி விட்டார். அண்ணி அவனுக்குப் பிடிச்ச உணவு வகைகளைச் செய்து வைத்து இருந்தாள்.

பாசமான குடும்பம், அன்பான காதலி என்று எல்லாவற்றிலும் தான் கொடுத்து வைத்தவன் என்று எண்ணியவனின் மனம், சற்றுக் கர்வம் கொண்டது. அந்நேரம் வாசலில் அழைப்பு மணி ஒலிக்க, முத்துராம் சென்று பார்த்தான்.

"குமாரு உனக்குத்தான்..." அவனின் குரலில் உதய் அங்கு செல்ல...

பெரிய பூங்கொத்துடன் ஒருவன் நின்று இருந்தான்... "மிஸ்டர் உதயகுமார்..." அவன் இழுக்க...

பூங்கொத்தையும் அத்துடன் ஒரு பெரிய பெட்டியை யும் உதய்யிடம் அளித்தவன், அவனிடம் கையெழுத்து வாங்கிக் கொண்டு சென்றான்.

இரத்த நிறத்தில் இருந்த ரோஜாக்களைக் கண்ட உதய்க்குப் பார்க்காமலே அது யார் அனுப்பி இருக்கக் கூடும் என்று அனுமானிக்க முடிந்தது. பூக்களை மென்மை யாகத் தடவிக் கொடுத்தவன் முகத்தில் புன்னகை மலர்ந்தது.

கொழுந்தனின் முகத்தில் இருந்த இளநகையையும், கையில் இருந்த பூக்களையும் கண்ட நித்யா,

"என்ன கொழுந்தனாரே... செவப்பு ரோசா... சாக்லெட்டுப் பெட்டி... யாரு அனுப்பிச்சது...?" என்றாள் சந்தேகமாக.

"அது... வந்து..." என்று என்ன சொல்லித் தப்பிப்பது என்று யோசித்தவன்,

"என் கட்சிக்காரரு ஒருத்தர் வழக்குல ஜெயிச்சதுக்குக் கொடுத்து இருக்காரு..."

"அப்படியா...?" அவனை நம்பாத பார்வை பார்த்தவள்,

"அதுக்கு எதுக்கு உங்க பொறந்த நாளுக்கு செவப்பு ரோசா கொடுக்கணும்... தம்பி, நான் படிச்சது தமிழ் இலக்கியம்னாலும் எனக்கும் வெள்ளைக்காரன் கலாசாரம் கொஞ்சம் தெரியும்... காதலுக்குத்தான் செவப்பு ரோசா கொடுப்பாக... வழக்கு ஜெயிச்சதுக்குமா கொடுப்பாக..."

"கொடுப்பாகளா இருக்கும்... யாருக்குத் தெரியும்...?" என்று தோளை அலட்சியமாகக் குலுக்கியபடி நைசாக அங்கிருந்து நழுவியவன், அதைக் கொண்டு அறையில் பத்திரமாக வைத்து விட்டு, வெளியில் கிளம்பினான். எல்லோரும் அவனின் நடவடிக்கையை வித்தியாசமாகப் பார்த்தாலும், யாரும் அவனை நிறுத்தி வைத்துக் கேள்வி ஒன்றும் கேட்கவில்லை...

பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டு இருந்த உமாவைக் கண்டதும் உதய்யின் கண்கள் வியப்பில் விரிந்தது. எப்போதும் ஜீன்சும் குர்தியும் அணியும் பெண், இன்று சேலை கட்டி முழுமையான பருவ மங்கையாய் நின்று கொண்டு இருந்தால், அவன் ஆச்சரியப்படாமல் இருக்க முடியுமா...!

கேரளப் பாணி சேலை அவளின் உடல் நிறத்தோடு ஒத்திருந்து, அவளின் அழகை இன்னமும் பல மடங்கு அதிகரித்துக் காட்டியது. காதுகளில் தங்க ஜிமிக்கி, நெற்றியில் ஒற்றை வெள்ளைக்கல் பொட்டு, நீண்ட தலை முடியைத் தளரப் பின்னி, அதில் மதுரை மல்லி சூடி, அவனின் மனதுக்கு விருப்பமான பெண் போல் நின்றிருந்தவளைக் காணக்காண அவனுக்குத் தெவிட்ட வில்லை.

அவனைக் கண்டதும் அவள் புன்சிரிப்புடன் வண்டியில் ஏறியமர்ந்ததும் வண்டியைக் கிளப்பியவன், எப்போதும் போல் பின்னால் நகர்ந்து அவளுடன் ஒட்டி அமர்ந்து, முன்னால் இருந்த கண்ணாடியில் அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டு கண்களில் மயக்கத்தோடு,

"மயக்குறடி..." அவனின் மயக்கும் விழிகளைக் கண்ட அவளது விழிகள் நாணத்தில் நிலம் பார்க்க, அவளின் வெட்கத்தில் கர்வம் கொண்டவன், தனது வண்டியின் வேகத்தை அதிகப்படுத்தினான்.

அழகர் கோயில் சென்று சாமி தரிசனம் செய்து விட்டு, அங்கிருந்த தனிமையான பகுதியில் சென்று இருவரும் அமர்ந்தார்கள்.

"ரொம்ப அழகாயிருக்குல்ல..." சுற்றும் முற்றும் பார்த்த உமா, அந்த இயற்கை அழகில் மனதைப் பறி கொடுத்தவளாய்க் கூற...

"ம்... ரொம்ப அழகாயிருக்கு..." என்றான் உதய், தன்னவளின் இயற்கை அழகை ரசித்தபடி.

அவனின் பதிலில் சிரித்தபடி திரும்பியவள், அவனின் பார்வையில் யோசனையாய்ப் புருவத்தைச் சுருக்கியவள், "என்ன...?"

"எப்படிடி இவ்வளவு அழகாப் பொறந்து தொலைச்ச..." என்று அவள் அருகில் நெருங்கி அமர்ந்தவன்,

"மச்சானும் மனசைத் தொலைச்சிட்டேன்டி..."

அவனின் நெருக்கம் அவளை ஏதோ செய்ய, அவனை விட்டுத் தள்ளியமர்ந்தவள், பேச்சை மாற்ற எண்ணியவளாய்த் தன் கைப்பையில் இருந்து ஒரு பெட்டியை எடுத்து,

"பர்த்டே பேபிக்கு இந்த உமாவோட சின்ன கிப்ட்..." என்றவள், அதில் இருந்த மோதிரத்தை எடுத்து அவனது விரலில் போட்டு விட... அதில் இருந்த ஒற்றைக்கல்லின் பளபளப்புச் சொல்லாமல் சொல்லியது, 'நான் உயர்ஜாதி வைரம்' என்று.

அதைக் கண்டதும் அவ்வளவு நேரம் உதய்யின் மனதில் இருந்த இளக்கம் மறைந்து கடினம் வந்தது.

"உமா... எனக்கு இந்த மோதிரம் வேணாம்..." அவனது குரலில் உமா திடுக்கிட்டுப் போனாள்.

"ஏன் உதய்... டிசைன் பிடிக்கலையா...?"

"உங்கப்பாரு பணத்துல வாங்கின எதுவும் எனக்கு வேணாம்..." என்றான் குரல் இறுக.

"ஓ... அவ்வளவுதானா...?" நிம்மதிப் பெருமூச்சு விட்டவள்,

"இது எங்க அப்பா பணத்துல வாங்கல... என்னோட பணத்தில்தான் வாங்கினேன்..." என்றவளைச் சந்தேக மாய்ப் பார்த்தான் உதய்.

"நிஜமா உதய்..."

"படிக்கிற புள்ள உங்கிட்ட ஏது இவ்வளவு பணம்...? அதுவும் வைரம் வாங்குற அளவுக்கு...!"

இதைச் சொன்ன தன்னை, உமா பார்த்த பார்வையில் என்ன இருந்தது என்று தெரியவில்லை உதய்க்கு. பிறகு எங்கோ தொலைவில் வெறித்துப் பார்த்தவள்,

"எல்லாம் வாங்குற அளவுக்குப் பணம் இருந்து என்ன பிரயோஜனம் உதய்... அன்பை, நிம்மதியை விலைக்கு வாங்க முடியலையே... அந்த விதத்தில் நான் பரம ஏழைதான் உதய்." அவளின் குரலில் இருந்த சோகம் அவனையும் தாக்கியது.

"மன்னிச்சிக்கோ உமா... நான் தெரியாமல் கேட்டுட் டேன்..."

"நீங்க கேட்டதில் எந்தத் தப்பும் இல்லை..."

"கேக்குறேன்னு தப்பா நினைச்சுக்காதே... வசதி இருக்குன்னு சொல்ற... அப்புறமும் எதுக்கு உங்கப்பாவை அண்டிட்டு இருக்க... வீட்டை விட்டுத் தனியா வர வேண்டியதுதானே..." என்றவனைப் பார்த்த வளின் விழிகளில் எல்லையில்லாத் துயரம் வழிந்தது.

"அம்மா..." ஒற்றை வார்த்தையில் பதில் சொன்னவ ளிடம், அவன் வேறு எதுவும் கேட்கவில்லை. அவளே தன்னுடைய துன்பத்தைக் கூறாத போது, மேலும் மேலும் அதைக் கேட்டு அவளைத் துன்புறுத்த அவனுக்கு மனம் வரவில்லை.

தனக்காக எல்லையில்லாக் காதலைப் பரிசளித்த காதலியின் தூய்மையான மனதிற்குத் தான் ஏதாவது கொடுக்க வேண்டும் என்று நினைத்தான். தன்னிடம் கொடுக்க என்ன இருக்கிறது என்று யோசித்தவன், கண்கள் தன் கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலியைக் கண்டதும் மின்னியது.

அவன் தனது வருமானத்தைச் சேர்த்து வைத்து வாங்கிய சங்கிலி அது. சட்டென்று எதையும் யோசிக்காமல் அதைக் கழட்டியவன், அதே வேகத்தில் அவள் கழுத்தில் அணிவித்தான்.

ஏதோ யோசனையில் தொலைவில் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தவள், அவனது செயலில் திடுக்கிட்டுப் போய் அவனைப் பார்த்தாள்.

"உதய்... இதெல்லாம் எதுக்கு...?" அவன் அணி வித்த சங்கிலியைக் கையில் பிடித்தபடி அறியாமையுடன் கேட்டவளைக் கண்டு அவனது உள்ளம் உருகியது.

"எங்கிட்ட என்ன இருக்குன்னு இப்படி உசிரக் கொடுத்துக் காதலிக்குற உமா... உன் காதலுக்கு முன்னாடி என் காதல் எல்லாம் தூசுடி... என் பொறந்த நாளை ஒருநாளும் இப்படிக் கொண்டாடியது இல்லை.

காலையில் இருந்து இன்ப அதிர்ச்சியா கொடுத்து என்னை அசத்துறடி...

"எனக்காகச் செய்ற உனக்கு நான் இது கூடச் செய்யக் கூடாதா...?" மனதில் எழுந்த காதலைக் கட்டுப்படுத்த முடியாமல், அவள் முகத்தைத் தன் புறம் திருப்பியவன், அவள் எதிர்பாரா நேரத்தில் மின்னல் வேகத்தில் அவளின் கன்னத்தில் அழுத்தமாய்த் தன் இதழைப் பதித்து நிமிர்ந்தான்.

அவனது செயலில் உமா அப்படியே இறுகிப் போய் அமர்ந்திருந்தாள். தலைகுனிந்து அமர்ந்திருந்த அவளின் தோற்றத்தில் இருந்து அவள் என்ன நினைக்கிறாள் என்று அவனுக்கும் தெரியவில்லை. தவறு செய்து விட்டோமோ என்று கலங்கிய உதய், சிறிது நேரம் அமைதியாய் இருந்தான். அப்போதும் உமா அசையவில்லை.

அவளது மௌனம் அவனது இதயத்தைக் காயப்படுத்த, குற்றவுணர்வில் தவித்தவன், அவளது நாடியில் கை வைத்து அவளது முகத்தை நிமிர்த்தியவன், திடுக்கிட்டுப் போனான்.

கலங்கிய கண்களுடன் அவனை ஏறிட்டுப் பார்த்தவளின் விழிகள் பேசிய மொழி புரியாவிட்டாலும், அவளின் நீர் கோத்த கண்கள் அவன் மனதைப் பிசைய,

"சாரி உமா... ஏதோ வேகத்துல... தெரியாம, சாரி..." அவனுக்குமே என்ன சொல்வது என்று தெரியவில்லை.

"நீங்க தொட்டா நான் அப்படியே மெல்ட்டாகிருவேன் உதய்... ஐ கான்ட் கண்ட்ரோல் மை செல்ப்..." என்றவளின்

வார்த்தைகள், அவனின் மூளையைச் சென்று அடைய வெகு தாமதம் ஆனது.

"என்ன சொன்ன...?" பரபரப்பாய்க் கேட்டவன் முகத்தில் அத்தனைப் பரவசம்.

"எஸ் உதய்... நான் அன்புக்கு ரொம்ப ஏங்கிட்டு இருக்கேன் உதய்... உங்களோட ஒரு பார்வையையே தாங்க முடியாத நான்... நீங்க என்னைத் தொட்டா நான் உடைஞ்சிருவேன்... என் உடம்புல உள்ள ஒவ்வொரு செல்லும் நீங்க வேணும்... உங்க அணைப்பு வேணும்... உங்களுக்குள்ள நான் மூழ்கிப் போயிரணும்னு துடியாய்த் துடிக்குது...

"அதுக்குத் தான் நான் உங்களை என்னைத் தொட விடுறது இல்லை. இப்போ இந்த நொடி எல்லாக் கட்டுப்பாட்டையும் மீறி, உங்க கையில சரணாகதி அடைய நான் தவிக்கிறது எனக்கு மட்டும்தான் தெரியும். அந்தளவுக்கு நான் உங்க மேல பைத்தியமா இருக்கேன் உதய்..." என்றவளின் பேச்சு, அவனைப் பேச்சிழக்க வைத்தது.

அவனின் மௌனத்தைத் தவறாக எண்ணியவள், "உதய்... அதுக்காக நான் தவறான பொண்ணு இல்ல... உங்ககிட்ட மட்டும்தான் நான் இப்படி..." மேலே பேசப் போனவளின் வாயைத் தன் கையால் மூடித் தடுத்தவன்,

"போதும் உமா... போதும்... என்னைக் கௌரவப் படுத்திட்டடி..." என்றவனின் விழிகள் போல் மனமும் கசிந்தது.

இதைவிட உமா தன்னை, தன் காதலை கௌரவப்படுத்த முடியுமா என்று அவனுக்குத் தெரிய வில்லை. அவளின் ஒவ்வொரு வார்த்தையும் அவனது ஆண் என்கிற உணர்வை அதிகப்படுத்தியது. அவளது வார்த்தையில் அவனது மனம் கர்வமும், பெருமிதமும் ஒருங்கே அடைந்தது. தனது பார்வைக்கும், தொடுகைக் கும் உருகும் அவளது காதல், அவனுக்குப் புத்துயிரைத் தந்தது.

"மனசும் உடம்பும் முறுக்கேறிய மாதிரி... சும்மா ஜிவ்வுன்னு இருக்கு உமா..."

தனது உணர்வுகளை வார்த்தையில் கவிதையாய் வடிக்கத் தெரியாதவனாய்ப் பேசியவனின் வார்த்தைகள், அவளது மனதில் பல கவிதைகளைப் படைத்தது.

"உமா... அப்படி என்னடி இருக்கு எங்கிட்ட...?" மீண்டும் கேட்டான் அவன்.

"என்ன இல்ல..." இரண்டு புருவத்தை உயர்த்திக் கேட்டவள்,

"உங்ககிட்ட எனக்குப் பிடிச்சதே உங்க தைரியம் தான்..." அவளின் வார்த்தையில் அவன் முகம் வாட,

"அப்போ என்னைப் பிடிக்கலையா...?"

அதில் திடுக்கிட்டவள்,

"பிடிக்காம தான் உருகிட்டு இருக்கேனா மச்சான்... கறுப்பா இருந்தாலும் கலையா இருக்கிற என் மச்சானை

எனக்கு ரொம்ப ரொம்பப் பிடிக்கும்..." என்றவளின் காதல் அவனைச் சுகமாய் வருடியது.

"ஐ லவ் யூ டி..." காதலோடு சொன்னவனைக் கண்ணிமைக்காமல் பார்த்தாள் அவள்.

காதலித்த இத்தனை நாளில் தன் காதலைச் சொல்லாதவன், இன்று வார்த்தையால் தன் காதலைச் சொல்கிறான் என்றால், அவனின் மனதில் தான் எந்தள வுக்கு அழுத்தமாய்ப் பதிந்து இருக்கிறோம் என்று அவளுக் குப் புரிய, மன நெகிழ்ச்சியுடன்,

"மீ டூ உதய்..." என்றவள், அவனின் கரத்தை எடுத்துப் பத்திரமாய்ப் புதைத்து வைத்துக் கொண்டாள் தனது கரங்களில்... யாருக்கும் அடங்காத அலங்கா நல்லூர் ஜல்லிக்கட்டு காளையாய்த் திரிந்தவன், அந்தச் சின்னஞ்சிறு கிளியிடம் விருப்பப்பட்டுச் சிறைப்பட்டான்.

"உமா... நீ ஊருக்குப் போய்த்தான் ஆகணுமா...? வேணாம் உமா..." என்று கெஞ்சிய உதய்யைப் பார்க்க உமாவிற்குப் பாவமாய் இருந்தது.

"லீவு விட்டா ஊருக்குப் போய்த்தான் ஆகணும் உதய்... நான் வேற எங்கே போக...?"

"போனா உன் அப்பங்காரன் உன்னை அடிக் கவா...? பேசாம இங்கேயே இரு.., இல்ல என் வீட்டுக்கு வா..."

"உங்க வீட்டுக்கா... வர்றேன்... வருவேன்... உங்க மனைவியா... கௌரவமாக உங்களைக் கல்யாணம் பண்ணிட்டு வருவேன்..."

அவள் சொல்வதும் சரிதான். திடுமென ஒரு இளம்பெண்ணை அழைத்துச் சென்றால், என்ன ஏது என்று கேள்வி வரும். அந்தளவுக்கு நமது சமுதாயம் முற்போக்காய்ச் சிந்திப்பது இல்லை... வேறு வழியின்றி அவளை ஊருக்குச் செல்லச் சம்மதித்தவன்...

"உன் அப்பாரு கிட்டச் சொல்லி வை... இனிமேற் கொண்டு என் உமாவை அடிச்சா அடிக்கிற அவரோட கையை வெட்டிப் போட்டுருவேன்னு..." என்றவனைப் பார்த்தவள் பார்வையில், பெருமிதம் நிரம்பி வழிந்தது.

விழுப்புரம்.

அதுதான் உமாவின் சொந்த ஊர். அவளது அன்னை தனலெக்ஷ்மியின் சொந்த ஊர். வீட்டிற்குச் செல்லும் வழியெல்லாம் இரும்புக் குண்டைப் போல் கனத்தது உமாவின் இதயம். ஏன்டா அந்த வீட்டிற்குச் செல்கிறோம் என்று வெறுப்பாய் இருந்தது அவளுக்கு.

எந்தளவுக்கு அவளுக்கு வெறுப்பு இருந்ததோ அந்தளவுக்கு விருப்பும் இருந்தது. வெறுப்புக்குக் காரணம் அவளது தந்தை சங்கரன்... விருப்புக்குக் காரணம் அவளது அன்னை தனலெக்ஷ்மி.

"அம்மா..." என்றழைத்தபடி அந்த மாளிகை போன்ற வீட்டினுள் பிரவேசித்தாள் உமா.

"உமா... வந்துட்டியா செல்லம்..." அன்பாய் அணைத்துக் கொண்ட அன்னையைப் பார்த்தவள் கண்கள் கசிந்தன.

மெல்லிய தேகமும் சதா சர்வகாலமும் கண்களில் குடிகொண்ட சோகமுமாய்... அவரைப் பார்க்கும் போது கேட்பாரற்றுக் கிடக்கும் பழைய ஓவியம் போல் இருந்தது.

"எங்கே உங்க புருசன்...? ஆளைக் காணோம்... வீடு ரொம்ப அமைதியா இருக்கு...?"

"உமா... அவர் உனக்கு அப்பா..." கண்டிப்புடன் ஒலித்தது அவரது குரல்.

"அப்பா..." விரக்தியாய் வந்தது அவளது வார்த்தைகள்.

"அப்பான்னா அர்த்தம் தெரியுமா, அந்த ஆளுக்கு...? ஒரு கொலைகாரனை எல்லாம் என் அப்பாவா என்னால ஏத்துக்கிட முடியாதும்மா..."

"அப்படி எல்லாம் சொல்லாதே உமா... அவர் கொலைகாரர் இல்லை..." என்ற அன்னையைப் புரியாமல் பார்த்தவள்,

"இன்னுமாம்மா உங்க புருசனை நீங்க நம்புறீங்க...?"

"அவரை நம்பாம வேற யாரை நான் நம்புவேன் உமா... என்னதான் இருந்தாலும் அவர் என் கணவர் இல்லையா...?"

"பெத்தப் புள்ளைய விட உங்களுக்கு உங்க புருசன் பெரிசாப் போயிட்டாருல்ல... என்னைக்காவது ஒரு நாள் உண்மை வெளிவரும்... அப்போ நான் சொல்றதை நீங்க நம்புவீங்க..."

"நீ தப்பா புரிஞ்சிக்கிட்டு இருக்கடா உமா. அவர் நல்லவர் தான். நீ தான் தேவையில்லாம அவரை எதிர்த்துப் பேசி அடி வாங்குற... நீ அமைதியா இருந்தாலே எல்லாம் சரியாப் போகும்..."

ஆண்டாண்டு காலமாய் ஆண்களுக்கு அடிமை யாய் வாழ்ந்த பெண்ணின் மனப்பான்மையை அப்படியே பிரதிபலித்த அன்னையைக் கண்டு அவளுக்கு வேதனை யாய் இருந்தது.

தந்தையைப் பற்றி நன்கு தெரிந்து இருந்தும், அவரை விட்டுக் கொடுக்காமல் வாழ்வது அவரின் கௌரவத்தைக் காப்பாற்றுவதற்கா... இல்லை அன்னை தன் கௌரவத்தைக் காப்பாற்றுவதற்கா...? கணவன் இல்லாமல் பெண்ணால் தனித்து வாழ முடியாது என்பதற்காக அத்தனையையும் சகித்துக் கொண்டு வாழ்வது எதற்காக...?

உமாவின் மனதில் கேள்விகள் எழுந்தன. ஆனால், அதற்கு ஒன்றுக்குக் கூட அவளது அன்னையால் விடையளிக்க முடியாது.

அன்று இரவு வீட்டிற்கு வந்த தந்தையிடம் தொழிலுக்கான வரவு செலவு கணக்குகளை அவள் கேட்க, எப்போதும் போல் அங்கே பனிப்போர் மூண்டது.

"என்னைக் கணக்கு கேட்க நீ யாருடி...?" கோபத்தில் கத்தினார் சங்கரன்.

"இதெல்லாம் என் சொத்து... உங்கப்பா சம்பாதிச்சு வைச்சது இல்லை... என் அம்மாவோட அப்பா சம்பாதிச்சு

வச்சிட்டுப் போனது... என்னோட தாத்தா எனக்கும், என் புருசனுக்கும் எழுதி வச்சிட்டுப் போன சொத்து..."

அழுத்தமாய்ச் சொன்னவளை முறைத்துப் பார்த்த வர், தனது மனைவியைக் கொலைவெறியுடன் பார்த்தார்.

"இதுக்கு எல்லாம் யார் காரணம்டி... எல்லாம் அந்தக் கிழவன், உன் அப்பன்தான் காரணம்... அவனை..." பல்லைக் கடித்தவர், மனைவியை அடிக்கப் பாய்ந்தார்.

இடையில் புகுந்து அதை வாங்கிக் கொண்ட உமா, "என் அம்மாவை அடிச்சீங்கன்னா நான் பொல்லாதவளா ஆகிடுவேன்..." கோபமாய்க் கத்த...

"இப்போ மட்டும் நீ நல்லவளாடி..." என்றவர், தன் பெல்ட்டை எடுத்து மனைவியை அடிக்க வர, அந்த அடியை எல்லாம் உமா தன் மேல் தாங்கிக் கொண்டாள்.

"உமா, நீ விலகு... எனக்காக நீ அடி வாங்காதே..." அன்னை அலறிய போதும் அவள் அசையாமல் நின்றாள்.

"என்னையா கேள்வி கேக்குற... உனக்கு வைக்கி றேன்டி பெரிய ஆப்பு..." என்று கோபமாய்க் கர்ஜித்தவரை ஏளனமாய்ப் பார்த்தவள்,

"உங்களால ஒண்ணும் பண்ண முடியாது... நீங்க ஒண்ணும் கிழிக்க முடியாது..." என்றவளை அலட்சிய மாய்ப் பார்த்த சங்கரன்,

"என்னால என்ன பண்ண முடியும்... என்ன கிழிக்க முடியும்ங்கிறதைச் செஞ்சு காட்டிட்டு அப்புறம் உன்னிட்ட

நான் பேசிக்கிறேன்... முதல்ல உனக்கு மாப்பிள்ளை பார்க்கிறேன்... அதுக்கு அப்புறம் நான் பேசிக்கிறேன்..."

"நீங்க மாப்பிள்ளை பார்த்தா நான் கழுத்தை நீட்டிருவேனா... அதுக்கு வேற ஆளைப் பாருங்க..." என்றவளை ஆத்திரம் தீரும் மட்டும் அடித்தவர்,

"உன்னை எப்படிக் கல்யாணத்துக்குச் சம்மதிக்க வைக்கணும்னு எனக்குத் தெரியும்... நான் பார்க்கிற மாப்பிள்ளைக்குக் கழுத்தை நீட்ட நீ ரெடியா இரு..."

ஆத்திரமாய்க் கத்தியவர், அங்கிருந்து வெளியேற... தனலெக்ஷ்மி ஓடி வந்து மகளை அணைத்துக் கொண்டார்.

"ஏன்டி பாவி மகளே... எனக்காக ஏன் இப்படி நீ அடி வாங்கிச் சாவுற...? இதைப் பார்க்கிறதுக்கு நான் அடி வாங்கிச் செத்துப் போகலாம் போல் இருக்கு..."

அவர் கண்ணீர் வடிக்க... அவரது அழுத விழி களைத் தாயின் பரிவுடன் துடைத்து விட்டவள்,

"அடி வாங்குறதுக்கு உங்க உடம்புல எங்கேம்மா தெம்பு இருக்கு...? அவர் எத்தனை அடி அடிச்சாலும் தாங்குறதுக்கு என் உடம்புல வலு இருக்கும்மா... உங்களுக்காக நான் இந்த அடியை வாங்கிக்க மாட்டேனா...?" என்றவளைக் கட்டிப்பிடித்துக் கொண்டு அழத்தான் முடிந்தது அந்தப் பேதைத் தாயால்.

உமாவின் மனதில் தந்தை கூறிச் சென்ற வார்த்தைகளே ஒலித்துக் கொண்டு இருந்தது. 'அப்படி என்ன செய்து என் கல்யாணத்தை நடத்தி முடிப்பார்...?' என்ற யோசனை அவளுள் ஓடியது.

சங்கரன், தான் நினைத்தது நடக்க எதையும் செய்வார் என்பது அவளுக்கு நன்கு தெரியும். அதனால் தான் உதய்யைப் பற்றிய விவரங்கள் ஒன்று கூட அவள் வீட்டில் மூச்சு விட்டது இல்லை.

இவ்வளவு ஏன்... உயிராய் நினைக்கும் தாயிடம் கூட உதய்யைப் பற்றி ஒரு வார்த்தை சொல்லவில்லை. ஏனெனில் கணவனுக்குப் பயந்து தனலெக்ஷ்மி எல்லா விஷயங்களையும் உளறி விடுவார் என்பதுதான் காரணம்.

அன்று கூட உதய்யிடம் பேசிக்கொண்டு இருந்த போது சங்கரன் திடீரென்று வந்து விட, எங்கே தன் காதல் விவகாரம் அவருக்குத் தெரிந்து விடுமோ என்று பயந்து போய் அழைப்பைத் துண்டித்து விட்டாள்.

எக்காரணம் கொண்டும் தன் காதல் அவருக்குத் தெரியக் கூடாது என்று நினைத்தாள். என்று உதய்யைத் திருமணம் செய்து கொள்கிறாளோ அன்று அவர் தெரிந்து கொண்டால் போதும் என எண்ணினாள்.

கண்டதையும் நினைத்துக் குழம்பிக் கொண்டிருந்த வள் மனதில் மதுரை வீரன் போலிருந்த உதய்யின் தோற்றம் எழுந்ததும் அவ்வளவு நேரம் இருந்த அவளது மனக்கிலேசம் நொடியில் மறைந்து விலகியது.

'அப்பா... உங்க வாய், சொல், வீரம் எல்லாம் என்கிட்ட மட்டும்தான்... நீங்க என்னக்குக் கல்யாணம் பண்றதைப் பார்த்து வாழ்த்திட்டுப் போக என் மச்சான் என்ன கோழையா...? அவர் மதுரை வீரன்... உங்க வீரத்தை என்னோட வீரன் கிட்ட காண்பிச்சுப் பாருங்க...

அப்புறம் தெரியும் சங்கதி... அவரோட ஒரு அடிக்குத் தாங்குவீங்களா நீங்க...'

கற்பனையில் அந்தக் காட்சியைக் கண்ட அவளது உதட்டில் மந்தகாசப் புன்னகை ஒன்று வந்தமர்ந்தது.

மப்பும் மந்தாரமும் இருந்த காலநிலை சங்கீதாவின் மன நிலையை லேசாக்க, அதை ரசித்தபடி நின்று இருந்தாள். மெல்லிய நாதமாய் கடல் அலைகளின் ஓசையும் தூவானமாய் தூவிக் கொண்டிருந்த மழையும் அவளுள் ஒருவிதச் சிலிர்ப்பை ஏற்படுத்தியது.

அவளும் ஹரியும் இன்று கிழக்குக் கடற்கரைச் சாலையில் புதிதாக கட்டிக் கொண்டிருக்கும் குடியிருப்புப் பகுதியை மேற்பார்வையிட வந்து இருந்தனர்.

வேலை செய்பவர்கள் எல்லாம் கிளம்பி விட, ஹரி கணக்குப் பார்க்கவென அங்கே அமர்ந்து விட்டான். மழை வருவது போல் இருந்ததால், அவளை அவன் தனியே அனுப்பவில்லை.

ஒரு அரைமணி நேரம் காத்திருக்குமாறு அவன் அவளிடம் வேண்டிக் கொள்ள, அவளும் சரி என்று ஒத்துக் கொண்டாள். முன்னே இருந்த முதலாளி ஹரி என்றால் அவளுக்குப் பயம் வந்து இருக்கும். ஆனால், இந்த ஹரி அவளின் உயிர்க் காதலன் அல்லவா... அதனால் அவள் மனதில் எந்தப் பயமும் இல்லை.

எதை எதையோ ரசித்துக் கொண்டிருந்தவள், திடீரென்று மின்சாரம் துண்டிக்கப்பட்டதில் பயந்து போய் ஹரி இருந்த அறைக்குள் சென்றாள். அதே நேரம்

அவனும் அலைபேசியை உயிர்ப்பித்து வெளிச்சம் உண்டாக்கியவன் அவளைத் தேடி வெளியில் வர எத்தனித்துக் கதவைத் திறக்க, அவளும் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தாள்.

எதிர்பாராதவிதமாய் இருவரும் மோதிக் கொள்ள, தடுமாறிக் கீழே விழப் போன சங்கீதாவைப் பிடிக்கப் போன அவனும் நிலை தடுமாறி அவள் மீதே விழுந்தான். அவன் கையில் பிடித்திருந்த அலைபேசி நழுவிப் போய்த் தள்ளி விழுந்தது.

அலைபேசியின் ஒளியில் தேவதையாய் தெரிந்த சங்கீதா, அவனின் இளமை உணர்வுகளைக் கொஞ்சம் கொஞ்சமாய்த் தட்டி எழுப்பிக் கொண்டிருந்தாள். வலக்கை ஆட்காட்டி விரலால் அவளின் முக வடிவை அளந்தவனின் தொடுகையில், அவளது தேகம் மெல்லியதாய் நடுங்கியது.

அவளது இந்த நடுக்கம், இதுவரை எந்தவொரு பெண்ணிடத்திலும் அவன் கண்டது இல்லை. அது அவனது தொடுகையினால் உண்டானது என்பது அவனுக்குப் புரிய... அது என்றும் இல்லாத அளவு அவனுள் கர்வத்தை விதைத்தது.

"ஹரி..." அவளின் குரல் பயத்துடன் ஒலித்தது. அவள், அவனிடம் இருந்து விலக முயற்சித்தாள்.

"கீத்து..." என்று தாபத்துடன் அவளை அழைத்தபடி அவளது கழுத்தில் முகம் புதைத்தவன், அவளை விலக அனுமதிக்கவில்லை.

"பயமாயிருக்கு..." கழுத்தில் பதிந்த அவனது உதடுகள், அதையும் தாண்டி கீழே பயணிக்க, அச்சத்தில் அவளது இதயம் படபடவென அடித்தது.

"இதுல என்ன பயம் கீத்து...? இது ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் நடக்கிற இயற்கையான விஷயம்..." என்றவன், அவளை மேலும் பேச விடாமல் அவளது இதழைத் தன் இதழ் கொண்டு மூடினான்.

ஹரி அவளை மானபங்கப்படுத்தினால், ஒருவேளை அவள் எதிர்த்து இருந்திருப்பாளோ என்னமோ... ஆனால், அவன் காதலால் உருகி அவளைத் தொட்ட ஒவ்வொரு தொடுகையும் அவளின் ஊனையும், உயிரையும் உருகச் செய்தது.

அவனின் தொடுகைக்கு அவளது இளமை அவளை விட வேகமாய்ப் பதிலளித்துக் கொண்டிருந்தது. அவளது அறிவு, நடப்பது தவறு என்று எச்சரித்த போதும், அவளது மனம் அவனின் செயலுக்கு நியாயம் கற்பிக்கத்தான் செய்தது.

ஹரி, சங்கீதாவை அடைய வேண்டும் என்று எதையும் திட்டமிட்டுச் செய்யவில்லை. அதேபோல் அதற்கான சந்தர்ப்பம் வலிய அமைந்த போது அதைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளவும் அவன் தவறவில்லை.

பெண்களின் உணர்வுகளைத் துல்லியமாக அறிந்து வைத்திருந்தவன், அவளின் இளமை உணர்வுகளைத் தட்டி எழுப்பி, அதில் சுகமாய்க் குளிர் காய்ந்தான்.

அலைபேசி தன் உயிர்ப்பை முற்றிலும் இழந்த போதும், அவன் அவளை விட்டுப் பிரியவில்லை. அள்ள அள்ளக் குறையாத அட்சய பாத்திரமாய் இளமை விருந்து படைத்தவளை விட்டு விலக, அவன் நொடி நேரம் கூட விரும்பவில்லை. முதன் முறையாய்க் காமம் இல்லாமல், காதலுடன் ஒரு பெண்ணின் உயிரில் கலந்தான் அவன்.

8

வெளியில் பெய்து கொண்டிருந்த மழை இன்னிசையாய் ஒலிக்க, அந்த மழை யினால் புறப்பட்ட மண் வாசனை சுகந்தத் தைப் பரப்ப... இருளும் மழையும் கூடலுக்குப் பக்கபலமாக இருக்க, ஹரி என்றும் இல்லாத மகிழ்வுடன் மன நிறைவுடன் சங்கீதாவுடன் ஈருடல் ஓருயிராய் இணைந்து கலந்தான்.

அவன் அவளை விட்டு விலகும் போது துண்டித் திருந்த மின்சாரம் வந்து விட, அறையிலிருந்த விளக்கு பளீரென்று தன் வெளிச்சத்தை உமிழ, சங்கீதாவின் கலைந்த தோற்றம் அவனின் கண்ணில் விழுந்தது.

அவ்வளவு நேரம் அவனின் நாடி நரம்பில் ஏறியிருந்த மகிழ்ச்சி முறுக்கு எல்லாம், அவளின் அந்த நிலையைக் கண்டதும் அப்படியே கீழே இறங்கியது. அவளின் இந்த நிலைக்கு அவன் அல்லவா காரணம்...

சட்டென்று நெற்றியில் அறைந்து கொண்டவன், வேகமாய் அருகில் இருந்த சேலையை எடுத்து அவள்

மீது போட்டு விட்டு எழுந்தவன், அங்கிருந்த நாற்காலியில் சென்று அமர்ந்தான்.

ஹரி விலகியதும் தன்னிலை அடைந்த சங்கீதா அவசரமாய்ப் புடவையை மார்போடு அள்ளிக்கொண்டு அங்கிருந்த சுவற்றில் சாய்ந்து முழங்காலிட்டு அமர்ந்தாள். எழுந்து புடவையைக் கட்டிக் கொள்ளக் கூட அவள் உடம்பில் தெம்பு இல்லை.

அவளின் ஜீவனை எல்லாம் அவன்தான் உறிஞ்சிக் கொண்டானே... இனி அவன் கூறும் ஒற்றை வார்த்தை யில்தான் அவளின் ஜீவன் அடங்கியுள்ளது. அவனைப் பார்க்கக்கூட அஞ்சியவளாய்த் தலை குனிந்து அமர்ந்து இருந்தாள் அவள். ஆனால், அவளின் கண்கள் மட்டும் கண்ணீரை விடாமல் உகுத்துக் கொண்டு இருந்தது.

கற்பைக் களவாடியது, தன் மனம் விரும்பிய காதலன்தான் என்றாலும், திருமணத்துக்கு முன் கற்பை இழந்தது இழந்ததுதானே... கெட்டுப் போனவள் கெட்டுப் போனவள்தானே... அவனோடு கூடும் போது நினைவுக்கு வராத அவளின் குடும்பம், இப்போது நினைவுக்கு வந்தது.

இந்த விஷயம் மட்டும் அவளது தாயாருக்குத் தெரிந்தது... அன்பே உருவான அந்தத் தாய், தன்னை விஷம் வைத்துக் கொல்லக்கூடத் தயங்க மாட்டார் என்பது அவளுக்கு நன்கு தெரியும்.

கற்பு விஷயத்தில் அவர் கவரிமான் பரம்பரையைச் சேர்ந்தவர் அல்லவா... தான் மட்டும் எப்படிப் புத்தி கெட்டுப் போய் நடந்து கொண்டோம்...? என்று தனக்குத் தானே நொந்தாள்.

தலையைக் குனிந்து அமர்ந்தவள் நிலை ஹரியின் மனதை வருத்த, நாற்காலியில் இருந்து எழுந்தவன், அவள் அருகில் வந்து கீழே அமர்ந்தான். பிறந்ததில் இருந்து தரையில் அமர்ந்து பழக்கம் இல்லாதவன் அவன். அவளுக்காக அன்று கட்டி முடிக்காத மாடிப் படியின் தூசியில் அமர்ந்தான்.

இதோ இன்றும் அவளுக்காக, பழக்கமில்லாத தரையில் அமர்ந்தான். அவன் அருகில் அமர்ந்ததைக் கண்டும் நிமிர்ந்து பார்க்காமல் தனக்குள் கரைந்து கொண்டிருந்தவளைக் கண்டு, அவனுக்கு ஒரு மாதிரியாய் இருந்தது.

"கீத்து..." அவளின் தலையை மெல்ல வருடினான். அவனது அழைப்பில் நிமிர்ந்தவள், கண்களில் கண்ணீர் குளம் கட்டி நின்றது. அதைக் கண்டவன் தாங்க மாட்டா மல், அவளின் இமை இரண்டின் மீதும் மென்மையாய் முத்தமிட்டான்.

"இப்போ நீ அழற அளவுக்கு இங்கே என்ன நடந்து போச்சு...? நமக்குள்ள இருந்த தேடல், தேவையை நாம நிறைவேத்திக்கிட்டோம்... இதுக்குப் போய் அழறது சுத்த வேஸ்ட் பேபி..." அவனது பேச்சோ இல்லை அதன் அர்த்தமோ அவளது காதைச் சென்று அடைய வில்லை.

"ஹரி... நாம எப்போ கல்யாணம் பண்ணிக்கப் போறோம்...?" ஆர்வத்துடன் கேட்டவளின் பார்வையை அவனது குழப்பப் பார்வை சந்தித்தது.

"கல்யாணமா...?" ஒற்றை விரலால் நெற்றியைத் தட்டியவன், குழம்பிப் போய் இருந்தான்.

அவனிடம் வரும் பெண்கள் எல்லாம் அடுத்த முறை எப்போது வைத்துக் கொள்ளலாம் என்று கேட்டுத் தான் அவனுக்குப் பழக்கம். இந்த மாதிரிக் கல்யாணம் பண்ணிக் கொள்ளலாமா என்று கேட்டது இல்லை.

மற்ற பெண்களின் கேள்விக்குப் பதில் சொன்னவ னுக்குச் சங்கீதாவின் கேள்விக்குப் பதில் சொல்ல முடிய வில்லை. என்ன பதில் கூறுவது என்று அவனுக்குக் குழப்பமாய் இருந்தது.

ஹரியின் பதிலில் பாதி செத்துப் போனாள் சங்கீதா. திருமணத்தைப் பற்றிக் கேட்டதும் அவன் மகிழ்ந்து போய்ச் சரி என்று கூறுவான் என்று பார்த்தால், "திருமணமா...?" என்று அதிர்ச்சி அல்லவா காண்பிக்கிறான்.

"ஹரி... என்ன இப்படி சொல்றீங்க...? நீங்க என்னைக் காதலிக்கலையா...? அப்போ நீங்க ஐ லவ் யூ சொன்னது.. எங்கூட பழகியது... இதோ இப்போ என்னைத் தொட்டது எல்லாத்துக்கும் அர்த்தம் என்ன..?" கேட்டவளின் கண்களில் மீண்டும் கண்ணீர் ஆறு ஓடியது.

அவள் கேட்ட கேள்விகளில் அவன் திடுக்கிட்டுப் போனான். ஐ லவ் யூ சொல்வதும், முத்தம் கொடுப்பதும் அவனைப் பொருத்தவரையில் அன்றாடம் உண்ணுவது, உறங்குவது போல் இயல்பான ஒரு விஷயம்... அதைப் போய்ப் பெரியதாக எண்ணி இருக்கிறாளே என்று அவனுக்கு ஆயாசமாக இருந்தது.

ஆனாலும் அவளிடம் வில்லன் வசனம் பேச அவன் விரும்பவில்லை. மற்ற பெண்களிடம் எடுத் தெறிந்து பேசுபவனால், அவளிடம் அவ்வாறு பேச இயல வில்லை.

"ஹேய் கீத்து பேபி... இங்கே பாரு.."

அவளது முகம் பற்றி நிமிர்த்தியவன், "நான் பழகிய எந்தப் பொண்ணும் உன்னை மாதிரிக் கல்யாணம் பண்ணிக்கக் கேட்டது இல்லை... அதான் நீ இப்படிக் கேட்டதும் நான் கொஞ்சம் ஷாக் ஆகிட்டேன்..."

தனக்கு ஷாக் அடித்ததாய்க் கூறிக்கொண்டு இருந்தவன், தன் பேச்சால் அவள் எந்தளவுக்கு ஷாக்காகிப் போயிருக்கிறாள் என்பதை அறியவில்லை. அவனின் பெண்கள் சகவாசத்தை நம்ப முடியாமல் கண்ணிமைக்க மறந்து, அவனைப் பார்த்துக் கொண்டு இருந்தாள் அந்த பேதைப் பெண்.

"இப்பவும் நீ சொல்ற கல்யாணத்தில் எனக்கு பெரிசாய் நம்பிக்கை இல்லை... அதுக்காக எனக்கு உன்னைப் பிடிக்கலைன்னு நினைக்காதே... இப்பவும் எனக்கு உன்னை ரொம்பப் பிடிச்சியிருக்கு... ஐ லவ் யூ பேபி... ஆனா அதுக்கு அர்த்தம் காதல், கல்யாணம் இல்லை...

"அதை மட்டும் என்னால் நிச்சயமாய்ச் சொல்ல முடியும்... இப்பவும் சொல்றேன்... என்னை எந்தப் பொண்ணும் உன்னை மாதிரி சந்தோஷப்படுத்தியது இல்லை... இப்ப கூட நீ வேணும்னு என் உடம்பும் மனசும்

துடிக்குது... பிகாஸ் ஐ லவ் யூ பேபி...” என்றவன், அவளை அணைத்து முத்தமிட, அவனின் செயலைக் கூட எதிர்க்க முடியாமல் உடலின் சக்தி அனைத்தும் வடிந்தார் போல் அமர்ந்து இருந்தாள் அவள்.

அவனின் ஐ லவ் யூவுக்கான அர்த்தம் இப்போது அவளுக்கு முழுமையாய் விளங்கியது. காதல் வேண்டாம், கல்யாணம் வேண்டாம். ஆனால், பெண்ணால் கிடைக்கக்கூடிய உடல் சுகம் மட்டும் வேண்டும் என்றால், அதுக்கு அர்த்தம் என்ன...?

மார்கழி மாதத்து நாய்க்கும் இவனுக்கும் என்ன வித்தியாசம்...? என்று நினைத்தவளுக்கு குமட்டிக் கொண்டு வந்தது. தன்னிச்சையாய் அவளின் உடல் சுருங்கி அவன் பிடியில் இருந்து அவள் விலக, அவளின் விருப்பத்திற்குக் கட்டுப்பட்டு அவனும் விலகினான்.

“நான் சேலை கட்டணும்...” அவளின் பேச்சு அவனுக்கு உல்லாசத்தை வரவழைத்தது.

“கட்டு... நானா வேண்டாம்கிறேன்...” என்றபடி எழுந்தவன், அவள் எழுவதற்குத் தன் கைகளை நீட்டினான். அவள் அதைப் பற்றாமல் தலையைக் குனிந்து கொண்டு,

“நீங்க வெளியில போங்க...”

“நான் பார்க்காதது எதுவும் இருக்கா...?”

அவளது மேனியில் சுதந்திரமாய்த் தன் பார்வையை அலைய விட்டவனின் பேச்சில் குறும்பு நிரம்பி வழிந்தது.

அவனது பேச்சு உண்டாக்கிய அவமானத்தில், அவளது முகம் சிவந்து போனது. அதை அவன் வெட்கத்தில் சிவந்ததாய்த் தவறாக நினைத்துக் கொண்டான்.

அவளது சிவந்த கன்னத்தை ரசனையுடன் வருடியது அவனது விரல்கள்.

"இந்த முகச் சிவப்பும் எந்தப் பெண்ணிடத்திலும் நான் பார்த்தது இல்லை பேபி.." என்றவன்,

"டிரெஸ் சேஞ்ச் பண்ணிட்டு வா..." அவளின் உணர்வுக்கு மதிப்புக் கொடுத்து வெளியில் சென்றான்.

காசுக்குப் பழகும் பெண்ணும் தானும் ஒன்றா என்று நினைத்தவளுக்குத் தன்னை நினைத்து அவளுக்கே அருவருப்பாய் இருந்தது. தராதரம் தெரியாதவனிடத்தில் பழகியது தன் தவறு என்று கால தாமதமாய்ப் புரிந்து கொண்டாள். கைகள் உடையை மாற்றினாலும், மனம் அடுத்து என்ன என்று யோசித்துக் கொண்டிருந்தது.

உடையை மாற்றிக் கொண்டு கதவைத் திறந்த வளைக் கண்டதும் ஹரி,

"ஒன் மினிட்..." என்றவன், உள்ளே சென்று கார் சாவியை எடுத்துக் கொண்டு வெளியில் வந்தான்.

"வா... போகலாம்..." என்றவன் முன்னே நடக்க... அவள் இயந்திரம் போல் அவனைப் பின் தொடர்ந்தாள்.

காரில் ஏறி அமர்ந்ததும் அதைக் கிளப்பாமல் அவளைப் பார்த்தவன், "அடுத்து எப்போ வச்சுக்கலாம்

கீத்து...” என்று அவளின் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றினான்.

இந்த வார்த்தைகள் ஏனோ அவளுக்கு அவ்வள வாய் வலியைக் கொடுக்கவில்லை... ஒருவேளை அவன் கொடுத்த அடுத்தடுத்த அடிகளில் அவளது உணர்வுகள் மரத்துப் போனதோ என்னமோ...!

“என்ன பேபி, பதில் சொல்ல மாட்டேங்கிறே...” கேட்டவனைக் கண்ணிமைக்காமல் பார்த்தவள், ஒன்றும் பேசாமல் தலையைக் குனிய...

“ஓ.கே... ஓ.கே... நீ ரொம்ப டயர்டா இருப்ப... அதனால நாளைக்குப் பேசிக்கலாம்... என்ன...” என்றவன், அவளை அணைத்து நெற்றியில் முத்தமிட, அவளது உடல் அவனது தொடுகையில் நெகிழ்வதை அவள் உள்ளத்து அதிர்வுடன் உணர்ந்தாள்.

‘ச்சீ... வெட்கம் கெட்ட உடலே...’ என்று தன்னைக் குறித்து அவளுக்கே அவமானமாய் இருந்தது.

நெற்றியில் இட்ட முத்தம் அவனது தாபத்தை அதிகரிக்க, அவளது இதழில் நீண்ட முத்தத்தை அளித்துத் தன் தாபத்தைக் குறைக்கப் பார்த்தான். அது அவனது தாபத்தை விசிறி வைத்து விசிறி விட, மேலும் மேலும் அவளுள் அவன் மூழ்க, அவளோ தன்னால் இயன்றளவு அவனை எதிர்க்க ஆரம்பித்தாள். அவளின் எதிர்ப்பை உணர்ந்தவன், சிரித்தபடி அவளை விடுவித்தான்.

“சாரி பேபி...” என்றவன் காரை எடுக்க...

அவளுக்கு அப்போதுதான் அந்த எண்ணம் தோன்றியது. முதலில் அவன் தொட்ட போது இதுபோல் எதிர்த்து இருந்தால், அவன் இது போல் மன்னிப்பு கேட்டு விலகியிருப்பானோ என்று நினைத்தவளுக்கு, அழுகை அழுகையாய் வந்தது.

அவனளவில் அவன் சரியாகத்தான் நடந்து கொண்டிருக்கிறான். தான்தான் புத்தி கெட்டுப் போய் மானத்தை இழந்து தவிக்கிறோம் என்பது அவளுக்கு நன்கு புரிந்தது. கண் கெட்ட பின் சூரிய நமஸ்காரம் என்று நினைத்தவள், வேதனையில் உழன்றாள்.

"கீத்து பேபி... உன் ஹாஸ்டல் வந்திருச்சு பாரு..."

அவனது குரலில் தன்னுணர்வு அடைந்தவள், காரை விட்டு இறங்கப் போக... அவளது கைப் பிடித்துத் தடுத்து நிறுத்தியவன்,

"தேங்க்ஸ் பேபி... தேங்க்ஸ் பார் எவ்ரிதிங்..." என்றபடி அவன் அவளது வலது கையில் முத்தமிட... வெடுக்கென்று கையை உதறியவள், அவனிடம் விடைபெறக் கூட மனமின்றி விடுதி நோக்கிச் செல்ல, அவனோ உதட்டில் உறைந்த புன்னகையுடன், அவள் போவதைப் பார்த்துக் கொண்டு இருந்தான்.

வீட்டிற்கு வந்தவனிடத்தில், அவனின் மாமன் மகள் பூஜிதா அவன் மேலே விழுந்து அவனை வரவேற்க, எரிச்சலுடன் அவளைத் தள்ளி நிறுத்தியவன்,

"என்ன பூஜா இது... உன்னோட சின்னப் பிள்ளைப் பழக்கம் இன்னமும் மாறலையா...?"

"உங்களைப் பொறுத்தவரையில் நான் சின்னக் குழந்தைதான் ஹனி..." என்று இரு பொருள் படக்கூறி, அவனைப் பார்த்துக் கண் சிமிட்டியவள், அவன் எதிர் பாராத நேரத்தில் அவனது கன்னத்தில் முத்தமிட...

அவளது செயலில் ஹரி இரும்பாய் இறுகிப் போனான். கொஞ்ச நேரத்திற்கு முன் கூடலின் போது முகம் எல்லாம் வெட்கப்பூக்கள் பூக்க, சங்கீதா தனக்குக் கொடுத்த முத்தம், தன் உயிர் வரை தீண்டிச் சென்றதை உணர்ந்தவனுக்குப் பூஜாவின் முத்தம் அருவருப்பைக் கொடுத்து நெருப்பாய்த் தகித்தது.

அவளை அவன் உதறித் தள்ளிய வேகத்தில், அவள் அங்கிருந்த சோபாவில் போய் விழுந்தாள்.

"ஹரி, உனக்கு என்னாச்சு... சின்னப் பொண்ணு கிட்டப் போய் இப்படி ஹார்ஷா பிகேவ் பண்றியே..."

அபிநயா அவனை அதட்ட... அவரை முறைத்துப் பார்த்தவன், பூஜா பக்கம் திரும்பி,

"இதுக்கு மேல கிட்ட வந்த... மரியாதை கெட்டுரும், ராஸ்கல்..."

ஆட்காட்டி விரலை நீட்டி அவளை எச்சரித்தவன், தனது அறையை நோக்கி விறுவிறுவென நடந்தான். அபிநயாவும், பூஜாவும் அதிர்ச்சியில் உறைந்து போனார் கள்.

திடுமென வந்து நின்ற சங்கீதாவைக் கண்டு, வீட்டில் உள்ளவர்கள் மகிழ்ச்சியில் திக்குமுக்காடிப் போய் விட்டனர்.

"என்னடி சங்கீ... இப்படி இளைச்சுப் போயிட்ட...? ஒழுங்கா சாப்பிடுதியா இல்லையா...? அடேய் குமாரு... அந்த நாட்டுக் கோழியை அடிச்சு உறிச்சுக் கொண்டாய்யா..."

மகள் வந்த சந்தோஷத்தில் மாரீஸ்வரி மகனிடம் சொன்னார். கல்யாணத்துக்கு நிற்கும் பெண்ணல்லவா...? அந்த வாஞ்சை அவரிடத்தில் தனித்துத் தெரிந்தது.

"சங்கீ... கோழி குழம்புக்காகவே நீ தெனமும் வாத்தா... அப்பத்தேன் நாக்குக்கு ருசியா சோறு கெடைக்கும்..." உதய் தங்கையிடம் கிண்டலடித்தவன், அன்னை சொல்லிய வேலையைப் பார்க்கப் போனான்.

"அத்தே சாக்கி..." கையை நீட்டியபடி வந்த அஜித்தை ஆசையுடன் அள்ளிக் கொண்ட சங்கீதா, அவனுக்கு வாங்கி வந்த சாக்லெட், பொம்மைகளை எடுத்துக் காட்ட, அவனுக்கு ஏகத்துக்கும் குஷியாகிப் போனது.

அன்று சங்கீதா அன்னையின் கையால் எண்ணெய் தேய்த்துக் குளித்து, அவளுக்குப் பிடித்தமான உணவு வகைகளை உண்டு, எல்லோரிடமும் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தவள் மனம், அன்றைய இரவு தான் செய்ய வேண்டிய வேலையைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தது.

இரவு நேரம் யாருக்கும் சந்தேகம் ஏற்படா வண்ணம் பேசிச் சிரித்தவள், ஒரு முடிவுடன் தனது அறைக்கு வந்து சேர்ந்தாள்.

வழக்கம் போல் தரையில் போர்வையை விரித்துப் படுத்த மாரீஸ்வரிக்கு, ஏனோ அன்று உறக்கம் வர வில்லை. ஏதோ நினைத்தவராய் எழுந்து மின் விளக்கைப் போட்டவர், கதவைத் திறக்கப் போனார்.

"ஈசு..." கணவரின் அழைப்பில் திரும்பிப் பார்த்தார்.

"உறக்கம் வரலையாத்தா...?"

"இந்த சங்கீ புள்ள வந்ததுல இருந்து அது முகத்துல சுரத்தே இல்ல.. அதான் மனசுக்குக் கொஞ்சம் கலக்கமா இருக்கு... நா போய் அதுக்கு திருநீறு பூசிட்டு வாரேன்... நீங்க உறங்குங்க..."

தாய் அறியாத சூல் உண்டோ... என்னதான் சங்கீதா மகிழ்ச்சியாய் இருப்பது போல் வீட்டினரிடம் காட்டிக் கொண்டாலும், அந்த அன்னையை ஏமாற்ற அவளால் முடியவில்லை.

நேரே பூஜையறைக்குச் சென்று கை நிறைய விபூதியை அள்ளி எடுத்துக் கொண்டு மகளின் அறைக்குச் சென்றார். அங்கே கண்ட காட்சியில் அவரின் கையி லிருந்த விபூதி கீழே சிதறி விழ,

"அடி பாதகத்தி மகளே... என்ன காரியம்டி பண்ணியிருக்க..." அவர் அலறிய அலறலில், அந்த வீடே விழித்துக் கொண்டது.

சங்கீதா, தன் கையின் மணிக்கட்டில் பளேடினால் வெட்டி இருந்தாள். கையிலிருந்து சொட்டிய ரத்தம் தரையில் சிறு குளம் போல் கட்டி இருந்தது.

சங்கீதாவைத் தூக்கிக் கொண்டு அவர்கள் மருத்துவ மனைக்கு ஓட... சுமார் நான்கு மணி நேர போராட்டத் திற்குப் பின்னர் கண் விழித்தாள் அவள். தன்னைச் சுற்றி இருந்த தனது குடும்ப உறுப்பினர்களைக் கண்டதும் அவளுக்கு அழுகை முட்டிக் கொண்டு வந்தது. ஆனாலும் தான் ஏன் உயிர் பிழைத்தோம் என்ற விரக்தி உணர்வும் அவள் உள்ளத்தில் எழாமல் இல்லை.

"ஏன்டி இப்படி ஒரு காரியத்தை பண்ணே...? உனக்கு என்னடி கொறை இங்கே..." அழுது புலம்பிய மாரீஸ்வரியை...

"ஏத்தா... சும்மா சும்மா அழுது ஒப்பாரி வைக்காதே... இது ஹாஸ்பிட்டலு... புள்ள குணமாகி வூட்டுக்கு வந்ததும் பேசிக்கலாம்..."

தங்கவேலு மனைவியை அதட்ட, மற்றவர்களும் அவருக்குப் பயந்து சங்கீதாவை எதுவும் கேட்கவில்லை.

சங்கீதா வீட்டுக்கு வந்து இரு நாட்கள் ஒருவித அமைதியுடன் கழிய, மூன்றாவது நாள் தங்கவேலு மகளிடம் வந்தார். களைத்துப் போய் எதையோ பறி கொடுத்தது போல் படுத்திருந்த மகளைப் பார்த்ததும் அவருக்குக் கண்கள் கலங்கின.

பெண் பிள்ளைகளைப் பெற்றால் பாவம் என்று நினைக்கும் அவரது இனத்தில், அவர் சங்கீதாவைத் தன் குலம் காக்க வந்த அந்த மீனாட்சி அம்மனாகத் தான் எண்ணி இருந்தார். அத்தகைய அன்பு மகள் தற்கொலைக்கு முயன்றாள் என்றால், விஷயம் லேசானது அல்ல என்று அவரின் அனுபவ அறிவு கூறியது.

"உடம்பு எப்படி இருக்கும்மா...?" பரிவுடன் தலை யைத் தடவிக் கொடுத்த தந்தையின் அன்பில் அவளுக்குக் கண்கள் கரித்தன.

"ஆத்தாடி... ஒம் மனசு சங்கடப்படுற அளவுக்கு என்ன தாயி நடந்துச்சு...? அதுவும் உசுர விடுற அளவுக்கு..." கேட்கும் போதே அவருக்குத் தொண்டையை அடைத்தது.

தந்தையின் அன்பில் நெகிழ்ந்த சங்கீதாவால் அதற்கு மேல் உண்மையை மறைக்க இயலவில்லை. உண்மையைச் சொன்ன பிறகு அவர்கள் தன்னைக் கொன்றால் கூட சந்தோஷமாகச் செத்துப் போவோம் என்று எண்ணியவள்,

"உசுர விட மேலான மானத்தை இழந்துட்டு இந்தப் பாவி சிறுக்கி இன்னமும் உயிரோடு இருக்கேனேப்பா..." தலையில் அடித்துக் கொண்டு அவள் அழ ஆரம்பிக்க...

"அய்யனாரே..." என்றபடி நாற்காலியில் சாய்ந்த தங்கவேலுவால், மேலே பேச இயலவில்லை.

"என்னடி சொல்ற...?" வேகமாய் அவள் அருகே வந்த மாரீஸ்வரி, அவளை இழுத்து வைத்துக் கன்னம் கன்னமாய் அடிக்க...

"அடிம்மா... நல்லா அடிம்மா... என்னை அடிச்சே கொன்னுரும்மா... தறிகெட்டுப் போன எனக்கு இது நல்லா வேணும்மா..." சங்கீதாவின் கதறலில் அவருடைய கை அப்படியே நின்றது.

முன்பு இருந்த மாரீஸ்வரி என்றால், இந்நேரம் அருவாளை எடுத்து மகளை ஒரே வெட்டாய் வெட்டிச் சாய்த்து இருப்பார்... ஆனால், இப்போது நிற்கும் மாரீஸ்வரியோ... மகளை மரணத்தின் வாசல் வரை சென்று மீட்டு வந்த அன்னை அல்லவோ...!

மகள் உயிருக்குப் போராடியதைக் கண் முன் பார்த்துப் பரிதவித்தவரால், அவளின் உயிரைப் பறிக்க முடியவில்லை. ஆயாசத்துடன் மகளின் அருகில் அமர்ந்த வரால், அவளைக் கட்டிக்கொண்டு அழத்தான் முடிந்தது.

"யாருடி அவன்...? சொல்லு... ஒரே வெட்டா வெட்டிப் போட்டுடுறேன்..." உதய் ஆத்திரம் பொங்க நின்றிருக்க... முத்துராமும் அவனுக்குக் குறையாத ஆத்திரத்துடன் நின்று இருந்தான்.

சங்கீதா... ஹரிஹரனைப் பற்றி அனைத்து விவரங் களையும் கூற, அதைக் கேட்டுக் கொண்டு இருந்த அவளது உடன்பிறப்புகளுக்கு ரத்தம் கொதித்தது.

"நான் அவரை முழுசா நம்பினேன்... ஆனா அவரு எல்லாப் பொண்ணுங்க மாதிரி என்னையும்..." அதற்கு மேல் சொல்ல முடியாமல், அவள் முகத்தை மூடிக் கொண்டு அழ ஆரம்பித்தாள்.

"இதுக்குத்தான் தலைப்பாடா அடிச்சிக்கிட்டேன்... பொட்டப்புள்ளக்குப் படிப்புப் போதும்... சீக்கிரம் கல்யாணத்தப் பண்ணிப் போடணும்ன்னு... குமாரு, நான் நினைச்சது சரியாப் போச்சேடா... உன் தங்கச்சி கெட்டுச் சீரழிஞ்சு வந்திருக்கா... இதுக்கு நீ என்ன பதில் சொல்லப்

போற...? உன்னால அவளைப் பழையபடி ஆக்க முடியுமா...?"

அன்னையின் குரல் உதய்யைக் குற்றம் சாட்ட, அவன் அதிர்ந்து போனான்.

"எம்மா... என்ன சொல்ற...? நானா இதுக்குக் காரணம்...?"

"ஆமாடா... நீதான் இதுக்குக் காரணம்... அன்னைக்கு என் பேச்சைக் கேட்டுக் கல்யாணத்தை முடிச்சிருந்தா... இன்னைக்கு இந்த அவப்பேரு வந்திருக்கு மாடா..."

அதையேதான் முத்துராமும் சொன்னான். "பொட்டப்புள்ள வேலைக்குப் போறது நம்ம குடும்பத்து வழக்கம் இல்லைன்னு உனக்குத் தெரிஞ்சி இருக்கணும் குமாரு..."

"தம்பி, அடுத்து என்ன செய்யணும்னு யோசிங்க..." அண்ணி நித்யா மட்டும் அவனுக்கு ஆறுதல் அளித்தாள்.

ஆனால், தங்கவேலு ஒரு வார்த்தை கூட அவனைக் கடிந்து பேசவில்லை. அப்படியே அசையாது நிலை குத்திய பார்வையுடன் அமர்ந்திருந்தவர் அருகில் மண்டியிட்டு அமர்ந்தவன்,

"எல்லாரும் என்னைக் குற்றம் சொல்லுதாக... நீங்களும் உங்க பங்குக்கு ஏதாவது சொல்லுங்கப்பா... இல்ல... உங்க கையால ரெண்டு அடி அடிச்சிடுங்கப்பா... இப்படி அமைதியா இருக்காதீக..."

அவரின் கையைப் பிடித்துத் தன்னை அடிக்கப் போக... ஆனால், அவரின் கையோ அவனைப் பரிவுடன் தடவிக் கொடுத்தது.

"உந்தங்கச்சி பண்ணுன தப்புக்கு நீ எப்படிய்யா பிணையாவே... மேலே என்ன பண்ணனும்னு யோசிய்யா..."

"என்னப்பா பண்ணச் சொல்றீக, சொல்லுங்க... அவனைக் கொன்னுப்புட்டு அடுத்த முகூர்த்தத்துல தங்கச்சிக்கு வேற கல்யாணத்தைப் பண்ணி வைக்கவா...?" அவன் ஆங்காரத்துடன் பேசியதைக் கேட்டு...

"அண்ணே..." என்று அலறி விட்டாள் சங்கீதா.

"அவரு வேணா என்னை நேசிக்காம இருந்திருக்கலாம்... ஆனா நான் அவரை முழுசா நேசிச்சேன்... என் மனசு விருப்பப்பட்டுத்தான் அவர் கிட்ட என்னைப் பறி கொடுத்தேன்... கொல்றதா இருந்தா... தெரிஞ்சே தப்பு செஞ்ச என்னை முதல்ல கொன்னு போட்டுருங்கண்ணே... அவருக்கு முன்னே என் உசிரு போகட்டும்ணே..."

கதறியவளின் காதல் அவனுக்குப் புரியாமல் இல்லை... ஏனெனில் அவனும் உமாவைக் காதலிக்கிறவன் அல்லவா...!

"அதுக்காக வேத்து இனத்துப் பையனை உனக்குக் கல்யாணம் பண்ணி வைக்கச் சொல்றியா...?" மாரீஸ்வரியின் குரல் அவளை அதட்டியது. அதற்கு மறுப்பாய்த் தலையசைத்தவள்,

"இனி அவரே மனசு மாறி என்னை ஏத்துக்கிட்டாலும் என்னால மனசு ஒத்து வாழ முடியாது... என் மனசுல இருந்த காதலு செத்துப் போச்சு..." என்று அழுதவளைத் தங்கவேலுவின் குரல் தடுத்தது.

"இங்கே பாரு சங்கீ... ஒண்ணு மனசை மாத்திக்கிட்டு அந்தப் பையனைக் கல்யாணம் பண்ணிக்கப் பாரு... உன்னை அவன் கல்யாணம் பண்ண வைக்க வேண்டியது என் பொறுப்பு... இல்ல நடந்ததைக் கெட்ட கனவா நினைச்சு மறந்திட்டு; நம்ம ஜாதி சனத்துல நல்ல பையனாப் பார்த்துக் கல்யாணம் பண்ணிக்கோ..."

சாதி இனம் என்று மிகுந்த பற்று கொண்ட அவரே தனது மகளுக்காகத் தன் மனதை மாற்றிக் கொள்ள, அனைவரும் அவரது சொல்லை ஆதரித்தனர்.

இரண்டில் ஒரு முடிவு என்று உறுதியாய் நின்ற தந்தையை அச்சத்துடன் பார்த்தாள் சங்கீதா. அவளால் ஹரியை நிச்சயம் திருமணம் செய்து கொள்ள முடியாது... ஒரு ஏமாத்துக்காரனை நம்பி தன் வாழ்க்கை முழுவதை யும் பணயம் வைக்க அவள் தயாராக இல்லை. அதே சமயம் வேறு ஒருவனைத் தன் மணவாளனாய்க் கற்பனை பண்ணிப் பார்க்கக்கூட அவளுக்கு மனம் வரவில்லை.

உதய், தங்கையின் முகத்தை வைத்தே அவளின் உணர்வுகளைப் படித்து விட்டான். இன்று ஹரி வேண்டாம் என்று அவள் முடிவு எடுத்தாலும், பிற்காலத்தில் அவள் மனதில் உள்ள காதல் அவனைத் திருத்தி அவளையும் அவனோடு வாழச் செய்யும் என்பதில் அவனுக்கு எள்

ளளவும் ஐயமில்லை... ஏனெனில் காதலின் சக்தி எப்படிப் பட்டது என்று அவனுக்குத் தெரியும்.

"அப்பா... அவனை கையைக் காலை உடைச்சா வது நம்ம சங்கீ கழுத்துல தாலி கட்ட வைக்க வேண்டியது எம் பொறுப்பு..." தந்தையிடம் கூறியவன்...

சங்கீதாவிடம், "நீ கவலைப்படாதே சங்கீ... அண்ணன் நான் எதுக்கு இருக்கேன்...?" என்றவன், அன்றே சென்னையை நோக்கிப் பயணமானான்.

இடையில் அழைத்த உமாவிற்குத் தானே அவளை அழைப்பதாகச் சொல்லி விட்டான். அவன் மனதில் இருந்த ஒரே விஷயம், தங்கையின் வாழ்க்கை மட்டுமே.

தினமும் அலுவலகத்திற்கு வரும் போது எல்லாம் ஹரியின் கண்கள் அவனையும் அறியாமல் சங்கீதாவின் இருக்கையைத் தொட்டு மீண்டு வரும்... அன்று அவளு டன் இணைந்த பின்பு அவளை அவனால் காண முடிய வில்லை.

விடுப்பு எடுப்பதற்கும் எந்தவித முன்னறிவிப்பும் அவள் கொடுக்கவில்லை. முதலில் அவளுக்கு உடம்பு சரியில்லாமல் இருந்து இருக்கும் என்று நினைத்தவனுக்கு, இப்போது அதுபோல் நினைக்க முடியவில்லை. எங்கு சென்றாள்...? என்னவானது அவளுக்கு...? என்று அவன் மனம் ஒரு நிலையில்லாமல் தவியாய்த் தவித்தது.

அவளது விடுதியில் விசாரித்தால், ஊருக்குச் சென்று விட்டதாகத் தகவல் கூறினர். ஏன் சென்றாள்...? எதற்குச் சென்றாள்...? என்று அவனுக்குத் தெரிய

வில்லை. அவளது அலைபேசியோ அணைத்து வைக்கப் பட்டு இருந்தது.

அவள் இல்லாத இத்தனை நாட்களில், அவன் ஒன்றை மட்டும் தெளிவாகத் தெரிந்து கொண்டான். அது சங்கீதா இல்லாமல் அவன் வாழ்க்கை இல்லை என்பதை...! அந்தளவுக்கு அவள், அவன் மனதை ஆட்டிப் படைத்தாள்.

முதலில் அவளை உடல் தேவைக்குத்தான் மனம் நாடுகிறது என்று அலட்சியமாக இருந்தவன், மெல்ல மெல்லத் தன் மனம் அவளின் அருகாமையை நாடுவது குறித்து அதிர்ச்சி அடைந்தான்.

அவள் இல்லாத நாட்கள், அவனுக்கு எதையோ இழந்தது போல் இருந்தது. அவளைத் தன் அருகில் வைத்துக் கொள்ள வேண்டும்... அவள் மடி சாய்ந்து துயில் கொள்ள வேண்டும்... அவளின் சேயாய்த் தான் மாற வேண்டும்...

தனது தாயாய் அவள் சேவை செய்ய வேண்டும் என்று எண்ணியவனுக்கு, அவளை இப்போதே பார்க்க வேண்டும் என்று தோன்றியது. அவளைப் பற்றிய குறிப்பு அடங்கிய கோப்பை எடுத்தவன், அவளது முகவரியைக் குறித்துக் கொண்டான்.

"பேபி... இனி மேல் என்னை விட்டு எப்படி விலகிப் போறேன்னு பார்க்கிறேன்... நீ சொன்ன மாதிரி நாம கல்யாணம் பண்ணிக்கலாமா பேபி..."

அலைபேசியில் இருந்த அவளின் புகைப்படத்துடன் காதலுடன் உரையாடிக் கொண்டிருந்தான். அவனுக்குத்

தெரியவில்லை... அவனது பேபி அவனை முழுவதுமாய் வெறுத்து விட்டாள் என்று...!

"என்னடா டல்லா இருக்க...? வெளியில் போய் என்ஜாய் பண்ணலாமா...?" என்று கேட்டபடி உள்ளே வந்தான் சபரீஷ்.

"முதல்ல உன்னோட பிரெண்ட்ஷிப்பைக் கட் பண்ணணும்டா..." என்ற ஹரியை அதிர்ச்சியாய்ப் பார்த் தான் அவன்.

"ஏன்டா...?"

"பின்னே... குடும்பஸ்தன் ஆகப் போற என்கிட்டப் போய் இப்படிக் கேட்கிறியே..."

"டேய்... நீ அந்தப் பொண்ணை..."

"எஸ்... கீத்துவைக் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்..."

"அந்தப் பட்டிக்காடு எப்படிடா உன் மாடர்ன் லைஃப்புக்குச் செட்டாகும்...?"

"சபரி..." கண்டிப்புடன் அவனை அழைத்தவன்,

"என் மனைவியாகப் போறவளை இப்படி எல்லாம் பேசாதே... அவளால மட்டும் தான்டா என்னை உயிர்ப்போடு வச்சுக்க முடியும்..." என்ற நண்பனை மலைப்பாய்ப் பார்த்தான் சபரீஷ்.

"அவளைப் பிரிஞ்ச இத்தனை நாளில் ஒண்ணு மட்டும் எனக்கு நல்லாப் புரிஞ்சதுடா... அவ இல்லாம நான் இல்லைடா... என் உயிர் அவள்தான்னு ரொம்ப

லேட்டாத் தெரிஞ்சிக்கிட்டேன்..." கண்களில் காதல் வழியச் சொன்ன ஹரி அவனுக்குப் புதிது.

காதலில் முகம் முழுவதும் பூரிப்புடன் இருந்த நண்பனைக் கண்டு, அவனுக்கும் மனதில் ஏதோ மாற்றம்... தானும் ஒரு பெண்ணால் இப்படிக் காதலிக் கப்பட மாட்டோமா... தானும் ஒரு பெண்ணை இப்படிக் காதலிக்க மாட்டோமா என்ற ஏக்கம் எழுவதை அவனால் தடுக்க முடியவில்லை.

"கங்கிராட்ஸ் மச்சி..." என்று ஹரியை அணைத்துக் கொண்டவன், அடிமனதில் இருந்து அவனை வாழ்த்தி னான்.

"முடிஞ்சா நானும் உன்னைப் போல் காதலிக்க ணும்டா... எனக்கும் காதலிக்க ஆசையா இருக்கு..." தனது ஆசையைச் சொன்னவன்,

"ஆனா... காலம் பூராவும் ஒருத்தி கிட்ட அடிமையா இருக்கிறதை நினைச்சாக் கொஞ்சம் ஜெர்க்காதான் இருக்கு..."

"அதுவும் ஒரு சுகம்தான்டா மச்சி..." கண்களில் மயக்கத்துடன் அனுபவஸ்தன் போல் கூறிய ஹரியைப் பார்த்துச் சபரீஷ்க்குச் சிரிப்பு வந்தது.

"கல்யாணத்துக்கு முன்னமே அனுபவமோ...?"

"இல்லையா பின்னே... எத்தனை மாசம் கீத்து பின்னாடி லோ லோன்னு அலைஞ்சிருக்கேன்..." என்று சிரித்தவனை நிறைவாய்ப் பார்த்தவன்,

"நான் சைட்டுக்குப் போறேன்... நீ உன் கீத்துவோட டூயட் பாடு..." என்ற சபரீஷ் அறையை விட்டு வெளியேற... ஹரி சிரித்தபடி தன்னவளின் புகைப்படத்தோடு மானசீகமாக உரையாடினான்.

அந்நேரம் புயல் போல் அவனின் அறைக்குள் நுழைந்தான் உதய். எதிர்பாராமல் உள்ளே நுழைந்தவனைக் கண்டு,

"ஹூ ஆர் யூ மேன்... அப்பாயிண்ட்மென்ட் இல்லாம நீ பாட்டுக்கு உள்ளே வர..." ஹரியின் கேள்விக்குப் பதில் சொல்லாமல்,

"நீதான் ஹரியா...?"

"எஸ்..." என்று அவன் சொல்லி முடிக்கும் முன் உதய் அவன் மீது பாய்ந்து விட்டான்.

"எந்தங்கச்சியை ஏமாத்திட்டு நீ மட்டும் சந்தோஷமா இருக்கியா...? உன்னை எல்லாம் பொலி போட்டாத்தான்டா எம் மனசு ஆறும்..." உதய்யின் பேச்சிலேயே அவன் சங்கீதாவின் அண்ணன் என்பதைப் புரிந்து கொண்டான் ஹரி.

"ஏய் மிஸ்டர்... நான் சொல்றதைக் கொஞ்சம் கேளு..." உதய்யின் அடியில் இருந்து தன்னைக் காத்த வாறு கூறியவனின் பேச்சை, உதய் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. அவன் நினைவில் நின்றது எல்லாம் ரத்த வெள்ளத்தில் கண்ட தங்கையின் தோற்றம்தான்...

"உன்னால எந்தங்கச்சி தற்கொலை பண்ணிக்கிற அளவுக்குப் போயிட்டாடா... இதுக்கு எல்லாம் காரணமான

உன்னைக் கொன்னாத்தான்டா என் வெறி அடங்கும்.” தந்தையின் பேச்சு பின்னுக்குப் போய், தங்கையின் மீது இருந்த பாசம் உதய்யை இயங்கச் செய்தது.

உதய் சொன்னதைக் கேட்டு, ஹரி அப்படியே ஸ்தம்பித்துப் போனான். சங்கீதா தற்கொலைக்கு முயன்றதை அவனால் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை. அவள் தன்னை எந்த மாதிரி எண்ணி இருக்கிறாள் என்பதை உணர்ந்தவனுக்குத் தன் சக்தி எல்லாம் வடிந்தாற் போல் தோன்றியது.

அதை விட அவளது நிலையை எண்ணிப் பார்த்தவனுக்கு மனம் எல்லாம் வலித்தது.

ஹரியின் உணர்வற்ற நிலையைத் தனக்குச் சாதகமாக எடுத்துக் கொண்ட உதய், அவனை அடி பின்னி எடுத்து விட்டான். அலுவலகத்தில் வேலை செய்பவர்கள் வந்து விலக்கவும்தான் ஹரிக்குத் தன்னுணர்வு வந்தது.

அப்போதுதான் தன் நிலையை அவன் கவனித்தான். அணிந்து இருந்த சட்டை கிழிந்து, பார்ப்பதற்குப் பிச்சைக்காரன் போல் நின்று இருந்தான். தனது அலுவலக ஊழியர்கள் முன் தன்னை அவமரியாதை செய்த உதய்யைக் கொலைவெறியுடன் பார்த்தான் அவன். அதிலும் சில ஊழியர்கள் அவனைப் பார்த்து நமட்டுச் சிரிப்புச் சிரித்தது அவனுக்குப் பெருத்த அவமானமாய் இருந்தது.

சின்ன வயதில் இருந்து சிறு துரும்பு கூட அவன் மீது படாமல் வளர்ந்திருந்த அவனது செல்வ நிலை,

அவனது கோபத்தை அதிகப்படுத்தியது. தன்னைக் கேள்வி கேட்க வேண்டிய அதிகாரம், பாதிக்கப்பட்ட சங்கீதா விற்கு மட்டுமே இருப்பதாய் அவன் நினைத்தான். அதை விட்டு விட்டு உதய் அவனை அடித்ததை அவனால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அவனின் தன்மானம் அதற்கு இடம் கொடுக்கவில்லை.

"விடுங்கடா என்னை..." தன்னைப் பிடித்திருந்த ஆட்களின் பிடியில் இருந்து திமிறினான் உதய்.

தன் கண்ணசைவில் அந்த ஆட்களை வெளியில் போகச் சொன்ன ஹரி, உதய்யிடம் திரும்பினான்.

"இப்போ உனக்கு என்ன, நான் சங்கீதாவைக் கல்யாணம் பண்ணிக்கணும், அவ்வளவுதானே...! இன்னும் மூணு நாளில் என் அப்பா, அம்மாவோட சங்கீதாவைப் பெண் கேட்டு வர்றேன்... இப்போ நீ போகலாம்..." முகத்தில் எந்த உணர்ச்சிகளையும் காட்டாது பேசியவனை உதய்யால் நம்ப முடியவில்லை.

"நெசமாவா சொல்றீக...?"

"உண்மையா நான் சொல்றேன்... நான் சொன்னா சொன்னதுதான்... இந்த ஹரி பேச்சு மாற மாட்டான்..."

"வரலைன்னா..." உதய் சந்தேகத்தோடு கேட்க...

"இதேபோல நீங்க என்னைத் தூக்கிப் போட்டு மிதிக்கலாம்..." என்றவனின் நக்கல் பேச்சு உதய்க்குச் சிரிப்பை வரவழைத்தது. அவ்வளவு நேரம் அவன் மனதை அழுத்தி இருந்த பாரம் எல்லாம் ஒரு நொடியில் பனி போல் விலகியது.

"உங்களை நம்பறேன் மாப்பிள்ள..." என்றவன், ஹரியைக் கட்டிப் பிடிக்க, அவனோ தனக்குள் இறுகிப் போய் நின்று இருந்தான்.

சந்தோஷத்துடன் உதய் கிளம்பிச் சென்றதும் ஆத்திரத்துடன் நாற்காலியில் அமர்ந்த ஹரியின் மனம் அவமானத்தில் கொந்தளித்தது. தன்னை அவமானப் படுத்திய உதய்யை, ஹரி அவ்வளவு எளிதில் மன்னிக்கத் தயாராக இல்லை.

உதய்யைப் பழிவாங்க எண்ணினான். அவனுக்குச் சங்கீதா மேல் கோபம் இல்லை... அவள் அவனைக் கொன்றால் கூட மரணத்தை ஆசையுடன் வரவேற்று இருப்பான். ஆனால், உதய் செய்த காரியம் அவனால் மறக்க முடியவில்லை.

எதை எதையோ எண்ணிக் கொண்டிருந்தவன், எதை எதையோ இணைத்து முடிச்சுப் போட்டவன், பின் சந்தோஷத்தில், "ஹுர்ரே..." என்று கத்தினான்.

அவன் கண்கள் இரண்டும் பழி வெறியில் பளபளத் தது. ஒரு கல்லில் இரண்டு மாங்காய் என்பது போல், அவன் ஒரு கல்லில் பல மாங்காய்களை அடிக்கத் திட்டம் போட்டான்.

ஹரி, தான் சொன்னது போல் அடுத்து வந்த மூன்றாவது நாள், தன் பெற்றோருடன் சங்கீதாவின் வீட்டிற்கு அவளைப் பெண் கேட்டு வந்தான். அவன் அவனுக்கு மட்டும் பெண் கேட்டு வரவில்லை. அவனின் தங்கைக்கு உதய்யை மாப்பிள்ளை கேட்டும் வந்திருந்

தான்... அதைக் கேட்டு அதிர்ந்தது உதய் மட்டுமல்ல, சங்கீதாவும்தான்.

மகாதேவனுக்குச் சங்கீதாவின் வீட்டிற்குப் பெண் கேட்டு வரவே பிடிக்கவில்லை. அமைச்சர் என்ற எந்தவிதப் பந்தாவும் இல்லாமல், ஒற்றைக் காரில் வந்து இறங்கி மகனுக்குப் பெண் கேட்கும் அவல நிலை, எந்த அமைச் சருக்கும் வரக் கூடாது என்று மனதுக்குள் நொந்து கொண்டார்.

ஆனால், அதை வெளியில் சொன்னால் மகன் பார்வையாலேயே தன்னை பஸ்பம் ஆக்கி விடுவான் என்பதை உணர்ந்து அடக்கி வாசித்தார். ஏனெனில் ஹரி அவரை அமைச்சர் என்கிற கோதாவில் வரக்கூடாது என்றும், சாதாரணமாகத்தான் வர வேண்டும் என்றும் அவருக்குக் கட்டளை விதித்து விட்டான்.

"என்ன ஹரி... நம்ம ஊரு ஸ்லம் ஏரியா மாதிரி இருக்கு... இங்கே உள்ள பொண்ணுகிட்டேயா நீ போயும் போயும் மயங்கின... இதுக்கு நீ பூஜாவையே கல்யாணம் பண்ணியிருக்கலாம்..." அங்கிருந்த சூழலைக் கண்டு முகத்தைச் சுளித்தார் அபிநயா.

"மாம்..." கண்டிப்புடன் அன்னையைப் பார்த்தவன்,

"இங்கிருந்து கிளம்பற வரைக்கும் நீங்க வாயைத் திறக்கக் கூடாது..." என்றவனிடம், அவரால் ஒன்றும் பேச முடியவில்லை.

இரண்டு நாட்களுக்கு முன் இருவரிடமும் வந்து நின்றவன், "டாட், மாம்... நாளன்னைக்கு நாம பெண் பார்க்கப் போறோம்..." என்றான்.

"யாருக்கு ஹரி..." அதிர்ச்சியில் இருவரும் ஒரு சேரக் கூவினர்...

"ஏன்... என்னைப் பார்த்தா மாப்பிள்ளை மாதிரித் தெரியலையா..?" முன்னும் பின்னும் தன்னைத் திருப்பி அழகு காண்பித்தவனைக் கடுப்புடன் பார்த்தனர் இருவரும்.

"நீயே பெண் பார்த்துக் கல்யாணம் பண்ணிக்கிற துக்கு நாங்க எதுக்கு ஹரி...?" மனக்குமுறலை அடக்கிக் கொண்டு அபிநயா கேட்டார்.

அவனுக்காக அவரின் அண்ணன் மகள் காத் திருக்க, அவன் என்னடா என்றால் தனக்குப் பெண் பார்க்க வர வேண்டும், என்றால் அவருக்குக் கோபம் வராதா...? அதிலும் ஒரே மகனுக்குத் திருமணம் என்றால், அதில் அவருக்கு எத்தனை கனவுகள் இருக்கும்...?

அத்தனையையும் ஒரு நொடியில் தகர்த்து எறிந்து விட்டானே என்று ஹரியின் மேல் கடுங்கோபத்தில் இருந் தார்.

"ஓ.கே. மாம்... உங்க இஷ்டம்... நானே பெண் பார்க்கப் போய்க்கிறேன்..." என்றவன் அசால்ட்டாக அங்கிருந்து நகர...

அபிநயாவின் நம்பிக்கை ஆட்டம் கண்டது.

ஏதோ கோபப்பட்டால் தங்களைச் சமாதானம் செய்வான் என்று பார்த்தால், அவன் முறுக்கிக் கொள்ளவும், தங்களது மரியாதையைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, வேறு வழியின்றி பெண் பார்க்க வருவதாக அவர் ஒத்துக்கொள்ள... அவனது முகத்தில் வெற்றிச் சிரிப்புக் குமிழிட்டது.

"என்ன டாட்... நீங்க எதுவும் சொல்லல...?"

"உங்கம்மா விருப்பம்தான் என் விருப்பம்..." என்றவரை, அதிசயம் போல் பார்த்தவன், அவரிடம்,

"டாட்... உங்க கிட்ட நான் தனியாப் பேசணும்..." என்று... அவரோடு சுமார் அரை மணி நேரம் பேசி விட்டு வந்தவன் முகத்தில், அதே வெற்றிப் புன்னகை ஒட்டிக் கொண்டிருந்தது.

இப்போது அதை எல்லாம் நினைத்துப் பார்த்தவன் முகத்தில், எதை எதையோ எண்ணிப் புன்னகை தோன்றியது. சங்கீதாவின் வீட்டின் முன் காரை நிறுத்தி விட்டு இறங்கியதும் மீண்டும் முகத்தைச் சுளித்தார் அபிநயா.

"என்னங்க இது... அவன்தான் தெரியாம பிடிவாதம் பிடிச்சா நீங்களாவது அவனுக்கு எடுத்துச் சொல்லக் கூடாதா...?" கணவனின் காதில் கிசுகிசுத்தார்.

"ஹரி கிட்ட உன்னாலேயே பேச முடியலங்கிறப்போ நான் எப்படிப் பேச...?" என்ற மகாதேவனை முறைத்துப் பார்த்தவர்...

"பேருதான் பெத்தப் பேரு மினிஸ்டர்னு... ஆனா மகன் கிட்ட மட்டும் வாயைத் திறக்கிறது இல்லை..."

"மகன் கிட்ட மட்டுமா அபி... உன் கிட்டேயும் தானே..." என்றவரை, நெற்றிக் கண் இருந்திருந்தால் எரித்து இருப்பார் அபிநயா.

"மாம், டாட் கம்மான்... இங்கேயே நின்னுட்டு இருந்தா எப்படி...?" ஹரி அழைக்கும் போதே உதய் வாசலுக்கு வந்து அவர்களை வரவேற்றான்.

அவனின் வரவேற்பைச் சிரித்தபடி ஏற்றுக்கொண்டு உள்ளே நுழைந்த ஹரியின் கண்கள், தன்னவளைத் தான் தேடின. அவளைத் தவிர எல்லோரும் அங்கு கூடி இருந்தனர்.

சம்பிரதாயமாக வரவேற்ற சங்கீதாவின் குடும்பத் தினரின் முகத்தில் எள்ளளவு கூட மகிழ்ச்சி இல்லை. மாறாக, 'எங்க வீட்டுப் பெண்ணை இப்படி நாசப்படுத்தி விட்டாயே' என்ற கோபமான கேள்வியே இருந்தது.

தங்கவேலு, வந்தவர்களை வரவேற்றவர், அதன் பின் எதுவும் பேசவில்லை. தந்தையைப் பின்பற்றி முத்துராமும் அமைதி காத்தான். உள்ளறையில் நின்றிருந்த மாரீஸ்வரியும், நித்யாவும் வாங்க என்றதோடு சரி...

கூடியிருந்த சில உறவினர் கூட்டம், இரு குடும்பங்களையும் வேடிக்கை பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தது. தங்கவேலு மற்றும் மாரீஸ்வரியின் உடன்பிறந்தோர் அங்கு வந்திருந்தனர். அவர்களோடு

முதல் சம்பந்தி என்ற முறையில் நித்யாவின் பெற்றோர் வந்திருந்தனர்.

உறவினர்களுக்குச் சொல்லாமல் எந்த விசேஷமும் வைக்க முடியாது. பின் இதையே சாக்கிட்டு அனைத்து விசேஷங்களையும் புறக்கணித்து விடுவர். நேற்று கூட உதய்யும், முத்துராமும் நேரில் சென்று அவர்களைப் பார்த்துப் பேசி அழைத்த பின்தான் வரவே சம்மதித்தனர். சங்கீதாவின் திருமணம், காதல் திருமணம் என்றதுமே அவர்களுக்கு எல்லாம் ஆத்திரத்தில் மீசை துடித்தது.

"பொட்டப்புள்ளைக்கு காதல் ஒரு கேடா... காதலிச்சதே தப்பு... இதுல கல்யாணம் வேறயா... வெளங்கிரும்... அதுக்கு அவளைக் கொன்னு புதைச்சிருவேய்... பூமிக்கு ஒரு பாரம் கொறையும்..."

அருவாளைக் கையில் எடுத்த தங்கவேலுவின் உடன்பிறப்புக்களைச் சமாதானம் செய்வதற்குள் சகோதரர்கள் இருவருக்கும் போதும் போதும் என்றாகி விட்டது. ஒருவாறு அவர்களைச் சமாதானம் செய்து அழைத்து வந்தாகி விட்டது. மேலும் எந்தவிதப் பிரச்சினையும் இல்லாமல் பெண் பார்க்கும் படலம் நல்லபடியாக முடிய வேண்டும்.

வந்த இடத்தில் மணமகனின் தந்தை அமைச்சர் என்றதும், வந்திருந்த உறவுக் கூட்டத்தின் முணுமுணுப்புச் சற்றுத் தணிந்தது.

காபி, டிபன் எல்லாம் பரிமாறப்பட்ட பின்... தங்கவேலுவின் அண்ணன், "ஏனப்பு... இப்படியே ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக்கிட்டு இருந்தா எப்படி...?

பேச்சு வார்த்தையை ஆரம்பிங்கப்பா..." என்று ஆரம்பித்து வைக்க... அவரை நன்றியுடன் பார்த்தான் ஹரி. அவன் கஷ்டம் அவனுக்கு.

"பேச என்ன இருக்கு... கீத்... சங்கீதாவை நான் மனசார விரும்பறேன்... அவளைக் கல்யாணம் பண்ணிக்க நினைக்கிறேன்... அதுக்குத்தான் உங்க எல்லோருடைய சம்மதமும் கேட்டு வந்திருக்கிறேன்..."

கையைக் கூப்பிப் பேசிய ஹரியின் பணிவு, அங்கிருந்தவர்களைக் கவர்ந்து விட்டது. ஆனால், அவனின் பணிவு சங்கீதாவின் வீட்டினரைக் கவர வில்லை. உதய்யைத் தவிர அனைவரும் இறுக்கமான முகத்துடன் அமர்ந்திருந்தனர்.

"வேலு... சங்கீ புள்ளையைக் கூட்டிட்டு வரச் சொல்லுய்யா..."

மீண்டும் அவரது அண்ணன் சொல்ல... தங்கவேலு தன் மனைவியைப் பார்த்துக் கண்ணைக் காண்பித்தார். அவரும் கணவரது ஜாடையைப் புரிந்து கொண்டு உள்ளே சென்றார்.

"ஏங்க, உங்க பையன் ஏன் இந்தப் பம்மு பம்மு றான்... ஒருவேளை பொண்ணு ரொம்ப அழகா இருக் குமோ...?" மகனின் ஆர்வமான முகத்தைச் சந்தேகத் துடன் பார்த்தபடி கேட்டார் அபிநயா.

"தெரியலையே அபி... இருந்தாலும் இருக்கும்... யார் கண்டது... உன் பையனே மயங்கி இருக்கான்னா நிச்சயம் ரதி மாதிரிதான் பொண்ணு இருக்கணும்."

அந்நேரம் நித்யாவின் துணையுடன் அங்கு வந்த சங்கீதாவைப் பார்வையால் பருகினான் ஹரி. அவனின் ஆர்வம் கலந்த காதல் பார்வையைக் கண்டதும் மாரீஸ்வரிக்குச் சற்று நிம்மதியாய் இருந்தது.

தன் பெண்ணைச் சீரழித்தவனை அவர் வில்லன் மாதிரிக் கற்பனை பண்ணி வைத்திருக்க, வந்தவனோ கதாநாயகன் போல் இருந்ததோடு மட்டும் இல்லாமல், அவன் தன் மகளைப் பார்த்த பார்வையிலேயே அவனின் காதல் அவருக்குப் புரிந்து போக, அவரது முகத்தில் எல்லையற்றத் திருப்தி நிலவியது. இனி தன் மகள் வாழ்க்கைச் சீராகி விடும் என்று நினைத்தார்.

"சங்கீ.. விழுந்து கும்பிடாத்தா..." பெரிய தந்தை சொன்னதை அவள் செய்ய, அவளது ஒவ்வொரு செயலையும் ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்த ஹரி, அவளைத் தலை முதல் கால் வரை அளவிடவும் தவறவில்லை.

சற்றே மெலிந்து, முகத்தில் மகிழ்ச்சியை இழந்து, கூடனே என்று வந்து நின்றவளின் மனநிலை அவனுக்குப் புரிவதாய்... இதற்கு எல்லாம் காரணம் தன் நடத்தை அல்லவா என்று நினைத்தவனுக்குத் தன் மேலேயே கோபம் வந்தது.

அவள் தன்னை நிமிர்ந்து பார்த்தாலாவது கண்களால் மன்னிப்பை வேண்டலாம் என்று பார்த்தால், அவள் நிமிரும் வகை தெரியவில்லை. ஏக்கத்துடன் அவனது விழிகள் அவளை வருடின.

இதைக் கண்ட அபிநயாவுக்கு ஆற்றாமை தாங்கவில்லை. ஏனெனில், மகனின் விருப்பு வெறுப்பு அனைத்தும் அவருக்கு அத்துப்படி... ஆனால், சுமாரான அழகுள்ள சங்கீதாவை மகன் எப்படிக் காதலித்தான் என்று அவருக்கு அதிசயமாக இருந்தது.

அதிலும் அவன் சங்கீதாவைப் பார்க்கும் பார்வை அவனின் காதலைச் சொல்லாமல் சொல்ல, அவருக்கு வியப்பாய் இருந்தது. இப்போது அவருமே சங்கீதாவை வியப்புடன் பார்த்தார். தறிகெட்டு அலைந்த தன் மகனை எதனால் இப்படித் தலைகுப்புற விழச் செய்தாள் இந்தப் பெண் என்று ஆராய்ச்சியாய் அவரது பார்வை படிந்தது மருமகள் மீது. ம்ஹூம்... அவருக்கு விசேஷமாய் எதுவும் தெரியவில்லை... புரியவில்லை.

"மேற்கொண்டு பேசுறதா இருந்தாப் பேசிக்கோங்க." அந்தப் பெரியவர் சொன்னதும், ஹரி தனது தந்தையை நோக்கிக் கண்ணைக் காண்பிக்க...

மகாதேவன் ஒருமுறை மனைவியைத் திரும்பிப் பார்த்தவர், பின் தொண்டையைச் செருமிக் கொண்டு...

"உங்க வீட்டுப் பொண்ணு எங்க வீட்டு மருமகளா வருவதற்கு முழுச் சம்மதம்ங்க... அதே மாதிரி..." என்றவர் நிறுத்தி விட்டு மனைவியைப் பார்க்க... அபிநயாவும் கணவரைப் புரியாமல் பார்த்துக் கொண்டிருந்தார்.

"அதே மாதிரி எங்க வீட்டுப் பொண்ணை உங்க பையனுக்குப் பேசி முடிக்கலாம்னு நினைக்கிறோம்... உங்க பையன் உதய்யை எங்களுக்கு ரொம்பப் பிடிச்சுப்

போச்சு...” என்றவரை, அதிர்ந்து போய்ப் பார்த்தார் அபிநயா.

மெல்ல அந்த அதிர்ச்சியானது உருமாறி, கோபமாய் உருவெடுத்தது. கணவனையும், மகனையும் மாறி மாறிப் பார்த்தவருக்கு, இருவரும் ஏதோ சதித் திட்டம் தீட்டியிருப்பது புரிந்து போனது.

மகாதேவன் வார்த்தைகள் கேட்டு உதய்யும் அதிர்ச்சி அடைந்தான். ‘என்ன நினைச்சிக்கிட்டு இந்தாளு இப்படிப் பேசுறாரு... இவர் பையன் பண்ணுன தப்புக்குச் சங்கீதாவைக் கல்யாணம் பேச வந்தது சரி... இதுல என் கல்யாணத்தைப் பத்திப் பேச என்ன இருக்கு...?’ அவனுக்கு ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது.

சங்கீதாவும் அதிர்ந்து போய் அண்ணனைப் பார்த்தாள். அவனின் காதல் விவகாரம் அவளுக்குத் தெரியுமே...! தன்னால் தன்னுடைய அண்ணனின் வாழ்க்கை கேள்விக் குறியாவதைக் கண்டவளுக்கு, ஹரியை மணந்து கொள்ள விருப்பமே இல்லை. சும்மாவே அவனின் மீது வெறுப்பைச் சுமந்து கொண்டிருப்பவளுக்கு, மகாதேவனின் வார்த்தைகள் அதற்குத் தூபம் போட்டது.

தங்கவேலுவுக்கும், மாரீஸ்வரிக்குமே இது சற்று அதிர்ச்சியாகத்தான் இருந்தது. மகள் செய்த தவறுக்கு வேறு வழியின்றி வேற்றுச் சாதிக்காரனை மாப்பிள்ளையாக ஏற்றுக் கொள்ளச் சம்மதித்தால், இதில் தங்கள் மகனின் தலையை உருட்டுவது அவர்களுக்கும் அவ்வளவு பிடித்தமாய் இல்லை.

அவர்கள் மகனின் திருமணம், அவர்கள் விருப்பப்படி, அவர்கள் இனத்தில் நல்ல பெண்ணாய்ப் பார்த்து நடக்க வேண்டும். அதுதான் அவர்களது ஆசையும் கூட.

"இங்கே பாருங்க... காதலிச்சது உங்க பையனும், என் பொண்ணும்... இதுல எம் பையன் வாழ்க்கையைப் பத்தி நீங்க பேசுறது அவ்வளவு சரியாப் படல..."

இதுவரை தன் அண்ணனைப் பேச விட்டு அமைதி காத்தவர், தன் மகனது வாழ்க்கை என்றதும், தானே பேசினார் தங்கவேலு. அவரது வார்த்தையில் நிம்மதி அடைந்தனர் உதய்யும், சங்கீதாவும்.

"அதானே... என் தம்பி சொல்றது சரிதான்... எங்க பொண்ணு வாழ்க்கை வேணும்னா உங்க கையில இருக்கலாம்... அதுக்காக வேண்டி எங்க பையனோட வாழ்க்கையைப் பத்தி நீங்க பேசுறது சரியில்லை..."

தங்கவேலுவின் அண்ணன் தம்பிக்குப் பரிந்து பேச... அங்கே சின்னச் சலசலப்பு உண்டானது.

"நான் உதய்யோடு கொஞ்சம் பேசணும்..." என்றபடி எழுந்த ஹரியைக் கண்டு எல்லோரும் நகைத்தனர்.

"மாப்புள்ள பொண்ணு கிட்ட பேசணும்னு சொன்னா அது நியாயம்... குமாரு கிட்டப் பேசி என்ன பண்ணப் போகுது..." ஹரியின் பேச்சு அவர்களுக்குச் சிரிப்பை வரவழைத்தது.

கூடியிருந்தவர்கள் கேலி, கிண்டலைக் கொஞ்சமும் சட்டை செய்யாமல், "உதய்... நாம பேசலாமா...?" என்ற

ஹரியிடம், என்ன சொல்வது என்று தெரியாமல் சம்மத மாய்த் தலையை அசைத்தான் உதய்...

ஹரியை அழைத்துக் கொண்டு வெளியில் வந்த உதய், என்ன என்பது போல் அவனைப் பார்த்தான்.

"மதுரையில் வெயில் அதிகமா இருக்குமோ...?" சம்பந்தமில்லாமல் பேசியவனை எரிச்சலுடன் பார்த்தாலும் ஒன்றும் சொல்லவில்லை உதய்.

"என்ன மச்சான்... என் மேல கோபமா வருதா... வந்த விஷயத்தைப் பேசித் தொலைடான்னு எரிச்சலா இருக்கா...?"

அதற்கும் பதில் அளிக்காமல் அவனை ஒரு பார்வை பார்த்த உதய், வாயைத் திறக்கவில்லை.

"சரி. நான் நேரே விஷயத்துக்கு வர்றேன்... நான் உன் தங்கச்சியைக் கல்யாணம் பண்ணிக்கணும்னா, நீ என்னோட தங்கச்சியைக் கல்யாணம் பண்ணிக்கணும்..."

"என்னது...?" என்று அதிர்ச்சி அடைந்த உதய் சமாளித்துக் கொண்டு,

"பண்ணிக்கலைன்னா என்ன பண்ணுவ...?" சற்றே இளக்காரக் குரலில் கேட்டான். தனது வாழ்க்கையைக் காதலைப் பணயம் வைக்க இவன் யார் என்ற கோபம் அவன் மனதில் கனன்று கொண்டிருந்தது.

"ம்... என்ன பண்ணுவேன்..." தாடையைத் தடவிக் கொண்டு யோசித்த ஹரி அசட்டையாய்,

"கீத்துவைக் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்..." என்றவனின் சட்டைக் காலரை ஆத்திரத்துடன் பற்றி யிருந்தான் உதய்.

"விடுங்க மச்சான்... யாராவது பார்த்து நாம சண்டை போடுறோம்னு நினைச்சுக்கப் போறாங்க..." முகத்தில் மாறாத சிரிப்புடன் கூறியவனின் சட்டையை மெல்ல விடுவித்தவன், அவனை முறைத்துப் பார்த்தான்.

"என்ன நக்கலாடா... இப்போ நீ இருக்கிறது என் ஊருல... உன் கையைக் காலை உடைச்சு என் தங்கச்சி கழுத்துல தாலி கட்ட வைக்க என்னால முடியும்... பாக்கிறியா..." உதய் அவனுக்குச் சவால் விட...

"தாலி மட்டும்தான் கட்ட வைக்க முடியும் மிஸ்டர் உதய். அவளோட என்னை வாழ வைக்க முடியுமா உன்னால...?" பதிலுக்கு ஹரி சவால் விட்டான்.

ஹரியின் ஆணவப் பேச்சிற்கு உதய்யால் சட் டென்று பதில் கூற முடியவில்லை. தங்கையின் வாழ்க்கை எந்தளவுக்கு முக்கியமோ அதே போல் உமாவுடனான அவனது காதலும் முக்கியம். அதிலும் அன்புக்கு ஏங்கும் ஆதரவற்ற குழந்தையாய் இருக்கும் உமாவை, அவனால் அம்போவெனக் கைவிட முடியாது.

உமாவா... சங்கீதாவா என்று நினைத்தவன் மனதில் தராசுத் தட்டு சமமாய் அப்படியே நின்றது. இரண்டு கண்ணில் எது முக்கியம் என்றால் என்ன என்று கூறுவது...?

"என்ன மச்சான், முடியாதா... அப்போ சரி, என் அப்பா, அம்மாவைக் கூட்டிட்டு நான் கிளம்பறேன்..." என்றவனைக் கொலைவெறியுடன் பார்த்தான் உதய்.

"உனக்கு என்ன சீர் வேணும்னாலும் கேளு, நான் கொடுக்குறேன்... இவ்வளவு ஏன்... என் பங்கு சொத்து முழுசையும் சங்கீ பேருக்கு மாத்தித் தர்றேன்... தயவு செஞ்சு சங்கீயைக் கல்யாணம் பண்ணிக்கோங்க மாப்பிள்ளை..." என்றவனை அலட்சியமாய்ப் பார்த்தான் ஹரி.

"என் கிட்ட இருக்கிற சொத்துல கால்வாசி வருமா உன் சொத்து... எனக்கு வேண்டியது உன்னோட சொத்து இல்லை... உன்னோட மன வலி... அன்னைக்கு என்னை என் ஆபீசில வந்து அடிச்சியே... அப்போ எனக்கு உண்டான அதே மன வலியை நீ காலம் பூரா அனுபவிக்க வேண்டாம்... அதுக்குத்தான் இது..." என்ற வனைத் திகைத்துப் போய்ப் பார்த்தான் உதய்.

"உன்னோட தெய்விகக் காதலைப் பத்தி கீத்து என் கிட்ட நிறைய சொல்லியிருக்கா... அந்தத் தெய்விகக் காதலை நீ இழந்து, வாழ்க்கை முழுவதும் கஷ்டப் படணும்... அதுதான் எனக்கு வேணும். எனக்கு ஒரு அடி விழுந்தா, என்னோட எதிராளிக்கு ஆயிரம் அடி விழணும்ன்னு நினைக்கிற பக்கா பிசினெஸ்மேன் நான்...

"உன் தங்கச்சி கழுத்துல தாலி ஏறணும்னா... நீ உன் காதலை உதறிட்டு என்னோட தங்கச்சி கழுத்துல தாலி கட்டணும்... இதுதான் என்னோட முடிவு. இதுதான்

என்னை அடிச்சதுக்காக உனக்கான தண்டனை..." ஈவு இரக்கமில்லாமல் பேசியவனைக் கண்டு, அயர்ந்து போனான் உதய்.

"நீ அழிக்க நினைக்கிறது என்னோட வாழ்க்கை மட்டும் இல்ல... ஒரு அப்பாவிப் பொண்ணோட வாழ்க்கையையும்தான்... அவளுக்கு என்னை விட்டா யாரும் கெடையாது மாப்பிள்ள... உங்கள அடிச்சது தானே உங்களுக்குக் கோபம்... நான் வேணும்னா உங்க காலுல விழுந்து மன்னிப்புக் கேட்டுக்கிடறேன்..." என்ற உதய், உமாவுக்காக ஹரியின் காலில் கூட விழத் தயாரானான்.

"ஐயோ, என்ன இது... ஓல்டு சினிமா ஹீரோயின் மாதிரி சென்ட்டிமென்ட் டயலாக் எல்லாம் பேசிட்டு... நீ என்னோட கால்ல விழுந்தாலும் என் முடிவு மாறப் போறது இல்லை..." என்றவனின் அகங்காரப் பேச்சில் உதயின் உணர்வுகள் வடிந்து உடலும் மனமும் இறுகியது. வேறு வழியின்றி தங்கையின் வாழ்க்கைக்காகத் தனது காதலைக் குழி தோண்டிப் புதைத்தவன்,

"சரி. நீங்க சொல்றதுக்குச் சம்மதிக்கிறேன்..." என்ற உதய்யை மெச்சுதலாய்ப் பார்த்த ஹரி,

"உங்க தங்கச்சி பாசம் முன்னாடி சிவாஜி, சாவித்திரி எல்லாம் தோத்தாங்க..." என்று சிலாகித்தவனைப் புரியாத பார்வை பார்த்த உதய்,

"அதே மாதிரிதானே உங்களுக்கும் உங்க தங்கச்சி... இந்தப் பிடிக்காத கல்யாணத்துல பாதிக்கப்படுறது நான்

மட்டுமில்ல... உங்க தங்கச்சியும்தான்..." என்ற உதய்யை மர்மப் புன்னகையுடன் பார்த்த ஹரி,

"என்னோட தங்கச்சியைக் கல்யாணம் பண்ணிக்கச் சம்மதிச்சதுக்கு ரொம்ப சந்தோஷம் மச்சான்..." என்று உதய்யைக் கட்டிப் பிடித்துக் கொண்ட ஹரி, அவன் கேட்டதுக்குப் பதில் மட்டும் சொல்லாமல் தவிர்த்தவன், இந்தச் செய்தியைப் பகிர்வதற்காகச் சந்தோஷத்துடன் உள்ளே சென்றான்.

உதய்யின் முடிவைச் சபையினர் முன் ஹரி அறிவித்தபோது சங்கீதா அதிர்ச்சியுடன் உதய்யைப் பார்த்தவள், "வேண்டாம்ணே..." என்பது போல் கண்களால் இறைஞ்சினாள். அவளின் பார்வையைச் சந்திக்க முடியாமல் உதய் தலையைக் குனிந்தான்.

"அப்பா... நமக்குச் சங்கீ கல்யாணம் முக்கியம்ப்பா... இதுக்கு நீங்க சம்மதம் சொல்லுங்க..." முத்துராம் தந்தையின் காதில் கிசுகிசுக்க... தங்கவேலு யோசனையில் ஆழ்ந்தார்.

பின்பு ஏதோ நினைத்தவராய், இளைய மகனைப் பார்த்தார். அவனின் இறுகிய முகத்தில் இருந்து அவரால் ஒன்றும் கண்டுபிடிக்க முடியவில்லை. அவரின் முடிவு எதுவாக இருந்தாலும் அதற்கு மகன் சம்மதிப்பான் என்று அவன் மீது அளவு கடந்த நம்பிக்கை இருந்தது அவருக்கு.

அதனால் உதய்யின் சம்மதத்தை வாய் வார்த்தை யில் கேட்கவில்லை. மனைவியைப் பார்த்தார்... அவரோ

மகளது திருமணம் நடக்குமா நடக்காதா என்ற பரிதவிப்பில் நின்றிருந்தார். அதற்காக மகனைப் பலிகடா ஆக்கவும் மாரீஸ்வரிக்கு விருப்பம் இல்லை.

"நீங்க பொண்ணு பார்க்க வந்த மாதிரி நாங்களும் கூடிய சீக்கிரம் பொண்ணு பார்க்க உங்க வீட்டுக்கு வர்றோம்..." வேறு வழியின்றி மருமகப் பொண்ணைப் பார்க்காமலே மகளுக்காகத் தங்கவேலும் பெண் கொடுத்து பெண் எடுக்கச் சம்மதித்தார்.

'முடிஞ்சது... எல்லாம் முடிஞ்சது... உமா என்னை மன்னிச்சிரு... உன்னைப் பூப்போல் பார்த்துக்கணும்னு நெனைச்சேனே... உங்க அப்பாரு கிட்ட இருந்து என்னால காப்பாத்த முடியாமப் போச்சே...'

மனதுக்குள் புலம்பியவன் மனக்கண்ணில் அவளது உடல் காயங்கள் ஞாபகம் வந்து, அவனை வேதனையில் ஆழ்த்தியது. மனம் முழுவதும் வலி எழ, வேதனையுடன் அருகில் இருந்த சுவரின்மீது கண் மூடிச் சாய்ந்தான்.

உமாவைப் போல் அன்பான பெண் அவனது வாழ்க்கையில் இனி வரக் கூடுமா...? ஹரியின் தங்கை எப்படி இருந்தாலும் உமாவின் காதலுக்கு ஈடாவாளா...? உமா... உமா... உமா... என்று ஓலமிட்டு அழுதது அவனது இதயம். இந்த நொடி தன்னுயிர் பிரிந்து காற்றாய்ப் பறந்து உமாவின் காலடியில் தஞ்சமடையக் கூடாதா என்று அவன் மனம் துடித்தது.

இனி எப்படி உமாவின் முகத்தில் விழிப்பான். துரோகி, ஏமாற்றுக்காரன் என்று அவள் அவன் முகத்தில் காறித் துப்ப மாட்டாளா...? தான் அவளுக்குச் செய்த

துரோகத்துக்கு, அவள் செருப்பால் அடித்தால் கூட வாங்கிக் கொள்ளத்தான் வேண்டும். அதுக்கு அவளுக்கு முழு உரிமை இருக்கிறது என்று நினைத்தவன், உமாவின் நினைவில் அமிழத் துவங்கினான்.

"குமாரு... மச மசன்னு நிக்காம வேலையைப் பாரப்பு..."

யாரோ ஒருவர் அவனை அழைக்க... மனதின் துக்கத்தைத் தள்ளி வைத்தவனை அடுத்தடுத்த வேலை கள் ஆக்கிரமித்துக் கொண்டன.

மகாதேவன் மறந்தும் மனைவி பக்கம் பார்க்க வில்லை. அபிநயாவோ தனக்குள் இறுகிப் போனவராய் அமர்ந்திருக்க, ஹரி அவரைக் கொஞ்சம் கூடக் கண்டு கொள்ளவில்லை. கிளம்புவதற்கு முன் அவன் சங்கீதா விடம் பேச வேண்டும் என்று சொல்ல, அதற்குச் சம்மதம் அளிக்கப்பட்டது.

தனிமையில் தன் முன் நின்றிருந்த சங்கீதாவின் அருகில் வேகமாய் வந்த ஹரி, அவளது காயம் பட்ட இடக்கையை எடுத்து மெல்ல வருடி அதில் முத்தமிட்டவன், அடுத்த நொடி அவளை இறுக அணைத்துக் கொண்டான்.

"எப்படி கீத்து உன்னால இப்படி ஒரு முடிவு எடுக்க முடிஞ்சது...? நீ செத்துப் போனா அடுத்த நொடி நானும் செத்துப் போயிருப்பேன் பேபி... ஐ லவ் யூ பேபி..."

கண்கள் கலங்கக் கூறியவன், அவளின் முகம் முழுவதும் முத்தமிட... அவளோ எந்தவொரு உணர்வை யும் காட்டாது விறைத்தபடி நின்றிருந்தாள்.

"சாரி பேபி... அன்னைக்கு நான் பேசியதுக்கு எல்லாம் இப்போ சாரி கேட்டுக்குறேன்... என் மனசை நானே புரிஞ்சிக்காம இருந்தேன்... இப்போப் புரியுது... அன்னைக்கு ஏற்பட்ட சந்தோஷத்துக்கான காரணம்... ஏன்னா..."

அவள் முகம் பற்றி நிமிர்த்தியவன், "என் இதயம் முழுவதும் நீதான் இருக்கே..." என்றவனை எந்தவித உணர்வும் இல்லாமல் பார்த்தவள்,

"எதுக்கு எங்கண்ணா காதலுக்கு உலை வச்சீங்க... உங்களுக்கு நல்லாவே தெரியும்... எங்கண்ணா காதலிக்கிறது... அப்படி இருந்தும் நீங்க இப்படிச் செய்வீங்கன்னு நான் கொஞ்சங்கூட நெனைச்சுப் பார்க்கலை..." அவளது கண்கள் வெறுப்பைக் கக்கியது.

அவளுக்குத் தன்னுடைய வேதனை கூட பின்னுக் குத் தள்ளப்பட்டு, அண்ணனின் காதல் கைகூடாத வேதனை முன்னுக்கு வந்து, ஹரியின் மேல் எல்லை யில்லா வெறுப்பை உண்டு பண்ணியது.

அவளைக் கூர்ந்து பார்த்தவன், "இது எனக்கும் உன் அண்ணனுக்கும் நடக்கிற யுத்தம்... இதுல நீ தலையிடாமல் ஒதுங்கி நில்லு..."

"அது எப்படி ஒதுங்கிப் போக முடியும்...? எங்கண்ணா வேற நான் வேற இல்ல..." கோபத்துடன் இறைந்தவளை ஆசையாகப் பார்த்தவன்,

"நிச்சயம் எனக்கு வேற வேறதான்..." என்றவன், அவளின் முகம் பற்றி இதழ் முத்தம் ஒன்று கொடுத்தவன்,

"உனக்கு இப்படி முத்தம் கொடுத்த மாதிரி உங்க அண்ணனுக்கு நான் கொடுக்க முடியுமா...? உன்னை லவ் பண்ற மாதிரி அவனை நான் லவ் பண்ண முடியுமா...? என்ன பேபி... யோசிக்காம முட்டாள் மாதிரி பேசுறியே...?" விளையாட்டாய்ப் பேசியவனை எரித்து விடுவது போல் பார்த்தாள் அவள்.

"இந்த உலகத்துலேயே நான் அதிகமா வெறுக்கிறது உங்களைத்தான்..."

"இந்த உலகத்துலேயே நான் அதிகமா நேசிக்கிறது உன்னைத்தான் பேபி... அதே மாதிரி உன்னை என்னை நேசிக்க வைக்கவும் என்னால் முடியும்... அது எப்படின்னு கல்யாணத்துக்கு அப்புறம் சொல்றேன்... இப்போ கல்யாணப் பொண்ணா லட்சணமா கனவு கண்டுட்டே இரு, என்ன...?" என்றவன், அவளை மீண்டும் ஒரு முறை அணைத்து விடுவித்தவன், அவளின் பதிலை எதிர் பாராமல் வெளியில் சென்றான். அவனின் வார்த்தையில் விக்கித்துப் போனவளாய் நின்றிருந்தாள் சங்கீதா.

"ஏண்ணே இப்படிச் செய்தீக...? பெண் பாவம் பொல்லாததுண்ணே..." என்றவளை நிமிர்ந்து பார்த்தவன், தன் உள்ளத்து வேதனையை மறைத்துக் கொண்டு, அவளைப் பார்த்துப் புன்னகைத்தான்.

"உனக்காக எதையும் செய்வேன் சங்கீ..." என்றான் அவளின் கையை ஆறுதலாய்ப் பற்றியபடி,

"ஆனாலும் பாவம்ணே அண்ணி... இந்த ஏமாற்றத்தை எப்படித் தாங்கிக்கப் போறாக...? அவுக

மனசு என்ன பாடுபடும்னு பொண்ணான எனக்குத்தான் தெரியும்..." ஹரியின் நினைவில் அவளது விழிகள் கசிந்தது.

அவளது அண்ணி என்ற விளிப்பு அவனுக்கு ஆனந்தத்தை எந்தளவுக்கு அளித்ததோ, அந்தளவுக்கு அதிக வேதனையை அவனுக்குக் கொடுத்தது. மனதில் எழுந்த விரக்தியுடன்,

"அவளுக்கு என்னம்மா ராணி... நான் இல்லன்னா என்ன ராசா மாதிரி புருசன் கெடைப்பான்... எங்க இருந்தாலும் அவ மனசுக்கு அவ நல்லாயிருப்பா..."

"அண்ணே... உங்களுக்கு வருத்தமா இல்லை யாண்ணே..." உதய்யின் நிலை கண்டு அவளுக்குத்தான் கண்களில் நீர் நிரம்பியது. தன்னுடைய முட்டாள்தனத்தால் பாதிக்கப்படுவது தன் அண்ணனின் காதல் என்பதை உணர்ந்தவளுக்கு வேதனையாய் இருந்தது.

"இதுல வருத்தப்பட என்ன இருக்கு...? எல்லாக் காதலும் கல்யாணத்துல முடியறது இல்ல சங்கீ... அப்படி முடிஞ்சிருந்தா டாஸ்மாக் கடையில இம்புட்டுக் கூட்டம் நிரம்பி வழியுமா, சொல்லு... அதனாலதானே நம்ம ஒயின்ஷாப் எல்லாம் நிரம்பி வழியுது..." என்று விளையாட்டாய்க் கூறிச் சூழ்நிலையைச் சகஜமாக்க முயன்றான்.

"அண்ணே..." குழப்பமாய் அவனைப் பார்த்தாள் சங்கீதா.

"அதைத்தான் சொல்றேன்... அண்ணா இருக்கேன்... நீ நிம்மதியா இரு.. நான் பார்த்துகிடறேன்..."

என்றவனின் வார்த்தையை நம்ப முடியாமல், குழப்பத்துடன் அவனைப் பார்த்தபடி அறையை விட்டு வெளியேறினாள் சங்கீதா.

தங்கையைச் சமாளித்த மாதிரி உமாவைச் சமாளிக்க முடியுமா...? அவன் மனதில் எண்ண அலைகள் எழ... அவன் மெல்ல மெல்ல உமாவின் நினைவுகளில் மூழ்கத் துவங்கினான்.

இனி, அவனுக்கு இருக்கும் ஒரே ஆறுதல் அது மட்டுமே.

தன் முன் மௌனமாய் அமர்ந்திருந்த உதய்யின் அமைதி, உமாவிற்குப் புதிதாய் இருந்தது. அவளைப் பார்த்தாலே கண்கள் மின்ன, முகம் பூரிக்க அவன் பேசும் அழகை நாள் முழுவதும் பார்த்து ரசித்துக் கொண்டே இருக்கலாம் போல் தோன்றும் அவளுக்கு.

ஆனால், இன்று அவன் இருந்த நிலை அவளுக்கு வித்தியாசமாய்த் தோன்றியது.

அவளைப் பார்க்க வேண்டும் என்று அவன்தான் அவளை அழகர்கோயிலுக்கு அழைத்து வந்திருந்தான். வழக்கம் போல் சாமி தரிசனம் முடிந்து வந்து தனிமையில் அமர்ந்ததும், உதய் தன் மௌன விரதத்தைக் கடைப்பிடிக்க ஆரம்பித்து விட்டான்.

"உதய்..." தங்களுக்கிடையில் நிலவிய மௌனத்தின் கனத்தைத் தாங்க முடியாமல் அவளே அதைக் கலைத்தாள்.

"உமா... நாம பிரிஞ்சிடலாம்..." மொட்டையாகச் சொன்னவனைக் கண்டு முதலில் திகைத்தவள், பின் முகத்தில் குறும்பு துலங்க,

"சும்மா ஜோக்கடிக்காதீங்க உதய்... இன்னைக்கு ஏப்ரல் ஃபர்ஸ்ட் கூட இல்லை..." என்றபடி கலகலவெனச் சிரித்தவளை நிமிர்ந்து பார்த்தான்.

இந்தளவுக்கு நம்பிக்கையுடன் இருக்கும் இவளைப் போய் ஏமாற்றப் போகிறோமே என்று அவனுக்கு வருத்தமாக இருந்தது. ஆனால், வேறு வழியில்லை... எல்லாம் தங்கையின் வாழ்க்கைக்காக என்ற மனதை முயன்று சமாதானப் படுத்தியவன்,

"உண்மையாத்தான் சொல்றேன்..." என்றவனை நம்ப முடியாமல் பார்த்தவள்,

"விளையாடாதீங்க உதய்..." அவளின் குரல் போல் அவளின் உடலும் நடுங்கியது.

"சீரியசாத்தான் சொல்றேன் உமா..." என்றவன், தனக்குத் திருமணம் நிச்சயிக்கப்பட்ட செய்தியை அவளிடம் கூறினான். எல்லாவற்றையும் கூறியவன், திருமணத்திற்கு முன் தன் தங்கை பாதை மாறிப் போனதை மட்டும் அவளிடம் சொல்லாமல் மறைத்து விட்டான்.

என்னதான் காதலித்த பெண்ணாய் இருந்தாலும், அவளிடம் கூடத் தன் தங்கையை விட்டுக் கொடுக்க அவனுக்கு மனம் வரவில்லை.

"உதய்... எப்படி உதய் உங்களால இப்படிச் சொல்ல முடியுது...? பொய் சொல்லாதீங்க... என்னைக் கை

விட்டுறாதீக உதய்... நீங்க இல்லைன்னா எனக்கு வாழ்க்கையே இல்லை உதய்... ப்ளீஸ் உதய்..."

மீண்டும் அவன் சொன்னதை நம்பாமல் கேட்டவள், "உங்க கால்ல விழுந்து கெஞ்சிக் கேட்கிறேன் உதய்..." என்று காலில் விழப் போன உமாவைக் கண்டு பதறிய வன், அவளிடமிருந்து தள்ளி விலகி நின்றான்.

"உமா... நான் சொல்றது சத்தியம்... எனக்கு வேற பெண்ணோட நிச்சயம் நடக்கப் போகுது... என்னால இதை மறுக்க முடியலை... என்னோட நிலைமை அப்படி... ப்ளீஸ் உமா... உனக்கு என்ன கொறை... நீ வேற நல்ல பையனாப் பார்த்துக் கல்யாணம் பண்ணிக்கோ..." என்றவனை மேலே பேச விடாமல் கையமர்த்தித் தடுத்த வள், அதிர்ச்சியில் அப்படியே சிலையாய் அமர்ந்து விட்டாள்.

கொஞ்ச நேரத்திற்கு முன்பு தன் உயிர் தன்னை விட்டுப் போயிருக்கக் கூடாதா என்றிருந்தது அவளுக்கு. ஏனெனில், அவனை காதலித்த மகிழ்ச்சியில் சந்தோஷ மாய் இறந்து போயிருப்பாளே... ஆனால், இப்போது உயிருடன் அல்லவா மரித்துக் கொண்டிருக்கிறாள். உயிர் வதை, உயிர் வலி என்பது இதுதானா...? அதை அவளால் தாங்க முடியவில்லை.

உமாவின் நிலையைக் கண்ட உதய் பதறியவனாய், "உமா... இங்கே பாரு..." என்று அவள் தோளைத் தொட...

"என்னைத் தொடாதே..."

திடீரென்று தன்னைப் பார்த்து சீறியவளைக் கண்டு, திகைத்துப் போய் அவன் நிற்க,

"நீ தொட்டா எனக்கு அருவருப்பா இருக்கு..." என்றவளின் வார்த்தையில், அவன் இரண்டாவது முறையாகச் செத்துப் போனான். முதன் முறை முகம் அறியாத பெண்ணுடன் நடந்த திருமணப் பேச்சு வார்த்தையில்... இரண்டாவது முறை அவனது காதலியின் இந்த வார்த்தையில்...

எவனின் தொடுகையில் ஊனும் உயிரும் உருகுகிறது என்றாளோ... அவனின் தொடுகையை அருவருப்பாய் இருக்கிறது என்று சொன்னால், அதற்கு என்ன அர்த்தம்...? அவள் தன்னை முழுவதுமாய் வெறுத்து விட்டாள் என்றுதானே அர்த்தம்.

"உமா... நான் சொல்றதை..." தன் தரப்பில் சொல்வதற்கு எந்தவித நியாயமும் இல்லை என்று தெரிந்தாலும், ஏனோ அவன் அவளுக்கு விளக்கம் கொடுக்க நினைத்தான்.

"இதுக்கு மேல ஒரு வார்த்தை பேசாதே... போயும் போயும் உன்னைப் போய்க் காதலிச்சேனே... உன்னை வீரன்னு நினைச்சேனே... ஆனா நீ இப்படி ஒரு கோழைன்னு எனக்குத் தெரியாமப் போச்சே..."

படபடவெனப் பொரிந்தவளைக் கண்டு அவனுக்குப் பேச வார்த்தை வரவில்லை. அவள் சொல்வதும் நியாயம் தான்.

பாதிக்கப்பட்ட அவளின் மன நிலையைப் புரிந்து கொண்டவனாய் அமைதி காத்தான். அவனது இயல்பான

குணத்துக்கு இப்படி அடங்கி இருப்பது என்பது இயலாத காரியம்... அதுவும் ஒரு பெண்ணிடத்தில். ஆனால், தனது இயலாமையினால், மனம் முழுவதும் நிரம்பியிருந்த அவள் மீதான காதலினால், அவன் அவளிடம் அடங்கி ஒடுங்கி நின்றான்.

"உன் தங்கச்சி காதலிச்சான்னு அவளுக்குப் பிடிச்சவனைக் கல்யாணம் பண்ணத் துடிக்கிறியே... அதுவும் உன் காதலைத் தியாகம் பண்ணி... உன் தங்கச்சி மாதிரிதானே நானும்... என் காதல் மட்டும் என்ன பாவம் பண்ணுச்சு... என்னை ஏன் என் காதலனோட சேர்த்து வைக்க உன்னால முடியல..."

ஆங்காரமாய் அவனின் சட்டையைப் பிடித்துக் கொண்டு கேட்டவளின் கேள்விக்கு, அவனிடத்தில் பதில் இல்லை.

'என் தங்கை கல்யாணத்துக்கு முன்னாடி கெட்டுப் போயிட்டா... அதனாலதான் வேறு வழியில்லாமல் இந்தக் கல்யாணத்துக்கு நான் ஒத்துக்கிட்டேன்...' என்று அவனால் வாய் விட்டுச் சொல்ல முடியாத அவல நிலை அவனது நிலை...

"ஏன்னா... நான் உன் தங்கச்சி இல்லை பாரு... அதான் என்னை ஈசியா உதறித் தள்ளிட்டுப் போயிட்ட இல்ல..."

"உமா, ப்ளீஸ்..." அவனின் கண்களின் வலியை அவள் உணரவில்லை. அவனை விட அதிக வலியில் துடிப்பவளுக்கு, அவனின் வலியை எங்ஙனம் புரிந்து கொள்ள முடியும்?

"கோழை... உனக்கு மீசை எல்லாம் ஒரு கேடா...? தூ..." ஆத்திரத்தில் அறிவிழந்தவளாய் அவனது முகத்தில் காறி உமிழ்ந்தாள் அவள்.

"உமா..." என்ற அவன், அவளை அதட்டிய போதும், பொறுமை காக்கத்தான் செய்தான்.

அவள் செய்த பிழையாவது துடைத்தால் அழிந்து போகக் கூடிய பிழை. ஆனால், அவன் அவளுக்குச் செய்தது காலத்தால் கூட அழிக்க முடியாத பச்சைத் துரோகம் அல்லவா...! தான் செய்த துரோகத்துக்கு அவள் செருப்பால் அடித்தால் கூடத் தாங்கிக் கொள்ள வேண்டும் என்று நினைத்தவனுக்கு, இந்த உமிழ் நீர் அடி ஒன்றும் பெரியதாய்த் தோன்றவில்லை.

அவளது உமிழ் நீரின் ஈரம் அவனின் மனதில் எரிந்து கொண்டிருந்த தீயை அணைக்க முயல்வதை அவன் உணர்ந்தான். அவள் காறி உமிழ்ந்ததைக் கூட, அவன் பாலாபிஷேகம் செய்ததைப் போல்தான் உணர்ந்தான்.

"கோபம் வருதா... நல்லா வரட்டும்... எனக்கு இப்போ அப்படித்தான்டா இருக்கு... நான் தெரியாமத் தான் கேட்கிறேன்... உன் தங்கச்சிக்கு அந்த மாப் பிள்ளையை விட்டா வேற மாப்பிள்ளையா கிடைக்காது... பேசாம அவளை விட்டுட்டு வேற மாப்பிள்ளை பார்க்க வேண்டியதுதானே..."

அவள் கேட்டதுக்குப் பதில் சொல்ல முடியாமல் அவன் தலை கவிழ... அவளது முகத்தில் ஏளனப் புன்னகை ஒன்று வந்தமர்ந்தது.

"ஒருவேளை கல்யாணத்துக்கு முன்னாடியே உன் தங்கச்சி கெட்டுப் போயிட்டாளோ...?" அவளின் ஏளனக் குரலிலோ... இல்லை உண்மை அதுதான் என்பதாலோ அவனின் உடல் இறுகியது. முகம் உணர்ச்சிகளைத் தொலைத்தது.

"உமா... உனக்கும் எனக்கும்தான் பேச்சு. என்னை என்ன வேணாப் பேசு... என் தங்கச்சியை பேசுற உரிமை உனக்கு இல்ல..." அடக்கப்பட்ட கோபத்துடன் வெளி வந்தது அவனது வார்த்தைகள்.

"அப்படித்தான்டா பேசுவேன்... உன் தங்கச்சியைச் சொன்னா கோபம் வருதோ... அப்போ நான் சொன்னது உண்மைதானா..."

தான் சொல்லச் சொல்லக் கேட்காமல் மேலே பேசியவளை உதறித் தள்ளியவன், "இதுக்கு மேலே என் தங்கச்சியைப் பத்திப் பேசுன..." ஆத்திரத்தில் ஆட்காட்டி விரலைக் காண்பித்து எச்சரித்தவனின் கையைப் பிடித்துத் தடுத்தவள்,

"அவ கெட்டுப் போனதாலதானே அவளுக்குப் பிடிச்சவனைக் கட்டி வைக்கிற... அப்போ நானும் கெட்டுப் போயிட்டா... எனக்குப் பிடிச்சவனைக் கல்யாணம் பண்ணி வைப்பியா...?" என்றவளை அவன் முறைத்துக் கொண்டு நிற்க,

"போடா... போய் மீசையை எடுத்துட்டு உன் தங்கச்சி சேலையை வாங்கிக் கட்டிக்கோ... ச்சீய்... நீயெல்லாம் ஒரு ஆம்பிளை... இனி ஆம்பிளைன்னு வெளியில்

சொல்லிக்காதே. அது, அந்த வார்த்தைக்கே மகா கேவலம்..." உமா ஆத்திரமாய்ச் சீற...

அவ்வளவு நேரம் பொறுமை காத்த உதய்யால், அவளின் இந்த வார்த்தையைக் கேட்டுப் பொறுமையைக் கடைப்பிடிக்க முடியவில்லை. எந்த ஒரு ஆண்மகனுக்கும் தன்மானத்தைச் சீண்ட வைக்கும் வார்த்தை அது. மதுரை மண்ணின் மைந்தனான அவனை, அந்த வார்த்தைகள் கோபத்தின் எல்லைக்கே அழைத்துச் சென்றது.

பாய்ந்து சென்று அவளது தலை முடியைக் கொத்தாகப் பற்றியவன், "என்னடி சொன்ன... நான் ஆம்பிள இல்லைன்னா... இந்த நொடி நிரூபிச்சுக் காட்டட்டுமா நான் ஆம்பிளதான்னு..." ஆள் அரவமற்ற அந்த இடத்தின் தனிமையில் அவனது ஆங்காரப் பேச்சுப் பயங்கரமாய் ஒலித்தது.

"பாவம், பொட்டப்புள்ள... நாமும் அதுக்குத் துரோகம் பண்ணிட்டோமேன்னு பொறுத்துப் பொறுத்துப் பார்த்தா... ரொம்பத்தான் பேசிட்டுப் போற... ஆமாம்டி, இப்போ சொல்றேன் கேட்டுக்கோ... நான் அந்தப் பொண்ணைத்தான் கட்டப் போறேன்... உன்னை இல்ல...

"நீயா வலிய வந்து பழகுன... சரி, ஆளு சும்மா கும்முன்னு இருக்காளே... அதுவும் வலிய வார சீதேவியை ஏன் விடுவானேன்னு உம் பின்னாடி சுத்தி னேன். அவ்வளவுதான் நமக்குள்ள உள்ள உறவு... சும்மா சீன் போடுறது... சவுண்ட் விடுறது... இதெல்லாம் என் கிட்ட வச்சுக்காதே..."

அவனின் அடாவடிப் பேச்சில் அவளது தைரியம் காணாமல் போயிருந்தது. ஏற்கெனவே அவன் கொடுத்த மரண அடியில் இருந்தவளுக்கு, அவன் பேசியது அதிர்ச்சியை அளித்தது.

"உன் அப்பனே ஆம்பிளன்னு சொல்லிட்டுத் தைரியமா சுத்திட்டு இருக்கிறப்போ... எனக்கென்னடி கொறச்சலு...? பொண்ணாடி நீ... சரியான பஜாரி... நல்ல வேளை நான் தப்பிச்சேன்... என்னமா வாய் பேசற..

"இங்கே வந்தப்போ உம் முகத்துல எப்படி முழிக்கிறது... உன்னை எப்படிச் சமாதானம் செய்றதுன்னு குழம்பிப் போய் வந்தேன்... ஆனா இப்போ தெளிவா இருக்கேன்... சந்தோஷமா இருக்கேன்... இனிமேற் கொண்டு நீ என் முகத்துல முழிக்காதடி... தப்பித் தவறிப் பார்த்தாக் கூட என் கிட்ட வந்து பேசிடாதே... குட் பை..." என்றவன், அவளை அங்கேயே அம்போவென விட்டு விட்டு விறுவிறுவென மலையை விட்டுக் கீழே இறங்கினான்.

அவன் சென்றதும்தான் அவன் பேசியது, நடந்து கொண்டது எல்லாம் உறைத்தது அவளுக்கு... அவ்வளவு தானா, தான் அவனுக்கு... தூசியைப் போல் தன்னை உதறி விட்டுச் செல்ல எப்படி அவனால் முடிந்தது.

தனது காதலன் தைரியமானவன்... வீரன்... அந்த மதுரை வீரன் பொம்மியைத் தூக்கிச் சென்றது போல்... தன் தந்தையின் பிடியில் இருந்து தன்னை மீட்க வந்த ரட்சகனாக அவனை எண்ணி இருந்தவள், அவன் பிரிந்து

விடுவோம் என்றதில் சற்று உணர்ச்சிவசப்பட்டுக் கோபப் பட்டு வார்த்தைகளைச் சிதறி விட்டாள்.

அதற்காக அவன் அவளை விட்டுச் சென்று விடுவானா... அவன் சொன்ன வார்த்தைக்கு எந்தப் பெண்ணாய் இருந்தாலும் கோபப்படத்தான் செய்வாள். அதற்கு அவள் மட்டும் விதிவிலக்கா என்ன...? கோழை யான பெண்ணாய் இருந்தால், அவனின் காலில் விழுந்து கதறி அழுது இருப்பாள்.

ஏன் காதலுக்காக... அவனுக்காக... அதையும் அவள் செய்யத்தானே செய்வாள். என்ன ஒன்று, அவன் செய்த செயலை ஏற்றுக் கொள்ள முடியாமல், அவள் அவனை எதிர்த்துக் கேள்வி கேட்டு விட்டாள். ஏனெனில் அவளுக்கு என்று தட்டிக் கேட்க யாரும் இல்லை... அதனால்தான் அவள் தனக்குத் தானே போராடினாள்.

என்ன போராடி என்ன பிரயோஜனம்...? அவன் அவளை விட்டுச் சென்றது சென்றதுதானே...! அதை மாற்ற யாராலும் முடியாதே...! அவன் பேசிய ஒவ்வொரு வார்த்தையும் அவளது செவியில் ஒலித்துக் கொண்டி ருந்தது.

ஈருடல் ஓருயிராய்ப் பழகியது எல்லாம் பொய்யா...? என்னதான் தங்கைக்காக என்றாலும், உயிராய்க் காதலித்த ஒருத்தியை நொடியில் கழட்டி விட ஒருவனால் முடியுமா...? மனதாரக் காதலித்த ஒருத்தியை அவ்வளவு தரக் குறைவான வார்த்தையால் அவள் மனதை காயப்படுத்த முடியுமா...?

முடியும் என்று காட்டி விட்டுப் போய் விட்டானே அவளது காதலன்...! அவனது செயலை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. தனக்கென்று இருந்த ஒரு சொந்தத்தை இழந்தது போல் அவளது மனம் துக்கத்தில் ஓவெனக் கதறி அழுதது.

என்றோ அவன் தன்னைக் கனிவுடன் கவனித்துக் கொண்டது எல்லாம் இப்போது ஒவ்வொன்றாய் அவளது ஞாபகத்திற்கு வர, அவள் தனக்குள் கரைந்து கொண்டி ருந்தாள். வெகு நேரம் உணர்வில்லாமல் அமர்ந்து இருந் தவள், பின் சுற்றுப்புறம் உரைக்க, மெதுவாய் எழுந்து தனது வீட்டிற்குக் கிளம்பினாள். அவளது நடையில் ஜீவனில்லை. அவளது ஜீவன் அவனோடு அல்லவா போய் விட்டது.

இயந்திரமாய் வீட்டின் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்த உமா கதவை மூடக் கூடத் தோன் றாமல் அப்படியே அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தாள். அவள் மனம் முழுவதும் ஏன்... ஏன்... ஏன்... என்ற கேள்வியே வியாபித்து இருந்தது.

யாருக்கு எந்த ஜென்மத்தில் என்ன பாவம் செய் தாளோ... தன்னுடைய வாழ்க்கையை மட்டும் இந்தக் கடவுள் இப்படி நிம்மதியில்லாமல் படைத்து விட்டாரே என்று அவளுக்கு ஆதங்கமாய் இருந்தது.

நல்லதொரு தகப்பன் இல்லை... தகப்பன் போல் பார்த்துக் கொள்வான் என்று எண்ணிய காதலனும் பொய்த்துப் போனான். அவன் பொய்த்துப் போனானா,

இல்லை தன் காதல் பொய்த்துப் போனதா... எது என்று அவளுக்கு விளங்கவில்லை.

எவ்வளவு நேரம் அப்படியே இருந்தாளோ? ஜெயஸ்ரீ வந்து அவளை உலுக்கவும்தான் சுய உணர்வை அடைந்தாள்.

"ஏன்டி, கதவைத் திறந்து போட்டுட்டு இப்படித்தான் ட்ரீம்ல இருப்பியா? அப்படி மெய்மறந்து ட்ரீம் பண்ற அளவுக்கு உன் மச்சான் என்ன கொடுத்தாரு?" கிண்டலாய் வினவியபடி அவள் அருகில் அமர்ந்தாள்.

உமாவிடம் இருந்து பதில் வரவில்லை என்றதும், "உமா..." என்று அவளைப் பற்றி உலுக்க... உமா அவளைக் கண்டு பேந்தப் பேந்த விழித்தாள்.

"என்னடி உமா, என்னாச்சு..?"

தோழி இருந்த நிலை சரியில்லை என்று உணர்ந்த ஜெயா, அவளின் கன்னத்தைத் தட்ட... அவ்வளவு நேரம் அடக்கி வைத்திருந்த தனது உள்ளத்துக் குமுறலை எல்லாம் அழுகையாய் வெளிப்படுத்தினாள் உமா.

உதய்யிடம் கூட அவள் தன் அழுகையை காட்டவில்லை... ஆனால் தோழியைக் கண்டதும் அவளுக்கு அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது.

"உமா... ஏன் அழற...?"

எதற்குமே கண் கலங்கிப் பார்க்காத தன் தோழி கண் கலங்கவும், ஜெயா பதறிப் போனாள்.

"கடைசியில் நீ சொன்னது உண்மையாகிருச்சு, ஜெய்... நான் ஏமாந்து போயிட்டேன்..."

தன் மடியில் படுத்துக் கதறியவளுக்கு என்ன சொல்லி ஆறுதல் படுத்துவது என்று ஜெயாவுக்குத் தெரியவில்லை.

"அழாதே உமா... அவன் எதுவும் உன்னைச் சொன்னானா...? என்ன சொன்னான்...?"

அடக்கப்பட்ட ஆத்திரத்துடன் ஜெயா கேட்க...

அழுது கொண்டே, உதய் தன்னை விட்டு விலகிய கதையை உமா சொல்ல... ஜெயாவின் முகம் ஆத்திரத்தில் சிவந்தது.

"அயோக்கிய ராஸ்கல்.. லவ் பண்ணிட்டுக் கை கழுவியதோடு இல்லாம கேவலமா வேற பேசுவானா...? என்னைக் கேட்டா நீ அவனைச் செருப்பைக் கழட்டி அடிச்சு நாக்கைப் பிடுங்கிக்கிற மாதிரி இன்னும் நாலு வார்த்தை அசிங்கமாக் கேட்டுட்டு வந்திருக்கணும்..." கோபத்தில் படபடத்தவள்...

"உமா, முதல்ல எழுந்திருச்சி கிளம்பு... அவன் வீட்டில் உள்ளவங்க கிட்ட சொல்லி நியாயம் கேட்போம். நியாயம் கிடைக்கலையா... அவன் வீட்டு முன்னாடி தர்ணா பண்ணுவோம். பொம்பளைங்கன்னா கிள்ளுக்கீரைன்னு நினைச்சிட்டானா... நாம நினைச்சா முடியாதது ஒண்ணும் இல்லை... கிளம்பி வா."

தோழியைப் பிடித்து எழுப்ப.. உமா அழுகையுடன் எழுந்தவள்... வேண்டாம் என்பது போல் தலையை அசைத்தாள்.

"ஏன்டி?" ஜெயாவுக்குக் கோபம் கோபமாய் வந்தது.

"அவன் அசிங்கப்படுத்தியது பத்தாதுன்னு... அவனோட வீட்டில் உள்ளவங்ககிட்டேயும் அசிங்கப் படணுமா? இதுக்கு மேல எந்த வார்த்தையும் கேட்கிற அளவுக்கு என் உடம்பிலேயும் சரி, மனசிலேயும் சரி... எனக்குச் சக்தி இல்லை, ஜெய்..."

"அதுக்காக இதை இப்படியே விட்டுற முடியுமா...? பேசாம ஒண்ணு பண்ணு. உன்னோட பேரண்ட்ஸைக் கூட்டிட்டுப் போய் நியாயம் கேளு..."

ஜெயாவின் வார்த்தையில் உமாவின் இதழில் விரக்திப் புன்னகை வந்தமர்ந்தது.

"என்னைக் கேவலமாப் பேசுறதுல முதல்ல நிப்பாரு எங்கப்பா..."

இதைக் கேட்டதும் ஜெயா அதிர்ந்து போனாள்.

இத்தனை நாள் பழக்கத்தில் உமா தன் பெற் றோரைப் பற்றியோ, தன்னைப் பற்றியோ அதிகம் கூறி யது கிடையாது. ஜெயாவும் அதைப் பெரியதாக எடுத்துக் கொண்டது இல்லை. உமாவின் உண்மையான நட்பை மட்டுமே பெரிதாக எண்ணினாள். ஆனால் இப்போது உமா கூறுவதைப் பார்த்தால்... அவளது மனதில் பல கேள்விகள் முளைத்தது.

"உமா என்ன சொல்ற...?"

"அது நான் வாங்கிட்டு வந்த வரம் அப்படி..."

அதற்கு மேல் உமாவும் சொல்லவில்லை. ஜெயா வும் அவளை வற்புறுத்தவில்லை.

"இப்படியே இருந்தா எப்படி உமா... உதய்யை ஏதாவது பண்ண வேண்டாமா...?"

"வேணாம் ஜெயா... என்னை வேணாம்னு போயிட்ட பிறகு நான் ஏன் அவன்கிட்ட போய்க் கெஞ்சணும்... என்னை வேண்டாம்னு அவன் தூக்கி எறிஞ்ச மாதிரி நானும் அவனை வேணாம்னு தூக்கி எறிஞ்சிட்டேன், ஜெய்..." என்றவள், அதன் பின் உதய்யை மறந்தவளாய் நடந்து கொண்டாள்.

என்னதான் சாதாரணமாக இருப்பது போல் உமா காட்டிக் கொண்டாலும், அவளது கண்களில் இருந்த சோகத்தை அவளால் மாற்ற முடியவில்லை. உமாவின் நிலையைக் கண்ட ஜெயாவுக்கு உதய் மேல் கோபம் கோபமாய் வந்தது.

கலகலப்பும் குறும்புமாய் இருந்த பெண்ணை இப்படி ஒடுங்க வைத்து விட்டானே பாவி என்று அவள் அவனைச் சபிக்காத நாளில்லை.

உதய்யின் திருமணச் செய்தியை அறிந்த அழகேசன் அவனிடமே நேரிடையாகச் சண்டை போட்டு விட்டான்.

"மச்சான்... உமாவை இப்படி ஏமாத்திட்டீங்களே... அது, அப்படி என்ன மச்சான் தப்பு பண்ணிச்சு... சங்கீ கல்யாணத்தை முதல்ல நிறுத்துங்க. சங்கீக்குக் கல்யாணம் நடக்காதுனு பயப்பட வேணாம். நான் சங்கீக்கு முறைப் பையன் தானே... நான் அவளைக் கல்யாணம் பண்ணிக் கிறேன். நீங்க உமா கழுத்துல தாலி கட்டுங்க மச்சான்... அது ரொம்பப் பாவம் மச்சான்..."

"அழகு... லூசுத்தனமா உளறாதே... போய் அந்தக் கேஸுக்கு வேண்டிய பாயிண்ட் எல்லாம் எடுக்குற வழியப் பாரு... தேவையில்லாத விசயத்துல மூக்கை நுழைக் காதே..." உதய் அவனைக் கடிய...

"மச்சான்... எனக்குத் தேனு வேற... உமா வேற கிடையாது. எப்போ நீங்க என் தங்கச்சிய கல்யாணம் பண்ண மறுத்தீகளோ அப்பவே நான் உங்களை விட்டு விலகிட்டேன்... இனி உங்ககிட்ட நான் வேலை பாக்க முடியாது... நீங்க எனக்கு எப்பவுமே ஹீரோவாத்தான் இருந்தீக... ஆனா இப்போ நீரு ஒரு ஜீரோ... ஒண்ணுத் துக்கும் உதவாத ஜீரோ..."

வெறுப்பை முகத்தில் தேக்கிக் கேவலமாய்த் திட்டிய வனை...

"போடா! நீ இல்லன்னா என்னால கேசு நடத்த முடியாதா என்ன...? போய் அந்தச் சண்டிராணிக்குக் கூஜா தூக்கு... இன்னும் ஏன் இங்கே பராக்கு பார்க்கிற... கெளம்பு... கெளம்பு..."

அலட்சியமாய்ப் பேசிய உதய்யைக் கண்ணால் எரித்தபடி அங்கிருந்து கிளம்பினான் அழகேசன்.

நேரே உமாவைத் தான் பார்க்கச் சென்றான். அவள் இருந்த தோற்றத்தைக் கண்டு கண் கலங்கிப் போனான், அந்த உடன்பிறவாச் சகோதரன்.

"உமா... இப்படிப் பண்ணிப் போட்டானே... நாசமாப் போறவன். எம் மச்சான்தான். இருந்தாலும் சொல் றேன்... அவன் வாழ்க்கை நாசமாத்தான் போகும். ஒரு

பொண்ணு வாழ்க்கைய கெடுத்துட்டு இன்னொரு பொண்ணுக்கு வாழ்க்கை கொடுக்கப் போறானா... வெளங்காமத்தேன் போவான்..." என்று படபடத்தவனைக் கண்டு உமாவின் கண்கள் கசிந்தன.

"எனக்குச் சப்போர்ட் பண்றதுக்குத் தேங்க்ஸ் அழகு."

"நீ என் தங்கச்சி... உனக்குச் சப்போர்ட் பண்ணாம அவனுக்கா பண்ணுவேன்... அதான், வேலை கூட வேணாம்னு தூக்கிப் போட்டுட்டு வந்திட்டேன்..." என்ற வனை நினைத்து அவளுக்குப் பெருமையாய் இருந்தது.

அன்று வழக்கம் போல் மருத்துவ மனைக்குக் கிளம்பிக் கொண்டிருந்த உமாவுக்கு வீட்டில் இருந்து அழைப்பு வந்தது. எடுத்துப் பார்த்தால், அவர்களது வீட்டில் வேலை செய்யும் பெண்தான் அழைத்து இருந்தாள்.

உமாவின் அம்மாவுக்கு உடல்நலம் சரியில்லாமல் மருத்துவ மனையில் சேர்த்து இருப்பதாகக் கூற... உமா ஜெயாவிடம் சொல்லிக் கொண்டு அடித்துப் பிடித்துக் கொண்டு விழுப்புரம் கிளம்பினாள்.

அங்கு ஆரோக்கியமாகத் தன்னை வரவேற்ற அன்னையைக் கண்டு, உமா ஒரு கணம் குழம்பிப் போனாள்.

"உமா செல்லம்... அப்பா உனக்கு ஒரு வரன் பார்த்து இருக்காங்க... கல்யாணம்னு சொன்னா நீ வர மாட்டேன்னுதான்... எனக்கு உடம்பு சரியில்லைன்னு நான்தான் பொய் சொல்லி உன்னை வரவழைச்சேன்... உங்கப்பாவுக்கு உன் மேல் எவ்வளவு பாசம் பார்த்தியா..."

வெகுளியாகப் பேசிய அன்னையை இரக்கமாய்ப் பார்த்தாள் உமா. தந்தை தனக்கு நல்லது பண்ணுவதாக எண்ணிக் கொண்டிருக்கும் அன்னை, அவர் தனக்குக் கெடுதல் செய்யக் காத்திருக்கிறார் என்பதை எப்போது உணரப் போகிறார்...? என்று அவளுக்கு ஆயாசமாய் இருந்தது.

அன்று வீட்டிற்கு வந்த சங்கரனை அன்னைக்குத் தெரியாமல் தனியாய்ச் சந்தித்தவள், "நான் கல்யாணத்துக்குச் சம்மதிக்க மாட்டேன்... வீணா எனக்கு மாப்பிள்ளை பார்க்கிற வேலையை இத்தோடு விட்டிருங்க... அதுவும் நீங்க பார்க்கிற மாப்பிள்ளையை நான் கட்டாயம் கல்யாணம் பண்ணிக்கவே மாட்டேன்..." நிமிர்வோடு சொன்னவளைக் கடுப்புடன் பார்த்தவர்,

"ஏன், நீயே மாப்பிள்ளையைப் பார்த்துக்கிட்டியா..?" என்றாவது ஒருநாள் அவர் இப்படிக் கேட்கும்போது, 'ஆமாம்... இதோ பாருங்க... நான் காதலிக்கும் வீரனை...' என்று உதய்யை அடையாளம் காட்ட வேண்டும் என்று நினைத்திருந்த அவளது எண்ணம் தவிடு பொடியானதில் அவளுக்கு விரக்தி எழுந்தது.

"அது உங்களுக்குத் தேவையில்லாத விஷயம்... ஆனா ஒண்ணு நிச்சயம்... நீங்க பார்க்கிற மாப்பிள்ளைக்கு நான் கழுத்தை நீட்ட மாட்டேன்..." உறுதியாய்க் கூறியவளின் முகத்தை ஆழ்ந்து பார்த்த சங்கரன் முகத்தில் ஏளனம் வந்தமர்ந்தது.

"நீ சம்மதிக்கலைன்னா உன் அம்மாவோட..." அவர் பேசும் போதே குறுக்கிட்டவள்,

"என்ன, எங்கம்மா கழுத்துல இருக்கிற தாலி இறங்குமா...? ரொம்ப நல்லது. அப்படியாவது அவங் களுக்குச் சுதந்திரம் கிடைக்கட்டும்... அந்தத் தாலி இருக் கிறதும் ஒண்ணுதான். இல்லாததும் ஒண்ணுதான்..." வெறுப்பாய்ச் சொன்ன மகளைக் கண்டு வாய் விட்டுச் சிரித்தார்.

"ஹா... ஹா... இதுக்குத்தான் முந்திரிக் கொட்டைன்னு சொல்லுவாங்க. நான் பேசுறதுக்கு முன்னாடி நீயே பேசி முடிச்சிட்டா எப்படி...? நான் சொல்ல வந்தது வேற... நீ மட்டும் இதுக்குச் சம்மதிக்கலைன்னா... உங்கம்மாவோட உயிர் அவள் உடல்ல தங்காது. என்ன, நான் சொல்றதோட அர்த்தம் புரியுதா...?" என்றவரை உடல் நடுங்கப் பார்த்தாள்...

"நீ... நீங்க..." வார்த்தை வராமல் தொண்டைக்குள் எதிராட்டம் ஆடியது.

"எஸ். நானேதான்... என்னைப் பத்தி எல்லாரையும் விட உனக்கு நல்லாவே தெரியும்... எனக்குச் சாதகமா ஒரு விஷயம் நடக்கலைன்னா... அதை ஒரே தூக்காத் தூக்கிடுவேன்... இப்போ உன் கல்யாணம் நடக்கலைன்னா உன் அம்மாவை ஒரே தூக்கா தூக்கிருவேன், எந்த எவிடென்சும் இல்லாம..." என்றவரின் வார்த்தை கொடுத்த அச்சத்தில் மேனி நடுங்க, நிற்க முடியாமல் தள்ளாடியவள், அங்கிருந்த சுவரில் சாய்ந்து நின்றாள்.

சங்கரன் எப்படிப்பட்ட கொடூரன் என்பது அவளுக்கு நன்கு தெரியும். அவரை, கட்டிய மனைவியை விட மகளர்

கிய அவளுக்கு நன்கு தெரியும் அவரது இன்னொரு பக்கம். சிந்திக்கும் திறனற்றவளாய் நின்றிருந்தவள் முன் விரலால் சொடுக்குப் போட்டவர்.

"நீ சரின்னு சொல்லலைன்னா... நானும் உன் அம்மாவும் ஊட்டிக்குப் போறோம்... அங்கே நிறையப் பள்ளத்தாக்கு இருக்குமாமே..."

சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் பேசியவரின் வார்த்தைகள் கொடுத்த அர்த்தம், அவளுக்கு மட்டுமே புரிந்தது.

"ச்சீ... நீ எல்லாம் ஒரு தகப்பனா...?" முகத்தில் வெறுப்பைத் தேக்கிச் சொன்னவளை,

"எனக்கு வேண்டியது உன் சம்மதம் மட்டும்தான்... உன்னோட காம்ப்ளிமெண்ட் இல்லை..."

அவரின் பேச்சில் என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை அவளுக்கு. ஒருபுறம் உதய்யை மறக்க முடியாது... மறுபுறம் அம்மாவின் உயிர்... பேசாமல் உயிரை மாய்த்துக் கொள்ளலாமா என்று கூட அவளுக் குத் தோன்றியது.

"என்ன... இதுக்கு நாம செத்துரலாமான்னு தோணுதா...? குட்... அதைத்தான் நானும் எதிர் பார்த் தேன்... நீயா செத்துப் போ... எனக்கு ரொம்பச் சந்தோசம். அதுதான் எனக்கும் வேணும்..."

இரக்கமே இல்லாமல் பேசியவரை வெறித்துப் பார்த்தாள். பெற்ற பெண்ணை இரக்கம் இல்லாமல்

செத்துப் போகச் சொல்லும் தகப்பன் உலகத்திலேயே இவர் ஒருவராகத் தான் இருக்கக் கூடும்.

மனதில் பலவற்றையும் நினைத்து உழட்டியவள் பின் தைரியம் வரப் பெற்றவளாய் அவரை நிமிர்ந்து பார்த்தவள், "அவ்வளவு சீக்கிரம் உயிரை விட்டு உங்களை நான் சந்தோஷப்படுத்திட மாட்டேன்ப்பா... இந்தக் கல்யாணத்துக்கு நான் சம்மதிக்கிறேன். ஆனா ஒண்ணு... என்ன நினைச்சு இந்தக் கல்யாணத்தைப் பண்ணி வைக்கிறீங்களோ... அது மட்டும் நிச்சயம் நடக்காது." அவரிடம் சவால் விட்டாள் அவள்.

"பார்க்கலாம்..." பதிலுக்கு அவர் சவால் விட... அவரைப் பார்த்து அலட்சியமாய்ப் புன்னகை செய்தவள், அங்கிருந்து வேகமாய் வெளியேறினாள்.

"நிச்சயமாகப் போற பொண்ணு சந்தோஷமாக இருக்கணும் உமா... ஏன் உன் முகம் ஒரு மாதிரியா இருக்கு...?"

தனலெக்ஷ்மி கேட்கவும், முயன்று சிரித்தாள். இன்று அவளுக்கு நிச்சயதார்த்தம். இன்னும் அரை மணி நேரத்தில் மாப்பிள்ளை வீட்டார் வந்து விடுவர்.

அவளது மனம் துக்கத்தில் அழுது கொண்டிருக்க, அவளால் எப்படிச் சிரிக்க முடியும்...? மனம் முழுவதும் உதய்யின் ஞாபகங்கள். அதே சமயம் அவன் வலிக்க வலிக்கக் கொடுத்த வார்த்தை அடிகளையும் மறக்க முடியவில்லை.

நிறைவேறாத காதல் என்றால் அழலாம். ஆனால், தெரிந்தே காதலுக்குத் துரோகம் இழைத்தவனின் காதலுக்காகத் தான் உருகுவது கொஞ்சமும் சரியில்லை என்று கோபமாய் எண்ணியவள், மனதைக் கல்லாக்கிக் கொண்டு நிச்சயத்திற்குத் தயாரானாள்.

மாப்பிள்ளை வீட்டார் வந்ததும் அவளை அழைக்க, எதை எதையோ எண்ணியவள் மனமும் உடலும் உணர்வில்லாமல் இறுகிப் போக, ஒரு வித இறுக்கத்துடன் மணமகன் அருகில் போடப்பட்டு இருந்த நாற்காலியில் வந்து அமர்ந்தாள்.

"ஐ... சாக்கி எம்மிக்கா..." என்றபடி அவளின் காலைக் கட்டிக் கொண்ட சிறுவனைக் கண்டு திடுக்கிட்டுப் போய் நிமிர்ந்து பார்த்தாள் உமா. அங்கே அவளைப் பார்த்துச் சிரித்தபடி கையை நீட்டிக் கொண்டிருந்தான் உதய்யின் அண்ணன் மகன் அஜித்.

முதலில் அஜித்தைக் கண்டு அதிர்ந்த.உமா, பின் ஏதோ தோன்ற, அவசரமாய்த் தன் அருகில் அமர்ந்து இருந்தவனைத் திரும்பிப் பார்த்தாள். அதே நேரம் அண்ணன் மகன் வார்த்தையில் திடுக்கிட்டவனாய் உதய்யும் தன் பக்கத்தில் அமர்ந்திருந்த மணப் பெண்ணைத் திரும்பிப் பார்த்தான்.

இருவருமே ஒருவரை ஒருவர் அதிர்ந்து போய்ப் பார்த்துக் கொண்டிருந்தனர். மெல்ல அந்த அதிர்ச்சி மறைந்து மனதில் மூண்ட கோபத்துடன் ஒருவரை ஒருவர் முறைத்தவர்கள், சண்டைக் கோழியாய்ச் சிலிர்த்தபடி அமர்ந்திருந்தனர்.

உமாவின் முகத்தில் தெரிந்த அதிர்வை, திகைப்பை மனதில் எழுந்த மகிழ்வுடன் ரசித்துப் பார்த்தார் அவளது தந்தையும், அமைச்சருமான சங்கரன் என்கிற சங்கர மகாதேவன்.

"எம்மிக்கா சாக்லெட்..." தன் பிஞ்சுக் கைகளைப் பூவாய் விரித்தபடி கேட்ட அஜித்தின் அழைப்பில், உமா தன் மனதில் மூண்ட கோபத்தை அடக்கியபடி முகத்தில் பூத்த புன்முறுவலுடன் சின்னவனின் பக்கம் திரும்பினாள். அவள் அவனிடம் பேசும் முன்பே நித்யா தன் மகனின் முதுகில் ஒரு அடி வைத்து,

"எப்பப் பாரு எமி... சாக்லெட்டுன்னுட்டு...? இங்கே வாடா..." என்று மகனைத் தன் பக்கம் இழுக்க... அவளை நிமிர்ந்து பார்த்த உமா, ஒரு சிநேகமான புன்னகை சிந்தியவள்,

"அடிக்காதீங்கக்கா... சின்னப் பையன்தானே..." என்று கூறியபடி அஜித்தைத் தூக்கித் தன் மடியில் இருத்திக் கொண்டவள், அவனது பட்டுக் கன்னத்தில் மென்மையாய் முத்தமிட்டாள்.

அவளது இயல்பான செயலில் மாரீஸ்வரி, நித்யா மனம் மட்டும் இல்லாமல், அதைக் கண்டு கொண்டிருந்த தங்கவேலு, முத்துராமின் மனமும் நிறைந்தது. ஏனெனில் ஹரியின் செயலில் மனம் வெறுத்துப் போயிருந்தவர் களுக்கு ஹரியும், உமாவும் உடன்பிறந்தவர்கள் அல்ல...

மகாதேவனுக்கு இரு மனைவிகள்... அவர்கள் இருவருக்கும் பிறந்தவர்கள்தான் இவ்விருவரும் என்று தெரிந்ததும் கவலையாக இருந்தது.

போயும் போயும் இப்படி ஒரு தரக்குறைவான இடத்திலா சம்பந்தம் பண்ண வேண்டும் என்று உள்ளுக்குள் எரிச்சலாக இருந்தது அவர்களுக்கு. குணமும் சரியில்லை, ஆட்களும் சரியில்லை. இதனால் மனம் வெறுத்துப் போய் இருந்தவர்களுக்கு, முதலில் தென்பட்டது உமாவின் அழகு. ஹரியும் அழகு தான்... ஆனால் அவனின் குணம்...? அதுபோல் உமாவும் இருப்பாளோ என்று குழப்பத்தில் இருந்தவர்களுக்கு, அவளது இந்தச் செய்கை ரொம்பப் பிடித்துப் போனது.

'பொண்ணு அழகு, படிப்பு மட்டுமில்லை குணமும் நல்லாத்தான் இருக்கும் போல...' எல்லோர் மனதிலும் இதே எண்ணம்தான் ஓடியது.

சங்கீதா நிச்சயத்திற்கு வரவில்லை. ஏனெனில் கல்யாணமாகப் போகிற பெண், அதுவும் சம்பந்தி வீட்டிற்கு அழைத்து வருவது முறையல்ல என்று அவளைக் கூட்டிக் கொண்டு வரவில்லை. அதேபோல் அழகேசனின் பெற்றோர் இந்த நிச்சயத்துக்கு வந்த போதும் அவன் உமாவின் மேலிருந்த பாசத்தில் வேறொரு பெண்ணுடனான மச்சானின் நிச்சய விழாவிற்கு வராமல், அதைப் புறக்கணித்து விட்டான்.

"உமா... நாந்தான் உன் அக்கான்னு உனக்கு எப்படித் தெரியும்...?" நித்யா வெகுளியாய்க் கேட்க... அவளைப் பார்த்து வெறுமனே புன்னகைத்தாள் உமா.

உதய்யின் அண்ணன் மகனின் அம்மா தனக்குச் கோதரி என்பது அவளுக்குத் தெரியாதா என்ன...? அவர்களுக்குத்தான் தெரியவில்லை... உமாவுக்குத் ங்களைப் பற்றி எல்லாம் தெரியும் என்று.

அதற்குள் அய்யர் லக்ன பத்திரிகையை எடுத்து ாசிக்க ஆரம்பித்தார். உதய்க்கும் உமாவுக்கும் நடக்கும் ிச்சயத்தை உறுதி பண்ணியது மட்டுமின்றி, ஹரிக்கும் ங்கீதாவுக்கும், உதய்க்கும் உமாவுக்கும் ஒரே நாளில் ிருமணம் என்றும் அதற்கும் அப்போதே நாள் குறிக்கப் ட்டது.

அதில் திடுக்கிட்டு நிமிர்ந்த உமா, உதய்யைப் ார்த்தாள். அவனோ முகத்தில் எந்தவித உணர்ச்சியையும் காட்டாமல் இறுகிப் போய் அமர்ந்திருந்தான். அப்போது தான் அவளுக்கு ஒன்று உறைத்தது. அது அன்று உதய் பெண் கொடுத்துப் பெண் எடுக்கும் விஷயம்... இப்போது அவளுக்கு எல்லாம் புரிந்து போனது... தனது தந்தையின் சதித் திட்டம் என்ன என்று.

ஏதோ தனக்கு எதிராய்ச் சதித் திட்டம் தீட்டுவதாய் நினைத்துக் கொண்டு, எல்லாவற்றையும் தனக்குச் சாதகமாக நடத்திக் கொண்டிருக்கும் தந்தையின் அறியா மையை எண்ணி அவளது முகத்தில் இகழ்ச்சிப் புன் னகை தோன்றியது.

இனி தன் பக்கம்தான் வெற்றி என்று எண்ணியபடி மகாதேவனை நிமிர்ந்து பார்த்தவள் பார்வையில், ஆணவம் நிரம்பித் ததும்பி வழிந்தது.

அதே நேரம் மகளின் முகத்தைக் கண்ட மகாதேவன், அவளது முகத்தில் தெறித்த ஆணவத்தில் சற்றுக் குழம்பித்தான் போனார். திட்டமிட்டு மடக்கிய பெண் பிடிக்காத திருமணத்தால் திகில் அடைவாள் என்று பார்த்தால், இப்போது அவள் இருந்த தோற்றம் அவருக்குத்தான் திகிலைக் கொடுத்தது. ஆனாலும் மனம் தளரவில்லை அவர். அவளது குடுமி தன் கையில் என்பதை அறிந்தவராய், அவரும் பதிலுக்கு மிதப்பாய் மகளைப் பார்த்தார்.

'நீ என்ன நினைக்கிறாய் என்று எனக்குத் தெரியும் தகப்பனே... அது எதுவும் என்னிடம் நடக்காது...' என்றபடி தந்தையை அலட்சியமாய்ப் பார்த்தவள், தன் பார்வையைத் தாயிடம் திருப்பினாள். அவரோ மகளைக் கண்டு நிறைவாய்ப் புன்னகைத்தபடி நின்றிருந்தார். எல்லாம் அவருக்காகத்தான் என்று எண்ணியவள், நடப்பில் தன் கவனத்தைச் செலுத்த ஆரம்பித்தாள்.

உதய்யையும் உமாவையும் நிச்சய மோதிரம் மாற்றச் சொல்ல, உதய் கடுப்புடன் அண்ணன் காதைக் கடித்தான்.

"அண்ணே, என்ன இது...? சங்கீக்கு நாம இது மாதிரிப் பண்ணலையே..." எரிச்சலுடன் முணுமுணுக்க...

"எனக்கும் தெரியலடா... அவங்க சொன்னதைச் செய்... நாம பொறவு பேசலாம்..." என்ற முத்து, உமாவைக் கண்டு அசடு வழிந்தபடி தம்பியின் பக்கம் இருந்து நகர்ந்தான்.

முதலில் உதய்யை உமாவின் கையில் மோதிரத்தை அணிவிக்கச் சொல்ல... உதய் கையில் மோதிரத்தைப் பிடித்துக் கொண்டே அப்படியே அசையாமல் நிற்க, வேறு வழியின்றி உமாதான் தன் கையை அவன் புறமாய் நீட்ட வேண்டியது இருந்தது.

மனதில் எழுந்த கொதிப்புடன் அவள் தன் வலக் கையை நீட்ட, அவன் அவளின் கையைத் தொட்டும் தொடாமல், பட்டும் படாமல் வெகு ஜாக்கிரதையாய் மோதிரத்தை அணிவிக்க, உமா கோபத்தின் உச்சிக்கே சென்று விட்டாள்.

இப்போது உமாவிடம் உதய்க்கு அணிவிக்க வேண்டிய மோதிரத்தை அவளது தாய் நீட்ட, உமா அதைக் கேள்வியுடன் பார்த்தாள். நிச்சயம் தாய் தனித்துச் சென்று இதை வாங்கியிருப்பதற்கான சாத்தியம் மிகக் குறைவே.

ஆக, தந்தைதான் இதை வாங்கியிருக்க வேண்டும் என்று எண்ணியவளுக்கு, அதை உதய்யின் கையில் அணிவிக்க ஏனோ அருவருப்பாய் இருந்தது. என்னதான் உதய் மேல் அவளுக்குக் கோபம் இருந்தாலும் அதை அணிவிக்க அவளுக்கு மனம் ஒப்பவில்லை.

"ஒன் மினிட்..." என்றவள், அவசரமாய் உள்ளே சென்றாள். அவளின் அந்தச் செயலில் எல்லோரும் திகைத்து நிற்கும் போதே சொன்னது போல் ஒரு நிமிடத்தில் திரும்பி வந்தவள், கையில் புதிதாய் ஒரு மோதிரப் பெட்டி இருந்தது.

"இது என் வருங்காலக் கணவருக்காக நான் வாங்கியது..." உதய்யைப் பார்த்துக் கொண்டே அவள் கூற... அவளின் வார்த்தையில் அவனும் அவளைத்தான் ஆழ்ந்து பார்த்துக் கொண்டிருந்தான். உமாவின் இந்தச் செய்கையில் மகாதேவனின் முகம் கறுத்துப் போனது.

"சீக்கிரம் போடும்மா... நல்ல நேரம் முடியப் போகுது..." மாரீஸ்வரி மருமகளிடம் கூற...

கையை தொங்கப் போட்டுக் கொண்டு இருந்த உதய்யின் கையை அழுத்தமாய்ப் பிடித்துத் தூக்கி அவனது வலது கையின் மோதிர விரலைப் பிடித்தவள், இனிமையாய் அதிர்ந்தாள். அதில் அவனது பிறந்த நாள் பரிசாகத் தான் அளித்த மோதிரம் இருந்ததைக் கண்டு, அவளது கண்கள் கலங்கியது.

மோதிரம் அணிவிக்காமல் தன் கையைப் பார்த்துக் கொண்டிருந்த உமாவின் செயலில் எரிச்சல் அடைந்தவனாய் உதய் அவளைப் பார்க்க, அவளது பார்வை தன் கையிலிருந்த மோதிரத்தில் இருந்ததை உணர்ந்தவன், ஏதோ தவறு செய்து விட்டது போல் உதட்டைக் கடித்தான். அவனையும் அறியாமல் அவனது கண்கள் தன்னிச்சையாய் அவளது கழுத்தின் மேல் படிந்தது.

நிச்சயத்திற்கு ஏற்றவாறு வைர நகைகளை அணிந்திருந்தவளின் நகை ஊடே மின்னிக் கொண்டிருந்தது அவன் அணிவித்த பொன் சங்கிலி. அதைக் கண்டவன் மனதைச் சொல்ல முடியாத ஏதோ ஒரு உணர்வு தாக்கியது.

அடுத்த நொடி உமா முதலில் அணிவித்த மோதிரத்தைக் கழட்டித் தனது இடது கையில் போட்டுக் கொண்டவன், வலது கையை அவள் புறமாய் நீட்டினான் தானாக. அதில் உமா தனது கையில் இருந்த மோதிரத்தை அணிவித்தாள்.

அந்தக் கணம் இருவரின் மனதிலும் ஒருவர் மீது ஒருவர் கொண்ட சினத்தையும் மீறிச் சிறு நிம்மதி ஒன்று எழுவதை அவர்கள் உணரத்தான் செய்தனர். விதி வசத்தால் எட்டாக் கனியான காதல், அதே விதி வசத்தால் மீண்டும் எட்டும் கனியாய்க் கையில் கிட்டியதை எண்ணி அவர்கள் மனதில் ஒருவித மகிழ்ச்சி பரவத்தான் செய்தது.

"உமா இப்போ சந்தோசமா...?" இனிய வேளையில் நாராசமாய் ஒலித்த மகாதேவனின் குரலில் இருவருமே நடப்பிற்கு வந்தனர்.

எல்லாவற்றுக்கும் காரணம் இவர்தான் என்று இருவருக்கும் மனதில் ஆத்திரம் எழுந்த அதேநேரம், தங்கள் இணையின் மீதான கோபமும் ஞாபகத்தில் வர, மீண்டும் சண்டைக்கோழியாய்ச் சிலிர்த்துக் கொண்டு ஒருவரை ஒருவர் பார்த்து முறைத்துக் கொண்டனர். அதைத் திருப்தியுடன் பார்த்தது மகாதேவனின் கண்கள்.

"என்ன உமா நான் கேட்டதுக்குப் பதில் சொல்லல..." மீண்டும் கேட்டவரின் குரலிலிருந்த உள் குத்து அவளுக்கு மட்டுமே தெரியும். மற்றவர்களுக்கு அது புரியாததால், அவர்கள் அனைவரும் அவரது மகள் மீதான பாசத்தை எண்ணி மெச்சிக் கொண்டனர்.

தந்தையின் கிண்டலில் அவரை அழுத்தமாய் நிமிர்த்திப் பார்த்த உமா, அதே அழுத்தத்துடன், "ரொம்ப ரொம்ப சந்தோஷம்ப்பா..." என்றவள், உதய்யைத் திரும் பிப் பார்த்துப் புன்னகைத்தாள். பிடிக்காத திருமணத்தில் தன்னைத் தள்ளி விடத் துடிக்கும் தந்தையின் முகத்தில் கரியைப் பூச அவள் எண்ணினாள்.

அவளின் பதிலில் உதய்தான் திடுக்கிட்டுப் போனான். அவனைத் திடுக்கிடச் செய்வதில் டாக்டரேட் பட்டம் வாங்கியவளாச்சே அவனவள்! என்னதான் முகத்தில் மகிழ்ச்சியின் சாயல் தாண்டவமாடினாலும் அவளது கண்களில் தெரிந்த பாவத்தில், யோசனையாய் அவளைப் பார்த்தான்.

'என்னுடன் ஒத்துழையேன்...' என்று சொல்லாமல் சொல்லிய அவளின் விழியின் மொழியில் குழம்பிப் போனவன், தன் பார்வையை நேரே திருப்ப அங்கே நின்றிருந்த மகாதேவனைக் கண்டதும் அவரது முக பாவத்தில் தெரிந்த பழி வெறியில், அவனுக்கு ஏதோ ஒன்று புரிந்தது. அதே நேரம் தந்தையின் அடியால் ஏற்பட்ட உமாவின் உடல் காயங்களும் ஞாபகம் வர, அவன் தன் முழு உயரத்துக்கும் நிமிர்ந்தான்.

தன்னைப் பகடைக் காயாய் மாற்றி விளையாடிப் பார்க்க நினைத்த அப்பனுக்கும், மகனுக்கும் பாடம் புகட்ட எண்ணியவன், உமாவின் தோளில் கையைப் போட்டு அணைத்தவாறு நின்றவன்,

"உமாவுக்கு மட்டுமல்ல மாமா... எனக்கும் ரொம்ப ரொம்பச் சந்தோஷம்..." உதய்யின் பேச்சு மகாதேவனை

மட்டுமல்ல, உதய்யின் குடும்பத்தாரையும் ஆச்சரியப்பட வைத்தது.

பின்னே... ஊரில் இருந்து கிளம்பிய நேரம் முதல் முகத்தை இறக்கமாய் வைத்திருந்தவன் முகத்தில் சிரிப்பு மட்டும் இல்லாது, பெண்ணைப் பிடித்திருப்பதாய்க் கூறியது அவர்களுக்குப் பெருத்த ஆச்சரியம்.

உதய்யின் பேச்சில் மகாதேவனின் நம்பிக்கை ஆட்டம் கண்டது. யோசனையாய்ப் பார்த்தவரின் பார்வை யைத் தயங்காமல் எதிர்கொண்ட உதய்யின் பார்வையில் இருந்த, 'பொம்பளகிட்ட வீரத்தைக் காண்பிக்கிற நீயெல் லாம் ஆம்பளையா...?' என்ற அர்த்தத்தை மட்டும் அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை.

உதய்யின் செயலில் உமாவின் மனம் சற்று நெகிழ்ந்தது. நன்றியுடன் அவனைப் பார்த்தவளின் புறம் குனிந்தவன், "ரொம்பச் சந்தோஷப்படாதே... உன் மேல உள்ள கோபம் அப்படியேதான் இருக்கு..." என்றவன் பற்களைக் கடிக்க... பதிலுக்கு அவளும் தன் பற்களைக் கடித்தாள் கோபத்தில்.

"உமா கூட நான் தனியாப் பேசணும்..." திடீரென்று உதய் கூற...

"அதெல்லாம் எதுக்கு...?" அவசரமாய் மறுத்தார் மகாதேவன். மகள் தன்னைப் பற்றி உதய்யிடம் ஏதும் போட்டுக் கொடுத்து விடுவாளோ என்று அவர் பயந்தார். ஏனெனில், உதய் மூலம் அவர் சாதிக்க வேண்டிய விஷயங்கள் நிறைய இருந்தது.

"உங்க பையன் எந்தங்கச்சி கிட்ட பேசல... அதே மாதிரி நா உமா கிட்ட பேசியே ஆகணும்... இப்போ உமா எனக்குப் பாதிப் பொஞ்சாதி..."

அழுத்தமாய்க் கூறியவன், தன் தந்தையின் சம்மதத் திற்காக அவரின் முகத்தைப் பார்த்தான். தங்கவேலுவுக்கு இதில் மறுக்க ஒன்றும் இல்லை என்று தோன்ற, சரி என்று சம்மதித்தார்.

இருவரும் தனிமையில் பேசுவதற்காக உமா உதய்யைத் தனது அறைக்கு அழைத்துச் செல்ல, அவளைப் பின் தொடர்ந்தவனின் கண்களில் வீட்டின் மூலை முடுக்கில் எல்லாம் பிரதிபலித்த பணக்காரத்தனம் கண்ணில் பட்டுக் கருத்தைக் கவர்ந்தது. உமா வசதியானவள் என்று அவனுக்குத் தெரியும். ஆனால், இத்தனை வசதியானவள் என்று அவனுக்கு இப்போது தான் தெரியும்.

ஆடம்பரமான அவளது படுக்கையறையோடு தனது எளிமையான படுக்கையறையை ஒப்பிட்டுப் பார்த்தவன் மனம் முரண்டியது. அவள் மேலுள்ள கோபம், இப்போது அவளது பணத்தின் மீதும் திரும்பியது.

அறையில் இருந்த சோபாவைப் பிடித்தபடி நின்றிருந்த உமா, அவனை வரவேற்கவும் இல்லை... உட்காரச் சொல்லவும் இல்லை... அவனை நிமிர்ந்து பார்க்கவும் இல்லை. தன் பார்வையை வேறு பக்கம் செலுத்தி அவனைப் பார்ப்பதைத் தவிர்த்தாள். பேச வேண்டும் என்று கூறியவன் அவன்தானே என்ற

அலட்சியம் அவளுக்கு. அதில் அவனுக்குச் சினம் தலைக்கேற...

"எப்போடா இவன் கழட்டி விடுவான்... எப்போடா வேறொருத்தனைக் கரெக்ட் பண்ணலாம்னு காத்துட்டு இருந்தியோ..." வார்த்தையில் அனலைக் கக்கினான்.

அதில் அவளுக்கும் கோபம் கோபமாய் வந்தது. அவளை இந்த இழிநிலைக்குத் தள்ளி விட்டது இவன் தானே...! அவன் மட்டும் அவளுக்கு நம்பிக்கைத் துரோகம் பண்ணாமல் இருந்திருந்தால், அன்னையைக் காட்டி அவளது தந்தையால் அவளை மிரட்டி நிச்சயத்திற்குச் சம்மதிக்க வைத்திருக்க முடியுமா...? எல்லாவற்றிற்கும் காரணமானவனே தைரியமாய் நிமிர்ந்து நின்று கேள்வி கேட்கும் போது அவளுக்கு என்ன வந்தது...?

"ஏன்... நான் என்ன செய்யணும்னு நீ விரும்பின... எதிர்பார்த்த...?" அவளது கேள்வியில் ஒரு கணம் அவன் தடுமாறித்தான் போனான்.

"பெருசா நான் மட்டும் துரோகம் பண்ணுனதா அந்தக் குதி குதிச்ச... இப்போ நீ பண்றதுக்கு பேரு என்னம்மா...?" அவனது கேலிக் குரலில் அவளுக்கு ஆத்திரம் எழ... வேகமாய் அவன் அருகில் வந்தவள்,

"அப்போ நான், நீ பண்ணின துரோகத்தைச் சகிச்சிட்டுக் காலம் பூரா உன்னையே நினைச்சிட்டு ஔவையார் மாதிரிக் கல்யாணம் பண்ணிக்காம இருக்க ணும்னு நினைக்கிறியா...? இல்லை... இந்தக் கதையில, சினிமால காண்பிக்கிற மாதிரி கல்யாணம் பண்ணுன

கொஞ்ச நாளுல உன் பொண்டாட்டி இறந்து போனதும் குழந்தையோட இருக்கிற உனக்கு ஐயோ பாவமே என் மச்சான்னு வாழ்க்கை கொடுக்கணும்னு நினைக் கிறியா...?

"அப்படி ஒரு நினைப்பு உனக்கு இருந்தா, அதுக்கு எல்லாம் வேற ஆளைப் பாரு... எப்போ என்னைக் கேவலமாப் பேசிட்டுப் போனியோ அப்பவே உன் மேல உள்ள காதல் செத்துப் போச்சு... இப்போ நான் புது மனுசி... தனி மனுசி... என் வாழ்க்கையைத் தீர்மானிக்கிற முழு உரிமை எனக்குத்தான் இருக்கு... உனக்கு இல்லை..."

ஆங்காரமாய்க் கையை ஆட்டிப் பேசியவளின் கையை முறித்து அடுப்பில் வைத்தால் என்ன என்கிற அளவுக்கு அவனுக்கு ஆத்திரம் எழுந்தது.

"ஓஹோ... நான் மட்டுந்தான் கேவலமாப் பேசி னேன்... நீ அப்படியே அமிர்தமாப் பேசினியோ... நீயும் தான்டி என்னைக் கேவலமாப் பேசின... என்னை ஆம்பிளை இல்லைன்னு சொன்னவதானே நீ... கல்யா ணத்துக்கு அப்புறம் காட்டுறேன்டி நான் ஆம்பளையா இல்லையான்னு...? எண்ணிப் பத்து மாசத்துல எம் புள்ளைக்கு உன்னை அம்மாவாக்கிக் காட்டுறேன்டி..." என்று சவால் விட்டவனைக் கேவலமாய் ஒரு புழுவைப் போல் பார்த்தவள்,

"ஆம்பிளைன்னு அதுல மட்டும் நிரூபிச்சாப் போதாது... தன்னை நம்பியவளை எந்தச் சூழ்நிலையிலும்

கைவிடாமக் காப்பாத்தணும், அதுதான் ஆம்பிளைத் தனம்... ஆண்பிளைன்னா வீரம், தைரியம்... அதுதான் உனக்குக் கிடையாதே..." என்றவளின் பேச்சு அவனது இயலாமையைச் சுட்டிக் காட்ட, அதில் விளைந்த கோபத்தில் அவளது தாடையைப் பற்றித் தன் பக்கம் இழுத்தவன், அவளது இதழில் அழுத்தமாய்த் தன் இதழைப் பதித்தான்.

"இப்போ சொல்லுடி நான் ஆம்பிளையா இல்லை யான்னு..."

மீண்டும் மீண்டும் கேட்டுக் கொண்டே மீண்டும் மீண்டும் அவளது இதழில் புதைந்தவன், அவளது வார்த்தைகளால் தன் மனதில் கனன்ற நெருப்பைத் தணிக்க முயன்றான். அந்தோ பரிதாபம்... அது நெருப் பைத் தணிப்பதற்குப் பதில் மேலும் மேலும் நெருப்பை மூட்டி விட்டது.

முதலில் அவனது செயலை எதிர்த்தவள், பின் மெதுவே மெதுவே அவனுக்கு வாகாய் அடங்கினாள். அடி மனதில் எரிமலை நெருப்புக் குழம்பாய்த் தகித்துக் கொண்டிருந்த அவன் மீதான அவளது காதல், அவளது வெறுப்பு என்ற பாறையை முட்டி மோதித் தகர்க்கச் செய்து கொண்டிருந்தது.

தன் கைகளில் நெகிழ்ந்த உமாவின் உடலைக் கீழே விழுந்து விடாமல் தாங்கிய உதய்யின் முகத்தில், அவளின் உணர்வுகளை வென்று விட்ட வெற்றிப் பெருமிதம் தோன்றியது.

"இப்போ சொல்லுடி... நான் ஆம்பிளைதானே..." திமிராய் ஒலித்த அவனது குரலில், அவள் தன் மயக்கத்தில் இருந்து தெளிந்தாள்.

அவனது கை பட்டால் தான் உருகி விடுவோம் என்று தெரிந்தும், அவனைத் தன் அருகில் விட்ட தன் மடமையை எண்ணி மானசீகமாகத் தன்னைத் திட்டிக் கொண்டவள், முயன்று அவன் மீதான கோபத்தை இழுத்துப் பிடித்தாள். தன் மனம் செல்லும் பாதை அறிந்து அவள் உள்ளூரத் திடுக்கிடத்தான் செய்தாள்.

என்னதான் அவன் செய்த துரோகத்தால் அவன் மீது அவளுக்குக் கோபம் இருந்த போதும், அவளால் அவனை முழுவதுமாய் வெறுக்க முடியவில்லை. ஆனால், அவனால் மட்டும் எப்படித் தன்னை வெறுத்து இப்படி நடந்து கொள்ள முடிகிறது.

காதலித்த காலத்தில் தன் உணர்வுக்கு மதிப்பளித்துத் தள்ளி நின்று கண்ணியம் காத்தவனா இவன் என்று அவளுக்கு ஆயாசமாய் இருந்தது. இனி ஒவ்வொரு நாளும் இதேபோல் போராட்டமாய்த்தான் நகருமா என்று நினைத்தவளுக்கு, அந்த நினைவுகளே பெரும் போராட்ட மாய்...

"என்னடி, வாயடைச்சுப் போயிட்டே..." காதோரமாய்ச் சீண்டலாய்ச் சீறிய அவனது குரல், அவளை நடப்பிற்குக் கொண்டு வந்தது.

"உங்களை மாதிரி ஆம்பிளைங்களுக்கு இதைத் தவிர வேற என்ன தெரியும்..."

அலட்சியமாய்ப் பேசியவள், "இல்லை..." என்றாள் திமிராக அவனின் கேள்விக்கு பதிலாக. திமிராய், அலட்சியமாய்ப் பேசியவளை ஓங்கி அறைய வேண்டும் என்று மனதில் எழுந்த ஆத்திரத்தில் கையை ஓங்கியவன், அதே வேகத்தில் கீழே போட்டான்.

"ச்சீ பொண்ணாடி நீ... நீ சொல்லலைன்னா என்னடி... என்னை ஆம்பிளைன்னு சொல்றவளோட நான் குடித்தனம் பண்ணிக்கிறேன்... அவ மூலமா புள்ளையப் பெத்துக் காட்டுறேன். அப்போ ஊரும் உலகமும் உன்னைக் கேட்கும் நீ பொம்பளையான்னு.. அப்போ சொல்லு நீ வாழாத கதையை... நீ பேசிய பேச்சுக்கு அதுதான்டி உனக்குச் சரியான தண்டனை..." அவள் தன்னை ஏற்றுக் கொள்ளாத கோபத்தில், அவன் ஆத்திரத்தில் கர்ஜிக்க...

தவறு செய்த அவனே திமிராய்ப் பேசும் போது, தவறு செய்யாத தான் எந்த விதத்திலும் தாழ்ந்தவள் இல்லை என்ற எண்ணம் தலை தூக்க, மௌனமாய், அதே சமயம் அழுத்தத்துடன் அவனை முறைத்துக் கொண்டு அவள் நின்றாள்.

"இதுக்கு எல்லாம் நல்லா அனுபவிப்படி..." அவளது மௌனம் மேலும் அவனது கோபத்தைக் கிளறி விட, அதே கோபத்துடன் அந்த அறையை விட்டு வெளியேறி னான். அறைந்து மூடிய கதவை ஒரு பெருமூச்சுடன் பார்த்தவள், வேறு வழியின்றி தானும் அறையை விட்டு வெளியேறினாள்.

உமாவின் மீதுள்ள கோபத்தில் படியில் விறுவிறு வென இறங்கியவன், ஏதோ தோன்ற கீழே பார்த்தான். அங்கே மகாதேவன் மாடிப்படியை ஆவலுடன் பார்த்துக் கொண்டிருப்பது புரிய, தனது நடையின் வேகத்தைக் கட்டுப்படுத்தினான். அவனால் மகாதேவனைப் பார்க்க முடியும். ஆனால், அவரால் அவனைப் பார்க்க முடியாது.

அறையை விட்டு வெளியில் வந்த உமா, உதய் பாதிப் படியில் நிற்பது கண்டு யோசனையாய் அவனைப் பார்த்தவாறு இறங்கினாள். அவனைத் தாண்டிச் செல்ல அவள் முயலும் போது, அவனின் கை அவளைப் பிடித்துத் தடுத்ததோடு மட்டும் இல்லாமல், அவளது கை விரலோடு தனது விரல்களை அழுத்தமாய்க் கோர்த்துக் கொண்டது.

அவனது செயலில் முதலில் திகைத்தவள், அவளையும் அறியாமல் அவனது தொடுகையில் அவளது முகம் செம்மையைப் பூசிக் கொண்டது.

உமாவோடு இணைந்து இறங்கிய உதய், வேண்டுமென்றே உதட்டில் உறைந்த புன்னகையுடன் மகாதேவனைப் பார்க்க, அவரோ சந்தோஷத்துடன் வரும் மருமகனையும், வெட்கப்பட்டுக் கொண்டு வரும் மகளையும் கண்டு எரிச்சல் அடைந்தார்.

கடைசிப் படி வந்ததும் தேங்கி நின்ற உதய் உமாவிடம், "நமக்குள்ள உள்ள பிரச்சினை நம்மளோட... ஊருக்குத் தண்டோரா போடணும்னு நினைச்சா நான் பொல்லாதவனாயிருவேன்..." என்று அவளை எச்சரிக்க...

இவன் திருந்தவே மாட்டானா என்று மனம் நொந்தவள், "எங்களுக்கும் எல்லாம் தெரியும்..."

வெடுக்கென்று கூறி விட்டு முன்னால் நடக்க முயல, அவளோடு செல்லாமல் அசையாமல் நின்றவனின் இறுகிய கைப் பிடியில் தன் கை சிக்கி இருப்பதை உணர்ந்தவள்,

"ச்சு..." என்று தன் அதிருப்தியைத் தெரிவிக்க...

"இப்போதானே சொன்னேன்..." இறுகிய அவனது குரலில் பேசாமல் அப்படியே நின்றாள். இப்போது அவன் நடக்க, வேறு வழியின்றி அவனுடன் இசைந்து நடந்தாள்.

உதய்யின் குடும்பத்தார் உமா மற்றும் தனலெக்ஷ்மி யின் குணம் கண்டு மனம் மகிழ்ந்தவர்களாய், நிச்சயம் முடிந்து விட்ட திருப்தியில் ஊருக்குக் கிளம்பினர். உமா மறக்காமல் சின்னவன் கேட்ட சாக்லெட்டுக்களை ஒரு கவரில் போட்டு அவனிடம் நீட்ட,

"தேக்கூ..." என்றபடி அவள் கன்னத்தில் முத்தமிட்டு வாங்கிக் கொண்டான் அஜித்.

வெளியில் வந்த உதய் ஏதோ நினைத்தவனாய் மகாதேவன் அருகில் வந்தவன், "மாமா... இனிமேற் கொண்டு உமா மேல கை வச்சிங்க... நான் சும்மாயிருக்க மாட்டேன். இனி அவ உடம்புல நீங்க அடிச்சதா சின்னக் கீறல் விழுந்தாக் கூட நீங்க அவ்வளவுதான்..." என்று சிரித்தபடி அவரை எச்சரித்தவன், தனது முழுக்கைச் சட்டையை முழங்கைக்கு மேலே ஏற்றிவிட்டபடி,

"மினிஸ்டருங்கிற பருப்பு எல்லாம் எங்கிட்ட வேகாது மாமோய்... மதுரைல வந்து கேட்டுப் பாரு... உம் மருமகப் புள்ளையோட வீரத்தை... உம்மோட வீரம் எல்லாம் உன் கட்சி ஆட்சியில இருக்கற வரைதான்... ஆனா என்னோட வீரம் எந்த ஆட்சி வந்தாலும் ஒரே மாதிரிதான்... என்ன, புரியுதா...?" என்று நக்கலாய்த் தன்னை மிரட்டியவனை அடக்கப்பட்ட கோபத்துடன் பார்த்தவர்,

'இந்தக் கழுதையால நாய், பேய் எல்லாம் என்னைப் பார்த்துக் கேலி பேசுது...' மனதுக்குள் உமாவை அர்ச்சித்த வர்... உதய்யைத் தான்தான் மகளுக்கு மாப்பிள்ளை யாகப் பார்த்தோம் என்பதை அந்தக் கணம் ஏனோ மறந்து போனார்.

அவர்கள் சென்றதும் உமாவிடம் கோபத்தில் பாய்ந்து விட்டார். "என்னடி... என்னை அடிக்க ஆள் செட் பண்றியா...? பார்த்துப் பேசி பத்து நிமிஷம் ஆகியிருக் காது... அதுக்குள்ள அவனைக் கைக்குள்ள போட்டுக்கிட்டு எனக்குத் எதிராத் திருப்பி விடுறியா... உன்னை..."

கோபத்துடன் அவளை அடிக்கப் போனவரின் கை, உதய்யின் பேச்சின் தாக்கத்தால் அப்படியே அந்தரத்தில் நின்றது.

காரியம பெரியதா... இல்லை வீரியம் பெரியதா என்று நினைத்தவர், காரியமே பெரிது என்று அமைதி காக்க... உமா அவரை அதிசயமாய்ப் பார்த்தாள்.

"என்ன... ஓங்கிய கை அப்படியே நிக்குது..." எள்ளல நிரம்பி வழிந்தது அவளது குரலில்...

"ச்சே..." என்றபடி நகர்ந்தவரைக் கண்டவள் முகத்தில் திருப்திப் புன்னகை வந்தமர்ந்தது. அது உதய்யை நினைத்து என்றால் மிகையில்லை.

வீட்டிற்குள் வந்ததும் சங்கீதா தன் அண்ணன் முகத்தைத்தான் பார்த்தாள். உதய்யின் முகம் சாதாரண மாக இருந்த போதிலும், போகும் போது இருந்த இறுக்கம் சற்றுத் தளர்ந்து இருந்ததை உணர்ந்தவள், யோசனை யாய் அவனைப் பார்த்தாள். தங்கையின் மனக்குறிப்பை அறிந்த அந்த அண்ணனும் அவளைத் தனியே அழைத் துச் சென்றான்.

"அண்ணே... பொண்ணு பிடிச்சதாண்ணே..." கலக்கத்துடன் கேட்டவளை, அவன் அமைதியாய்ப் பார்க்க...

"நான் ஒரு கூமுட்டை... அதான் பொண்ணுன்னு சொன்னதுக்கு அப்புறமும் இப்படி ஒரு கேனக் கேள்வி யைக் கேட்குறேனே கேனச்சி மாதிரி..." என்றவளைக் கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது. வாய் விட்டுச் சிரித்த வனை அதிசயமாய்ப் பார்த்தவள்,

"அண்ணே..." என்றாள் கலவரமாக. பிடிக்காத பெண்ணை நிச்சயித்ததால் தன் சகோதரனுக்கு மறை கழண்டு விட்டதோ என்று கலங்கிப் போனாள்.

தங்கையின் மனக்குறிப்பை அறிந்தவனாய், "நான் காதலிச்ச பொண்ணும்... நிச்சயம் பண்ணுன பொண்ணும் ஒண்ணுதான்..."

'கண்டேன் சீதையை' என்பது போல் முதலில் தங்கையின் மனக் கலக்கத்தைப் போக்கியவன், பின் உமாவைப் பற்றி அவன் சொல்ல...

"இப்படியும் நடக்குமாண்ணே..." ஏதோ அதிரடித் திரைப்படம் போல் கதை சொன்னவனைக் கண்டு ஆச்சரியத்தில் வாயைப் பிளந்தாள் சங்கீதா.

"ம்... நடந்திருக்கே..." கேலி போல் சொன்னவன்,

"எந்த சாமி புண்ணியமோ நான் தப்பிச்சேன்..." குரல் இறுகச் சொன்னவனின் உணர்வுகளை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது.

"சங்கீ... உமா விஷயம் நமக்குள்ள இருக்கட்டும்... யாரு கிட்டேயும் சொல்லாதே... முக்கியமா உன் வூட்டுக்காரன் கிட்ட..." என்றவன்,

"உன் வூட்டுக்காரனும், மாமனாரும் ஏதோ சதி பண்ணுதாக... ஆனா அது, என்னன்னுதான் பிடிபட மாட்டேங்குது..." யோசித்தவனைப் பயத்துடன் பார்த்தவள்,

"ஏதாவது தப்பா நடந்திருமா...?" அவளின் குரல் நடுங்கியது.

"ச்சேச்சே... அப்படி எல்லாம் நடக்க நான் விட்டிருவேனா என்ன...? எல்லாத்தையும் நான் பார்த்துக்கிடறேன் சங்கீ... உன் மச்சான்காரன் உன் மேல கொள்ளைக் காதல வச்சிருக்கான்... அதை மட்டும் நினைச்சிட்டு நீ நிம்மதியா இரு... இனி உமாவை நான் பார்த்துகிடறேன்..." என்றவனின் வார்த்தையில் கவலை

அகன்றவளாய்ச் சென்றாள் சங்கீதா. அவனுக்குமே சற்று நிம்மதியாகத்தான் இருந்தது.

களைத்துப் போய்ப் படுக்கையில் விழுந்த உதய்யை அவனது அலைபேசி அழைத்தது. யாரென்று பார்க்காமலேயே எடுத்து அவன் காதில் வைக்க...

"என்ன மச்சான்... நிச்சயம் முடிஞ்சு சந்தோஷமா இருக்கீங்களா...?" ஹரியின் குரலில் எரிச்சலுடன்,

"ம்... ம்..." என்றான் உதய்.

"என்ன மச்சான்... மனசு பூராவும் வலிக்குதா...? காதலிச்சப் பொண்ணுக்குத் துரோகம் பண்ணிட்டோ மேன்னு நெஞ்சு துடிக்குதா...?" அவனது கேலிக் குரலில் உதய்யின் எரிச்சல் காணாமல் போக, மிகவும் கவனமாய்ப் பேசினான்.

"இல்லையே மாப்புள்ள... எதுக்கு மனசு வலிக் கணும்... நெஞ்சு துடிக்கணும்ங்கிறேன்... உன் தங்கச்சி மாதிரி சூப்பர் பிகரை யாராவது பிடிக்கலைம்பாங்களா... எனக்கு உன் தங்கச்சியை ரொம்ப ரொம்பப் பிடிச்சிருக்கு மாப்புள்ளை... ஐ லவ் உமா..."

வேண்டும் என்றே ஹஸ்கி வாய்ஸில் காதலோடு உதய் கூற... ஹரியோ எரிமலையின் கொந்தளிப்போடு மறுபக்கம் கொந்தளித்துக் கொண்டிருந்தான்.

"சரி மாப்புள்ள, போனை வச்சிரட்டுமா... உன் தங்கச்சி கூட நான் கனவுல டூயட் பாடணும்..."

நக்கலாய் அலைபேசியை அணைத்த உதய், அதைக் கோபத்துடன தூக்கிப் போட்டான்.

அங்கே ஹரியோ உதய்யின் பதிலில் அதிர்ந்து போயிருந்தான். தான் நினைத்தது ஒன்று... ஆனால், நடந்ததோ வேறொன்று. எந்த இடத்தில் சறுக்கினான் என்று அவனுக்கே தெரியவில்லை... தொழிலில் எப்போதும் ஏறுமுகத்தை அடைந்தவனுக்கு இந்த இறங்கு முகத்தைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

எப்போதும் தொழிலில் வெற்றி பெற்றவன் முதன்முறையாக அவன் கணித்த வாழ்க்கைப் பாதையில் சறுக்கியதை, அவனால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

மகாதேவன், ஹரி இருவரும் ஆட விரும்பும் பரமபத விளையாட்டிற்கு உதய் தன்னை விருப்பத்துடன் தயார்ப் படுத்திக் கொண்டான். உமா என்ற வெற்றி இலக்கை அவன் அடையப் பாம்புகளாய்ப் பல தடைகள் வந்து அவனை வீழச் செய்யுமா, இல்லை ஏணிகளாய்ப் படிகள் பல தோன்றி அவனை ஏற்றம் அடையச் செய்யுமா...? காலம் தான் அதற்குப் பதில் கூற வேண்டும்.

அலுவலகத்தில் அமர்ந்து வேலையில் மூழ்கியிருந்த உதய், தன் முன் நிழலாடுவதை உணர்ந்து நிமிர்ந்து பார்த்தான். அங்கே அழகு நின்றிருப்பதைக் கண்டு, அவனின் எரிச்சல் அதிகரித்தது.

"நெனச்சேன்... இப்படிக் கேட்காம கொள்ளாம உள்ளே வர்றவன் நீ ஒருத்தனாத்தான் இருப்பேன்னு... இப்போ எதுக்கு இங்கே வந்தே...?"

உதய்யின் பேச்சுக்கு எல்லாம் அசருபவனா இந்த அழகேசன்... உதய்யின் கையிலிருந்த வழக்கு சம்பந்தப் பட்ட கோப்பைப் பறித்தவன்,

"இதை நான் பார்த்துக்கிடறேன்... உங்களுக்கு ஏதாச்சும் வெளி வேலை இருந்தா போய்ப் பாருங்க..." என்றவன், உதய்யின் பதிலை எதிர்பார்க்காமல் தனது நாற்காலியில் வந்தமர்ந்தவன், இயல்பு போல் தன் வேலையைப் பார்க்க ஆரம்பித்தான்.

இதைக் கண்ட உதய்க்குத்தான் கோபம் வந்தது. எழுந்து அவன் முன் வந்து நின்றவன் அழகைப் பார்த்து, "முதல்ல எழுந்திருடா..." என்றான் கோபமாக.

ஆனால், அழகு எழுந்திரிக்கவில்லை... நாற்காலி யில் சட்டமாய் சாய்ந்து அமர்ந்து கொண்டு, அவனை ஆழ்ந்து பார்த்தான்.

"என்னடா பார்வை இது...? பொணணு பார்க்க வந்த மாப்பிள்ளை மாதிரி..." முகத்தைச் சுளித்தான் உதய்... அதற்கும் பதில் பேசவில்லை அழகு.

"உங்க பாசமலரைக் கல்யாணம் பண்ணிக்க லைன்னு அன்னைக்கு அப்படி வெறச்சிட்டுப் போன... இன்னைக்கு என்ன, போன மச்சான் திரும்ப வந்தான்கிற மாதிரி வந்திருக்க... உனக்கு இங்கெல்லாம் வேலை இல்ல... கெளம்பு... கெளம்பு..." என்ற உதய்யை அசால்ட்டாய் ஒரு பார்வை பார்த்த அழகு,

"ம்... நீங்க எங்க பாசமலரைக் கல்யாணம் பண்ணிக்கப் போறதாக் கேள்விப் பட்டேன்... அதான் வந்தேன்..."

"ஓ..." என்ற உதய், அவனைக் கூர்ந்து பார்த்து, "யாரு உனக்குச் சொன்னது...?"

"நீங்க சொல்லலைன்னா எனக்கு ஏதும் தெரியாதாக்கும்..." என்று நொடித்துக் கொண்டவன்,

"இதுவும் எங்க பாசமலர்தான் போன் போட்டுச் சொல்லுச்சு..."

"நான் மட்டும் வேற பொண்ணைக் கல்யாணம் பண்ணப் போறேன்னு என் கூட சண்டை போட்டுட்டுப் போன... இப்போ உன் தங்கச்சி பண்ணுன காரியத்துக்கு மட்டும் பேரு என்னவாம்...?"

"அதுக்கு நீங்கதான் காரணம் மச்சான்... நீங்க அதை விட்டுட்டுப் போகலைன்னா அதுவும் உங்களை விட்டுட்டுப் போயிருக்காது... ரெண்டுத்துக்கும் சரிக்குச் சரியா போச்சு... இனிமேற் கொண்டு இந்த மாதிரிப் பேசாதீங்க..."

"அவளை மாதிரியே பேசுது பாரு... அப்படியே பாசமலர் நாங்கதான்னு ரெண்டும் நிரூபிக்குதுங்க..." என்று வாய்க்குள் முணுமுணுத்தவன்,

"அவ சொன்னதுக்காக நீ ஒண்ணும் இங்கே வர வேணாம்... முதல்ல கெளம்பு..."

"உமா உங்க கல்யாணத்தைத்தான் சொல்லிச்சு... இங்கே வேலைக்குப் போகச் சொல்லல... அந்தப் புள்ள நல்ல வக்கீலா பார்த்து என்னை ஜூனியரா சேர்த்து விடுறேன்னுதான் சொல்லுச்சு... நான்தான் மனசு கேட்காம இங்கே வந்திட்டேன்..."

அழகின் 'நல்ல வக்கீல்' என்ற வார்த்தையைக் கேட்டு உதய் பற்களை நறநறவெனக் கடித்தான்.

"கொழுப்பு..." என்று அழகை முறைத்தவன்,

"அப்படி ஒண்ணும் நீ சலிச்சிக்கிட்டு இங்கே வேலை பார்க்க வேணாம்... நீ இல்லன்னாலும் நாங்க வேலை பார்ப்போம்ல..." என்றவனை அற்பப்பதர் போல் பார்த்த அழகு,

"இப்பவும் சொல்லுறேன்... நான் உங்களுக்காக வரல... எங்கூட்டுப் புள்ளையை நீங்க கல்யாணம் பண்ணிக்கப் போறீங்க... அதை நீங்க நல்லாப் பார்த்துக்கிடணும்ல... நாளப் பின்னே அது உங்களைக் கல்யாணம் பண்ணுன பாவத்துக்குக் கஷ்டப்படக் கூடாதுல்ல... அதுக்குத்தான் நான் வந்திருக்கேன்..."

"ஓகோ... நீ வந்ததால மட்டும் உன் தங்கச்சி கஷ்டப்படாம இருக்கப் போவுதாக்கும்..." நக்கலாய்க் கேட்டவனைக் கண்டு அசராமல்,

"இல்லையா பின்னே... நீங்க கடை, வட்டின்னு அலைவீங்க... இங்கே உள்ள கேசுகளை யாரு பார்த்துக்கிடது...? நான்தான் பார்த்துக்கிடணும்... உங்களுக்கு என்னதான் கடை வருமானம் வந்தாலும்... அதை வச்சு என் தங்கச்சிக்கு எதுவும் வாங்கித் தர முடியாது...

"மாமா கணக்குக் கேட்டா அதுக்கு ஆயிரம் காரணம் நீங்க சொல்லணும். இதே இது வக்கீலு வருமானத்துல செலவு பண்ணுனா யாரும் கேக்க முடியாது..." என்ற

அழகைக் கண்டு அயர்ந்து போய் நின்றிருந்தான் உதய். பிறகு தன்னைச் சமாளித்துக் கொண்ட உதய்,

"ஆனாலும் உனக்கு ஓவர் கான்பிடென்ஸ்டா... நீ இருந்தா மட்டும் அப்படியே கேசா வந்து குவிஞ்சிடப் போகுது பாரு..."

"கேசு வருதோ இல்லையோ... நான் அதுக்கு பாயிண்ட் எல்லாம் எடுத்துக் கொடுப்பேன்ல..." கெத்தாகக் கூறியவன்,

"போங்க... போங்க... வேற பொழப்பு இருந்தா அதைப் போய்ப் பாருங்க..." என்றவன், கையிலிருந்த கோப்பை வேண்டும் என்றே உற்று நோக்கி, வேலை செய்பவன் போல் நடித்தான்.

"எல்லாம் காலக் கொடுமைடா..." என்று தலையில் அடித்தபடி உதய் சொன்னாலும், அழகின் செயல் அவனுக்குக் கோபத்தை உண்டாக்காமல் சிரிப்பைத்தான் வரவழைத்தது.

முகத்தில் தோன்றிய இளநகையுடன் உதய் வெளி யேற, அவன் போவதைக் கண்டு நிறைவாய்ப் புன்னகைத் தான் அழகு.

உதய்க்கும் அவனுக்கும் எந்தப் பிரச்சினையும் இல்லை. உமாவைக் கல்யாணம் பண்ணாதது மட்டும் அவர்களுக்கு இடையில் பிளவை ஏற்படுத்தியது. அதே இது அவன் உமாவைத் திருமணம் செய்யப் போகிறான் என்றதும் அந்தப் பிளவும் சமன் பட்டு விட்டது. அழகு எப்பவுமே பாசத்துக்குக் கட்டுப்பட்டவன்... அந்தளவுக்கு பாசக்காரப் பய புள்ள அவன்.

"என்னடி உமா சொல்ற...? உண்மையாவா சொல்ற... அப்போ மதுரை வீரன் மனசு மாறிடுச்சா...?"

ஜெயஸ்ரீ நம்ப முடியாமல் கேட்டாள். உதய்க்கும், உமாவுக்கும் நடந்த நிச்சயத்தை அவளால் நம்ப முடிய வில்லை.

"ப்ச்சு.. நீ வேற ஜெய்... நான்தான் பொண்ணுன்னு தெரியாம வந்திருக்கு அந்த லூசு... அதாவது திருந்துவ தாவது..." சலித்தபடி சொன்னவள், அந்த மருத்துவ மனையின் நீண்ட வராந்தாவில் வேகமாக நடந்தாள்.

ஆம்... திருமணம் வரைக்கும் சும்மா இருக்க முடியாமல் உமா வேலைக்கு வந்து விட்டாள். மதுரையில் இருந்தாலும் அவள் உதய்யைச் சந்திக்க விரும்பவில்லை. அவனும் அவளைக் காண ஆர்வம் காட்டவில்லை.

ஜெயா தன்னோடு வராததை உணர்ந்து திரும்பிப் பார்த்த உமா, "என்ன ஜெய், அங்கேயே நின்னுட்ட... வா, நேரமாச்சு..." என்று அவளை அழைக்க...

"உமா..." அழுத்தமாய் ஜெயா கூப்பிட... அவளின் குரலில் இருந்த பேதத்தை உணர்ந்த உமா, அவள் அருகில் வந்து,

'என்ன ஜெய்...?"

"அப்போ நீயும் உங்க வீட்டுல கல்யாணத்துக்குச் சம்மதம் சொன்னியா...?" ஜெயாவின் கேள்வியில் அவளின் தலை தானாகக் குனிந்தது.

"எப்படி உமா உன்னால் இப்படி ஒரு காரியத்தைப் பண்ண முடிஞ்சது...? அதுவும் அவன் காதலை முறிச்ச

மூணாவது நாளு வேறொருத்தனுக்குக் கழுத்தை நீட்டச் சம்மதம் சொல்லியிருக்க... அப்போ அவனுக்கும் உனக்கும் என்ன வித்தியாசம்...?" சாட்டையாய்ச் சுழன்றடித்தது அவளது வார்த்தைகள்.

அன்று உதய் கேட்ட அதே கேள்வி... ஆனால், அன்று உதய்க்கு நிமிர்வோடு பதில் சொன்னது போல், இன்று ஜெயாவுக்கு உமாவால் பதில் சொல்ல முடியவில்லை.

"நீயே இப்படிக் கேட்டா எப்படி ஜெய்...? அம்மாவோட உயிரைப் பணயம் வச்சு அப்பா மிரட்டுறப்போ, என்னால மட்டும் என்ன பண்ண முடியும் சொல்லு. உதய் மட்டும் என்னைக் கைவிடாம இருந்திருந்தா, என் வாழ்க்கையை மட்டுமில்லாமல் என் அம்மா உயிரையும் சேர்த்துக் காப்பாத்தியிருப்பேனே...

"ஆனால், உதய் என்னை விட்டு விலகியதும்... எனக்கு இந்த உலகமே வெறுத்துப் போச்சு ஜெய்... வாழக் கூட ஆசைப்படல... பேசாம செத்துப் போயிரலாமான்னு கூடத் தோணுச்சு..." உமா சொல்லும் போதே ஜெயா அவளை ஆறுதலாய் அணைத்துக் கொண்டாள்.

"சரி, நம்ம ஆசைதான் நிறைவேறல... அம்மாவோட உயிரையாவது காப்பாத்தலாம்னுதான் இதுக்கு ஒத்துக்கிட்டேன். ஆனா மனசளவுல நான் செத்துப் போயிட்டேன் ஜெய்... அவருதான் புரிஞ்சிக்காம அப்படிக் கேட்கிறாருன்னா நீயும் அதே மாதிரி கேட்கிறியே... இதுக்கு எல்லாம் யாரு காரணம்...? அவருதானே...! அவர் பண்ணிய நம்பிக்கைத் துரோகம்தானே...!"

தன் தோளில் முகம் புதைத்துக் குமுறிக் குமுறி அழும் தோழியைப் பார்க்கப் பாவமாய் இருந்தது ஜெயாவுக்கு. ஆனாலும் இப்போது உதய் பக்கம் ஏதும் நியாயம் இருக்குமோன்னு தோணியது அவளுக்கு. அது உமாவின் பக்கம் இருக்கும் நியாயம் புரிந்ததினால் வந்த தாமதமான ஞானோதயம்.

"உமா... உன் பக்கம் ஒரு நியாயம் இருக்கிற மாதிரி... அவரு பக்கமும் நியாயம் இருக்கலாம் இல்லையா...?" என்ற தோழியை வியப்புடன் பார்த்தவள், வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு,

"இருக்கலாம்... என்ன காரணம் இருந்தாலும் காதலிச்ச பொண்ணைக் கழட்டி விடுறது எந்த விதத்தில் நியாயம் ஜெய்...? அப்படியே நியாயம் இருந்தாலும், என்னால அவரு செஞ்ச நம்பிக்கைத் துரோகத்தை மறக்க முடியல..."

மனம் நொந்து சொல்லும் அவளை மேலும் வேதனைப் படுத்தாமல், அவளை அழைத்துக் கொண்டு வேலைக்குச் சென்றாள் ஜெயா.

நாளை விடிந்தால் திருமணம்.

அமைச்சர் வீட்டுக் கல்யாணம்' என்றால் சும்மாவா... நகரத்தில் பெரியதாய் இருந்த திருமண மண்டபம் வாடகைக்கு எடுக்கப்பட்டு இருந்தது. அதன் அலங்காரம் ஒவ்வொன்றும் அதன் ஆடம்பரத்தைப் பறை சாற்றியது.

உதய் வீட்டினர், மாலையே அங்கு வந்து விட்டனர். உமாவும், அவள் அன்னையும் அதே போல் மாலைதான் அங்கு வந்தனர்.

அந்த ஐந்து நட்சத்திர விடுதியில் இரவு தங்கியிருந்த தனலெக்ஷ்மி, மகளின் முகம் சரியில்லாததை உணர்ந்து அவளருகில் வந்தார்.

"என்ன உமா... முகமே சரியில்லை. உடம்பு சரியில்லையா...?" நெற்றியில் கை வைத்தபடி கேட்க...

"ஏன்மா... சென்னையில கல்யாணத்தை வைக்க ஒத்துக்கிட்டீங்க...? நாளைக்கு..."

எப்படிச் சொல்வது என்று தெரியாமல் நிறுத்தியவள், "எப்படி நீங்க இதைத் தாங்கிக்கப் போறீங்க...?"

அதற்குப் புன்னகை மட்டுமே பதிலாகக் கிடைத்தது அவளின் அன்னையிடம் இருந்து.

"அம்மா..." உமாவால் தாங்கிக் கொள்ள முடிய வில்லை.

"எதையும் லேசா எடுத்துக்கப் பழகிக்கணும் உமா..."

"அதுக்காகக் கட்டின புருசன் அடுத்த ஒரு பொண்ணு கூட நிற்பதைக் கூடவா..." ஆற்ற மாட்டாமல் வெடித்து விட்டாள்.

"அவளுக்கும் அவர்தான் புருசன்கிறதை நீ மறந்திராதே உமா..."

"எப்படிம்மா... ரெண்டு பொண்ணுங்களை ஏமாத்திய ஒரு மனுசனை ரெண்டு பேரும் இப்படி உயிரா நினைக்கி றீங்களே...?"

"நாளைக்கு உனக்குக் கல்யாணமாகப் போகுதுல்ல... இனி உனக்கு எல்லாம் புரியும். அன்புங்கிறது எல்லாத்தையும் தாங்கிக்கிற சக்தியைக் கொடுக்கும்... எல்லாத்தையும் ஏத்துக்கிற பக்குவத்தையும் கொடுக்கும்..."

அன்னையின் பேச்சில் உதய்யை நினைத்த மனம், அடுத்த கணம், 'நெவர்...' என்று சிலுப்பிக் கொண்டது.

"என்னம்மா..." முகம் மாறியிருந்த மகளைப் பரிவுடன் வருடியது அந்த அன்னையின் கைகள்.

"ஒண்ணும் இல்லைம்மா..." என்றவள், சுருண்டு படுத்துக் கொள்ள... வழக்கம் போல் எல்லா அம்மாக்கள் மாதிரி திருமணத்தை எண்ணிப் பயந்து போயிருக்கிறாள் என்று நினைத்துக் கொண்டார் அவர்.

அதே விடுதியில் வேறொரு அறையில் ஜன்னல் அருகே நின்று, வெளியில் வெறித்துக் கொண்டிருந்த சங்கீதா, தன் போக்கில் சிந்தித்துக் கொண்டிருந்தாள். மகளின் நிலையை யோசனையாய் பார்த்தபடி அவளருகில் வந்த மாரீஸ்வரி,

"சங்கீ..." என்றபடி அவள் தோள் மேல் கை வைக்க, திரும்பிப் பார்த்த அவளது கண்கள் கண்ணீரில் பளபளத்தது.

"என்னடி இது... நாளைக்குக் கல்யாணத்த வச்சிட்டு இப்படிக் கண்ணு கலங்கி நிக்கிற..."

பதட்டம் அடைந்தவராய் அறைக் கதவைத் தாள் போட்டு வந்தவர், அவளைக் கட்டிலில் அமர வைத்துத் தானும் உடன் அமர்ந்தார்.

"ஏன் சங்கீ இம்புட்டு வெசனம் உனக்கு...?"

"அம்மா..." அடிபட்ட பறவை போல் தாயின் மடியில் படுத்துக் கதறினாள் அவள்.

"எனக்கு எப்படிச் சொல்றதுன்னு தெரியல... ஆனா அவரைக் கல்யாணம் பண்ண மனசுக்கு என்னமோ மாதிரி இருக்கு..." அழுதபடி கூறியவளின் தலை முடியை ஆறுதலாய்க் கோதி விட்டவர்,

"ஒரு மாதிரின்னா..."

"அருவருப்பா... அதே சமயம் வெறுப்பா இருக்கும்மா... என்னை வேணாம்னு சொன்னவரு கால்ல போய் விழுறோமேன்னு ஆதங்கமா இருக்கு..."

"சங்கீ, இங்கே பாரு..." மடியில் முகம் புதைத்து இருந்த மகளை எழுப்பி, அவளின் முகத்தை நிமிர்த்திய மாரீஸ்வரி,

"சங்கீ... நான் கேக்குறதுக்கு மறுக்காம உண்மையைச் சொல்லணும்..." என்றவர்,

"அவரு உன் விருப்பம் இல்லாமலா உன்னைத் தொட்டாரு..."

இல்லை என்பது போல் அவளின் தலை இடமும் வலமும் மறுப்பாய் ஆடியது.

"சரி, எந்த விதத்திலாவது உனக்குப் பிடிக்காததை... உனக்கு விருப்பம் இல்லாததை அவர் கிட்ட சொன்னியா...?"

அதற்கும் அவள் பதில், இல்லை என்பதே.

"உன் எதிர்ப்பைக் காட்டியும் உன்னைக் கட்டாயப் படுத்தினாரா...?"

"இல்லம்மா... நானும் விருப்பப்பட்டுத்தான்..." என்றவள் முகம் சிவக்க, தலையைக் குனிந்து கொண் டாள்.

அவளைக் கூர்ந்து பார்த்தவர், "அப்போ தப்பெல்லாம் உங்க ரெண்டு பேரு மேலேயும்தான் இருக்கு... அப்போ எதுக்கு அவரை மட்டும் குத்தம் சொல்ற...? அவரே தான் செஞ்ச தப்பை உணர்ந்து உன்னைக் கல்யாணம் பண்ணிக்கக் கேட்கலையா...?

"எப்போ ஒரு மனுசன் தான் செஞ்ச தப்பை உணர்ந்து மன்னிப்பு கேட்குறானோ அவன் மனுசன்... உம் புருசன் மனுசனாகிட்டாரு... நீ எப்போ தெய்வமாகப் போற...?"

"அம்மா...?" அன்னையைப் புரியாமல் பார்த்தாள் சங்கீதா.

"அதான்... எப்போ அவரை மன்னிச்சு ஏத்துக்கிட்டு தெய்வமாகப் போறேன்னு கேட்டேன். தப்பை உணர்ந்து மன்னிப்புக் கேட்குறவன் மனுசன்னா... அவனை மன்னிச்சு ஏத்துக்குறவங்க தெய்வம்... இப்போ அந்தத் தெய்வமா நீ மாறணும் சங்கீ..."

"அம்மா... ஆனா அவரு..." பேச முடியாமல் அவளின் வாய் அழுகையில் கோணியது.

"என்னைப் பெத்த ஆத்தா... நீ இப்படிக் கெடந்து தவிக்கிறதைப் பார்க்கவா நான் உயிரோட இருக்கேன்..." என்றபடி அவளை அணைத்தவர்,

"எதுவா இருந்தாலும் சொல்லு சங்கீ... மனசுல கெடந்து பூட்டி வைக்காதே..."

"அவரு எல்லாப் பொண்ணுங்க மாதிரி என்னை... ச்சு... அதை விடுங்க... என்னை மாதிரி நெறையப் பொண்ணுங்க கூட அவருக்குப் பழக்கம் இருக்கு... இனி நான் எப்படிம்மா அவரு கூட..." சொல்ல முடியாமல் நிறுத்தினாள் அவள்.

"இவ்வளவு நேரம் நான் சொன்னதைக் கேட்டுட்டு மறுபடியும் வேதாளம் முருங்கை மரம் ஏறுன கதையால்ல இருக்கு நீ பேசுறது... அதான் தன் தப்பை அவரு உணர்ந்துட்டாரே... திரும்பவும் அதையே பிடிச்சுத் தொங்கக் கூடாது சங்கீ...

"இனிமே கொண்டு அவரு தப்பு செஞ்சா சொல்லு... அப்படியே செஞ்சாலும் காதைத் திருகி நாலு கேள்வி நறுக்குன்னு கேளு... அப்போ நீ எம் பொண்ணு... அதை விட்டுட்டு எதுக்கெடுத்தாலும் இப்படி அழக்கூடாது சங்கீ..." என்று அவள் கண்ணைத் துடைத்து விட்டவர்,

"உனக்கு ஒரு ரகசியம் சொல்லவா...? உம் வூட்டுக்காரருக்கு உம் மேலே கொள்ளைப் பிரியம்..."

"நெசமாவாம்மா..." கண்களில் ஆவல் பொங்க கேட்ட மகளைப் பார்த்ததும் அவருக்குச் சிரிப்பு வந்தது.

"என்னோட இத்தனை நாள் அனுபவத்துல சொல்றேன்... உன்னைப் பார்க்குற அவரு பார்வையில காதல் தெரியுது... அவருக்கு உன்னை ரொம்பப் பிடிச்சிருக்கு... நீ குழம்பி அவரையும் குழப்பிடாதே சங்கீ...

அன்புக்குக் கட்டுப்படாதவன் இந்த உலகத்துல யாரும் கெடையாது... உன் வூட்டுக்காரரு மட்டும் அதுக்கு விதி விலக்கா என்ன...? வம்பைக் கொடுத்து வம்பை வெலைக்கு வாங்காம... அன்பைக் கொடுத்து அன்பை வாங்கு... எல்லாம் நல்லபடியா நடக்கும்..."

அன்னையின் பேச்சில் அவளின் மனம் நன்கு தெளிவுற்றது. ஹரியைத் திருமணம் செய்வது என்பது பாரமாய் மூச்சு முட்டுவது போல் இருந்தவளுக்கு, அன்னையின் பேச்சு அவள் மனதில் மூடியிருந்த சாளரத்தைத் திறந்து விட்டது போல் நிம்மதி மூச்சினை அளித்தது. மகளின் முகத்தை வைத்தே அவளது மனநிலையைக் கணித்த அந்த அன்னை மனம் நிம்மதியுற, எழுந்து வேறு வேலையைப் பார்க்கச் சென் றார்.

மறுநாள் காலை பரபரப்பாய் விடிந்தது. மகாதேவன் அபிநயா உடன் வரவேற்பில் நின்று, வந்தவர்களை வரவேற்றுக் கொண்டிருக்க, சற்றுத் தள்ளி தனியாய் நின்ற தனலெக்ஷ்மி, எதையும் மனதில் கொள்ளாமல் இன்முகத்துடன் வந்தவர்களை வரவேற்றுக் கொண்டி ருந்தார். அபிநயாவோ அவரைக் கொஞ்சமும் கண்டு கொள்ளவில்லை.

கணவரையும் அவரின் பக்கம் திரும்பிப் பார்க்கக் கூட விடவில்லை. அதைத் தனலெக்ஷ்மியும் பெரிதாக எண்ணவில்லை. அவர் மனதில் இருந்தது எல்லாம் மகளின் திருமணம் எந்த விதத் தடங்கலும் இன்றி நல்ல படியாக நடந்து முடிய வேண்டும் என்பதே.

இதைக் கவனித்துக் கொண்டிருந்த மாரீஸ்வரி, தனலெக்ஷ்மியின் அருகில் வந்து நின்று கொண்டார். அலட்டலாய் இருந்த அபிநயாவை விட அமைதியும் பண்புமாய் இருந்த தனலெக்ஷ்மியை அவருக்கு மிகவும் பிடித்துப் போனது. அதனால் அவர் தனலெக்ஷ்மியை விட்டுக் கொடுக்காமல், தன் கூடவே வைத்துக் கொண்டார்.

மணவறையில் அமர்ந்திருந்த ஹரி, தன்னவளின் வரவை எதிர்பார்த்துக் காத்திருக்க... மற்றொரு மணவறை யில் அமர்ந்திருந்த உதய்யோ கடனே என்று அமர்ந் திருந்து அய்யர் சொன்ன மந்திரங்களை உச்சரித்துக் கொண்டிருந்தான்.

ஹரியை ரொம்ப நேரம் தவிக்க விடாமல், சங்கீதா மணமேடைக்கு அழைத்து வரப்பட்டாள். மணப்பெண் அலங்காரத்தில் தேவதையாய் ஜொலித்தவளின் உருவத் தைத் தனக்குள் உள்வாங்கியபடி, அவளைப் பார்வையால் விழுங்கிக் கொண்டு இருந்தான் அவன். அவன் அருகில் அமர்ந்த சங்கீதா, அவனை ஏறெடுத்தும் பார்க்காமல் இருக்க... அவனது மனம் செல்லமாய்ச் சிணுங்கியது அவளின் கடைக்கண் பார்வைக்காக.

அதேபோல் உமாவை அவளது தோழி ஜெயஸ்ரீ அழைத்து வர, அன்னம் போல் அழகாய் மென்நடை நடந்து மணமேடைக்கு வந்தவளை, மறந்து போய்க் கூட உதய் திரும்பிப் பார்க்கவில்லை.

"உமா, என்னடி இது... உன் ஆளு அய்யனார் சிலை மாதிரி அசையாம உட்கார்ந்து இருக்காரு..."

உமாவின் கை பிடித்தபடி வந்த ஜெயா, அவள் காதைக் கடிக்க...

"அதான் சிலைன்னு சொல்லிட்டல்ல... அப்புறம் எங்கே உணர்ச்சி இருக்கப் போகுது...?" யாருக்கும் தெரியாமல் உதட்டைப் பிதுக்கினாள் உமா.

தன்னருகில் வந்து உமா அமர்ந்த போதும் கூட உதய் அவளைத் திரும்பிப் பார்க்கவில்லை. உமாவும் அவனைக் கண்டு கொள்ளாது கடனே என்று அமர்ந் திருந்தாள்.

முதலில் ஹரியை சங்கீதாவின் கழுத்தில் தாலி கட்டச் சொல்ல... அவன் தாலியை அவள் அருகே எடுத்துச் சென்றவன், அவள் முகத்தைப் பார்த்தான். அவளோ அவனை நிமிர்ந்து பாராமல் தலை குனிந் திருக்க, அவனோ மனம் தாள முடியாமல் அவள் புறமாய்க் குனிந்தவன்,

"கீத்து பேபி... இன்னமும் என் மேல் கோபமா...?" அவனின் கேள்வியில் திடுக்கிட்டுப் போய் நிமிர்ந்தவள், அவனது முகத்தைக் கண்டதும் திகைத்தாள்.

கண்களில் காதல் வழிய, கைகளில் தாலியை ஏந்தியபடி நின்றிருந்தவன் நிலை, அவள் மனதை உருக்கியது. அவனின் ஏக்கம் அவளின் காதல் மனதைத் தட்டி எழுப்ப, பளிச்சென்று அவனைப் பார்த்துச் சிரித்தவள், அடுத்த கணம் வெட்கத்தில் தலையைக் குனிந்து கொள்ள... பூ மாலைகளுக்கு இடையில் அவளது கன்னத்தில் பூத்த நாணப்பூவை ஒரு நொடி

ரசித்தவன், அடுத்துக் கண நேரம் கூட தாமதிக்காமல் அவளின் கழுத்தில் மங்கல நாணைப் பூட்டினான்.

சொர்க்கத்தைத் தன் வசமாக்கிய உணர்வில் மகிழ்ச்சியில் மிதந்தான் அவன். மணவறையைச் சுற்றும் போது இறுகப் பிடித்திருந்த அவளது கையை, அவன் அதன் பின் விடவே இல்லை.

அடுத்து அண்ணன் மனைவிக்கு நாத்தனார் முடிச்சுப் போட சங்கீதா தன் கணவன் சகிதம் உதய், உமா இருந்த மணவறை நோக்கிச் செல்ல... அவ்வளவு நேரம் இருந்த மகிழ்ச்சி மறைந்து, இறுகிய முகத்துடன் ஹரி அவளைப் பின் தொடர்ந்தான்.

என்னதான் எதையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் இருந்தாலும் தாலியைக் கையில் எடுக்கும் போது உதய்யின் கரங்கள் அவனையும் அறியாமல் நடுங்கத் தான் செய்தது. தனக்குப் பார்த்த பெண், தன்னுடைய காதலி உமா என்பதால் சரியாய்ப் போயிற்று... இல்லை என்றால், உமாவின் இடத்தில் வேறொரு பெண் இருந்திருந்தால் தன் நிலை...? அதைக் கற்பனையில் கூட அவனால் எண்ணிப் பார்க்க முடியவில்லை.

முயன்று தன்னைச் சமாளித்துக் கொண்டு உமாவின் கழுத்தை நோக்கித் தாலியைக் கொண்டு சென்றவன், உமாவின் கண்களில் இருந்து விழுந்த கண்ணீர்த் துளிகளைக் கண்டு அப்படியே நின்றான்.

'ஏன் என்னைப் பிடிக்கலையாமா...?' அவன் மனம் துணுக்குற்றது.

"கொழுந்தனாரே பொண்ணுக்கு வயசாகுறதுக் குள்ள தாலியைக் கட்டுங்க... அப்புறம் பொண்ணு பிடிக்க லைன்னு சொல்லிடப் போறீக..."

நித்யா அவனைக் கிண்டலடித்ததும்தான் அவனுக்கு உணர்வு வர, அடுத்த நொடி அவளின் கழுத்தில் தாலி யைக் கட்டினான்.

நாத்தனார் முடிச்சுப் போட சங்கீதா வந்த போது, உதய்யை முறைத்துப் பார்த்த உமா,

"ஒழுங்கா நீயே மூணு முடிச்சுப் போடு... இல்ல, நான் தாலியைக் கழட்டி உன் முகத்துல வீசி எறிஞ்சிட்டுப் போயிட்டே இருப்பேன்..."

அவளின் அழுகையைக் கண்டு மனம் துணுக்குற்ற வனுக்கு, அவளின் இந்தக் கோபம் பெருத்த ஆறுதலை அளித்தது.

அவனுக்கு மட்டுமே கேட்கும்படி வார்த்தைகளைக் கடித்துத் துப்பியவளின் பேச்சு, அவனுக்குக் கோபத்தை வரவழைக்கவில்லை. மாறாக, அவன் மனதில் தென்றலை வீசியது அவளது வார்த்தைகள். அவ்வளவு நேரம் மனதில் இருந்த அவனது சுணக்கம் மறைந்து, பொங்கி வந்த சிரிப்பை அடக்கியவன், நாத்தனார் முடிச்சுப் போட வந்த தங்கையின் கரங்களைத் தடுத்து,

"என் பொஞ்சாதிக்கு நானே மூணு முடிச்சும் போட்டுக்கிடறேன் சங்கீ... நீ தள்ளு..." என்றவன் உமா வின் தோளில் அழுத்தமாய்க் கை வைத்து நிறுத்தி நிதானமாய் மீதியிருந்த இரண்டு முடிச்சையும் போட,

இப்போது உமாதான் அவஸ்தையில் நெளிய வேண்டிய தாய்ப் போயிற்று.

"கையை எடுடா..." மீண்டும் முணுமுணுத்தவளைச் சீண்டிப் பார்க்க விழைந்தது அவனது மனம்.

"நீ தானே ஒழுங்கா முடிச்சுப் போடச் சொன்னே... அதான்..."

கண் சிமிட்டிச் சிரித்த உதய்யை கண்டு உமாவின் உள்ளம் மட்டுமல்ல ஹரி மற்றும் மகாதேவனின் உள்ளமும் கொதித்தது.

"மச்சான் என் கண்ணையே உங்க கிட்ட ஒப்படைக் கிறேன்... அதுல ஆனந்தக் கண்ணீரை மட்டுந்தான் நான் பார்க்கணும்..." என்று வராத கண்ணீரைப் போலியாய்த் துடைத்துக் கொண்ட அழகு,

"அதனால வெங்காயத்தை மட்டும் நீங்க உறிச்சு வெட்டிக் கொடுத்துருங்க..." என்று உதய்யைக் கிண்ட லடிக்க...

"ஏன், சமைச்சே உன் தங்கச்சிக்கு ஊட்டி விடறேன், போதுமா மாப்புள்ள...?" உதய் பதிலுக்கு அவனைக் கிண்டலடிக்க, அங்கே சிரிப்பலை பரவியது.

மணமக்களைத் தத்தம் பெற்றோர் கால்களில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கச் சொல்ல... ஹரி, சங்கீ தங்களது பெற்றோரிடம் ஆசிர்வாதம் வாங்கினார்கள். பின் சங்கீதா மட்டும் தனலெக்ஷ்மி காலில் விழுந்து ஆசிர் வாதம் வாங்க, ஹரி அசையாமல் தள்ளி நின்றிருந்தான்.

அதேபோல் உதய்யும், உமாவும் தங்கவேலு, மாரீஸ்வரி காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கியவர்கள்... நேரே தனலெக்ஷ்மி காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்க, அப்போதும் மகாதேவன் அபிநயாவை விட்டு தன லெக்ஷ்மி பக்கம் வரவில்லை. அதைக் கண்டு உமாவிற்கு ஆத்திரம் வந்தாலும் அன்னைக்காக அடக்கிக் கொண் டாள்.

"அப்பா கிட்ட ஆசிர்வாதம் வாங்கிக்கோ உமா..." தனலெக்ஷ்மி சொல்ல...

"எனக்கு அப்பா, அம்மா எல்லாம் நீங்க தான்மா..." என்ற உமா அசையாமல் நிற்க... மகாதேவன், அபிநயா, ஹரி மூவரின் முகமும் பயங்கரமாய் மாறியது. அதை உமா சிறிதும் கண்டு கொள்ளவில்லை. இவ்வளவு ஏன், யாரும் அதைப் பெரிதுபடுத்தவும் இல்லை.

அடுத்து வந்த சடங்குகளில் சங்கீதா எல்லா வற்றிலும் ஹரிக்கு விட்டுக் கொடுக்க, வெற்றிக்கனியைச் சுவைத்த ஹரிக்கு மனையாளை நினைத்துப் பெருமித மாக இருந்தது.

அவர்கள் அப்படி என்றால், இங்கே உதய் எல்லா வற்றிலும் உமாவுக்கு விட்டுக் கொடுத்தான். எல்லோரும் உமாவைக் கிண்டல் செய்து ஓட்டி எடுத்தனர்.

"குமாரு.. உன் வூட்டுல இனி மீனாட்சி ஆட்சிதான்... பார்த்து சூதானமா இருந்துக்கப்பு..." எச்சரிப்பது போல் கேலி செய்து உறவினர் கூட்டம் நகைக்க...

"மதுரையில இருந்தா மீனாட்சி ஆட்சிதான் மாமோய்..." என்று பதிலுக்கு அவர்களை ஓட்டியவன், தன்

மனையாளைத் தன் கையணைவிற்குள் வைத்துக் கொள்ளத் தவறவில்லை. ஏனெனில், தாலி கட்டும் போது அவள் பேசிய பேச்சில் அவனது மனம் அந்தளவுக்கு நெகிழ்ந்து இருந்தது.

அவனின் பிடியில் இருந்து விலக நினைத்தவள், தனது தந்தையின் நினைவு வர, அவரை நிமிர்ந்து பார்த்தவள், வேண்டுமென்றே அவனோடு இன்னமும் நெருங்கி அமர்ந்து அவனை வெறுப்பேற்றினாள்.

அதை உணர்த்த உதய்யும் அவளின் செயலுக்கு ஒத்துழைக்கத்தான் செய்தான். அதைக் கண்டு நித்யா கொழுந்தனைக் கிண்டல் செய்து ஒரு வழி செய்து விட்டாள்.

அதைக் கண்டு ஹரியின் முகத்தில் ஏளனம் தோன்றியது. சங்கீதாவின் பக்கம் குனிந்தவன்,

"உங்கண்ணனைப் பார்த்தா காதலில் தோல்வி அடைஞ்சவன் மாதிரித் தெரியலையே... விட்டது தொல்லைன்னு நிம்மதியா இருக்கிற மாதிரியில்ல இருக்கு..." என்றவனைக் கண்ணால் எரித்தாள் சங்கீதா.

"ஏன், என் அண்ணா சந்தோஷமா இருக்கிறது உங்களுக்குப் பிடிக்கலையோ...?"

ஆக்ரோஷமாய்க் கேட்டவளைக் கண்டு கப்பென்று வாயை மூடிக் கொண்டான். இப்போதுதான் ஏதோ தன்னை பார்த்துச் சிரிக்கும் மனைவியைத் தன் பேச்சால் மறுபடியும் அவளைக் கோபப்படுத்த அவனுக்கு விருப்பம் இல்லை.

"உங்க அண்ணனை நான் ஒண்ணும் சொல்லல, போதுமா... சரண்டர்..." என்பது போல் இரு கையை உயர்த்திய கணவனைக் கண்டு, அவளது உதட்டில் மெல்லமாய்ச் சிரிப்பு எட்டிப் பார்த்தது.

திருமணச் சடங்குகள் அனைத்தும் முடிந்து இரு வீட்டார் மட்டும் இருந்த போது, ஹரி அங்கிருந்த அறைக்கு இரு குடும்பங்களையும் அழைக்க, எல்லோரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

எல்லோரும் அறைக்குள் வந்ததும், ஹரி தன் பேச்சை ஆரம்பித்தான். முதலில் உதய்யின் அருகில் வந்தவன்,

"மச்சான்... உங்களை என்னுடைய தங்கச்சின்னு சொல்ற இவளுக்குக் கட்டாயப்படுத்தி கட்டி வச்சது அவள் மேலுள்ள பாசத்துல இல்ல... அவள் மேலுள்ள வஞ்சத் தில்தான் உங்களை அவளுக்குக் கட்டி வைச்சது..." என்றவனின் நேரடிப் பேச்சின் த்வனியே சரியில்லை என்பது அனைவருக்கும் புரிந்தது.

ஹரியின் பேச்சில் உள்ளமும் உடலும் இறுகிப் போய் நின்றிருந்தாள் உமா. தனலெக்ஷ்மியோ என்ன குண்டு வெடிக்கப் போகிறதோ என்று பதைபதைப்புடன் நின்றிருந்தார். மகாதேவனும், அபிநயாவும் மகன் என்ன சொல்ல வருகிறான் என்பது புரியாமல் நின்றிருந்தனர்.

"நீங்க என்ன நெனச்சுக் கட்டி வச்சீங்களோ... அது எனக்குத் தெரியாது... இப்போ உமா என் பொஞ்சாதி..." அதிலேயே மறைமுக எச்சரிக்கை விடுத்தான் உதய்.

"அப்கோர்ஸ்... யார் இல்லைன்னு சொன்னது... அதனாலதானே உங்க கிட்ட நான் பேசறேன்..." என்று உதய் கூறியதை அமோதித்த ஹரி,

"எங்கப்பாவை இரண்டாம் தாரமாய்க் கட்டிக்கிட்டு அவர்கிட்டே இருந்து எல்லாச் சொத்துக்களையும் பிடுங்கிய இந்தம்மா..."

தனலெக்ஷ்மியை அவன் சுட்டிக் காட்ட, அவரோ அவன் பேசிய வார்த்தைகள் உண்டாக்கிய அதிர்ச்சியில் உடல் நடுங்க நின்று கொண்டிருந்தார்.

"ரொம்ப சாமர்த்தியமா அவங்க பொண்ணு பேருக்கும், அவளுக்கு வரப் போற புருசன் பேருக்கும் எழுதி வச்சிட்டாங்க... இப்போ நீங்கதானே இவளோட புருசன்... அதனாலதான் உங்ககிட்ட நான் கேட்கிறேன்... இவங்க எங்கப்பா கிட்டே இருந்து எடுத்த சொத்துக்களை ஒழுங்கு மரியாதையா எங்கப்பா பேருக்கு எழுதி வச்சிருங்க... இதை உங்க பொண்டாட்டிகிட்டேயும் சொல்லுங்க..."

தந்தையும் மகனும் வழக்கம் போல் ஏதோ சதி செய்கின்றனர் என்று உதய் எண்ணினான். அதைவிடத் தன் வாழ்க்கையை அவர்கள் கையில் எடுத்துக் கொண்டு விளையாடுவதை இனி மேலும் அனுமதிக்க முடியாது என்று நினைத்தவன்,

"எழுதி வைக்கலைன்னா...?" எரிச்சலாய் வந்தது உதய்க்கு...

"எழுதி வைக்கலைன்னா உன் தங்கச்சி வாழா வெட்டியா உங்க வீட்டில் வந்து இருப்பா... இப்போ

சொல்லுங்க, உங்க வசதி எப்படி...?" ஹரியின் வார்த்தை யில் சங்கீதா அப்படியே செத்துப் போனாள்.

வார்த்தைகளால் அவளைக் கொல்லுவதை வழக்கமாய் வைத்திருப்பவனை என்ன சொல்லித் திருத்துவது...? இப்போது ஹரியின் மனதில் இருந்தது எல்லாம் அவனது தாய்க்கு ஏற்பட்ட துரோகமும், அவனின் தந்தை அனுபவித்த அவமானமும்தான்.

பெற்றோரின் அவமானமும் துரோகமும் அவனது காதலைப் பின்னுக்குத் தள்ளி விட்டது. இந்த மாதிரியான ஒரு நாளுக்காக அவன் எத்தனை வருடங்கள் காத்திருந்தான் என்பது அவனுக்கு மட்டும்தான் தெரியும்.

தனலெக்ஷ்மி என்ன செய்வது என்று தெரியாமல் பரிதவித்தவர், கணவரைப் பரிதாபமாய்ப் பார்த்தார். மகாதேவனும், அபிநயாவும் மகனின் பேச்சில் பேயறைந்தாற் போல் நின்றிருந்தனர். உதய் குடும்பத்தார் கிணறு வெட்டப் பூதம் கிளம்புவதைக் கண்டு திகைத்துப் போய் நின்றிருந்தனர்.

அன்று தங்கைக்காகத் தன்னை உதறி விட்டுச் சென்றவன், இன்று அதே தங்கைக்காகத் தன்னை ஹரியினிடத்தில் விட்டுக் கொடுத்து விடுவானோ என்று விக்கித்துப் போனவளாய் உமா உதய்யையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அதிலும் ஹரி கூறிய குற்றச்சாட்டை உதய் என்ன மாதிரி எடுத்துக் கொண்டிருப்பான்...? தன்னைத் தன்

அன்னையை எந்தளவுக்குக் கீழ்த்தரமாய் அவன் எண்ணி இருப்பான்...? ஏற்கெனவே அவளைக் கேவலமாய்ப் பேசியவன் அவன்... இப்போது தன்னைப் பற்றி என்ன நினைப்பான்...? அந்த எண்ணங்களே அவள் உடலைக் கூசச் செய்ய, கணவனைப் பார்த்தவளின் பார்வையில் வெளிப்படையாய்த் தவிப்பு தெரிந்தது.

உமாவின் கண்கள் தவிப்புடன் தன் கணவன் உதயைத்தான் பார்த்தன. அவன் வாயில் இருந்து வரும் வார்த்தைக்காக... அவள் தன் மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டு காத்திருந்தாள். அவளது மனம் குளிரும்படி அவளது நாயகனும் செயல்பட்டான்.

உமாவின் தோளின் மீது கையை அழுத்தமாய்ப் போட்டு அவளைத் தன்னருகில் கொண்டு வந்து இறுக்கி அணைத்தவன்,

"இவ நான் தாலி கட்டின பொஞ்சாதி... அவளுக்குத் துரோகம் பண்ண என்னால முடியாது... நீங்க சொன்னது எந்தளவுக்கு உண்மையோ எனக்கு எதுவும் தெரியாது. ஆனா உமாவைப் பத்தி எனக்கு நல்லாத் தெரியும்... அவளை நான் நம்பறேன்... அதே மாதிரி அவளோட அம்மாவையும் நான் நம்பறேன்...

"ஏன்னா தாயைப் போல புள்ள... இங்க என் உமாவை வச்சு நான் அவங்களைக் கணக்கிடுறேன்... அதனால அவங்களும் நல்லவங்களாத்தான் இருக்

கணும். இனி மேலும் என் வாழ்க்கைய நீங்க கையில எடுக்கிறதைப் பார்த்துட்டு என்னால சும்மா இருக்க முடியாது..." என்று நிறுத்தியவன்,

"இனிமே கொண்டு என் தங்கச்சிய பணயம் வச்சி என் வாழ்க்கையில விளையாடற விஷப் பரீட்சை எங்கிட்ட வேணாம்.. சங்கீ இனிமே என் தங்கச்சி இல்ல... உங்க பொஞ்சாதி... அவளை வச்சு வாழுங்க... இல்ல, என்னமும் செய்யுங்க... அது உங்க விருப்பம்...

"அடிச்சாலும் பிடிச்சாலும் அது உங்க ரெண்டு பேத்துக்குள்ள... ஊடால என்னையோ உமாவையோ இழுக்காதீங்க... அதுக்காக என் தங்கச்சிய அப்படியே விட்டுருவோம்னு நினைக்காதீங்க... நாளைக்கே உங்களுக்குக் குழந்தை பொறந்தா தாய்மாமன் சீர் செய்ய நானும் எங்கண்ணனும் முதல்ல வந்து நிப்போம்...

"எந்தளவுக்கு என் தங்கச்சி எனக்கு முக்கியமோ... அதே அளவுக்கு எனக்கு என் பொஞ்சாதியும் முக்கியம்..." என்றவனின் வார்த்தையில் உமா மெல்ல மெல்ல உயிர்த்து எழுந்தாள்.

கண்கள் கலங்க, அவள் அவனை நிமிர்ந்து பார்க்க, அவளின் பார்வையை உணர்ந்தார் போன்று குனிந்து அவளைப் பார்த்தவன், தன் அணைப்பை மேலும் இறுக்கிக் கொண்டான்.

"உமாவுக்கும் உங்களுக்கும் இருக்கிற தனிப்பட்ட பிரச்சினையை நீங்களே பேசித் தீர்த்துக்கோங்க... எனக்கும் அதுக்கும் சம்பந்தம் இல்லை..." உதய் பேசி முடித்ததும் சங்கீதா அவன் அருகில் வந்து,

"அண்ணே... என்னையும் உங்க கூடக் கூட்டிட்டுப் போயிருங்கண்ணே..." என்றாள் கண்களில் கண்ணீர் மல்க...

உதயின் பேச்சில் எரிச்சலாய் நின்றிருந்த ஹரி, மனைவியின் பேச்சில் திகைத்துப் போனாள்.

"கீத்து..." - ஹரி முணுமுணுப்பாய் அவளை அழைக்க...

அவன் பக்கம் ஆத்திரமாய்த் திரும்பியவள்,

"அப்படி என்னய கூப்பிடாதீங்க... எங்கண்ணன் வாழ்வைச் சீரழிச்சிட்டு நான் உங்க கூட வாழணும்னு எந்த அவசியமும் எனக்கு இல்ல. நீங்க என்ன... என் கூட வாழ மாட்டேன்னு சொல்றது... இப்ப நான் சொல்றேன், உங்க கூட வாழ எனக்கு விருப்பம் இல்ல..."

அவளது ஆணித்தரமான பேச்சைக் கேட்டு ஹரி மட்டுமல்ல, அவளது குடும்பத்தினர் அனைவரும் அதிர்ந் தனர்.

"கீத்து, ப்ளீஸ் என்னைய புரிஞ்சுக்கோ...?" ஹரி அவளுக்குத் தன்னைப் புரிய வைக்க முயற்சித்தான்.

"உங்களுக்குச் சொத்து வேணுமா? நான் வேணுமா?" வெட்டு ஒண்ணு துண்டு இரண்டாய் பேசிய வளிடத்தில் ஹரியால் உறுதியாய்ப் பதில் கூற முடிய வில்லை.

ஹரிக்குச் சங்கீதா முக்கியம்தான் என்றாலும் உமா, தனலெக்ஷ்மி மேல் இருக்கும் கோபம் அதைவிட முக்கிய

மாய்ப் பட்டது. சங்கீதாவுடனான தனது வாழ்க்கையை அவனால் எந்த நேரத்திலும், எந்த நிலையிலும் சரி செய்து கொள்ள முடியும்... அந்தளவுக்கு அவனின் காதல் மேல் நம்பிக்கை இருந்தது.

ஆனால் தனது எதிரியைப் பழி வாங்க இதுபோல் அருமையான சந்தர்ப்பம் கிடைக்காதே... அதை எப்படிச் சங்கீதாவுக்குப் புரிய வைப்பது என்று தெரியாமல் அவன் அமைதியாய் நின்றான். அவனது மௌனம் கண்டு சங்கீதா உள்ளுக்குள் உடைந்து போனாள்.

"முடிந்தது எல்லாம் முடிந்தது..." முணுமுணுத்த வளின் மன வேதனையைக் கண்டு மாரீஸ்வரி வேகமாய் வந்து அணைத்துக் கொண்டார்.

சற்று நேரத்திற்கு முன் திருமணமான பெண் கணவனுடனான வாழ்க்கையை முறித்துக் கொண்டு வருவதா? என்ன பேசுவது என்று அங்கிருந்த யாருக்கும் எதுவும் தெரியவில்லை.

அப்போதுதான் தங்கவேலு வாயைத் திறந்தார்...

"என்ன சம்பந்தி... உங்க பையன் எங்க வூட்டுப் புள்ளைங்க வாழ்க்கையைக் கேள்விக்குறியாக்கிப் பேசுறாரு. நீங்க அதை மறுத்தீ ஒண்ணுத்தையும் பேசக் காணோம். அவர் பேசுற விஷயத்தோட ஆதியும் அந்தமும் அறிஞ்ச ஒரே மனுசன் நீங்கதான்... நீங்க பேசுனாத்தேன் இது ஒரு முடிவுக்கு வரும்..." மகாதேவனைப் பார்த்து அவர் கேட்க...

மகாதேவனால் வாயைத் திறக்க முடியவில்லை. இனியும் எந்தப் பொய் சொல்லித் தன் மகனிடம் இருந்து தப்புவது என்று அவருக்குத் தெரியவில்லை.

தன் அப்பா என்கிற ஹீரோயிசத்தைத் தக்க வைத்துக் கொள்ள... அபிநயா தன் தாய் பாசத்தைத், தனது மகனைத் தன்னுடன் தக்க வைத்துக் கொள்ள, அதை விட மகனிடத்தில் கணவனின் கௌரவத்தைத் தக்க வைத்துக் கொள்ள அவர்கள் கூறிய பொய்கள் இந்தளவிற்கு அவர்களைக் கொண்டு வந்து நிறுத்தும் என்று அவர்கள் கனவிலும் நினைத்துப் பார்க்கவில்லை.

"ஹரி... எதுவா இருந்தாலும் வீட்டுக்குப் போய் பேசிக்கலாம். மருமகளைக் கூட்டிட்டுக் கிளம்பு..." மகா தேவன் மகனை அழைக்க... அவனோ பிடிவாதமாய் நின்றிருந்தான்.

"அப்போ அவங்களை உங்க சொத்துக்களைத் திரும்பக் கொடுக்கச் சொல்லுங்க..."

அவன் தன் நிலையில் பிடியாய் இருக்க... அவனது பேச்சில் உமா சிலிர்த்து எழுந்தாள்.

"டேய், என்ன பெரிய இவன் மாதிரிப் பேசுற...?"

ஹரியின் முன் வந்து அவள் எகிற... உமாவின் சீற்றத்தைக் கண்டு உதய் பயந்து போய் முதலில் தன் தந்தையைத்தான் பார்த்தான்.

புது மணப்பெண்ணான அவளது துடுக்கான பேச்சைக் கேட்டு அவர் உமாவை எதுவும் தப்பாக நினைத்து விடுவாரோ... முதல் கோணல் முற்றிலும்

கோணல் என்பதற்கு இணங்க, உமா தனது வீட்டாரிடம் தவறான பெயர் எடுத்து விடக் கூடாது என்று மனதுக்குள் கலங்கியவன் உமாவின் கையைப் பிடித்துத் தடுத்து,

"உமா சித்த நேரம் பேசாம இரு.. அதேன் அப்பா, நான் எல்லாரும் உனக்காகப் பேசறோம்ல..." என்று அவளை அதட்ட... அத்தனை நேரம் உதய் மேலிருந்த இணக்கம் மறைந்து, உமாவின் மனதில் கோபம் எழ ஆரம்பித்தது. ஏதோ சொல்ல அவள் வாயெடுக்கும் முன் தங்கவேலு மகனைக் கண்டித்தார்.

"குமாரு... அந்தப் புள்ளய பேச விடுப்பா... அது பக்க நியாயத்த அதுதேன் பேசணும்... நீயும் நானும் பேசி ஒண்ணுமாகப் போறது இல்ல... அம்மாடி மருமவளே... நீ பேசுத்தா... உம் பக்க நியாயத்தையும் நாங்க கேட் கிறோம்..." அவரது அனுசரணையான வார்த்தையில் உமாவின் வேகம் மட்டுப்பட்டது.

நேரே தன் அம்மாவின் அருகில் சென்றவள் அவரை அழைத்துக் கொண்டு வந்து, ஹரியின் முன் நிறுத்தி, "இவங்கள நல்லாப் பார்த்துட்டுச் சொல்லு... இவங்க உங்கப்பா சொத்தை ஏமாத்தி எழுதி வாங்கிட் டாங்களா...?"

உமாவின் நேரடிக் கேள்வியில் ஹரி தைரியமாய்த் தனலெக்ஷ்மியை நிமிர்ந்து பார்த்தான். அவரை அவன் இதுவரை கண்டதில்லை. இன்றும் திருமண வீட்டில் அவரைப் பார்த்தாலும் கவனித்து உற்று நோக்கவில்லை. கண்ணில் பரிதவிப்புடன் அவனைப் பரிதாபமாய் பார்த்த

படி நின்றிருந்தவரின் அமைதியான தோற்றம் அவனுள் சற்று மாற்றத்தை விளைவித்தது.

தொழில் துறையில் எத்தனையோ பேரை முகத்தைப் பார்த்தே எடை போடும் அவன் அவரின் முகத்தைக் கண்டே அவர் ஒரு அப்பாவி என்பதை உணர்ந்து கொண்டான். அருகில் நின்றிருந்த உமாவைப் பார்த்தான்.

ஒருவித நிமிர்வுடன் நின்றிருந்த அவளது தோற்றம், 'பாரதி கண்ட புதுமைப் பெண்' என்பது போலிருந்தது.

முதன் முறையாக அவர்களைப் பற்றிய தனது எண்ணம் தவறோ என்று நினைத்தவன் யோசனையாய்த் தனது பெற்றோரைப் பார்த்தான். அவர்கள் இவனது பார்வையைச் சந்திக்க முடியாமல் தலையைக் குனிய அவனது புருவங்கள் இரண்டும் முடிச்சிட்டது

"என்ன பேச முடியலையா...? நீ அந்தாளு மகன் தானே... அவரு புத்திதான் உனக்கும் இருக்கும். எங்கம்மா சொத்தை எழுதி வாங்கிட்டதாச் சொல்றியே... உண்மை என்னன்னு உனக்குத் தெரியுமா...? எங்கம்மா முறையா உங்கப்பா கையால தாலியை வாங்கிட்டு முன் வாசல் வழியா வந்தவங்க...

"ஆனா, உன் அம்மா முறையில்லாம பின்வாசல் வழியா வந்து வலுக்கட்டாயமா தாலி வாங்கி எங்கம்மா வாழ்க்கையைக் குலைச்சவங்க... முறையில்லாம பிறந்த உனக்கே இவ்வளவு திமிர் இருக்கும் போது முறையாப் பிறந்த எனக்கு எவ்வளவு திமிர் இருக்கும்...?"

உமாவின் வார்த்தையில் ஹரி அப்படியே நிலை குலைந்து போனான். மனதில் எழுந்த ஆத்திரத்துடன் கண்கள் சிவக்க, அவன் தன் தாய் அபிநயாவைப் பார்க்க, அவரோ அச்சத்துடன் அவனைப் பார்த்தார்.

எது தன் மகனுக்குத் தெரியக் கூடாது என்று நினைத்தாரோ அது அவனுக்குத் தெரிந்து விட்டதை எண்ணி அவருக்கு உள்ளுக்குள் அச்சம் மூண்டது... மகனின் சினத்தை எண்ணி... அவனின் வெறுப்பை எண்ணி அவருக்கு அடிவயிறு கலங்கியது.

"எங்ககிட்டே இருக்கிறது எல்லாம் உங்கப்பா சம்பாதிச்ச சொத்துன்னா நினைச்ச... ம்ஹூம்... இதெல்லாம் என் அம்மாவோட அப்பா, என் தாத்தாவோட சொத்து... இவ்வளவு ஏன் இப்போ நீ அனுபவிச்சிட்டு இருக்கியே, அதெல்லாம் கூட என் அம்மாவோட சொத்து தான்... அவங்களை ஏமாத்தி உங்கப்பா பிடுங்கியது தான்..." என்றவள், தனது தந்தையை நோக்கிக் கேவல மாய் ஒரு பார்வையைப் பார்த்தவள்,

"என்னப்பா இவன்கிட்ட நீங்க எதுவுமே சொல்ல லியா...?" நக்கல் குரலில் கேட்டவள், "ஊரான் சொத்தை எல்லாம் கொள்ளையடிக்கும் அளவுக்குப் பவர் உள்ள மினிஸ்டர் போஸ்ட்ல இருந்துட்டு முகளோட சொத்தை எழுதி வாங்க முடியாம நீங்க தவிக்கிறதுக்கான ரகசியத்தை இன்னமுமா உங்க புள்ளகிட்ட நீங்க சொல்லல...'

"ஏன்னா இது எதையும் உங்களால சொல்லவும் முடியாது... செய்யவும் முடியாது. இல்லையாப்பா..."

என்றாள் இறுகிய குரலில்... அவளது பேச்சில் மகா தேவனுக்கு வியர்த்து வழிந்தது.

"உமா அப்பாவை எதிர்த்துப் பேசாதேன்னு உனக்கு எத்தனை தடவை சொல்றது...?" தனலெக்ஷ்மி மகளைக் கண்டிக்க...

"இப்பவும் நான் பேசலைன்னா பிறகு எப்பவுமே நான் பேச முடியாமப் போயிரும்மா..." அம்மாவை அடக் கினாள் மகள்.

"மாம்... இவ சொல்றது எல்லாம் உண்மையா...?" ஹரி நேரடியாகத் தன் அம்மாவிடம் கேட்க...

"ஹரி, அது வந்து..." பதில் சொல்ல முடியாமல் திணறினார் அபிநயா... பதில் சொல்லும் அளவுக்கு அவரிடத்தில் உண்மை இல்லை என்பதுதான் வருந்தத் தக்க கசப்பான உண்மை.

"ஆமாவா... இல்லையா... அதை மட்டும் சொல் லுங்க...?"

அழுத்தத்துடன் கேட்டவனை நிமிர்ந்து பார்க்க முடி யாமல் அவர் தலை குனிய... ஹரியின் பார்வை மகாதேவன் மேல் யோசனையாய்ப் படிந்தது.

"இதுக்கு நீங்க என்ன சொல்லப் போறீங்க டாட்..." அவரும் பதில் சொல்ல முடியாமல் தலை குனிய...

"அப்போ நீங்க சொன்னது எல்லாம் பொய், அப்படித்தானே... உமா சொல்றது எல்லாம் உண்மை, அப்படித்தானே... எப்படிப்பா உங்களுக்கு இப்படிப் புத்தி

போனது... அதுவும் தாலி கட்டிய மனைவியைப் போய் எப்படிக் கூசாம... ச்சே...”

நெற்றியில் அறைந்து கொண்டவன் அதே கையால் தலை முடியைக் கோதிக் கொண்டான்.

“மாம், அவ பேசினதைக் கேட்டீங்க தானே... பின்வாசல் வழியா வந்தவங்க உன்னோட அம்மான்னு சொல்றா... இந்தப் பழியை எப்படிப் போக்கக் போறீங்க? அதை விடுங்க. ஒரு பொண்ணா இருந்திட்டு இன்னொரு பொண்ணோட வாழ்க்கையை அழிக்க உங்களுக்கு எப்படி மனசு வந்தது...?”

அவனது வார்த்தைகள் சாட்டையாய் சுழன்று அடித்ததில் வலி தாங்க முடியாமல் நிமிர்ந்த அபிநயா,

“ஆமாம்... அதுக்கு என்ன இப்போ? இவ ஒழுங்கா இருந்தா உங்கப்பா ஏன் என்னைய தேடி வர்றாரு? அவளைக் கல்யாணம் பண்ணி என்ன யூஸ்? எண்ணிப் பத்தாவது மாசத்துல உன்னைப் பெத்துக் கொடுத்தவ நான்டா...”

திமிராய் பிள்ளை பெற்றதைப் பெருமையாய்ப் பேசியவளின் பேச்சு கண்டு ஹரிக்கு முதன் முறையாய்த் தாயின் மீது அருவருப்பு வந்தது. அதைவிட அதிகமாய்த் தன் பிறப்பு அவனுக்கு அருவருப்பைத் தந்தது.

“மாம்... டாட்! நீங்க ரெண்டு பேரும் இவ்வளவு கேலமானவங்கன்னு நான் நினைச்சு கூடப் பார்க்கலை.”

அதைக் கேட்டு கோபம் வந்தது அபிநயாவுக்கு.

"என்னடா, ரொம்பத்தான் பேசிட்டே போற... நாங்க கேவலமானவங்கன்னா நீ யாருடா...? தினமும் புட்டியும், குட்டியுமா குடித்தனம் பண்றியே! அதுக்கு பேரு என்னடா அர்த்தம்...? எங்களுக்கு எதுவும் தெரியாதுன்னு நினைக் காதே. எல்லாம் எங்களுக்கும் தெரியும்...

"இதோ நிக்கறாளே, உன் பொண்டாட்டி! அவளை எப்படி கரெக்ட் பண்ணினேனு எனக்குத் தெரியாது... கேவலமாம் கேவலம்... நீயே ஒரு கேவலம்... அவ மானம்... இதுல எங்களைப் பெருசாப் பேச வந்துட்டான்..."

அவரின் வார்த்தைகள் தந்த வேதனை, வலியில் கண்களை இறுக மூடிக் கொண்டான் ஹரி...

அபிநயாவின் வார்த்தை தீயாய்த் தன்னைச் சுட்டுப் பொசுக்க, சங்கீதா தனது தாயின் தோளில் முகம் புதைத்து மௌனமாய்க் கண்ணீர் உகுத்தாள்.

"உங்க மகன்தானே நான்... நான் மட்டும் எப்படிம்மா இருந்திருப்பேன்... கேவலமாத்தான் இதுவரை வாழ்ந் தேன்... ஆனா, இனிமேல் அப்படி ஒரு கேவலமான வாழ்க்கையை நான் வாழ மாட்டேன்... உங்க புருஷன் மாதிரிக் கல்யாணத்துக்கு அப்புறம் இன்னொருத்தியைத் தேடிப் போய்க் குடித்தனம் பண்ணமாட்டேன்... அந்த விதத்தில் நான் கொஞ்சம் நல்லவன் தான்!" என்றான் ஹரி, தனது வேதனையை விழுங்கிக் கொண்டு.

"இனிமேல் உங்களுக்கும் எனக்கும் எந்தவிதச் சம்பந்தமும் இல்லை. இனி நீங்க யாரோ... நான் யாரோ? நீங்க செய்த பாவத்துக்கு நான் பிராயச்சித்தம் தேடிக்

கிறேன்...” என்றவன் நேரே தனலெக்ஷ்மியிடம் சென்று அவரின் கையை பிடித்துக் கொண்டு,

“அம்மா, என்னை உங்க மகனா நினைச்சு மன்னிச்சிருங்கம்மா...” என்றபடி நெடுஞ்சாண்கிடையாய் அவரின் காலில் விழுந்தான்.

இதுதான் ஹரி... தன் மீது தவறு என்ற பட்சத்தில் முன்னைத் திருத்திக் கொள்ள அவன் என்றுமே தவறியது இல்லை... அன்று அன்னையின் பக்கம் நியாயம் இருப்பதாய்த் தோன்றியதால் அவருக்காக நியாயம் செய்ய நினைத்தான். அதே இன்று அவரது அநியாயம் புரிய பெரிய அன்னையிடம் மன்னிப்புக் கேட்டு விட்டான்.

ஹரியின் செயலைக் கண்டு, உமா உதட்டைப் பிதுக்கி நக்கலாய் அவனைப் பார்த்தாள்.

அபிநயா மகனின் வார்த்தையில், செயலில் கோபம் அடைந்தார். தனது எதிரியின் காலில் தன் மகன் விழுந்து மன்னிப்புக் கேட்பதை அவரால் சகித்துக்கொள்ள முடிய வில்லை.

“என்னப்பா இதெல்லாம்... நீயும் எனக்கு ஒரு மகன் தான்ப்பா...” பதறிய தனலெக்ஷ்மி அவனைத் தூக்கி விட்டார்.

இந்தக் காட்சியைக் காண முடியாமல் அபிநயா, “வாங்க போகலாம்... அவனுக்குப் பைத்தியம் பிடிச்சுப் போச்சு...”

எரிச்சலுடன் மகனைப் பார்த்தபடி சொன்னவர் கணவனை அழைக்க... மகாதேவன் வேறு வழியின்றி

தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு அபிநயா பின் போனார்.

தனது அன்னையிடமும், தன்னிடமும் பாம்பாய்ச் சீறும் தந்தை... அபிநயா பின்னால் பெட்டிப் பாம்பாய் அடங்கிப் போவதை கண்ணில் கேலியுடன் பார்த்திருந் தாள் உமா.

உமாவின் பிரச்சினை தீர்ந்தாலும் சங்கீதாவின் பிரச்சினை அப்படியேதான் இருந்தது. ஹரியின் பார்வை இப்போது தான் மனையாள் மீது படிந்தது.

அவள் அருகே அவன் வருவதை உணர்ந்து மாரீஸ்வரி மகளை விட்டுத் தள்ளி நின்றார்.

"திரும்பத் திரும்ப முட்டாள்தனம் செஞ்சு உன்னைய இழக்கறதைப் பொழப்பா வச்சியிருக்கேன்ல கீது... இப்பவும் உன்னைய இழந்துட்டேன்னு தான் நினைக் கிறேன்... உன் மனசைப் புரிஞ்சிக்காமப் பேசுறதே எனக்கு வழக்கமாப் போச்சு... என்னைய மன்னிச்சிரு கீத்து..."

அவளின் கைகளைப் பற்றித் தன் முகத்தின் மீது வைத்துக் கொண்டவனின் உடல் அழுகையில் குலுங் கியது.

ராஜா வீட்டு கன்னுக்குட்டியாய்... அமைச்சரின் மகனாய்த் திமிராய் வலம் வந்தவன் இன்று சிறு பெண் ணின் முன் கண்ணீர் விட்டு அழுகிறான் என்றால் அவனது காதலும் ஆழமானது தானோ? உண்மையானது தானோ?

முகத்தில் உணர்ச்சிகளைத் தொலைத்தவளாய் நின்றிருந்த சங்கீதா வலுக்கட்டாயமாய் அவனின் பிடியில்

இருந்து தனது கைகளை உருவிக் கொண்டவள் தனது பெற்றோரையும், இரு அண்ணன்களையும் பார்த்து, "வாங்க போகலாம்..."

அவளின் வார்த்தையில் ஹரி உள்ளுக்குள் மருகி னாலும் அவளைத் தடுத்து நிறுத்தவில்லை.

தான் செய்த காரியத்தால் விளைந்த குற்றவுணர்வு அவனுக்கு உள்ளுக்குள் குறுகுறுக்க... அவளைத் தடுக்கும் அருகதை தனக்கு இல்லை என்பதை அவன் உணர்ந்தே இருந்தான்.

கண்கள் கலங்கக் கையை மார்புக்கு குறுக்காகக் கட்டிக் கொண்டு இறுகிப் போய் நின்றிருந்தவன் பார்வை மட்டும் தன்னவளை விட்டுக் கண நேரம் கூட அகல வில்லை.

அவளின் இந்தப் பிரிவு, அவளின் மனதை மதியாமல் தான் பேசிய பேச்சுக்காகத் தனக்குக் கிடைத்த தண்டனையாக அவன் கருதினான். அதை மனமுவந்து ஏற்றுக் கொள்ளத் தயாராகவும் அவன் இருந்தான்.

"சங்கீ..." இப்போது மாரீஸ்வரி மகளை அதட்டினார்.

முதலில் ஹரி பேசியது கண்டு அவருக்கு எரிச்சல் வந்தாலும் அதன் பின் அவன் தன் பெற்றோரின் தவறை உணர்ந்து அவர்களைக் கண்டித்தது, தான் செய்தது தவறு என்று தெரிந்ததும் தனலெக்ஷ்மி காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டது... இத்தனைக்கும் மேலாக தன் மகளிடம் மன்னிப்புக் கேட்டவன் கண்ணீர் விட்டு அழுதது எல்லாம் அந்தத் தாய் மனதை நெகிழ்த்தி இருந்தது.

"நேத்து உனக்கு நான் என்ன சொன்னேன்... அவரு மன்னிப்புக் கேட்டா மன்னிக்கணும்னு சொன் னேனா இல்லையா...?" அவர் மகளைக் கண்டிக்க...

"எத்தனை தடவை தான்ம்மா மன்னிக்கிறது... ஒரு தடவை தப்பு செஞ்சா மன்னிக்கலாம்... தப்பு மேல தப்பு செய்றவரை என்னால மன்னிக்க முடியாது..."

தீர்மானமாய்ச் சொன்னவளை அழுத்தத்துடன் பார்த்த ஹரி, "அவளை அவள் போக்கில் விட்டுருங்க அத்தை..." என்றான் மாரீஸ்வரியிடம்.

"ரொம்பத்தேன் அக்கறை..." அவனைப் பார்த்து தன் கழுத்தை நொடித்தாள் சங்கீதா.

அவளின் அந்தச் செயல் கண்டு அவன் உதட்டில் மின்னல் கீற்றாய்ப் புன்னகை தோன்றி மறைந்தது. அதைக் கண்டும் முறைத்தாள் அவனது மனையாள்.

"சங்கீ... இது வாழ்க்கை விசயம்... சட்டு புட்டுன்னு எடுத்தோம் கவுத்தோம்னு பேசக் கூடாது... தப்பை அவரே உணர்ந்துட்ட பொறவு நீ இப்படிக் கோபப்படுறது சரியில்ல, சங்கீ..." என்ற தங்கவேலு, ஹரியின் அருகில் வந்து,

"மாப்புள்ள... எம் மக ஏதாவது தப்பாப் பேசியிருந்தா அவ சார்பா நான் மன்னிப்புக் கேட்டுக்கிடுதேன்..."

அவரது மன்னிப்பில் ஹரி பதறிப் போனான்.

"ஐயோ... நீங்க பெரியவங்க. நீங்க போய் என்கிட்ட மன்னிப்பு எல்லாம் கேட்டுட்டு... நான்தான் புத்திக் கெட்டுப் போய் நடந்துக்கிட்டேன்..." தன் தவறை உணர்ந்தவனாய்...

அதைக் கண்டு உதயும், முத்துவும் அவன் அருகில் வந்து, "என்ன மாப்புள்ள! சின்னப்புள்ள மாதிரிக் கண்ணு எல்லாம் கலங்கிட்டு..." என்று இருவரும் ஆளுக்கு ஒரு பக்கமாய் அணைத்துக் கொள்ள, அந்தப் பாசக்கார மச்சான்களின் அணைப்பில், அன்பில் ஹரி திணறிப் போனான்.

ஆனால் அவனை ஏற்றுக் கொள்ள வேண்டிய வளோ இன்னமும் அவனை முறைத்துக் கொண்டிருந் தாள். அவளோடு சேர்ந்து இன்னொருத்தியும் தன் கணவனை முறைத்துக் கொண்டிருந்தாள்.

ஆம். உமாதான் அது... ஹரியின் மீதான உதயின் அன்பைக் கண்டு கடுங்கோபத்தில் இருந்தாள் அவள். பின்னே ஹரி அவளின் ஜென்ம எதிரி இல்லையா?

அவளின் நினைவை உணர்ந்தவனாய் ஹரி, தன் உடன்பிறவாத் தங்கையைப் பார்த்தான். கோபத்தில் நின்று கொண்டிருந்த உமாவைக் கண்டு அவள் அருகில் வந்தவன், "உமா, என்னை மன்னிச்சிரு..." என்றவனைத் தீப் பார்வை பார்த்தாள் அவள்.

"மன்னிக்கிற மாதிரியா நீ பேசியிருக்க... உன்னை?" என்று பல்லைக் கடித்தவள், "நான் ஒண்ணும் எங்கம்மா இல்லை... உன் நடிப்பில் ஏமாந்து போறதுக்கு... உன் நடிப்பை மத்தவங்க கிட்ட காட்டு... என்கிட்ட இல்லை..." வார்த்தைகளைக் கடித்துத் துப்பியவள் ஹரியின் மீதுள்ள ஆத்திரத்தில் உதயைத் தான் முறைத்துப் பார்த்தாள்.

"அவ எப்போதுமே இப்படித்தான் கண்டுக்காதீங்க, மாப்புள்ள..." ஹரியின் தோளில் கை போட்டு உதய் அவனை அழைக்க... அதற்கும் கோபமுற்றாள் உமா.

"என் நிலைமையை விட உங்க நிலைமை ரொம்ப மோசமா இருக்கும் போலிருக்கே மச்சான்..." ஹரி உதயை பாவமாய்ப் பார்த்தான்.

"நாட்டுல இதெல்லாம் சகஜம் மாப்புள்ள..." என்ற உதய், சட்டையில் இல்லாத தூசியைத் தட்டி விட்டுக் கொண்டான்.

"அப்போ எல்லோரும் கௌம்பலாமா...?" தங்க வேலு கேட்டதும்தான் அனைவருக்கும் ஊருக்குச் செல்ல வேண்டும் என்கிற நினைவு வந்தது.

திருமணத்தைச் சென்னையில் வைத்துக் கொண்ட தால், மற்றச் சடங்குகளை எல்லாம் மதுரையில் தங்கள் வீட்டில் வைக்க வேண்டும் என்று ஏற்கெனவே தங்கவேலு உறுதியாய்ச் சொல்லி இருந்ததால் மற்ற ஏற்பாடுகள் மதுரையில் நடந்து கொண்டிருந்தது.

மணமக்கள் தாலி கட்டி முடிந்ததும் அதைக் கவனிக்க முதலில் அழகு அங்கு சென்று விட்டான்.

"மாப்புள்ள எதுக்கும் உங்கப்பா, அம்மாகிட்ட..." ஹரியிடம் தங்கவேலு கேட்க...

"அவங்கள எதுவும் கேட்க வேணாம்... எது கேட் கிறதா இருந்தாலும்..." நிறுத்தியவன் தனலெக்ஷ்மி அருகில் வந்து, "இனிமேல் இவங்க தான் என் அம்மா... இவங்க கிட்ட கேட்டுக்கோங்க..."

அவனின் பேச்சு தனலெக்ஷ்மி மனதை உருக்கியது.

உமா கூட அவனை அதிசயமாய்ப் பார்த்தாள். ஆனால் அவனை முழுவதுமாய் நம்பத் தயாராய் இல்லை.

எல்லோரும் அந்த அறையை விட்டு வெளியேற, ஹரி உதயைத் தடுத்துத் தனியே நிறுத்தியவன், "மச்சான்... உமா பாவம்... நீங்க உங்க காதலியை நினைச்சிட்டு அவளை..." எப்படிச் சொல்வது என்று தெரியாமல் நிறுத்தியவன், "நான் செஞ்சது தப்புதான்... அதுக்கு எனக்கு என்ன தண்டனை வேணும்னாலும் கொடுங்க... ஆனா உமாவை..."

உதய் ஹரியை ஆழ்ந்து பார்த்தான். திருந்தி விட்ட இந்த ஹரியைப் பார்ப்பதற்கு மிகவும் கம்பீரமாய் இருந்தது. அதிலும் உமா மீதான அவன் அக்கறை கண்டு உதயின் மனம் நெகிழ்ந்தது.

"நான் காதலிச்ச பொண்ணும் உமாவும் ஒண்ணு தான் மாப்புள்ள..." என்ற உதயைப் புரியாமல் பார்த்த ஹரி,

"என்ன சொன்னீங்க...?" என்றவனிடம்,

உதய் மீண்டும் தான் சொன்னதைக் கூற... முதலில் திகைத்த ஹரி பின் கவலை அகன்றவனாய் வாய் விட்டுச் சிரித்தான்.

"அதான் அப்படி ரொமான்ஸ் பண்ணுனீங்களா...?"

"ஹி... ஹி..." அசடு வழிந்தான் உதய்.

"ரொம்ப வழியுது துடைச்சுக்கோங்க, மச்சான்... அப்புறம் என்ன... உங்களுக்கு ஒரு கவலை விட்டது... நான்தான் தேவையில்லாம பெரிய இவன் மாதிரி வாயை விட்டு மாட்டிட்டு முழிக்கிறேன்... இன்னைக்கு நைட் எனக்குச் செம அடி இருக்கு..." என்றான் போலி சோகத்துடன்...

"இங்கே மட்டும் என்ன வாழுதாம்... இங்கேயும் அதேத்தேன்..." என்ற உதய் உமாவின் கோபத்தைப் பற்றிச் சொல்லி, "என் தங்கச்சியாவது வெறும் அடியோட விட்டுரும்... ஆனா உன் தங்கச்சி இருக்கே, மரண அடில்ல அடிக்கும்... எப்படித் தப்பிக்கப் போறேனோ..." உதய் சோகப் பெருமூச்சு விட...

"ஹா... ஹா..." என்று ஹரி சிரிக்க, அவனைப் பார்த்துச் சிறிதும் வெட்கம் இல்லாமல் உதயும் வாய் விட்டுச் சிரித்தான்.

மதுரையில் உதய் வீட்டிற்கு வந்த மணமக்களுக்குப் பாலும் பழமும் கொடுத்து வரவேற்றனர். அன்றைய இரவு சடங்குக்காக மணப்பெண்கள் இருவரும் தயாராகிக் கொண்டிருந்தனர்.

அறைக்குள் போகும் முன் உதயைத் தடுத்து நிறுத்திய அழகு... "மச்சான், உங்களுக்காக ஸ்பெஷலா ஊட்டி ரோசாவும், மல்லிப்பூவும் அதிகமாப் போட்டு அலங்கரிச்சு இருக்கேன்... ம்... என்ஜாய் மச்சான்..." கண்ணைச் சிமிட்ட...

"போடா. நீ வேற என் டென்சனை ஏத்தாதே..." அவன் முதுகில் உதய் தட்ட...

"பின்னே... டென்சன் இல்லாம இருக்குமா...? மொத அனுபவம்ல..." என்று கூறி மறுபடியும் கண்ணைச் சிமிட்டியவனை உதய் முறைத்துப் பார்க்க... அதற்கு எல்லாம் பயந்தால் அவன் அழகு அல்லவே?

"இப்படி எல்லாம் முறைக்காதீங்க மச்சான்... என் தங்கச்சி சின்னப் புள்ள. பாவம், பயந்துறப் போகுது..."

'உன் தங்கச்சியாடா சின்னப்புள்ள.. இன்னும் கொஞ்ச நேரத்துல ராணி மங்கம்மா மாதிரி என்னையப் பந்தாடப் போறா பாரு...' மனதுக்குள் நினைத்தவன்,

"டேய் அழகு..." என்று பல்லைக் கடித்தான் வெளியில்...

"ஆல் த பெஸ்ட் மச்சான்..." என்று கத்தியவாறே ஓடி மறைந்தான் அழகு...

அங்கே சங்கீதாவிற்காகக் காத்துக் கொண்டிருந்த ஹரியின் நிலையோ பரிதாபமாய்த் இருந்தது. தவிப்புடன் காத்திருந்தவனை அதிக நேரம் காக்க வைக்காமல் உள்ளே வந்தவள் அவனை ஏறெடுத்தும் பார்க்காமல் கட்டிலின் மறுபக்கம் சென்றாள். அவனும் விடாமல் அவளின் பின்னே சென்றவன்,

"கீத்து, சாரி பேபி..." பதில் பேசாமல் படுக்கப் போனவளைக் கைப்பிடித்து அவன் தடுக்க, அவன் கை மீது ஒரு பார்வை பார்த்துவிட்டு, அவனை நெருப்பாய்ப் பார்த்தாள்.

அவளின் பார்வையை உணர்ந்து அவன் கையைப் படக்கென்று எடுத்துக் கொள்ள அவள் அமைதியாய் அமர்ந்திருந்தாள்.

"நான் முதல்ல இருந்து சொன்னாத்தான் உனக்கு எல்லாம் புரியும். எனக்கு விவரம் தெரிஞ்ச வயசுல அப்பாவுக்கு இன்னொரு குடும்பம் இருக்குன்னு கேள்விப் பட்ட உடனே எப்படி அழுதேன் தெரியுமா...? அப்போதான் என் அம்மா உமா அம்மாவைப் பத்தித் தப்பா சொன்னாங்க...

"அப்பாவை ஏமாத்திக் கல்யாணம் பண்ணிட்டு சொத்து எல்லாத்தையும் பிடுங்கிட்டு விட்டுட்டாங்க. அப்பா பாவம்... அப்படின்னு சொன்னாங்க. அந்த வயசுல சரி எது... தப்பு எதுன்னு நான் அதிகம் யோசிக்கல...

"ஆனா, அவங்க மேலுள்ள வெறுப்பு மட்டும் மாறாம இருந்தது. வளர்ந்து சந்தர்ப்பம் கிடைச்சப்போ உங்கண்ணனையும் பழி வாங்கிய மாதிரி இருக்கும்... உமாவையும் பழி வாங்கிய மாதிரி இருக்கும்னுதான் நான் இப்படிச் செஞ்சது... ஆனா அது என்னடான்னா எங்கேயோ போய் முடிஞ்சிருச்சு..." என்றவனை நிமிர்ந்து பார்த்தவள்,

"அதுக்கு என் வாழ்க்கையும், என் அண்ணன் வாழ்க்கையும் தான் உங்களுக்குக் கிடைச்சதா...?"

"இப்போதான் எல்லாம் சரியாப் போச்சே பேபி..."

உதய்யும் உமாவும் காதலர்கள் என்பதை உதய் தன்னிடம் சொன்னதை அவன் அவளிடம் சொல்ல...

"என்ன சரியாப் போச்சு... உமாவை எங்கண்ணன் காதலிக்காம இருந்து வேற பொண்ணைக் காதலிச்சு இருந்தா... அது வாழ்க்கை இப்போ என்னாகி இருக்கும்...

எனக்கு அண்ணனாப் பொறந்த பாவத்தைத் தவிர அது வேற என்ன பாவம் பண்ணிச்சு...” அவளின் மனதில் கனன்ற கோபம் இன்னமும் தீரவில்லை.

“எல்லாத்துக்கும் சாரி... சாரி... சாரி. ஓ.கே... இனிமேல் எந்தத் தப்பும் பண்ண மாட்டேன்... எதைச் செய்றதா இருந்தாலும் உன்கிட்ட கேட்டுட்டே செய்றேன்... தப்பு செஞ்சவனைச் சொல்லித் திருத்தணும் கீது... சொல்லித் திருந்தலையா அடிச்சுத் திருத்து... அதுக்குத் தான் உனக்கு லைசென்ஸ் கொடுத்திருக்கு...” என்றவன் அவளின் சேலை மாராப்பில் ஒளிந்திருந்த தாலியை எடுத்துத் தூக்கி அவள் கண் முன் ஆட்ட...

அவன் தொட்டதில் சிலிர்த்த உடலையும், மனதை யும் முயன்று அடக்கியவள் அவனின் கையை வெடுக் கென்று தட்டி விட்டாள்.

“ஆமா. உங்களைத் திருத்துறது ஒண்ணுதான் எனக்கு வேலை பாருங்க... வேற வேலையே இல்லை...” என்றவள், “எனக்குத் தூக்கம் வருது...” என்றபடி அவனுக்கு முதுகு காட்டிப் படுத்துக் கொள்ள...

முகம் நிறையப் புன்னகையுடன் அவளுக்கு மறு பக்கம் வந்து படுத்தவன், தன் வரவை உணர்ந்து அவள் திரும்பும் முன் அவளைத் தன் கையணைவிற்குள் கொண்டு வந்தான்.

“சும்மா நீ பக்கத்துல இருந்தாலே நான் டெம்ப்ட் ஆகிருவேன்... இப்போ கழுத்துல லைசன்ஸோட... இவ்வளவு அலங்காரத்துல இவ்வளவு நெருக்கமா...”

என்றவன் எவ்வளவு நெருக்கம் என்பதை அவளுக்கு உணர்த்த... அதில் அவள் உறைய...

"நீ இருந்தா எப்படிப் பேபி உன்னைய சும்மா விட முடியும்... நீ மன்னிக்கிறப்போ என்னை மன்னிச்சுக்கோ... திருத்தும் போது என்னைத் திருத்திக்கோ... ஆனா இப்போ இந்த நிமிசம் நீ எனக்கு வேணும்..." என்றவன் அவளின் இதழ் நோக்கிக் குனிந்தான்.

அவன் மீது மனம் நிறையக் காதலைச் சுமந்து கொண்டிருப்பவளால் அவனை முழுவதுமாய் எதிர்க்க முடியவில்லை. மனம் அவனை எதிர்த்தாலும் உடல் அவனை வரவேற்கத்தான் செய்தது. மனதில் சிறு அதிர்வுடன் அவனை உள்வாங்கியவள் மனதில் ஏகப்பட்ட குழப்பங்கள்.

அன்பில்லாத, எதிர்காலம் இல்லாத இந்தக் காதல் எவ்வளவு தூரம் செல்லும் என்பதை அவளால் உறுதியாய்க் கணிக்க முடியவில்லை. என்றாவது ஒரு நாள் மீண்டும் தன்னைத், தன் காதலைத், தன் வாழ்க்கையைத், தன் கணவன் பணயம் வைப்பானோ என்ற அச்சம் அவள் மனதில் ஓடியது.

அதில் அவள் உடல் அவளையும் அறியாமல் விறைத்தது. அவளது உணர்வற்ற நிலையை அவன் உணர, அவளைத் தன் பிடியில் இருந்து விலக்கி அவள் முகத்தைப் பார்த்தவன்...

"இந்த நிமிசம் உனக்குள்ள மூழ்கி முத்து எடுக்கணும்னு எனக்கு ஆசையாத்தான் இருக்கு. இவ்வளவு

நாள் உன் மனசைப் புரிஞ்சிக்காம, என்னோட விருப்பத்தை மட்டும் பெருசா நினைச்சிட்டு, உன் வாழ்க்கையை, உணர்வுகளை நான் பந்தாடிட்டேன்...

"இனிமேலாவது உன் மனசைப் புரிஞ்சிட்டு மெதுவா ஒரு பூ மலர்ற மாதிரி நம்ம உறவு மலரணும்னு நான் நினைக்கிறேன்... அதுக்கு எவ்வளவு நாளானாலும் நான் காத்திருக்கத் தயார்..." அவளது நெற்றியில் மென்மையாய் முத்தமிட்டு அவன் சொல்ல...

அவனது பேச்சை எண்ணி மனதுக்குள் வியந்த சங்கீதா வெளியில் ஒன்றும் பேசாது அவனை விட்டு விலகித் தள்ளிச் சென்று சுருண்டு படுத்தாள். அவளது செயலை உள்ளத்து வலியுடன் பார்த்துக் கொண்டு இருந்தான் ஹரி.

தனது செயலால் காயப்படுத்திய அவள் மனதை அதே தனது செயலால் மாற்றிக் காதலுடன் தன்னை நாடி வரச் செய்ய வேண்டும் என்று அவன் மனதுக்குள் உறுதி எடுத்துக் கொண்டான்.

உதய்யின் அறைக்குள் நுழைந்த உமா அங்கே கண்ட காட்சியில் திகைத்துப் போய் நின்று விட்டாள். பின்னே கட்டிலில் காலைக் கையைப் பரப்பிக் கொண்டு உதய் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தால் அவள் திகைக் காமல் என்ன செய்வாள்...?

அவனிடம் சண்டை போட வேண்டும் என்று வந்தவளுக்கு அவனின் நிலை பெரிதும் ஏமாற்றமாய் இருந்தது.

'இவனை...' பல்லைக் கடித்தவள் அவன் அருகில் இருந்த பக்கவாட்டு மேசை மீது பால் சொம்பை நங்கென்று சத்தத்துடன் வைத்தாள்.

அந்த சத்தத்தில் திரும்பிப் பார்த்தவன் அவளை ஒரு பார்வை பார்த்து விட்டு மறுபடியும் திரும்பிப் படுத்துக் கொள்ள, அதில் அவளுக்கு இன்னமும் ஆத்திரம் அதிகரித்தது. அவனுக்கு மறுபக்கமாய்க் கட்டிலின் உள் பகுதியில் ஏறி அவனருகே அமர்ந்தவள்,

"உதய்..." என்று கத்தி விளிக்க...

அதில் கண்ணைத் திறந்தவன் அவளை ஆச்சரிய மாய்ப் பார்த்தான்.

"அட! அடடே!! எம் பேரு கூட ஞாபகம் இருக்கா உனக்கு...?" குத்தலாய் அவன் கேட்க...

"ஒரு சிலர் காதலிச்ச பொண்ணையே மறக் கிறப்போ நான் பேரை மறந்தா ஒண்ணும் தப்பு இல்லை." அவளது பதிலடியில் அவளை முறைத்தான் அவன்.

"இதுக்குத்தான் பேசாமப் படுத்திருந்தேன்... இப்போ எதுக்கு என்னை எழுப்புன... இப்படிச் சண்டை போடுற துக்கா?"

"ஆமாம். சண்டை போடுறதுக்குத்தான்... அவன் கூட என்ன ஒரே கொஞ்சல், குலாவல் வேண்டிக் கிடக்கு... அவன் நம்ம காதலைக் குழி தோண்டிப் புதைச்சவன்... முதல்ல அதை ஞாபகம் வச்சிக்கோ..." அவளது பேச்சு கண்டு அவனுக்கு எரிச்சல் வந்தது.

"அவரு என் தங்கச்சி புருசன்... அத மொதல்ல நீ ஞாபகம் வச்சிக்கோ..." என்றான் சீற்றத்துடன்...

"பெரிய தங்கச்சி... என் வாழ்க்கையைச் சீரழிச்சவ தானே உன் தங்கச்சி..."

"ஏய்... என் தங்கச்சி பத்தி இன்னொரு வார்த்த பேசின... நான் மனுசனா இருக்கமாட்டேன்..." அவன் சுட்டு விரல் நீட்டி எச்சரிக்க...

"அப்படித்தான்டா பேசுவேன்... உன் தங்கச்சியைக் கண்டாலே எனக்குப் பிடிக்கல... ஒரே வெறுப்பா இருக்கு... இன்னைக்கு கூட, அவ என் தாலிக் கயிறுல முடிச்சுப் போட வந்தப்போ கூட அதனாலதான் தடுத்தேன்... அவ முடிச்சுப் போட்டா என் வாழ்க்கை விளங்கின மாதிரிதான்..." வாயில் நெருப்பை அள்ளிக் கக்கினாள் அவள்.

உமா மூன்று முடிச்சு போடச் சொன்னது அவன் மேலுள்ள காதலால் என்று நினைத்துக் கொண்டு அவன் சந்தோசத்தில் இருக்க.. அவள் என்னடா என்றால் வேறு கதை கூறுகிறாள். உதய் உள்ளுக்குள் நொறுங்கிப் போனான்.

"அப்போ என் மேல உள்ள காதலுல இல்லையா?" அவனது குரலில் அவள் மனம் துணுக்குற்றாலும் அதை வெளிக் காட்டிக் கொள்ளாமல்,

"இல்லை..." என்று தன்னெஞ்சறிய பொய் கூறினாள்.

சங்கீதாவைத் தவிர்ப்பதற்காக என்றாலும் அவள் மனம் உதய்யின் கையால்தான் மூன்று முடிச்சும் போட

வேண்டும் என்று விரும்பியது என்னவோ உண்மைதான். அதைக் கூற ஏனோ அவளுக்கு மனம் வரவில்லை.

"அப்போ கண்ணீர் வடிச்சது..." ஆற்ற மாட்டாமல் கேட்டு விட்டான் அவன்.

"உங்க கையால தாலி வாங்கணும்னா அழாம வேற என்ன செய்ய? இப்படிப்பட்ட தெய்விகக் காதலனைக் காதலிச்சதுக்கு ஆனந்தக் கண்ணீர் வடிச்சேன்..." என்ற வளின் கேலிப் பேச்சில் அவனது சினம் தலைக்கேறியது.

"அப்படிக் கஷ்டப்பட்டு ஒண்ணும் நீ என் கூட வாழ வேணாம்... வெளிய போடி..." அவன் அறையின் வாயிலை நோக்கிக் கையைக் காண்பிக்க... அவளோ மிதப்பாய் அவனைப் பார்த்தாள்.

"இது நீ கட்டியதுதானே..." தன் கழுத்தில் கிடந்த தாலியைத் தூக்கிக் காண்பிக்க...

"அதுக்குத்தான் அர்த்தம் இல்லாம பண்ணிட்டியே..." வெறுப்பாய் அவன் முகத்தைத் திருப்ப, அதைக் கண்டு அவள் கண்கள் கலங்கின. பெருமூச்சு எடுத்துக் கண்ணீரை உள்வாங்கித் தன்னைச் சமாளித்தவள்,

"என்னமோ அவன்கிட்ட சொன்ன... எம் பொஞ்சாதி... எக்ஸட்ரா எக்ஸட்ரான்னு... அது எல்லாம் பொய்யா?" வேண்டும் என்றே கண்களை அகல விரித்து ஒன்றும் அறியாதது போல் கேட்டவள்,

"நீ எனக்குச் செஞ்ச துரோகத்துக்கு நான்தான் இந்த ஜென்மத்துல உனக்குப் பொண்டாட்டி... பட் என்னைய

வச்சு உனக்கு நோ யூஸ்... கடைசி வரைக்கும் அனுமார் மாதிரிப் பிரம்மச்சரிய விரதம் காத்திட்டு இரு..."

அவளது எக்காளப் பேச்சில் தன்மான உணர்வு சீண்டப்பட...

"என்னயத்தான் ஆம்பிள இல்லன்னு சொல்லிட்டியே. அதுக்கப்புறமும் உன்னைய நான் தொடுவேன்னு நினைக்கிற... நிச்சயமாத் தொட மாட்டேன்... ஆனா அதுக்காகப் பிரம்மச்சரிய விரதம் இருக்க நான் என்ன மாங்கா மடையனா... கூரை மேல சோத்தப் போட்டா காயிரம் காக்கா..."

வேண்டும் என்றே அவளுக்கு வலிக்கச் செய்ய வேண்டும் என்று வார்த்தையால் அவன் திருப்பி அடிக்க...

அவன் நினைத்தது போல் அதில் அவளது மனம் அடிபட்டுப் போனது. கண்களில் அடிபட்ட வலியுடன் அவள் அவனைப் பார்த்தாள்.

ஒவ்வொரு தடவையும் தான்தான் அவனிடம் கேவலமாய்த் தோற்றுப் போகிறோம் என்பதை உணர்ந்த அவளுக்குத் துயரம் மனதை அழுத்தியது. ஆனாலும் அவன் முன் அழவில்லை. அழுது தன் பலவீனத்தை அவனுக்குக் காட்டக் கூடாது என்பதில் அவள் உறுதியாய் இருந்தாள்.

"பொம்பள பொம்பளையா இருக்கணும்... தேவை யில்லாமப் பேசினா இப்படித்தே... நா மத்தவன மாதிரி பொம்பள காலைப் புடிக்கிற ஆளு கெடையாது... நீ

என்னய வேணாம்னா... எனக்கு நீயும் வேணாம்... அதுக் காக உம் பின்னாடி நான் கெஞ்சிட்டு அலைய முடியாது.

"அதுவும் கேவலம் உடல் சொகத்துக்காக... அதை வச்சுத்தானே என்னை பிளாக்மெயில் பண்ணப் பார்த்த... அதுக்கு எல்லாம் நான் கட்டுப்பட மாட்டேன்... கொஞ்ச நாள் பார்ப்பேன்... அதுக்கப்புறமும் நீ சரி வரலைன்னா பேசாம உன்கிட்ட இருந்து டைவர்ஸ் வாங்கிட்டு வேற பொண்ணப் பார்த்துக் கட்டிக்கிட்டு போயிட்டே இருப்பேன்.

"டைவர்ஸ் கொடுக்க மாட்டேன்னு பிடிவாதம் பிடிக்க லாம்னு மட்டும் நெனக்காதே... நான் வக்கீலுக்குப் படிச் சவன்... எப்படி டைவர்சு வாங்கணும்னு எனக்குத் தெரியும்... உன் மேல வச்ச காதலை மறந்துட்டு வேற பொண்ணைக் கல்யாணம் பண்ணச் சம்மதிக்கும் போதே என்னையப் பத்தி உனக்குத் தெரிஞ்சிருக்கணும்...

"இன்னமும் என்னைப் பத்தித் தெரியாம இந்தச் சவால் விடறது, சவுண்ட் விடறது எல்லாம் எங்கிட்ட வச்சிக்காதே..." ஆத்திரமாய் முழங்கியவன் அவளுக்கு முதுகு காட்டிப் படுத்து விட்டான்.

அவனது பேச்சில் விக்கித்துப் போய் அமர்ந்து இருந்தவள் பார்வை அவனது பரந்து விரிந்த முதுகை வெறித்தது. மனதில் இருந்த காதலின் பாரம் தாங்க முடியாமல் எல்லாவற்றையும் மறந்து, அவனது நெஞ்சில் சாய்ந்து ஓவென்று அழ வேண்டும் போல் அவளுக்குத் தோன்ற... தன் எண்ணம் போகும் திசையறிந்து அவள் இன்னமும் அதிகமாய் அதிர்ந்து போனாள்.

"உமா... உமா..." ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும் தன்னை யாரோ எழுப்புவது போல் உணர்ந்த உமா, அது தோழி ஜெயஸ்ரீயாகத் தான் இருக்கும் என்று எண்ணியவள்,

"ஜெய் குட்டி... ப்ளீஸ்டி... ஃபைவ் மினிட்ஸ்..." கண்களைத் திறவாமல் கூறியவள் மீண்டும் உறக்கத்தில் ஆழ...

"உமா..." மீண்டும் ஒலித்த குரலில்,

"ச்சு..." என்றவளின் தோள்கள் அடுத்த கணம் பலமாய் உலுக்கப்பட்டது.

"ஏன்டி ஜெய், இப்படி உலுக்குற... வலிக்குது..." சிணுங்கும் போதே தன் முகத்தின் மீது தெறித்து விழுந்த மழைத் துளியில் திடுக்கிட்டு எழுந்தமர்ந்தாள் உமா.

அவள் கண் எதிரே தண்ணீர்க் குவளையுடன் நின்றிருந்தான் அவளது கணவன் உதய்.

'இவன் எப்படி இங்கே வந்தான்...?' குழப்பத்தில் தலையைச் சொறிந்தவளுக்கு அறையின் அலங்காரம் கண்ணை உறுத்த, அடுத்த கணம் எல்லாம் புரிந்தது... நேற்று இரவு நடந்ததும் சேர்த்து ஞாபகத்தில் வர, அதன் விளைவால் எழுந்த கோபத்தில் அவள் முகத்தை இறுக்க மாய் வைத்துக் கொண்டு அவனை முறைத்துப் பார்த் தாள்.

"மணி அஞ்சாச்சு... குளிச்சிட்டு வா... அம்மா, அப்பா எல்லாம் எழுந்திருச்சுப்பாக..." குரலிலும் முகத்

திலும் எந்தவித உணர்ச்சியும் இலலாமல் கூறியவனைக் கண்டு அவளுக்குக் கோபம் கோபமாய் வந்தது.

"அவங்க எந்திரிச்சா நானும் எழுந்துக்கணுமா... எனக்குத் தூக்கம் வருது..." கொட்டாவி விட்டபடி படுக்கப் போனவளின் கை முட்டியைப் பற்றி இழுத்துத் தடுத்தவன்,

"நீ இன்னும் உங்கம்மாவுக்குப் பொண்ணு இல்ல... இந்த வீட்டு மருமவ... இனி அதுக்கு ஏத்த மாதிரி நடந் துக்கப் பாரு... அண்ணியும் உன்ன மாதிரி மருமவதான்... அவங்க எல்லாம் காலையில எழும்பலையா...?" என்று தன் வீட்டுப் பழக்கத்தை அவன் அவளுக்கு எடுத்துச் சொல்ல...

"அதுக்கு...? அதையே நானும் ஃபாலோ பண்ண ணும்னு அவசியம் இல்லையே..." இன்னும் எழாமல் அமர்ந்த வாக்கில் சட்டம் பேசியவளைக் கண்டு பொங்கிய கோபத்தை முயன்று கட்டுப்படுத்தியவன்,

"எம் பொஞ்சாதிதானே நீ... அப்போ நான் சொல் றதை நீ கேட்கணும்..." என்றவனைப் போலி வியப்புடன் பார்த்தவள்,

"அப்படியா... நான் உன்னோட வொய்ஃபா...? இல்லையே! நேத்து நீ அப்படிச் சொன்ன மாதிரி எனக்கு ஞாபகம் இல்லையே..." என்று யோசிப்பது போல் பாவனை செய்தவள்,

"கூரை மேலே சோத்தைப் போட்டா ஆயிரம் காக்கான்னுல சொன்ன... அந்த ஆயிரம் காக்காயில ஒரு காக்காகிட்ட போய் உன் அதிகாரத்தைக் காட்டி..." என்றவள்

அவன் சொல்லச் சொல்லக் கேட்காமல் மீண்டும் படுக்கையில் சாய்ந்தாள்.

"ம்... அந்த ஆயிரம் காக்காவுல ஒரு காக்கா கழுத்துல கூட நான் தாலி கட்டல... உன் கழுத்துல தான் தாலி கட்டியிருக்கேன்..." அவளுக்குச் சளைக்காமல் பதிலடி கொடுத்தவன், "நீ சொன்னா கேட்க மாட்ட... உன்னய..." என்றவன் அவள் புறம் குனிந்து அவளை அப்படியே தன் இரு கரங்களில் தூக்க...

"ஏய் விடுடா..." அவன் கையில் அவள் திமிற... அவளது திமிறலை அடக்குவதற்காக அவளைத் தன் மீது சேர்த்து அவன் அணைக்க, அதில் அவள் உடல் சிலிர்த்தது.

அவனது கழுத்தில் பூமாலையாகக் கையைக் கோத்து அவன் நெஞ்சில் சுகமாய் முகம் புதைத்து வந்தவித மனஸ்தாபமும் இல்லாமல் அவனிடத்தில் சரணடைய மாட்டோமா என்று அவள் மனம் ஏங்கியது.

அவளது அனுமதி இல்லாமல் அவளது நாசியில் நுழைந்த அவனது வாசம் அவளைச் சற்றுத் தடுமாறச் செய்தது என்னமோ நிஜம்...

அவளது ஏக்கம் ஏதும் அவனிடத்தில் இல்லை போலும்... நேரே குளியலறைக்குள் சென்று அவளை இறக்கி விட்டவன்,

"ஒழுங்கு மரியாதையாக் குளிச்சிட்டு வா..." என்று மிரட்டியவாறு அங்கிருந்து நகர...

"ஜடம்... ஜடம்..." என்று முணுமுணுத்தவள் குளியலறை கதவை ஓங்கிச் சாத்தினாள்.

அவளைக் குளியலறையில் இறக்கி விட்ட உதய் அவளை விட அதிகத் தவிப்பில் இருந்தான். ஏதோ ஒரு வீம்பில் அவளைத் தூக்கி விட்டான். அதன் பின்னரே தான் செய்தது எவ்வளவு பெரிய தவறு என்பது அவனுக்குப் புரிந்தது.

அணைத்தார் போன்று அவளைப் பிடித்திருந்த போது அறையில் இருந்த பூவின் வாசத்தை மீறி அவளிடம் இருந்து புறப்பட்ட அவளது வாசம் அவனை மயக்கத்தான் செய்தது.

அதை விட அவளது உடலின் மென்மையை உணர்ந்த கைகள் அதைப் பரீட்சித்துப் பார்க்கத் துடித்ததைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்குள் அவனுக்குப் போதும் போதும் என்றாகிவிட்டது. அதை மறைக்கத்தான் அவளை அப்படியே இறக்கி விட்டு விட்டு ஓடி வந்து விட்டான்.

அவளால் தட்டி எழுப்பப்பட்ட உணர்வுகள் அவனுள் பேயாட்டம் போட, அதை அடக்கும் வகையறியாது நின்றிருந்தான். இதே இது எந்தவித இடரும் இல்லாமல் அவர்களது திருமணம் நடந்திருந்தால் இந்நேரம்... என்று நினைத்தவனின் இதயம் தாறுமாறாய்த் துடித்தது.

அந்நேரம் குளியலறைக் கதவு திறக்கும் சப்தம் கேட்க, தனது உணர்வுகளை அடக்கியவன் திரும்பிப் பார்த்தான். அவள் நின்றிருந்த கோலத்தைக் கண்டவன்

வெலவெலத்துப் போய்ச் சட்டென்று திரும்பி நின்று கொண்டான்.

"ஏன்டி, அறிவுங்கிறதே உனக்குக் கிடையாதா..? இப்படியா வந்து நிப்ப..." கோபமாய் இரைய...

நெஞ்சில் முடிந்த ஒற்றைத் துண்டை ஆடையாக அணிந்திருந்தவள், "அப்படியே கொண்டு போய் பாத் ரூம்ல விட்டா... நான் என்ன செய்றது? இப்படித்தான் வர முடியும்... சரி... சரி... முதல்ல நீ வெளியில் போ... நான் ட்ரெஸ் மாத்தணும்..."

அவள் கூறியதும் தன் தவறு புரிய, வலது கையால் பின்னந்தலையில் தட்டியவன், "சாரி..." என்றான் அவளைத் திரும்பிப் பார்க்காமல்...

"நீ செய்ற தப்புக்கு எல்லாம் சாரி கேட்கணும்னா இந்த ஜென்மம் உனக்குப் போதாது... அதனால உன் சாரியை நீயே வச்சுக்கோ..." அவளது பேச்சு மீண்டும் அவன் கோபத்தைக் கிளப்ப...

"இந்தத் திமிர்தான்டி உன்னய கெடுக்குது..." என்று அவள் புறம் வேகமாய்த் திரும்பியவன் அவள் இருந்த நிலையைக் கண்டு, "சரியான இம்சைடி..." என்றபடி அவளருகே வந்தவன் மறந்தும் அவளை நிமிர்ந்து பாராமல் அவளைச் சுற்றிக் கொண்டு குளியலறைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொண்டான்.

"போடா... நீதான் இம்சையரசன் இருபத்தினாலாம் புலிகேசி..." மூடியிருந்த கதவைப் பார்த்துக் கத்திச் சொன்னவள், அந்தப் படத்தில் வடிவேலு வைத்திருந்தது

போல் மீசையை உதய்க்குக் கற்பனையில் மீசை வைத்துப் பார்த்தவளுக்குச் சிரிப்புத் தோன்றியது.

அதே சிரிப்புடன் தனது பெட்டியைத் திறந்து தனது உடையை ஆராய ஆரம்பித்தாள். புதிய சேலைகளுக்கு இடையில் இருந்த அந்த வெண் பட்டைக் கையில் எடுத்தவள் அதை மிருதுவாய்த் தடவிக் கொடுத்தாள்.

அன்று அந்தக் கேரள பாணிப் புடவை அவளுக்கு நன்றாக இருப்பதாய் உதய் சொன்னதால், அதே மாதிரிப் புடவையைப் பட்டில் எடுத்திருந்தாள். ஆனால் அன்று அவர்கள் இருந்த மனநிலை வேறு... இன்று அவர்கள் இருக்கும் மனநிலையே வேறு...!

மனதில் எழுந்த பெருமூச்சை ஒதுக்கித் தள்ளியவள் அந்தப் புடவையை உடுத்தலானாள். பின்பு அதற்குப் பொருத்தமான நகையை அணிந்தவள் தனது ஈர முடியை உலர்த்த ஆரம்பித்தாள்.

உமா உடை மாற்றி முடித்திருக்கும் நேரத்தைக் கணக்கிட்டுக் குளியலறையை விட்டு வெளியில் வந்தான் உதய். அழகு தேவதையாய் நின்றிருந்த மனைவியின் அழகு அவனைச் சுண்டி இழுத்தது. தன்மானமாவது ஒன்றாவது என்று எல்லாவற்றையும் தூக்கி எறிந்து விட்டு அவளை அள்ளி எடுக்க ஆசை கொண்டது அவனது காதல் உள்ளம்.

எல்லாம் ஒரு நொடிதான்... அவள் பேசிய பேச்சுகள் அவனுக்கு ஞாபகம் வர, முகம் இறுக அவளிடம் இருந்து பார்வையை விலக்கியவன், தனது உடைகள் இருந்த

அலமாரியைத் திறந்தவன் அதனுள் முகத்தைப் புதைத்துக் கொண்டான்.

உமாவும் அவனைக் கண்டு கொள்ளாது அறையை விட்டு வெளியில் செல்ல... அவ்வளவு நேரம் இழுத்துப் பிடித்த மூச்சை நிம்மதியாய் விட்டான் உதய்.

'ஒரு நாள் செல்றதுக்குள்ள இப்படி நாக்குத் தள்ளுதே... இது வாழ்நாள் முச்சூடும்னா...' என்று நினைக்கும் போதே உண்மையில் அவனுக்கு கலக்க மாய்த்தான் இருந்தது.

உதய் உடையை மாற்றிக் கொண்டு வெளியில் வந்த போது உமா அவனது குடும்பத்தாரோடு இணக்க மாய் இணைந்திருந்தாள். நித்யாவுடன் இணைந்து சமையலறையில் இயல்பு போல் வேலை செய்து கொண்டிருந்தவளைக் கண்டு அவனுக்குச் சற்று நிம்மதி யாய் இருந்தது.

அவளது கோபம் எல்லாம் தன் மீதுதான்... அவன் குடும்பத்தார் மீது அல்ல என்பதை உணர்ந்தவனுக்கு மனதில் இருந்த பாரம் அகன்றது... அவனுக்குத் தன் குடும்பத்தின் ஒற்றுமை மிகவும் முக்கியம்...

சமையலறை வாசலில் நிழலாடுவதைக் கண்டு திரும்பிய நித்யா அங்கே உதய் நின்றிருப்பதைக் கண்டு, "என்ன கொழுந்தனாரே, நைட் எல்லாம் என் தங்கச்சிய தூங்க விடலையாமே... காலையில உங்க மேல தங்கச்சி கம்ப்ளைண்ட் சொல்லுது..."

அவளது பேச்சில் உதய்யும், உமாவும் திடுக்கிட்டனர். 'நீ அப்படிச் சொன்னியா...?' என்றவாறு பார்த்தவன் அவளை முறைக்க... உமாவோ பதறியவளாய்,

"இல்லைங்க... நான் எதுவும் சொல்லல..." விட்டால் அழுது விடுபவள் போல் அவள் கூற...

"நீ ஏன் பயப்படுற உமா... இவிய்ங்க குடும்பமே இப்படித்தே... எங்க வூட்டுக்காரரும் விடிய விடிய முழிச் சிருந்து என்னய காலையில அஞ்சு மணிக்கு எல்லாம் எழுப்பி விட்டு வேலையைப் பார்க்கப் பத்தி விட்டவரு தான்... அதான் கேட்டேன்... என்ன கொழுந்தனாரும் அப்படித்தேனா...?"

அதைக் கேட்டு உமா பயம் அகன்றவளாய் வாயை மூடிக் கொண்டு சிரிக்க... உதயோ அசடு வழிந்தபடி நின்றான்.

"உமா, உம் மச்சானுக்குக் காபி கலக்கிக் கொடு..." என்ற நித்யா உதய்க்கு ஏற்றவாறு காபி போடும் பக்கு வத்தைக் கூற, வேண்டா வெறுப்பாய் அவள் சொன்னபடி காபியைக் கலந்த உமா அதை அவனிடம் நீட்ட...

மனைவி கையால் கலந்த காபி அமிர்தமாய் இருந்தது உதய்க்கு... 'இதுக்குத்தே கூட்டுக் குடும்பம் வேணும்னு சொல்றது... பிடிக்குதோ இல்லையோ அண்ணிக்காகச் செய்றால்ல...' மனதில் திருப்தியாய் உணர்ந்தான்.

அதற்குள் சங்கீதா அங்கு வர, அந்த இடம் உற்சாகமானது. சங்கீதா எப்போதும் போல் உமாவிடம்

பேச, உமாவோ அவளிடம் தேவையான பேச்சு மட்டும் பேசி அவளிடம் ஒதுக்கம் காட்டினாள். சங்கீதா அதை உணர்ந்ததாய்த் தெரியவில்லை. அவளது உள்ளத்தில் தான் ஹரி என்ற புயல் மையம் கொண்டு அவளை அலைக்கழித்துக் கொண்டிருந்ததே.

ஆனால் உதய் இதைக் கண்டு விட்டான்... ஸ்டோர் ரூமில் சாம்பாருக்காகத் துவரம் பருப்பை எடுத்து வரச் சொல்லி நித்யா உமாவிடம் சொல்ல, அவள் அங்கே தனியே செல்வதைக் கண்டு உதயும் அவள் பின்னே சென்றான்.

"ஏன்... என் தங்கச்சி கிட்ட முறைச்சிட்டுத் திரியற... ஒழுங்கு மரியாதையா அவகிட்ட பேசு..."

திடுமென ஒலித்த உதய்யின் குரலில் உமா திடுக்கிட்டு திரும்பியவள், அங்கு கணவனைக் கண்டதும் அவள் முகத்தில் அலட்சியம் அழையா விருந்தாளியாய் வந்தமர்ந்தது.

"பேசலைன்னா என்ன பண்ணுவ...?"

"உன்னை..." அவளை என்ன பண்ணுவது என்று தெரியாமல் அவனால் பல்லைத்தான் கடிக்க முடிந்தது.

"உமா, இன்னுமா பருப்ப எடுத்தாற..." என்றபடி அங்கு வந்த நித்யா அங்கே உதய்யைக் கண்டதும் கேலியாய் அவனைப் பார்த்தாள்.

"ரொமான்ஸ் எங்கல்லாமோ பண்ணுவாங்கன்னு நான் கேள்விப்பட்டு இருக்கேன்... ஆனா இப்படி ஸ்டோரு

ரூமுக்குள்ள பண்றத இப்பத்தே பார்க்கிறேன்...” நமட்டுச் சிரிப்பு சிரிக்க...

“ஏங்கண்ணி பொறாமையோ...? வேணுமின்னா எங்கண்ணனைக் கூட்டுக்குக் கூட்டிட்டு வரவா...” அவன் பதிலுக்கு நக்கல் அடிக்க...

“ஏன் தம்பி உங்களுக்கு இந்தக் கொலவெறி...” என்றவள் அங்கிருந்து ஓடி விட்டாள்.

இப்போது உதய் உமாவை முறைத்துக் கொண்டு வெளியேறப் போக...

“உதய்...” மெல்லமாய் அழைத்தது உமாவின் குரல். அவளது அந்த அழைப்பில் கண்கள் பளிச்சிட அவளைத் திரும்பிப் பார்த்தான் அவன்.

“இதுல எது துவரம் பருப்பு...?” கடலைப் பருப்பையும் துவரம் பருப்பையும் இரு கையில் வைத்துக் கொண்டு அவன் முன் நீட்டினாள்.

அதில் அவன் அதிர்ச்சி அடைந்தான்... “உமா.. உனக்குச் சமைக்க வராதா...?”

“ம்ஹூம்...” என்று அவள் உதட்டைப் பிதுக்க... அதில் அவனுக்குச் சிரிப்பு வந்தது.

“சுத்தம்...” தலையில் கை வைத்தபடி சொன்னவன், துவரம் பருப்பு அடங்கிய டப்பாவை அவன் சுட்டிக் காட்ட,

“தேங்க்ஸ் உதய்...” என்றவள், அதை எடுத்துக் கொண்டு நகர... அவன் சிரித்தபடி அவளைப் பின் தொடர்ந்தான்.

அதற்குள் அஜித் எழுந்து வந்தவன், உமாவைக் கண்டதும், "எம்மிக்கா..." என்றபடி அவளின் காலைக் கட்டிக் கொள்ள, அவனைத் தூக்கி உணவு மேசையில் அமர வைத்த உமா,

"நான் எம்மிக்கா இல்ல... உன்னோட சித்தி..." என்று விளக்கம் அளிக்க...

"இல்ல, எம்மிக்கா..." என்று அவன் கை காலை உதறிப் பிடிவாதம் பிடிக்க...

"டேய், சித்துவோட வொய்ஃப் சித்திடா..." உதய் தன் பங்குக்கு விளக்கம் கொடுக்க...

"எமி கிமின்னு அவனைக் கெடுத்து வச்சதே நீங்க தானே தம்பி..." மகனுக்குப் பாலை ஆற்றியபடி வந்த நித்யா கடுப்புடன் கொழுந்தனைப் பார்க்க...

"ஹி... ஹி... அது சும்மா அண்ணி..." அசடு வழிந்தான் உதய். அவன் வழிவதைக் கண்டு சுவாரசியம் தோன்ற, உமா நித்யாவிடம், என்ன விஷயம் என்று கேட்க... எமி கதை அங்கே கடை பரப்பப்பட்டது. மகன் பாலைக் குடித்து முடித்ததும் நித்யா உள்ளே செல்ல...

"அய்யனார் சிலை மாதிரி இருந்துட்டு உனக்கு எமி மாதிரிப் பொண்டாட்டி கேக்குதா..." உமா, உதய்க்கு மட்டும் கேட்கும் வண்ணம் முணுமுணுக்க...

"நான் அய்யனார் செலைதான் ஒத்துக்கிறேன்... அதே நேரத்துல நீ எமி மாதிரி அழகாத்தாண்டி இருக்க..."

அவளது நாடியில் விரல் வைத்து, அவள் கண்ணுக்குள் அவன் உற்றுப் பார்க்க... அதில் அவளின்

அடிவயிற்றில் சில்லென்று ஒரு உணர்வு கிளம்பி, அவளை அதிரச் செய்தது.

உதடுகள் நடுங்க தன்னையே பார்த்துக் கொண்டிருந்த மனையாளின் தோற்றம் உதய்யைத் தலைகுப்புற விழச் செய்வதாய்...

"சித்து... தூக்கு..." அஜித்தின் குரலில் அவன் நடப்புக்கு வந்தான்.

"வெளிய போ சித்து..." வாசல் பக்கம் கை காண்பித்த சின்னவனைத் தூக்கிய உதய், மனைவியைப் பார்த்தபடி வெளியேறினான்.

அவன் சென்றதும் உமாவின் கண்களில் இருந்து கண்ணீர்த் துளிகள் கொட்டியது. எவ்வளவு நேசத்துடன் எவ்வளவு காதலுடன் இருக்க வேண்டிய அவர்களது வாழ்க்கை இப்படிக் கானல் நீராய் மாறிப் போனதை எண்ணி மனம் நொந்து வருந்தினாள்.

சிறிது நேரத்தில் ஹரியும் எழுந்து வந்து விட, வீடு கலகலப்பானது. ஹரியின் பார்வை சங்கீதாவைத் தொடர்வதைக் கண்டு, உதய் அவனை ஓட்டி எடுத்தான்.

"மச்சான்... நீங்க வேணும்னா என்னோட தங்கச்சியை சைட் அடிங்களேன்... அதை விட்டுட்டு என்னைத் தொந்தரவு பண்ணாதீங்க..."

ஹரி கடுப்புடன் சொல்ல... உதய்யின் கண்கள் அவனையும் அறியாது உமாவைத் தேட... அதைக் கண்டு ஹரி பதிலுக்குக் கிண்டலடித்தான்.

காலையில் ஆண்கள் அனைவரும் சாப்பிட்டு விட்டு எழுந்ததும், பெண்கள் எல்லோரும் வெகு இயல்பாய் அவரவர் கணவன் உண்ட இலையின் முன் அமர்ந்தனர். துரியின் மீது மனஸ்தாபம் கொண்ட சங்கீதா கூட அவன் சாப்பிட்ட இலையில் உணவை எடுத்து வைத்து உண்ண ஆரம்பிக்க, உமாவுக்கு மட்டுமே உமட்டிக் கொண்டு வந்தது.

உண்ணாமல் திருதிருவென அவள் விழித்துக் கொண்டிருப்பதைக் கண்ட உதய்யின் மனதில் சொல் லொண்ணாத் துயரம் எழுந்தது. விறுவிறுவென அவள் அருகே செல்பவன் போல் சென்றவன், அங்கிருந்த தம்ளரைத் தட்டிவிட, அதில் இருந்த தண்ணீர் எல்லாம் உமாவின் முன் இருந்த இலையில் கொட்டியது.

"குமாரு, பார்த்து வரக் கூடாதா...?" மகனைக் கடிந்த மாரீஸ்வரி, உமாவிடம், "வேற எலையைப் போட்டுச் சாப்பிடும்மா..." என்று சொல்ல,

அதற்காக எழப் போனவளைக் கையமர்த்தி தடுத்த உதய், தானே இலையைக் கொண்டு வந்து போட்டு உணவையும் பரிமாற, உமா அவனை நன்றியுடன் பார்க்க, அவனோ அவளைக் கண்டும் காணாதவாறு அங்கிருந்து நகர்ந்தான். அவனது செயலில் அவளது மனம் அனிச்சை மலராய் வாடியது.

நேரம் செல்லச் செல்ல உறவினர்கள் கூட்டம் வரத் துவங்கியது. ஒவ்வொருவராய் புதுமணத் தம்பதிகளை நலம் விசாரித்து விட்டு, விருந்து சாப்பிட்டு விட்டுச் சென்றனர். பிற்பகல் ஆனதும் சங்கீதாவின் களைத்த

முகத்தைக் கண்ட ஹரி, "பேபி, ரொம்ப டயர்டான மாதிரி இருக்கியே... போய் ரெஸ்ட் எடுடா..."

அவள் அருகில் வந்து கிசுகிசுக்க, அங்கு நின்றிருந்த உமாவின் காதில் அது விழுந்து, அவளின் ரத்த அழுத்தத்தை ஏக்கத்துக்கும் அதிகரிக்கச் செய்தது.

அவளின் கண்கள் கோபத்துடன் உதய்யைத் தேட, அவனோ வந்திருந்த உறவினர் ஒருவருடன் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தான். அதைக் கண்டு அவளது உள்ளம் நத்தையாய்ச் சுருங்கியது.

மாலையில் புதுமணத் தம்பதியினரை மீனாட்சி அம்மன் கோயிலுக்குப் போகச் சொல்ல, இரு ஜோடிகளும் கிளம்பியது. கூட்டத்தில் சாமி தரிசனம் முடிந்து வெளியில் வரும் போது நான்கு பேருமே வியர்த்து வழிந்து போயிருந்தனர்.

சங்கீதாவின் நெற்றியில் இருந்த குங்குமம் வியர்வையில் வழியத் துவங்க, ஹரி தனது கைக்குட்டை யால் அதை வழியாதவாறு துடைத்து விட... அதைக் காணச் சகிக்காமல் உமா வேறு பக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

ஹரியின் கையை வெடுக்கென்று தட்டி விட்டாள் சங்கீதா.

"இப்படி எத்தனைப் பேருக்குத் துடைச்சு விட்ட அனுபவம் இருக்கு...?" குத்தீட்டியாய் அவளின் வார்த்தை கள் அவனைத் தாக்கிய போதும், அவனது உதட்டில் உறைந்த புன்னகை மறையவில்லை.

"நான் யாருக்கும் இது மாதிரிச் செஞ்சது இல்லை, பேபி..."

"இதை நான் நம்பணுமாக்கும்... நம்பிட்டேன், போதுமா...?"

"காட் பிராமிஸ் பேபி... ஏன்னா என் கூடப் பழகிய பெண்கள் யாரும் உன்னை மாதிரி குங்குமம் வச்சது கிடையாது. இவ்வளவு ஏன், ஸ்டிக்கர் பொட்டு கூட வைக்க மாட்டாங்க..." என்றவனை முறைத்தவள்,

"உங்களை..." என்று பல்லைக் கடிக்க...

"நீ கேட்டதால்தான் சொன்னேன். அதெல்லாம் முதல்ல... இப்போ நீ மட்டும்தான். ஐ பிராமிஸ் யூ பேபி..." என்றவனை அலட்சியமாய்ப் பார்த்தவள் முன்னே நடக்க...

தனக்குள் சிரித்தபடி நின்றிருந்த ஹரி, தன்னையே அதிசயமாய்ப் பார்த்துக் கொண்டிருந்த உதய்யைக் கண்டதும் கண்ணைச் சிமிட்டி, "மச்சான், நான் உமா இல்லை... உங்க டாவு அங்கே இருக்கு..." உமாவைக் கை நீட்டிக் காண்பிக்க...

"மாப்புள்ள... சங்கீ பேசுனது கேட்டு உங்களுக்குக் கோபமே வரலையா...?" என்று கேட்டான் ஆச்சரியமாக.

"உண்மையைத்தானே சொன்னா... இதில் கோபப்பட என்ன இருக்கு..?" புரியாமல் கேட்டான் ஹரி.

"என்ன இருந்தாலும் சங்கீ பேசுனது தப்பு இல்லையா...?"

"அவள் அப்படிக் கேட்டதுல தப்பே இல்லை மச்சான்... அப்படிக் கேட்கிறது கூட என் மேல உள்ள அதிக காதலால்தான். அந்தக் காதலால் ஏற்பட்ட கோபம் தான் இந்தப் பேச்சு... கீத்து பேசியது எனக்குக் கோபத்தை வரவழைக்கலை...

"ஏன்னா... அவள் என்னில் பாதி. என் கிட்ட நானே கோபப்பட முடியுமா மச்சான்...? அவளுக்கு நான் செஞ்ச துரோகம் அவள் மனதை அந்தளவுக்கு வேதனைப் படுத்துது... அதனாலதான் இந்தக் கோபம்... நான் செஞ்ச காரியமும் அப்படித்தானே மச்சான்...

"அதுபோக எங்களுக்கு இடையே ஈகோ வரவே கூடாதுன்னு நான் நினைக்கிறேன். ஈகோதான் காதலுக்கு மிகப் பெரிய எதிரி. ஈகோ இல்லாம இருந்தாத்தான் காதல்ல ஜெயிக்க முடியும். ஈகோ இருக்கிறதாலத்தான் நிறையக் காதல் கல்யாணத்துல தோல்வி அடைஞ்சுருது. என்னோட காதல் கல்யாணத்துல தோற்கக் கூடாதுங் கிறதுல நான் உறுதியாய் இருக்கேன்...

"கீத்து கோபத்துல பேசுற வார்த்தைக்கு எல்லாம் அர்த்தம் கிடையாது மச்சான். என் மேல அவளுக்கு எவ்வளவு லவ்வு இருக்குன்னு எனக்கு நல்லாத் தெரியும்... அதுதான் எனக்கு வேணும்..." என்ற ஹரியைப் பிரமிப்பாய்ப் பார்த்தான் உதய்.

எவ்வளவு எளிதாய்த் திருமண வாழ்வின் சூட்சுமத்தை அவனுக்கு விளக்கி விட்டான். அவனும்தான் உமா கோபத்தில் பேசிய வார்த்தைகளைப் பிடித்துக் கொண்டு தொங்கிக் கொண்டிருக்கிறான். தான் ஏன் ஹரி

போல் சிந்திக்க மறந்தோம் என்று எண்ணி மனதுக்குள் வெட்கினான்.

"மச்சான்... உன் தங்கச்சியும், என் தங்கச்சியும் நம்ம ரெண்டு பேரையும் பார்த்து முறைக்கிறாங்க. சீக்கிரம் வாங்க..." ஹரி, உதய்யை அவசரப்படுத்த, இருவரும் நுத்தம் இணையைத் தேடி ஓடினர்.

கோயில் வாசலில் இருந்த சின்னச் சின்னக் கடைகளில் இருந்த ஹேர்பின், பொட்டு என்று சிறு சிறு பொருட்களை எல்லாம் ஹரி, சங்கீதா மறுக்க மறுக்க வாங்கிக் குவித்தான். அவன் நினைத்தால் தங்க நகைக் கடையையே அவளுக்கு வாங்கிக் கொடுக்கலாம். ஆனால், தன் மனையாளுக்கு இந்த மாதிரி சின்னச் சின்னப் பொருட்களில்தான் சந்தோசம் அடங்கி இருப்பது அவனுக்கு ஏற்கெனவே தெரியுமாதலால், அவள் கேட் காமலே வாங்கிக் கொடுத்தான். இதை எல்லாம் பார்த்துக் கொண்டு எரிச்சலில் முகம் சுளித்தபடி உமா ஓரமாய் நின்றிருந்தாள்.

"உமா..." உதய்யின் குரலில் அவன் புறம் திரும்பிப் பார்த்தவள், என்ன என்று பார்வையால் வினவினாள்.

"இந்த வளவி உனக்குப் பிடிச்சிருக்கா..." அரக்கும் பச்சையும் கலந்த கண்ணாடி வளையல்களை அவள் பக்கம் அவன் நீட்டினான். அவளுக்குப் பிடிக்கத்தான் செய்தது. ஆனாலும் அதை ஒத்துக் கொள்ள மனமின்றி,

"எனக்குப் பிடிக்கலை..." அவள் சொல்லி முடிக்கும் முன் சட்டென்று அந்தக் கண்ணாடி வளையல்களை அவள் கையில் அணிவித்தவன்,

"ஆனா எனக்கு ரொம்பப் பிடிக்குமே..." என்றவன், அவளைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்ட...

'என்னவானது இவனுக்கு...?' என்ற அவனது செயலில் திகைத்துப் போய் நின்றிருந்தாள். ஆனாலும் அவன் அணிவித்த வளையல்களைக் கழட்ட ஏனோ அவளுக்கு மனம் வரவில்லை.

வீட்டிற்கு வரும் போது தனது கையை இறுகப் பிடித்திருந்த அவனது கையில் இருந்து அவள் தனது கையை உருவ முயற்சிக்க, அவனோ உடும்புப் பிடியாய்ப் பிடித்திருக்க... வேறு வழியின்றி அவனது விருப்பத்திற்கு உடன் பட்டாள். ஹரியின் உபதேசத்தில் உதய்யின் மனதில் உமா மீதிருந்த கோபம் சற்று மட்டுப்பட்டு இருந்தது.

இரவு அறைக்குள் நுழைந்தவளைப் பார்த்தவனின் பார்வையில் ஏதோ மாற்றம் தெரிவதை உணர்ந்தவள், யோசனையாய் அவனைப் பார்த்தவாறு கட்டிலின் மறு பக்கம் வந்து அமர்ந்தாள்.

இத்தனை நாள் கோபத்தில் இருந்தவன், அது குறைந்ததும், பழகிய காதலியான புது மனைவியிடம் இதாய்ப் பழகிப் பேசுவது போல் தயங்கினான்.

அப்போது அவள் கையில் அவன் அணிவித்த வளையல்களைப் பார்த்தவன், அவளது கையை எடுத்து இடது கையில் வைத்துக் கொண்டு வலது கையால் அதை வருடி விட்டவன்,

"உன் நெறத்துக்கு எடுப்பா இருக்கு..." என்றவனை அதிசயமாய்ப் பார்த்தாள் அவள். ஆனாலும் ஒன்றும் பேசவில்லை.

"உன் கோபம் எனக்குப் புரியுது... சில நேரம் என்னையும் அறியாமல் கோபப்பட்டுடறேன்... சாரி உமா... சங்கீ மேல உனக்கு இருக்கிற கோபம் நியாயம்தான்... ஆனா அவ..." சங்கீதாவைப் பற்றிய உண்மையை அவன் கூற வரும்போது...

"அவளைப் பத்தி என் கிட்ட பேசாதே... என் உடம்பெல்லாம் பத்திக்கிட்டு எரியுது..." என்றாள் ஆத்திரத்துடன்.

நேற்று போல் இன்று அவன் கோபப்படவில்லை. மாறாக அவளது கோபத்திற்குக் காரணமான தன் மீதான அவளது காதலைப் பற்றி அவன் ஆராய்ந்தான்.

"சரி. அவளைப் பத்திப் பேசலை... நம்மளைப் பத்திப் பேசுவோமா..." தன்மையாய் அவன் பேச...

"நம்மைப் பத்திப் பேச என்ன இருக்கு...?" என்றாள் வெறுப்பாக.

"ஏன் இல்லை... நாம வாழப் போற வாழ்க்கையைப் பத்திப் பேசலாம்... நமக்குப் பொறக்கப் போற புள்ளைங்களைப் பத்திப் பேசலாம்... பேசவா விசயம் இல்லை..." என்றவனைக் கண்டு அதிர்ச்சியில் அவள் திறந்த வாய் மூடவில்லை.

"என்ன, பேசலாமா...?" கண்ணைச் சிமிட்டிக் கேட்டவனைக் கண்டு அவள் உள்ளம் உருகினாலும், ஏனோ அவளது மனம் அவனோடு இணங்கிச் செல்ல மறுத்தது.

"நான் எதுக்கு உன் கூடப் பேசணும்...? அதான் கூரை மேல சோத்தைப் போட்டா பறந்து வர்ற ஆயிரம் காக்கா கூடப் போய்ப் பேசு... என் கூட எதுக்குப் பேசணும்...?"

விறைத்துக் கொண்டு அமர்ந்து இருந்தவளின் மனதைக் காயப்படுத்திய தனது வார்த்தைகள் அவனுக்கு ஞாபகம் வர, மனதுக்குள் நொந்து கொண்டான்.

"ஏன் உமா இப்படி எல்லாம் பேசுற... என்னைப் பத்தி உனக்குத் தெரியாதா...? என் மேல வச்ச காதலைத் தான் மறந்துட்டே... ஆனா நான் சொன்ன ஆம்பளைக் கும் கற்பு உண்டுங்கிற வார்த்தையைக் கூடவா மறந்து போயிட்டே...?"

அன்று உரு்ய் பேசியது இன்று அவளுக்கு ஞாபகம் வந்தது... என்ன ஞாபகம் வந்து என்ன பயன்...? கூடவே அவன் செய்த துரோகமும் அல்லவா அவள் ஞாபகத் துக்கு வந்தது.

"அது மட்டுமா ஞாபகம் இருக்கு... உன் தங்கச்சிக்காரி அவ காதலனோட வாழணும்கிறதுக்காக நீ எனக்குப் பண்ணுன துரோகம் எல்லாமும் சேர்ந்து நல்லா ஞாபகத்தில் இருக்கு... எனக்கு ஞாபக சக்தியில் எந்தக் குறையும் இல்லை...

"உனக்குக் குறை இருந்தா நல்ல டாக்டரைப் போய்ப் பாரு... உன் தங்கச்சிக்கு என்ன... மனசுக்குப் பிடிச்ச புருசனைக் கட்டிட்டு சந்தோசமா இருக்கா... ஆனா இங்கே என் பிழைப்புதான் கேவலமா சிரிப்பாச் சிரிக்குது..."

அவளது படபடவென்ற பேச்சில் அவனது அடக்கப்பட்ட கோபம் மெல்ல எழ ஆரம்பிக்க, முயன்று தன் கோபத்தை அடக்கியவன்,

"ஏன், நீ நல்ல டாக்டரு இல்லையா...?" கேலி போல் அவன் வினவ... அவள் அவனை முறைத்தாள்.

"வேணாம்... தேவையில்லாம என்னை வம்பிழுக் காதே... அதுக்கு வேற ஆளைப் பாரு..." முகத்தைத் திருப்பியவளின் தாடையில் கை வைத்துத் தன் புறம் திருப்பியவன்,

"எனக்கு எந்த ஆளும் வேணாம்... நீதான் வேணும்..." அவன் கண்ணில் காதல் வழிந்ததோ... தலையைக் குலுக்கித் தன்னைச் சமன் செய்து கொண்டவள்,

"நீ சொன்ன அந்த ஆயிரம் காக்கா கிட்டேயே போ..." என்று அவள் சிலுப்பிக் கொள்ள,

"ஆயிரம் காக்கா எல்லாம் எதுக்கு உமா... ஒத்தக் காக்கா நீ போதாதா...?" கண்களைச் சிமிட்டிக் குறும்பாய்ச் சொன்னவனின் வார்த்தையில் வெகுண்டாள் அவள்.

"என்ன சொன்ன... நான் காக்காவா...?" இடுப்பில் கை வைத்துக் கொண்டு முறைத்தவளை,

"ச்சே... ச்சே... கண்ணு இருக்கிறவன் எவனாவது சொல்லுவானா நீ காக்கான்னு... நீ கிளிடி... அதுவும் என் பச்சைக் கிளி..." என்றவன், அவள் முகம் நோக்கிக் குனிய... அதைக் கண்டு உடல் விறைத்தவள் தன்னிச்சை யாய் உடல் சுருங்கிப் பின்னுக்கு நகர்ந்தாள்.

அவளின் மனநிலையை உணரும் நிலையில் அவன் இல்லை. அவளருகே சென்றவன், அவளை அணைத்துத் தன் வசப்படுத்த முயன்றான். உமாவோ அவனது அணைப்பில் இருந்து விடுபட விரும்பினாள். தன்னால் முயன்றளவு அவள் போராட, அதில் அவன் சற்றுக் கோபம் அடைந்தான்.

"உமா... நாம ரெண்டு பேரும் புருசன், பொஞ்சாதி... இப்படியே வீணா சண்டையைப் போட்டுட்டுக் கால நேரத்தை வீணாக்கணுமா...? நடந்தது எதையும் என்னாலேயோ இல்லை உன்னாலயோ மாத்த முடியாது. அதை மறந்துட்டுப் புதுசா வாழ ஆரம்பிப்போம்..." என்றவன் வலுக்கட்டாயமாய் அவளது இதழைக் கவ்விச் சுவைக்க ஆரம்பிக்க, அவனது செயலை எதிர்க்க நினைத்தவள் தன் நகத்தால் அவனது தோளில் ஆழமாய்க் கீற, அதில் அவன் வலியில் துடித்தான்.

"ஆ..." என்று அலறியபடி அவளை விடுவிக்க... அவன் பிடியில் இருந்து விலகியவள், அறையின் மூலையில் போய் நின்று கொண்டாள்.

"ராட்சசிடி..." என்றவன் தோளின் கீறலைத் தடவிக் கொண்டே அவளைத் திரும்பிப் பார்த்தான்.

அவள் நின்றிருந்த தோற்றம் அவனுக்குச் சிரிப்பை வரவழைக்க, வாய் விட்டுச் சிரித்தபடி அவளருகே வந்தவன்,

"இங்கே வந்து நின்னுட்டா உன்னை ஒண்ணும் பண்ண முடியாதுன்னு நெனைச்சியா..." கேலியாய்க் கேட்டவன் அவளை அலேக்காய்த் தூக்க,

"விடுடா என்னை..." அவள் கையைக் காலை உதறி முரண்டு பிடிக்க...

"இனியும் உன்னைய விட்டா நான் ஆம்பிள இல்லடி..." கோபத்தில் கர்ஜித்தவன்... அவளைப் படுக்கை யில் கிடத்தியவன் தானும் அவள் மீது கவிழ்ந்தான்.

அவளது எதிர்ப்பை எல்லாம் ஒன்றும் இல்லாத தாய்ச் செய்தவன், அவளை வெகு எளிதாய்க் கட்டில் யுத்தத்தில் வெல்ல ஆரம்பித்தான்.

அவன் செய்த துரோகத்தையும் பேசிய வார்த்தை யையும் மறக்கவும் முடியாமல், அதே சமயம் அவனது தொடுகையில் உருகிக் குழையும் தனது உடலைக் கட்டுப்படுத்தவும் முடியாமல் தவித்தவளுக்கு, அவனிடம் தான் கொஞ்சம் கொஞ்சமாய்த் தோற்றுப் போய்க் கொண்டிருக்கிறோம் என்பதை உணர்ந்து, கண்களில் கண்ணீர் வந்தது.

என்னதான் கட்டிய கணவனாய் இருந்தாலும்... இரு உள்ளங்கள் சேராமல், உடல்கள் இரண்டும் சேர்வதை அவனால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

அவன் சொன்னது போல் நடந்து முடிந்தவைகளை மறந்து வாழவும் மென்மையான மனம் படைத்த அவளால் முடியவில்லை.

அவன் கேட்டது போல், எந்தவிதப் பலனும், பயனும் இல்லாத இந்தத் திருமணப் பயணத்தின் முடிவுதான் எது? அதுவும் அவளுக்குத் தெரியவில்லை.

தனது இயலாமையினால், தனது கோபத்தை, மன வேதனையை கூடப் புரிந்து கொள்ள மறுப்பவனிடம், தான் அசிங்கமாகத் தோற்றுக் கொண்டிருப்பதை உணர்ந்தவள் வாய் விட்டு அழ ஆரம்பித்தாள். அவன் முன் அழுது தனது பலவீனத்தை அவனுக்குக் காட்டக் கூடாது என்று நினைத்தவள், அவன் முன் மோசமாய்த் தோற்றுப் போய்க் கதறிக் கொண்டிருந்தாள்.

அவளது எதிர்ப்பைச் சுலபத்தில் அடக்கியபடி முன்னேறிய உதய் அவளது ஓங்கிய அழுகையில் பதறிப் போய் அவளை விட்டு விலகினான்.

உமாவின் நடத்தையை அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை. தன் நடத்தையால், பேச்சால் அவள் மனம் காயப்பட்டு இருப்பதை உணர்ந்து அவனும் அவளிடத்தில் மன்னிப்பும் கேட்டாயிற்று. இதை விட ஒரு ஆண்மகன் என்ன செய்ய முடியும்? இல்லை என்னதான் அவன் செய்ய வேண்டும் என்று அவள் எதிர்பார்க்கிறாள். அவனுக்குச் சத்தியமாய்ப் புரியவில்லை.

ஏனெனில் அவன் வாழ்ந்த சமுதாயச் சூழ்நிலை அப்படிப்பட்டது. திருமணத்துக்குப் பின் பெண்ணுக்குப் பிடிக்குதோ, இல்லையோ... ஆணுக்குப் பிடித்திருந்தால் போதும். அவன் அவளுடன் குடும்பம் நடத்த அதுவே போதுமானது. இதில் பெண்ணின் மனமோ... இல்லை, விருப்பமோ பெரிதாக முக்கியத்துவம் பெறுவது இல்லை. அதே போல் ஆணுக்குப் பிடிக்கவில்லை என்றால், அந்தப் பெண்ணை விவாகரத்து செய்து விட்டு, அடுத்து ஒரு பெண்ணைக் கட்டிக் கொண்டு குடும்பம் நடத்துவது தான் அவர்களது ஊர் வழக்கம்.

கட்டில் சுகத்துக்காகப் பெண்ணின் காலில் விழுவதோ... இல்லை அவளின் விருப்பத்தைக் கேட்பதோ என்பது அறவே கிடையாது. அப்படிப்பட்ட ஒரு மன நிலையில்தான் அவன் இருந்தான்.

அப்படி இருந்தும், தான் செய்த தவறுக்கு அவன் மன்னிப்புக் கேட்ட பின்பும்... வாழ மாட்டேன் என்று உமா பிடிவாதம் பிடித்தால் அவனும் என்னதான் செய்வான்? தலையில் கையை வைத்துக் கொண்டு அப்படியே அமர்ந்து இருந்தான்.

விக்கி விக்கி அழும் உமாவின் அழுகையில் அவளைத் திரும்பிப் பார்த்தான் அவன். அவள் கலைந்து கிடந்த விதம் அவன் மனதை உலுக்க... அருகில் இருந்த போர்வையை எடுத்து அவள் மேல் போர்த்தி விட்டான். அவனது செயலில் தன்னுணர்வு பெற்றுப் பதறிப் போய் எழுந்த உமா கட்டிலின் மறுமுனையில் போய் அமர்ந்து கொண்டாள்.

"உமா..." அவனது அழைப்பில், நிமிர்ந்து பார்த்த விழிகளின் பார்வையில் தெரிந்த வலியில் அவன் அப்படியே செத்துப் போனான்.

எப்போதும் பேசிப் பேசி வார்த்தையால் கொல்லும் அவன் மனைவி இன்று ஒற்றைப் பார்வையில் அவனை உயிருடன் கொன்றாள்.

இதுவரை எந்தப் பெண்ணிடத்திலும் பழகாதவன், பெண்களின் மனதைப் புரிந்து கொள்ளாதவன்... இவ்வளவு ஏன், தன் காதலியையே புரிந்து கொள்ளாமல் வார்த்தையால் காயப்படுத்தியவன்... இன்று மனைவியின்

ஒற்றைப் பார்வையில் ஓராயிரம் அர்த்தத்தைப் படித்தான். ஒருவேளை அவளது மனம் என்கிற சொற்பொருள் அகராதியைப் (டிக்ஷனரி) படித்ததன் விளைவோ...!

"சாரி உமா...!" என்றபடி வேகமாய் அவள் அருகில் வந்து, அவளைத் தன் வயிறோடு சேர்த்து அணைத்த வனின் விழிகள் கசிந்தது, மனதில் எழுந்த காதலால்!

மனையாளின் மனதை உணர்ந்து, தாம்பத்திய வாழ்க்கையில் வெற்றிகரமாக முதல் படியில் காலை வைத்தான் உதய்.

அன்று உமாவின் காதலை இழக்க வேண்டும் என்ற நிலை வந்தபோதும் உதய் மனதிற்குள் எந்தளவுக்குத் தவித்துத் துடித் தானோ... அதை விட அதிக வேதனையில் தவித்துத் துடித்தான் இப்போது. அந்தளவுக்கு அவளின் மன வேதனையை, வலியை அவன் உணர்ந்தான்.

இவ்வளவு ஏன், அவனும் அதை அனுபவித்தான். அவளைக் காதலித்த காலத்தில் இருந்த அவள் மீதான அவனது காதல் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு அவனது மன அரியணையில் ஏறி அமர்ந்தது.

அன்று தங்கைக்காகத் தான் உமாவுடனான காதலை அவன் தூக்கி எறிந்தான். அப்போது உமாவை இழந்ததால் ஏற்பட்ட அவன் மனதின் வலியை அவள் பேசிய வார்த்தைகள் ஒவ்வொன்றும் மரத்துப் போகச் செய்து, மேலும் அவனது கோபத்தை அதிகப்படுத்தியது.

ஆனால் இன்று அந்தக் கோபத்தை ஒதுக்கி வைத்துப் பார்க்கும்போது உமாவின் துயரம் அவனை மிகவும் துயரப்படுத்துவதாய் இருந்தது.

தன் வயிறோடு அணைத்திருந்த உதய்யின் பிடியில் இருந்து விலக முற்பட்டாள் உமா... அவளின் மனம் அறிந்தவனாய்த் தன் பிடியைத் தளர்த்தியவன்,

"உமா... என்னை மன்னிக்கவே மாட்டியாடி..." என்றபடி அவளருகில் அவன் அமர, அதைக் கண்டு அவள் தள்ளி அமர்ந்தாள்.

பின்பு அவனை நிமிர்ந்து பார்த்தவள், "மன்னிக்கணுமா... அது எதுக்கு?" சீறலாய் வந்தது, அவளது வார்த்தைகள்.

"நான் பண்ணுனது தப்புதான். அதை மறந்து மன்னிக்கலாம்ல..." தணிந்தது அவனது குரல்.

"நீ பண்ணுனது சின்னத் தப்பா... மன்னிக்கிறதுக்கு? சரி, அதை விடு. உனக்குப் பார்த்த பொண்ணு நானா இல்லாம இருந்து வேற பொண்ணா இருந்திருந்தா... இப்போ நீ என்ன பண்ணிட்டு இருந்திருப்ப...?"

அதைக் கேட்கும் போதே அவளது நெஞ்சு அதிர்ந்தது. அவன் என்ன செய்து கொண்டிருப்பான் என்பதைக் கற்பனையில் கண்டவளுக்கு விழிகளில் நீர் நிறைந்தன.

அவள் கேட்ட கேள்வியில் அவன் பேச்சை மறந்த வனாய் அமர்ந்திருந்தான். அவள் கூறியதைக் கற்பனை

யில் கண்டவனுக்கு அந்த நினைவே கசப்பாய்... 'வேறொரு பெண்ணுடன் நானா... ச்சே... ச்சே...!'

அவன் மனம் அருவருப்பாய் நினைத்தாலும்... உமா சொன்னது போல் நடந்திருந்தால்... அது தானே இப்போது அரங்கேறி இருக்கும் என்ற நிதர்சனம் மனதைத் தாக்க... இதயம் தன் துடிப்பை நிறுத்தி விடக் கூடாதா என்றிருந்தது அவனுக்கு. ஏனெனில் அந்தளவுக்கு அவனுக்கு அந்த நினைவே பெருத்த துன்பமாய் இருந்தது.

அப்போதுதான் அவனுக்கு ஒன்று புரிந்தது. அன்று முதல் இன்றுவரை உமாவிடம் தான், 'நீ இல்லை என்றால் என்ன... வேறு பெண்ணோடு நான் வாழ்ந்து கொள்வேன்...' என்று சவால் விட்டது எவ்வளவு பெரிய அபத்தம் என்பது புரிந்தது.

அவள் இல்லை என்றால் மனம், 'உயிரை விடு' என்கிறதே தவிர, 'அவளை மறந்து விட்டு நீ வாழு!' என்று அது அவனுக்கு உத்தரவிடவில்லையே...!

அவன் குடும்பத்துப் பெண்களிடம் அவனுக்கு எப்போதும் ஒருவிதப் பாசம் உண்டு தான். அவர்களுக்கு ஒன்று என்றால் துடித்துப் போய் விடுவான் தான். ஆனால் அவர்கள் ஒருவருக்காகவும் உயிரைக் கொடுக்க வேண்டும் என்று அவன் நினைத்தது இல்லையே...!

வாழ்க்கையை வெறுத்து உயிரைத் துறக்கவும் அவன் துடிக்கவில்லை. மற்றவர்கள் வேறு. உமா வேறு என்பதை அந்தக் கணம் உணர்ந்தவன் அவளை இழக்க நினைத்த தன் மடமையை எண்ணி மனதுக்குள் துடித்தான்.

அவனின் நினைவு, துடிப்பு எல்லாம் உமாவாய் மாறியிருந்ததை உணர்ந்தவனுக்குக் காதல் என்பதன் அர்த்தம் புரிந்தது, முழுவதுமாய். அவளைப் பிரிவது என்பது பெரும் துன்பமாய் ஆணான தனக்கே இப்படி இருக்கிறது என்றால்... பெண்ணாகிய உமாவுக்கு எப்படி இருந்திருக்கும் என்பதை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது.

"என்ன... கனவுல அந்தப் பெண்ணோட டூயட் பாடிட்டு இருக்கியா...?" கடுமையாய்க் கேட்டவளைப் பாவமாய்ப் பார்த்தவன் தலை 'இல்லை' என்பது போல் அசைந்தது.

உதய்யின் முகபாவம் அவளது மனதை இளகச் செய்தது. அவனைத் துரத்தித் துரத்திக் காதலித்தவள் அவள்... அவனது ஒவ்வொரு அசைவுக்கும் என்ன அர்த்தம் என்பது துல்லியமாய் அவளுக்குத் தெரியும்... இடைப்பட்ட இந்தக் காலத்தில் அவன் மேலிருந்த கோபத்தில் அவனைப் புறக்கணித்ததில் அவனது உணர்வுகளைப் படிக்கத் தவறி விட்டாள்.

வெகு நாட்கள் கழித்து அவனது உணர்வுகளைப் படித்தவள் மனதில் ஆயிரமாயிரம் எண்ண அலைகள் எழுந்தது, பெரும் போராட்டமாய்...! இந்த நிலைமைக்குத் தன்னைத் தள்ளிய காதலனான கணவனைச் சபிப்பதா... இல்லை, தன் விதியைச் சபிப்பதா என்று அவளுக்குத் தெரியவில்லை...

"ஏன் உதய், இப்படிப் பண்ணினீங்க...?" என்ற கேள்வியை மட்டுமே அவளால் கேட்க முடிந்தது. அதற்கு

மேல் பேச முடியாமல் அவளுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. அவன் மீதான காதல் அதிகரித்ததில் அவளது வார்த்தையிலும் மரியாதைப் பன்மை திரும்பி விட்டது.

ஓராயிரம் பதில்களை உள்ளடக்கிய அந்த ஒற்றைக் கேள்விக்கு அவனால் ஒரு பதிலைக் கூடக் கூற முடியவில்லை. குற்றவுணர்வில் தலை குனிய அமர்ந்திருந்தவனின் நிலை அவளையும் வருந்தச் செய்தது.

"எப்படி எல்லாம் வாழ வேண்டிய நம் வாழ்க்கை இன்னைக்கு இப்படி இருக்குதுன்னா... யார் காரணம்...? எவ்வளவு ஈசியாச் சொல்றீங்க... பழசை எல்லாம் மறந்திட்டு வாழ்வோம்னு... நம்ம ஃப்யூச்சர், நம்ம குழந்தைகளைப் பத்திப் பேசுவோம் வான்னு ரொம்பச் சாதாரணமாக் கூப்பிடுறீங்க... அது எல்லாம் அவ்வளவு சாதாரண விசயமா உங்களுக்கு...? இதேது இந்த இடத்துல நான் இல்லாம வேற பொண்ணு இருந்திருந்தா... அவள் கிட்டயும் இப்படித்தான் பேசியிருப்பீங்களா...? உங்களுக்கு வேணும்னா அது சாதாரணமா இருக்கலாம்... ஆனா எனக்கு அது மிகப் பெரிய கனவு..."

"உங்களை மாதிரி நிறையக் குழந்தைகளைப் பெத்துக்கணும்... உடல் தளர்ந்து, முடி நரைச்சு முதுமை அடைந்தாலும் ஒருத்தருக்கு ஒருத்தர் அன்பா, ஆறுதலா மனசு நிறையக் காதலோடு வாழணும்னு நான் நினைச்சேன்... ஆனா, என் கனவு எல்லாம் வெறும் கனவா, கானல் நீராப் போச்சு..." என்று சொல்லும் போதே, அவளது கண்களில் கண்ணீர் வழிந்து கன்னத்தை நனைத்தது.

"உங்களால விருப்பமே இல்லாத கல்யாணத்துக்குச் சம்மதிச்சேன்... உங்களால நான் கேவலமா எங்கப்பா கிட்ட தோத்துப் போய் நிற்கிறேன்... அன்னைக்குக் கேட்டீங்களே, நீ மட்டும் என்ன ஒழுங்கா... இன்னொருத்தனைக் கல்யாணம் பண்ணிக்கச் சம்மதிச்சவ தானேன்னு. ஆமாம், நான் சம்மதிச்சேன்தான்... இல்லைங்கல... எங்கம்மாவைக் கொலை செய்துடுவேன்னு எங்கப்பா என்னை மிரட்டிச் சம்மதிக்க வச்சாரு... அப்போ எனக்கு எப்படி இருந்தது தெரியுமா? அப்படியே செத்துப் போய் விட மாட்டோமான்னு..." என்றவள் அழுத விழிகளைத் துடைத்துக் கொண்டு,

"ஆனா, நான் சாக மாட்டேன்... நான் வாழப் பிறந்தவ... எங்கப்பாவுக்கு எனக்கும் நடக்கிற யுத்தத்தில் நான் ஜெயிக்கணும்... அதுக்காகவாவது நான் வாழணும்... வாழ்வேன்..." தன்னையும் அறியாது உணர்ச்சி வசப்பட்டுக் கூறியவள், சட்டென்று வாயை மூடி மௌனியானாள்.

வேறொருத்தனைத் திருமணம் செய்ய அவள் சம்மதித்ததன் பின்னணியில் இத்தனை விசயம் இருக்கும் என்று அவனுக்குத் தெரியாது. அவளது தந்தையைப் பற்றி நன்கு தெரிந்தும் அவளைக் கைவிட்ட தனது நிலையை எண்ணி வருந்தினான்.

"எத்தனை வருசம் உதய்... நான் இப்படிப் போராடுறது...? என் மனசோட, என் அப்பாவோட, இதோ இப்ப உங்க கூட... நீங்க தொடறப்போ உங்க கிட்ட சரணாகதி அடையத் துடிக்கிற மனசை அடக்க வழி தெரி

யாம நான் தவிக்கிற தவிப்பு எனக்கு மட்டும்தான் தெரி யும்... என்னால முடியல, உதய்...” முகத்தை மூடிக் கொண்டு அழுதவளை வாரி அணைத்துக் கொண்டான் உதய்.

அவனால் அவளுக்கு அளிக்க வேண்டிய ஆறுதல் அது மட்டுமே... திமிறிக் கொண்டு விலகப் போனவளைத் தன் உடல் பலத்தால் அடக்காமல், தனது அன்பான செய்கையால் அடக்கினான். இடது கையில் அவளை இறுக்கித் தன் நெஞ்சோடு அணைத்திருந்தவன் வலது கையால் அவளது தலையை கோதிக் கொடுத்தான். அதில் அவளது அழுகை கொஞ்சம் கொஞ்சமாய் அடங்கி வெறும் தேம்பலில் வந்து நின்றது.

“என் வாழ்க்கையில் வந்த ரெண்டு ஆண்களுமே எனக்கு ஏன் நம்பிக்கைத் துரோகம் பண்ணாங்க, உதய்? எனக்கு மட்டும் ஏனீ இப்படி எல்லாம் நடக்குது...? எங்கப்பா செஞ்ச துரோகத்தைக் கூட என்னால தாங்கிக்க முடியுது... ஆனா, நீங்க பண்ணுன துரோகம் இங்கே வலிக்குது, உதய்...” இடது பக்க நெஞ்சில் கையை வைத்தபடி, பரிதாபமாய்த் தன்னை ஏறிட்டுப் பார்த்த வளைக் கண்டு அவனுக்கு ‘ஐயோ’ என்று இருந்தது.

“உமா...” கண்கள் கலங்க அவளை அழைத்தவன், “நான் உனக்குத் துரோகம் பண்ண நெனைப்பேனாடி... உன்னை மறந்துட்டு இன்னொருத்தியைக் கல்யாணம் பண்ணிக்கச் சொன்னப்பவே நான் உயிரோட செத்துப் போயிட்டேன்டி...”

மெல்ல அவனது பிடியில் இருந்து அவள் விலக... அவனோ அவளை இழுத்துப் பிடித்தவன், "இப்பவும் சொல்றேன், உமா... நடந்தது எதையும் என்னால மாத்த முடியாது... ஆனா, இனிமே நடக்கப் போறதை என்னால மாத்த முடியும்... இனி வரும் காலத்துல உனக்கு நான் நல்ல புருசனா இருப்பேன். என்னை நம்புடி..."

"நம்பிக்கை... எந்த அடிப்படையில் நம்பிக்கையா இருன்னு சொல்றீங்க? நான் உங்க மேல வச்ச நம்பிக்கை யும் தோத்துப் போச்சு... காதலும் செத்துப் போச்சு..." என்றவளின் பேச்சில் அவனின் கைப்பிடி தளர்ந்தது.

"உமா..." அதிர்ந்தவன், "உனக்கு நம்பிக்கை வரணும்னா நான் என்ன செய்யணும், உமா... நீ இல்லன்னா எனக்கு வாழ்க்கையே இல்லடி..." என்ற வனைக் கண்டு விரக்தியாய்ச் சிரித்தாள்.

"ஒரு காலத்தில் நீங்க சொல்ற இந்த வார்த்தைக்காக நான் எதையும் செய்யத் தயாரா இருந்தேன்... ஆனா, இப்போ ஏதோ ஒண்ணு எனக்குள்ள செத்துப் போச்சு..."

"என்னடி இப்படிச் சொல்ற...?" பரிதாபமாய்க் கேட்டவனைக் கண்டு அவளுக்கு இரக்கமாய் இருக்கத் தான் செய்தது. ஆனால்...?

அவன் மேல் அவள் வைத்திருந்த நம்பிக்கையின் அளவு என்ன என்பதை அவன் அறிந்திருக்க வாய்ப் பில்லையே...! உயிர் மூச்சுக்கு ஏங்கி, உயிருக்குப் போராடித் தவித்துக் கொண்டிருந்தவளிடம் 'நான்தான் உன் உயிர்... நான்தான் உன் சுவாசம்' என்று வரமாய் வந்தவன் அல்லவா அவன்...

ஆனால், அவனே அவளின் உயிரை வாங்குபவனாய் மாறுவான் என்று அவள் கனவிலும் நினைக்கவே இல்லை... அவனை அந்தளவுக்கு நம்பினாளே ... யார் எதிர்த்தாலும் தன்னைக் கைவிட மாட்டான் என்று அவள் அவனை முழுவதுமாய் நம்பினாளே... அந்த நம்பிக்கை பின்னால் இருந்த காதலை மட்டுமா அவன் கொன்றான்... அவளின் வாழ்வின் லட்சியத்தையும் அல்லவா அவன் கொன்று விட்டான்.

அவளது பார்வை அவனது உயிர்வரை ஊடுருவிச் சென்றது... ஆனால் இந்தப் பார்வை சொல்லும் அர்த்தம்தான் அவனுக்கு விளங்கவில்லை. ஏனெனில் அதில் இருந்தது, காதலையும் தாண்டிய வேறொரு விசயம்... ஆனால் அது என்னவென்று தான் அவனுக்குப் புரியவில்லை. அப்படிக் காதலையும் தாண்டி இருவருக்கும் இடையில் வேறு எதுவும் இருப்பதாய் அவனுக்குத் தெரியவில்லை... கணவன் - மனைவிக்கு இடையில் காதல், அன்பு தவிர வேறு என்ன இருக்க முடியும் என்பதே அவனுடைய எண்ணம்.

அவனுக்குத் தெரியவில்லை, அதையும் தாண்டி அவள் அவனிடம் ஒன்றை எதிர்பார்த்தாள். அந்த ஒன்றை அவன் தராமலேயே ஏமாற்றி விட்டதை அவன் அறிந்திருக்கவில்லை. அவளின் எண்ண ஏட்டைப் படிக்க முடியாமல் குழம்பியவன்... அவளின் கையைப் பிடித்துக் கொண்டு,

"நீ ஏதோ சொல்ல வர்ற மாதிரி இருக்கு... ஆனா, அது என்னதான்னு எனக்கு வெளங்கல... உம் மனசைக்

டப் புரிஞ்சிக்காத எனக்கு எல்லாம் காதல் ஒரு கேடா...? ன்னைக்கு நீ என் பின்னாடி வந்தப்பவே கட் அண்ட் ரைட்டா சொல்லியிருக்கணும்... அது செய்யாமப் போனது ன் தப்புதேன்... அதுக்குத்தேன் இப்போ நான் நல்லா அனுபவிக்கிறேன்..." என்றவன் அவளின் முகத்தைத் தன் கையில் தாங்கி,

"உன்னய மாதிரி ஒரு பொண்ண எப்படி வேணாம்னு சொல்வேன்... உன்னய என் வாழ்க்கையில் வந்த தேவதையாத்தான் நெனச்சேன்... ஆனா, இப்ப அந்தத் தேவதையை உயிரோடு கொன்ன பாவியாகி நான் போனேன்... காதலிக்கவே நான் ஏத்தவன் இல்லைடி... அப்படி என்ன இருக்குன்னு என்னை நீ இப்படி உயிருக்கு உயிராக் காதலிக்கிற...? ம்... அழகு, படிப்பு, பணம், அந்தஸ்து இப்படி எதிலேயுமே உனக்கு ஏத்தவன் நானில்லைடி. அப்படி இருந்தும் நீ எப்படி என்னைப் போய்...?" முடிக்க முடியாமல் அவனுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது.

அவனது துக்கம் அவளையும் தாக்கியதோ என்னவோ... அவளையும் அறியாமல் அவளது கை மேலெழும்பி அவனது கன்னத்தை வருடியது. அவனின் வேதனையைக் குறைக்கும் பொருட்டு இன்னமும் அழுத்தமாய் வருட... அவளது கையைத் தன் கன்னத்தோடு வைத்து அழுத்திக் கொண்டான் அவன்.

"வீரம் இருக்கே... தைரியம் இருக்கே... யாரிடமும் இல்லாத அஞ்சாத நெஞ்சம் இருக்கே... இது எல்லாம்

யார்கிட்டயும் நான் பார்க்கலையே... உங்ககிட்ட மட்டும் தான் நான் இதைப் பார்த்தேன்..."

வெகு நாட்களுக்குப் பின் அவனை ஆசையுடன், காதலுடன் வருடிய அவளது பார்வையில் அவன் உருகிக் கொண்டிருக்கும் போதே, திடீரென்று அவளது பார்வையில் வெறுமை வந்து அமர்ந்தது.

"ஆனா இப்போ... இப்போ..." அவளால் மேலே சொல்ல முடியவில்லை.

"இப்போ எனக்கு என்னடி...? அதே வீரம், தைரியம் அப்படியேதான் இருக்கு..." என்றவனைப் பார்த்தவள் பார்வை மட்டும் புரியாத புதிராய்...

"ச்சு விடுங்க... எல்லாம் முடிஞ்சுப் போச்சு..." என்றவளின் பேச்சும் புரியாத புதிராய் இருந்தது.

"இல்ல, நீ ஏதோ நெனக்கிற... ஏதோ சொல்லத் துடிக்கிற... ஆனா, அது என்னன்னுதான் எனக்குப் புரிய மாட்டேங்குது..." நெற்றிப் பொட்டைத் தட்டி யோசித்தவனை,

வெறுமையாய்ப் பார்த்தவள், "தூங்கலாமா... இப்பவே லேட் நைட் ஆகிடுச்சு... நாளைக்கு வேற ஊருக்குக் கிளம்பணும்..." என்றபடி படுக்கப் போன வளைத் தடுத்து நிறுத்தியவன்,

"நடந்ததை மறந்து மன்னிக்க முடியாதா, உமா...!" மீண்டும் அவளிடத்தில் மன்னிப்பை யாசித்தான் அவன்.

"இப்ப உங்களுக்கு என்ன வேணும்...?" அவனை நிமிர்ந்து பார்த்தவள், "மத்த ஹஸ்பண்ட் அண்ட்

வைஃப் மாதிரி வாழணும்னு நினைக்கிறீங்களா...! ஓ.கே. அப்படியே நாம வாழலாம்... பட் ஒன் திங்க்... என்னோட உடலைத்தான் உங்களால தொட முடியும்... என் மனசை உங்களால தொட முடியாது.... மொத்தத்தில நீங்க ஒரு பிணத்தோட உறவு கொள்ளலாம். இதுக்கு உங்களுக்கு ஆட்சேபணை இல்லன்னா..." அவள் சொல்லி முடிக்கும் முன், அவள் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை விட்டான்.

"என்னை என்னடி நினைச்ச...? உம் உடம்புக்கு அலையறவன்னா...? எனக்கு வேண்டியது உம் உடம்பு இல்ல... உம் மனசு...ஜெயிப்பேன்டி, உம் மனசை நான் ஜெயிப்பேன்டி... இழந்த நம் காதல நான் மீட்டு எடுப்பேன்... அப்புறம் வச்சிருக்கேன்டி, என் கச்சேரிய... பொணமாம் பொணம்...

"இப்பவும் நான் தொட்டா... நீ உருகத்தான் செய்வ... என்கிட்ட மனசார வாழத்தான் செய்வ... ஆனா, எனக்கு வேண்டியது அது இல்லை... உம் முகத்துல பழைய சிரிப்பைப் பார்க்கணும்... உம் குறும்புத்தனத்தை நான் பார்க்கணும். எந்தக் கவலையும் இல்லாம நீ சிரிச்சுக்கிட்டே இருப்பியே... அந்த முகத்தை நான் பார்க்கணும்... பார்ப்பேன், எனக்கு நம்பிக்கை இருக்கு. உன்னய நான் மாத்துவேன்..."

அவனது அடியில், பேச்சில் அரண்டு போய் அமர்ந்திருந்தவளின் அருகில் வந்தமர்ந்தவன் அவளின் நிலையைக் காணச் சகிக்காமல் அவளைத் தன்னோடு அணைத்துக் கொண்டான்.

"ஏன்டி, எம் மனச வார்த்தையால கொல்லுற? நான் மாறணும்னு நெனக்கிறேன்... ஆனா, மாற விட மாட்டேங்கிறியே...." என்றவனின் கைகளை விலக்கியவள்,

"நான் தூங்கணும்..." என்றவளை...

"சரி படு..." என்று அவள் படுப்பதற்காக இடம் கொடுத்தவன், அவள் படுத்ததும் அவளது நெற்றியில் மென்மையாய் முத்தமிட்டவன், "எம் மேல கோபமா...?" என்றான்.

சற்று முன் இருந்த அவனது கோபம் மறைந்து இப்போது அவனிடத்தில் காதல் குடிகொண்டதை அவள் உணரத்தான் செய்தாள். அவனது இயல்பிலிருந்து அவன் தனக்காக வெகுவாய் மாறியிருப்பதை உணர்ந்தவள், 'இல்லை!' என்பது போல் தலையசைத்தபடி கண்களை மூடிக் கொண்டாள்.

சிறிது நேரம் அவளை வெறித்துப் பார்த்திருந்தவன் ஒரு பெருமூச்சுடன் தனது இடத்தில் வந்து படுத்தான். உமாவின் மனதை அரிக்கும் விஷயம் எதுவாக இருக்கும் என்று அவன் யோசித்துக் கொண்டிருக்க...

அவளோ அவன் அடித்த கன்னத்தைத் தடவிக் கொண்டிருந்தாள்... அவனது கோபத்தையும் மீறி அவனது அன்பு, காதல் அவளது மனதை நிறைக்கத்தான் செய்தது. ஆனாலும்... அவளது மனதில் அந்தக் கேள்வி எழாமல் இல்லை. அவளது கேள்வியின் நாயகன் அதற்கான விடையைத் தேடுவானா?

மறுநாள் காலையில் விழுப்புரம் கிளம்புவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தனர் இரு புதுமணத் தம்பதி யினரும். அந்நேரம் கலைவாணி உதய்யைப் பார்க்க வந்திருந்தாள். அவளது அக்காவின் திருமணமும் உதய் திருமண நாளை ஒட்டி நடைபெற்றதால் அவளால் உதய்யின் திருமணத்திற்கு வர முடியவில்லை.

நேரே மாரீஸ்வரியிடம் சென்று சில்வர் சம்படத்தை நீட்டியவள், "பெரியம்மா... அம்மா இதைக் கொடுத்து விட்டாக. ஆமா அண்ணே, அண்ணி, சங்கீ, மாமா எல்லாம் எங்கே...?" ஆர்வமாய் அவள் விசாரித்தாள்.

"கெளம்பிட்டு இருக்காக. இதோ வந்துருவாக... ஆமா, அமுதா கல்யாணம் நல்லபடியா முடிஞ்சதா...? இங்கே கல்யாண வேலையில அங்கன வர முடியாமப் போச்சு... உங்காத்தா கிட்ட சொல்லிரு... ஓய்வா இருக்கும் போது நான் வாரேன்னு..." - மாரீஸ்வரி சொல்லும்போதே உமா அங்கே வந்தாள்.

"வா உமா..." - மருமகளைப் பார்த்துச் சொன்னவர், "கலை! இதேன் உங்கண்ணி..." என்று கலையிடம் உமாவை அறிமுகப்படுத்த, அவள் அதிர்ச்சியில் அமர்ந் திருந்த நாற்காலியில் இருந்து எழுந்து விட்டாள்.

உமா ஏதோ உதய்யைக் காதலிப்பதாய்ப் பிதற்றிக் கொண்டிருந்தாலும், தன் அண்ணன் அவளைக் காதலித் திருக்க மாட்டான் என்று அவள் நம்பினாள். இருவரும் காதலித்த விஷயம் அவளுக்குத் தெரியாது. இருவரும் அவளிடம் சொல்லாமல் அதை மறைக்க வேண்டும் என்று

நினைக்கவில்லை. ஏனோ சொல்ல வேண்டும் என்று தோன்றவில்லை...

அதனால்தான் உமா உதய்யைத் திருமணம் செய் திருப்பதைக் கண்டு அவள் திகைத்துப் போய் விட்டாள். அதிலும் உமா அவளது சீனியர் வேறு... அந்தப் பயமும் வேறு சேர்ந்து கொள்ள, அவளுக்குப் பயத்தில் வியர்க்க ஆரம்பித்தது.

"அக்கா..." என்று திணறியவளை, உமா முறைக்க...

"அண்ணிடி... அக்காவாம்ல... முறையை மாத்தாதே கலை..." மாரீஸ்வரி அவளைத் திருத்தம் செய்தவர், ஏதோ வேலையாய் உள்ளே செல்ல... உமாவும் கலையும் தனித்து விட்டப்பட்டனர்.

"அண்ணி... என்னை ராகிங் செஞ்சுப்புடாதீக..." இரண்டாம் வருட மாணவியான பின்பும் உமா மீதான அவளின் பயம் சற்றும் குறையவில்லை. பின்னே அந்தளவுக்கு அவளை ட்ரில் வாங்கியவளாச்சே இந்த உமா.

"இன்னும் நான் உனக்கு அக்காவா...?" உமா மறுபடியும் அவளை முறைக்க...

"ஐயோ! இல்ல இல்ல... அண்ணி..."

"ம்... அது..." என்றவள் அவளையும் அமரச் சொல்லி விட்டு கெத்தாகப் பார்த்தவள் கல்லூரியைப் பற்றி விசாரிக்க ஆரம்பித்தாள்.

அந்நேரம் தங்கவேலு அங்கே வர, அவரைக் கண்டதும் பவ்யமாய் எழுந்து நின்ற உமாவின் அடக்கத்தைக் கண்டு 'பே' என்று விழித்தாள்.

'இவுகளுக்கு இப்படி இருக்கக் கூடத் தெரியுமா...?' ஆச்சரியமாய் உமாவைப் பார்த்துக் கொண்டிருந்தவள்... தங்கவேலு கேட்ட கேள்விகளைக் கவனிக்கத் தவறினாள்.

"ஏத்தா ஈசு... இங்கன செத்த வந்துட்டுப் போ... நம்ம கலைப்புள்ள காத்துக் கருப்பு அடிச்ச மாதிரி நின்னுக்கிட்டு இருக்கு. என்னன்னு வந்து பாரு...?"

கணவனின் குரலுக்கு அங்கே விரைந்து வந்த மாரீஸ்வரி பேஸ்த்து அடித்தார் போன்று நின்று கொண் டிருந்த கலையின் முதுகில் தட்டி,

"ஏ புள்ள, உனக்கு என்னாச்சு...?"

அவரின் தட்டலில் சுயவுணர்வு அடைந்த கலை, "ஆங்... என்ன பெரியம்மா கேட்டீங்க?" தலையைச் சொறிய...

"கலை, உங்காத்தாக்காரி கிட்ட சொல்லு... கருக்கல்ல பொட்டப்புள்ளய ஒத்தையா அலைய விட வேணாம்னு..." மாரீஸ்வரியின் அறிவுரையில் கலைக்கு அழுகை வரும் போல் இருந்தது.

"அதெல்லாம் ஒண்ணும் இல்ல பெரியம்மா..." என்று சமாளிக்க...

"இந்தக் காலத்துப் புள்ளங்களே இப்படித்தே..." பெரியவர்கள் இருவரும் சொல்லிக் கொண்டு அங்கிருந்து நகர...

"உமா எங்கூடு எல்லாம் பிடிச்சிருக்கா...?" என்று கேட்டபடி அழகேசன் அங்கு வந்தான். வந்தவன் பார்வை

யில் கலை விழ, "ஏத்தா! நீ பாண்டி மாமா மவ தானே...?" மோவாயைத் தடவிக் கொண்டு அவன் யோசிக்க...

"ஆமா..." கலை தலையசைக்க...

"மூக்குறிஞ்சிட்டு திரிந்த புள்ளயா நீயி... எம்புட்டு உசரமா வளர்ந்துட்டே..." அவளைக் கண்டு அவன் அதிசயிக்க... அதில் கலைக்குக் கோபம் வந்தது.

"ஏன்... நீங்கெல்லாம் உசரமா வளர்றப்போ நாங்க வளரக் கூடாதுன்னு ஏதும் சட்டம் இருக்கா...?" அவள் நொடித்துக் கொள்ள...

"ஆத்தாடி! எம்புட்டு வாயி..." அவன் அங்கலாய்க்க... இருவரையும் சுவாரசியமாய்ப் பார்த்த உமா,

"அழகு... அப்படியா சொல்ற...?" தன் பங்குக்கு அவள் அவனைக் கேட்க,

"உமா! நீயே சொல்லு. இந்தப் புள்ள வாயாடியா... இல்லையா?"

"ம்... கொஞ்சம் வாய்தான்... அதைக் குறைச்சிட லாமா அழகு..." - ஓரக் கண்ணால் கலையைப் பார்த்தபடி உமா சொல்லவும், கலைக்கு அடிவயிறு கலங்கியது.

"அண்ணி... நான் ஏதோ தெரியாமப் பேசிப் புட்டேன்..." மன்னிப்புக் கேட்கும் பாவனையில் அவள் பேச...

அழகுக்கு ஆச்சரியமாய்ப் போய் விட்டது. தன்னிடம் எதிர்த்துப் பேசியவள் உமாவிடம் இந்தப் பம்மு பம்மு கிறாளே என்று... அவனது கண்கள் சுவாரசியத்துடன்

கலையின் மீது படிந்தது. மாநிறமாக இருந்தாலும் களையுடன் இருந்த கலையை அவனுக்கு மிகவும் பிடித்துப் போனது.

"அப்போ அழகு கிட்ட ஒழுங்கா மரியாதை கொடுத்துப் பேசணும் என்ன...?"

உமா சொன்னதும் அழகு கெத்தாகச் சட்டைக் காலரைத் தூக்கி விட்டுக் கொள்ள...

'எல்லாம் காலக் கொடுமை...' மனதுக்குள் நினைத்த படி வெளியில் அவனைப் பார்த்துச் சிரித்து வைத்தாள் கலை.

"உமா, அது உனக்கு மட்டும் பயப்படுதே... அது ஏன்...?" ரகசியக் குரலில் அழகு உமாவிடம் கேட்க...

"அவள் என்னோட ஜூனியர். அதான் இன்னும் பயப்படுறா..."

"ஆ... இந்தப் புள்ள டாக்டருக்கா படிக்குது...!" வாயைப் பிளந்தான் அழகு.

"ஆமா, அதுக்கு என்ன அழகு...?" புரியாமல் கேட்டாள் உமா.

"இல்ல, நமக்கு எல்லாம் இது செட்டாகாது..." என்றான் சோகமாக.

அவன் சொன்ன விதம் சிரிப்பை வரவழைக்க... வாயை மூடிச் சிரித்த உமா, "ஏன்... உங்க மச்சானுக்கு நான் செட்டாகலையா...?"

"அது... அது..." சொல்ல முடியாமல் திணறியவன், "மச்சான் அதிர்ஷ்டம் எல்லாம் நமக்குக் கிடையாது..." அவன் பெருமூச்சு விட...

"உண்மையா இருந்தா எல்லாம் செட்டாகும்."

"என்னத்த உண்மைக் காதலு...? மச்சான் பண்ணுன வேலைக்கு..." அவன் பல்லைக் கடித்தான்.

இருவரும் குசுகுசுவெனப் பேசிக் கொண்டிருந்தது என்ன என்று புரியாமல் கலை நின்று கொண்டிருக்க... அப்போது அங்கே உதய் வந்தான்.

கலை நின்றிருந்த நிலை பரிதாபமாய் இருக்க, அவள் அருகில் வந்தவன், "என்னம்மா கலை! ரெண்டு பேரும் உன்னய வச்சு ஓட்டுறாய்ங்களோ...?" என்று கேட்டவனைப் பார்த்துக் கலை கொஞ்சம் தைரியம் வரப் பெற்றவளாய் நிற்க...

அழகு அசடு வழிய... உமாவோ அவனை எந்தவித உணர்வும் இல்லாமல் பார்த்தாள்.

நேற்றையப் பாதிப்பு இன்னமும் இருந்தது அவளது மனதுக்குள்.

"அப்படி ஏதாச்சும் இருந்தா என்கிட்ட சொல்லு. நான் பார்த்துக்கிடதேன்..." உமாவை நன்கு பார்த்தபடி அவன் சொல்ல...

"பார்த்துட்டாலும்..." உதட்டைச் சுளித்தாள் உமா.

அவளின் செயலில் உதய்யின் பார்வை மாற, அதைக் கண்டு அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

"அதெல்லாம் இல்லண்ணே..." அவசரமாய் மறுத்த கலை, அவனின் நலம் விசாரித்து விட்டு அங்கிருந்து அவசரமாய் நகர்ந்தாள்.

செல்லும் அவளைப் பார்த்தவாறு நின்றிருந்த அழகின் முதுகில் ஓங்கி அடித்த உதய்,

"என்னடா, பொட்டப்புள்ளகள வெறிச்சு வெறிச்சுப் பார்த்துக்கிட்டு..."

"ஏன்... நீங்க மட்டும் பொட்டப்புள்ளகள பார்க்காத வராக்கும்... நீங்க பார்க்கலாம். நான் பார்க்கக் கூடாதா...?" அழகு முறுக்கிக் கொள்ள...

"டேய், அவ என் தங்கச்சிடா..."

"உக்கும்... தங்கச்சியைக் கட்டிக் கொடுக்காம வீட்டோடத்தேன் வச்சிக்கப் போறீங்களாக்கும்..." என்று அழகு நொடித்துக் கொள்ள...

"ஓகோ! கதை அப்படிப் போகுதா...?"

"ஆமா. அப்படித்தே போகுது... அதுக்கு என்னங் கிறேன்... நீங்க மட்டும் டாக்டரு பொண்ணைக் கட்டலாம். நான் கட்டக் கூடாதா..."

"அழகு, அவரு என்ன சொல்றது... நான் உனக்கு எப்பவுமே சப்போர்ட்டா இருப்பேன்..." உதய்யை எதிர்க்க வேண்டும் என்று உமா அப்படிச் சொல்ல...

அவளையே வைத்த கண் வாங்காமல் பார்த்த உதய், "மேலிடமே உனக்குச் சப்போர்ட் பண்ணுது... இதுல நான் என்னத்த சொல்றது...?" சரணடையப் போகிறவன்

போல் கைகள் இரண்டையும் அவன் மேலே தூக்க... உமா அவனை இமைக்காமல் பார்த்தாள்.

உதய்யும் அவளின் பார்வையைச் சளைக்காமல் எதிர்கொண்டான்.

"மச்சான், நான் இங்கே தான் இருக்கேன்..." அழகு தன் தொண்டையைக் கனைக்க... அதில் தன் பார்வையை மாற்றியவன்,

"போடா. எதையாவது சொல்லிக்கிட்டு..." என்று அழகின் முதுகில் கையை வைத்துத் தள்ளிக் கொண்டு வெளியில் சென்றான் உதய். போகும் கணவனின் முதுகை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள் உமா.

இரு ஜோடிகள் மட்டும் விழுப்புரத்திற்குக் கிளம்பிச் சென்றனர்.

சங்கீதாவைக் கொண்டு விடத் தாங்கள் வருவதாக உதயின் பெற்றோர் கூற, ஹரி அதை மறுத்து விட்டான். இப்போது இருக்கும் நிலைமையில் அவர்களை அங்கே வரவேண்டாம் என்று சொன்னவன்... நிலைமை சீரானவுடன் அங்கு வருமாறு அழைப்பு விடுக்க, அதை அரைமனதாய் அவர்கள் ஏற்றுக் கொண்டனர்.

மகளுக்குப் பிறந்தவீட்டுச் சீரை வண்டி வண்டி யாய்க் கொண்டு போய் இறக்க முடியவில்லையே என்ற ஆதங்கம் அவர்களுக்கு...

உமாவின் அன்னை தனலெஷ்மி வீட்டிற்கு வந்த இரு ஜோடிகளையும் ஆரத்தி கரைத்து இன்முகத்துடன் வரவேற்றார்.

அனைவரும் சிரித்தபடி உள்ளே செல்ல... உமா மட்டும் கடுப்புடன் பின் தங்கினாள்.

"அம்மா... நீங்க பண்றது கொஞ்சம் கூடச் சரியில்லை... அவனுக்கு எல்லாம் ஆரத்தி ஒரு கேடு..."

முகம் கடுகடுத்தவளை மாறாத புன்னகையுடன் பார்த்த தனலெஷ்மி, "உமா... இப்படி எல்லாம் பேசக் கூடாது... என்ன இருந்தாலும் ஹரி உன்னோட அண்ணன்..."

"என்னது...?" அதிர்ச்சியை அப்பட்டமாய் முகத்தில் காட்டியவள், "அவன் எனக்கு அண்ணன்... அவளோட பையன் எனக்கு அண்ணன்... உம் புருசனோட கீப்போட பையன் எனக்கு அண்ணன்..." எரிமலையாய்க் குமுறினாள் உமா.

"உமா..." கண்டிப்புடன் கூறியவர், "நீ என்ன வேணும்னாலும் சொல்லிக்கோ... அது எனக்குக் கவலை இல்லை... ஹரி அவரோட பையன்... அப்போ எனக்கும் அவன் பையன்தான்... அவன் பிறந்ததில் இருந்து அவனை என் மகனாத் தான் நான் நினைக்கிறேன்... இப்போதான் நம்மளைப் புரிஞ்சிக்கிட்டு அவன் இங்கே வந்திருக்கான்... வீட்டுக்கு வந்திருக்கும் பிள்ளைக்கு வீணா மனவருத்தம் தந்து விடாதே... அவன் கிளம்புற வரைக்கும் நீ எதுவும் பேசக் கூடாது..."

"அம்மா..." ஏதோ சொல்ல வந்தவளை...

"ஷ்..: பேசக் கூடாது... மாப்பிள்ளைக்கு என்ன வேணும்னு போய்க் கேளு..." என்ற அன்னையைக்

கண்டு ஆத்திரம் வந்தாலும், அதை அடக்கிக் கொண்டு உதய்யைத் தேடிச் சென்றாள்.

ஹரி, சங்கீதா அன்று முழுவதும் அங்கே இருக்கும் வரை மூஞ்சியைத் தூக்கி வைத்துக் கொண்டு அலைந் தாள் உமா. சங்கீதாவுக்கு அது ஏன் என்று புரியவில்லை. அதை அவள் புரிந்து கொள்ளவும் முயற்சிக்கவில்லை... ஹரியுடனான தன் வாழ்வு இனி எப்படி இருக்குமோ என்ற பயமே அவள் மனதை வாட்டியது.

ஹரி கிளம்பும் போது உமாவிடம் வந்தான். அவன் வரவை உணர்ந்தாலும் அவள் கண்டு கொள்ளாமல் நிற்க...

உதய் சங்கடத்துடன் ஹரியைப் பார்த்துச் சிரித்தவன் உமாவிடம், "உமா... என்ன இது... மரியாதை இல்லாம... அவர் எங்க வீட்டு மாப்பிள்ள... அதுக்காகவாவது நீ அவருக்கு மரியாதை கொடுக்கணும்..." அவன் கொஞ்சம் கடுமையைக் குரலில் கூட்ட...

உமா பதில் சொல்வதற்கு முன் குறுக்கிட்ட ஹரி, "மச்சான்! உங்க வீட்டுக்கு வேணா நான் மாப்பிள்ளையா இருக்கலாம்... ஆனா, நான் உமாவுக்கு அண்ணன்... என் மேல் கோபப்பட அவளுக்கு முழு உரிமை இருக்கு..." என்றவனை முறைத்த உமா,

"பெரிய அண்ணன்.... என் வாழ்க்கையைக் கெடுக்க வந்த எமன் நீ..." எரிச்சலுடன் அவள் கூறிய போதும்... ஹரி அமைதி காத்தான்.

"சாரி உமா... நான் பண்ணியது தப்புதான்..." என்றவன், "உமா! உங்க தாத்தா சொத்தை நான்

அனுபவிச்சிட்டு இருக்கிறதா நீ சொன்னது என் மனசை ரொம்பக் காயப்படுத்திருச்சு... அதைப் பத்தி உன் கிட்ட பேசத்தான் நான் வந்தது... நான் வளர்ந்தது, படிச்சது வேணும்னா உங்க தாத்தா சொத்தா இருக்கலாம்... ஆனா, நான் இப்போ வச்சிருக்கிற தொழில், வருமானம் எல்லாம் என் சுய முயற்சியில் உண்டானது.

"உனக்கே தெரியும், அப்பாவோட நடவடிக்கைகள் நேர்வழி கிடையாதுன்னு... அதனால்தான் நான் அவரோட முயற்சியில் முன்னேற எப்போதுமே விரும்பியது இல்லை. இந்தத் தொழில் கூட சபரீஷும் நானும் பேங்கல லோன் வாங்கித்தான் ஆரம்பிச்சது... இது என்னோட சுய சம்பாத்தியம். யாருடைய தயவிலும் நான் முன்னேறல..."

ஆணான அவனுக்கு அன்று உமா பேசிய பேச்சு அவனை மனதளவில் மிகுந்த காயப்படுத்தி இருந்தது. அவனின் தன்மானத்தை அது வெகுவாய்ச் சீண்டி யிருந்தது. அதன் எதிரொலிதான் இந்த விளக்கம்...

ஹரியின் பேச்சு ஒவ்வொருவரின் மனதையும் ஒவ்வொரு விதத்தில் தாக்கியது. அவனின் பேச்சு தனலெஷ்மியை மிகவும் நெகிழ்த்தி இருந்தது. 'இந்தக் காலத்தில் இப்படி ஒரு பிள்ளையா...?' என்று பிரமிப்பாய்ப் பார்த்தார் அவர்,

உதய்யுமே ஹரியை ஆச்சரியமாய்ப் பார்த்தான்.

உமாவோ அவனை யோசனையாய்ப் பார்த்தாலும் தந்தையின் உதவி இல்லாமல் தன் சொந்தக் காலில் நின்ற அவன் மேல் அவளுக்கு மதிப்பு வரத்தான்

செய்தது. அதிலும் தந்தையைப் பற்றி அவன் நன்கு புரிந்து வைத்திருந்ததை உணர்ந்தவள்... எதிரிக்கு எதிரி நண்பன் என்ற எண்ணத்தில் அவனை அவளுக்குப் பிடிக்கத்தான் செய்தது.

சங்கீதாவோ அசையாமல் கண்ணிமைக்க மறந்து அவனைப் பார்த்தாள். அவனைத் தான் தெரிந்து கொண்டது வேறு... ஆனால் கண் முன் நிற்கும் அவனின் பிம்பம் வேறு...!

அவளின் நிலையைக் கண்டு ஹரி அவளைப் பார்த்துக் கண் சிமிட்டிச் சிரித்தவன், "என்ன இந்தப் பார்வை...?" அவளுக்கு மட்டும் கேட்கும் வண்ணம் மெதுவாய்க் கூறியவன், "என்ன... உன் மச்சானை நம்ப முடியலையா...? இதுக்கே இப்படி நின்னா எப்படி... இந்த மச்சானைப் பத்தித் தெரிஞ்சுக்கிறதுக்கு இன்னும் நிறைய இருக்கு..."

அவன் என்ன அர்த்தத்தில் சொன்னானோ... அவள் என்ன அர்த்தத்தில் எடுத்துக் கொண்டாளோ... அவளது முகம் செம்மை அடைந்தது.

"ஹேய் பேபி... நான் கிரீனிசா எதுவும் பேசல.... நான் சொன்னதுக்கான அர்த்தமே வேற..." அவன் அப்படிப் பேசினாலும் அவனது பார்வை, 'அதையும் சேர்த்துத்தான் சொன்னேன்' என்கிற ரீதியில் அவளை மையலாய்ப் பார்த்தது. அதில் மேலும் சிவந்த அவளது முகத்தை அவன் மனதுக்குள் ரசித்துப் பார்த்தான்.

"மாப்புள்ள... நாங்களும் இங்கேதான் இருக்கோம்..." உதய் இடைப்புக...

"அப்படியா... என் கண்ணுக்கு என் பேபியைத் தவிர்த்து எதுவுமே தெரியலையே மச்சான்..." என்றான், வேண்டுமென்றே அருகில் இருந்த உதய்யைக் காணாது தேடியவாறு...!

அதைக் கண்டு எல்லோருக்கும் சிரிப்பு வந்தது உமாவைத் தவிர...

"உமா, நான் கொஞ்சம் அப்படி இப்படித்தான்..."

அவன் என்ன சொல்ல வருகிறான் என்பதை உணர்ந்த சங்கீதா, அவனின் கையைப் பிடித்துத் தடுத்தவள் தலையை மறுப்பாய் ஆட்டினாள். அவனின் பிற பெண்களுடனான பழக்கத்தை அவன் கடைப்பரப்ப அவளுக்கு விருப்பம் இல்லை... இது அவனுக்கும் அவளுக்கும் இடையே உள்ள அந்தரங்க விஷயம் அல்லவா...?

மனைவியின் செயலை வியப்பாய்ப் பார்த்தான் ஹரி... யாரிடத்திலும் தன்னை அவள் விட்டுக் கொடுக்க விரும்பவில்லை என்பதை நொடியில் புரிந்து கொண்டவன், தன் கையைப் பிடித்திருந்த அவளது விரலில் அழுத்தம் கொடுத்தான் காதலுடன்...!

"ஓ.கே. கீத்து பேபிக்குப் பிடிக்கலை... அதனால இந்த டாபிக் வேண்டாம்... உமா, நானும் கொஞ்சமே கொஞ்சம் நல்லவன்தான்... இவ்வளவு நாள் எப்படியோ... ஆனால், இனி வர்ற காலங்களில் உனக்கு ஒரு நல்ல அண்ணனாக நானிருப்பேன்..." ஹரியின் தணிவான பேச்சுக்கு உமா எதிர்த்து வாதாடா விட்டாலும் அமைதியாய் நின்றிருந்தாள்.

அந்தளவுக்கு அவள் மௌனமாய்த் தன் பேச்சைக் கேட்டதே அவனுக்குப் போதுமானதாய் இருந்தது.

தனலெஷ்மியிடம் திரும்பியவன், "இனிமேல் உங்களுக்கு ஒரு நல்ல மகனா இருப்பேன்..." என்று நிறுத்தியவன், "உமா இல்லாம நீங்க தனியாத் தானே இருக்கணும்... பேசாம எங்களோடவே வந்திடுங்களேன்..." என்றான் திடுமென!

அவன் பேசியதைக் கேட்டு உமா அதிர்ச்சியாகப் பார்த்தாள் இருவரையும்.

தனலெஷ்மி அவனின் கையைப் பரிவுடன் பற்றியவர், "நீ கேட்டது ரொம்பச் சந்தோஷம் ஹரி... ஆனா, அவர் வந்து போய் இருக்கிறதுக்கு நான் இங்கே இருந்தாத்தான் சரியா வரும்... நீ உன் மனைவியோடு சந்தோஷமா இருப்பா..." மனதில் கணவனை நினைத்துக் கொண்டு கூறினார்.

உமா தன் அம்மாவை முறைத்தாள்... அன்னை யின் பதி பக்தியைக் கண்டு அவளுக்கு வெறுப்பாய் இருந்தது.

"சரிம்மா... உங்களுக்கு எப்போ தோணுதோ அப்போ வாங்க..." என்ற ஹரி எல்லோரிடமும் விடை பெற...

சங்கீதா உதய்யைக் கண்டு அழ ஆரம்பிக்க...

உதய் மனம் தாங்காமல், "மாப்பிள்ள... நாங்க வேணும்னா உங்க கூட வந்து சங்கீயை விட்டுட்டு வரட்டுமா...?"

"மச்சான்... என்ன இது! அவள் என்ன சின்னக் குழந்தையா...? நான் இருக்கேன். நான் பார்த்துக்கிறேன். உங்க கிட்ட சொல்றதுக்கு என்ன மச்சான்... ஊருக்கு எல்லாம் வீடு கட்டித் தர்ற நான்... இதுவரை எனக்குன்னு ஒரு வீடு கட்டியது இல்லை... ஏனோ அது தோணவும் இல்லை... இப்போ புதுசா முடிஞ்சிருக்கிற ப்ராஜெக்ட்ல தான் எங்களுக்குன்னு ஒரு வீடு ஒதுக்கி இருக்கேன். இன்னும் அதில் சில வேலைகள் இருக்கு... முடிச்சதுக்கு அப்புறம் எல்லோரையும் கூப்பிட்டு விருந்து வைக்கிறேன்... அதுவரைக்கும்..." என்றவன் நிறுத்த,

ஹரியின் மனநிலை உதய்க்குப் புரிவதாய்... "நீங்க சொன்னா சரிதேன் மாப்பிள்ள..." என்றவன் தங்கையைச் சமாதானப்படுத்தி அவளைக் கணவனுடன் அனுப்பி வைத்தான்.

அவர்கள் சென்றதும் தனலெஷ்மி உள்ளே செல்ல... வாசலில் தனித்து நின்ற உமா உதய்யைப் பிடிபிடி என்று பிடித்துக் கொண்டாள்.

"இன்னொரு தடவை உன் தங்கச்சிக்காக என்னைய விட்டுட்டு அவள் கூடப் போய்ப் பாரு... போற உன் காலை வெட்டிடுறேன் வெட்டி..." தன் வீட்டிற்கு விருந்துக்கு வந்திருக்கும் இந்தச் சமயத்திலும் அவன் தன் தங்கைக்காக யோசித்துப் பேசியது அவளின் மனதைக் கொதிக்கச் செய்தது.

அவளின் படபடப்பில் ஒரு நொடி அவள் முகத்தை ஆழ்ந்து பார்த்தவன், "எதையும் அரைகுறையா கேட்டுட்டுப் பேசக் கூடாது... நான் வரவா-னு நான் சொல்லல...

நாங்க வரவா-னுதான் சொன்னேன்... அந்த நாங்க நானும், நீயும்தேன்... இவ்வளவு நாளு உன்னய நான் பிரிச்சுப் பார்த்தது போதும்... இனிமே கொண்டு உன்னய பேச்சில கூடப் பிரிச்சுப் பார்க்க நான் விரும்பல..." என்றவன் அவளின் பதிலை எதிர்பாராமல் உள்ளே செல்ல... அவனது வார்த்தைகள் இனிமையாய் அவள் மனதில் இறங்கியது.

சென்னை சென்ற ஹரி சபரீஷின் தந்தை யினுடைய விருந்தினர் இல்லத்தில் சங்கீதாவுடன் தங்கி னான். அவனது வீட்டில் இருந்த அவனது உடைமைகளை ஆட்களை அனுப்பி எடுக்கச் சொன்ன போது அபிநயா ஆத்திரத்தின் உச்சிக்கே சென்றுவிட்டார். அவனது உடைமைகளுடன் அவரும் சேர்ந்து அவனைச் சந்திக்க வந்துவிட்டார்,

"ஹரி, நீ பண்றது கொஞ்சமும் நல்லா இல்லை..." எடுத்த எடுப்பிலேயே கோபமாய்ப் பேசியவரைக் கண்டு,

"நீங்க பண்ணுனது மட்டும் நல்லா இருந்ததா...?" எதிர்க் கேள்வி கேட்டான் மகன்.

"இங்கே பாருடா... இவளைக் கல்யாணம் பண்ணிக்கப் போய்த்தான் நீ இப்படி எல்லாம் பேசற... எதுக்கு நீ இவகிட்ட நல்லவன் வேஷம் போடணும்...? அப்படி இவகிட்ட என்ன இருக்குன்னு வாழ்க்கைப் பிச்சை கேட்டு இவகிட்ட தொங்கிட்டு இருக்க...? இவள விட்டுட்டு வா... நான் உனக்கு நல்ல பொண்ணாப் பார்த்துக் கல்யாணம் பண்ணி வைக்கிறேன்...

"இவ்வளவு ஏன்... நம்ம பூஜா இருக்கவே இருக்கா. அவளை உனக்குக் கல்யாணம் பண்ணி வைக்கிறேன்... நீரடிச்சு நீர் விலகுமா ஹரி... என்ன இருந்தாலும் நான் உன் அம்மாடா... பத்து மாசம் சுமந்து பெத்த தாயை ஒரு நொடியில் தூக்கி எறிய உன்னால் எப்படி முடிஞ்சது...?" உருக்கமாய்க் கேட்ட அன்னையை உறுத்து விழித்தவன்,

"அம்மா, வார்த்தையை அளந்து பேசுங்க... நான் எதுக்குக் கீத்துகிட்ட நடிக்கணும்...? என்னைய பத்தி அவளுக்கு எல்லாம் தெரியும்... தெரிஞ்சுதான் அவ என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா... யாருக்காகவும் எதுக்காகவும் அவளை நான் விட்டுத் தரமாட்டேன்... என் உயிர் இருக்கிறவரை அவள் என் கூடத்தான் இருப்பா...

"அப்படியே என் உயிர் போனாலும் அவள் உயிரையும் எடுத்துக்கிட்டுத்தான் நான் போவேன்... அவளை நான் தனியாத் தவிக்க விட்டுப் போக மாட்டேன்... எங்க காதலையும் உங்க குடும்ப விஷயத்தையும் ஒண்ணாக் கலக்காதீங்க..." என்றவனைப் பார்த்த சங்கீதாவின் மனதில் கல்லறையில் புதைக்கப்பட்ட அவளது காதல் மெல்ல உயிர்ப்பித்தது.

'இன்னுமொரு முறை வைத்துக் கொள்ளலாமா...?' என்று உடல் இச்சையில் கேட்ட ஹரியா இது... என்று அவளுக்குப் பிரமிப்பாய் இருந்தது. திருமணம் செய்து கொள்ள மாட்டேன் என்று பிடிவாதமாய்ச் சொன்ன ஹரியா... இன்று தான் இறந்தாலும் அவளைக் கொன்று தன்னுடன் எடுத்துச் செல்வேன் என்று கூறுவது...

அவளால் தன் காதுகளை நம்ப முடியவில்லை... போதும், இது போதும். இந்த வார்தைகளில் அவள் அவனோடு ஜென்ம ஜென்மமாய் வாழ்ந்து விட்டாள்.

"அம்மா, நான் திடீர்னு நல்லவன் வேஷம் போடல... என்னைய பத்தி மத்தவங்க எல்லோரையும் விட உங்களுக்கு நல்லாவே தெரியும்... நான் நல்லவனா... கெட்டவனான்னு நீங்களே சொல்லுங்க, பார்ப்போம்..."

அவனின் இந்தச் சவாலான கேள்விக்கு விடை அபிநயாவிடத்தில் இல்லை.

"அன்னைக்கு நான் சொன்ன வார்த்தைகள் இன்னைக்கும் அப்படியேதான் இருக்கு... இப்பக் கூட ஒண்ணும் கெட்டுப் போயிடல... அவரை விட்டுட்டு நீங்க என் கூட வாங்க... உங்களை நான் நல்லாப் பார்த்துக் கிறேன்... அன்னைக்குச் சின்ன வயசிலேயே படிக்கிறப் பவே அவ்வளவு தைரியமா உங்களை என்னோடு கூப்பிட் டவன் நான்... இன்னைக்கு நான் ஒரு தொழிலதிபர்... கை நிறையச் சம்பாதிப்பவன்... உங்களை இன்னும் நல்லா வச்சுக்க முடியும்...

"இனிமேலும் அடுத்தவங்க வாழ்க்கையில் நாம ஊடால புகுந்து இடைஞ்சல் பண்ண வேண்டாம்... இது பெரியம்மாவோட வாழ்க்கை... அவங்களை அவங்க வாழ்க்கையை வாழ விடுங்க..." என்றவனைக் கண்டு கோபம் எழ, அபிநயா வெடித்தார்...

"என்னடா, பெரிய இவன் மாதிரிப் பேசுற... இது அவ வாழ்க்கையா... அப்போ என் வாழ்க்கை... நான் எதுக்கு

யாரோ ஒருத்திக்காக என் வாழ்க்கையை அழிக்கணும்... ஓங்கப்பாவாத்தான் என் வாழ்க்கையில் நுழைஞ்சார்... நான் இல்லை... இப்போ அவருக்கு ஒரு மனைவி இருக்கு... போன்னு சொன்னா நான் போகணுமா...? போக மாட்டேன்டா... அவரை விட்டுப் போக மாட்டேன்டா... அவரு எனக்குத்தான் சொந்தம்... எனக்கு மட்டும்தான் சொந்தம்... வேற யாருக்கும் விட்டுக் கொடுக்க மாட்டேன்...

"எனக்கு நீ வேண்டாம்... அன்னைக்கு அவரு வேணும்ங்கிறதால தான் உன்கிட்ட பொய் சொன்னேன்... இன்னைக்கும் அவர் வேணும்னா உன்னை விட்டுப் போறதுக்குக் கூட நான் தயங்க மாட்டேன்... என்னைப் பொறுத்தவரையில என் பிள்ளை செத்துப் போயிட்டான்... எனக்கு இருக்கிற ஒரே உறவு அவர் மட்டும்தான்..."

மகனிடம் படபடவெனப் பொரிந்தவர் அடுத்த கணம் திரும்பியும் பார்க்காமல் வெளியேறினார்.

இரு மனைவிகளுமே மகாதேவனின் தவறை மன்னித்து அவருடன் வாழவே எண்ணினர். அந்தளவுக்கு அவர் மேல் அன்பு கொண்டிருந்தனர்... இதில் யார் முதல் மனைவி, இரண்டாவது மனைவி என்ற பேதம் அங்கே எழவில்லை... இருவரின் அன்பும் தூய்மையானது. அதுதான் இங்கு உண்மை...

ஆனால் மகாதேவன் அவர்கள் இருவரின் மீதும் இந்தளவுக்கு அன்பு வைத்திருக்கிறாரா என்றால் அது கேள்விக்குறிதான்... அந்தக் கேள்விக்குறியையும் முற்றுப் புள்ளியாக்க வருங்காலத்தில் இரு சம்பவங்கள் நடக்க

விருக்கிறது... அப்போது தனலெஷ்மி, அபிநயா இருவ ருக்கும் புரியும்... தங்களது கணவனின் இன்னொரு முகம்.

அபிநயா சென்றதும் ஹரி அப்படியே சோர்வுடன் சோபாவில் அமர்ந்து விட்டான். அவனின் நிலை கண்டு அவனருகில் வந்தமர்ந்த சங்கீதா அவனின் கையை ஆறுதலாய்ப் பற்ற, அதில் வியப்படைந்த ஹரி அவளை ஆச்சரியமாய்ப் பார்த்தான்.

"கீத்து பேபி..." மெதுவாய் அவன் முணுமுணுக்க... கண்களில் கண்ணீர் மல்க அவள் தலையை ஆட்டினாள்.

"என் மேலுள்ள கோபம் போயிருச்சா..." அவன் கேட்டதற்கு... அதற்கும் அவள் தலையாட்ட...

"உன் வாழ்க்கையைக் கெடுத்தவன், உன் அண்ணன் வாழ்க்கையைக் கெடுத்தவன்... இதுக்கும் மேல பல பெண்களுடன் பழகியவன்..." அவன் மேலே பேசும் முன் அவன் வாயைத் தன் கையால் மூடியவள்.

"யாருதான் தப்பு செய்யல... தப்பை உணர்ந்து மன்னிப்புக் கேட்க பெரிய மனசு வேணும்... அது உங்களுக்கு இருக்கு... உங்க அப்பா, அம்மா செஞ்ச தப்பைத் தப்புன்னு சொல்ற நீங்க... நிச்சயம் தப்பான ஆளா இருக்க மாட்டீங்க... உங்களை நான் நம்புறேன்... சாகுறவரைக்கும் என்னைய கைவிட மாட்டேன்னு நீங்க சொன்னதைக் கேட்ட பொறவு எனக்கு வேற என்ன வேணும்... இப்ப என் உசிரு போனாக் கூடச் சந்தோஷ மாகச் செத்துப் போவேன்..." என்றவள் வாயைத் தனது கையால் மூடுவது அவனது முறையாயிற்று.

"என்னைய விட்டுட்டுப் போக உன்னைய நான் அப்படியே விட்டுருவேன்னு நினைச்சியா... எமன் கிட்ட இருந்து கணவன் உயிரை மீட்டது சாவித்திரி மட்டும் இல்லை... அந்த எமன்கிட்ட இருந்து மனைவி உயிரை மீட்டான் இந்த ஹரின்னு சரித்திரம் பேசும்... சாகிறதுக்கா நான் உன்னைக் கல்யாணம் பண்ணினேன்... உன் கூட நூறு வயசு வாழ்றதுக்குக் கல்யாணம் பண்ணியிருக்கேன் பேபி..." என்றான் காதலாக!

சங்கீதா மனநிறைவுடன் அவன் நெஞ்சில் சாய, அவனும் அவளை இழுத்து அணைத்துக் கொண்டான். அன்று அவளின் உடலின் மென்மையைக் காண அவன் காட்டிய அவசரம் இன்று அவனிடத்தில் இல்லை.

இன்று அவளின் உடல் தேவையை விட மனத் தேவையே அவனுக்கு அதிகமாய்த் தேவைப்பட்டது. அவனின் அன்னையின் பேச்சால் எழுந்த வருத்தம் கூட சங்கீதாவின் அருகாமையில் பின்னுக்குத் தள்ளப்பட்டு விட்டது.

"உங்களைக் கிளம்பச் சொன்னாப் படுத்துட்டு என்ன பண்ணிட்டு இருக்கீங்க...?" கட்டிலில் சுகமாய்த் தலையைச் சாய்த்திருந்த உதயை நோக்கி உமா கத்தத் துவங்க...

கண் திறந்து அவளைப் பார்த்தவன், "பேபி..." என்றான் மெதுவாய்.

"என்னாது...?" புரையேறியது அவளுக்கு.

"உமா, பாத்து... பாத்து..." வேகமாய் எழுந்து அவளின் தலையைத் தட்டியவன் அருகில் இருந்த தண்ணீரை எடுத்து அவள் பருக நீட்டினான்.

அதை வாங்கிப் பருகியவள். "இது என்ன லூசுத் தனமா உளறிக்கிட்டு...?" அவள் முறைக்க...

"இல்ல... மச்சான் சங்கீயைக் கீத்து... பேபின்னு கூப்பிட்டாருல்ல... அதே மாதிரி நானும் உன்னய கூப்பிடலாமேன்னு..." அவன் இழுக்க...

"அவனே ஒரு லூசு... அவன் சொன்னதைக் காப்பி அடிக்கிற உங்கள..." அவனைத் தாக்குவதற்குத் தோதாக அருகில் கிடந்த தலையணையை அவள் கையில் எடுக்க...

"அயயோ வேணாம் உம்மா..." என்று அலறியபடி அறையின் மறுபக்கம் அவன் ஓட... அவனது அந்த அழைப்பில் அவள் அப்படியே நின்றாள்.

"உம்மா... எனக்கு ஒரு உம்மா கொடுடி..." காதலிக்கும் காலத்தில் அவளிடம் கெஞ்சிக் கேட்கும் உதய் அவள் கண் முன் வந்து போனான்.

அவள் அசையாமல் நின்றதைப் பார்த்து அவள் அருகில் வந்தவன், "என்ன உம்மா...?" அவள் தோளைப் பற்றிக் குலுக்க...

அதில் அவனை நிமிர்ந்து பார்த்தவள் அந்த உதய்க்கும் இந்த உதய்க்கும் இருந்த வித்தியாசத்தை வேகமாய்க் கணக்கிட ஆரம்பித்தாள்.

தோற்றத்தில் எந்தவித மாற்றமும் இல்லாமல் இருந்தாலும், அவன் மனதளவில் பெருத்த மாற்றத்தை உள்ளடக்கியவனாய் அவளுக்குத் தோன்ற முகம் வருத்தத்தில் சுருங்கிப் போனது,

"உம்மா..." அழுத்தமாய்க் கூப்பிட்டவன், அவள் முகத்தை இரு கரம் கொண்டு தாங்க... அவள் இமைக் காமல் அவனைப் பார்க்க... என்றும் போல் அவளது பார்வை அவனைச் செயலிழக்க வைக்க அவளின் பார்வையில் ஐஸ் கிரீமாய் உருகினான் அவன்.

"என்னடி இந்தப் பார்வை பார்க்கிற...?" அவனின் குரலும் சேர்ந்து உருகியது.

"அது ஏன்னு உனக்குத் தெரியாதா...?" என்பது போல் அவள் பார்த்தாள்.

"என்ன சொல்ல வர்றே...?" என்று யோசித்தவன், நடந்ததை நினைத்துப் பார்த்தவன் முகம் பளிச்சிட்டது.

"உம்மா... எனக்கு ஒரு உம்மா கொடுடி..." குறும்பு கூத்தாட, அவன் தன் இதழைக் காட்ட... அவள் எந்தவித உணர்ச்சியும் இல்லாமல் பார்த்தாள்.

"அதெல்லாம் கல்யாணத்துக்கு அப்புறம் தான் முச்சான்..." வெட்கம் மேலிட முணுமுணுக்கும் உமா எங்கே போனாள் என்றிருந்தது அவனுக்கு.

அவளின் உணர்வற்றத் தன்மை அவன் மனதைப் பாதித்தாலும் அவளை அப்படியே விட்டு விட அவனுக்கு மனம் வரவில்லை.

"நீ கொடுக்கலைன்னா என்ன? நான் கொடுக் கிறேன்," என்றபடி அவள் இதழை நோக்கி அவன் குனிய... அவன் கையைப் பட்டென்று தட்டி விட்டவள் அவனிட மிருந்து விலக...

"எங்கேடி போற...?" என்றபடி அவன் அவளை நோக்கி வர... அவள் அச்சத்துடன் பின்னே சென்றாள்.

எவ்வளவு தூரம் செல்ல முடியும்...? அறையின் சுவர் அவளைத் தடுக்க, அப்படியே நின்றவள் முகம் அச்சத்தில் வெளிறியது.

இப்போது அவள் இருக்கும் மனநிலையில் அவன் தொட்டால்... அவன் வசம் தன்னை முழுதாய்க் கொடுத்து விடுவாள்தான்... ஆனால் அதற்கும் மேலே ஏதோ ஒன்றை அவள் மனம் அவனிடத்தில் யாசித்தது.

வெகு அருகில் வந்து நின்றவன் அவளின் இரு புறமும் கைகளை ஊன்றி அவள் முகத்தை ஆழ்ந்து பார்த்துக் கொண்டே குனிய, அவள் அச்சத்தையும் தாண்டிய ஏதோ ஒரு மயக்க நிலையில் கண்களை இறுக மூடினாள்.

உதடுகள் துடிக்க, முகம் சிவக்க நின்றிருந்தவளின் தோற்றம் அவனுக்கு அழைப்பை விடுத்தாலும் அவளின் மனதைப் படித்தவனாய்ச் சிரித்தபடி அவளை விட்டு விலகினான்.

வெகு நேரம் சென்றும், அவன் முத்தமிடாததால் மெதுவே கண் விழித்தவள்... தன் முன்னே இரு கைகளையும் கட்டிக் கொண்டு அந்த மாயக் கண்ணனின் குறும்புப் புன்னகையோடு தன்னைப் பார்த்துக் கொண்டிருந்த கணவனைக் கண்டதும் நாணம் மேலிட, மீண்டும் தன் கண்களை மூடிக் கொண்டாள்.

"எங்கேயோ போகணும்னு சொன்னியே... போகலாமா...?" அவன் கேட்டதும்தான் அவளின் எண்ண மாய

வலைகள் அறுந்து விழ, அவளது மேனி நாணேற்றிய வில்லைப் போல் விறைத்தது.

"போகலாம்..." என்றவளின் முக மாற்றத்தை வியப்புடன் பார்த்த உதய் ஒன்றும் பேசாது அவளைப் பின் தொடர்ந்தான்.

அவள் அழைத்துச் சென்ற இடம் அவளது பெயரில் இருக்கும் தொழிற்சாலைகளுக்குத்தான். முதலில் சென்றது மீனம் கொழிக்கும் கிரானைட் தொழிற்சாலைக்குத்தான்... அங்கு நுழைந்து பார்வையிட்ட உமாவைக் கண்டதும் உதய்க்கு இன்னமும் வியப்பாய் இருந்தது.

ஒருவித மிடுக்குடன் கம்பீரமாய் இருந்தவளின் தோற்றம் அவனுக்குமே புதிதாய் இருந்தது.

எல்லாவற்றையும் அவள் அவனுக்குச் சுற்றிக் காட்ட... அவனோ, "இதெல்லாம் உன்னது... இது பத்தி என்கிட்ட சொல்ற உமா...?" என்றவனைப் பார்த்த உமாவின் பார்வையில் அந்த அர்த்தம் புரியாத பாவனை இருந்தது.

'ஆன்னா... ஊன்னா இப்படி ஒரு பார்வை பாக்க ஆரம்பிச்சிருவா... இதுக்கு அர்த்தம் தெரியாம நான்தேன் என் மண்டையப் போட்டு உடைச்சுக்கணும். என் தலையை உடைக்குறதுலேயே குறியா இருக்காய்யா இவ...' மனைவியை நினைத்து உள்ளுக்குள் புலம்பினாலும் வெளியில் ஒன்றும் பேசாது சிரித்து வைத்தான்.

அலுவலக அறைக்கு வந்ததும், உமா அவனிடத்தில் வந்து, "உதய், மேனேஜர் கிட்ட அக்கவுண்ட்ஸ் ஃபைல் எல்லாம் கேட்டு வாங்கிட்டு வாங்களேன்..." என்றாள்.

"நானா... நான் எதுக்கு...?" அவனுக்குக் கேள்வி தலையைக் குடைந்தது.

"எனக்காக ப்ளீஸ்..." கெஞ்சுதலாய்க் கேட்டவளின் பேச்சை அவனால் தட்ட முடியவில்லை.

"சரி... சரி. நான் போய் வாங்கியாறேன்..."

அதில் அவள் முகம் மலர்ந்தது.

"ஆனா..." என்று நிறுத்தியவன், அவள் முகம் பார்க்க... அவள் கேள்வியாய் அவனைப் பார்த்தாள்...

"ஒரே ஒரு உம்மா கொடேன், உம்மா..." கண்களில் சிரிப்புடன் கெஞ்சுதலாய்க் கேட்டவனின் முகத்தை வெற்றுப் பார்வை பார்த்தவள், பின் கண்களை மூடித் தன்னை நிதானப்படுத்தி கொண்டு அவன் அருகில் வந்தவள் அவனின் கழுத்தை வளைத்து, அவனின் இதழில் தன் இதழைப் பதிக்கப் போகும் போது, அவனின் கை இரு உதட்டுக்கும் இடையில் எழுந்து தடுப்புச் சுவராய்த் தடுத்து நின்றது.

கேள்வியாய் அவனைப் பார்த்தவளின் பார்வையைச் சளைக்காமல் எதிர்கொண்டவன், "இந்த மாதிரி உணர்ச்சியே இல்லாம வேணாம்... மனசு நெறயக் காதல சுமந்துட்டு என் பக்கத்துல நீ வரணும்... அந்த நாளுக்காக நான் காத்துட்டு இருப்பேன்..." என்றவன்,

"என்னய வச்சு ஏதோ ப்ளான் பண்ற... அது என்னதான்னு எனக்கும் புரிய மாட்டேங்குது... ஆனா கூடிய சீக்கிரம் புரிஞ்சிக்குவேன்... இப்போ போய் ஃபைல் வாங்கிட்டு வாரேன்..." என்றவன் செல்ல,

அவனையே பார்த்துக் கொண்டிருந்தவளின் கண்கள் கலங்கி இருந்தன.

உமா சொன்னது போல் கணக்கு அடங்கிய கோப்பை அந்த மானேஜரிடம் உதய் கேட்க, "சார்! பர்மிஷன் இல்லாம யாருக்கும் எதுவும் கொடுக்க முடியாது..." என்று அலட்சியமாய் அவன் மறுக்க...

"உம் முதலாளியம்மா கேட்டா கொடுக்க மாட்டியா... அது யாரு அந்த சாரு...?" நக்கலாய் அவன் கேட்க,

"மினிஸ்டர் சார்..." அவன் பதிலளிக்க,

"ஓ... எம் மாமன்தானா அதுக்குக் காரணம்... நான் அவரோட மருமவன் சொல்றேன்... கணக்கைக் கையில எடு..."

"மகள் கேட்டாக் கூடக் கொடுக்கக் கூடாதுன்னு சொல்லியிருக்காரு.... இதுல மருமகன் கேட்டா நான் கொடுத்திருவேனா..." மகாதேவனின் ஆதரவு பெற்ற அந்த மானேஜர் திமிராய்ப் பேச...

"ஏன்டா, ஒரு தடவை சொன்னாக் கேட்க மாட்ட... உனக்கு எல்லாம் வாய் வார்த்த சரியா வராது... கை தான் பேசணும்..." என்றவன், வழக்கமான தன் கைவரிசையை அவனிடத்தில் காட்ட, அடுத்த ஐந்தாவது நிமிடம் உமாவின் மேஜை மீது அத்தனை கணக்கு வழக்கு அடங்கிய கோப்புகளும் அழகாய் அடுக்கி வைக்கப்பட்டன.

உமா உதய்யைப் பார்த்த பார்வையில் காதலையும் தாண்டிய வேறு ஒரு உணர்வு இருந்தது என்றால்... அந்த

மானேஜரை அவள் பார்த்த பார்வையில் வெற்றி பெற்ற மமதை இருந்தது...

அவளின் எதிரில் இருந்த இருவருக்கும் அவளின் பார்வைக்கான அர்த்தம் புரியவில்லை.

சென்னை விமான நிலையத்தில் இருந்து வெளியில் வந்த மகாதேவனின் அலைபேசி அலறியது. எடுத்துப் பார்த்தவர் கிரானைட் தொழிற்சாலையின் மானேஜர் என்று தெரிந்ததும் அதை உயிர்ப்பித்துக் காதில் வைத்தார்.

"சார்... உங்க மகளும், மருமகனும் இங்கே வந்திருந்தாங்க..." என்றவன் நடந்த சம்பவங்கள் அனைத்தையும் ஒன்று விடாமல் கூற, மகாதேவனின் இரத்த அழுத்தம் உச்சத்திற்கு எகிறியது .

"நான் கொடுக்கக் கூடாதுன்னு சொன்னதையும் மீறிக் கொடுத்திருக்க. உன்னை..." அவர் பல்லைக் கடிக்க...

"நீங்க கொடுத்தா திட்டுறீங்க... அவரு கொடுக்க லைன்னா அடிக்கிறாரு... நான் என்ன சார் செய்றது...?" என்றான் அவன் பரிதாபமாக.

அதிகார வர்க்கம் ஆட்டுவிப்பதில் இடையில் பாதிக்கப்படுவது தொழிலாளர் வர்க்கம்தானே... அதற்கு மேல் அவனைத் திட்டுவதற்கு முடியாமல் அலைபேசியை அணைத்தவர், தன் காரிலேறி அமர்ந்து விழுப்புரத்துக்குச் செல்லப் பணித்தார்.

சென்னையில் இருக்கும் அவரது அன்பு மனைவி அபிநயாவைக் கூடப் பார்க்கச் செல்லாமல் அவர் நேரே அங்கு சென்றார்.

இது அவருக்கும் உமாவுக்கும் இடையில் நடக்கும் கௌரவப் பனிப் போர்... யாருக்கும் தெரியாமல் ஒருவருக்கு ஒருவர் மறைந்திருந்து தாக்கும் கொரில்லா யுத்தம் போன்றது, அவர்களுக்கு இடையில் உள்ள யுத்தம்.

இதில் மகளை வீழ்த்தித் தான் வெல்ல வேண்டும் என்கிற வெறி அவர் மனதில் அடங்காமல் எரிந்து கொண்டிருந்தது. இன்று நேற்றல்ல, இது எரிவது... சுமார் பதிமூன்று வருடங்களாக எரிந்து கொண்டிருக்கும் பெருநெருப்பு. அது அவ்வளவு சீக்கிரத்தில் அடங்கி விடாது... அணைந்தும் விடாது...

பதிமூன்று வருடங்களுக்கு முன்னால் உமாவுக்குப் பத்து வயது இருக்குமா... அப்போதே அவரை எதிர்த்துப் பேசியவள் தானே... அன்று மட்டும் தான் சாமர்த்தியமாகச் சமயோஜிதப் புத்தியுடன் செயல்பட்டு இருக்கா விட்டால் இன்று அவரின் நிலைமை...?

அவரால் அதை நினைத்துக் கூடப் பார்க்க முடிய வில்லை. மூத்த மனைவி தனலெஷ்மி முட்டாளாக அமைந்ததால் அவரால் எல்லாவற்றையும் திறமையாகச் சமாளிக்க முடிந்தது. இரண்டாவது மனைவி அபியைப் போல் புத்திசாலியாக இருந்திருந்தால் அவரின் கதி அதோகதிதான்.

அவரது மனம் மகள், மனைவிகள் எனத் தாவிக் கடைசியாக மருமகனிடத்தில் வந்து நின்றது. ஹரி சொன்னதைக் கேட்டு உதய்யை உமாவுக்குத் திருமணம் செய்து வைத்தது தவறோ என்று இப்போது அவரால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

எல்லாம் அந்த முட்டாள் ஹரியால் வந்தது... அவனுக்காக நான் பார்த்துப் பார்த்து ஒவ்வொன்றையும் செய்து வரும் பட்சத்தில், இப்படி லூசுத்தனமா நடந்து கொண்டு இருக்கானே... அவங்களுக்குச் சப்போர்ட் பண்ணிட்டு என்னையும் அபியையும் பிரிந்து போய் விட்டானே... முட்டாளேதான்டா நீ... மனதில் நினைத்த வருக்கு ஆயாசமாக வந்தது.

அதே சமயம் ஹரியின் மீது கோபம் கோபமாய் வந்தது. முதலில் ஹரி உதய்யை உமாவுக்கு மாப்பிள்ளையாகப் பார்த்தபோது, சங்கீதாவைத் துருப்புச் சீட்டாக வைத்து, உதய்யைக் கொண்டு உமாவை அடக்கி விடலாம் என்று நினைத்துத்தான் அவர் இந்தத் திருமணத் திற்குச் சம்மதித்ததே...

ஆனால் எதிர்பாராமல் ஹரி மனம் மாறியதால், அவரால் உமாவின் கண்ணில் விரலை விட்டு ஆட்ட முடியாமல் போனது.

உதய் இப்படி ஒரு தைரியமான தெனாவெட்டான, அடாவடியான ஒருவனாக இருப்பான் என்று அவர் கனவிலும் நினைத்துப் பார்க்கவில்லை.

அவன் உமாவுக்குச் சார்ந்து பேசுவதும், அவளுக்கு அனுசரணையாக இருப்பதும் அவரால் சகித்துக் கொள்ள

முடியவில்லை. தான் பார்த்து அவளுக்குத் திருமணம் செய்து வைத்த ஒருவன் தனக்குச் சாதகமாக இல்லாமல் மகளுக்குச் சாதகமாகச் செயல்படுவது கண்டு அவருக்கு ஆத்திரம் ஆத்திரமாய் எழுந்தது.

வழி நெடுக யோசித்துக் கொண்டு வந்தவர், முடிவில் எதுக்கும் ஒரு விலை உண்டு என்பதை அறிந்தவராய் உதய்க்கான விலை என்ன என்பதைப் பற்றி யோசிக்க ஆரம்பித்தார்.

சாலையில் கவனம் வைத்துக் காரை ஓட்டிக் கொண்டிருந்தாலும் உமா ஓரக்கண் பார்வையால் உதய்யைப் பார்ப்பதை நிறுத்தவில்லை.

இருக்கையைச் சாய்த்துப் போட்டுக் கொண்டு இரு கைகளையும் தலைக்குக் கீழே கொடுத்துக் காரில் ஒலித்த பாடலை முணுமுணுத்தவாறு வந்தவனின் தோற்றம் அவளது மனதைக் கவர்ந்தது.

இன்று அவன் தனக்காகச் செய்த காரியம் அனைத் தும் அவளின் மனதை வருடுவதாய் இருந்தது.

அவளது எல்லாத் தொழில்களின் கணக்கு விவரங் கள் எல்லாம் இப்போது அவளது கையில். அதற்குக் காரணம் அவள் கணவன் என்றால் மிகையில்லை. யார் யாரிடம் எப்படிப் பேச வேண்டுமோ அது போல் பேசி அவர்களைக் கவனிக்கும் விதத்தில் கவனித்ததில் எல்லாம் சீராக நடந்து முடிந்தது.

என்னதான் மகாதேவன் தனக்கு வேண்டிய ஆட்களை ஒவ்வொரு தொழிலிலும் புகுத்தி இருந்தாலும் அவளது தாத்தாவுக்கு விசுவாசமானவர்கள் அங்கு

இருக்கத்தான் செய்தார்கள். அவர்கள் அனைவரும் அவளுடன் ஒத்துழைக்கத்தான் செய்தார்கள்.

தாத்தாவின் சொத்துகளை அந்தக் கயவனிடத்தில் இருந்து காப்பாற்றித் தனது வாரிசுகளிடம் சேர்ப்பிக்க வேண்டும்... அதுதான் அவளது இப்போதைய கடமை... அப்போதுதான் அவளின் தாத்தாவின் ஆத்மா சாந்தி யடையும்.

அவளின் நோக்கம் ஒவ்வொன்றாய் ஈடேறிக் கொண்டு இருப்பதற்குக் காரணம் அவளது கணவனான உதய் அல்லவா... நன்றியுடன் வருடியது அவளது விழிகள், அவனின் உருவத்தை...!

"தேங்க்ஸ் உதய்..." என்றாள் மனதார.

கண்களை மூடிப் பாடலை ரசித்துக் கேட்டுக் கொண்டிருந்தவன், அவளது வார்த்தையில் கண் விழித்து அவளைத் திரும்பிப் பார்த்தான், கண்களில் கேள்வி களுடன்.

அதைப் புரிந்தவளாய், "சும்மாச் சொல்லணும்னு தோணிச்சு. சொன்னேன்..." என்றவளைக் கண்டு, மீண்டும் அவன் கண்களை மூடிக் கொள்ள அவளுக்குப் பற்றி கொண்டு வந்தது.

"ஜடம்... ஜடம்..." மனதுக்குள் முணுமுணுத்தவள், தனது கோபத்தைக் காரிடம் காட்டினாள். தன் மன நிலையைக் குறித்து அவளுக்கே புரியாத புதிராக இருந்தது.

அவன் அருகில் வந்தால் தான் விலகிச் செல் கிறோம்... அவன் விலகிச் சென்றால் அவனின் அருகா

மையைத் தான் தேடுகிறோம். அது ஏன்...? அவள் உள்ளுக்குள் குழம்பித் தவித்தாள்.

காதலில் இதுவும் ஒரு வகை வியாதி என்பது அவளுக்கு தெரிந்து இருக்கவில்லை.

உதயோ பாடலை ரசிப்பது போல் கண்களை மூடி யிருந்தாலும், அவனது மனம் உமாவைப் பற்றித்தான் சிந்தித்துக் கொண்டிருந்தது. இன்று அவளுடன் ஒவ்வொரு டமாகச் சுற்றித் திரிந்ததில், அவளின் பொருளாதார நிலையைப் பற்றி ஓரளவுக்கு யூகித்து இருந்தான்.

இப்படிப்பட்ட வசதியுடையவள் தன்னைத் தேடி வந்து காதல் செய்யும் அளவிற்குத் தன்னிடத்தில் அப்படி என்ன உயர்வு இருக்கிறது என்பதுதான் அவனது எண்ண ஓட்டம்.

அதையே யோசித்துக் கொண்டு இருந்தவன் மூளை யில் ஒரு விஷயம் மின்னலென வந்து போனது. அது அவனின் தைரியம். அவளுக்கு மிகவும் பிடிக்கும் என்று, அன்று அவள் கூறியது அவனுக்கு ஞாபகம் வந்தது.

'ஏன் என் தைரியம் பிடித்திருப்பதாய்க் கூறினாள்? என் தைரியத்தை வைத்து என்ன செய்ய நினைக் கிறாள்?' என்ன யோசித்தும் அவனிடத்தில் விடை இல்லை. அவளிடத்தில் கேட்கலாம் என்றால் பதில் சொல் வாளா என்பது சந்தேகமே...!

இருவரும் வீட்டிற்குள் நுழையும்போது மகாதேவன் வரவேற்பறையில் அமர்ந்திருந்தார். உதய்யைப் பார்த்து வரவேற்கும் விதமாய்ச் சிரித்தவர், உமாவைக் கண்டு முறைக்கவும் தவறவில்லை. ஆனால் உதயோ அவரைக்

கண்டு புன்னகைக்காமல் யோசனையாய் அவரைப் பார்த்து கொண்டே அமர்ந்தான்.

"என்ன மாப்பிள்ளை... கம்பெனி கணக்கு வழக்கு எல்லாம் பார்த்து முடிச்சாச்சா...? இல்லை, இனிதான் பார்க்கணுமா?" மகளிடம் கேள்வி கேட்டால் பதில் கிடைக்காது என்று தெரிந்தவர் மருமகனிடம் தூண்டில் போட்டார்.

அவனோ கழுவுற மீனில் நழுவுற மீனாய் இருந்தான். "எனக்கும் இதுக்கும் சம்பந்தம் இல்லை... எல்லாம் உமா கிட்ட கேட்டுக்கோங்க மாமா..." என்று மனைவியைக் கை காட்டியவன் தனலெஷ்மியிடம், "அத்தை! பசிக்குது. சாப்பிடலாமா...?" என்று கேட்க...

"வாங்க மாப்பிள்ள..." என்றபடி தனம் உள்ளே செல்ல, அதைக் கண்டு பல்லைக் கடித்தார் மகாதேவன்.

"மருமகன் வந்ததும் கழுதைக்கு நம்மள எல்லாம் கண்ணுக்குத் தெரியல..." மனதுக்குள் முணுமுணுத்தார்.

அவரது மனதின் முணுமுணுப்பு உமாவை எட்டியதோ என்னவோ, இகழ்ச்சியுடன் அவரைப் பார்த்தவள்... தன் தாயைத் தேடிச் சென்றாள். இதை எல்லாம் மௌனமாய்ப் பார்த்துக் கொண்டிருந்த உதய்க்கு மொழி தெரியாத படம் பார்ப்பது போலிருந்தது.

"சாப்பிட வாங்க..." உமா அவளை அழைக்க... அவன் எழுந்து உள்ளே சென்றான்.

உணவு உண்டு முடித்துத் தங்கள் அறைக்குச் சென்றதும், உதய் நல்ல சுகமாய்த் தூக்கம் போட, உமாவுக்கோ

தந்தையை எப்படி எதிர்கொள்வது? தாயை எப்படி சமாளிப்பது என்று யோசித்துக் கொண்டிருந்தாள். மனதில் ஒரு முடிவு எடுத்தவளாய்த் தந்தையைக் காணச் சென்றாள்.

அவளின் வருகைக்காகக் காத்திருந்தார் போன்று அமர்ந்திருந்தார் மகாதேன். அருகில் தனலெஷ்மி கையைப் பிசைந்து கொண்டு செய்வதறியாது நின்றிருந்தார். அவரின் தோற்றமே உமாவிற்கு அங்கு நடந்ததைச் சொல்லாமல் சொல்லியது.

அவள் வருவதை உணர்ந்து தனலெஷ்மி அவளிடம் திரும்பியவர், "ஏன் உமா, இப்படிப் பண்ற...? கணக்கு எல்லாம் அப்பா பார்த்துகிடட்டும்னு சொன்னாக் கேட்க மாட்டேங்கிறியே...? அப்படி என்ன பிடிவாதம் உனக்கு? அங்கப்பா மாதிரி உனக்கும் பிடிவாதம் அதிகமாயிருச்சு... அவரு இவரை மதிக்காதது மாதிரி, நீயும் இவரை மதிக்க மாட்டேங்கிற... உங்க எல்லாருக்கும் இடையில் கிடந்து மாட்டிக்கிட்டு முழிக்கிறது நான்தான்..."

அவர் அப்படிப் புலம்புவதிலும் அர்த்தம் இருந்தது. சற்று நேரத்திற்கு முன்னர்தான் மகாதேவன் அவரை டெலிஃப்ட் அண்ட் ரைட் வாங்கியிருந்தார்.

"மாப்பிள்ளையும் பொண்ணும் ஊரில் இருந்து வந்திருக்காங்க... நீ ஒரு வார்த்தை கூட எனக்கு ஃபோன் பண்ணிச் சொல்லல... உன் பொண்ணுக்குத்தான் நான் வேணாம்னா... உனக்கும் நான் வேணாமா...?" என்று அவர் ஆவேசமாய்க் கத்த...

"இல்லைங்க. நீங்க டெல்லிக்குப் போயிருந்ததால..." அவர் பேச்சை முடிக்கும் முன் மகாதேவன் எகிறினார்.

"டெல்லிக்குத்தானே போனேன்... ஒரேயடியா இந்த உலகத்தை விட்டே போயிடல... உன் மக பண்ற வேலைக்குக் கூடிய சீக்கிரம் அதுதான் நடக்கப் போகுது. அதான் அப்பன் பேச்சைக் கேட்காது திமிர் எடுத்து அலையுது. உனக்கு என்ன... புருஷன் பேச்சைக் கேட்கக் கூடாதுன்னு இருக்கியா...?" என்று கத்தியவர், உமா பண்ணிய காரியத்தை ஒன்றுவிடாமல் மனைவியிடம் கூற...

மகளின் செயலில் அதிர்ந்து போன தனம் மகளைக் கண்டதும் சத்தம் போட்டார்.

"ஏன்டி, சொத்து சொத்துன்னு அலையுற? உறவு இல்லாம சொத்து மட்டும் வச்சிட்டு என்ன செய்யப் போற...? அப்பாவுக்கு அப்புறம்தான் இந்தச் சொத்து எல்லாம்..." என்ற அம்மாவை இமைக்காமல் பார்த்த உமா,

"இதே அட்வைஸை உங்க புருசனுக்கும் பண்ண வேண்டியதுதானே... மகளை விட உங்களுக்குச் சொத்தா முக்கியம்னு..."

கேள்வி என்னவோ அன்னையைப் பார்த்துத்தான் என்றாலும், அவளது பார்வை தந்தையிடமே இருந்தது. அவளது பார்வை கூறிய செய்தி, உதட்டோரம் பூத்த இளக்கார புன்னகை எல்லாம் கண்டு மகாதேவனுக்கு வியர்த்து வழிந்தது.

"உமா..." மகளை அதட்டிய தனம், "என் அப்பா அவருக்குச் செஞ்ச துரோகம் அப்படிப்பட்டது... அந்த வேதனை அவருக்கு இருக்கிறதாலதான்... இந்தச் சொத்து

ல்லாம் உன் பேரில் இருந்தாலும் அதை ஆளும் பொறுப்பை அவரிடம் கொடுத்து இருக்கேன்..."

"நானும் நீங்க சொன்னதாலதான் இவர் கிட்ட விட்டு வச்சிருக்கேன்... இந்த ஆளுக்காக நம்ம தாத்தாவைத் ப்பாப் பேசாதீங்க... இவரு புத்தி தெரிஞ்சுதான் அவர் அப்படிச் செஞ்சாரு..." என்று கடுப்புடன் கூறியவள் ந்தையை முறைத்துக் கொண்டே...

"இவ்வளவு நாள் எப்படியோ? இப்போ எனக்குக் ல்யாணமாகிருச்சு... எனக்குன்னு புருசன் வந்திட்டாரு... ப்போ இதை ஆளுகிற உரிமை என் கணவருக்கு ட்டுமே... உங்க கணவரை இந்தப் பொறுப்பில் இருந்து லகிக்கச் சொல்லுங்க... இல்ல, நானே விலக்கி வைக்க வேண்டி வரும்..."

அவளது வார்த்தை தனத்தைத் தாக்கியதை விட காதேவனை வெகுவாய்த் தாக்க, மனைவி இருப்பதைக் கூட மறந்தவராய்...

"என்ன என் புருஷன்... என் புருஷன்னு ரொம்பத் ான் அடிச்சுக்கற... ரொம்ப அவனைக் காதலிக்கிறியோ? அவனை நம்புறியோ? அவனைப் பத்தி என்ன தெரியும் னக்கு?" நக்கலாய்க் கேட்டவரை அவள் ஆழ்ந்து பார்த் வள்...

"அப்படி என்ன தெரியல... சொல்லுங்க, பார்க்க லாம்?" அதை விட நக்கலாய் அவள் கேட்க...

"அவன் உனக்கு முன்னாடி ஒருத்தியைக் காதலிச் வன். ஏற்கெனவே அவன் மனசுல வேறொருத்தி

இருக்கா. இப்படிப்பட்ட ஒருத்தனுக்காக நீ ரொம்பத்தான் உருகுற... இவனுக்கே நீ இப்படின்னா... நல்ல ஹேண்ட் சம்மா அழகாப் புருசன் கிடைச்சா... ஒருத்தனை வச்சுப் பார்க்க மாட்ட போலிருக்கே..." அவரது பேச்சில் தனம் திகிலடைந்தார்.

"என்னங்க சொல்றீங்க...?" அதிர்ச்சியாய் அவர் கூவியதும்தான் தந்தை - மகள் இருவருக்குமே தனத்தை பற்றி ஞாபகம் வந்தது.

"அம்மா... அப்பா என் மேல உள்ள கோபத்துல சும்மாச் சொல்றாரும்மா... அவர் அப்படி எல்லாம் கிடையாது... எங்க ரெண்டு பேரையும் பார்த்தா உங்களுக்கு எப்படித் தெரியுது. சரி என்னை விடுங்க... உங்க மாப்பிள்ளையைப் பார்த்தா எப்படித் தெரியுது... என் மேல் அன்பு இல்லாத மாதிரியாத் தெரியுது..."

உமா விளக்கம் கொடுக்க, தனத்தின் முகம் சற்று தெளிந்தது.

உதய்யின் பார்வை காதலாய் மகளை வருடுவதை அவர் கண்டு கொண்டுதான் இருந்தார். சில நேரங்களில் உமா சிடுசிடுவென இருந்தாலும் சிரித்த முகத்துடன் பேசும் உதய்யின் முகம் அவரது மனக்கண்ணில் வந்து போனது.

"நீ சொல்றது உண்மைதான் உமா... ஏங்க இப்படி பயமுறுத்துறீங்க...?" கணவனிடம் அவர் கேட்க...

"இல்லை, சும்மாதான்..." என்று சொல்லிச் சமாளித்தார் மகாதேவன். தனத்திடம் போடும் வேஷத்திற்கு ஏற்ப நல்ல பிள்ளையாய் நடந்து கொண்டார்.

"நான் போய் டீ போடுறேன்... உமா, நீ போய் மாப்பிள்ளைக்குக் கொடு..." கணவன் மற்றும் மகளின் பேச்சில் நிம்மதியுற்றவராய்த் தனம் உள்ளே செல்ல...

மகாதேவனும் உமாவும் மறுபடியும் முறைத்துக் கொண்டனர்.

"நான் சொல்றது உண்மைதான்... உன் புருஷன் வேறொருத்தியைக் காதலிச்சவன்... அவனை ரொம்ப நல்லவன்னு நினைக்காதே... உன் சொத்தைக் கண்டதும் நாய்க் குட்டி மாதிரி உன்னைச் சுத்திச் சுத்தி வர்றான்..." என்றவரை இளக்காரமாய்ப் பார்த்தவள்,

"உங்களை விடவா அவர் மோசம்? உங்களாலயே அம்மா நம்பும்போது... நான் என் வீட்டுக்காரரை நம்புற துல ஒண்ணும் தப்பில்லை..." அவள் வார்த்தையில் மகாதேவனின் முகம் கறுத்துப் போய் கன்றியது.

"அட அடடே...! உங்களுக்குக் கூட மானம் அவமானம் எல்லாம் இருக்கா... ஆச்சரியமா இருக்கே..." அவரின் கருமை படர்ந்த முகத்தை ஆசை தீரப் பார்த்தவள்,

"இதை விட அதிர்ச்சியான ஒரு விஷயம் சொல்லட்டுமா... உதய் யாரையோ காதலிச்சாரு, காதலிச்சாருன்னு சொன்னீங்களே... அவர் காதலிச்ச பொண்ணு யாருன்னு விசாரிச்சீங்களா...?"

ஒற்றைப் புருவத்தைத் தூக்கி நக்கலாய்க் கேட்ட வளை யோசனையாய்ப் பார்த்தார் அவர்.

"அந்தக் காதலி வேற யாரும் இல்லை... உங்க பொண்ணு இந்த உமாவேதான்..." அவளின் பதிலில் அவர் அப்படியே திகைத்துப் போனார்

உமாவைப் பகடைக் காயாக்கித் தான் விளையாட நினைத்த பரமபத விளையாட்டில், தானே பகடைக் காயாக மாறிப் போவோம் என்று அவர் கொஞ்சம் கூட நினைக்க வில்லை. அவரின் திகைப்பு கொஞ்சம் கொஞ்சமாய் மாறி அது கோபமாய் உருவெடுத்தது.

"நீ என்ன சொல்ற...?"

"உண்மையைத்தான் சொல்றேன், அப்பா..." அப்பாவில் அழுத்தம் கொடுத்தவள்...

"உங்களை எதிர்க்கத் தைரியமான ஒருத்தனை நான் தேடிக்கிட்டு இருந்தப்பதான் அவரை நான் பார்த் தேன். யாருக்கும் பயப்படாத அவரோட குணம் எனக்கு ரொம்பப் பிடிச்சுப் போச்சு... தனியா உங்களை எதிர்த்து நான் பல முறை போராடித் தோத்துப் போயிட்டேன்... அம்மாவை வச்சு நீங்க காரியம் சாதிச்சுட்டே இருக்கீங்க.

"இனி அவர் வந்ததுக்கு அப்புறம் எனக்குக் கவலை இல்லை... உங்க குள்ளநரி வேலை எல்லாம் அவர் கிட்ட செல்லுபடியாகாது. இனி எல்லாப் பொறுப்பும் அவர் கையில ஒப்படைக்கப் போறேன்... நீங்க அப்படி ஏதாவது அவர்கிட்ட வம்பிழுத்தா... உங்க வாலை அவர் ஒட்ட வெட்டிருவாரு..."

மகாதேவனின் முகத்தில் ஈயாடவில்லை.

"எப்பவுமே தப்பைச் செஞ்சுட்டு தப்பிச்சுட்டு இருக்க முடியாது... என்னைக்காவது ஒரு நாள் அதுக்கான தண்டனையை அடைஞ்சே தீரணும்... உங்க தவறுக்கான தண்டனை கூடிய சீக்கிரம் உங்களுக்குக் கிடைக்கத்தான் போகுது..."

அவரின் அதிர்ந்த உருவம் அவளின் வார்த்தையில் உயிர் பெற்று, "என்னடி கொழுப்பா..." என்று சீறியது.

"பின்னே, கொழுப்பு இல்லாம வேற என்னவாம்? அதுவும் நீங்க உழைச்சுச் சம்பாதிச்ச காசில் போட்ட பாப்பாட்டில் வந்த கொழுப்பாச்சே..." அவளின் குரலில் ரௌத்துக்கும் கிண்டல் நிரம்பி வழிந்தது.

"இருடி. உன் கொழுப்பை அடக்கறேன்..." அவர் கண்கள் பழி வாங்கும் வெறியில் பளபளக்க... அதைக் கண்டு அவளுக்கு உள்ளுக்குள் குளிரெடுத்தாலும்... வெளியில் அதைக் காட்டிக் கொள்ளாமல்,

"உங்களால எங்களை ஒண்ணும் பண்ண முடியாது," என்று சவால் விட...

"என்னைப் பத்தி நல்லாத் தெரிஞ்சிருந்தும் சவாலா விடற... நான் நினைச்சதை நடத்திக் காட்டுறவன்..." அவரது முகத்தில் குரோதம் கொப்புளித்தது.

சொந்தப் பெண்ணிடத்தில் ஒரு தகப்பனால் இவ் வளவு குரோதம் பாராட்ட முடியுமா? முடிந்ததே... மகாதேவனால் முடிந்ததே...!

அவர் தன் மனைவியை நேசித்து இருந்தால் ஒரு வேளை தன் மகளையும் நேசித்து இருப்பாரோ?

இல்லையே! எத்தனையோ ஆண்கள் தங்கள் மனைவியை வெறுத்தாலும் தன் ரத்தத்தில் உதித்த பிள்ளைகளிடம் உயிராய் இருக்கிறார்களே... அந்த ஆண்களில் கூட மகாதேவன் சேர்த்தி இல்லை. அவர் ஒரு கடைந்தெடுத்த வில்லன் என்பது உமாவைத் தவிர யாருக்கும் தெரியாது என்பதுதான் இங்கு வருந்தத்தக்க விஷயம்...

அதற்குள் டீ போட்டுக் கொண்டு தனம் வந்துவிட, உமா தகப்பனை முறைத்துக் கொண்டே கணவனுக்கு டீயை எடுத்துக் கொண்டு போனாள்.

மகாதேவன் தனக்குத் தரப்பட்ட டீயைச் சற்று யோசனையுடன் குடிக்க ஆரம்பித்தார். உமாவை எப்படிச் சமாளிப்பது என்பது போய் அவளின் கணவனை எப்படிச் சமாளிப்பது என்று யோசிக்க வேண்டியிருக்க வேண்டிய தன் நிலையை அறவே வெறுத்தார்.

அதிலும் உதய் ஓங்குதாங்கான உயரம், அவருக்கே சிறு பயத்தை உண்டாக்கத்தான் செய்தது. அமைச்சராய்ப் பயனற்று இருக்கும் தன் நிலையை எண்ணி மனதுக்குள் குமைந்தார்.

இரவு உணவு முடித்து வந்து, தங்கள் அறைக்கு வந்த உதய் உமாவிடம், "நாம நாளைக்கு ஊருக்குப் போகலாம்ல..."

"காலையில் சின்ன வேலை இருக்கு. ஒரு லெவன் ஓ க்ளாக் கிளம்பிடலாம்..." என்றவளைப் பார்த்துச் சம்மதமாய்த் தலையசைத்தான்.

அதற்குப் பின் அவள் செய்த காரியத்தைக் கண்டு தான் அவன் அதிர்ந்து போனான். காலையில் கொண்டு வந்த தொழில் சம்பந்தப்பட்ட கணக்கு அடங்கிய கோப்புகள், சி.டி.கள், பென் ட்ரைவ், லேப்டாப் என அனைத்தையும் கட்டிலில் கடை பரப்பியவளைக் கண்டு திகைத்தவன்,

"ஏ உமா! என்ன பண்ற...? இந்த நேரத்துல இதைப் பார்க்கவா போற... தூங்கலையா...?"

"நோ மிஸ்டர் உதய். பார்க்கவா போற இல்ல... பார்க்கப் போறீங்க..."

"என்னாது... நானா... இதையா...?" கண்களில் அப்பட்டமாய் அதிர்ச்சியைக் காண்பித்தான்.

"நீங்களேதான்... இந்தக் கணக்கு எல்லாம் பார்க்கிறதுக்கு எனக்காக ஹெல்ப் பண்ண மாட்டீங்களா... ப்ளீஸ், உதய்..." தலையைச் சாய்த்து உதடு குவித்துப் புது மனைவி கெஞ்சும்போது எந்தக் கணவனால்தான் மாட்டேன் என்று சொல்ல முடியும்...?

"இப்படி எல்லாம் நீ கேட்கணுமா...? பாருடான்னு சொன்னா, பார்த்துட்டுப் போறேன்..." என்றவன் கட்டிலில் அமர்ந்து அதிலிருந்த கோப்பைக் கையில் எடுத்தான்.

"என்ன விவரம்னு சொல்லு. நான் பார்க்கிறேன்..."

அவனுக்கு விவரங்களைச் சொல்லியவள் தானும் மடிக்கணினியில் அமர்ந்து வேலையைப் பார்த்தாள்.

சற்று நேரம் அமைதியில் கழிய, உதய் திடீரென்று வாய் விட்டுச் சிரித்தான்.

"என்ன...?" அவள் புரியாமல் அவனைப் பார்க்க...

"இல்ல..." என்று இழுத்தவன், பின் நிறுத்தி, "சொன்னா நீ அடிக்க வருவ..." என்றவனுக்கு அடக்க மாட்டாமல் சிரிப்பு பொங்கியது.

ஏதோ வில்லங்கமாய்ச் சொல்லப் போகிறான் என்று அறிவு எச்சரித்தாலும் அவளது மனம் அவனது வில்லங் கமான பேச்சைக் கேட்க விரும்பியது.

"அதெல்லாம் அடிக்க மாட்டேன்.... சொல்லுங்க..." அவள் அவனை ஊக்குவிக்க...

"புதுசா கல்யாணமானவ கணக்கு பண்ற விசயமே வேற... ஆனா நான் இங்கே..." மீண்டும் அதை நினைத்து அவன் சிரிக்க...

அவன் சொன்னது கேட்டுக் கோபப்படாமல் அவளது முகம் வெட்கத்தைப் பிரதிபலித்தது.

"ச்சு! என்ன பேச்சு இது, உதய்? பேசாம வேலை யைப் பாருங்க..." என்றவள் தன் வெட்கத்தை மறைக்கும் வண்ணம் மடிக்கணினி பக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

அவளது வெட்கம் அவனுக்குப் புத்துணர்வைக் கொடுக்க, சிரித்தபடி கையிலிருந்த கோப்பில் ஆழ்ந்தான். நேரம் செல்லச் செல்ல, அவன் வேலைகளில் மூழ்கிப் போக... உமா தூக்கம் கண்களைச் சுழற்ற அங்கேயே சுருண்டு படுத்தாள்.

வெகு நேரம் கண் விழித்து வேலை பார்த்தவன்... முடிந்தளவு எல்லாவற்றையும் சரி பார்த்தவனுக்குக்

கணக்கில் ஏகப்பட்ட குளறுபடிகள் இருப்பது புரிந்தது. அதற்கு எல்லாம் காரணம், நிச்சயம் தனது மாமனாரின் கைவரிசையாகத்தான் இருக்கும் என்று உறுதியாக அவனுக்குத் தெரிந்தது. ஆனால் இந்த விஷயத்தில் தான் என்ன செய்ய முடியும் என்று அவனுக்குத் தெரிய வில்லை.

யோசனையுடன் தன் மனைவியின் புறம் திரும்பி யவன், அவள் இருந்த நிலை கண்டு அவனது உதடுகள் விரிந்தது புன்னகையில். படுக்கையில் இருந்த கோப்புகள் எல்லாவற்றையும் எடுத்து ஒதுக்கி வைத்தவன் அவள் அருகில் வந்தான்.

மலர்க் குவியலைப் போல் அவளை ஏந்தியவன், படுக்கையில் ஒரு பக்கம் படுக்க வைத்தவன்... மறுபக்கம் வந்து தானும் படுத்தான். தனது புறம் திரும்பிப் படுத் திருந்த மனைவியின் அழகு அவனைப் பெரும் அவஸ்தை செய்தது.

'எத்தனை நாளுடி இந்தக் கொடுமையை அனுபவிக்கிறது. உம் மனசுல என்னதான்டி இருக்கு... நீ சொன்னாத்தேன் எனக்கும் புரியும்... சொல்லாம, நீ மனசுல வச்சு மருகுனா எனக்கு என்ன தெரியும்...?' அவனுக்குப் பெருமூச்சு வந்தது.

அவன் மனம் புரிந்தோ, என்னவோ... அவள் அவனை ஒட்டிப் படுத்து அவன் மேல் கை போட, அதில் முகம் மலர்ந்தவன் லேசாக அவளை அணைக்க... அவளோ இன்னமும் அவனை ஒட்டிக் கொண்டு படுத்தவளின் வாய், "உதய்..." என்று முணுமுணுத்தது.

அவளது அந்த வார்த்தையில் அவனது மனம் லேசானது. அவளுக்கும் தனக்கும் இடையில் உள்ள பிரச்சினை வெகு விரைவில் தீர்ந்து எல்லாம் சரியாகும் என்ற நம்பிக்கை அவனுள் எழுந்தது.

மறுநாள் எழுந்தது முதல் அறைக்குள் பரபரப்பாய் அங்கும் இங்கும் நடந்து கொண்டிருந்த உமாவைத் தோள் பற்றி நிறுத்திய உதய்,

"உமா... ஏதாச்சும் பிரச்சினையா...?" அவளின் நாடியில் விரல் வைத்து, அவளது முகத்தை நிமிர்த்தி யவன் அவளின் கண்ணுக்குள் தன் கண்களைக் கலக்க விட்டான்.

இல்லை என்பது போல், அவள் தலையசைக்க அதில் அவனுக்குச் சற்று நிம்மதியாய் இருந்தது,

"உதய்... நான் என்ன சொன்னாலும் செய்வீங் களா...?"

அவளது பேச்சில் அவனது குறும்புத் தனம் தலை தூக்க... "ஓ... நீ சொல்லி நான் கேட்காம இருப்பேனா... உனக்காக எதையும் செய்வேன்..." என்றவனது கண்கள் அவளது மேனியில் எல்லையில்லாமல் அலை பாய்ந்தது. அதில் அவளது மனமும் அலை பாய்ந்தது.

தன்னைக் கட்டுப்படுத்தத் தோன்றாமல், "உதய்..." என்றபடி அவனது நெஞ்சில் சாய்ந்தாள்.

அவளது லட்சியம் இன்னும் கொஞ்ச நேரத்தில் நிறைவேறப் போகிறது. இனி அவளுக்குப் பயமில்லை. சொத்தைப் பற்றிக் கவலையில்லை... எல்லாவற்றையும்

இனி உதய் பார்த்துக் கொள்வான். தன்னையும் சேர்த்து... அந்த நினைவே அவளுக்குத் தித்திப்பாய் இருந்தது.

"இது மட்டும் உனக்குப் போதுமா...?" என்றது அவளது மனசாட்சி.

"போதும்... இது மட்டும் போதும். நடந்து முடிந்ததை யாராலும் மாற்ற முடியாது. இனி, அதை நினைத்து வருந்தி எந்தவிதப் பிரயோஜனமும் இல்லை. என் உதய், நான், எங்கள் குழந்தைகள்... இதுதான் என் வாழ்க்கை... இது மட்டும்தான் என் உலகம்... வேறு எதைப் பற்றிய சிந்தனையும் எனக்கு வேண்டாம்..." என்றது, அவளது மனம்.

"அப்போ இவ்வளவு நாள் நீ கஷ்டப்பட்டது... நீயா தேடிப் போய் உதய்யைக் காதலித்தது... இதெல்லாம் எதற்காக? யாரைப் பழி வாங்கணும்னு துடிக்கிறியோ அவங்களைப் பழி வாங்காமல் நீ விலகுவது சரியா...? உன் மேல் அன்பு வைத்த நல்ல உள்ளங்களுக்கு நீ என்ன கைம்மாறு செய்யப் போற...? அவர்கள் என்ன பாவம் செய்தார்கள்...?" அடுக்கடுக்காய்க் கேள்வி கேட்டது அவளது மனசாட்சி.

"இல்லை இல்லை... எனக்கு என் உதய் வேணும்... அவர் உயிருடன் விளையாடும் எதையும் செய்ய நான் தயாராய் இல்லை..." அவளது மனம் கூக்குரலிட்டது.

மனதின் கூக்குரலை உதய்யை அணைத்து அவள் தணிக்க முயல, அவளது செய்கையில் அவன் மனம் மகிழ்ச்சியில் துள்ள... தானும் அவளை இறுக அணைத்துக் கொண்டான்.

கதவு தட்டும் ஓசையில், தங்கள் மோன நிலை கலைந்தவர்கள் சட்டென்று விலகினர்.

உமா உதய்யை நிமிர்ந்து பார்க்க முடியாமல் கதவை நோக்கிச் சென்றாள். போகும் அவளைப் பார்த்த படி அவன் நின்றிருந்தான்.

உமா கதவைத் திறந்ததும் பணிப்பெண் அவர் களைக் கீழே வருமாறு சொல்லி விட்டுச் செல்ல, உமா உதய்யைப் பார்த்தாள்.

"நான்தேன் உம் பக்கத்துல இருக்கேன்ல. வா போகலாம்..."

அவள் கைபிடித்து அவன் அழைக்க... அவனது கை தொடுகையில் தைரியம் வரப் பெற்றவளாய்க் கீழே சென்றாள்.

அங்கே அவர்களது குடும்ப வக்கீல் அமர்ந்திருந் தார். மகாதேவன் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க மகளை உறுத்து விழித்தார்.

தனமோ, இனி செய்வதற்கு ஒன்றும் இல்லை என்பது போல் வருத்தமாகக் காட்சி அளித்தார்.

இது எதையும் கண்டு கொள்ளாமல் உமா உதய் யுடன் அமர்ந்தவள், "லாயர் சார்... எல்லாம் ரெடிதானே..."

"ரெடியா இருக்கு, உமா..." என்றவர் சில காகிதத் தாள்களை அவளிடம் கொடுத்தார்.

அதை வாங்கியவள் உதய்யிடம் நீட்டி, "இதில் கையெழுத்துப் போடுங்க..." என்று சொல்ல, அவளைப் புரியாமல் பார்த்தவன் அதை வாங்கி வாசித்தான்.

உமாவின் கணவனாக வரப் போகிறவனுக்கு அவளது தாத்தா எழுதிய சொத்துக்களுடன் உமாவின் சொத்துக்களும் சேர்த்து, மொத்தமாய் உதய்யின் பேருக்கு மாற்றி இருந்ததற்கான ஆதாரப் பத்திரம்தான் அது.

"உமா... என்ன இதெல்லாம்...? இது உன்னோட சொத்து... இதுல எனக்கு எந்த உரிமையும் இல்ல..." என்றவனது பேச்சில், உமா சற்றுக் கர்வத்தோடு தனது தந்தையைப் பார்த்தாள்.

அவரது முகம் வெளுத்துப் போய்ச் செத்துப் போயிருந்தது.

"நீங்களும் நானும் வேற வேறயா உதய்...?" அவள் கேட்டதற்கு அவனிடத்தில் பதில் இல்லை.

"அது வேற, இது வேற..." அவன் இழுக்க...

"என் தாத்தாவோட சொத்து என் குழந்தைகளுக்குப் போகணும்னு விரும்புறேன்... என் குழந்தைங்கன்னா அது உங்க குழந்தை. அப்போ நம்ம குழந்தைங்கதானே, உதய்..." அவளின் இந்தக் கூற்றையும் அவனால் மறுக்க முடியவில்லை.

"இருந்தாலும்..."

"ப்ளீஸ், எனக்காக எதையும் செய்வேன்னு சொன்னீங்களே... இதைச் செய்ய மாட்டீங்களா...?"

அவர்களது இந்தப் பேச்சுக் கேட்டு மகாதேவனுக்கு ஆத்திரம் வந்தது

ஆத்திரத்தில் அறிவை இழந்த அவர் வார்த்தையையும் இழந்தார். "என்ன உமா! அடியாள் எல்லாம்

பலமாத்தான் செட் பண்ணி இருக்க...?" இளக்காரமாய் அவர் கேட்க...

எதிர்பாராத அவரின் பேச்சில், "அப்பா..." என்று அதிர்ந்து போனாள் அவள்.

"அவர் என் கணவர்..." அதிர்ந்தாலும் ஆணித் தரமாய் வந்தது, அவளது வார்த்தைகள்.

"கணவனா... இவனா...? உன்னோட தகுதிக்குக் கொஞ்சம் கூடப் பொருத்தம் இல்லாதவன் இவன். இவனைப் போய் நீ காதலிச்சி இருக்கேனா அதுக்கு என்ன அர்த்தம்...? உன் சொத்தைக் காப்பாத்த உனக்கு ஒரு அடியாள் வேணும்னுதானே அர்த்தம்... இதுக்குப் பேரு காதலாமா...? கேவலம்... தூ...!"

காறி உமிழ்வது போல் அவர் செய்த செய்கையில் உமாவின் முகம் கூம்பிப் போனது.

அவசரமாய் அவள் அருகில் அமர்ந்திருந்த உதய்யைப் பார்க்க, அவனது இறுகிய முகத்தில் இருந்து அவளால் எதையும் கண்டு பிடிக்க முடியவில்லை.

"உதய்..." அவனின் கைகளைத் தொட்டு அவள் அசைக்க...

அவனது உதடுகள் பிரிந்து அந்தக் கொடிய வார்த் தையைக் கூறியது... "இது எதுக்கான கூலி உமா...?"

தனது கணவன் தன்னை விட்டுத் தூரமாய் விலகிப் போவது போல் அவளுக்குத் தோன்றியது.

என்ன சொல்லி... என்ன செய்து அவனைத் தன் னோடு தக்க வைத்துக் கொள்வது... தன் உயிராய்ப்

பாதுகாப்பது... என்று அவளுக்குச் சத்தியமாய்த் தெரிய வில்லை.

"என்னை வச்சு ஏதோ ப்ளான் பண்றனு நான் நெனச்சேன் தான்... ஆனா இந்த மாதிரி ப்ளான்னு நான் நெனைக்கவே இல்லை..." என்றவன் குரல், திடீரென்று கமறியது.

"கடைசியில் என்னை அடியாளா ஆக்கிட்ட இல்ல..." காயப்பட்ட அவனது மனது ஓவென்று தேற்றுவாரற்றுக் கதறி அழுதது.

'அப்படி என்ன இருக்குன்னு என்னைய உமா காதலிச்சா...?' இத்தனை நாள் அவன் தனக்குள் கேட்டுக் கொண்டிருந்த கேள்வி, அவளைப் பார்த்து நித்தமும் கேட்ட கேள்வி... ஆனால் அதற்கான பதில் இத்தனைக் கொடியதாய் இருக்க வேண்டாம்.

மகாதேவனை அவனுக்குப் பிடிக்காதுதான், என்றாலும் அவரது இந்த வார்த்தைகளை அவன் முழு மனதாய் நம்பினான்.

"யாரிடமும் இல்லாதது உன்னிடம் இருக்கே... இந்தத் தைரியம், வீரம், அஞ்சா நெஞ்சம். இதை யாரிடமும் நான் பார்க்கலையே..." அவள் கூறியது அசந்தர்ப்ப வசமாய் அவனது காதில் ஒலித்தது.

"ஏன் என் தைரியம் பிடித்திருப்பதாய்க் கூறினாள்? என் தைரியத்தைத் வைத்து என்ன செய்ய நினைக் கிறாள்?" என்று தான் மதியம் நினைத்ததும் அவனுக்கு ஞாபகம் வந்தது.

'அப்போ அவ என்னய காதலிக்கல... நான் தைரிய மானவனா அவளுக்குப் பாதுகாப்பா இருப்பேன்னு தான் என்னய காதலிச்சு இருக்கா... அதுக்கு எதுக்கு என்னய காதலிக்கணும்... குமாரு, எனக்குப் பாதுகாப்பு கொடுன்னா... காலம் பூரா அவளுக்குப் பாதுகாப்பு நான் கொடுத்துட்டு போவேனே...' அவனின் மனதைக் காதலிக்காமல் போன காதலியை நினைத்து அவனுக்குத் துயரமாய் இருந்தது.

அவனை அவனுக்காகக் காதலிக்காமல் போன உமாவை நினைக்கும் போதே, அவனது இதயம் இரு துண்டாய்ப் பிளந்தது போல் அவனுக்கு வலித்தது. அந்த வேதனை தாங்க முடியாமல் உள்ளுக்குள் அவன் துடியாய்த் துடித்துப் போனான்.

அந்த நேரம் அவன் ஒன்றை மறந்து போனான். அடியாளுக்குக் கூலிதான் கொடுப்பார்கள். காதலையோ, தன் சொத்துக்களையேர கொடுக்க மாட்டார்கள் என்று...!

அவனது அடிபட்ட மனம் அதற்கு மேலே சிந்திக்க மறுத்தது.

16

குண்டூசி விழுந்தால் கூடச் சத்தம் கேட்கும். அந்தளவுக்கு அங்கே மயான அமைதி நிலவியது.

அங்கிருந்த ஒவ்வொருவரின் மன நிலையும் ஒவ்வொரு விதமாய் இருந்தது.

உதய், மகாதேவன் சொன்ன வார்த்தைகள் ஒவ்வொன்றையும் எண்ணி எண்ணித் தனக்குள் மருகிக் கொண்டிருந்தான்.

உமாவின் நினைவில் தான் தாழ்ந்து போனதை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை... ஒவ்வொருத்தருக்கும் காதல் எப்படி எல்லாமோ வரும்... ஆனால் உமாவிற்கு அவன் மேல் காதல் வந்த விதத்தை அவனால் ஜீரணிக்க முடியவில்லை.

"ஏன் உமா இப்படிப் பண்ணுன...? உன்னய மாதிரி அழகான பொண்ண நான் கேட்டேனா...? ஏதோ எனக் கேத்த பொண்ணாப் பார்த்து நான் கல்யாணம் பண்ணிட்டு நிம்மதியா இருந்திருப்பேனே... எதுக்குடி, என் வாழ்க்கையில் வந்த...? என்னய இப்படி அவமானப் படுத்தவா...? முடியலடி. இந்த வலியைத் தாங்கிக்க முடியல... இந்த நிமிசம் செத்துப் போலாமானு இருக்கு... இதை விட ஒரு ஆம்பளயக் கேவலப்படுத்த முடியாது, உமா..." அவன் மனதினுள் புலம்பல் நிற்கவில்லை.

அவளது காதல் வேண்டுமானால் காரண காரியத்தோடு வந்திருக்கலாம்... ஆனால் அவன் அப்படி இல்லையே...! அவளுக்காகக் காதலிக்கக் கூடாது என்ற தன்னுடைய கொள்கையைக் கூடத் தளர்த்திக் கொண்டு, பெற்றோர் எதிர்த்தாலும் பரவாயில்லை. அவளைத்தான் கைப்பிடிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டு, அவன் காதலில் கசிந்துருகினானே... எல்லாம் யாருக்காக? அவளுக்காகத்தானே... அதை எல்லாம் ஒரு நொடியில் கானல் நீராய் ஆக்கி விட்டாளே...!

அவளது எண்ணம் தெரிந்த பின்பும் அவனது இதயம், "உமா... உமா... உமா..." என்று தானே துடிக் கிறது. அதற்கு என்ன சமாதானம் சொல்லி அவன் தேற்றுவான்...?

'இனி, உமா உனக்கு வேண்டாம் என்றா? இல்லை, அவள் கோபுரம்... நீ குப்பைமேடு!' என்ற உண்மையை உரக்கச் சொல்லி அதட்டுவானா? அவனுக்கே அது தெரிய வில்லை. அதே சமயம் உமா இல்லாத வாழ்க்கையையும் அவனால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

உமாவோ உதய்யின் வார்த்தை கொடுத்த அதிர்ச்சி யில் இருந்து மீளவில்லை.

'எப்படி உதய், உங்களால் இப்படிப் பேச முடிந்தது? நான் உங்களைக் காதலிக்கவே இல்லையா... அதைக் கொஞ்சம் கூட நீங்க உணரவில்லையா? இல்லை, நான் தான் உணர வைக்கத் தவறிவிட்டேனா? ஆம். நான்தான் தவறி விட்டேன்... நான் கோபம் கொண்டு நடந்ததுக்கு, இன்று என் வாழ்க்கையை இழக்கப் போகிறேனே...' என்று அவள் மனம் கதறியது,

மகாதேவனோ மகளின் நிலையைக் கண்டு திருப்தி யுற்றவராய் முகத்தில் நிறைந்த சிரிப்புடன் அமர்ந்திருந்தார்.

தனம் தான் மகளுக்கும் மருமகனுக்கும் இடையில் நடக்கும் பிரச்சினையைக் கண்டு தவித்துப் போனார்.

"மாப்பிள்ள... அப்பாவுக்கும் பொண்ணுக்கும் எதை யாவது பேசி வாக்குவாதம் பண்ணுவதே வேலையாப் போச்சு... இவ்வளவு நாள் என்னைய வச்சு சண்டை

போட்டுக்கிட்டு இருந்தாங்க... இப்போ உங்களை வச்சுப் போடுறாங்க...

"உமா சின்னப் பொண்ணு. அவ மனசுல கபடம் கிடையாது... எதையும் யோசிச்சு முடிவு பண்ணுங்க..." அவரது கெஞ்சலில் அவரைத் திரும்பிப் பார்த்தவன் மனம் வருந்தத்தான் செய்தது.

தனது அன்னையைத் தனத்தின் இடத்தில் வைத்துப் பார்த்தவனுக்கு இந்த அன்னையின் வேதனை அவனுக்குப் புரியத்தான் செய்தது. இன்று அவருக்காகப் பரிதாபம் பார்த்து, நாளை தனக்காக வருத்தப்படுவதில் எந்தவிதப் பலனும் இல்லை. போதும். உமாவுக்காகத் தான் பட்ட அவமானம் போதும்... இந்த அன்னைக்காக இன்று இரக்கம் காட்டி மேலும் தான் அவமானப்படக் கூடாது என்று தீர்மானித்தவன் அங்கிருந்த வக்கீலைப் பார்த்தான்.

"சார் உங்க கிட்ட ஸ்டாம்ப் பேப்பர் இருக்கா..."

"இருக்கு சார்..."

"எனக்கு அதைத் தாங்க சார்..."

அவன் சொல்லவும் தான் உமா என்ற சிலைக்கு உயிர் வந்தது.

"உதய்... எதுக்கு ஸ்டாம்ப் பேப்பர் எல்லாம்...?" என்று படபடப்பாய்த் தொடங்கியவள் அவன் பார்த்த கோபப் பார்வையில் வாயை மூடிக் கொண்டாள்.

அவரிடமிருந்து காகிதத் தாளை வாங்கிய உதய், அதில் எழுதப் போகும் போது பதறிப் போனவளாய் அவன் கை பிடித்துத் தடுத்தாள் அவள்.

"வேண்டாம் உதய்... எதுவாயிருந்தாலும் பேசித் தீர்த்துக்கலாம்..."

அவளின் கையை உதறித் தள்ளியவன் அதில் எழுதத் துவங்கினான். அவனும் வக்கீல் என்பதால், தான் சொல்ல வந்ததைத் தெளிவாய் எழுதி அதன் கீழே கையெழுத்துப் போட்டவன் அதைத் தந்த வக்கீலிடம் நீட்டினான்.

"உதய்..." அவனது செயலில் உமா துடிதுடித்துப் போனள்.

தன்னை அவன் விவாகரத்து செய்யத்தான் எழுதிக் கொடுத்திருக்கிறான் என்பதை உணர்ந்தவளுக்கு வேதனை மனதை அழுத்தியது. எல்லாம் முடிந்து போனது என்று நினைத்தவள் மனதுக்குள் ஊமையாய் அழுதாள்.

"இது உங்களுக்குச் சம்மதம் தானா...?" அந்த வக்கீல் அவனைப் பார்த்துக் கேட்க...

"முழுச் சம்மதம்..." என்று அவன் சொன்ன போது அவள் அப்படியே உடைந்துதான் போனாள்.

'ஏன் இப்படிச் செய்தாய்?' கணவனைப் பார்த்த வளின் கண்கள் அவனின் ஒற்றைப் பார்வைக்காக அவனுக்காய்த் தவித்தது.

அவளின் பார்வையை உணர்ந்தார் போன்று இருந்தது அவனது பேச்சு. "நீ என்னய காதலிக்காம கல்யாணம் பண்ணி இருந்திருக்கலாம். ஆனா நான் மனசு நிறையக் காதலோடதான் உன்னைக் கல்யாணம்

பண்ணிக்கிட்டேன்... நீ என்னய அடியாளா நெனைச்சு இருக்கலாம். ஆனா நான் உன்னய என் காதலியா, மனைவியாத்தான் நெனச்சேன்..."

அவன் நினைத்தேன் என்று இறந்த காலத்தில் சொல்லும் போதே அவள் அப்படியே இறந்து விட்டாள்.

அவனுக்கும் பேச முடியாமல் தொண்டை அடைத் தது. சிறிது நேரம் பேசாமல் இருந்தவன் தொண்டையைச் செருமிக் கொண்டு பழையபடி தொடங்கினான்.

"இதுக்கு மேலயும் உனக்கும் எனக்கும் ஒட்டாது. உன் தாத்தா என் பேருக்கு எழுதிய சொத்துக்கள எல்லாம் திரும்ப உன் பேருக்கே எழுதச் சொல்லிட்டேன்... அதைத் தான் அவர் கிட்ட எழுதிக் கொடுத்திருக்கேன்..."

இதை அவன் சொன்ன போது அவள் என்ன மாதிரி உணர்ந்தாள் என்பதை வார்த்தையில் வடிக்க முடியாது. ஆனால் நிம்மதியாய் உணர்ந்தாள். அது மட்டும் உண்மை. அவன் தன் வாழ்க்கையை விட்டு விலகிப் போய் விடு வானோ என்ற பயத்தில் இருந்தவளுக்கு அவனது வார்த்தைகள் பூமழை பொழிந்தது போலிருந்தது .

பேச்சு வார்த்தை முடிந்தது என்பது போல் எழுந் தவன், தனத்தின் அருகில் வந்து அவரது கைகளைப் பற்றியவன், "என்னய மன்னிச்சிருங்க அத்தை..." என்றவன் வேகமாய் மாடிப் படிகளில் ஏறினான்.

அவனது செயலைத் திகைப்பாய்ப் பார்த்துக் கொண்டிருந்த உமாவைக் கேலியாய்ப் பார்த்த மகா தேவன், "என்ன உமா... உன் அடியாள் என்ன இவ்வளவு

பயந்தவனா இருக்கான். இவன நம்பியா என்கிட்ட நீ மோதின...?"

அவரது பேச்சு உமாவை விடத் தனத்தை தான் அதிகம் கொதிக்கச் செய்தது.

"என்ன பேச்சு பேசுறீங்க...? இங்கே நம்ம பொண்ணு வாழ்க்கை கேள்விக்குறியா இருக்கு. நீங்க என்னடா என்றால் எப்போதும் போல சண்டை போட்டுட்டு இருக்கீங்க..."

"ஏய் என்னடி ரொம்பத்தான் குரல உயர்த்துற... எனக்கு எல்லாம் தெரியும்... உன் வாயை மூடிட்டு நீ போ. இல்லை, நான் என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது."

மகாதேவன் தன் குரலை உயர்த்தியதோடு மட்டும் இல்லாமல் தன் கையையும் உயர்த்த...

வக்கீல் முன்பு அவர் நடந்து கொண்ட விதம் தனத்தை அதிர்ச்சியடையச் செய்ய, அமைதியாய்த் தள்ளி நின்றார்.

"யோவ் வக்கீலு... இவ பேச்சைக் கேட்டு நடக்கக் கூடாதுன்னு உனக்கு எத்தனை தடவை சொல்லி இருக் கேன். ஆனா, நீ என் பேச்சைக் கேட்கிறதாவே இல்லை."

மகாதேவனின் சத்தத்திற்கு எல்லாம் அந்த வக்கீல் பயப்படவில்லை...

"சார்... பெரியவர் உமா சொன்னதைத் தான் செய்யச் சொல்லி இருக்காரு. நீங்க சொல்றதை இல்லை..." என்றவர் உமாவைப் பார்த்து,

"சாரிம்மா... நல்லா யோசிச்சு முடிவு பண்ணிட்டு சொல்லும்மா..." என்றவர் கிளம்ப எத்தனிக்க...

உமா அவரைக் கையமர்த்தித் தடுத்தவள், "சார்... இந்தச் சொத்துக்கள் எல்லாத்தையும் எங்கப்பா பேருக்கே எழுதிடுங்க... என்னென்ன ஃபார்மாலிட்டீஸ் உண்டோ அதை எல்லாம் முடிச்சிட்டு எனக்கு ஃபோன் பண்ணுங்க. நான் வந்து சைன் பண்றேன்..." என்றவள், "இல்லை சார்... நீங்களே மதுரைக்கு வந்து வாங்கிக்க முடியுமா...?" என்று அவள் கேட்க...

"இதுல என்னம்மா இருக்கு. எல்லாம் முடிச்சிட்டு நானே வந்து உன் சைன் வாங்கிக்கிறேன்..." என்றவர் விடை பெற்றுச் செல்ல...

உமா யாரிடமும் எதுவும் பேசத் தோணாமல் தொலைந்த தன் வாழ்க்கையைக் காப்பாற்றிக் கொள்ள, தந்தையைக் காண மாடிப் படியில் கால் வைத்தாள்.

"என்ன உமா... பந்தயத்தில் இப்படிக் கேவலமாத் தோத்துப் போய்ட்ட... இதை நான் கொஞ்சம் கூட எதிர் பார்க்கல..."

மகாதேவன் நக்கல் குரலில் கூறியபடி, அவள் அருகில் வந்து நின்றார். அவரது முகத்தில் அவளை வென்று விட்ட மமதை அப்பட்டமாய்த் தெரிந்தது.

"நான்தான் அன்னைக்கே சொன்னேனே... நீ தோத்துப் போயிடுவனு... பார்த்தியா! கடைசியில் நான் சொன்னதுதான் நடந்துச்சு..." வெற்றி பெற்ற வெறி அவரது கண்ணில் வெறி கொண்டு பிரதிபலித்தது.

தன் வெற்றிவாகையை எக்காளமிட்டுச் சொன்ன அவரது வார்த்தையில் திரும்பிப் பார்த்தவள், "எனக்கு என் உதய்யை விட இந்தச் சொத்து முக்கியம் இல்லை. உதயுடனான என் வாழ்க்கை வெற்றி பெற, நான் இதில் தோத்துப் போறதைச் சந்தோசமா ஏத்துக்கிறேன்..." என்றவள் அவரைக் கூர்மையாய்ப் பார்த்தவாறு,

"என்னைக்குமே அநியாயம் ஜெயிச்சுட்டே இருக்காது. ஒரு நாள் நியாயமும் ஜெயிக்கும். அந்த நாள் கூடிய சீக்கிரம் வரணும்னு கடவுள் கிட்ட வேண்டுறதுதான் இனி என்னோட முழுநேர வேலை..."

ஹா... ஹா... தோத்தவங்க எல்லோரும் சொல்ற சேம் டயலாக்..." - மகாதேவன் வாய் விட்டுச் சிரிக்க...

"உங்ககிட்ட பேசி என் டைமை நான் வேஸ்ட் பண்ண விரும்பல..." என்றவள் விறுவிறுவெனப் படிகளில் .ஏறினாள்

"முட்டாள்! யார் கிட்ட வந்து சவால் விடுற... நான் பார்க்க பிறந்து வளர்ந்த நீ, என்னைய எதிர்த்தா நான் விட்டுருவேனா..." அவளைப் பார்த்து அவர் கத்தினார்.

உமா அதைச் சட்டை செய்யாமல் அலட்சியப் படுத்தியவள் தனது உயிரைத் தேடி ஓடினாள்.

மகாதேவன் மனம் நிறைந்த மகிழ்வுடன் சோபாவில் அமர வர, அவரை வைத்த கண் வாங்காமல் பார்த்த தனம், "உமாவை உங்களுக்குத் தான் பெத்தேனான்னு எனக்குச் சந்தேகமா இருக்கு...?" ஆற்ற மாட்டாமல் தன் உள்ளத்துக் குமுறலைக் கொட்டி விட்டார்.

இத்தனை வருடங்களில் என்றும் எதிர்த்துப் பேசாத மனைவி, இன்று எதிர்த்ததை மனதில் குறித்து வைத்துக் கொண்ட மகாதேவன் தனத்தை ஒரு கணம் கூர்ந்து பார்த்தவர்,

"அதான் எனக்கும் சந்தேகமாயிருக்கு. ஒருவேளை அந்த ஜெகதீஷ்க்குப் பெத்தெடுத்தியோ? ஏன்னா அவனை மாதிரியே நீதி, நேர்மைன்னு பேசறாளே..."

அவரது வார்த்தைகள் என்னும் கத்தியால் தனத்தை உயிரோடு கூறு போட...

"என்னங்க..." தனம் தனது காதுகள் இரண்டையும் இறுகப் பொத்திக் கொண்டார்,

"பின்னே என்னைய என்ன சொல்ற...? நீ பெத்தது சரியில்லையே... என்னை மாதிரி இருந்தா, நான் ஏன் இந்தக் கேள்வி கேட்கப் போறேன்... ஆனா, அவளைப் பாரு... என் மூலமாப் பிள்ளைய பெத்ததுக்கு ஆதாரமா ஹரி அப்படியே என்னைய கொண்டு பிறந்திருக்கான்..." என்று அபிநயாவை உயர்த்தித், தனத்தைத் தாழ்த்த அந்த நொடி தனத்தினுள் ஏதோ ஒன்று மரித்தது.

இவ்வளவு நாள் அவருக்கும் கணவனுக்கும் இடையில் மெல்லிய நூலாய் இழையோடிக் கொண்டிருந்த பந்தம் ஒரேயடியாய் அறுந்து, தன் உறவை முறித்துக் கொண்டது.

ஒன்றும் பேசாது கணவனைப் பார்த்தவர், தனது அறைக்குள் சென்று முடங்கிப் போனார். மகளைப் பற்றிச் சிந்திக்கக் கூட அவரால் முடியவில்லை.

'யாரைப் பார்த்து என்ன கேள்வி கேட்கிற? பிள்ளப்பூச்சி மாதிரி இருந்துட்டு என்னையா கேள்வி கேட்கிற... இது ரொம்ப டேன்ஜரஸ் ஆச்சே... இப்ப போட்ட போடுல இனி எதையாவது யோசிப்ப... ம்ஹூம். எதையும் யோசிக்க முடியாது. எனக்கும் அதுதான் வேணும். என்னோட துருப்புச் சீட்டே அந்த ஜெகதீஷ்தானே...' என்று நினைத்த மகாதேவனுக்கு அந்த ஜெகதீசனின் வளர்ச் சிகள் ஞாபகம் வந்து, அவரின் கோபத்தை இன்னமும் விசிறி விட்டது.

"ஜெகதீஷ்..." ஆத்திரத்துடன் பல்லைக் கடித்தார் அவர்.

உமா அறைக்குள் நுழையவும், உதய் தனது பையை எடுத்துக் கொண்டு கிளம்பவும் சரியாக இருந்தது.

அதைக் கண்டு உமா பதட்டத்துடன், "உதய்..." என்று அவன் முன் வந்து நிற்க...

அவனோ அவளை ஏறெடுத்தும் பார்க்காமல் அவளைச் சுற்றிக் கொண்டு செல்ல... அவனின் கையைப் பிடித்துத் தடுத்து நிறுத்தினாள் அவள்.

அப்போதும் அவன் அவளை ஏறெடுத்துப் பார்க் காமல், தன் கரத்ததின் மீது படிந்திருந்த அவளது கரத்தைத்தான் பார்த்துக் கொண்டிருந்தான்.

முரட்டுத் தனமான கருமையான தனது கையோடு மென்மையான மெல்லிய வெண்மையான அவளது கை சிறிதும் பொருத்தமில்லாமல் இணைந்து இருப்பதைக் கண்டவன் மனதில் பெரும் வேதனை எழுந்தது.

முன்பு பெருமையாய் உணர்ந்த விஷயம் இன்று அவனைச் சிறுமைப்படுத்துவதாய்... "கையை எடு. என்னோட கறுப்பு உன் மேல ஒட்டிக்கப் போகுது..."

எங்கோ வெறித்து கொண்டு சொன்னவன் அவளைத் திரும்பியும் பார்க்கவில்லை.

அவனது தன்மையான பேச்சு அவளுக்குச் சிறிது தைரியத்தைக் கொடுத்தது.

"ஒட்டினா ஒட்டிக்கட்டும்..." என்றவள், "மத்த இட மெல்லாம் என்ன பாவம் பண்ணிச்சு..." என்று சொல்லிய படி அவனை அணைத்து கொண்டவள் முதுகு குலுங் கியது அழுகையில்...

அவள் அணைத்ததில் மனதில் எழுந்த உணர் வலைகளைக் கட்டுப்படுத்த முடியாமல், அவன் கையில் இருந்த பை நழுவிக் கீழே விழுந்தது.

அதற்காக அவன் அவளை மன்னிக்கவும் இல்லை. அவளை அணைக்கவும் இல்லை. அவளைத் தேற்றவும் இல்லை. கை முஷ்டிகளை இறுக்கித் தன் உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு அசையாமல் நின்றிருந்தான்.

அவன் எதுவும் பேசாமல் நின்றிருந்ததைக் கண்டு, அவனின் நெஞ்சில் இருந்து முகத்தை நிமிர்த்தி அண்ணாந்து அவனைப் பார்த்தவள்,

"உதய், அப்பாவைப் பத்தித் தெரிஞ்சிருந்தும் நீங்க இப்படிப் பேசுறீங்களே... உங்களை நான் அப்படி நினைப் பேனா உதய்! ப்ளீஸ் உதய், என்னைப் புரிஞ்சுக்கோங்க."

அவளது குரலில் இருந்த உண்மை அவனுக்குத் தெரியாமல் இல்லை. முதலில் இருந்த உதய்யாக அவன் இருந்திருந்தால், அவனது நாக்கு சாட்டையாய் மாறி இந்நேரம் அவளை உயிரோடு கொன்றிருக்கும்.

ஆனால் இப்போது இருக்கும் உதய் அவனுக்கே புதிதாய் இருந்தான். இந்தளவுக்கு அவமானப்பட்டும் ஆத்திரப்படாமல் அமைதியாய் இருப்பது அவனது இயல்பே கிடையாது.

உமா இடத்தில் வேறு யாராவது இருந்திருந்தால் இன்னேரம் அவர்கள் உயிரை அவன் எடுத்திருப்பான்... உமாவிடம் மட்டும் அவன் தழைந்து போக ஒரே காரணம் அவள் மேல் அவன் வைத்திருக்கும் கண்மூடித்தனமான காதல். அந்தக் காதலை உணர்ந்த புது மனிதனான உதய்யும்தான் காரணம்...

"உதய்... ஐ லவ் யூ உதய்..."

அதற்கும் அவனிடத்தில் பதில் இல்லை என்றதும், தன் இரு கரம் கொண்டு அவன் கழுத்தை வளைத்தவள், சற்றும் தாமதிக்காமல் அவனது முகம் முழுவதும் முத்த மழை பொழிய, அப்போதும் இரும்பின் உறுதியோடு உணர்வற்ற ஜடப் பொருளாய் நின்றிருந்தவனைக் கண்டு என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்தவள் அடுத்த நொடி, தனது மலர் இதழை அவனது இதழோடு பொருத்தினாள்.

அதில் அவனின் உடல் சற்று நெகிழ்ந்தாலும் அவளின் செயலுக்கு எந்தவித எதிர் வினையும்

இல்லாமல் இருந்தவனைக் கண்டு அவளுக்குச் சற்று மலைப்பாகவே இருந்தது.

அவனிடம் இருந்து விலகியவள், அவனை நேர்ப் பார்வையாய் பார்த்தவள், "உதய்... என் கண்ணைப் பார்த்து சொல்லுங்க. நான் உங்களைக் காதலிக்கல..."

அவள் சொன்னதும் அவனையும் அறியாது அவனது கண்கள் அவளை உற்று நோக்கத்தான் செய்தன.

அந்த அழகிய விழிகளின் விழி வீச்சின் அலையில் அவன் முழுவதுமாய் அடித்துச் செல்லப்பட்டான். இருந் தாலும்... அவனது மனதில் கேள்வி எழாமல் இல்லை.

"உதய்... என் கண்ணுல காதல் தெரியலையா...?" அவளது கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் வேறு பக்கம் பார்த்தவன்,

"எல்லாம் சரித்தேன்... ஆனா உங்கப்பா சொன்னது உண்மை இல்லைன்னு சொல்லு, பார்க்கலாம்..."

அவனது இந்தக் கேள்விக்கு அவள் என்ன பதில் சொல்வாள்...?

அவளது காதலில் அதுவும் அடங்கி இருக்கிறதே... ஆனால் அதற்கான காரணத்தை எப்படிச் சொல்வாள்? எவ்வாறு சொல்வாள்...? அதை இப்போது சொன்னாலும் அவன் புரிந்து கொள்வானா?

"உதய்..." வார்த்தைகள் வராமல் அவள் தடுமாற...

"அப்போ அவரு சொன்னது சரித்தேன் இல்லையா?" கூர்மையாய்ப் பாய்ந்தது அவனது வார்த்தைகள்.

"உதய்... நா..." என்றவளைப் பார்த்து, 'போதும்' என்பது போல் கையை உயர்த்தி, அவள் பேசுவதைத் தடை செய்தவன் தனது பையை எடுத்துக் கொண்டு வெளி யேற...

"நான் வேணாமா உதய்..." வலுவிழந்து வந்த அவளது வார்த்தைகளில், அவனது நடை ஒரு நொடி தயங்கி நின்றது.

மறு நொடி, "உன் வாழ்க்கை. உன் இஷ்டம்..." என்றவன் அறைக் கதவைத் திறக்க எத்தனிக்க...

எங்கிருந்து தான் அவளுக்கு அவ்வளவு வேகம் வந்ததோ... ஓடிச் சென்று அவனது கையைப் பிடித்துத் தடுத்தவள், கதவின் மீது சாய்ந்து நின்று கொண்டு, திமிராய் அவனைப் பார்த்தவள்,

"இப்போ எதுக்கு உங்களுக்கு இவ்வளவு கோபம்...? உங்களுக்கே இவ்வளவு கோபம் இருந்தா... எனக்கு எவ்வளவு கோபம் இருக்கணும்..."

அவள் வார்த்தைகளைக் கொண்டு பாய்ந்ததில் அவன் சற்றுத் திகைத்துத்தான் போனான்.

"இது என்ன புதுக் கதை?" - எரிச்சல் வந்தது அவனுக்கு. நியாயத்திற்குக் கோபப்பட வேண்டியது அவன்.

"எல்லாம் பழைய கதைதான் மச்சான்..."

அவளது மச்சான் என்ற அழைப்பில் அவளை முறைத்தான்.

"நான் தப்பு செஞ்சவதான்... உங்களைக் காரண காரியத்தோட காதலிச்சவதான்... இது எல்லாம் எப்போ? நான் உங்களைக் காதலிக்கும்போதுதான் இல்லையா?"

"இப்போ எதுக்கு இது?" அவன் சிடுசிடுத்தான். அந்த வார்த்தைகளை அவள் வாயில் இருந்து கேட்க அவனுக்குப் பிடிக்கவில்லை.

"அதுதானே மேட்டரே... ஆமாம் சாமி. நான் தப்பு செஞ்சவதான்... குற்றவாளிதான். ஒத்துக்கிறேன். இது எல்லாம் நாம காதலிச்சப்போ மட்டுமே... என்னைக்கு நான் வேண்டாம்... என் காதல் வேண்டாம்னு நீங்க நம்ம காதலை முறிச்சிட்டுப் போனீங்களோ, அன்றோடு நம்ம காதலும் முடிஞ்சிப் போச்சு. இதுக்கு அப்புறமும் நம்ம ரெண்டு பேருக்கும் இடையில் எந்தச் சம்பந்தமும் இல்லை. காதலும் இல்லை. நீங்க உங்க வழியைப் பார்த்துட்டுப் போயிட்டீங்க. நானும் என் வழி தனி வழின்னு வந்துட்டேன்...

"நம்ம ரெண்டு பேருக்கும் இடையில் நடந்த இந்தக் கல்யாணம் உங்க தங்கச்சிக்காக நீங்க பண்ணிக்கிட்ட கல்யாணம்... அதே மாதிரி நான் என் அம்மாவுக்காகப் பண்ணிக்கிட்ட கல்யாணம் இது... இதுல நமக்கு இடையில் எப்படி முன்னாள் காதல் வர முடியும்னுதான் நான் கேட்கிறேன்..."

அவளது பேச்சில் அவனே சற்று அயர்ந்துதான் போனான். ஊருக்கே தண்ணி காட்டுற அவனிடம் அவள் கடலளவு நீரைக் காட்டினாள்.

'எதுக்கும் எதுக்கும் இணை கூட்டுறா பாரு...' நினைத்தவன் அவளை முறைத்துப் பார்த்தான்.

அவனின் பேச்சின்மையைத் தனக்குச் சாதகமாக்கிக் கொள்ள நினைத்தவள், "அதனால இந்தக் காதல் கத்திரிக்காய், வெண்டைக்காய்னு காய்கறி வியாபாரம் பண்ணாம ஒழுங்கு மரியாதையா உங்க பொண்டாட்டிய கூட்டிட்டுப் போய் வாழுற வழியைப் பாருங்க மச்சான்..."

அவளது இந்தப் பேச்சில் அவ்வளவு நேரம் காதல் என்கிற கூட்டுக்குள் பசுவாய் மாறி அடங்கியிருந்த உதய் என்னும் வேங்கை சீறிக் கொண்டு வெளியில் வந்தான்.

"ஓய்! என்னடி லந்தா உனக்கு? என்ன... விட்டாப் பேசிட்டே போற...? நான் பேசாம இருந்தா உனக்குத் திமிரு துளிர் விட்டுப் போச்சோ... தப்பு பண்ணின உனக்கே இவ்வளவு தெனாவெட்டுன்னா... எனக்கு எவ்வளவு இருக்கும்... உன் கூட வாழ எனக்கு விருப்பம் இல்ல... உன்னய என் கூடக் கூட்டிட்டுப் போகவும் முடியாது. உன்னால என்ன பண்ண முடியுமோ பண்ணிக்கடி..." என்றவன், கதவின் மீது சாய்ந்திருந்தவளை அப்புறப் படுத்த எண்ணி அவளின் தோளின் மீது கை வைக்க,

"அப்படியா மச்சான்! தாராளமாப் போய்க்கோங்க," என்று அவனுக்கு வழி விடுவது போல் முன்னால் நகர்ந் தவள் அவனது சட்டைப் பையில் இருந்து அவனது அலைபேசியை எடுத்து அதில் ஏதோ ஒரு எண்ணைத் தேடினாள்.

"ஏய், என்னடி பண்ற...?" கடிந்து கொண்டே அவன் தன் அலைபேசியைப் பிடுங்க வர... அதை லாவகமாய்த் தடுத்தவள்,

"ஊருக்கு எல்லாம் பஞ்சாயத்து பண்ற என் மாமனார் கிட்ட நியாயம் கேட்கப் போறேன்... மாமா, மாமா! என்னைய கல்யாணம் பண்ணின உங்க சின்னப் பையன் குமாரு என்னைய விலக்கி வைக்கணும்னு நினைக்கிறாரு... இதுக்கு நீங்களே ஒரு நியாயத்தைச் சொல்லுங்கன்னு அவர்கிட்டயே கேட்கப் போறேன். ஊருக்குத் தீர்ப்பு சொல்ற மகாராசன் எனக்கு ஒரு வழி சொல்ல மாட்டாரா என்ன...?" நீட்டி முழக்கி நக்கலாய்க் கேட்டவள், அலைபேசியை தீவிரமாய் ஆராய...

அவளின் பேச்சில் உதய் அதிர்ந்து போய் நின்றிருந்தான். அவனது பிரச்சினையில் அவன் எப்படித் தன் குடும்பத்தை மறந்தான்...? உமா இல்லாமல் ஊருக்குப் போனால் வீட்டினரே அவனை ஆயிரம் கேள்வி கேட்டு அவனை உண்டு இல்லை என்று ஒரு வழி பண்ணி விடுவார்கள்.

அவனது தந்தை ஒரு படி மேலே போய் அவளை அழைத்து வந்தால்தான் உனக்கு இந்த வீட்டில் இடம் என்று சொன்னாலும் சொல்வார்... அந்தளவுக்குப் பெண்களை மதிப்பவர். அவர்கள் பக்கம் கட்டாயம் நியாயம் இருக்கும் என்று நம்புகின்றவர் அவர்.

"என்ன மச்சான், ரொம்ப யோசிக்கிற மாதிரி இருக்கு?"

அவனது இந்தத் தயக்கமே அவளுக்கு உற்சாகத்தைத் தந்தது. உதய்யுடன் தான் இருந்தால் எந்தப் பிரச்சினை வந்தாலும் எளிதில் சமாளித்து விடலாம் என்ற தைரியம் வரப் பெற்றவள் அவனை உற்றுப் பார்த்தாள்.

அவனோ என்ன செய்வது என்று தெரியாமல் தலையைக் கோதிக் கொண்டு அப்படியே நின்றான். இது வேலைக்காகாது என்று நினைத்தவள், அவனது அலை பேசியில் இருந்து அவனது வீட்டிற்கு அழைத்தவள்... அதை ஸ்பீக்கர் மோடில் அவள் போட... அழைப்புப் போகும் சத்தத்தில் அதிர்ந்து போய் அவளைப் பார்த்தவன், அவளது கையில் இருந்து அலைபேசியைப் பிடுங்கி அணைத்துத் தனது சட்டைப் பையில் போட்டுக் கொண்டு முகத்தை இறுக்கமாய் வைத்துக் கொண்டவன்,

"போ... போய்க் கிளம்பு..."

அவன் சொன்னதும் சந்தோஷமாய்த் தனது பொருட்களை எடுக்கப் போனவளை விரலால் சொடக்குப் போட்டு கூப்பிட்டவன், "அதுக்குன்னு ரொம்பச் சந்தோஷப் பட்டுக்காதே... இனிதான் வாழ்க்கையில் நரகம்னா என்னன்னு பார்க்கப் போற..." அவன் அவளுக்குச் சவால் விட...

அவனது வார்த்தையில் திரும்பி அவனைப் பார்த்தவள் கண்களில் பயத்தைத் தேக்கி, அவன் அருகில் வந்து நிற்க... அவளது பயந்த தோற்றம் அவனுக்கு வெகு திருப்தியாய் இருந்தது. அவனது மனத்திருப்தியைக் குலைக்கும் வண்ணம் அவள் அடக்க மாட்டாமல் வாய்

விட்டுச் சிரிக்கத் தொடங்கினாள். அதில் அவனது கோபம் மீண்டும் திரும்பலானது.

"ஏய்! எதுக்குடி இந்த இளிப்பு? ஏன் உன்னய கஷ்டப்படுத்த மாட்டேன்னு நெனைச்சியா...?" அவன் சீறும் போதே...

"கஷ்டம்னா என்ன மாதிரிக் கஷ்டம் மச்சான்..." ஒன்றும் அறியாதவள் போல் இமைகளைப் படபடவென அடித்தபடி கேட்டவளுக்கு, என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் அவன் விழிக்க...

"நான் சொல்லவா...?" அவனிடம் அனுமதி கேட்டவள், அவன் அனுமதி இல்லாமலேயே மேலே தொடர்ந்தாள்.

"பிடிக்காத பொண்டாட்டிய அவ இஷ்டம் இல்லாம கதறக் கதற ரேப் பண்றது... அதைத்தானே நீங்க சொன்னீங்க...?" அவளது வெளிப்படையான அந்தப் பேச்சில் அவன் திகைத்துப் போய் அவளைப் பார்க்க...

"நான் வேணும்னா உங்களுக்குப் பிடிக்காத பொண்டாட்டியா இருக்கலாம். ஆனா, எனக்கு இஷ்டம் இல்லாம இல்ல... ஏன்னா உங்களைத்தான் எனக்கு ரொம்பப் பிடிக்குமே... இப்பவே வேணும்னாலும் வச்சுக்கலாமா... நான் ரெடிப்பா. கூப்பிடுறது... என் ஆசை மச்சானாச்சே...!" கண்ணைச் சிமிட்டியபடி அவனருகில் வந்தவளைக் கண்டு அவன்தான் அதிர்ந்து போய்ப் பின்னால் சென்றான்.

"ம்ஹூம்... அதானே பார்த்தேன்... என் மச்சானுக்காவது தைரியம் வர்றதாவது..." என்று பெருமூச்சு

விட்டவள் அப்படியே நிற்க... அதில்தான் அவனது மூச்சு சீரானது.

தனது மன அதிர்வை அவளுக்குக் காட்டாமல் மறைப்பதற்காக, "இப்ப நீ கௌம்பப் போறியா இல்லையா? இல்ல, நான் பாட்டுக்குக் கௌம்பிப் போயிட்டே இருப்பேன்..."

அவன் அதட்டலாகச் சொல்லவும் அவள் நமட்டுச் சிரிப்புடன், தனது பொருட்களைச் சேகரித்துப் பெட்டியில் அடைக்கலானாள்.

இந்த மட்டும் அவன் இறங்கி வந்ததே அவளுக்குப் போதுமானதாய் இருந்தது. மளமளவென்று விரைவாகக் கிளம்பியவள், அவனோடு இணைந்து கீழே சென்றாள்.

அன்னையிடம் சொல்லிக் கொள்ள வந்தவள், அவரது ஓய்ந்த தோற்றத்தைக் கண்டு, "அம்மா, என்னோடு வந்திருங்களேன்..."

கண்கள் கலங்க மகளைப் பார்த்தவர் அவளது முகத்தை அன்பாய் வருடியவர், "நீ சொன்னப்போ எல்லாம் நான் நம்பாம இருந்துட்டேன். ஆனா, இப்போ உங்கப்பாவா இப்படின்னு என்னால நம்ப முடியல, உமா..." விரக்தியாய்ச் சொன்னவர்,

"அவர் எப்படி இருந்தா என்ன... நான் அவர் மேல வச்சிருக்கிற அன்பு உண்மையானது. என்னால அவரை விட்டோ... இந்த வீட்டை விட்டோ வர முடியாது. அப்படி நான் வந்தா அவர் என்னைப் பத்திப் பேசியது எல்லாம் உண்மையாப் போயிரும். நான் செத்த பிறகு என்னோட

உடல்தான் இந்த வீட்டை விட்டுப் போகணும். அது வரைக்கும் நான் இங்கேதான் இருப்பேன்..."

'அம்மா... இதுக்கே இப்படி விரக்தி அடைஞ்சிட் டீங்களே... அப்பாவைப் பத்தி இன்னும் தெரிஞ்சா என்னவாகுவீங்களோ?' மனதுக்குள் குமுறிய உமாவின் கண்களில் கண்ணீர் வழிந்தன.

"ச்சீ... என்ன இது அழுதுட்டு... அழக் கூடாது உமா..." மகளின் கண்களைத் துடைத்து விட்ட தனத்திற்கும் அழுகை முட்டிக் கொண்டு வந்தது.

"மாப்பிள்ளையை அனுசரிச்சு நடந்துக்கோ... அவர் கோபப்படுற மாதிரி நடந்துக்காதே..." மகளுக்குத் தாயாய் அறிவுரை கூற, அவள் சரி என்று தலையை ஆட்டினாள்.

"கொஞ்சம் இரு. உனக்குக் கொடுக்க வேண்டிய பலகாரம் எல்லாம் ரெடியா இருக்கு... அதை எடுத்துக் காரில் வைக்கச் சொல்றேன்... போனதும் மறக்காம உன் மாமியார் கிட்ட எடுத்துக் கொடுத்திரு..." என்றவர், அதற் கான ஏற்பாட்டில் இறங்க... மௌனமாய்த் தாயைப் பின் தொடர்ந்தாள் உமா.

உமாவும் உதய்யும் கிளம்புவதைக் கண்டு மகா தேவனுக்கு எல்லையில்லா நிம்மதியாய் இருந்தது. ஏதோ பெரிய தடைக் கல் அகன்றார் போன்று அவருக்கு சந்தோஷமாய் இருந்தது.

உதய்யிடம், "ரொம்பத் தேங்க்ஸ் மாப்பிள்ளை... நீங்க இல்லன்னா இந்தச் சொத்துகள் எனக்குக் கிடைச்சு இருக்காது... நீங்க சத்தம் போட்டதுல இத்தனை நாள்

சொத்தைக் கொடுக்காமல் ஆட்டம் காட்டிட்டு இருந்தவ இன்னைக்கு எல்லாத்தையும் என் பேருக்கு எழுதிக் கொடுத்துட்டா..."

அவர் சொன்னதைக் கேட்டு உதய் அதிர்ந்து போய் உமாவைப் பார்த்தான். அவனது பார்வையை உணர்ந்தவள்... அவனின் கையோடு தன் கையை கோத்துக் கொண்டவள் மகாதேவனை நிமிர்ந்து பார்த்து,

"இவருக்கு முன்னாடி இந்தச் சொத்து எல்லாம் எனக்குத் தூசு. என்னோட சொத்து... என்னோட வாழ்க்கை.... என்னோட உயிர் எல்லாம் இவர்தான்..." என்றவளின் வார்த்தைகள் ரணமாயிருந்த அவனது மனதை மயிலிறகாய்ச் சுகமாய் வருடிச் சென்றதுதான். இல்லை என்பதற்கு இல்லை... இருந்தாலும் அந்த ரணத்தை உண்டாக்கியவளே அவள்தானே!

காயம் ஆறினாலும் அதன் வடு மாறுமா? அந்த வடுவும் மாறுவது உமாவின் கைகளில்தான் இருக்கிறது. என்ன செய்து அவனின் மனதை மாற்றப் போகிறாள்...?

காலம் பதில் சொல்லுமா, இல்லை உமாவே அதற்குப் பதில் சொல்வாளா...?

'எனக்காகச் சொத்துக்களை விட்டுக் கொடுத்துட்டாளா?" என் மேல் அந்தளவுக்குக் காதலா...?' என்று உதய் நினைக்கும் போதே,

'டேய் முட்டாள்! உன் மேல் காதல் இல்லாமலா அவளோட சொத்து முழுவதையும் உனக்கு

எழுதிக் கொடுக்க முன்வந்தாள்...' அவனது மனசாட்சி இடித் துரைத்தது.

'ஏன் எழுதிக் கொடுக்க நினைத்தாள்...? எதற்காக எழுதிக் கொடுக்க நினைத்தாள்...? அவளோட சொத்துக் களைக் காப்பாற்றுவதற்காகவா... அவளுக்கு நான் அடி யாளாய் வேலை பார்ப்பதற்காகவா...?' என்று அவனால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

அவளின் காதலான செய்கைக்குப் பின்னால் இருக்கும் காரணத்தை அவனால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

'சரி. அதை எல்லாம் விடு... இப்போ உனக்காகத் தானே, நீ வேண்டும் என்றுதானே அவளது சொத்துக் களை அவங்கப்பா பேருக்கு மாற்றி யிருக்கிறாள்... அதற்கு நீ என்ன செய்யப் போகிறாய்...?

'உமா மேல் காதல் இருக்கு... உமா உமான்னு துடிக்கிறியே... உனக்கு உண்மையான காதல் அவள் மேல் இருந்தா அவள் அப்பாகிட்ட இருந்து அந்தச் சொத்துக்களை மீண்டும் அவளிடமே மீட்டுக் கொடு... அவள் காதல் எப்படிப்பட்டதா இருந்தா என்ன... உன்னு டையது உண்மையான தெய்விகக் காதலாய் இருந்தால் இந்த ராட்சஷன் ஜெயிப்பதற்கு வழி வகுக்காதே...' அவனின் மனசாட்சியே அவனை நன்கு குத்திக் காண் பித்தது.

உமா தனது தந்தையால் அனுபவித்த துன்பங்கள் அனைத்தும் அவனுக்கு நன்கு தெரியும். எல்லாம் தெரிந்

திருந்தும் தான் அப்படியே ஒன்றும் செய்யாமல் மகா தேவனை விட்டு விட்டுச் செல்ல அவனால் முடியவில்லை. ஊருக்கே நியாயம் சொல்லும் தங்கவேலுவின் ரத்தம் அவனது உடம்பிலும் ஓடுவதால் தன் மனைவிக்கான நியாயத்தைப் பெற்றுக் கொடுத்திடவே அவன் விரும்பினான்.

மனதில் தெளிவான சிந்தனை வந்ததும், அவன் தன் அருகில் நின்றிருந்த உமாவின் பக்கம் திரும்பி, "என்ன உமா! உங்கப்பா என்னென்னமோ பேசிட்டுப் போறாரு...? நான் சொன்னேனா... உன் சொத்தை எல்லாம் அவர் பேருல எழுதிக் கொடுன்னு. எனக்குத்தேன் உன் சொத்து வேணாம்னு சொன்னேன்... அதுக்காக அதைத் தானமா அவருக்குத் தூக்கிக் கொடுக்கச் சொல்லல."

அவனின் பேச்சில் உமா திகைப்பாய் அவனைப் பார்க்க... மகாதேவனோ குழப்பத்துடன் அவனைப் பார்த்தார்.

"உமா, உன் லாயருக்கு ஃபோன் பண்ணி எதையும் மாத்த வேணாம்னு சொல்லு..."

அவன் சொன்னது கூடப் புரியாமல் உமா இன்னமும் திகைப்பில் இருக்க...

"உமா... நான் சொல்றது காது கேட்குதா...?" அவன் அவளை உலுக்கவும்தான்...

"உதய்..." என்றாள் கண்கள் கலங்க.

"ம்... உதய் தான்... முதல்ல லாயர்கிட்ட பேசு..."

அவன் அவளை வற்புறுத்த... அவள் தன் அலை பேசியைக் கையில் எடுத்தாள்.

மகிழ்ச்சியில் முகம் மலரக் கண்களில் இருந்து வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டே, தன்னைப் பார்த்துப் புன்னகைத்தபடி வக்கீலிடம் பேசிய உமாவின் தோற்றம் அவனது நெஞ்சில் அழகிய ஓவியமாய்ப் பதிந்தது.

வக்கீலிடம் சொத்தைத் தந்தையின் பேருக்கு மாற்ற வேண்டாம் என்று பேசி முடித்தவள்... தனது மனச் சந்தோஷத்தை வெளிப்படுத்தும் விதமாய் அவனது தோளில் சாய்ந்து கொண்டாள். அவனும் தன் கைகளை அவளது தோளில் அணைத்தார் போன்று வைத்துக் கொண்டான். இதைக் கண்டு தனத்தின் மனம் நிம்மதி அடைந்தது.

மகாதேவனோ ஆத்திரத்தின் எல்லையில் இருந்தார். "உன்னை அவள் அடியாளாத்தான் பயன்படுத்தி இருக்கா. அதை நீ மறந்திடாதே..." கோபத்தில் மருமகன் என்ற மரியாதை கூடக் காற்றில் பறந்து விட்டது,

"ஒவ்வொரு புருஷனுக்கும் உள்ள கடமை தன்னோட பொஞ்சாதியப் பாதுகாக்கிறது... அப்போ ஒவ்வொரு புருஷனும் அடியாள் தானே... என்ன... உமா அவளோட, அவ சொத்தையும் பாதுகாக்கணும்னு சொல்றா... அவ்வளவுதான். நிச்சயம் நான் அவளுக்குப் பாதுகாப்பா இருப்பேன்..." என்றவன் பார்வை, 'உன்னிடம் இருந்து அவளைப் பாதுகாப்பதுதான் என் முதல் வேலை!' என்பது போல் மகாதேவன் மேல் அழுத்தமாய்ப் படிந்தது.

"அப்போ எதுக்கு அவ்வளவு ரோசமாப் போன? இப்போ சொத்து கை விட்டுப் போனதும் இப்படி மாத்தி உல்டாவாப் பேசுறியா...?" - கேலி நிரம்பி வழிந்தது அவரது குரலில்...

"அப்பா, தேவையில்லாமப் பேசாதீங்க..." - உமா சற்று உரக்கவே கத்தி விட்டாள். ஏனெனில் இப்போது தான் உதய் தனது கோபத்தில் இருந்து இறங்கி வந்து இருக்கிறான். இந்த நேரத்தில் தனது தந்தை இப்படிப் பேசியது அவளுக்கே பிடிக்கவில்லை...

"அப்போ... இப்போ எப்பவுமே நான்தேன் பேசுறேன். உங்கள மாதிரி எங்களுக்குப் பினாமி எல்லாம் கிடையாது... அப்போ நான் கோபப்பட்டதுக்குக் காரணம்... இந்த மாதிரி அல்ப விஷயத்துக்காகவா என் பேருல சொத்து எழுதுனன்னு உமா மேல கோபம் வந்தது... அவளைப் பாதுகாக்கிறத விடவா எனக்கு வேற வேலை யிருக்கு...

"கூலி வாங்கிட்டு வேலை செய்ய நான் என்ன வேலக்காரனா... நான் அவ புருசன்... எம் உடம்புல உசிரு இருக்கிறவரை அவளைக் காப்பாத்த வேண்டியது என் கடமை... அதுக்கு எதுக்குக் கூலி மாதிரி இந்தச் சொத்து நடுவுலன்னுதான் அதை அவ பேருல மாத்தி எழுதினேன். அதை அவ வேற மாதிரிப் புரிஞ்சிக்கிட்டு நான் அவ மேல் கோபமா இருக்கிறதா நினைச்சிச் சொத்து பூராத்தையும் உங்க பேருல எழுதிட்டா..." என்று நீளமாய் உரைத்தவன் பேச்சில், மகாதேவனே சற்றுக் குழம்பித் தான் போய்விட்டார்.

உதய் தனது வாதத் திறமையை மாமனாரிடம் காட்டி அவரைத் தலையால் தண்ணி குடிக்க வைத்தான்... அவன் கைதேர்ந்த வக்கீல் என்பது தெரியாமல், தன் மகளுக்கு அவனை மணம் முடித்து வைத்துத் தனக்குத் தானே ஆப்பு தேடிக் கொண்ட மகாதேவனின் மடமையை என்னவென்று சொல்வது?

அவனது ஒவ்வொரு வார்த்தையிலும் உமா இறக்கை இல்லாமல் வானத்தில் பறந்து கொண்டிருந்தாள்,

"என்ன... சும்மா பேசணும்னே பேசிட்டு இருக்கியா? அப்போ எதுக்கு உமாவைப் பார்த்து, 'இனி நமக்குள் ஒட்டவே ஒட்டாது'னு பெருசாச் சொன்ன... அவளை வேண்டாம்னு பேசினவன் தானேடா நீ..." மகாதேவனுக்கு ஆற்றாமை தாங்க முடியவில்லை.

கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை என்ற ஆத்திரம், உமாவை வெல்ல முடியாமல் போனதால் ஏற்பட்ட ஏமாற்றம்... எல்லாம் அவரை ஒன்றாய்த் தாக்க... தனது நிதானத்தை அவர் கொஞ்சம் கொஞ்சமாய் இழந்து கொண்டிருந்தார்.

"என்ன மாமா, சின்னப்புள்ளத்தனமா பேசிக்கிட்டு...? அது அந்த நேரத்துல ஏதோ கோபத்துல சொன்னது... புருசன், பொஞ்சாதி சண்டையும் சின்னப் புள்ளையங்க சண்டையும் ஒண்ணு... இப்ப அடிச்சுக்குவோம். அடுத்த நிமிசம் ஒண்ணு கூடிக்குவோம்... இதெல்லாம் ரெண்டு பொஞ்சாதிக்காரர் உங்களுக்குத் தெரியாததா என்ன...?

"உமாவுக்கு என் கோபத்தை எப்படி அடக்கணும்னு அவளுக்கு நல்லாவே தெரியும்..." கடைசி வரியை அழுத்த

மாய்ச் சொன்னவன்... மனைவியைத் தன்னோடு சேர்த்து இன்னமும் அழுத்தமாய் அணைத்துக் கொண்டான்.

அவனின் பேச்சைக் கேட்ட தனத்திற்கு, இனி மகள் தனது வாழ்க்கையைக் காப்பாற்றிக் கொள்வாள் என்ற நம்பிக்கை வந்திருந்தது.

"இவ்வளவு கோபத்திலேயும் நான் இந்தச் சொத்தைத் தான் வேணாம்னு எழுதிக் கொடுத்தேன்... உமாவை வேணாம்னு எழுதிக் கொடுக்கலையே..."

மாமனாரை ஆழ்ந்து பார்த்துக் கொண்டே சொன்னவன், "ஏன்னா, என் சொத்தே உமா தான்..." அவள் தனக்குச் செய்த நியாயத்தை அவளுக்குத் திருப்பிச் செய்து, அவனது காதலை மகாதேவனுக்கு மட்டும் இல்லாமல் அவளுக்குமே புரிய வைத்தான்.

"சரி, உமா! உங்கப்பாருக்கு இவ்வளவு விளக்கம் போதும்னு நினைக்கிறேன். சொல்லிட்டு வா, உமா! நாம் கெளம்பலாம்..." என்றான், தன் இரு கைகளையும் உயரே தூக்கிச் சோம்பல் முறித்தபடி.

அவனது வார்த்தைகளில் உற்சாகம் பெற்ற உமா அன்னையிடம் விடைபெற்று காரில் ஏறப் போனவள், பின் நின்று தந்தையைப் பார்த்து,

"ஏற்கெனவே நான் சொல்லல... என்னைக்குமே அநியாயம் ஜெயிச்சுட்டே இருக்காது. ஒரு நாள் நியாயமும் ஜெயிக்கும்னு... பார்த்தீங்களா! நான் சொல்லி சில மணி நேரத்திலேயே நியாயம் ஜெயிச்சிருச்சு..."என்றவள் அவரைப் பார்த்த பார்வையில் இருந்த செய்தி அவரைப் பயமுறுத்தியது.

"இதே மாதிரி எல்லா விஷயங்களிலும் நியாயம் ஜெயிக்கும்..." என்றவள் அவரைத் திரும்பியும் பார்க்காமல் காரிலேறி அமர்ந்தாள்.

அவளின் பேச்சு சொன்னதன் அர்த்தம் புரிந்த மகாதேவனின் முகம் பயங்கரமாய் மாறியது...

தன்னருகில் அமர்ந்திருந்த உதய்யின் மேல் தனது கையை வைத்தவள், "உதய் தேங்க்ஸ்..." என்றாள்.

வெடுக்கென்று தன் கையை அவளது கையில் இருந்து உதறிய உதய், "உங்கப்பா கிட்ட விட்டுக் கொடுக்காமப் பேசியதுக்காக நமக்கு ஊடால இருக்கிற பிரச்சினை இல்லாமப் போயிருச்சுன்னு அர்த்தம் இல்ல... அது அப்படியேதான் இருக்கு. எம் மனசுல உள்ள காயம் அப்படியேதான் இருக்கு."

ஓட்டுநருக்குக் கேட்காவண்ணம் தாழ்ந்த குரலில் முணுமுணுத்தவன் முகம் கோபத்தில் இறுகியிருந்தது. அதில் முதலில் திகைத்தவள் பின் கலக்கமுற்றாள்.

'என்ன உமா, இதுக்கே இப்படிக் கலங்கினா எப்படி? நீ போக வேண்டிய தூரம் இன்னும் இருக்கு...' மனதைத் தேற்றிக் கொண்டவள் சட்டென்று அந்தக் காரியத்தைச் செய்தாள்.

அவனது தோளில் சாய்வது போல் அவனருகே அவள் செல்ல, அவளது செயலில் பதறியவன், "ஏய் டிரைவர் இருக்கான்டி. தள்ளி உட்காரு..." என்று அதட்ட...

முடியாது என்கிற ரீதியில் தலையை ஆட்டி மறுப்பு தெரிவித்தவள், "உங்க மனசுக் காயத்துக்கு என்னாலான

மருந்து...” என்றவள் அவன் எதிர்பாராத நேரத்தில் அவனது நெஞ்சில் இடப் பக்கம் இதழ் பதித்து நிமிர, அவளது செயலில் அவன் அதிர்ந்தாலும், அவளது அந்த இதழொற்றல் அவனுக்கு மருந்தாய் மாறியதுதான் விந்தையிலும் விந்தை.

அவனது அமைதியைத் தனக்குச் சாதகமாய் எடுத்துக் கொண்டவள் அவனது கையைப் பற்றிக் கொண்டு அவனது தோளில் சாய்ந்து கண் மூட, அவனால் அவளது அந்தச் செய்கையைப் புறக்கணிக்க முடியவில்லை.

ஓட்டுநர் இருப்பதால் உமாவைத் தன்னால் எதிர்க்க முடியவில்லை என்று அதற்கு அவனாய் ஒரு காரணம் கற்பித்துக் கொண்டான்.

உதய்யின் வீட்டிற்கு வந்தவர்கள் எல்லோரும் அவர்களை நலம் விசாரிக்க, அஜித் உமாவின் கால்களை ஓடி வந்து கட்டிக் கொண்டான்.

அவனின் எண்ணம் அறிந்து அவளும் தனது கைப்பையில் இருந்து சாக்லேட்டை எடுத்து நீட்ட,

“தேக்கூ...” என்று சொன்னவன் அவளது கன்னத்தில் முத்தமிட, அவளும் பதிலுக்கு முத்தமிட்டாள் தனது கணவனைப் பார்த்துக் கொண்டே!

அன்று ஷாப்பிங் மாலில் அவள் நடந்து கொண்ட விதம் உதய்க்கு ஞாபகம் வந்தது... அது மட்டுமா ஞாபகம் வந்தது. அந்தப் பெண்மணி கூறிய வார்த்தைகளும் ஞாபகத்தில் வந்தது.

உமாவைப் போல் ஒரு பெண் குழந்தையை நினைத்துப் பார்த்தவனுக்கு அந்த நினைவே தித்திப்பாய் இருந்தது. அடுத்த நொடி தன் நினைவு போகும் திசை யறிந்து, தலையைக் குலுக்கி அந்த நினைவை விரட்டி அடித்தவனால் அவளை முறைக்க மட்டுமே முடிந்தது.

இரவு உணவு வேளையின்போது மாரீஸ்வரி சொல்லச் சொல்ல... சமையலறையில் இருந்து உணவு பதார்த்தங்களை எடுத்து வைத்தவள், அவர் சொன்னது போல் பரிமாறத் துவங்கினாள்.

நித்யா அஜித்தைத் தூங்க வைக்கச் சென்றிருந் தாள்.

உமா வேலை செய்வதைப் பார்த்துக் கொண்டிருந்த தங்கவேலு, "ஏம்மா புது மருமவளே... இப்படி உம் அத்தையோட முந்தானைய பிடிச்சிட்டு வீட்டு வேலை செஞ்சிட்டு எம்புட்டு நாளைக்கு இருக்கப் போற... வேலைக்குப் போகணும்கிற எண்ணம் எல்லாம் இல்லையா?" திடீரென்ற அவரது பேச்சில் அவள் திருதிரு வென விழித்தாள்,

உதய் அவள் முழிப்பதைக் கண்டு, "நீ ஹாஸ் பிடலு போறதைப் பத்தி அப்பா கேக்குறாங்க..." என்றாள்.

"ம்... போகணும் மாமா..." மெதுவான குரலில் அவள் உரைக்க...

"உசிரு காக்கிற டாக்டரு தொழிலு லேசானது இல்லம்மா... எல்லாருக்கும் அந்தப் படிப்பு மண்டையில ஏறாது. இதோ, உம் புருசன் குமாரு டாக்டருக்குப்

படிக்கணும்னு நானுந்தேன் ஆசைப்பட்டேன்... எங்கே பயலுக்குப் படிப்பு ஏறுனாத்தானே..."

அவர் சொன்னதைக் கேட்டு உமாவுக்குச் சிரிப்புப் பொங்கியது... கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

அதைக் கண்ட உதய்க்கு இரத்த அழுத்தம் ஏகத் துக்கும் எகிறியது. "அப்பா, என் படிப்பைப் பத்தின பேச்சு இப்போ எதுக்கு...?"

"பார்த்தியாம்மா... இப்பக் கூடப் பயலுக்குப் படிப் புன்னா வேப்பங்காதான்..." மகனை வாரியவர் உமா விடம், "அதிக நாள் லீவு போடாம வேலைக்குப் போற வழியைப் பாரு... நீங்கெல்லாம் நான் கும்பிடுற சாமிக்கும் மேல..." அவரது வார்த்தைகள் அவளின் மனதை நெகிழ்த் தியது.

"நாளைக்குப் போறேன் மாமா..." அவள் சொன் னதும், ஏற்றுக் கொள்வது போல் அவர் தலையை ஆட்டி னார்.

அறைக்குள் வந்த உமா அங்கு ஏற்கெனவே படுத்திருந்த உதய்யின் மறுபக்கம் சென்று படுத்தவள், அவனை எப்படி நெருங்குவது என்று தெரியாமல் விழித்தாள். சின்னச் சின்னச் சீண்டல்கள் சீண்டி அவனை வம்பிழுத்தவளால் அதே மாதிரிப் படுக்கையிலும் வம் பிழுக்க முடியவில்லை.

ஏதாவது கடுமையான வார்த்தைகளை அவன் கொட்டி விட்டால்... அதனால் அமைதியாய் நல்ல பிள்ளை போல் படுத்துக் கொண்டாள்.

உதய் நன்கு உறங்கியது தெரிந்த பின்பே அவனது புறம் திரும்பினாள். அவன் அருகில் சென்று அமர்ந்தவள் அவனது முடியை மெல்லமாய் வருடிக் கொடுத்தாள். தூக்கத்தில் கூடப் பிடிவாதமாய் ஆளுமையுடன் படுத்து உறங்கும் கணவனை ரசித்துப் பார்த்தது அவளது கண்கள்.

அவனை முதன் முதலில் சந்தித்தபோது அவனின் குண இயல்பு வேறு... ஆனால் இன்று அவனிடத்தில் குடி கொண்டிருக்கும் குண இயல்போ முற்றிலும் வேறு... அன்றைய உதய்க்கும் இன்றைய உதய்க்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசத்தை அவள் உணராமல் இல்லை.

அவன் இந்தளவுக்கு மாறியிருப்பதற்குக் காரணம் தன் மேல் அவன் கொண்டுள்ள காதல்தான் என்பதும் அவளுக்கு நன்கு தெரியும். அதில் அவளுக்குச் சிறிது கர்வமும் உண்டு.

அன்றும் இன்றும் அவனும் அவளும் ஒருவர் இடத்தில் ஒருவர் கோபம் கொண்ட போதும் இருவரும் ஒருவரை ஒருவர் பிரிய நினைத்தது கிடையாது... இந்த அன்பு ஒன்று போதும்... அது எல்லாவற்றையும் மாற்றும் என்று நம்பிக்கை கொண்டவள், அவனது நெற்றியில் மென்மையாய் முத்தமிட்டாள்.

ஏனோ அவனை விட்டு விலக மனமில்லாமல் அவனை ஒட்டிக் கொண்டு படுத்தவள், அடுத்த ஒரு சில நிமிடங்களில் உறங்கிப் போனாள்,

காலையில் எழுந்த உதய், தன் மீது படுத்திருந்த உமாவைக் கண்டதும் திடுக்கிட்டுத்தான் போனான்.

தூக்கத்தில் தன்னையும் அறியாமல் வந்திருப்பாள் என்று எண்ணியவன் அவளை மெதுவாய் நகர்த்திப் படுக்கையில் படுக்க வைத்தான்.

ஆழ்ந்த துயிலில் இருந்த மனைவியின் அழகு அவனைப் பெரிதும் கவர்ந்தது. அவனையும் அறியாமல் அவள் முகம் நோக்கிக் குனிந்தவன் முகத்தில் அறைந்தது போல் சட்டென்று நிமிர்ந்தான். அடுத்த நொடி முகம் இறுக அவளை விட்டு விலகிக் குளியலறைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொண்டான்.

அவன் வழக்கமாய்த் தனது நடைப்பயிற்சியை முடித்துக் கொண்டு மீண்டும் அறைக்குள் வரும்போது சமையலறையில் இருந்து வேகமாய் வந்த உமா அவனுடன் ஒட்டியபடி உள்ளே நுழைந்தாள். அவன் தனது துண்டை எடுத்துக் கொண்டு குளிக்கப் போகும் முன் அவனைத் தள்ளிக் கொண்டு குளியறைக்குள் நுழைந்தவள் அவனைப் பார்த்து நாக்கைத் துருத்தி அழகு காட்டியபடி கதவை அடைக்க அதில் திகைத்துப் போய் அப்படியே நின்று விட்டான்.

முதன் முறையாய் அவளைச் சந்தித்த போது, 'நீ தான் வேண்டும்' என்பது போல் கையைக் காட்டியவள், அன்றும் இதே போல் செய்தது ஞாபகம் வந்தது.

அன்று அவளது செயலில் தான் திகைத்து நின்றதும் ஞாபகம் வர, இன்றும் அதே நிலையில் தான் இருப்பதை உணர்ந்து, 'இவளைச் சமாளிக்கன்னு தனியா மூணு வேளை சேர்த்துச் சாப்பிடணும் போல இருக்கே..." என்று

நினைத்தவன் ஆயாசமாய்த் தன் தலையைக் கோதிக் கொண்டான்.

அந்நேரம் அவன் குளியலறை கதவைத் திறக்க... அன்று போல் இன்றும் ஒற்றைத் துண்டுடன் நின்றிருந்த வளைக் கண்டு மயங்கிய மனதை அடக்கத் தெரியாமல் அவளிடமே பாய்ந்தான் அவன்.

"ஏன்டி, கொஞ்சம் கூட அடங்க மாட்டியா நீ...?" கோபமாய்க் கத்தியவன் அவளை நிமிர்ந்து பார்க்கும் தைரியம் இல்லாமல் குளியலறைக்குள் புகுந்தான்.

அதைக் கண்டு அவளது உதடுகள் சிரிப்பில் வளைந்தாலும் அவளது மனம் உள்ளுக்குள் வருந்தத் தான் செய்தது. வேகமாய் உடையை மாற்றியவள் தலை வாருவதற்காகக் கண்ணாடி முன் வந்து நின்றாள்.

குளித்து முடித்து வந்த உதய்யும் அவளைக் கண்டு கொள்ளாமல் உடையை மாற்றியவன், கண்ணாடி முன் வந்து நின்று, "ஏய் நகரு..." என்றான்.

அவளோ நகராமல் கண்ணாடியின் வழியே அவனைப் பார்த்தவள், "பார்த்தா தெரியல... நான் தலை சீவணும்..."

"நீ சீவிச் சிங்காரிக்க நேரமாகும்... நான் கௌம்பிக் கிறேன்... அப்புறம் நீ கௌம்பு..." அவளைப் பார்க்காமல் அவன் கூற...

சட்டென்று அவன் புறம் அவள் திரும்பியதில் அவனை இடித்துக் கொண்டு அவள் நிற்க... அவளது

உடல் தீண்டியதால் எழுந்த உணர்வலைகளை அடக்கத் தெரியாமல், "ஒழுங்கா நிக்க முடியுதா உனக்கு...?" அவன் பல்லைக் கடிக்க...

அவன் கூறியதை சட்டை செய்யாமல், "உங்களுக்கு என்ன... தலை சீவணும். அவ்வளவுதானே..." என்றவள், அவனின் தலையைப் பிடித்து இழுத்துத் தாடையை இடது கையால் இறுகப் பிடித்தவள், வலது கையால் அவனின் முடியை அழகாய் வாரி விட... அவளது இயல்பான செய்கையில் அவனது மனம் குளிர்ந்துதான் போனது. ஆனாலும் அதை ஒத்துக்கொள்ள மனமின்றி,

"கையை எடுடி... கன்னம் ரெண்டும் வலிக்குது..." அவளின் கையைப் பற்றித் தள்ளி விட்டான். அவனது செய்கையில் முகம் சுருங்க நின்றவள், அடுத்து அவனது நடவடிக்கையில் முகம் மலர்ந்தாள்.

தன்னிச்சையாய்ு மேசையில் இருந்து சீப்பை எடுத்தவன், பின் என்ன நினைத்தானோ அதை அப்படியே கீழே வைத்து விட்டுக் கண்ணாடியில் தன் உருவத்தைக் கண்டு திருப்தியடைந்தவனாய் அங்கிருந்து நகர்ந்தான். அவளுக்காக அவன் நடந்து கொண்ட விதத்தில் அவனை இன்னமும் அதிகமாய் அவளுக்குப் பிடித்தது.

"உதய்..." அவள் அவனை அழைக்க... கேள்வியாய்த் திரும்பிப் பார்த்தவன் அருகில் சென்றவள், "கொஞ்சம் குனியுங்களேன்..."

எதற்கு என்று மனதில் கேள்வி எழுந்தாலும் அவள் புறமாய் அவன் குனியத்தான் செய்தான். அவனது

முகத்தைத் திருப்பிக் கன்னத்தில் முத்தமிட்டவள் அவனைப் பார்த்துக் கண் சிமிட்டி, "பை உதய்..." என்றாள்.

அவளது செயலில் தன் கன்னத்தைத் தடவியபடி திகைத்து நின்றவன், பின் சுதாரித்துக் கொண்டு அவளை முறைத்தான். அவளோ அதைக் கண்டு கொள்ளாமல் அவனைப் பார்த்தவாறு நிற்க... வேறு வழியின்றி அவன் தான் தன் பார்வையை மாற்றிக் கொண்டு கதவை நோக்கி நடக்கலானான். ஆனாலும் அவனது உதடுகள் விளைந்தது சிரிப்பில்...

உமா தானும் கிளம்பி மாமியார், நித்யாவிடம் விடை பெற்றுக் கொண்டு வராண்டா பக்கம் வந்தவள், அங்கு அமர்ந்து பேசிக் கொண்டிருந்த உதய்யையும் தங்க வேலுவையும் கண்டு ஒரு நொடி தயங்கி நின்றாள்

"வேலைக்காம்மா..." தங்கவேலு கேட்க,

"ஆமாம் மாமா..."

"எப்படிப் போகப் போறே...?"

அவரின் கேள்வியில் அவளது கண்கள் உதய்யின் மேல் படிந்து மீண்டது.

"பஸ்ல..." அவளது பதிலில் தங்கவேலு மட்டுமல்ல. உதய்யும் திடுக்கிட்டான்.

'என்னய கொண்டு போய் விடுன்னு வாயைத் தொறந்து கேட்குறாளா பாரு...' அவனுக்கு உள்ளுக்குள் நமநமவென்று இருந்தது.

'இப்பவாவது நான் கூட்டிட்டுப் போறேன்னு சொல்றாரா...?' அவளும் உள்ளுக்குள் குமைந்தாள்.

"குமாரு, மருமவளக் கூட்டிட்டு போயி விட்டுட்டு வாய்யா..."

தந்தையின் பேச்சை மறுக்க முடியாமல் எழுந்தவன் அவளை ஒரு பார்வை பார்த்து விட்டுச் செல்ல...

'வான்னு சொன்னா குறைஞ்சா போயிருவாரு...' மனதுக்குள் சிணுங்கியபடி அவனைப் பின் தொடர்ந்தாள் அவள்.

அவன் வண்டியில் ஏறியமர்ந்து அவளுக்குத் தாராளமாய் இடம் ஒதுக்கி முன்னால் நகர்ந்து அமர... அவளோ அதைக் கண்டு கொள்ளாமல் அவனுடன் ஒட்டி உரசிக் கொண்டு அமர்ந்தாள்.

பின்னால் திரும்பிப் பார்த்தவன், அவளை முறைத்துக் கொண்டு அவளது கைப்பையை எடுத்து இருவருக்கும் இடையில் வைக்க...

"பெரிய சீனப் பெருஞ்சுவர்... இதை எங்களால தாண்ட முடியாதாக்கும்..." எரிச்சலுடன் அதைப் பிடுங்கித் தனது தோளில் மாட்டியவள், அவன் முதுகை அணைத்துக் கொண்டு அமர...

அந்நேரம் வெளிவாசலுக்கு வந்த தங்கவேலு, "குமாரு, இன்னுமா கௌம்பல..." அவரின் குரலில் வியர்த்து விதிர்த்துப் போன உமா, உதய்யிடம் இருந்து அவசரமாய் விலக... முன்புறம் இருந்த கண்ணாடி வழியே அவளைப் பார்த்து நமட்டுச் சிரிப்புச் சிரித்தவன்,

"இதோ கௌம்பிட்டேன்ப்பா..." என்று வண்டியைக் கிளப்பினான் உல்லாசமாக. அவளோ அவனை, முதுகை

வெறுத்தவள் முகத்தை உம்மென்று தூக்கி வைத்துக் கொள்ள அதில் அவனது சிரிப்பு இன்னமும் அதிகமானது.

மருத்துவமனையில் ஜெயஸ்ரீயைக் கண்டதும் உமாவிடத்தில் இயல்பாய் உற்சாகம் வர, அன்று முழு வதும் மகிழ்ச்சியாய் வேலை செய்தாள்.

மாலையில் அவளது மகிழ்ச்சியைக் குலைக்கும் வண்ணம் நித்யாவின் சித்தப்பாவும் சித்தியும் வந்திருந் தனர், தங்களது மகள் செல்வியின் திருமண அழைப் பிதழைத் தருவதற்காக...!

உள்ளே நுழைந்த உமாவை மேலிருந்து கீழாக எடை போட்ட நித்யாவின் சித்தி, "இதான் குமாரு பொஞ் சாதியா...? ஆளு நல்லாச் செவசெவன்னு அழகாத்தான் இருக்கா..." என்று பெருமூச்சு விட்டார்.

அவரது பேச்சு புரியாத உமா, மாரீஸ்வரி அருகில் போய் நின்று கொண்டாள்.

"வர வெள்ளிக்கிழமை எங்க செல்விக்குக் கல்யா ணம் வச்சிருக்கோம்..." என்றவர்கள் முறைப்படி பத்திரிக்கையைத் தாம்பாளத்தில் வைத்து நீட்ட... அதை வாங்கிய தங்கவேலு அழைப்பிதழைப் பிரித்தபடி,

"எதுக்கு இம்புட்டு அவசரமாக் கல்யாணத்த வச்சிருக்கீக...?"

'பின்னே, நீங்க பொண்ணு கேட்டு வருவீகன்னு எத்தனை நாள்தான் நாங்க காத்திருக்கிறது...? கடைசில இலவு காத்த கிளி கதையாப் போச்சு எங்க கதை... குமாருக்கு எங்க செல்வியைப் பொண்ணு கேப்பீகன்னு

நெனச்சோம்... ஆனா நீங்க இப்படிச் சீமையில போயி பொண்ணு கட்டுவீகன்னு நாங்க நெனச்சுக் கூடப் பார்க்கல...” அவரது வெளிப்படையான பேச்சில் அங்கு கனத்த மௌனம் நிலவியது.

உமாவிற்குச் சற்றுச் சங்கடமாக இருந்தது...

“என்ன செய்ய மச்சான்... நாம் விருப்பப்பட்டு என்னாகப் போகுது... நமக்கு மேல உள்ளவன்ல முடிச்சுப் போடணும்... குமாருக்கு இந்தப் பொண்ணு தான்னு அவன்ல முடிச்சுப் போட்டிருக்கான்...” தங்கவேலு சொல்ல, உமாவின் மனதுக்குள் எதுவோ தடம் புரண்டது.

எல்லோரும் விடைபெற்றுச் சென்ற பின்னரும், அவளின் மூளைக்குள் அந்தச் செல்வியைப் பற்றிய நினைவே ஓடியது. நித்யாவிடம் ஜாடை மாடையாய் விசாரித்துப் பார்த்தாள். இதில் உதய்க்கு ஏதும் விருப்பம் இருக்குமா என்று...

நித்யாவோ, “தம்பி ஆமான்னும் சொல்லல... அதே சமயம் வேணாம்னும் சொல்லல... இப்போ எதுக்குப் பழைய கதை எல்லாம்... தங்கம் போல் நீ கிடைக் கணும்னு தம்பிக்கு விதி இருக்கும்போது அதை மாத்த யாராள முடியும், சொல்லு...”

அதிலிருந்து உமாவால் எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை.

இரவில் அறைக்குள் நுழைந்தவள், வழக்கம் போல் கணவனுக்கு மறுபுறம் படுத்தவள் அதே யோசனையில் இருந்ததால், அவளுக்குத் தூக்கம் வரவில்லை. மனதில்

இருந்த அலைப்புறுதலில் அவள் அங்கும் இங்கும் புரண்டு படுக்க... அதில் உதய் எழுந்து அமர்ந்தான்.

"ஏய், ஒரு இடத்துல அடங்கிப் படுக்க மாட்டியாடி?" என்று அவளைச் சத்தம் போட, அவனது அதட்டலில் அவள் மறுபக்கம் திரும்பிக் கண்களை மூடித் தூங்குவது போல் பாசாங்கு செய்ய... அவளின் இந்த அமைதியான நடவடிக்கை உதய்க்கு ஆச்சரியத்தை உண்டாக்கியது.

அதே வியப்புடன் படுத்தவன் உடனே தூங்கி விட... அவளோ உறங்காமல் மூளைக்கு வேலை கொடுத்துக் கொண்டிருந்தாள்.

நள்ளிரவில் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்த வனை அவள் எழுப்ப... அவனோ எரிச்சலோடு எழுந்து அமர்ந்தான்.

"என்னடி இது, தூங்கக் கூட விடாம... உன்னோட பெரும் அக்கப்போரா இருக்கு..."

கொட்டாவி விட்டவனின் தூக்கம் அடுத்து அவள் கேட்ட கேள்வியில் அப்படியே பறந்து போனது.

"உதய், அந்தச் செல்வி ரொம்ப அழகா இருப் பாளா?"

"அதாரு செல்வீ...? அது அழகா இருந்தா என்ன... அழகா இல்லாட்டியும் எனக்கென்ன...? அர்த்த ஜாமத்துல கேக்குற கேள்வியைப் பாரு... ஒழுங்கா வாய மூடிட்டு

தூங்கப் போறியா இல்லையா...?" எரிச்சலில் படபடத்த உதய் அவளுக்கு முதுகு காட்டிப் படுத்துக் கொண்டான்.

அவனது பதிலில் முகம் சுருங்கி, மனம் சுணங்கிய தால் சிறிது நேரம் அமைதியாய் இருந்தவள், மீண்டும் உதய்யின் முதுகைச் சுரண்டினாள்.

"அதான் நித்யாக்கா சித்தப்பா பொண்ணு..." விட்டு விட்டு அவள் சொல்ல...

"ஆமாம். அவளுக்கு என்ன இப்போ...?"

இப்போது மல்லாக்கப் படுத்துக் கைகள் இரண்டை யும் தலைக்கு அணைவாகக் கொடுத்து மனைவியைப் பார்த்துக் கேள்வியாய்ப் புருவத்தை உயர்த்தினான்.

"அவளோட கல்யாணப் பத்திரிக்கையைக் கொடுக்க அவங்க வீட்டுல இருந்து வந்திருந்தாங்க..."

"பார்றா... செல்வி புள்ளைக்கு அதுக்குள்ள கல்யாணமா...?"

அவன் ஆச்சரியமாய்க் கேட்கும் போதே கண வனின் மனநிலை அவளுக்குப் புரிந்திருக்க வேண்டும்.

அவள் இருந்த மனநிலையில் அதை உணராமல் அவள் மேலே பேசினாள்.

"ம்... அவளை உங்களுக்குக் கூடப் பேசினாங் களாமே..." என்றவள் பேச்சில் அவனது கண்கள் யோசனையாய் அவளைப் பார்த்தது.

"ஆமா, அதுக்கென்ன...?"

"அவளை உங்களுக்குப் பிடிக்குமோ...? ரொம்ப அழகா இருப்பாளோ...?" உமாவின் கேள்வியின் அர்த்தம் புரிந்தவனின் மனதில் உல்லாசம் நிரம்பி வழிந்தது.

'அட்ரா சக்கை... நீ சுத்தி வளைச்சுப் பேசுனது இதுக்குத்தானா... பொறாமை... ம்...' மனதில் நினைத்தவன், தன் பதிலுக்காகப் படபடப்புடன் காத்திருக்கும் மனைவியைக் கண்டு அவள் மீதிருந்த அவனது கோபம் மறைந்தது.

'உன்னய விடவாடி அவ அழகா இருக்காப் போறா... உன்னயத் தவிர வேற எந்தப் பொண்ணும் என் கண்ணுக்கு அழகாத் தெரியலடி... நீ மட்டும் தான்டி அழகு...'

அவளது உள்ளத்தை அறிந்தவனுக்கு அவள் மேல் காதல் பொங்கி வழிந்தது. அவனது கண்கள் அவனது அனுமதி வேண்டாமலேயே தன்னவளை அணு அணு வாய் ரசித்துப் பார்த்தது.

இளஞ்சிவப்பில் வெள்ளைப் புள்ளிகள் அள்ளித் தெறித்த இரவு உடையில் எந்தவித ஒப்பனையும் இல்லாமல் தலை முடி ஆங்காங்கே சிலும்பிக் கொண்டு கலைந்திருக்க... அவள் அமர்ந்திருந்த தோற்றம் அந்த அமைதியான இரவு நேரத்தில் அவனின் மனதை மயக்கியது.

அவளது சிவந்த அதரங்கள் அவனைக் குற்றவாளி யாக்கத் தூண்டிக் கொண்டிருந்தது. அவளது இதழைத் தன் இதழால் வன்கொடுமை செய்ய, அவனது உடலின் அணுக்கள் பரபரத்தது.

"உதய்..." அவள் உலுக்கவும்தான் தன் நினைவு கலைந்தவனால், அதன் தாக்கத்தில் இருந்து வெளிவர முடியவில்லை.

"நான் கேட்டதுக்கு நீங்க பதில் சொல்லல..." என்றவளைக் கூர்ந்து பார்த்தவன், பெருமூச்சு ஒன்றை விட்டபடி,

"அவ அழகா, இல்லையானு அவ கல்யாணத்துல பார்த்துக்கோ..." என்றவன் அந்த அழகிய தருணத்தைக் கெடுக்க மனம் இல்லாமல் கண்களை இறுக மூடிக் கொண்டான்.

"உதய் நீங்க..." மீண்டும் அவள் ஆரம்பிக்க...

"இங்கே பாரு, தேவையில்லாத விசயத்தை ஆராய்ச்சி பண்ணாதே. நமக்குக் கல்யாணம் ஆகிருச்சு. நாம ரெண்டு பேரும் புருசன், பொஞ்சாதி. அதுத்தேன் நெசம்... பேசாமப் படுத்துத் தூங்குற வழியைப் பாரு..." கண்களைத் திறவாமல் கூறியவன் அதன் பின் பேச வில்லை.

வேறு வழியின்றி அவளும் படுத்துக் கொண்டாள்.

உமா மன வருத்தப்படுவது அவனுக்கு வருத்தமாக இருந்தாலும் அவளது எண்ணம் போகும் திசை அறிந்த வனுக்கு மிகவும் சந்தோசமாய் இருந்தது.

உமா மாதிரித் தேவதைப் பெண் அவனுக்காக ஏங்குவது அவன் கனவிலும் நினைத்துப் பார்க்காத ஒன்று... அந்தத் தேவதைப் பெண்ணைத் தன் இதய

சிம்மாசனத்தில் ஏற்றிப் பாத பூஜை செய்து வரும் அவனால், அவளைத் தேவதையாய்த்தான் கொண்டாட முடிந்ததே தவிர... அவளைத் தன் மனைவியாய்க் கொண்டாட அவனது மனம் தயங்கியது.

அது அவன் காதலின் பின் இருக்கும் காரணத்தால் விளைந்த விளைவு.

இருவரின் மனமும் வேறு வேறு பாதையில் பயணிக்க, தூக்கம் என்பது காணாமல் போனது இருவ ருக்கும்...

செல்வியின் திருமணத்திற்குச் செல்வதற்கான நாளும் வந்தது. குடும்பத்துடன் எல்லோரும் அங்கு கிளம்பினர்.

உமாவும் எதிர்பார்ப்பு கொஞ்சமும், துக்கம் அதிக மாகவும் கலந்த கலவையான மனநிலையுடன் கிளம்பி னாள்.

அதிக ஜரிகை இல்லாத பட்டுப் புடவையில் தலை நிறைய மதுரை மல்லிகைப் பூவை வைத்துக் கிளம்பித் தயாராய் நின்றிருந்தவளைக் கண்டு உதய்யின் இதயம் தடுமாறியது.

'சும்மா இருக்கும் போதே ஆள அசத்துவா... இப்போ இந்த மாதிரி அலங்காரத்துல அப்படியே உயிரோட கொல்லுறாளே... அழகான பொஞ்சாதிய கைக் கெட்டும் தூரத்துல வச்சிக்கிட்டு அவள அனுபவிக்க முடியாம இருக்கிற கஷ்டம் எந்த ஆம்பளைக்கும் வரக்

கூடாது...' நினைத்தவனின் கண்கள் தாராள மயமாக்கல் கொள்கையைப் பின்பற்றி தன்னவளின் அங்கங்களை அங்குலம் அங்குலமாகப் பிரித்து மேய்ந்தது.

இத்தனை நாளில் உதய்யின் பார்வையில் இத்தகைய தேடலைக் கண்டிராத உமா முகத்தில் வெட்கப் பூக்கள் பூக்கத் தலையைக் குனிந்தாள்.

அவளது வெட்கம் அவனை வாவென்று அழைப் பது போலிருக்க, அவளை நோக்கிச் செல்ல முயன்ற காலைக் கட்டுப்படுத்த முடியாமல் அவன் திணறிக் கொண் டிருக்கும் போதே அஜித்,

"சித்து..." என்று அழைத்தபடி அங்கு வர... இருவரின் மோன நிலையும ஒருங்கே கலைந்தது.

"அஜித்து..." என்றபடி அண்ணன் மகனைத் தூக்கியவன், "ஜீன்சு, டீ-சர்ட்டுன்னு கலக்குறடா அஜித்து..."

"சித்தும் சூப்பர்..." தன் விரல் குவித்துச் சொன்ன அஜித்தின் குரலில் உமா கணவனைப் பார்த்தாள்.

பட்டு வேஷ்டி, சட்டையில் கம்பீரமாய் இருந்தவனின் ஆளுமை அவளின் உள்ளத்தில் சில்லென்று ஊடுருவிச் சென்றது. எப்போதும் அவனிடத்தில் மயங்கி இருக்கும் அவளது மனம் இன்னமும் அதிகமாய் மயங்கி நின்றது.

"உமா போகலாமா..."

அதற்கு ஏற்றார் போல் உதய் அவளை அழைக் கவும், அவள் முகம் மலர, அவனுடன் இணைந்து நடந் தாள்.

திருமண மண்டபத்தினுள் நுழையும் போது அவளை யும் அறியாமல் உதய்யின் அருகில் நெருங்கி நடந்தவள் அவனது கையோடு தன் கையைச் சேர்த்துக் கோத்துக் கொண்டாள். அவளை வியப்பாய்த் திரும்பிப் பார்த்தவன் ஒன்றும் பேசாது இருந்து விட்டான்.

அவர்களது வழக்கத்தில் இந்த மாதிரிக் கணவன், மனைவி கைகோத்துச் செல்லும் பழக்கம் இல்லாத போதும், அவளின் மனம் புரிந்தவனாய் அதற்கு ஏற்பச் செயல் பட்டான். உமாவின் மனநிலையைக் குறித்து அவனுக்குச் சிரிப்பு வந்தபோதும் அது கூட அவனுக்குப் பிடிக்கத்தான் செய்தது.

மணவறையில் மணப்பெண் வந்து அமரும் வரையில் மணப்பெண்ணின் பெற்றவர்களை விட, உமா தான் அதிகம் தவித்துப் போனாள். இறுதியில் அவள் ஆவலாக எதிர்பார்த்துக் கொண்டிருந்த செல்வி வரவும், உமா வாயைப் பிளந்தபடி ஆவென்று அப்படியே அமர்ந் திருந்தாள்!

"என்ன... பொண்ணு அழகா இருக்காளா?" அவளது காதுக்கருகில் சீறலாய் ஒலித்த கணவனின் குரலில் திரும்பிப் பார்த்தவள் கண்களில் கண்ணீர் மல்க அவனைப் பார்த்து சிரித்தாள்.

"பொறாமை... என்ன..." கேலிக் குரலில் கேட்டவன், "டாக்டருக்குப் படிச்சாலும் பொம்பள புத்தி போகாதே..."

"உதய்..." என்று செல்லமாய்ச் சிணுங்கியவள், "டாக்டரா இருந்தா என்ன... நானும் ஒரு பெண்தான்... என்

கணவன் எனக்கு மட்டும் சொந்தம்னு நான் நினைக்கக் கூடாதா?"

"ம்ஹூம்..." ஒற்றைப் புருவத்தைத் தூக்கி உதட்டைப் பிதுக்கி அவளது பேச்சைப் போலியாய் மெச்சியவன், "இப்போ மட்டும் யாருக்குச் சொந்தமாம்...? ஏன்டி கூறு கெட்டவளே... அவள நெனச்சிட்டு உன்னைய காதலிக்க நான் என்ன பொறுக்கியா... அந்தளவுக்குக் கேவல மானவனா...? மனசுல ஒருத்திய நெனச்சா சாகுற வரைக்கும் அவ மட்டும்தான்... முதல்ல அதை உன் மனசுல ஏத்திக்கோ..." கோபமாய்க் கூற வேண்டிய வார்த் தைகளைப் பொறுமையாய் அவளுக்கு விளங்கும்படி யாய்க் கூறியவன்,

"கடைசி வரைக்கும் செல்வி எப்படி இருக்கானு நீ சொல்லவே இல்லையே...?"

"அவளுக்கு என்ன... அழகாத்தான் இருக்கா..." புன்சிரிப்புடன் சொன்னவளைக் கண்டு அவனுக்கும் சிரிப்பு வந்தது.

"ஆகா... உங்கள விடக் கொஞ்சம் அழகு கொறச்சலா இருந்தா மட்டும் இந்தப் பொம்பளைங்க எல்லாம் எப்படிடி இப்படிப் பாராட்டுறீங்க... இதே இது, அவ உன்னைய விட அழகா இருந்தா இதே வார்த்தைய நீ சொல்லியிருப்பியா...?"

"நிச்சயமாச் சொல்லியிருப்பேன்... ஏன்னா உங்க மனசுல நான் மட்டும்தானே இருக்கேன்..." என்றாள், காதலாக அவனைப் பார்த்தபடி.

அவளின் காதல் பார்வையில் அவனின் பார்வை யும் கொஞ்சம் கொஞ்சமாய் மாறியது.

"ஏம்ப்பா குமாரு... புதுப் பொஞ்சாதி கூட வீட்டுல பேசுனது பத்தாதுன்னு இங்கேயும் வந்து என்ன பேசிட்டு இருக்க...? கொஞ்சம் எங்களையும் கவனிப்பா..."

பெரியவர் ஒருவர் அவனைக் கிண்டலடிக்க, அதில் ஆளுமையான உதய் கூடச் சிறிது வெட்கப்படத்தான் செய்தான்.

திருமண வீட்டிற்கு வரும்போது இருந்த மனசஞ்சலம் அங்கிருந்து கிளம்பும்போது உமாவிற்கு இல்லை. அது செல்வியின் அழகு குறித்து வந்தது அல்ல... அவளது கணவனின் பேச்சினால் வந்தது.

அதற்காகச் செல்வியை அவள் குறைத்து மதிப்பிட வில்லை... செல்வி அவள் கணவனின் கண்களுக்குப் பேரழகியாகத்தான் இருப்பாள். அதில் எந்தவித மாற்றுக் கருத்தும் இல்லை... தன் கணவனுக்குப் பேசி முடிப்பதாய் இருந்த பெண் எந்தளவுக்கு அழகானவள் என்பதை அறிய விழைந்தது அவளது காதல் மனம். அவ்வளவே...!

மறுநாள் சனிக்கிழமை விடிந்தது... அதோடு அவளுக்கும் சனி பிடிக்கப் போகிறது என்று தெரியாமல் உமா உற்சாகமாய் இருந்தாள். எல்லாம் முதல் நாள் கணவன் இணக்கமாய்ப் பேசிய வார்த்தைகளின் விளைவு அது...

அன்று உமா சுறுசுறுப்பாய் வேலைகள் செய்தாள். அஜித்தைத் தூக்கி வைத்துக் கொண்டு கதை சொல்லி

அவனுக்கு உணவு ஊட்டினாள். ஏதோ கனவில் இருப் பதைப் போல் அவள் நடமாடுவதைக் கண்டு, நித்யா அவளைப் பார்த்து நமட்டுச் சிரிப்புச் சிரித்தபடி,

"உமா... இது என் கொழுந்தனாரு இல்ல... எம் பையன்... முத்தம் கொடுத்துக் கொடுத்து அவனோட கன்னமே குழி விழுந்திருச்சு பாரு..." என்று கிண்டலடிக்க...

உமா திடுக்கிட்டுப் போய் அவளையும் அறியாமல் அஜித்தின் கன்னத்தைப் பார்க்க... அதைக் கண்டு நித்யா மேலும் அவளைக் கிண்டலடித்து ஒரு வழி செய்து விட்டாள்.

அன்றிரவு உணவு உண்ண உதய் வரவே இல்லை...

உமா அவனுக்காகக் காத்திருப்பது தெரிந்து நித்யா, "உமா, இன்னைக்கு அண்ணன், தம்பி ரெண்டு பேரும் வீட்டுக்கு லேட்டாத்தான் வருவாக. நீ சாப்புட்டுப் போட்டு போய்ப் படு..." என்றாள்.

"ஏன்க்கா...?" புரியாமல் அவளைப் பார்த்தாள் உமா.

"உனக்கு இந்தச் சங்கதி தெரியாதா உமா...? கொழுந்தன் எதுவும் சொல்லலியா...?"

"இல்லையேக்கா...!"

"இன்னைக்கு நம்ம தியேட்டருலதான் எல்லாப் பங்காளிப் பயலுகளும் குடிச்சிட்டுக் கும்மாளம் போட்டுட்டு கெடக்குங்க..." நித்யா சொன்னதும்தான் உமாவுக்கு அன்று உதய் குடித்து விட்டுப் போதையில் உளறியது ஞாபகத்தில் வந்து அவளைக் கோபம் கொள்ளச் செய்தது.

அதே கோபத்துடன் அறைக்குச் சென்ற உமா அலைபேசியைக் கையில் எடுத்தாள்.

அங்கே தன் முன் ஊற்றி வைக்கப்பட்டிருந்த மது நிரம்பிய பிளாஸ்டிக் கப்பை வெறித்துப் பார்த்தபடி அமர்ந்திருந்தான் உதய்.

இது திருமணத்துக்குப் பின் வரும் முதல் வீக் எண்ட் பார்ட்டி... அதுவும் அவன் மணமானதற்காக அவனது கூட்டாளிகள் கொடுக்கும் மது விருந்து. அவர்கள் பேச்சைத் தட்ட முடியாமல் வந்தவன் குடிப்பதற்குப் பெரும் யோசனை யோசித்தான்.

அன்று குடித்ததற்கு... உரிமையில்லாத போதும் அப்படிக் கோபப்பட்ட உமா, இன்று உரிமையாய்த் தனது மனைவியாய் இருக்கும் போது அவன் குடித்து விட்டுப் போனால் நிச்சயம் அவளின் கோபத்தின் அளவு அதிகரிக்கத்தான் செய்யும் என்பதை உணர்ந்தவனாய் அமைதியாய் அமர்ந்திருந்தான்.

"மச்சான், சியர்ஸ்..." என்று அழகு தன் புறம் நீட்டிய மதுவை வாங்கிய உதய் அதைக் கீழே வைக்க,

"உங்களுக்கு வேணாமா... அப்படின்னா எனக்கு அதைக் கொடுங்க..." என்ற அழகு ஒரே மூச்சில் குடித்து முடித்தான்...

அதைக் கண்ட மற்றவர்கள், "டேய் அழகு, கொரங்கே... புது மாப்பிள்ளைக்கு ஊத்திக் கொடுக்காம நீ குடிக்கிற...?" என்று அழகிடம் பாய்ந்தவர்கள், உதய்க்கு மீண்டும் மதுவை ஊற்றிக் கொடுத்தனர்.

"குமாரு... என்சாய் பண்ணு... குடிடா..." பல குரல்கள் அவனைக் குடிக்க வற்புறுத்த, அவன் மறுக்க நினைக்கும் போது அவனது அலைபேசி அடித்தது.

எடுத்துப் பார்த்தவனுக்கு உமாதான் அழைக்கிறாள் என்பது புரிய, பேசும் சூழ்நிலையில் அவன் இல்லாததால் எழுந்தவன், "நீங்க என்சாய் பண்ணுங்க... நான் கௌம் பறேன்..." என்று அவன் விடைபெற, அங்கிருந்த கூட்டம் கொல்லெனச் சிரித்தது.

அவனது அண்ணன் முத்துவும், அழகும் கூட அவர்களோடு சேர்ந்து சிரித்தனர்.

"என்னடா, உம் பொஞ்சாதியா ஃபோன் பண்ணுனா?" கூட்டாளி ஒருவன் கேட்க...

ஆம்... என்பது போல் உதய் தலையசைக்க...

"போடா பொட்டப் பயலே... பொஞ்சாதிக்குப் பயப் படுற உனக்கு எதுக்குடா மீசை எல்லாம்... போய் உம் பொஞ்சாதி பொடவைய எடுத்துக் கட்டிக்கோ..." என்று கிண்டலடித்துச் சிரிக்க... அதைக் கண்டு மற்றவர்களும் கேலியாய்ச் சிரித்தனர்.

அன்று உமா அவனைப் பார்த்து பேசிய அதே வார்த்தைகள் மீண்டும் அவனை அதே போல் கோபப் படுத்தியது. எதுவும் பேசாமல் அமர்ந்தவன் அங்கிருந்த மது பாட்டிலை எடுத்து அப்படியே வாயில் வைத்துச் சரித்தான்.

அவன் குடிக்கும் வேகத்தைக் கண்டு அழகு தான் பயந்து போனான்.

"போதும் மச்சான்... ராவாக் குடிச்சா கொடலு வெந்து போகப் போகுது..." அவன் தடுக்க தடுக்க உதய்க்கு வேண்டும் வேண்டும் என்று வெறியேறியது.

"டேய் அழகு, வாயை மூடுடா... இப்பத்தேன் நம்ம குமாரைப் பாக்க ஆம்பள மாதிரி இருக்கு... நீ குடி குமாரு... இந்தப் பொட்டச்சிகளுக்கு எல்லாம் நாம பயப் படக் கூடாது... எதுத்துக் கேள்வி கேட்டா தூக்கிப் போட்டு நாலு மிதி மிதிக்கணும். நாம மிதிக்கிற மிதியில சாப்பிடக் கூட அவளுங்க வாயைத் திறக்கக் கூடாது. அதுக்கப் பறமும் எதுத்துப் பேசுவாளுங்க... பேசுறதுக்குத் தைரியம் வருமானு நான் கேக்குறேன்..." அனுபவசாலி போல் ஒருவன் கூற, மற்றவர்கள் அதை ஆமோதித்தார்கள்.

அதைக் கண்டு அழகு தலையில் கையை வைத்துக் கொண்டு அமர்ந்து விட்டான். "அடேய், கேணக் கிறுக்கய்ங்களா... உம் பொஞ்சாதி அப்படிடா... ஆனா என் தங்கச்சி அப்படி இல்லையேடா... இன்னைக்கு மச்சான் தங்கச்சி கையால அடி வாங்குற மாதிரிப் பண்ணிப்பூட்டிங் களேடா... அய்யோ பாவம், எம் மச்சான்..." உமாவைப் பற்றி தெரிந்திருந்ததால் அவன் உதயை நினைத்துக் கவலை கொண்டான்.

நன்றாகப் போதை தலைக்கேறிய உதய் தள்ளாட் டத்துடனே வீட்டிற்கு வந்தான். அறையினுள் நுழைந் தவன்... உமா தனக்காக விழித்து இருப்பதைக் கண்டு அவனுக்குள் குற்றவுணர்வு தலைதூக்க, அவளைப் பார்க்க முடியாமல் தலையைக் குனிந்து கொண்டான்.

அவனின் உடல் மொழியிலேயே அவனின் நிலையைப் புரிந்து கொண்டவள், "குடிச்சிருக்கீங்களா?" என்றாள் முகத்தைச் சுளித்தபடி.

அவளது வார்த்தையில் அவனுக்கு லேசாக எரிச்சல் வந்தது. "ஆமாம், அதுக்கென்ன?" தெனாவெட்டாய்ப் பதில் வந்தது.

"உங்களுக்கு நான் ஏற்கெனவே சொல்லி இருக் கேன். இந்த மாதிரிப் பழக்கம் எல்லாம் வேணாம்னு..."

"நீ சொன்னா நான் கேட்கணுமா?" என்றவன், அவள் அருகில் வந்து கோபத்துடன் கண்கள் சிவக்க, "உன் பேச்சை நான் கேட்டா அவங்க என்னய பொட்டப் பயலான்னு கேக்கிறாய்ங்க... உம் பேச்ச நான் கேக்க லைன்னா நீ என்னய பொட்டப்பயலானு கேக்குற... நான் யாரு பேச்சடி கேக்க...? சொல்லுடி சொல்லு..." என்று அவள் தோள்களைப் பற்றி உலுக்க...

அதில் அவள் தோள் இரண்டும் கழன்று விடுவது போல் வலித்தது. அன்று தான் பேசிய வார்த்தைகள் அவன் மனதை இந்தளவுக்குக் காயப்படுத்தும் என்பதை உணர்ந்தவளின் மனமோ அதை விட வலித்தது.

"ஆக மொத்தம் எல்லாருக்கும் நான் பொட்டப் பயலாப் போயிட்டேன்லடி...?" ஆற்றாமையில் தவித்த வனின் தவிப்பை என்ன சொல்லி நீக்குவது என்று அவளுக்குத் தெரியவில்லை.

அவன் அருகில் வந்தவளுக்கு, அவனிடம் இருந்து எழுந்த மது வாடை அருவருப்பை அளித்தாலும் அவனது

மனக்குமுறலை அடக்கும் பொருட்டு அவனை அணைத்தவள் அவன் நெஞ்சில் முகம் புதைத்தாள்.

"உதய்... ஐ அம் சாரி உதய்... நான் பேசிய வார்த்தைகள் இந்தளவுக்கு உங்களை ஹர்ட் பண்ணும்னு எனக்குத் தெரியாமப் போச்சு... நீங்க என்னுடைய ஆம்பிள்ளை... எனக்கு மட்டுமான ஆம்பிள்ளை... ஐ லவ் யூ உதய்..." என்று அவனுக்குத் தன் மனதைப் புரிய வைத்து விடும் வேகத்தில் அவள் பிதற்ற... அவளது முகத்தைத் தன் நெஞ்சில் இருந்து நிமிர்த்தியவன்,

"ஏன்டி, இவ்வளவு காதல வச்சிருக்கிறவ எப்படிடி உன்னால அப்படிப் பேச முடிஞ்சது...? எதுக்காகடி என்னைய தேடி வந்து காதலிச்ச...? உசுரோடு என்னய கொல்றதுக்காகவா என்னய காதலிச்ச...? அதுக்கு நீ என்னய கொன்னு..."

அவன் வார்த்தையை முடிக்க விடாமல், அவனது இதழில் தனது இதழைப் பதித்து, அவனைப் பேச விடாமல் செய்தவள் அவன் ஆண் என்கிற உணர்வை மெதுவே தட்டி எழுப்பினாள்.

அவன் வாயில் இருந்து வந்த மது வாடையையும் மீறி அந்த இதழ் யுத்தத்தில் மயங்கத்தான் செய்தது அவளது மனம். மனம் நிறையக் காதலைச் சுமந்து கொண்டிருந்த அவன் அவளை எப்படி அணுகுவது என்று தெரியாமல் விழித்துக் கொண்டிருக்கும் போது அவளது இந்த நெருக்கமும், உள்ளே சென்றிருந்த மதுவும், சற்று முன் பார்த்த படமும் அவனது உணர்வு

களைக் கண்டபடி தூண்டி விட, வேகமும் தாபமுமாய் அவளை அள்ளிக் கொண்டான் அவன்.

அவளோடு படுக்கையில் சரிந்தவன் மேலும் மேலும் அவளுள் புதைய, அவளும் அவனை எதிர்க் காமல் அவனுடன் ஒத்துழைத்தாள். அவளின் பிரமாத மான ஒத்துழைப்பை மிகத் தாமதமாய் உணர்ந்தவன் தீச்சுட்டார் போன்று அவளை விட்டு விலகி எழுந்தான். அவனின் போதை முற்றிலும் இறங்கி இருந்தது.

"உதய்..." அவளது குரலில் நிரம்பி வழிந்த உணர்வு களை உணர்ந்தவன் மனம் வேதனையைச் சுமந் திருந்தது.

அவளின் மனமும் அவனுக்குப் புரியத்தான் செய்தது. அதே சமயம் அவளிடத்தில் மயங்கும் தனது மனமும் அவனுக்குப் புரியத்தான் செய்தது. ஆனால் இந்தப் புரிதல் மட்டும் இருவருக்குமான வாழ்க்கைக்குப் போதாதே...

அவளின் காதலுக்குப் பின்னால் இருக்கும் காரணம் என்னவென்று அவனுக்குத் தெரிய வேண்டும். அதைச் சொல்ல வேண்டிய உமாவோ மௌனம் சாதிக்கிறாள்.

அப்படி என்றால் அவள் தந்தை சொன்னது போல் ஒரு அடியாளாகத் தான் தன்னை அவள் நினைத்து இருக் கிறாளா... அந்த நினைவே அவனுக்கு வேப்பங்காயாய்க் கசந்தது. மனதில் இருக்கும் கேள்விக்கு விடை தெரியாமல் அவளுடன் இணைந்து வாழ்வது சாத்தியமில்லாத ஒன்று.

"உதய்..." - உமா கலக்கத்துடன் அவனின் கையைப் பற்றினாள்.

உதய் அவளது கையை மெதுவே விலக்கியவன், "மனசு ரெண்டும் சேராம உடலு ரெண்டும் சேர்றதுல எனக்கு விருப்பமில்ல..." என்றவன், எழுந்து நேரே குளியலறைக்குள் சென்று புகுந்து கொண்டான்.

அவனது பேச்சில் அவள் தான் விக்கித்துப் போய் அமர்ந்திருந்தாள். தன்னுடைய நடவடிக்கைகள் அவனை எந்தளவுக்குக் காயப்படுத்தி இருக்கிறது என்று அவளால் நன்கு புரிந்து கொள்ள முடிந்தது.

இப்போது கணவன் மேல் கோபம் வரவில்லை. அவனின் மனக்காயத்தை எப்படி ஆற்றுவது என்று யோசிக்க ஆரம்பித்தாள்.

ஹரி தனது புது வீட்டைக் கட்டி முடித்துப் பால் காய்ச்சுவதற்காகத் தான் சொன்னபடி சங்கீதாவின் வீட்டினரை அழைந்திருந்தான்.

தங்கவேலுவும் மாரீஸ்வரியும் மிகுந்த குதூகலத்துடன் மகளுக்குச் செய்ய வேண்டிய சீர் வரிசைகளோடு சேர்த்து வீட்டிற்குத் தேவையான பொருட்களையும் பட்டியலிட்டனர்.

வீடு முழுவதும் சங்கீதாவைக் காணப் போகும் உற்சாகப் பரபரப்பில் இருந்தது.

உதய் மட்டும் யோசனையாய் மனைவியைப் பார்த்தான். அவளோ அவனைக் கேள்வியாய்ப் பார்த்தாள்.

"இல்ல... சங்கீ வீட்டுக்குப் போக உனக்குப் பிடிக்குமோ பிடிக்காதோன்னு..." என்று அவன் இழுக்க...

அவளோ அவனை ஆழ்ந்து பார்த்தவள், "போக லாம்..." என்றாள். அதில் அவன் முகம் மலர்ந்தது.

மனைவியின் மனவுணர்வுகள் முக்கியம்தான் என்றாலும் கூடப் பிறந்த தங்கை என்று வரும்போது தங்கைக்காகவும் அவனது மனம் துடிக்கத்தான் செய்தது. அதே சமயம் மனைவியை வருந்தச் செய்யவும் அவனுக்கு மனம் வரவில்லை.

அன்று அவளது தாபத்தை உணர்ந்த பின் வார்த்தையில் கூட அவளைக் காயப்படுத்த அவனால் முடியவில்லை... அதே போல்தான் அவளும் அவனின் மனதை உணர்ந்த பின் அவள் தன் காதலை அவனுக்குப் புரிய வைக்க எல்லா வகையிலும் போராடிக் கொண்டிருந் தாள்.

சென்னையில் ஹரியின் வீட்டை அடைந்தபோது எல்லோரையும் மகிழ்வோடு வரவேற்ற ஹரி தம்பதியின ரின் முகத்தில் இருந்த பொலிவே அவர்களது சந்தோ ஷத்தைப் பறை சாற்றியது.

"உமா வாம்மா..." என்று தன் தங்கையைத் தனியாக வரவேற்றான் ஹரி... சங்கீதா அவன் வாழ்வில் வந்த பின் பெண்களின் அருமையை உணர்ந்தவன், தங்கையான உமாவின் பாசத்தையும் மிகவும் விரும்பினான்.

உதய் கலவரத்துடன் உமாவைப் பார்த்தான். 'இந்த மாப்புள்ள வாயை வச்சிக்கிட்டுச் சும்மா இருக்கக் கூடாதா... அவ பேசாம இருந்தாலும் இவரு ஏழரைய கூட்டாம விட மாட்டாரு போலிருக்குதே...'

"அண்ணா, எப்படி இருக்கீங்க...?" என்று ஹரியைப் பார்த்து கேட்ட உமா, "அண்ணி... நல்லா இருக்கீங்களா.... முன்ன பார்த்ததுக்குக் கொஞ்சம் இளைச்சாப்பல இருக்குது. அண்ணா, நல்லாப் பார்த்துக்க மாட்டேங் கிறாரா...?" என்று சங்கீதாவைப் பார்த்துக் கேட்டவள் அவளை அன்போடு அணைத்துக் கொண்டாள்.

தன்னை அதிசயமாய்ப் பார்த்த உதய்யை... சங்கீதாவின் தோள் வளைவில் முகவாயைப் பதித்தபடி அவனைப் பார்த்து கண் சிமிட்டி நமட்டுச் சிரிப்புச் சிரித்தாள் உமா.

'எங்கே வச்சு என்ன காரியம் பண்றா பாரு...?' செல்லமாய் மனைவியைத் திட்டினாலும் அவளது செயலில் அவன் மனம் நிறைந்திருந்தது. தனக்காகத் தனது கோபத்தை விட்டுக் கொடுத்த மனைவியின் நேசம் அவன் மனதை நெகிழ்த்தியது.

"என்ன மச்சான்... தங்கச்சி பாச மழையாப் பொழியுது? எல்லாம் உங்க ட்ரெய்னிங்கா...?"

ஹரி கேட்டபடி உதயின் அருகில் அமர...

"ஹி... ஹி..." என்று உதய்யால் அசடு வழியத்தான் முடிந்தது.

"எப்படியிருந்த மச்சான்.... இப்படி ஆகிட்டீங்களே..." என்று சொல்லியபடி ஹரி செய்த செய்கையில் அங்கிருந்த அனைவரும் சிரித்து விட்டனர்.

கிரகப்பிரவேசம் நல்லபடியாக முடிந்தது.

உதயின் பெற்றோர் தங்கள் மகளுக்கு எந்தவிதக் குறையும் இல்லாமல் எல்லாவற்றையும் செய்து முடித்தனர். மறுநாளே எல்லோரும் ஊருக்குக் கிளம்பினர்.

அன்றைய இரவில் மனம் நிறையக் காதலுடன் சங்கீயின் அருகில் வந்த ஹரி, "கீத்து... இந்த வீட்டை நான் ஏன் நமக்குன்னு எடுத்துக்கிட்டேன்னு உனக்குத் தெரியுமா...?"

அவள் ஓரளவுக்கு அதற்கான காரணத்தை ஊகித்த போதும் கணவன் வாயிலிருந்து வரட்டும் என்று அமைதி காத்தாள்.

"முதன் முதலாய் நான் உன்னை உணர்ந்த இடம் இதுதான்... என்னை எனக்கு உணர்த்தியதும் இங்கு நடந்த நமது உறவுதான்..." என்றவன் அவளது கைகளைத் தனது கைகளில் ஏந்தி அதில் மென்மையாய் முத்தமிட்டான்.

அவனது பேச்சு, முத்தம் எல்லாம் அவளது மனதுக்குள் ஒருவிதச் சிலிர்ப்பைக் கொடுத்தாலும் அன்று தனக்கு ஏற்பட்ட அதிர்ச்சியை, அவமானத்தை அவளால் மறக்க முடியவில்லை. அவளது உடல் அவளையும் அறியாமல் நடுங்கியது.

அவளது உடல் நடுக்கத்தை உணர்ந்தவன் மனம் சுருங்கியது.

"கீத்து பேபி... இன்னமும் என்னை நம்பலையா? நான் மாறியது உனக்குப் புரியலையா..."

கணவனின் மனம் வருந்துவதைக் கண்டு மனம் தாங்காமல், "ஐயோ... அப்படி எல்லாம் இல்லைங்க... உங்களை நம்பாம வேற யாரை நான் நம்பப் போறேன்," என்று வாயில் கை வைத்து அவன் பேசுவதைத் தடை செய்தவள் அவன் நெஞ்சில் சுகமாய்ச் சாய்ந்து கொண் டாள்.

"என்னை மன்னிச்சிட்டியா பேபி..."

"ம்... ம்..."

"அப்படின்னா நீ எனக்கு வேணும் பேபி..."

இத்தனை நாள் காத்திருப்பை அவன் தனது வார்த் தைகளில் வெளிப்படுத்த, அதற்குச் சம்மதமாய்த் தலை யசைத்தவள் தனது முகத்தை அவனது நெஞ்சில் ஆழப் புதைத்துக் கொண்டாள்.

மனைவியின் சம்மதம் கிடைத்ததும் ஹரி தனது காதலை அவளுக்கு உணர்த்த ஆரம்பித்தான்.

அன்று போல் அவசரமாய் மோகத்துடன் காமமாய்ச் சுகித்தது போலன்றி நிதானமாய் மனம் நிறைய காதலைச் சுமந்து கொண்டு, அதை அவளுக்கும் உணர்த்தியபடி செயல்பட்டவனின் கைகளில் மனம் மயங்கிய சங்கீதா முழு மனதுடன் அவனுடன் ஒன்றினாள்.

நாட்கள் அதன் போக்கில் நகர்ந்தன. உதய்க்கும் உமாவுக்கும் இடையில் நல்ல புரிதல் இருந்தாலும் அவர்கள் வாழ்க்கையில் எந்தவித முன்னேற்றமும் இல்லை.

அன்று உதய் வீட்டிற்கு வரும் போதே கையில் பெரிய கட்டுடன் வந்தான். அதைக் கண்டதும் அனை வரும் பதற, உமாவோ அழுகையோடு அவனைப் பார்த்தாள். பெரியவர்கள் முன்னிலையில் அவன் அருகில் செல்லவும் தயக்கமாய் இருந்தது.

கண்களில் பயத்தைத் தேக்கி அவள் அவனைப் பார்க்க... அவளது பார்வை உணர்ந்த அவனும் கண் களால் அவளுக்கு ஆறுதல் கூறினான்.

"யாரு குமாரு, இப்படி செஞ்சது...?" தங்கவேலு கோபமாய்க் கேட்க...

"அவன்தான் அந்த ராசரத்தினம்... இன்னைக்குப் பஜார்க்கு வந்து சண்டித்தனம் பண்ணிட்டு இருந்தான்... அதுவும் பொம்பளைங்க கிட்ட... அவளுங்களே அஞ்சுக்கும் பத்துக்கும் கஷ்டப்பட்டு சம்பாதிச்சுட்டு இருக் குதுங்க... இதுல இவன் ரௌசு தாங்கல... அதேன் அவனைக் கூப்பிட்டு சத்தம் போட்டேன்... பேசிக்கிட்டு இருக்கும் போதே கையைக் கிழிச்சிட்டு ஓடிட்டான் முட்டாப்பய..."

"என் மேல உள்ள கோபத்த உன்னய குத்தித் தீர்த்துக்கிறான் போல... அவனைச் சும்மா விடக் கூடாது குமாரு..." தங்கவேலுக்கு மனம் குமுறியது. கையில் விழுந்த கத்திக் குத்து நெஞ்சில் விழுந்திருந்தால் தனது மகனின் நிலை...

"விடுங்கப்பா... வேற எதுலயாவது மாட்டாமயா போவான்..." உதய் சமாதானம் செய்தவன் தங்கள் அறைக்குச் சென்றான்.

அவனைப் பின் தொடர்ந்து உள்ளே நுழைந்த உமா அவனை அணைத்துக் கொண்டு கண்ணீர் விட...

"ஏய், இங்கே பாருடி... எனக்கு இதெல்லாம் சகஜம்... எம் பொஞ்சாதியா இருந்துட்டு இதுக்குப் போய் அழுது கிட்டு..." அவளின் கண்ணீரைத் துடைத்து விட்டான்.

கொஞ்ச நேரம் உணர்ச்சி வசப்பட்டதில் உடல் நடுங்க, அவனுடன் ஒன்றியிருந்த உமாவின் மருத்துவ அறிவு மெல்ல விழித்தது. அவனிடம் இருந்து வேகமாய் விலகியவள் அவனது காயத்தின் மீது இருந்த கட்டை அவிழ்க்கப் போக.

"ஏய் உமா, என்ன பண்ற...?" அவளின் செய்கை யில் அவன் பதற...

"ஹலோ, நாங்களும் டாக்டர்தான்..." என்று அவனை முறைத்தவள் அவனின் காயத்தை ஆராய்ந்தாள். சற்று நீளமாய், ஆழமாய்த்தான் கத்தி இறங்கியிருக்க வேண்டும் என்பதை அதில் போடப்பட்டு இருந்த தையல்களின் எண்ணிக்கை கூறியது.

"டி.டி. போட்டீங்களா...? அவங்க டேப்லெட் எழுதிக் கொடுத்த ப்ரிஸ்க்ரிப்ஷன் எடுங்க..." அவள் படபடப்பாய்க் கேட்டதும்,

"இன்ஜெக்ஷன் எல்லாம் போட்டாங்க உமா..." என்று சலித்தவன் மருத்துவர் எழுதிக் கொடுத்த மருந்துச் சீட்டை அவளிடம் நீட்ட....

அதை அவசரமாய்க் கையில் வாங்கி வேகமாய் ஆராய்ந்தது அவளது கண்கள்.

அதில் எழுதி இருந்த மருந்துகள் எல்லாம் சரியாக இருக்கவே, அதில் நிம்மதியடைந்தவள், "நீங்க இருங்க. நான் போய் உங்களுக்குச் சாப்பாடு எடுத்துட்டு வர்றேன்..." என்று வெளியேறியவள் அடுத்த ஐந்தாவது நிமிடம் உணவுடன் வந்தாள்.

அவன் தட்டை வாங்கிக் கொள்ள கையை நீட்ட, அதைத் தடுத்தவள் தானே ஊட்டி விட்டாள்.

அன்று தன் தட்டில் உண்ண யோசித்தவள் இன்று தனக்கு எந்தவித அருவருப்பும் இல்லாமல் ஊட்டி விடுவதைக் கண்டு அவன் மனம் மகிழ்ந்தது,

அவன் சாப்பிட்டு முடித்ததும் மாத்திரையைக் கொடுத்து விழுங்கச் செய்தவள் அவனைச் சற்று நேரம் உட்காரப் பணித்து விட்டுத் தட்டை வைப்பதற்காகச் சென்றாள்.

மீண்டும் ஐந்து நிமிடத்தில் வந்தவளைக் கேள்வி யாய்ப் பார்த்தவன், "நீ சாப்பிட்டியா...?"

"ம்... சாப்பிட்டேன்..." என்றவள் அவன் அருகில் வந்தமர்ந்து, "ரொம்ப வலிக்குதா...?" அவனின் காயத்தை வருடியவளிடம்,

'ரொம்ப வலிக்குது... ஒரு உம்மா கொடு உம்மா!' என்று கேட்கத்தான் அவன் மனம் ஆசை கொண்டது. ஆனால் ஏதோ ஒன்று அவனைத் தடுக்க,

"லேசாத்தான் வலிக்குது..." என்றவன் உடையை மாற்றிக் கொண்டு படுக்கையில் விழுந்தான்.

அப்போதும் உமா அவனின் கையிலிருந்த காயத்தை வருடிக் கொண்டு அமர்ந்திருக்க... அவளின் கலக்கம் கண்டு அவன் மனம் கனிந்தது,

"எனக்கு ஒண்ணும் இல்ல உமா... நீ படு..."

"நீங்க அவன் மேல கேஸ் கொடுக்கலையா...?"

"ச்சு... இதுக்கு எல்லாமா போலீசு, ஸ்டேஷன்னு போவாங்க... இதெல்லாம் வேற மாதிரி டீல் பண்ணணும். நீ கவலைப்படாதே..." அவன் சொன்னாலும் அவளால் அதை அப்படியே விட முடியவில்லை.

மறுநாள் விடிந்ததும் முதல் வேலையாய்க் காவல் நிலையம் தான் சென்றாள் உமா. அங்கே இருந்த அந்த ஜொள்ளு அதிகாரி அவளைப் பார்த்து ஜொள்ளு விட, அதைப் புறம் தள்ளியவள், புகாரைத் தன் கைப்பட எழுதிக் கொடுக்க... உதய்க்குப் பழக்கமான அந்த ஏட்டு அன்று போல் உதய்யை அழைத்து விஷயத்தைச் சொல்ல, உதய் பதறியடித்துக் கொண்டு அங்கே கிளம்பினான்.

உமா எழுதிக் கொடுத்த புகாரைப் படித்துப் பார்த்த இன்ஸ்பெக்டர், "நீ கிளம்பும்மா... விசாரிச்சிட்டு நடவடிக்கை எடுக்கிறேன்..."

"நீங்க உடனே இப்பவே நடவடிக்கை எடுக்கணும்... அவன் இன்னும் வெளியே இருந்தா என்னோட கணவ ருக்குத்தான் ஆபத்து..." அழுத்தத்துடன் அவள் சொல்ல, அதில் அவருக்குக் கோபம் ஏறியது.

"இங்கே நான் இன்ஸ்பெக்டரா! இல்லை, நீ இன்ஸ்பெக்டரா... எப்போ நடவடிக்கை எடுக்கணும்னு

எங்களுக்குத் தெரியும்... போம்மா, வேலையைப் பார்த்துட்டு..." சற்றும் மரியாதை இல்லாமல் பேச, உமாவிற்கு ஆத்திரமாய் வந்தது.

தனது அலைபேசியை எடுத்து அந்த எண்ணை முதன் முறையாய் அழைத்தாள். நினைவு தெரிந்த நாளில் இருந்து அந்த எண் அவளிடம் இருக்கிறது. தந்தையால் அவளுக்கும், அவளது தாயாருக்கும் அத்தனை துன்பம் வந்த போதும் அவள் அழைத்தது இல்லை... ஆனால் இன்றுதான் முதன் முறையாகத் தனது கணவனுக்காக அந்த எண்ணை அழுத்தினாள்.

உமா அழைத்த மறு நொடியில், அடுத்த முனையில் அழைப்பு எடுக்கப்பட்டது. "உமா, நல்லா இருக்கியாம்மா...?" பாசத்துடன் வந்தது அந்தக் குரல்.

அந்தப் பாசத்தில் அவளது மனம் நெகிழ்ந்தது. "அப்பா..." என்றாள் குரல் தேம்ப...

"போதும்டா... இந்த ஒரு வார்த்தை போதும்டா... நான் இவ்வளவு நாள் வாழ்ந்ததுக்கான அர்த்தம் பூர்த்தி ஆகிருச்சு..." மனம் திறந்து பேசியவர் சிறிது நேர அமைதிக்குப் பின்னர்,

"லெஷ்மி எப்படியிருக்கா...?" அவரது குரலில் இருந்து அவரது மனவுணர்வை அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை...

"நல்லாயிருக்காங்க..."

"ம்... ம்..." என்றவரின் மௌனமே, அதை நம்பவில்லை என்றது.

"சரி, சொல்லு உமா! எதுக்கு ஃபோன் பண்ணினே?"

தனது தேவைக்காக அவரை அழைத்ததை எண்ணி அவளுக்குக் குற்றவுணர்வு குறுகுறுத்தாலும், உதய்க்காகத் தான் அவரை அழைத்த விவரத்தை அவள் ஒன்று விடாமல் கூற...

"இதுக்குப் போய் நீ ஏம்மா இங்கே எல்லாம் வந்த... அந்த இன்ஸ்பெக்டர் கிட்ட ஃபோனைக் கொடு..." அவர் சொன்னதும் அலைபேசியை எதிரில் இருந்தவரிடத்தில் நீட்டினாள்.

அவரோ அவளின் தெனாவெட்டான பார்வையில் குழப்பத்துடன் அலைபேசியை வாங்கினார்.

மறுமுனையில் பேசப் பேச அவரின் பார்வை உமாவை மரியாதையாய்ப் பார்த்தது.

"சரிங்க சார்... நீங்க சொன்னதை நான் செய்றேன்..." என்று அலைபேசியை அணைத்து உமாவிடம் நீட்டியவர், "இதை முதல்லயே சொல்லியிருக்கலாமே, மேடம்..." என்றவர், ஏட்டை அழைத்து ராஜரத்தினத்தைத் தேடி அழைத்து வரச் சொன்னார்.

இன்ஸ்பெக்டரின் மரியாதையான பேச்சு ஏட்டைக் கூட குழப்பத்தில் ஆழ்த்தினாலும் உதய்யின் மனைவி பெரிய இடத்துப் பெண் என்பது மட்டும் அவருக்கு நன்கு புரிந்தது.

வெளியில் வந்தவர் அங்கு அவசரமாய் வந்து கொண்டிருந்த உதயை நிறுத்தி, "உம் பொஞ்சாதி பெரிய இடத்துப் பொண்ணுன்னு சொல்லவே இல்லையேப்பா..."

அவனுக்கு இருந்த பதட்டத்தில் அவர் கூறியதைக் கவனிக்காமல், "உமா எங்கே...?" என்று கேட்க...

"உள்ளே தான்யா இருக்கு..." என்றபடி அவர் செல்ல... உதய் காவல் நிலையத்துக்குள் வேகமாய் நுழைந்தான்.

"சார் வாங்க சார்... உட்காருங்க... மேடம் எல்லாத் தையும் சொன்னாங்க..." அந்த இன்ஸ்பெக்டரின் அதீத மரியாதை உதய்க்கு ஆச்சரியத்தை அளித்தாலும் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல்,

"சார்! அந்தக் கம்ப்ளைண்ட்டை வாபஸ் வாங்கிக் கிறோம். மேற்கொண்டு எந்தப் பிரச்சனையும் வேணாம்..." என்றவன் உமாவைப் பார்த்து, "அதை வாபஸ் வாங்கிட்டு வா, உமா..." என்றான்.

அவளோ சட்டமாய் அமர்ந்து கொண்டு, "உங்க உயிருக்கு ஆபத்துங்கிறப்போ இதை இப்படிச் சும்மா விடுறது சரியில்லை உதய்..."

அவளது பேச்சில் அவன் பல்லைக் கடித்தான்.

"அப்பாவுக்குத் தெரிஞ்சா சங்கடப்படுவாரு உமா... சொன்னாக் கேளு..."

அவளோ அசையாமல் அமர்ந்திருக்க... அவனுக் குமே என்ன செய்வது என்று தெரியவில்லை.

"மேடம், ரொம்பப் பெரிய இடமோ... புடிச்சாலும் புடிச்சீங்க புளியங்கொம்பாத்தான் புடிச்சிருக்கீங்க குமாரு..." அவரது பேச்சில் புரியாமல் விழித்தான் உதய்.

"பின்னே மேடத்துக்கு மினிஸ்டர் லெவல்ல பவர் இருக்கே..." இன்ஸ்பெக்டர் சிலாகித்துப் பேச...

"உங்கப்பாவுக்கு ஃபோன் பண்ணுனியா...? அவர் வேணாம்னு தானே நாமளே ஒதுங்கி இருக்கோம்... இப்ப எதுக்கு அவர்கிட்ட பேசின...?" கோபமாய் இரைந்தவனைக் கூர்மையாய்ப் பார்த்தவள் அவனின் கேள்விக்கு மட்டும் பதில் பேசவில்லை.

அடுத்த அரை மணி நேரத்தில் போதையில் இருந்த ராஜரத்தினத்தை உமாவின் முன் கொண்டு வந்து நிறுத்த, அவனைக் கண்ட உமாவோ பேயைக் கண்டது போல் பயந்து போய் உதய்யின் பின் சென்று மறைந்தாள்.

"இதுக்குத்தேன் சொன்னேன்... இங்க எல்லாம் வரா தேன்னு... சொன்னாக் கேட்குறது இல்ல..." அவன் கடிந்தது கூட காதில் விழாமல்,

உமா அந்த இன்ஸ்பெக்டர் பக்கம் திரும்பியவள், "சார்! அந்தக் கம்ப்ளைய்ண்ட்டை நான் வாபஸ் வாங்கிக் கிறேன்..." பதட்டத்துடன் சொன்னவள் அவர் அந்தக் காகிதத்தை எடுத்துக் கொடுக்கும் முன், அவளே அதை எடுத்துச் சுக்கு நூறாய்க் கிழித்துப் போட்டவள் உதய்யை இழுத்துக் கொண்டு வேகமாய் வெளியேறினாள்.

பலம் பொருந்திய உதய்யை இழுத்துக் கொண்டு போகும் அளவுக்கு மெல்லிய உடலைக் கொண்ட உமா வுக்குள் புகுந்து அவளைச் செலுத்திய சக்திதான் எது?

"அந்தப் புள்ள ஏன் என்னயப் பார்த்து இப்படிப் பயந்து ஓடுது...?" போதையில் உளறியபடி தலையைச் சொறிந்தான் ராஜரத்தினம்...

வீட்டு வாசலில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்த தங்கவேலு, ஆட்டோவில் இருந்து இறங்கிய உதயையும், உமாவையும் கண்டு புருவம் சுருங்கினார்.

உதய்க்கு இன்னமும் கைக்காயம் ஆறாத நிலை யில் எங்கே சென்று வருகிறான் என்ற கேள்வி அவர் மனதில் எழுந்தது. அதே சமயம் உமாவின் தோற்றம் கண்டு அவரின் மனம் துணுக்குறவும் தவறவில்லை.

மருண்ட பார்வையுடன் மகனின் கையை இறுகப் பற்றிக் கொண்டு வந்த மருமகளின் தோற்றம் அவருள் பல யோசனைகளை விதைத்தது. தன்னுடன் பேசிக் கொண்டிருந்தவர்களை வழி அனுப்பி விட்டு வந்தவர் உதய்யிடம்,

"என்ன குமாரு... மருமவ முகம் பயந்த மாதிரி இருக்கு... ஏதாச்சும் பிரச்சினையாய்யா...?" வினாடியில் யூகித்துக் கேட்ட தந்தையை அந்த நிலையிலும் அவனால் மெச்சாமல் இருக்க முடியவில்லை.

அப்போது தான் உணர்ந்தான், உமா தனது கையை இறுகப் பற்றித் தன் தோளில் சாய்ந்திருப்பதை...

தந்தையைச் சங்கடத்துடன் பார்த்தவன், உமாவின் கையைப் பற்றி விலக்கி நிற்க வைக்க முயல, அவளோ இன்னமும் அதிகமாய் அவனுடன் ஒன்றிக் கொண்டாள். உதய்க்கு என்ன செய்வது என்று தெரியவில்லை.

"பரவாயில்ல, விடு குமாரு... அதே பயந்து போய் இருக்கு... நீ உள்ளாற கூட்டிட்டுப் போ..." என்றார்.

நன்றியுடன் தந்தையைப் பார்த்தவன் கைத்தாங்க லாகவே உமாவை அழைத்துக் கொண்டு தங்களது அறைக்குச் சென்றான்.

அவளைக் கட்டிலில் அமர வைத்தவன், வெளியில் செல்ல முயல, உமா அவனது கையைப் பற்றிப் 'போகாதே' என்பது போல் தலையை அசைக்க... அவ்வளவு நேரம் அடக்கப்பட்ட அவனது கோபம் பீறிட்டுக் கொண்டு வெளி வந்தது.

"உமா..." என்று அவளை அதட்டியவன், "இது என்ன சின்னப் புள்ள மாதிரி... நீயா தைரியமா போலீசு ஸ்டேசன் போயிட்டு இப்படிப் பயந்துட்டு உட்கார்ந்தா என்ன அர்த்தம்...? இல்லை அங்கே போறதுக்கு முன்னாடி என் கிட்டேயாவது ஒரு வார்த்தை கேட்டியா...? அதுவும் இல்ல... எல்லாம் உன் இஷ்டத்துக்குப் பண்ணணும், என்ன...? அப்பா முன்னாடி கையை விடாம நிக்கிறே.., மனுசன் என்ற நெனைச்சாரோ தெரியலை... இப்போ ரூமை விட்டும் போகக் கூடாதுன்னா... நான் என்னத்தா செய்றது, சொல்லு...?"

அவனது கோபப் பேச்சில் அவளது கண்ணில் கண்ணீர் கரை கட்டியது. "உதய்..." என்று அவனின் கையில் முகம் புதைத்து அழுதவளைக் கண்டவனுக்கு அதற்கு மேல் திட்ட முடியவில்லை...

"உமா...இங்கே பாரு..." அவளருகே அமர்ந்து, அவளின் முகத்தை நிமிர்த்த முயன்றவன், தோல்வி யையே தழுவினான்.

பெரும்பாடு பட்டு அவள் முகத்தை அவன் நிமிர்த்த முயல, அவள் அவனை நிமிர்ந்து பார்க்காமல், அவனின் நெஞ்சில் முகம் புதைத்து அழ ஆரம்பித்தவளின் அழுகை நொடிக்கு நொடி கூடிக்கொண்டே போனது. எப்போதும் தைரியமாக இருக்கும் உமாவின் அழுகையின் பின்னணியில் அப்படி என்ன இருக்கக்கூடும் என்று அவனுக்குத் தெரியவில்லை. அதை எல்லாம் விட, அவள் ராஜரத்தினத்தைக் கண்டு பயந்து, வழக்கைத் திரும்பப் பெற்றுக் கொண்டதுடன், அவனைப் பார்த்துப் பேயைக் கண்டது போல் அரண்டு போய் ஓடி வந்ததுக்கான காரணமும் என்னவென்று அவனுக்குப் புரியவில்லை.

ஆனாலும் மனைவியின் அழுகை அவனின் மனதை வருந்தச் செய்ய, அவளின் தலை கோதி ஆறுதல் படுத்த முயன்றான். அப்போது அவன் அறைக் கதவு தட்டப்பட, உமாவை அவன் தள்ளி நிறுத்த, அவளோ அவன் நெஞ்சில் இன்னும் ஆழப் புதைந்து கொண்டு எழ மறுத்தாள்.

"ஏய் உமா... அப்பா, அம்மா யாராவது வந்திருக்கப் போறாங்கடி... நீ இப்படி ஒட்டிக்கிட்டு இருந்தா என்ன நெனைப்பாங்க... தள்ளுடி..." அதில் அவள் சற்றுத் தள்ளியமர்ந்தாலும் அவளின் கண்கள் நொடிப் பொழுது கூட அவனை விட்டு அகலவில்லை. இமைக்காமல் அவனைத்தான் பார்த்துக் கொண்டிருந்தாள்.

உதய்யின் அன்னை மாரீஸ்வரிதான் கையில் தம்ளர்களுடன் உள்ளே நுழைந்தார். "குமாரு, இந்தாய்யா.

இந்தக் காபியை நீ குடி..." மகனிடம் ஒரு தம்ளரை நீட்டியவர் மருமகளிடம்,

"உமா...இதை நீ குடி..." என்று பால் நிரம்பிய தம்ளரை அவளிடம் நீட்ட... அவளோ அவரைக் கூடக் கவனிக்காமல் உதய்யைப் பார்த்துக் கொண்டிருக்க...உதய்க்கு அவளின் நடத்தை ஒரு மாதிரியாக இருந்தது.

"எம்மா..." அன்னையிடம் என்ன சொல்வது என்று தெரியாமல் அவன் விழிக்க...

என்றும் இல்லாத திருநாளாக இன்று மருமகளின் நிலை அவருக்கே புதிதாய் இருந்தது. அவளருகே அமர்ந்தவர், "உமா...இங்கே பாரு..." அவளின் கன்னம் தட்ட, அதில் அவரின் பக்கம் திரும்பியவளின் பார்வை, திருவிழாவில் தொலைந்து போன குழந்தையின் அச்சத்தை அது பிரதிபலித்தது.

அவளின் நிலை அவருக்குமே பரிதாபமாக இருக்க, மகனிடம், "குமாரு... நீயே அது மனசுல என்ன கஷ்டம் இருக்குன்னு கேளுப்பா..." என்று விட்டு அகன்றார்.

அன்று உதய்யும் கைக்காயம் காரணமாக வேலைக்குச் செல்லவில்லை...அவளருகே அமர்ந்தவன், "என்னடி இது...?" என்று அவளைக் கடிந்தாலும், தானே வலியச் சென்று அவளை இறுக அணைத்துக் கொண்டான். அவளின் பார்வையில் இருந்த ஒன்று அவன் மனதை இளக்கியது.

"உதய்... அவன் கிட்டப் பார்த்துப் பத்திரமா இருங்க. அவன் உங்களை ஏதாவது செஞ்சிறப் போறான்..." நடுக்கத்துடன் வந்தது அவளது வார்த்தைகள்.

அதைக் கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது. "ஏன்டி, அவனே ஒரு டம்மி பீஸ்... அவன் என்னை என்ன செஞ்சிற முடியும்...?" வாய் விட்டுச் சிரித்தவனைத் திகிலாய்ப் பார்த்தவள், மெதுவே அந்த வார்த்தைகளை கூறினாள். அதில் அவனின் சிரிப்பு நின்றது.

"என்ன சொன்ன... திரும்பச் சொல்லு...?"

"அவனால கொலை செய்ய முடியும்..." என்றவளை ஒரு நிமிடம் கூர்ந்து பார்த்தவன் அடுத்த நிமிடம் உரக்க நகைத்தான்...

"அவன் என்னைக் கொலை செய்வானா...?" ஒவ்வொரு வார்த்தையாய் விட்டு விட்டுச் சொன்னவனுக்குச் சிரிப்புத் தாங்கவில்லை.

"அவனை நீங்க தப்பா எடை போடுறீங்க உதய்... அவன் செய்யக் கூடியவன்தான்..." உறுதியாய்க் கூறிய வளை நமட்டுச் சிரிப்புடன் பார்த்தவன்,

"அவன் கொலை செஞ்சதை நீ எப்போ பார்த்தே...?" அவனது கேள்வியில், அவள் ஆழ் மனதில் புதையுண்டு இருந்த... இல்லை, இல்லை... புதையுண்டதாகக் கருதப் பட்ட... அவள் இறந்தால் கூட அவளை விட்டு நீங்காத அந்தக் காட்சி படம் போல் ஓடியது. பதில் பேசாது அவனிடம் இருந்து விலகி அமர்ந்தவள், வேதனையுடன் கண்களை மூடிக் கொண்டாள்.

அதில் அவன் முகம் யோசனையில் ஆழ்ந்து... அவள் என்ன கூற வருகிறாள் என்பதைப் பற்றி அவன் ஆராயவில்லை. ஆனால், அவளின் அந்த வேதனை அவனையும் வேதனைப் படுத்த, அவளை இழுத்துத் தன் மடியில் சாய்த்துக் கொண்டான்.

அவன் இழுத்ததில் சிறிது அதிர்ந்தவள், அடுத்த அவன் செய்த செயலில் மனம் நெகிழ்ந்து, அவனது மடியில் முகம் புதைத்துக் கண்களை மூடினாள். மனதில் ஏதேதோ எண்ணங்கள் அலை பாய, பழைய ஞாபகத்தில் கண்ணீர் பொங்கியது. அதைக் கணவனுக்குக் காட்டாமல் துடைத்துக் கொண்டவள், அவனின் இடுப்பைக் கட்டிக் கொண்டு படுத்துக் கொண்டாள்.

அவனும் அவளின் தலையை ஆறுதலாகக் கோதிக் கொடுக்க, அதில் சுகமாய்த் தூக்கம் அவளைத் தழுவிக் கொண்டது

அதற்கு அடுத்து வந்த நாட்கள் ஒரு வித அழுத்தத்துடன் நகர, உமாவின் நடவடிக்கையில் பெருத்த மாற்றம் ஏற்பட்டது. உதய்யை அடிக்கடி அழைத்துப் பேசி, எங்கிருக்கிறான்... என்ன செய்கிறான்? என்று கேட்டுக் கொண்டிருந்தவளை, முதலில் அவன் சந்தேகிக்க வில்லை. ஆனால், மணிக்கொரு தரம் விடுத்த அழைப்பு, அரை மணி நேரம், கால் மணி நேரம், பத்து நிமிடம் என்று சுருங்கச் சுருங்க, அவனின் கோபம் அதிகரித்தது.

ஒரு நாள் வீட்டிற்கு அவள் வந்ததும் அவன் கோபத்துடன் திட்ட ஆரம்பித்தான். "உமா... உனக்கு வர

வரப் பைத்தியம் முத்திப் போச்சு. ஏன்டி என்னை இப்படி இம்சை பண்ற...? இதுக்குத்தான் காதலிச்சுக் கல்யாணம் பண்ணிக்கிட்டியா...? உன்னைக் கல்யாணம் பண்ணதுக்கு வேற பொண்ணைக் கல்யாணம் பண்ணியிருந்தாக் கூட நிம்மதியா இருந்திருப்பேன்..." அவள் தன்னை சந்தேகிக்கிறாளோ என்ற ஆத்திரத்தில், அவன் தன் அறிவை இழந்து வார்த்தையை விட்டான்.

"கடைசியில் நீங்களும் என்னைப் பைத்தியம்னு சொல்லிட்டீங்கல்ல..." அடிபட்ட பார்வை ஒன்றைப் பார்த்து வைத்தாள் அவள். அவளது வார்த்தையில் இருந்த வலிக்குக் கொஞ்சமும் குறையாது இருந்தது அவளது கண்களின் வலி. அதை உணர்ந்தவன்,

"ஏய், அப்படி எல்லாம் இல்லடி உமா..." என்றவன், தன் கோபத்தை மறந்தவனாய், ஒரே தாவலில் அவள் அருகே வந்து அணைத்துக் கொண்டான்.

"இல்லை, நான் பைத்தியம்தான்... நான் பைத்தியம் தான்..." என்று அவன் அணைப்பில் இருந்து திமிறிய வளைச் சமாதானப்படுத்துவதற்குள் அவனுக்குப் போதும் போதும் என்றாகி விட்டது,

அவளை வலுக்கட்டாயமாய்ப் படுக்க வைத்துத் தூங்க வைத்தவன், உறங்கும் அவளது முகத்தைப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தான். அவள் பேசிய ஒவ்வொரு வார்த்தையையும் கோத்துப் பார்த்தவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. ஆனால், அவள் ஏதோ ஒரு விதத்தில் பாதிக்கப்பட்டு இருக்கிறாள் என்று மட்டும்

அவனுக்குப் புரிந்து, அது யாரால் என்பது மட்டும் அவனுக்குத் தெரியவில்லை. உமாவிடம் கேட்கவும் அவனுக்குப் பயமாய் இருந்தது. அதே சமயம் அவள் செய்யும் செயல் யாவும் அவனுக்குக் கோபத்தை உண்டாக்கத்தான் செய்தது.

உமாவின் இந்த முகம் அவனுக்குப் புதிது. அவளை எப்படிக் கையாளுவது என்று அவனுக்குத் தெரிய வில்லை. முதன் முறையாகத் தனது முன் கோபம் குறித்து அவன் அச்சப்பட்டான். தான் ஏதேனும் கோபத்தில் அவளை ஏதும் பேசி விடுவோமா... தனது வார்த்தைகள் அவளைக் காயப்படுத்தி விடுமோ என்று பயந்தான். தனது கோபம் அவளை இழக்கச் செய்து விடுமோ என்றும் அச்சப்பட்டான்.

"மெடிக்கல் கேம்ப் போயே ஆகணுமா உமா....?" என்று கேட்டபடி உதய் அவளுக்குத் தேவையானவற்றை எடுத்துக் கொடுக்க...

ஆம் என்பது போல் தலையசைத்த உமா, அமைதியாய் அவன் எடுத்துக் கொடுத்ததை வாங்கிப் பையில் அடுக்கிக் கொண்டிருந்தாள்.

"ரெண்டு நாளா...?" அதற்கும் ஆம் என்று தலையசைத்தவளை அவன் இயலாமையுடன் பார்த் தான்.

அன்று அவன் கோபப்பட்டதில் இருந்து அவள் அவனுடன் அதிகம் பேசுவது இல்லை. அதற்காக அவனை அப்படியே விட்டு விடவும் இல்லை. அவனுக்கு

வேண்டிய அத்தனையும் ஒழுங்காகச் செய்தாள், மௌனத் திரையின் பின்னால் ஒளிந்து கொண்டு. அதற்காக அவன் மீது அவளுக்குக் கோபம் என்று அர்த்தம் இல்லை. தன்னைப் புரிந்து கொள்ளவில்லையே என்கிற ஆதங்கம் தான் அவளிடத்தில் இருந்தது.

அன்று அவன் திட்டியதற்குப் பின், அநாவசியமாக அவனை அலைபேசியில் அழைத்துத் தொந்தரவு செய்யவில்லை. மாறாக அழகேசனுக்கு அழைத்து, உதய் எங்கு இருக்கிறான்...? என்ன செய்கிறான்...? என்று கேட்டுத் தெரிந்து கொண்டாள். இப்போது எல்லாம் உதய் தான் அவளது அழைப்புக்காக மனதுக்குள் ஏங்க ஆரம்பித்திருந்தான்.

இடையில் ஓடிச் சென்ற இரண்டு மாத காலமாய் இருவருக்குள்ளும் கண்ணுக்குத் தெரியாத முள்வேலி ஒன்று அமைந்து, மேலும் அவர்களை நெருங்க விடாமல் தடுத்தது. அவனுக்குத் தெரியும், அன்று தான் பேசிய வார்த்தைகள் அவளின் மனதை அதிகமாய்க் காயப்படுத்தி இருக்கிறது என்று. ஆனாலும் என்ன செய்து அந்தக் காயத்தை ஆற்றுவது என்று அவனுக்கும் புரியவில்லை.

இப்போது மௌனமாய்க் கிளம்பியவளைக் கண்டு அவனுக்குத்தான் ஏக்கமாய் இருந்தது.

"வரட்டுமா...?" ஒற்றை வார்த்தையில் சொல்லிக் கொண்டு கிளம்பியவளைக் கண்டு, அவனுக்கு ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது.

முதலில் இருந்த உமாவை அவன் எதிர் பார்த்தான். தான் என்ன முகத்தைத் திருப்பிக் கொண்டாலும்,

தன்னைச் சுற்றி வந்து சீண்டி வம்பிழுக்கும் அந்த உமாவிற்காக அவன் ஏங்கினான். அதிலும் இரண்டு நாள் பிரிந்திருக்க வேண்டும் என்ற துயரம் வேறு அவன் மனதை அழுத்த... அவளது கரத்தைப் பிடித்துத் தடுத்தவன், அவளைத் தன் புறம் திருப்பி,

"உனக்கு என் கூடப் பேசப் பிடிக்கலைல்ல... நான் பேசுனது தப்புதான் உமா..." என்றவனை நோக்கிய உமாவின் கண்களில் ஜீவன் இல்லையோ... அந்த உயிர்ப்பற்ற பார்வை, அவனை அதிகமாய்த் துவளச் செய்ய,

"என்னடி இது... ஏதோ கோபத்துல பேசுனதைப் போய்... என்னைப் பத்தி உனக்குத் தெரியாதா...?" அவனின் வலி மிகுந்த குரலில், அவளாலும் தன் மௌனத்தை அதிக நேரம் கடைப்பிடிக்க முடியவில்லை.

"உதய்..." என்றபடி அவனின் நெஞ்சில் தஞ்சம் அடைந்தவள், வெகு நேரம் தன் முகத்தை நிமிர்த்த வில்லை.

நேரம் செல்வதை உணர்ந்த உதய்தான் அவளின் முகத்தைப் பற்றி, நெற்றியில் அழுத்தமாய் நிதானமாய்த் தனது இதழைப் பதித்து,

"நேரமாகுது...கௌம்பலாம்..." என்றான். அவனது இதழொற்றலில் முகம் சிவந்து நின்றவளைக் கண்டு, அவனுக்கும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளச் சிரம மாய் இருந்தாலும், ஏதோ ஒன்று அவனைத் தடுக்க, அவளின் கையில் இருந்த பையை வாங்கிக் கொண்டு முன்னே நடக்க, அவள் அவனைப் பின் தொடர்ந்தாள்.

மருத்துவ மனையில் அவளை விட்டு விட்டு வந்தவனுக்கு, அன்றையப் பொழுதைக் கழிப்பதற்குள் பெரும் பாடாய் இருந்தது. ஒரு வழியாய் அன்றையப் பொழுதை நெட்டிக் கழித்தவன், இரவு வந்ததும் தனது அறைக்கு வந்தான். அவ்வளவு நாளாய்... அவன் மட்டும் தனித்திருந்த நாட்களில் படுத்ததும் உறங்கி விடுபவன், இன்று மனையாள் அருகில் இல்லாமல் அவனுக்கு உறக்கம் வரவில்லை.

வெகுநேரம் வரை உறக்கம் வராமல் தவித்துக் கொண்டிருந்தவன், அதற்கு மேல் தாங்க முடியாமல் உமாவின் உடைகள் இருந்த அலமாரியைத் திறந்தான். அதைத் திறக்கும் போதே உமாவிடத்தில் இருந்து எழும் நறுமணம், அதில் இருந்து வந்தது. கண்களை மூடி அவளது வாசனையை அனுபவித்து ரசித்து நன்கு உள் வாங்கி மூச்சை இழுத்துச் சுவாசித்தவனுக்கு, ஆக்சிஜனை விட உமாவின் நறுமணம் அதிகப் புத்துணர்ச்சியைத் தந்தது.

அவள் உடுத்தும் உடையை எடுத்துக் கொண்டு, அதைக் கட்டிப் பிடித்துப் படுக்க அவனது காதல் கொண்ட மனம் ஆசை கொண்டது. அவளது இரவு உடை, சுடிதார், ஜீன்ஸ் என்று வரிசையாக உடைகளை எடுத்தவன், அதை எல்லாம் திரும்ப அதனிடத்தில் வைத்து விட்டு, அன்று அவள் கட்டியிருந்த கேரள பாணி புடவையை அடியில் இருந்து உருவி எடுத்தான். புடவையோடு சேர்த்துச் சில நாட்குறிப்பேடுகளும் சேர்ந்து விழ, அவன் அதையும் எடுத்துக் கொண்டு வந்து கட்டிலில் அமர்ந்தான்.

உமாவின் நாட்குறிப்பேடுகளைப் படிக்கலாமா வேண்டாமா என்று மனதுக்குள் பட்டிமன்றம் நடத்தியவன், பின் ஏகமனதாக அவைகளை வாசிப்பது என்று முடிவு செய்தான். அவனைப் பற்றிய பல கேள்விகளுக்கு அதில் விடை இருக்குமோ என்று மனதில் சந்தேகம் எழ, அவன் பரபரப்பானான்.

2002 ஆம் ஆண்டில் எழுதப்பட்ட நாட்குறிப் பேட்டைக் கையில் எடுத்தான். ஏனெனில் நாட்குறிப்பேடு அதில் இருந்துதான் ஆரம்பித்து இருந்தது... அதாவது உமாவின் பத்தாவது வயதில் இருந்து.

'இந்த வயசுல அப்படி என்ன எழுதி இருப்பாள்...?' ஆர்வம் மேலோங்க அதைப் பிரித்தான். முன் பக்கத்தில் உமாவும் அவளை விடப் பத்து வயது மூத்த பெண்... ஏறக்குறைய உமாவின் சாயலில் இருந்த பெண் ஒருத்தியும் அணைத்து கொண்டு நின்றிருந்தனர். பார்த்த உடனேயே தெரிந்தது, அது உமாவின் சகோதரி என்று.

'இவளுக்கு அக்கா வேற இருக்கா...? சொல்லவே இல்லையே... வரட்டும், அவளுக்கு இருக்கு...' என்று வாய் விட்டுக் கறுவியவன், அடுத்த பக்கத்தைத் திருப்பினான்.

'இந்த உலகத்திலேயே அழகான பெண் என் அக்கா தான்...' கர்வமாய் எழுதியிருந்த உமாவின் குண்டுக் குண்டு கையெழுத்து கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது.

"உன்னை விடவா உன் அக்கா அழகு..." அவன் வாய் கூறினாலும் உமாவை விட அவளின் அக்கா அழகாய் இருந்ததை அவனது மனம் ஒத்துக் கொள்ளத் தான் செய்தது.

'இருந்தாலும் என் உமாதான் எனக்கு அழகு...' என்று சிரித்தபடி அடுத்த பக்கத்தைப் புரட்டியவனின் சிரிப்பு அத்தோடு நின்று போனது.

பக்கங்கள் திருப்பத் திருப்ப அவன் மனதைக் கனமாய் பாரமாய் ஏதோ ஒன்று அழுத்தத் துவங்க, அதில் அவனது மூச்சுத் திணறியது. மனப்பாரம் தாங்காமல் அதை மூடி வைத்தவன், சில நிமிடங்கள் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு, மீண்டும் அதைக் கையில் எடுத்தான்.

அவனது விடை தெரியாப் பல கேள்விகளுக்கு விடையை அது தந்தது. அந்த விடையின் பயங்கரத்தை அவனால் தாங்க முடியவில்லை. தினமும் வெட்டு குத்து பஞ்சாயத்து காணும் அவனுக்கே உமாவிற்கு நேர்ந்த அவலங்களைப் படிக்க முடியவில்லை. ஆனாலும் படித்தான்... உமாவைப் பற்றித் தெரிந்து கொள்ள. அவளின் மனத்துயரைத் தன்னால் போக்க முடியுமா என்று அறிந்து கொள்வதற்காக அதைப் படிக்க ஆரம் பித்தான்

"இனியாவது என்னை உங்க அரசியல் வாரிசா ஏத்துக்கிறதுல எந்தப் பிரச்சினையும் இல்லைல்ல..." தனலெஷ்மியைத் திட்டமிட்டுக் காதலித்து, நேற்று அவளை உற்றார் உறவினர் அதிலும் முக்கியமாக அந்த ஜெகதீசன் முன்னிலையில் திருமணம் செய்து, வெற்றிகரமாக நேற்றிரவு முதலிரவும் முடித்து விட்டு வந்த மமதையில் பேசிய சங்கரமகாதேவனைக் கேவலமாய் ஒரு புழுவைப் போல் அற்பமாய்ப் பார்த்தார் பெரியசாமி,

பெரியசாமி பெரிய புகழ் பெற்ற அரசியல்வாதி. அதை விடப் பாரம்பரியம் மிக்க குடும்பப் பின்னணியை உடையவர். ஏகப்பட்ட சொத்துக்கு ஒரே வாரிசு. என்ன தான் பணத்தில் புரண்டாலும் அதன் பெருமையைத் தன் பக்கம் அண்டவிடாமல் சாமானிய மனிதனாய் இருப்பதில் அவருக்கு நிகர் அவர்தான்.

அவர் தனது அரசியல் வாரிசாக ஜெகதீசனைத்தான் நினைத்திருந்தார். ஏனெனில் அவரைப் போலவே சொத்துக்கள் உடையவனாக இருந்த போதிலும், ஜெகதீசன் நேர்மையைத் தனது மூச்சாகக் கொண்டு வாழ்ந்தான். அவனைத் தனது அரசியல் வாரிசாகவும் அதே சமயம் தனது ஒற்றை மகளை அவனுக்குக் கட்டிக் கொடுத்துத் தனது மருமகனாகவும் ஆக்கிக் கொள்ள பெரியசாமிக்கு மிகுந்த விருப்பமாய் இருந்தது.

ஜெகதீசனுக்கும் தனலெஷ்மியை மிகவும் பிடிக்கும். தன் மனதுக்குள் உயிருக்கு உயிராய் அவளைக் காதலித்தான். ஆனால், வாய் திறந்து ஒரு நாள் கூட தனத்திடம் தனது காதலைப் பகிர்ந்து கொண்டது கிடையாது, ஜெகதீசன்தான் தன் காதலைச் சொல்லத் தயங்கினார் என்றால், பெரியசாமியும் தனது மன விருப்பத்தை மகளிடம் சொல்லாமல் இருந்து விட்டார். சொல்லியிருந்தால் இந்த மகாதேவன் இன்று அவரின் மருமகனாய் அவர் முன் நின்றிருக்க மாட்டார்.

தனலெஷ்மி வயது மற்றும் படிப்பு கருதி, இருவரும் தங்கள் எண்ணங்களை மறைத்து வைக்க, அதற்கு

வேட்டு வைப்பது போல் பெரியசாமியின் மனைவி வழி சொந்தமாக அவரிடம் வந்து சேர்ந்தார் மகாதேவன்.

அவரது அப்பா பெரியசாமியிடம் கண்ணீர் மல்க, "மாப்பிள்ளை...தங்கச்சி இறந்ததும் நம்ம உறவு அப்படியே விட்டுப் போச்சு... இப்போ நான் எதுக்கு வந்தேன்னா... எனக்கு இருக்கிறது ஒரே மகன்... இவனை எப்படியாவது நல்ல வழிக்குக் கொண்டு வாங்க. ஊருல வம்பு பண்ணிட்டு சண்டியர் மாதிரித் திரியுறான். நீங்க தான் அவனைத் திருத்தணும்..." என்று மகாதேவனை அவரிடம் விட்டு விட்டுச் சென்றார்.

மகாதேவனின் தந்தை ஒன்றும் பெரியசாமியின் மனைவியின் கூடப் பிறந்த சகோதரன் கிடையாது, ஒன்று விட்ட இரண்டு விட்ட சகோதரன் முறைதான் வேணும். ஆனாலும் மனைவி மேலிருந்த காதல், அவரை மகாதேவனைத் தன்னுடன் இருக்கச் சம்மதிக்க வைத்தது. ஆரம்பத்தில் ஓட்டுநர் வேலையைக் கொடுத்தார் பெரியசாமி. மாமனின் செல்வாக்கால் அரசியலில் பெரிய ஆளாய் வருவோம் என்று நினைத்திருந்த மகாதேவனுக்கு, இந்த ஓட்டுநர் வேலை பெருத்த அவமானமாய் இருந்தது. இருந்தாலும் பொறுத்துக் கொண்டார்.

அப்போதுதான் ஜெகதீசனைப் பற்றியும், அவனின் செல்வாக்கு எல்லாம் மகாதேவனுக்குத் தெரிய வந்தது. அதிலும் பெரியசாமிக்கு அடுத்து அவன்தான் அவரின் அரசியல் வாரிசு எனவும், அவரது ஒரே மகளை மணம் முடிக்கப் போகிறான் என்பதும் மகாதேவனுக்குத் தெரிய

வர, அவரது மூளை குறுக்கு வழியில் யோசித்தது. யோசிக்க யோசிக்க அவரது மூளையில் மின்னல் வெட்டியது. இத்தனை விசயங்கள் தனக்குப் பாதகமாக இருந்த போதும், ஒரே ஒரு விசயம் தனக்குச் சாதகமாக இருப்பதை உணர்ந்த மகாதேவனுக்குத் தேனீயைப் போல் சுறுசுறுப்பு வந்தது.

அதற்கு ஏற்றாற் போல் வீட்டில் வேலை பார்த்த ஓட்டுநர் உடல் நலம் சரியில்லாத காரணத்தால் ஒரு மாதம் விடுமுறை எடுக்க, அந்த ஒரு மாத காலமும் மகா தேவனை வீட்டிற்கு ஓட்டுநராய்ப் பணித்தார் பெரியசாமி. வாழ்க்கையில் முதன் முதலாய் அவர் தவறு செய்த இடம் அதுதான். பிற்காலத்தில் பலமுறை அதை எண்ணி வருந்தியிருக்கிறார். காலம் கடந்து வருந்தி என்ன பயன்...?

கிடைத்த ஒரு மாத கால அவகாசத்தை, நன்கு பயன் படுத்திக் கொண்டார் மகாதேவன். தனலெஷ்மியின் வெறுமையான மனதில் தனது காதலை அழுத்தமாய்ப் பதிய வைக்க, அவர் ஒன்றும் அதிகக் கஷ்டப்பட வேண்டி யிருக்கவில்லை. தனலெஷ்மியும் ஏனோ தெரியவில்லை, ஜெகதீசனைக் கண்டு மயங்காத அவளது உள்ளம், மகாதேவனைக் கண்டு மயங்கியது. ஒரு வேளை பார்வையில் கூட கண்ணியம் காக்கும் ஜெகதீசனால்... பார்வையாலேயே அவளை வசீகரிக்கும் மகாதேவன் முன் தாக்குப் பிடிக்க முடியவில்லையோ என்னமோ...!

மகளின் காதலைக் கேட்டுப் பெரியசாமிதான் மிகவும் அதிர்ந்து போனார். ஒரே பெண்... அவளின்

ஆசைக்கு மறுப்புச் சொல்லவும் அவருக்குப் பயமாய் இருந்தது. என்ன செய்வது என்று தெரியாமல் விழித்துக் கொண்டிருக்கும் போது, ஜெகதீசன்தான் ஆறுதல் சொல்லி, மகாதேவன் தனலெஷ்மி திருமணத்திற்கு அவரைச் சம்மதிக்க வைத்தார். அதில் மகாதேவனுக்கு நிரம்ப வருத்தம். ஜெகதீசன் சொல்லித் தமது திருமணம் நடைபெறப் போவதை நினைத்து மனதில் குமுறினார்.

காரியம் பெரியதா இல்லை வீரியம் பெரியதா என்று மனதில் இரு எண்ணம் தோன்ற, காரியம் பெரியது என்று எண்ணி அந்தக் குள்ளநரி அடக்கி வாசித்தது.

தான் மனதாரக் காதலித்த காதலியை வேறொருவ னுக்குத் தாரை வார்த்துக் கொடுக்கும் துர்பாக்கியம் யாருக்கும் வரக் கூடாது என்று ஜெகதீசனின் மனம் ஊமையாக அழுதது. தனலெஷ்மி கழுத்தில் தாலி ஏறிய அந்தக் கணம் அவர் முடிவெடுத்தார், அவரது வாழ்வில் திருமணம் என்ற அத்தியாயம் இனி இல்லவே இல்லை என்று... அவரது உறுதி இன்றளவும் தொடர்கிறது.

இதோ... திருமணம் முடிந்த கையோடு தனக்கு அரசியல் வாரிசுப் பட்டத்தை எதிர்பார்த்து மாமனாரிடம் கேட்டும் விட்டார் மகாதேவன்.

"இங்கே பார் சங்கரா... நீ என் மகளைக் கட்டிய மருமகனாக இருக்கலாம்... அதுக்காக என்னுடைய அரசியலில் தலையிட உனக்கு எந்த உரிமையும் இல்லை... அரசியல் வேறு, குடும்பம் வேறு. ரெண்டையும் போட்டு நான் குழப்பிக்க மாட்டேன். நீயும் குழப்பிக்

ாதே...! நீ என்னுடைய மருமகன் என்பது எந்தளவுக்கு த்தியமான உண்மையோ... அதுபோல் ஜெகதீசன் எனது ரசியல் வாரிசு என்பதும் சத்தியமான உண்மை..." என்ற பரியசாமியைக் கண்டு மகாதேவனுக்கு ஆத்திரம் ண்ணை மறைத்தது. எத்தனை நாள் திட்டம் நொடியில் துவிடு பொடியானதில் அவரது சுயரூபம் வெளி வந்தது. "நீங்க என்னை அரசியல் வாரிசாக்கா விட்டால், உங்க மகளோட நான் வாழ மாட்டேன்..." என்று கூசாமல் அடுத்த குண்டைப் போட்டார்.

"நீ என்ன சொன்னாலும் சரி... என் முடிவில் இருந்து நான் மாறப் போவதில்லை..." அழுத்தமாய், அதே சமயம் உறுதியாய்க் கூறினார் பெரியசாமி.

இனி அவரிடம் பேசிப் பலன் இல்லை என்று அறிந்த மகாதேவன், தன் மனைவியிடம் திரும்பி... "அவனை விட நான் எந்த விதத்தில் குறைந்து போயிட் டேன்... ஒரே சாதிக்காரன்... மகளோட புருசன்... அப்படிப்பட்ட என்னை விட அவன் கிட்ட அப்படி என்ன இருக்கு...? வேத்து சாதிக்காரன் அவன்... அவனைப் போய்த் தலையில் தூக்கி வச்சு ஆடுறாரு உங்கப்பா... அவன் என்னை விடப் பணக்காரன்கிறதாலயா...?" என்று சத்தம் போட...

தனலெஷ்மி கணவனுக்குப் பரிந்து கொண்டு வந்தார். "அப்பா... அவர் சொல்றதுல என்ன தப்பு இருக்கு...? அவர் சொன்னபடி செய்யுங்களேன்..." என்ற மகளை இயலாமையுடன் பார்த்த பெரியசாமி, பின் தன்னைக் கடினப்படுத்திக் கொண்டு,

"இதுல நீ தலையிடாதே தனம்..." என்றவர், அதற்குப் பின் எந்த வார்த்தையும் பேசவில்லை.

மகாதேவன் தான் சொன்னது போல் தனத்தைப் பிரிந்து சென்னை சென்றார். அங்கு கட்சித் தலைமை யிடத்தில் உழைத்தால் முன்னுக்கு வரலாம் என்று யாரோ கூறியதைக் கேட்டுக் கட்சித் தலைமை அலுவலகத்தில் வந்து சேர்ந்தார். மகாதேவனுக்குள் அப்படி ஒரு வெறி. அது. பெரியசாமியின் கட்சியில் தான் சேர்ந்து பெரியா ளாகிக் காட்டி, அந்த ஜெகதீசனைத் தோற்கடிக்க வேண்டும் என்று விரும்பினார்.

அங்குதான் செல்வம் என்பவனின் பழக்கம் ஏற்பட்டது. அவனின் வீட்டிற்கு அடிக்கடி சென்று வந்ததில், அவனது தங்கை அழகு தேவதையான அபிநயாவுடன் பழக்கம் ஏற்பட்டது. பழக்கம் நாளடைவில் காதலாகித் திருமணத்தில் கொண்டு வந்து விட்டது. ஊரில் மனைவி காத்துக் கொண்டிருப்பதை மறைத்து, அபிநயாவைத் திருமணம் செய்த மகாதேவன், ஏனோ அபியிடத்தில் காதலால் கசிந்துருகத்தான் செய்தார். அந்தளவுக்கு அபியை அவருக்குப் பிடித்திருந்தது.

தன் காரியம் கைகூடப் பகடையாக எண்ணிக் கடமையே என்று காதலித்த தனத்தை விட அபிநயாவை, அபிநயாவுக்காகக் காதலித்தார் மகாதேவன். அதனால் அவருக்கு அபிதான் உயிர் மனைவியானாள். எப்போ தாவது தனத்தின் ஞாபகம் வந்தாலும் அபியின் நெருக்கம் அதை எல்லாம் மறக்கச் செய்யும். இந்த நிலையில் அபி கருவுற்றாள். அதை நினைத்து ஒருபுறம் மகிழ்ச்சி

என்றாலும், எந்தவித முன்னேற்றமும் இல்லாமல் இருக்கும் தனது வாழ்க்கையை நினைத்து அவருக்குத் திண்டாட்டமாக இருந்தது.

எப்படித்தான் குடும்பப் பாரத்தை இழுத்துச் சுமக்கப் போகிறோம் என்று மலைப்பாக எண்ணிக் கொண்டிருந்தவருக்கு அந்த விபரீத யோசனை தோன்ற, உடனடியாக அதைச் செயலாற்ற விரும்பினார். அபியிடம் ஊருக்குச் செல்வதாகக் கூறி விட்டு, முதல் மனைவி தனத்தைத் தேடி வந்தார்.

ஏறக்குறைய இரண்டு வருடங்கள் கழித்து வந்த மருமகனை, ஒன்றும் பேசாமல் வரவேற்ற பெரியசாமியை ஆச்சரியத்துடன் பார்த்த மகாதேவன், மனைவியைத் தேடிச் சென்றார்.

வெகு நாட்கள் கழித்துக் கணவனைக் கண்டதும் மகிழ்ச்சி பொங்க வரவேற்ற தனம், "அபி எப்படி இருக்காங்க...? எப்போ டெலிவரி டைம் கொடுத்து இருக்காங்க...?" என்று கேட்டு, மகாதேவனை அதிரச் செய்தாள்.

"உனக்கு... எப்படி... தெரியும்...?" கொஞ்சம் குற்றவுணர்வு தாக்கியதோ என்னமோ... அவருக்கும் வார்த்தை திக்கித் திணறியது.

"அப்பா சொன்னார். அவரோட கட்சியில் இன்னமும் நீங்க இருக்கும்போது, அவருக்குத் தெரியாம ஒண்ணும் நடக்க முடியாது. அபியோட விசயம் தெரிஞ்சதும் அப்பா உங்களை டிவோர்ஸ் பண்ணத்தான் சொன்னார். நான்

தான் முடியாதுன்னு சொல்லிட்டேன். பெண்ணான எனக்கே இரவுப் பொழுதைக் கழிக்க முடியாமல் தனிமை வாட்டும்போது ஆணான அவரால் எப்படிப்பா கட்டுக்கோப்பா இருக்க முடியும். நீங்க வழி தவறி போகாம இன்னொரு கல்யாணம் பண்ணிக்கிட்டது ஒண்ணும் தப்பில்லைன்னு அப்பா கிட்ட எடுத்துச் சொன்னேன்..." தனத்தின் பேச்சில் மகாதேவனின் குற்றவுணர்வு காணா மல் போய், தான் ஆண் என்கிற கர்வம் வந்து ஒட்டிக் கொண்டது

ஆம்... மகாதேவன் மகளுக்குச் செய்த துரோகம் கேள்விப்பட்டு, அவரை ஆள் அடையாளம் தெரியாமல் அழித்து விடத் துடித்தார் பெரியசாமி. கட்சியிலும் மகாதேவனைச் செல்லாக் காசாக்கத் திட்டமிட்டார். அந்தளவுக்கு எல்லா இடத்திலும் பெரியசாமிக்குச் செல்வாக்கு இருந்தது.

அவர் என்ன துடித்துத் திட்டமிட்டு என்ன பயன்...? அவரது பெண்ணும் கணவனை எதிர்த்துப் போராட வேண்டும் அல்லவா? மகாதேவனை ஏதும் செய்தால், உயிரை மாய்த்துக் கொள்வேன் என்று பயமுறுத்தும் மகளின் முன் அவரால் மகாதேவனை எதிர்த்துச் சிறு துரும்பைக் கூட அசைக்க முடியாமல் போனதுதான் கொடுமையிலும் கொடுமை.

"அப்பா அன்னைக்கே உங்களை அரசியல் வாரிசா சொல்லியிருந்தா இவ்வளவு பிரச்சினை வந்திருக்காது. ஜெகதீஷ் கூட அதைத்தான் சொன்னார். இப்ப கூட அப்பாகிட்ட உங்களுக்காக சத்தம் போடத்தான் செய்

றேன்... கூடிய சீக்கிரம் அப்பா மனசு மாறி உங்களை அரசியலுக்குக் கூப்பிட்டாலும் கூப்பிடுவார்..." என்ற மனைவியைக் கண்டு அவருக்கு மனதில் பல ஆசைகள் எழுந்தது... அது நிச்சயம் காதலால் அல்ல, பதவி ஆசை தான் அது.

அவர் தனத்தைத் தேடி வந்த காரணமே, அவரிடம் சமாதானமாய்ப் போவது போல் பணம் நகைகளை வாங்கிக் கொண்டு போய் அபிநயாவை நன்றாக வைத்தி ருக்க வேண்டும் என்று நினைத்திருக்க... இங்கோ பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல் கதை மாறிப் போய் இருந்தது.

அன்றிரவு மோகத்துடன் தனத்தை நெருங்கிய மகாதேவனைத் தனம் வெறுக்கவில்லை. மாறாக அன்போடு அவரை அரவணைத்து கொண்டார். அபிநயா உடல் பலவீனமாக இருந்ததால், வெகு நாட்களாக அடக்கி வைத்திருந்த மகாதேவனின் உணர்வுகள் கரை புரண்டு ஓட, தனம் மென்மையாய் அவரைத் தன்னுள் உள் வாங்கிக் கொண்டாள். அந்தச் சங்கமத்தின் விளைவாய்ப் பிறந்தவள்தான் உமாவின் அக்கா மாயாதேவி.

அபிநயாவுக்கு ஹரிஹரன் பிறந்த ஐந்தாம் மாதம், மாயாதேவி தனத்திற்குப் பிறந்தாள். தனத்திற்கு அபிநயாவைப் பற்றித் தெரிந்த அளவு... அபிநயாவிற்குத் தனத்தைப் பற்றி எதுவும் தெரியவில்லை. மகாதேவனும் அபியின் குணம் தெரிந்ததால், எதையும் சொல்லவில்லை. அதிலும் ஆண் வாரிசைப் பெற்றுக் கொடுத்த அபிநயா மேல் கொள்ளைப் பிரியமாய் இருந்தார்.

பெண் மகவைப் பெற்றெடுத்த தனத்தின் மீது ஒரு படி அல்ல, பல படி பாசம் குறைவாகத்தான் வைத்தி ருந்தார். அதை அறியாத பேதையாகத் தனம் இருந்தது தான் ஆச்சரியம்.. மகளைப் பற்றித் தெரிந்தாலும் பெரியசாமியால் ஒரு அளவிற்கு மேல் கணவன் மனைவி விவகாரத்தில் தலையிட முடியவில்லை. அப்படித் தலையிட, அவர் மகள் அவரது பக்கம் நிற்க வேண்டும். அவளானால் தனது கணவன் பக்கம், அநியாயத்தின் பக்கம் அல்லவா நிற்கிறாள்.

அபிநயாவுடன் மீண்டும் தாம்பத்தியத்தில் ஈடுபட்ட மகாதேவனுக்கு, அதன் பின் தனம் பணத் தேவைகளுக்கு மட்டுமே தேவைப்பட்டார். தனது தேவைக்கு வந்து பணம் வாங்கி கொண்டு சென்ற மகாதேவனைப் பெரியசாமி தட்டிக் கேட்டதால், மகாதேவன் தனத்தைத் தூண்டி விட்டுத் தனிக் குடித்தனம் சென்றார்.

தனிக் குடித்தனம் சென்ற மகளைக் கண்டு கொள்ளாமல் விட பெரியசாமியால் முடிந்தது. ஆனால், செல்லப் பேத்தியை அப்படி விட முடியவில்லை. கண்ணுக்குள் பொத்தி வளர்க்க வேண்டிய பேத்தியைப் பிரிந்து இருப்பது துன்பம் என்றால், அவள் கஷ்டப் படுவதை அவரால் சகித்துக் கொள்ள முடியவில்லை. அதனால் சகல வசதிகளுடன் மாயா வளருவதற்காகத் தன்னிடம் இருந்த சில தொழில்களை மகாதேவன் பேரில் எழுதி வைத்தார்.

மகாதேவனுக்குப் பெரியசாமியின் சொத்துக்கள் மேல் பெரியதாய் ஆசையிருந்தது இல்லை. அவர்

அரசியலில் புகழ் பெற்றால் இது போல ஆயிரம் மடங்கு சொத்துக்களை அவரால் சம்பாதிக்க முடியும். அதனால் இதெல்லாம் அவருக்குச் சுண்டக்காய் சொத்தாகத்தான் தெரிந்தது. என்ன ஒன்று, தொழில்களைக் கையில் எடுத்த மகாதேவன் கையில் இப்போது பணப் புழக்கம் அதிகமானது.

இந்த நிலையில் யார் மூலமாகவோ மகாதேவனின் இன்னொரு வாழ்க்கை அபிநயாவிற்குத் தெரிய வர, அவர் கோபித்துக் கொண்டு பிறந்த வீடு வந்து விட்டார். பின்னாலேயே அவரைத் தேடி வந்து மகாதேவன், அவரிடம் மண்டியிட்டுக் கெஞ்ச, அதில் கொஞ்சம் கர்வம் கொண்டது அபிநயாவின் காதல் மனம். இருந்தாலும் கணவனின் தவறை அவரால் மன்னிக்க முடியவில்லை.

மகாதேவன், அபிநயாவின் அண்ணன் செல்வத்திடம் மனம் விட்டுப் புலம்ப, அவர் தன் தங்கைக்கு அறிவுரை கூறினார்.

"நீ இப்படி முரண்டு பிடிச்சேன்னா உன் புருசன் அந்தப் பொம்பளையைத் தேடிப் போய் குடும்பம் நடத்தப் போயிருவான். உன் வாழ்க்கையை நீதான் காப்பாத்திக் கணும்..." என்றதும்தான் அபிநயாவிற்குச் சொரீர் என்று உறைத்தது. அது, மகாதேவன் இல்லாத ஒரு வாழ்க்கையை அவரால் நினைத்துக் கூடப் பார்க்க முடியாது.

அதன் பின் ஒரு முடிவு எடுத்தவராய் மகாதேவனுடன் சென்றவர், கணவனை மறந்தும் தனது முதல் மனைவியைச் சந்திக்க விடவில்லை. அந்தளவுக்குக்

காதலால் கட்டிப் போடும் வித்தை அவருக்குத் தெரிந் திருந்தது. எல்லாம் சுமூகமாய்ச் சென்று கொண்டிருந்த போது, ஹரிக்குப் பத்து வயதாக இருக்கும் போது மகாதேவனின் நண்பர் ஒருவர் விருந்துக்கு அவரைக் குடும்பத்துடன் அழைக்க, மனைவி மகன் சகிதம் மகாதேவன் அங்கே சென்றார்.

அங்கு வேண்டும் என்றே ஒருவர் ஹரியிடம் தனத்தைப் பற்றிக் கூறி, அபிநயாவைப் பற்றிக் கேலியாய்ப் பேச, பத்து வயதுச் சிறுவனான ஹரி அவரது சட்டையைப் பிடித்து அடிக்கப் போய் விட்டான். அவனது காரியம் கண்டு பதறிய மகாதேவனும் அபிநயாவும் அவனை இழுத்துக் கொண்டு வருவதற்குள் போதும் போதும் என்றாகி விட்டது. வீடு வந்ததும் ஹரி, தன் தந்தையைப் பார்த்துக் கேட்ட முதல் கேள்வி இது தான்... "டாட், உங்களுக்கு வேற வொய்ஃப் இருக்கா...? என்னோட மாம் உங்களுக்குக் கீப்பா...?"

பத்து வயதுப் பையனிடத்தில் இருந்து இப்படி ஒரு கேள்வியை இருவரும் சற்றும் எதிர்பார்க்க வில்லை. அதிலும் அவன் கேட்ட கீப் என்ற வார்த்தையில் அபிநயா முகம் வெளுத்துப் போனார் என்றால்... மகாதேவனோ தலை குனிந்து நின்றார். பெற்ற மகன் முன் தலை குனிந்து நிற்கும் தன் நிலையை அவர் அறவே வெறுத்தார். ஏனெனில் அவர் அந்தளவுக்கு மகன் மீது பாசம் வைத்திருந்தார். அவரது வாரிசு என்ற நினைவில் அவனிடத்தில் மிகுந்த அன்பு உண்டு. அதுவும் காதல் மனைவி அளித்த காதல் பரிசு அல்லவா அவன்...!

அவரது மௌனத்தை வெறுப்பாய்ப் பார்த்த ஹரி, அன்னையிடம், "மாம்... இந்த டாட் நமக்கு வேணாம்... நாம இவரை விட்டுப் போயிரலாம்... அந்த அங்கிள் சொன்ன மாதிரி, அடுத்தவங்க லைஃப்பை நாம எதுக்குக் கெடுக்கணும்...? நாம இந்த வீட்டை விட்டுப் போகலாம்... நான் வளர்ந்து சம்பாதிச்சு உங்களைக் காப்பாத்தறேன்... உங்களை ஏமாத்திய இவர் உங்களுக்கு வேணாம்..." ஹரியிடத்தில் எப்பவுமே ஒரு முதிர்ச்சி இருக்கும். அது அவனது படிப்பில் மட்டுமில்லாது... குணத்திலும் வெளிப் பட்டது.

"ஹரி..." என்றபடி மகாதேவன் மகனைச் சமாதானப் படுத்த வர... அவனோ கோபத்துடன்,

"டோன்ட் டச் மீ டாட்... ஐ ஹேட் யூ டாட்... ஐ ஹேட் யூ..." என்று கத்தியபடி தன் அறைக் கதவைச் சாத்திக் கொள்ள, மகாதேவன் முதன் முறையாக உடைந்து போனார்.

"என்ன அபி... இவன் இப்படிப் பேசறான்...? என்னை வெறுத்துருவானோ...?" சிறு குழந்தை போல் கேட்ட கணவரைக் கண்டு அபிநயாவுக்கும் கண்கள் கலங்கின.

சிறிது நேரம் யோசித்தவள், ஒரு முடிவுடன் கணவ னிடம் திரும்பி, "நீங்க போய்ப் படுங்க... காலையில் ஹரி உங்க மகனா வருவான்..." என்றாள்.

"எப்படி அபி...?"

"வருவான்... நீங்க போங்க..." என்ற மனைவியிடம் ஒன்றும் பேசாமல் செல்ல, அவரது தளர்ந்த நடையைக்

கண்ட அபி, ஒரு விதத் தீர்மானத்துடன் மகனின் அறைக்குள் நுழைந்தார்,

"மாம்..." தாயைக் கண்டதும் ஓடி வந்து அணைத்துக் கொண்டது அந்த இளம் கன்று.

"ஹரி, அப்பாவை இப்படி எதிர்த்துப் பேசலாமா...? பாவம் அவர்..." கணவனுக்குப் பரிந்து மகனைக் கடிந்து கொள்ள...

"அவர் பாவம் இல்லை மாம். அவர் கெட்டவர். நமக்கு அவர் வேணாம். நான் உங்களுக்கு இருக்கேன்..." பெரிய மனிதன் போல் பேசிய மகனைக் கண்டு பெருமிதமாய் இருந்தது அவருக்கு.

"யாரோ சொன்னதை நம்பற நீ... உன்னோட மாம் சொல்றதை நம்புவியா, மாட்டியா...?"

"நிச்சயமாய் நம்புவேன்மா..." அவன் உறுதியளிக்க,

அபிநயா தனது வாழ்க்கையைக் காப்பாற்றிக் கொள்ள, மகனிடத்தில் கணவனது கௌரவத்தை காப் பாற்றிக் கொள்ளப் பொய்யாய் ஒரு கதையைப் புனைந் தார். அதில் தனத்தை வில்லியாக்கினார். சூழ்நிலைக் கைதியாய் நின்றது போல் தனது கணவனைக் கதாநாயக னாக்கினார்.

மகாதேவனும் அபிநயாவும் காதல் மணம் புரிந்தவர்கள் என்றும், சந்தோஷமாகச் சென்று கொண் டிருந்த அவர்களது வாழ்க்கையில், தனம் எப்படி வில்லியாக வந்தார் என்பதையும் அவனுக்குச் சொல்ல

ஆரம்பித்தார். மகாதேவனை மயக்கி அவருடன் திருமண மாகாமல் வாழ்ந்தவர் தனம் என்பதை அவனது ஆழ் மனதில் விதைத்தார்.

ஆனால், இப்போது தனத்தை மகாதேவன் திரும்பியும் பார்ப்பது இல்லை என்று உரைக்க... பத்து வயதுச் சிறுவனுக்குப் பாதி புரிந்தும் புரியாத நிலை. தனம் தனது அம்மா வாழ்வில் குறுக்கிட்ட வில்லி என்பது மட்டும் அவனுக்கு நன்கு புரிந்தது. ஆனால், ஒரு கேள்விக்கு மட்டும் அவனுக்கு விடை தெரியவில்லை. அது ஏன் மகாதேவன் தனத்திடம் மயங்கினார் என்பதுதான். தனம் மயக்கியது வரை சரி... ஆனால், மகாதேவன் மயங்கியது எந்த விதத்தில் நியாயம் என்ற கேள்வி அவன் மனதில், வளர்ந்த பின்பும் பல முறை எழுந்துள்ளது. தாயின் அன்புக்குக் கட்டுப்பட்டு அது பற்றி எதையும் அவன் அதற்குப் பின் கேட்டது இல்லை.

ஒரு நாள் பெரியசாமியிடம் வந்த ஜெகதீசன், தான் சென்னை செல்வதாகவும் அவரது அரசியல் வாரிசாக மகாதேவனை நியமிக்கும்படி கேட்டுக் கொள்ள, பெரியசாமி பதறி விட்டார்.

"ஏன் ஜெகதீஷ் இப்படி ஒரு முடிவு...? அவன் அரசியலுக்கு லாயக்கு இல்லாதவன், அவனைப் போய்... என்னோட அரசியல் வாரிசா...? இல்லைப்பா... என்னால முடியாது..."

"லெஷ்மி வாழ்க்கைக்காக நீங்க இதைச் செஞ்சுதான் ஆகணும் ஐயா... நான் அடுத்து வர்ற

நாடாளுமன்றத் தேர்தல்ல போட்டியிட்டு டெல்லிக்குப் போகப் போறேன்... அங்கே இருந்து என்னோட தொகுதிக்கு வேண்டியதை நான் செய்வேன்..." உணர்வற்ற குரலில் கூறினாலும், ஜெகதீசனின் குரலில் இருந்த வலியைப் பெரியசாமியால் உணர முடிந்தது.

"உனக்கு அதுதான் சந்தோஷம்னா நான் அதையே செய்றேன்..." என்ற பெரியசாமி, மகாதேவனை அழைத்துத் தனது வாரிசு என்று அறிவித்தார். கடந்த பத்து வருடங்களாகக் கட்சியில் மகாதேவன் இருப்பதால், யாரும் அதைப் பெரிதாக ஆட்சேபிக்கவில்லை.

அன்று வெகுநாட்களுக்கு பின் விழுப்புரத்தில் தனத்துடன் தங்கிய மகாதேவன், தனது உடல் இச்சைக்குத் தனத்தை நாட, அவரோ தன்னைக் காதலாய்க் கணவனிடத்தில் சமர்ப்பிக்க... மகாதேவனின் வாழ்க்கையைக் கேள்விக் குறியாக்குவதற்காகக் கடவுளால் அனுப்பப்பட்ட தேவதை உமா தோன்ற காரணமானது அந்தக் கூடல். மாயா பிறந்து சரியாகப் பத்து வருடங்கள் கழித்து உமாமகேஸ்வரி பிறந்தாள். அந்தக் கம்சனைத் துவம்சம் செய்த கிருஷ்ணரைப் போல் அவள் அவதரித்தாள். இது மட்டும் முன்பே தெரிந்திருந்தால், மகாதேவன் தனத்தை நிமிர்ந்து கூடப் பார்த்திருக்க மாட்டாரோ என்னவோ...!

அதன் பின் அரசியலில் மகாதேவன் பிரபலமானார். யாரால் இந்த நிலைமைக்கு வந்தாரோ அந்த மனைவியை ஊரார் முன் அறிமுகப்படுத்தாமல், அபிநயாவையும் ஹரியையும் தனது குடும்பமாக அறிமுகப்படுத்தினார். அவருக்கு இரு குடும்பங்கள் இருப்பது ஊரறிந்த

ரகசியம் என்பதால், பத்திரிகையாளர்கள் கூட இந்த விஷயத்தைப் பெரிது படுத்தவில்லை. அதே போல் தனமும் இதைப் பெரிதாய் எடுத்து கொள்ளவில்லை.

எப்போதோ ஒரு முறை வந்து அன்பைப் பொழியும் கணவனின் அன்பை மட்டும் கருத்தில் கொண்டு, மகிழ் வோடு இந்த வாழ்க்கையைப் பெரிய மனதுடன் ஏற்றுக் கொண்டார் அவர்.

ஜெகதீசன் அப்போது நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று, மத்திய அமைச்சராய் ஆகி டெல்லி சென்றவர், அதன் பின் விழுப்புரம் வரவே இல்லை. தனது சொந்த ஊரான கடலூருக்கு வருவார். தொகுதிப் பணி செய்வார். அப்படியே விழுப்புரம் வந்தா லும் பெரியசாமியைக் கட்சி அலுவலகத்தில் பார்த்து விட்டு, அப்படியே சென்று விடுவார்.

வருடங்கள் அதன் போக்கில் செல்ல... மாயாவுக்கு இருபது வயது. உமாவுக்குப் பத்து வயதானது. உமாவுக்கு மாயா மற்றொரு அன்னை. அதனால் உமா, மாயாவிடத் தில் மிகவும் ஒட்டுதலுடன் இருப்பாள். ஒரு நாள் மாயா உமாவிடம் வந்து, "இன்னைக்கு ஒருத்தரைப் பார்க்க உன்னைக் கூட்டிட்டுப் போவேன்... அவரை உனக்குப் பிடிச்சிருக்கான்னு சொல்லு...?"

"எனக்கு எதுக்கு அவரைப் பிடிக்கணும்...?" எதிர்க் கேள்வி கேட்டாள் தங்கை.

அவளின் கேள்வி கண்டு சிரிப்பு வந்தது மாயா வுக்கு. தங்கையின் குண்டுக் கன்னத்தில் முத்தமிட்டவள்,

"அவர் என்னைக் காதலிக்கிறாராம்... என்னைக் கல்யாணம் பண்ணக் கேட்டார்... நான், என் தங்கச்சிக்குப் பிடிச்சிருந்தா எனக்கும் சம்மதம்னு சொல்லிட்டேன்..." அக்கா சொன்னதும், தன்னைப் பெரிய மனுஷியாய் உணர்ந்த அந்தச் சிறுமி,

"போகலாம்கா..." என்று உற்சாகத்துடன் கிளம்பினாள்.

பூங்காவில் மாயாவுக்காகக் காத்திருந்த ஆதித்யா, இவர்களைக் கண்டதும் வேகமாய் அவர்களை நோக்கி வந்தான்.

"இதுதான் உன் தங்கச்சியா...?" தன்னைக் கண்ணால் விழுங்கியபடி கேட்டவனைக் கண்டு தலையை ஆம் என்பது போல் ஆட்டிய மாயாவின் முகம் சிவந்தது.

உமாவின் முன் மண்டியிட்டு அமர்ந்தவன், "உங்கக்காவை நான் கல்யாணம் பண்ணிக்க உனக்கு சம்மதமா...? உனக்கு என்னைப் பிடிச்சிருக்கா...?" இரு கைகளையும் கூப்பிக் கேட்டவனை, ஏற இறங்கப் பார்த்தாள் சிறுமி உமா.

"உன் கிட்டப் பேச வேண்டிய டயலாக் எல்லாம் உன் தங்கச்சி... அதுவும் பத்து வயசுப் பொண்ணுகிட்டே போய்ப் பேச வேண்டியிருக்கே..." மாயாவிடம் அவன் அலுத்துக் கொள்ள... மாயாவோ வாயை மூடிக் கொண்டு சிரித்தாள். அவளின் சிரிப்பை ஆர்வத்துடன் பார்த்த ஆதியின் பார்வை மாற, அவளோ தன் தங்கையைச் சுட்டிக் காட்ட, அவன் உமாவின் பக்கம் திரும்பினான்.

இன்னமும் நாடியில் விரல் வைத்து யோசித்துக் கொண்டிருந்த உமாவிடம் தனது சட்டைப் பையில் இருந்து சாக்லெட்டுகளை எடுத்து நீட்ட, முகமலர்ச்சியுடன் அதை வாங்கிக் கொண்ட உமா, அக்காவிடம்,

"அக்கா... எனக்கு இந்த மாமாவை ரொம்பப் பிடிச்சிருக்கு..." என்று சொல்லியவள், அங்கிருந்த கல் மேடையில் அமர்ந்து, சாக்லெட்டுக்களைப் பிரித்துச் சாப்பிட, அவளது செயலில் பாரம் இறங்கிய உணர்வில் இருவரும் வாய் விட்டுச் சிரித்தனர்.

"தங்கை ஓ.கே. பண்ணிட்டா... அக்கா எப்போ ஓ.கே. பண்ணப் போறாங்க..." காதலுடன் மாயாவைப் பார்த்து அவன் கேட்க, வெட்கத்தில் தலை குனிந்த மாயா,

"தனியா வேற சம்மதம் சொல்லணுமா...?" அவள் சொன்னதைக் கேட்டு ஆதி,

"ஹுர்ரே..." என்று கத்தித் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினான்.

பிறகு காதல் ஜோடி இருவரும் தங்கள் உலகத்தில் மூழ்கிப் போக... உமாவோ சாக்லெட் சுவையில் மூழ்கிப் போனாள்.

அதுதான் அவள் கடைசியாய்ச் சாக்லெட் சாப்பிட்டது... அதன் பின் சாக்லெட் என்றாலே அவளுக்கு வேம்பாய்க் கசந்தது. மற்றவர்களுக்கு அவள் சாக்லெட் வாங்கிக் கொடுத்தாலும், அவள் உண்பது இல்லை. அதற்கு ஒரே ஒரு காரணம், ஆதித்யா என்றால் மிகையில்லை. இனிப்புக்கு ஆசைப்பட்டுத் தனது அக்காவின்

வாழ்க்கையைத் துயரத்துக்குள் தான் தள்ளியதை நினைத்து நினைத்து அவள் வருந்தாத நாளில்லை.

"மாயூ... இன்னைக்கு நாம மீட் பண்ணலாமா...?" ஆதித்யா ஏக்கக் குரலில் கேட்க, மாயாவால் என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை.

பெற்றோருக்குத் தெரியாமல் அடிக்கடி வெளியில் சந்திப்பது குறித்து அவளுக்குச் சற்றுப் பயமாகத்தான் இருந்தது,

"ப்ளீஸ்டா... நான் இன்னைக்கு சென்னைக்குப் போனா நெக்ஸ்ட் வீக்தான் இங்கே வருவேன். உன்னைப் பார்க்காம ஒரு வாரம் இருக்கணுமே..." அவனது ஏக்கத்தில் அவளின் காதல் மனம் கரையச் சரி என்று சம்மதித்தாள்,

ஆதித்யா நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவன். அவனின் அன்னை ஆசிரியர். தந்தை அரசாங்க உத்தியோகத்தில் இருந்தார். இரு தங்கைகள்...வறுமை இல்லை என்றாலும், அவர்களது வருமானம் அவர்களது அப்போதைய தேவைக்கு மட்டுமே சரியாக இருந்தது, ஆதி வருமானத்தில்தான் இரு தங்கைகளையும் கரை சேர்க்க வேண்டும் என்று அவனின் பெற்றோர் திட்டமிட்டு இருந்தனர்.

அவர்களின் எதிர்பார்ப்பைப் பொய்யாக்காமல், இந்த ஐந்து வருடங்களில் அவன் சம்பாதித்து இரு தங்கைகளுக்கும் திருமணம் செய்து கொடுத்து விட்டான்.

தனது கடமை முடிந்த பின்பே மாயாவிடத்தில் தன் காதலைக் கூறினான். ஆம்... மாயா பள்ளி படிக்கும்போது அவள் அழகில் மயங்கி, ஐந்து வருடங்களாக அவளை மனதுக்குள் காதலித்து வந்தவன், இப்போதுதான் தைரியம் வரப் பெற்றவனாய்த் தன் காதலை அவளிடம் கூறி இருக்கிறான். அவனது காத்திருந்த காதலுக்கு மரியாதை செய்யும் பொருட்டு, அவளும் அதை ஏற்றுக் கொள்ள, அவனது மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

ஊருக்கு ஒதுக்குப் புறமாய் இருந்த தோப்பில் சந்தித்த காதல் ஜோடிகள், சுற்றுப்புறம் மறந்து பேசிக் கொண்டிருந்தனர். ஆனாலும் அவர்கள் எல்லை மீறவில்லை. அந்த விதத்தில் ஆதியை மெச்சத்தான் வேண்டும். திருமணத்திற்கு முன் எல்லை மீறி நடப்பதை அவன் விரும்பவில்லை. திருமணத்திற்கு முன் எல்லை மீறி விட்டால் திருமணத்திற்குப் பின் உள்ள வாழ்க்கையில் என்ன சுவாரசியம் இருக்கிறது என்பது அவனது வாதம், எண்ணம்.

எத்தனை நாள் காதலை வீட்டிற்குத் தெரியாமல் மறைக்க முடியும்...? மகாதேவனின் அல்லக்கை ஒருவன் மூலமாக அவர்களது காதல் அவருக்குத் தெரிய வந்தது. விஷயம் கேள்விப்பட்ட மகாதேவனுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. பையனைப் பற்றி விசாரிக்கச் சொன்னதில் வந்த தகவல் அவருக்கு அவ்வளவு திருப்திகரமாக இல்லை. அவனின் குடும்பப் பின்னணி அவருக்குப் பிடிக்கவில்லை. அமைச்சரின் மகள் போயும் போயும் அரசாங்க உத்தியோகத்தில் இருக்கும்

அன்றாடங்காய்ச்சி ஒருவரின் மகனைக் காதலிப்பதா என்றுதான் அவருக்கு முதலில் கோபம் வந்தது,

"அண்ணே... தேர்தல் சமயத்துல உங்க பொண்ணு விஷயம் வெளியில் தெரிஞ்சா, நம்ம சாதிக்கார பயலுங்க ஒருத்தன் கூட நமக்கு ஓட்டுப் போட மாட்டான்..." அந்த விசுவாச அல்லக்கை அவருக்குத் தூபம் போட்டதும், அவனை ஒரு மாதிரியாய்ப் பார்த்தார்.

"டேய், என்னோட மனைவி அபியும் வேறு சாதி தான்டா... நானே வேற சாதியில் கல்யாணம் பண்ணி இருக்கும்போது, இதைச் சொல்லி நான் தடுக்க முடியாது. அந்தப் பயலுக்கு வசதி பத்தாது... அதுதான் எனக்கு எரிச்சலா இருக்கு. அவனுக்குக் கல்யாணம் பண்ணி வச்சா என்னை எல்லாரும் மூஞ்சியில காறித் துப்புவான்..."

"அண்ணே, நீங்க ஆம்பிளண்ணே... எத்தனை சாதியில் இருந்தும் எத்தனை பொம்பளையை வேணும் னாலும் நீங்க கட்டலாம்... எத்தனை பொண்டாட்டி வச்சிருக்கீங்களோ அத்தனைப் பெருமையும் உங்க ளுக்குத்தான். உங்க மூத்த சம்சாரம் நம்ம சாதிதானே...! அது தான் உங்களுக்குப் ப்ளஸ் பாயிண்ட்டே... அந்தம்மா வால தான் நம்ம சாதி சனம் உங்களுக்கு ஓட்டுப் போடுது..." அவன் சொல்லவும்தான் மகாதேவனுக்குத் தனத்தினால் இப்படி ஒரு நன்மை இருப்பது அன்றுதான் அவருக்கே தெரிந்தது.

"ஆனா, நம்ம பாப்பா பொட்டப்புள்ளைங்க. அது காதல் கீதல்னு போனா வீணா உங்க அரசியல் வாழ்க்கை

பாதிக்கும்... கொஞ்சம் பாப்பாவுக்கு எடுத்துச் சொல்லிக் கண்டிச்சு வைங்க..."

முதலில் ஆதியின் வசதியின்மையைத் தகுதிக் குறைவாக நினைத்த மகாதேவன், அல்லக்கையின் தூபத்தில் ஆதியின் சாதி அவருக்குக் கௌரவக் குறையாக மாறியது. அதனால் தனது அரசியல் வாழ்க்கை ஆட்டம் கண்டு விடுமோ என்ற பயத்தில், மாயாவைத் தேடிக் கடும் கோபத்துடன் கிளம்பினார் மகாதேவன்,

நேரே வீட்டிற்கு வந்தவர், உமாவிற்குப் பாடம் சொல்லிக் கொடுத்து கொண்டிருந்த மாயாவின் தலை முடியைக் கொத்தாகப் பற்றி, அப்படியே சுவரில் வைத்து மோதினார். தந்தையின் இந்த எதிர்பாராத செயலில் நிலைகுலைந்து போன மாயா, கூக்குரலிட்டவாறு சுவரில் மோதிக் கீழே விழுந்தாள்.

உமாவும் தந்தையின் இந்த வெறிச் செயலைக் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. நெற்றியில் இருந்து இரத்தம் வழிய அமர்ந்து அழுது கொண்டிருந்த அக்காவைக் கண்டதும், அவளது ஆத்திரம் தந்தை யிடத்தில் திரும்பியது. எப்போதும் ஆங்காரத்தைக் காட்டும் தந்தையை விட அன்பு காட்டும் அக்காவை அவளுக்கு மிகவும் பிடிக்கும்.

மாயாவின் அருகில் ஓடிச் சென்று அவளது நெற்றி யில் வழிந்த இரத்தத்தைத் துடைத்தவள், "அக்காவை எதுக்கு அடிச்சீங்க...? இருங்க இருங்க..., இதை நான் தாத்தா கிட்டப் போய்ச் சொல்றேன்..." தந்தையை அவள் மிரட்ட...

"முளைச்சு மூணு இலை விடல... அதுக்குள்ள என்னையே எதிர்த்துப் பேசுறியா கழுத..." சின்ன மகளை அடிக்கக் கையை ஓங்கும் போது, அப்போதுதான் தனம் கோயிலுக்குப் போய் விட்டு வந்து வீட்டினுள் நுழைந்தார்.

மாயாவின் இரத்தம் வழிந்த முகத்தைக் கண்டு அந்தத் தாயுள்ளம் பதற, வேகமாய் மகள் அருகில் வந்தார். "என்னடி இது... இப்படி அடிபட்டு இருக்கு...?" தனது நூல் புடவையைக் கிழித்து மகளின் நெற்றியில் கட்டுப் போட்டார்,

"அப்பாதானம்மா அக்காவை அடிச்சார்..." உமா தந்தையை முறைத்துக் கொண்டே அன்னையிடம் போட்டுக் கொடுத்தாள்.

"என்னங்க...?" கணவர்தான் இதைச் செய்தது என்றதும், அவரது சுருதி அப்படியே இறங்கி விட்டது.

"என்ன நொன்னங்க... உன் பொண்ணு பண்ணிய காரியத்துக்கு அவளை உயிரோட கொளுத்தி இருக்க ணும்... அடிச்சதோட விட்டேன்னு சந்தோஷப்பட்டுக்கோ..." மகாதேவன் கோபத்துடன் உறும...

"அப்படி என்னதான் செய்தாங்க...?" இருந்தாலும் தனத்திற்கு ஆற்றாமை தாங்கவில்லை.

"ம்... வேத்து சாதிக்காரனைக் காதலிச்சு இருக்கா... ரெண்டும் ஜோடி போட்டு ஊரைச் சுத்துதுங்க. எலெக்ஷன் நேரத்துல இது எனக்கு எவ்வளவு பெரிய அசிங்கம்...? உன் மகளைக் கண்டிச்சு வை. இந்தக் காதல் எல்லாம்

நம்ம குடும்பத்துக்குச் சரிப்பட்டு வராது. ஒழுங்கா நான் பார்க்கிற மாப்பிள்ளைக்குக் கழுத்தை நீட்டச் சொல்லு...” ஆவேசமாய்க் கத்திய கணவனை அதிர்வாய்ப் பார்த்தார் தனம்,

காதல் தவறில்லை என்றாலும், வேற்று இனத்த வனைத் தனது மகள் காதலிப்பதைத் தனத்தாலும் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அவரும் மகாதேவனைக் காதலித்தார்தான்... ஆனால், மகாதேவன் மாமன் மகன், உறவினன் என்ற நினைவில் பாதுகாப்பாய் வந்த காதல் அது. தான் மகளை சரியாக வளர்க்கவில்லையோ என்று மனதுக்குள் குமைந்து குமைந்து நொந்து போனார்.

“ஏன்டி மாயா... உன் புத்தி ஏன்டி இப்படிப் போச்சு...? என் பொண்ணு ஒழுக்கமான பொண்ணுன்னு நினைச் சிருந்தேனே... இப்படிப் பண்ணிட்டியேடி...” தலையில் அடித்துக் கொண்டு அழத்தான் முடிந்தது தனத்தால்.

இவ்வளவு நேரம் அவர் எதற்காக அடித்தார் என்று தெரியாமல் விழித்து கொண்டிருந்த மாயாவுக்கு, அதன் காரணம் தெரிந்ததும் அவளிடத்தில் ஒரு வகை நிமிர்வு, தைரியம், உறுதி வந்தது.

“நீங்க என்ன சொன்னாலும் சரி... நான் அவரைத் தான் கல்யாணம் பண்ணிக்குவேன்...” தலை நிமிர்ந்து பேசிய மாயாவைக் கண்டதும் மகாதேவனின் ஆத்திரம் எல்லை மீற, இடுப்பில் கட்டியிருந்த பெல்ட்டை எடுத்து மூத்த மகளை அடிக்க வர, தனம் ஓடி வந்து அவரைத் தடுத்தார்.

"தள்ளிப் போடி..." ஆங்காரத்துடன் மனைவியைத் தள்ளி விட்டவர், அவர் எழுவதற்கு முன் மாயாவை நன்கு அடித்து விளாசி விட்டார்.

சின்னப் பெண் உமா அதிர்ந்து நிற்கும் போதே தனம் வந்து மாயாவைக் காப்பாற்ற வர, அவரின் மீதும் அடி விழுந்தது,

"அம்மா... தப்பு செஞ்சவ நான்... அவர் என்னை அடிக்கட்டும். நீங்க போங்கம்மா..." மாயா அம்மாவை விலகச் சொன்னாள்.

அடுத்து விழுந்த அடிகளை அசையாமல் வாங்கிக் கொண்ட மாயா, "நீங்க என்ன அடிச்சாலும் நான் என் முடிவை மாத்திக்கப் போறதில்லை..." உறுதியுடன் கூறிய வளைக் கண்டு மகாதேவனுக்கு ஆத்திரம் அதிகரிக்கத் தான் செய்தது,

மேலும் அவளை அடிக்க அவர் கையை ஓங்கும் போது, எங்கிருந்து தான் உமாவிற்கு அவ்வளவு தைரியம் வந்ததோ... தந்தையின் அருகில் ஓடி வந்தவள், அவரின் கையை நறுக்கென்று கடித்து விட்டாள்.

அவள் கடித்ததில் வலி தாங்காமல் பெல்ட்டைக் கீழே போட்டு விட்டுக் கையை உதறியவர்,

"பொண்ணாடி பெத்து வச்சிருக்க... குட்டிச் சாத்தானைப் பெத்து வச்சிருக்க..." மனைவியிடம் பாய்ந்தவர், உமாவை அடிக்க வர, அவள் அவர் கையில் அகப்படாமல் வெளியில் ஓடியவள்,

"நான் போய் தாத்தாவைக் கூட்டிட்டு வர்றேன்... அவர் வந்து உங்களை அடிப்பார்..." என்று மிரட்டி விட்டுச் சிட்டாகப் பறந்தாள் தனது தாத்தாவின் வீட்டிற்கு.

பெரியசாமி பேர் கேட்டதும் மகாதேவனின் கோபம் சிறிது மட்டுப்பட்டது.

அடுத்த பத்து நிமிடங்களில் பெரியசாமி, மகளின் வீட்டில் இருந்தார். உமா அவரின் கையைப் பிடித்துக் கொண்டு தந்தையை முறைத்துக் கொண்டிருந்தாள். அவளின் பார்வையைக் கண்டு மகாதேவனின் உள்ளம் வெகுண்டது.

"கத்திரிக்காய்க்குக் கை கால் முளைச்ச மாதிரி இருந்துட்டு முறைக்கிறதைப் பாரு..." மனதுக்குள் முணு முணுத்துக் கொண்டே அவரும் சின்ன மகளை முறைத்தார்.

"என்ன பிரச்சினை தனம்...? பாப்பா அழுதுட்டு வந்து என்னைக் கூப்பிட்டாள்..." பெரியசாமி மருமக னிடம் பேசாமல் மகளிடம் கேட்க, அதைக் கண்டு மகாதேவனுக்குப் பற்றிக் கொண்டு வந்தது.

தனம், மாயா காதலிக்கும் விஷயத்தை எடுத்துக் கூறி, அதற்குக் கணவன் கொண்ட கோபத்தையும் சொல்ல, பெரியசாமி யோசனையில் ஆழ்ந்தார்,

அவரைப் பொருத்தவரையில், காதல் ஒன்றும் கொலைக் குற்றமல்ல... அவரே தனது மகளுக்கு வேற்று இனத்தவனான ஜெகதீசனை மணம் முடிக்க நினைத்தவர்

தானே...! மாயா விரும்பும் பையன் நல்லவனாக இருக்கும் பட்சத்தில் அவளின் காதலுக்கு ஆதரவு அளிக்க அவர் முடிவு செய்தார். மாயாவை நிமிர்ந்து பார்த்தவர், "இங்கே வாம்மா..." என்று தன்மையாகப் பேத்தியை அழைக்க... மாயா கதறலுடன் அவர் அருகில் வந்து அவர் தோள் சாய்ந்தவள்,

"தாத்தா... நான் அவரை உயிருக்கு உயிராகக் காதலிக்கிறேன்... அவர் இல்லைன்னா நான் செத்துப் போயிருவேன்..." கதறிய பேத்தியின் விருப்பத்திற்கு முன்னால் அவர் வேறு எதைப் பற்றியும் யோசிக்க வில்லை.

"தாத்தா இருக்கேன்மா... உன் காதலை நிறைவேத்தி வைக்கிறது என் கடமைம்மா..." பெரியசாமி பேத்திக்கு வாக்குறுதி கொடுக்க, அதில் மாயாவின் முகம் மலர்ந்தது.

அதைக் கண்டு உமாவின் முகமும் மலர, "ஐ லவ் யூ தாத்தா..." என்றப்படி தாத்தாவின் கன்னத்தில் முத்த மிட்டாள் சின்னச் செல்லப் பேத்தி. அதில் அந்தப் பெரியவரின் மனம் நிறைந்தது.

பெரியசாமியின் முடிவு கேட்டு மகாதேவனுக்கு ஆத்திரம் கண்ணை மறைக்க, என்ன பேசுகிறோம் என்று தெரியாமல் வார்த்தைகளை விட்டார்.

"மாயா என் பொண்ணு... அவளை யாருக்குக் கட்டிக் கொடுக்கணும்னு எனக்குத் தெரியும். நீங்க உங்க வேலையைப் பார்த்துட்டுப் போங்க..." என்று சொன்ன வரின் கை வாயிலை நோக்கி நீண்டிருந்தது. கணவரின்

அந்தச் செயலில் தனமே கொஞ்சம் திடுக்கிட்டுத்தான் போனார்.

"என்னங்க, இவர் என்னோட அப்பா..."

"யார் இல்லைன்னு சொன்னது... அது அவர் வீட்டில் மட்டும். இது என் வீடு... நான் உனக்குப் புருசன்... நான் சொல்றதைத்தான் நீ கேட்கணும்... அப்பா பேச்சைக் கேட்கிறதா இருந்தா, நீ உன் அப்பா வீட்டுக்கே நிரந்தரமாப் போயிரு..." எந்த அஸ்திரத்தைக் கொண்டு தாக்கினால் மனைவியைப் பேச விடாமல் செய்ய முடியுமோ, அந்த அஸ்திரத்தைக் கொண்டு சரியாகத் தாக்கினார். அவர் நினைத்தது போல் அது சரியாகத் தன் வேலையைச் செய்தது.

அந்த அஸ்திரம் எல்லாம் பெரியசாமியைக் கட்டுப் படுத்தவில்லை போலும். "இங்கே பாரு சங்கரா... மாயா உன்னுடைய மகளாக இருந்தாலும்... இந்தப் பெரியசாமி யோட பேத்தி அவள்... அவளுக்கு நல்லது செய்ய எனக்கும் உரிமை இருக்கு... அவள் காதலிச்ச பைய னையே அவளுக்குக் கட்டி வைக்கப் போறேன். முடிஞ்சா உன்னால என்ன பண்ண முடியுமோ பண்ணிக்கோ..." அலட்சியமாய்ப் பேசிய மாமனாரைக் கண்டு மகா தேவனின் மனம் வெகுண்டது.

"அவள் காதலிக்கிறது வேத்து சாதிக்காரனை... அவனைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா நம்ம சாதி சனம் ஓட்டு எனக்குக் கிடைக்காது... இந்தக் கல்யாணம் என் அரசியல் வாழ்க்கையைப் பாதிக்கும்..." மகாதேவன் குதிக்க...

"சங்கரா... இப்படிப் பேச உனக்கு அசிங்கமா இல்ல... நாம என்ன சாதியை வச்சா அரசியல் பண்றோம்...? இந்தக் கட்சியோட நோக்கமே மனிதாபி மான நேயத்தில் ஆரம்பிக்கப்பட்டது... இதுக்கு மேல நீ என் பேத்தி விஷயத்துல தலையிட்ட... நான் பொல்லாதவன் ஆகிருவேன்... எந்த அரசியலுக்காக நீ இதை எதிர்க்கிறியோ அந்த அரசியலில் உன்னை இல்லாம பண்ணிருவேன்... நம்ம தலைவருக்கு நான் ஒரு போன் போட்டாப் போதும்... அடுத்த நொடி உன்னோட பதவி காலி... இன்னமும் கட்சியில எனக்குப் பவர் இருக்கு... அதைச் சோதிச்சுப் பார்க்க உனக்கு விருப்பம்னா, அதுக்கு நான் தயார்..."

சவால் விட்ட அந்த முதியவரைக் கண்டு மகா தேவனுக்கு உள்ளுக்குள் வியர்த்தது.

"அப்பா... எதுக்கும் எதுக்கும் முடிச்சுப் போடுறீங்க... ஒரு தகப்பனா மகள் தப்புப் பண்ணும் போது அவர் கண்டிச்சது தப்பா...?" என்ற தனத்தை ஆழ்ந்து பார்த்த பெரியசாமி...

"அப்படி நானும் கண்டிச்சு இருந்தா உன் புருசன்னு சொல்லிக்கிட்டு இவன் என் முன்னாடி நின்னு இருக்கவே மாட்டான்..." மனம் நொந்து சொன்னவர், மகாதேவனைப் பார்த்து, "இனி மாயா விஷயத்தில் தலையிட மாட்டேன்னு நினைக்கிறேன்... அப்படித் தலையிட்டா அதோட விளைவுகளைச் சந்திக்கத் தயாராயிரு..." வெறுப்பாய்ச் சொல்லி விட்டு அங்கிருந்து கிளம்பினார்.

தாத்தா சொல்லில் நிம்மதி அடைந்த மாயா, தனது அறைக்குச் செல்ல, உமா தந்தையின் இருள் அடைந்த முகத்தைப் பார்த்தவள், அவருக்குச் சற்றுத் தள்ளி நின்று கொண்டு,

"உங்களுக்கு லவ் பண்றது பிடிக்காதாப்பா..." என்று அப்பாவியாய்க் கேட்க...

என்ன, இந்தக் குட்டிப் பிசாசு ஒண்ணும் தெரியாத மாதிரி முகத்தை வச்சிக்கிட்டு இப்படி ஒரு கேள்வி கேட்குதே... இது நல்லதுக்கா... இல்லை கெட்டதுக்கா...? இதுக்கு என்ன பதிலைச் சொல்றது...? என்று யோசிக்கும் போதே உமா மேற்கொண்டு பேசினாள்.

"அப்படின்னா நான் கட்டாயம் லவ் மேரேஜ்தான் பண்ணிக்குவேன்..." உறுதியுடன் கூறியவளை, அவர் கொலை வெறியுடன் பார்க்கும்போதே,

"அக்காவை லவ் பண்ணதுக்குத்தானே அடிச்சீங்க... அதனால நானும் லவ் பண்ணத்தான் போறேன்... தைரியம் இருந்தா என்னை அடிங்க பார்க்கலாம்..." உமா தெனாவெட்டாய்க் கேட்க... அதைக் கண்டு மகாதேவன் ஆத்திரத்துடன்,

"உன்னை..." என்று அடிக்கக் கையை ஓங்கிக் கொண்டு வர, அவரது கைக்கு அகப்படாமல் சிறிது நேரம் போக்குக் காட்டிய உமா,

"உங்க வீரம் எல்லாம் அக்கா கிட்ட மட்டும்தான்... என் கிட்ட இல்லை..." கத்திக் கொண்டே தாத்தா வீடு நோக்கி ஓடினாள் உமா.

"திரும்ப இந்த வீட்டுக்குத் தானே வரணும்... வாடி உன்னைக் கவனிச்சிக்கிறேன்..." என்று கத்த மட்டுமே மகாதேவனால் முடிந்தது.

சின்ன மகளின் பேச்சு கேட்டுத் தலையில் கையை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டார் தனம்.

இருவரும், சின்னப் பெண் ஏதோ தெரியாமல் விளையாட்டுத்தனமாய்ப் பேசுகிறாள் என்று நினைத் திருக்க... அவர்களுக்குத் தெரியவில்லை காதலித்துத்தான் திருமணம் செய்ய வேண்டும் என்ற எண்ண விதை, உமாவின் மனதில் ஆழமாய்ப் புதைக்கப்பட்டது அன்றுதான் என்று.

அடுத்து வந்த நாட்கள் எந்தவிதப் பிரச்சினையும் இல்லாமல் கழிந்தது. மகாதேவன் மாமனாருக்குப் பயந்து கொஞ்சம் அடக்கி வாசித்தார். ஆதித்யா குடும்பம் பற்றி வெளியில் விசாரித்த பெரியசாமி, கிடைத்த தகவலில் திருப்தியுற்றவராய், நல்ல நாள் பார்த்து அவர் ஆதித்யா வீட்டிற்கு வந்து சம்பந்தம் பேசப் போக, அவனது வீட்டில் அனைவரும் பெருமையில் பூரித்துப் போய் விட்டனர். கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாத வசதியான சம்பந்தம் வலியத் தேடி வந்ததால், அவர்களால் அதை நம்ப முடியாமல் பிரமிப்பு அடைந்தனர்.

அடுத்து வந்த முகூர்த்த நாளில் நிச்சயம் செய்ய முடிவு செய்யப்பட்டது. தங்கள் காதல், திருமணத்தில் கை கூடிய சந்தோஷத்தில் இருந்தனர் அந்தக் காதல் ஜோடி.

நிச்சயத்திற்கு ஜெகதீசனை வற்புறுத்தி அழைத்தார் பெரியசாமி. தனது மகளை மனதில் நினைத்துத்தான்

ஜெகதீசன் வேறு திருமணம் செய்யாமல் இருக்கிறார் என்பது அவரது மனதை வாள் கொண்டு அறுத்தது. அதனால் மாயாவின் நிச்சயத்தை அவரது மகள் போல் எண்ணி நடத்தி வைக்க அழைத்தார் பெரியசாமி.

என்றுமே பெரியசாமி வார்த்தையை மறுத்துப் பேசாத ஜெகதீசனும் நிச்சயத்திற்கு வரச் சம்மதித்தார். அவர் வருவதை அறிந்த மகாதேவன்,

"ஜெகதீஷ் வந்தா நான் வர மாட்டேன்னு உன் அப்பா கிட்டச் சொல்லு..." என்று மனைவியிடம் கோபப்பட... ஜெகதீசன் மேல் ஏன் இவ்வளவு கோபம் என்று அறியாத தனமும், பெரியசாமியிடம் வந்து புலம்ப... அவரோ,

"உன் புருசன் வந்தாலும் சரி... வரலைன்னாலும் சரி... இந்த நிச்சயம் நான் குறித்த நாளில் நடக்கும்..." உறுதியாய்க் கூறிய தந்தையையும் எதிர்த்துப் பேச தனத்தால் முடியவில்லை.

அப்பாவுக்கும் கணவனுக்கும் இடையில் போராடிப் போராடியே அவரது மனம் சோர்வுற்றது. கடைசியில் வேறு முக்கிய வேலை இருப்பதாகக் கூறி, மகாதேவன் நிச்சயத் திற்கு வராமல் இருந்து விட, கணவன் இல்லாமல் மகளின் நிச்சயத்திற்குக் கனத்த மனதுடன் தயாரானார் தனம்.

மகாதேவன் வராததால், ஜெகதீசனைப் பெண்ணின் தந்தை இடத்தில் இருந்து தட்டை மாற்றிக் கொள்ள பெரியசாமி தனிமையில் வேண்டினார். தன்னால் வாழ்க்கையை இழந்து தவிக்கும் தனது அரசியல் வாரிசுக்கு அவரால் செய்ய முடிந்த நன்மை இது ஒன்றே.

அவரது பேச்சில் ஜெகதீசனுக்குக் கண்கள் கலங்கி விட்டது. மாயா, மகாதேவனின் பெண்ணாய் இருந்தாலும் அவரது நேசத்திற்குரிய தனத்தின் மகளும் அவள் அல்லவா...!

சந்தோஷத்துடன் முன் வந்தவரைக் கண்டு தனத்தின் முகம் சுருங்கி விட்டது. கணவனின் இடத்தில் ஜெகதீசனை அமர வைத்த தந்தையின் செயலை அவரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஆனால், அடுத்து சொன்ன பெரியசாமியின் வார்த்தையில் தனத்தின் மனம் குளிர்ந்து போனது.

"என்னோட மருமகன் வரல... அதனால என் புள்ள மாதிரி என் கிட்ட வளர்ந்த ஜெகதீசைத் தட்ட மாத்துறதுக்குக் கூப்பிடறேன்..." என்று சொல்ல... எல்லோரிடமும் எழுந்த முணுமுணுப்பு அடங்கி விட்டது.

பெரியசாமி ஜெகதீசை மருமகனிடத்தில் வைத்த போதும், தனது அரசியல் வாரிசான அவரை மகன்போல் எண்ணிக் கூப்பிடுவதாகச் சொல்லியது, அவரது அரசியல் சாணக்கியத்தனத்தை அங்கு காட்டியது. கேள்வியாய்ப் பார்த்த ஊராரின் வாயை அடைத்தது போலவும் ஆயிற்று. அதே சமயம் பாசம் இல்லாமல் தனிமையில் தவிக்கும் ஜெகதீசனுக்கு மகளாக மாயாவை முன் நிறுத்தியது போலவும் ஆயிற்று. நல்லபடியாக நிச்சயம் நடந்தேறியது. மணமக்கள் என்று தனிமையான உலகில் இனிமை கண்டு கொண்டிருந்தனர்... பட்டுப் பாவாடை சரசரக்க அங்கும் இங்கும் புள்ளி மானாய்த் திரிந்து கொண்டிருந்த

உமாவைக் கண்டு ஜெகதீசனுக்கு மிகவும் பிடித்துப் போயிற்று.

"இங்கே வாம்மா..." என்று அவர் அவளை அழைக்க...

ஜெகதீசனை அவ்வப்போது பார்த்திருந்தாலும், பேசிப் பழக்கம் இல்லாததால், அவள் யோசனையுடன் அவர் முன் போய் நின்றாள்.

"எப்படி இருக்க உமா...?"

"நான் நல்லா இருக்கேன் அங்கிள்..." அவளது அங்கிள் என்ற வார்த்தையை அவரால் ஜீரணிக்க முடியவில்லை.

"அப்பான்னு சொல்லும்மா..." என்றார் தன்னையும் அறியாமல்.

"அப்பாவா...?" என்று யோசித்த சிறுமி உமா, "எனக்குத்தான் ஏற்கெனவே ஒரு அப்பா இருக்கிறாரே... நீங்க எனக்கு அங்கிள் மட்டும்தான்..." என்று அவரது பேச்சை மறுத்துக் கூறியவள், அங்கிருந்து ஓடி விட.... அவளது வார்த்தைகள் அவருக்குச் சொல்லொண்ணா வேதனையை அளித்தது.

"உமா சொல்வதும் உண்மைதானே...! என்ன இருந்தாலும் அவள் சங்கரன் மகள்தானே...! எனக்கு மகளில்லையே..." மனம் வருந்தியவர், தனது எண்ணம் போகும் திசையறிந்து அதற்கு வலுக்கட்டாயமாய்க் கடிவாளம் இட்டார்.

"ச்சீ... என்ன நினைப்பு இது...? கொஞ்ச நேரத்தில் லெஷ்மியின் வாழ்க்கையைக் கேள்விக்குறியாக்க இருந்தேனே..." தன்னையே சாடியவர், அதற்குப் பின் விழுப்புரம் பக்கம் எட்டிக் கூடப் பார்க்கவில்லை.

ஜெகதீசன் தட்டு எடுத்துக் கொடுக்க நடந்த தனது மகளின் நிச்சய விழா பற்றித் தனது அல்லக்கை மூலம் அறிந்து கொண்ட மகாதேவனின் மனம் ஆத்திரத்தில் கொந்தளித்தது.

"யார் மகளுக்கு யார் தட்டு எடுத்துக் கொடுப்பது...?" ஜெகதீசனை எண்ணி மனம் கொதித்தவருக்கு, இதற்கு எல்லாம் காரணமான மாமனாரிடத்தில் கோபம் கோபமாய் வந்தது.

"அண்ணே கடைசியில் இப்படியாகிப் போச்சே... இப்போ உங்க பொண்ணு வேத்து இனத்துக்காரனைக் கல்யாணம் பண்ணிக்கப் போகுது... நாம பயந்த மாதிரி நம்ம சாதிக்காரன் ஒரு பய நம்மளுக்கு ஓட்டுப் போட மாட்டான். இந்தக் கல்யாணத்த எப்படியாவது தடுத்து நிறுத்துங்க..." என்று அவரது அல்லக்கை துள்ள...

தனது பதவியை மாமனார் தயவில்லாமல் தக்க வைத்துக் கொள்ள... அதே சமயம் தனது சாதி ஓட்டையும் தக்க வைத்து கொள்வதோடு தனது கௌரவத்தையும் தக்க வைத்துக் கொள்ள, குள்ளநரியான மகாதேவனின் மூளை குறுக்கு வழியில் யோசித்தது. சில பல யோசனை கள் செய்தவர், முடிவில் முகம் மலர, கண்கள் பளிச்சிடத் தனது அல்லக்கையைப் பார்த்தார். தனது திட்டத்தை

அவனிடம் தெரிவிக்க, முதலில் அதிர்ந்த அவனும் பின்பு அதைச் செய்ய ஒத்துக் கொண்டான்.

"உங்களுக்காக உயிரையும் கொடுப்பேன்... இந்த வேலையைச் செய்ய மாட்டேனா..." உணர்ச்சி வசப்பட்டு அவன் கூற...

"இதைச் செய்யப் போற ஆளு, முக்கியமா சென்னை, விழுப்புரம் ஆளுங்களா இருக்கக் கூடாது..."

"இதைப் பத்தின கவலையை நீங்க விடுங்க கண்ணே... எல்லாம் நான் பார்த்துக்கிறேன்..." என்றவன், அந்தத் திட்டத்தைச் செயலாற்ற மதுரையில் இருந்த ராஜரத்தினத்தை அணுகினான்.

ராஜரத்தினம் அப்போதுதான் தங்கவேலுவிடம் இருந்து விலகித் தனியே வந்திருந்தான். அவனுக்கு வேண்டியது பணம் மட்டுமே. நியாயம் அநியாயம் அவன் பார்ப்பது இல்லை... பணத்துக்காக எதையும் செய்யத் தயாராக இருந்த அவனை அணுகிய அல்லக்கை, தான் வந்த விஷயத்தை எடுத்து கூற,

"இதானே மேட்டரு... எல்லாம் நான் பார்த்துக் கிறேன்... ஆனா சொன்ன அமௌண்ட் மட்டும் கரெக்ட்டா வந்துரணும்..." என்று கறாராய் அவன் கூற...

"அதெல்லாம் வந்திரும்... நீ மட்டும் போலீசில மாட்டிடாதே..."

"எம் மேல போலீஸ் ஸ்டேஷன்ல எந்தக் கேசும் இல்லை. இனிதான் தப்புப் பண்ணப் போறேன்... இனி

மேல் தான் கேசு வரும்... அதனால பயப்படாமப் போ..." ராஜரத்தினம் நம்பிக்கை கூற, அதில் நிம்மதியுடன் சென்றான் அந்த அல்லக்கை.

அவன் நேரே மகாதேவனிடம் சென்று விஷயத்தைச் சொல்ல, மகாதேவனின் முகம் விகாரமாய் மாறியது. மாமனாரையும் ஜெகதீசனையும் பழி வாங்கத் தனது மகளைக் காவு கொடுக்க அந்த மிருகம் தயாரானது.

அன்று ஆதித்யாவுடன் கோயிலுக்குப் போகலாம் என்று முடிவு செய்திருந்த மாயா, தங்கை உமாவைத் துணைக்கு அழைத்தாள். உமாவும் சந்தோஷமாய், வரச் சம்மதித்தாள்.

வீட்டிற்கு வந்து இருவரையும் அழைத்து சென்றான் ஆதித்யா. உமா, ஞாபகமாய் அவனிடம்,

"மாமா... எங்கே என் சாக்லெட்...?" என்று தன் பிஞ்சுக் கையை நீட்ட...

"உங்கக்காவுக்கு வாங்க மறந்தாலும் மறப் பேன்...உனக்கு வாங்க மறப்பேனா...?" என்று சிரித்தபடி தனது சட்டைப் பையில் இருந்து சாக்லெட்டுக்களை எடுத்து அவள் கையில் வைத்தான்.

ஆவலுடன் அதைப் பிரித்துச் சாப்பிடப் போன உமாவை, "இப்போ சாப்பிட்ட... அன்னைக்கு மாதிரி சட்டை எல்லாம் வீணாப் போயிரும்... வீட்டுக்குப் போய்ச் சாப்பிடலாம்..." என்று மறுத்த மாயா, சாக்லெட்டுக்களை வாங்கித் தனது பையில் வைத்துக் கொண்டாள்,

அதில் அக்கா மேல் கோபம் கொண்ட உமா, வெளிப்புறம் பார்ப்பதுபோல் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். மாயா அவளைச் செல்லம் கொஞ்சி அவளது கோபத்தைக் குறைக்க, அதில் கோபம் குறைந்த சின்னவள், தன் அக்காவைக் கட்டிக் கொண்டாள்.

கோயில் வந்ததும் காரை நிறுத்தி விட்டு மூவரும் இறங்கினர். உமா எப்போதும் போல் விளையாட்டாய் கோயிலை நோக்கி ஓடிச் செல்ல... ஆதித்யா மாயாவுக்குப் பூ வாங்கிக் கொடுப்பதற்காக அங்கிருந்து பூக்கடைக்கார ரிடம் பேரம் பேச, அவனுக்காக மாயாவும் அங்கேயே நின்றாள்.

அப்போதுதான் அந்தச் சம்பவம் நடந்தது. எங்கிருந்தோ வந்த ராஜரத்தினம், திரும்பி நின்றிருந்த மாயாவின் முதுகில் கையில் இருந்த அரிவாளால் வெட்டத் துவங்க, அதில் அலறியபடி திரும்பிய மாயாவின் முன் பகுதியிலும் வெட்டுக்கள் சராமாரியாக விழுந்தன.

"ஏய்... யார் நீ...? என்னை ஏன்டா வெட்டுற...? ஐயோ வலிக்குதே...! என்னை விடுடா... என்னை ஒண்ணும் பண்ணிடாதே ..." மாயாவின் அலறலில், வாங்கிக் கொண்டிருந்த பூவைக் கீழே போட்டு விட்டு, ஒரு கையில் அவளைத் தாங்கிய ஆதித்யா, தன்னவளை வெட்டியவனை மறு கையால் தாக்க முயன்றான்.

கோவிலினுள் நுழைந்து கொண்டிருந்த உமா, அக்காவின் அலறலில் பயந்து போனவளாய்த் திரும்பி யவள், அங்கே மாயாவின் நிலை கண்டு அதிர்ச்சி அடைந்து,

"அக்கா..." என்று கத்திக் கொண்டு மாயா பக்கம் ஓடிப் போக முயல... அவள் அருகில் நின்ற பெண் ஒருத்தி அவளைப் பிடித்துத் தடுத்து,

"நீ போனா உன்னையும் வெட்டிப் போடுவான் பாப்பா..." என்றவர், அவளைத் தன்னோடு அணைத்துக் கொண்டு, அருகில் இருந்த கடைப் பக்கம் மறைவாய் நின்று கொண்டார். அவரது பிடியில் இருந்து உமா திமிறினாலும் அக்காவின் துன்பம் அவள் மனதைத் தாக்க, அவளது உடல் கொஞ்சம் கொஞ்சமாய்த் தளர, அவளது கண்களில் கண்ணீர் உடைப்பெடுத்தது.

"எனக்கும் இந்தப் புள்ளைக்கும்தான் பிரச்சினை... நீ தலையிடாமல் போனா உன் உசிரு தப்பும்... இல்லை, நீ உன் உசிரை விட வேண்டியிருக்கும்..." என்று ராஜரத்தினம் தன் கையிலிருந்த ரத்தம் தோய்ந்த அரிவாளை நீட்டி மிரட்ட, அதில் ஆதித்யா கொஞ்சம் பயந்துதான் போனான்.

இருந்தாலும் ஆண் மகன் என்கிற அசட்டு எண்ணத்தில் அவன் தைரியமாக, "என்னடா பண்ணிடுவ...?" என்று அவனின் கையிலிருந்த அரிவாளைப் பிடிக்க வர,

அவ்வளவுதான்... ராஜரத்தினம் அந்த அரிவாளாலேயே ஆதித்யாவின் மணிக்கட்டில் ஆழமாய்க் கிழிக்க, தன் கையில் ரத்தம் கொப்பளிப்பதை கண்டு பயந்த ஆதித்யா, கையில் பிடித்திருந்த மாயாவை அப்படியே கீழே போட்டு விட்டு, வெட்டப்பட்ட கையைப் பிடித்து கொண்டு துடித்தான்.

"சீக்கிரம் போய் ஹாஸ்பிட்டல்ல சேரு... இன்னும் கொஞ்சம் லேட்டானாக் கூட உன் உசிரு உன் கையில இல்ல... ஓடு... ஓடு..." என்று விரட்ட...

ஆதித்யா, தன் கண் முன்னே மரணப் போராட்டத் தில் துடித்துக் கொண்டிருந்த தனது காதலியை விடவும் தனது மரணப் போராட்டம் அவனுக்குப் பெரிதாய்த் தெரிய, கையை இறுகப் பிடித்துக் கொண்டு, தப்பித்தோம் பிழைத்தோம் என்று அங்கிருந்து தனது காரிலேறி மருத்துவ மனை நோக்கி விரைந்தான்.

காதலிக்கும் காலத்தில் காதலுக்காக உயிரையும் கொடுப்பேன் என்றவன், காதலியின் உயிரைக் கூடக் காப்பாற்றத் தோன்றாமல், தன்னுயிரைக் காத்துக் கொள்ள ஓடினான் அந்தக் கோழை. காதலில் சுயநலம் கூட இருக்கக் கூடுமோ...? இன்றைய காதலில் சுயநலத்தின் சுவை சற்றுத் தூக்கல் தானோ...!

அக்காவைக் காப்பாற்றாமல் ஓடும் ஆதித்யாவை கண்டு விக்கித்து போனாள் உமா. நான்தான் சின்னப் பொண்ணு... மாமா பெரியவங்கதானே... அக்காவை ஏன் காப்பாத்தல...?" அந்தப் பிஞ்சு மனம் ஆதங்கம் கொண்டு குமுறியது.

அந்த நிமிடம் உடலளவில் செத்துக் கொண்டிருந்த மாயா, மனதளவில் செத்துப் போனாள். இக்கட்டான சூழ்நிலையில் காதலித்தவளைக் காப்பாற்றாமல் தன்னு யிரைக் காப்பாற்றிக் கொள்ள ஓடும் காதலனின் கோழைத்தனத்தை எண்ணி எண்ணி மனதுக்குள் வேதனை கொண்டாள்.

'இப்படிப்பட்ட கோழையைப் போய்க் காதலித் தேனே...' என்று தனக்குள் மருகித் துடியாய்த் துடித்துக் கொண்டிருந்தவளின் துடிப்பை நிறுத்த, அவளின் இதயத்தில் அரிவாளை ஆழ இறக்கினான் ராஜரத்தினம்.

அப்படியும் அவன் நிறுத்தாமல், அவளது கழுத்தில் ஒரே வெட்டாய்த் தன் அரிவாளைப் பதிக்க, அதில் ஒரு பெருத்த விக்கல் மாயாவின் தொண்டைக் குழியில் இருந்து புறப்பட்டது. அவளது உடல் ஒரு முறை தூக்கிப் போட்டது. அதைக் கண்டு திருப்தியுற்றவனாய் அவன் நகன்றான்.

அத்தனை மக்கள் அங்கு கூடியிருந்த போதும், யாரும் மாயாவிற்கு உதவ முன் வரவில்லை... மாயா, பெரியசாமியின் பேத்தி என்று தெரிந்தபோதும் யாரும் அவளைக் காக்க முன் வரவில்லை. எல்லோருக்குமே அவரவர் உயிர் மேல் பயம் இருந்தது.

தான் மறைந்திருந்த கடையின் பக்கமாய்ச் சென்ற ராஜரத்தினத்தின் தோற்றம், உமாவின் மனதில் ஆழப் பதிந்தது. எத்தனை ஜென்மங்கள் எடுத்தாலும் அவளால் அந்த உருவத்தை மறக்க முடியாது. அந்தளவுக்குக் கல்வெட்டுச் சித்திரமாய் அவளுள் அவன் உருவம் இறங்கியது. அவளது அன்பு அக்காவைத் துன்புறுத்திய வன் அல்லவா அவன்...!

அவன் சென்றதும் எல்லோரும் மாயாவை நோக்கி ஓட, உமாவும் தன் அக்காவை நோக்கி ஓடினாள். உயிருக்குப் போராடித் துடித்துக் கொண்டிருந்த மாயாவின்

அருகில் அமர்ந்த உமாவின் கண்கள் கண்ணீரைப் பொழிய, தேம்பிக் கொண்டே, "அக்கா...அக்கா..." என்று அவள் வாய் விடாமல் ஜெபித்தது.

தங்கையின் குரலில் எங்கோ பறந்து சென்று கொண்டிருந்த உயிரை இழுத்துப் பிடித்துக் கொண்டு சிரமப்பட்டுக் கண் திறந்த மாயா, தங்கையைப் பார்த்துப் புன்னகைக்க முயன்று தோற்றுப் போனாள்.

தங்கையின் கண்ணீரைத் தன் ரத்தம் தோய்ந்த கரங்களால் துடைத்து விட்டவள், "உமா...ஆதி மாதிரி ஒரு கோழை கையால் தாலி வாங்கி வாழ்வதை விட, உயிரை விடுவது எவ்வளவோ மேல்... அவனை நான் காதலித்ததே பெரும் பாவம்... அவனைக் காதலித்ததுக்காக நான் வெட்கப்படுறேன், வேதனைப்படுறேன்... நான் சாகிறதுக் காக நீ வருத்தப்படாதே... அம்மாவை நல்லாப் பார்த் துக்கோ..."

ஒவ்வொரு வார்த்தையும் விட்டு விட்டுப் பேசியவள், அடுத்த நொடி இழுத்துப் பிடித்துக் கொண்டிருந்த தன் உயிரை விட்டிருந்தாள்.

தன்னை யார்... எதுக்காக... ஏன் கொன்றார்கள் என்று கூடத் தெரியாமல் இறந்து போனாள் அந்தப் பேதைப் பெண். அதன் பின்னணியில் தனது தந்தை தான் இருக்கிறார் என்று அவளுக்குத் தெரிந்திருந்தால்? காதலனின் கோழைத்தனத்தையே தாங்கிக் கொள்ள முடியாதவளால், தந்தையின் துரோகத்தை நிச்சயம் தாங்கி இருக்க முடியாது. நல்லவேளை அது தெரியாமல் அவளின் உயிர்ப் பறவை மேலோகம் சென்று விட்டது.

வாழ்க்கையை அனுபவிக்காமலேயே அந்தக் கன்னிப் பெண் கன்னித் தெய்வமானாள்.

உயிர் விடும் போதும் தன்னைப் பார்த்துக் கொண்டே உயிரை விட்ட அக்காவின் உயிரற்ற விழிகளைக் கண்ட உமா, அடிவயிற்றில் இருந்து,

"அக்கா..." என்று பெரியதாய்ச் சத்தமிட்டுக் கத்தியவள், வாய் விட்டுக் கதறி அழ ஆரம்பித்தாள்.

"என்னைப் பழி வாங்குவதாக நினைத்துக் கொண்டு என் மகளைக் கொன்னுட்டாங்க... இது எதிர்க்கட்சியின் சதி. அவர்களுக்கு ஒன்று மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்... என் மகளைக் கொன்றால் நான் பயந்து போய் அரசியலை விட்டு விலகிப் போய் விடுவேன்னு நினைச்சீங்கன்னா, அது உங்க தவறு. என் குடும்பத்தினரை மட்டும் அல்லாது என்னையும் நீங்கள் கொன்றால் கூட, என் இறுதி மூச்சு இருக்கும் வரை நான் இந்த நாட்டுக்காக உழைப்பேன்... மக்கள் என் பக்கம் இருக்கும் வரை என்னை யாரும் ஒன்றும் செய்ய முடியாது. உடல் மண்ணுக்கு உயிர் என் மக்களுக்கு..."

செய்தியாளர்களுக்கு மத்தியில் கண்களில் கண்ணீர் மல்க ஆவேசமாய்ப் பேட்டி கொடுத்த மகாதேவனைக் கண்டு பொதுமக்கள் கண்ணீர் வடித்தனர்.

மாயாதேவி உடலைத் தகனம் செய்து முடித்த கையோடு, மகாதேவன் அப்படிப் பேட்டி கொடுத்ததுக்கு

வலுவான காரணம் ஒன்று இருந்தது. கட்சி மேலிடம் அவரது தொகுதியில் அவருக்குப் பதிலாக வேறொரு ஆளை இறக்கும் எண்ணத்தில் இருந்தது. அது தெரிந்ததும் மனதுக்குள் கொந்தளித்த மகாதேவன், இப்படி ஒரு அரசியல் வித்தையைக் காட்டினார்.

சாதிக்காக மகளைக் கொலை செய்த அவர், அரசியல் லாபத்திற்காக அதை அப்படியே அரசியல் வாழ்ப்புணர்ச்சிப் பழி வாங்கலாகத் திசை திருப்பி விட்டார். வந்த விசயத்தை எந்த நேரத்தில் எப்படிக் கொண்டு சென்றால் மக்கள் மனதில் இரக்கத்தை வரவழைக்க முடியும் என்பது அவருக்கு நன்கு தெரியும். அந்தளவுக்கு மக்களின் நாடித் துடிப்பை அவர் நன்கு அறிந்து வைத்திருந்தார். ஒரு குறிப்பிட்ட சாதியினரின் ஓட்டுக்காக அவர் செய்த கொலையானது, எல்லா இன மக்களையும் அவர் பால் ஈர்க்கச் செய்தது.

பேட்டியை முடித்து கொண்டு வீட்டினுள் நுழைந்தவர் கண்ணில், மாயாவின் புகைப்படம் அருகில் கண்களில் கண்ணீர் வழிய அமர்ந்திருந்த மனைவி தனம் மற்றும் மகள் உமாவும் விழுந்தனர். அங்கிருந்து சோபாவில் அமர்ந்திருந்த பெரியசாமியைப் பார்த்த மகாதேவன், எதையும் வெளியே காட்டிக் கொள்ளாது மனைவி அருகில் அமர்ந்து,

"தனம்... மாயா நம்மை விட்டுப் போனது, நமக்கு எல்லாம் அதிர்ச்சிதான்... அதுக்காக இப்படிப் பச்சைத் தண்ணி கூடப் பல்லுல படாம இருக்கலாமா...?" மனைவியைத் தேற்றியவர், வேலைக்காரப் பெண்ணிடம்

பாலைக் கொண்டு வரச் செய்து, மனைவியைப் பருகச் சொல்லி வற்புறுத்தியவர், உமாவைத் தன் பக்கம் வருமாறு அழைக்க, அவளோ அவரை முறைத்துக் கொண்டு தாத்தாவிடம் சென்று அமர்ந்து கொண்டாள்.

சின்னப் பேத்தியை நடுங்கும் கரங்களால் வருடிய பெரியசாமியின் மனம், மூத்த பேத்தியை நினைத்துக் கலங்கிப் போயிருந்தது. அதிலும் ஆதித்யா போல் ஒருவனைப் பற்றி எப்படிச் சரியாக விசாரிக்காமல் போனோம் என்ற கவலையே அவர் மனதைப் பெரிதும் வாட்டியது. அதற்கும் காரணம் இருந்தது.

மாயாவின் கொலை வழக்கைக் காவல்துறை விசாரித்த போது, மகாதேவன் இந்தக் கொலையின் காரணம் அரசியல் காழ்ப்புணர்ச்சிதான் என்று கூறி, இல்லாத எதிரியை இருப்பது போல் சித்தரித்துக் காவல்துறையை அழகாக நம்ப வைத்து விட்டார்.

மாயாவின் இறுதிக் காரியத்துக்கு வந்த ஜெகதீசன், இந்தக் கொலை வழக்கை விசாரிக்க உத்தரவிடவா என்று கேட்டபோது... தனக்கு இன்னமும் கட்சியில் செல்வாக்கு இருப்பதாகக் கூறி, அவரின் வாயை அடைத்து விட்டார் மகாதேவன். மகள் போல் எண்ணியவளின் மரணம், ஜெகதீசனின் மனதை வேதனைப் படுத்த, கனத்த இதயத்துடன் டெல்லி சென்று விட்டார் அவர்.

அதன் பின்னர் காவல் துறை அதிகாரி, மாயாவின் காதலன் மற்றும் சம்பவ இடத்தில் இருந்தவன் என்ற முறையில் ஆதித்யாவிடம் விசாரனை செய்ய, அவனோ

வழக்கில் தன்னை சம்பந்தப்படுத்தி விடுவார்களோ என்ற அச்சத்தில், கொலையாளியைப் பற்றின அடையாளம் எதுவும் தனக்குத் தெரியாது... பயத்தில் தான் அவனைச் சரியாகப் பார்க்கவில்லை என்று கூறி விட்டான். உயிர் தப்பிய பயம், அவன் கண்ணில் இன்னும் இருந்ததைக் கண்டு, அந்த அதிகாரி அவன் மிகவும் பயந்து போயிருப்பதாய் எண்ணிக் கொண்டு, அவனுக்கு ஆறுதல் வார்த்தை சொல்லி விட்டு வந்தார்.

காதலனே கொலையாளியைக் கண்டு பிடிப்பதற்கு உதவவில்லை எனும் போது, பொதுமக்கள் எங்கே கொலையாளியைப் பற்றி வாயைத் திறக்கப் போகிறார் கள்...? கொலையாளியைப் பற்றின தகவல்களைத் தர யாரும் முன் வரவில்லை.

அதை எல்லாம் எண்ணித்தான் பெரியவர் மனம் வருந்திக் கொண்டிருந்தார். இப்போது அவருமே மகா தேவன் கூறியதை உண்மை என்று நம்பத் தொடங்கி விட்டார். அப்போது, அவர் காலத்தில் அரசியல் செய்தது போல் இந்தக் கால அரசியல் இல்லை... எங்கும் வெட்டு குத்து... பழிக்குப் பழி என்று அரசியல் கூவம் நதி போல் தன்னுடைய புனிதத்தை இழந்து சாக்கடையாகி விட்டது. அதனால் அரசியல் எதிரிகள் யாராவது இதைச் செய்தி ருக்கலாம் என்று அவரும் எண்ணத் தொடங்கி விட்டார்.

மாயா இறந்து ஒரு மாத காலமாகி விட்டது. மனதில் சோகம் நிறைந்திருந்த போதும், வீடு இயல்பு நிலைக்குக் கொஞ்சம் கொஞ்சமாய்த் திரும்பி இருந்தது.

தான் நினைத்தவாறு எல்லோரையும் நம்ப வைத்த மகிழ்ச்சியில் இருந்த மகாதேவனுக்கு, அந்த அல்லக்கை மூலம் பிரச்சினை ஏற்பட்டது. அன்று அவர் வீட்டில் ஓய்வாக இருந்த போது, அவன் அவரைச் சந்திக்க வந்தான். கட்சியில் உள்ளவர்களைச் சந்திக்கவெனத் தனியாகத் தோட்டத்தில் அமைக்கப்பட்டிருந்த அறைக்கு அவனை அழைத்துச் சென்றார் மகாதேவன்,

அப்போது உமா அந்த அறைக்கு வெளியே தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருந்தாள். மகள் அங்கு இருப்பதைக் கவனிக்காமல், மகாதேவன் அவனிடம் பேசத் துவங்கினார். அது தான் அவருக்கு வினையாய்ப் போய் விட்டது.

"அண்ணே... மகளுக்குக் கல்யாணம் வச்சிருக் கேன்..." என்று அவன் தலையைச் சொறிய...

"நல்ல விஷயம்தானே..." என்ற மகாதேவன், தன் காசோலையை எடுத்து அதில் ஐம்பதாயிரம் ரூபாய் எழுதி அவனிடம் நீட்டினார்.

அதை வாங்காமல் அவரைப் பார்த்தவன். "உங்களை நம்பித்தான் பொண்ணுக்கு வசதியான இடத்தில் மாப்பிள்ளை பார்த்திருக்கேன்..."

"என்னை நம்பின்னா... எனக்குப் புரியலையே..." அவன் என்ன சொல்ல வருகிறான் என்று உண்மையில் அவருக்குப் புரியவில்லை.

"ஒரு பத்து லட்சம் கொடுத்தீங்கன்னா..." அவன் இழுக்கும் போதே அவருக்குக் கோபம் வந்து விட....

"எவ்வளவு தைரியம் இருந்தா, என் கிட்டேயே பத்து லட்சம் கேட்ப...?" அவர் தன் குரலை உயர்த்த...

அதில் விளையாடிக் கொண்டிருந்த உமாவின் கவனம் கலைந்து, பயந்து போனவளாய்ச் சுவரோரம் ஒன்ற, உள்ளே பேசிய வார்த்தைகள் எல்லாம் அட்சரம் பிசகாமல் அவள் காதில் விழ ஆரம்பித்தது.

"உங்க கிட்ட கேட்காம நான் வேற யார் கிட்டண்ணே கேட்கிறது...? எனக்கு உங்களை விட்டா யார் இருக் காண்ணே..." என்றான் அவனும் தன்மையாக.

"பத்து லட்சம்ங்கிறது உனக்குச் சாதாரண விஷயமாப் போச்சா...? நீ என் கிட்ட எதுவும் கொடுத்து வச்சிருக்கியா...? நீ கேட்டதும் எடுத்துக் கொடுக்கிற துக்கு...? உனக்குப் பணத்தை அள்ளிக் கொடுக்க இங்கே ஒண்ணும் கொட்டிக் கிடக்கல... யார் வீட்டுப் பணத்தை யார் கேட்கிறது...? உன்னோட நிலையை மறந்து நீ பேசாதே..." மகாதேவன் ஆத்திரத்தில் தன்னை மறந்து வார்த்தைகளை விட, அது அவரது எடுபிடியின் தன் மானத்தைச் சீண்டி விட்டது.

"என்னண்ணே... விட்டாப் பேசிட்டே போறீங்க...? உங்களுக்காக நான் செஞ்ச காரியத்தை ஒரு நிமிசம் நினைச்சுப் பாருங்க... யாரும் செய்யத் துணியாத காரியத்தை உங்களுக்காக... உங்க மேல உள்ள விசுவாசத்துக்காக நான் செஞ்சிருக்கேன்... நான் செஞ்ச காரியத்துக்கு இந்தப் பத்து லட்சம் ரொம்ப பெரிசு ஒண்ணும் இல்லை.

"நீங்க அரசியல்ல நீடிச்சு இருக்கணும்கிறதுக்காக உங்க சொந்த மகளைக் கொல்லத் துணிஞ்ச போது, அதுக்கு உங்களுக்கு சப்போர்ட்டா நான் இருந்திருக் கேன்... நான் சொன்ன மாதிரி உங்க மூத்த மகளைக் கொல்லவும் செய்துட்டேன்... அந்தப் பரிதாபத்துலதான் இந்த எலெக்சன்ல நீங்க ஜெயிச்சு அமைச்சராகப் போறீங்க... ஆனா உங்களுக்கு உதவி செஞ்ச எனக்கு என்ன லாபம்...? அமைச்சரானா நீங்க சம்பாதிக்கப் போற பணத்துக்கு முன்னாடி இந்தப் பத்து லட்சம் எல்லாம் பிச்சைக் காசு... அந்தப் பணத்தை எனக்குக் கொடுக்க மாட்டேன்னு சொல்றீங்களேண்ணே..." உணர்ச்சிவசப் பட்டுச் சற்று உரக்கவே பேசியவனை, ஆழ்ந்து பார்த்த மகாதேவனின் பார்வையில் என்ன இருந்தது என்பதை அவனால் அறிய முடியவில்லை.

வெளியில் இருந்து கேட்டுக் கொண்டிருந்த உமா, தன் தந்தையே அக்காவைக் கொன்றதைக் கேட்ட அச்சத்தில் உறைந்து போய், கால்கள் வேரோட அப்படியே நின்றிருந்தாள்.

"சரி... நீ கேட்ட பணத்தை நான் தந்தர்றேன்..." மகாதேவன் சொன்னதும் அவனின் முகம் மலர்ந்தது.

"அண்ணே... நீங்க நல்லாயிருக்கணும்... ஏதோ கோபத்துல பேசினதை எல்லாம் நீங்க மனசுல வச்சுக்கா தீங்க..." அவன் கூழைக் கும்பிடு போட்டு மன்னிப்பு வேண்ட...

"நான் எதையும் மனசுல வச்சுக்கல... நீதான் ஏதேதோ மனசுல வச்சுக்கிட்டுப் பேசுற... சரி அதை விடு.

இப்போ வர்ற எலெக்சன்ல எனக்குப் பதிலா வேறொருத் தனை நிப்பாட்ட நம்ம கட்சி மேலிடம் முடிவு செஞ்சிருக் கிறது உனக்குத் தெரியும்தானே...! அரசியல் வாழ்க் கையைக் காப்பாத்திக்கிறதுக்காகச் சொந்த மகளைக் கொன்றும் எந்தப் பலனும் இல்லை..." சோகமாக உதட்டைப் பிதுக்கியவரைக் கண்டு அவன் உணர்ச்சி வசப்பட்டவனாய்,

"அண்ணே... உங்களுக்காக உயிரையும் கொடுப் பேன். கட்சி மேலிடம் முடிவு பண்ணினாப் போதுமா...? நாங்க எல்லாம் எதுக்கு இருக்கோம்...? இதுக்காகக் கண்டனப் பேரணி ஒண்ணு நடத்தி உங்களுக்காகத் தீக்குளிக்க இரண்டு பேரை செட் பண்ணிடறேன்... அதுக்கு அப்புறம் பாருங்க... நிச்சயம் சீட் உங்களுக்குத் தான்..." என்றவனை உணர்வற்ற பார்வை பார்த்தவர்,

"யாரோ தீக்குளிக்கப் போறதை விட, அதை நீயே செஞ்சா நல்லாயிருக்குமே..." மகாதேவன் கூறும் போதே அவனின் முகம் மாறியது.

"நானா...?"

"நீயேதான்... என்னோட ரைட் ஹேன்ட் நீ இதைச் செஞ்சாத்தான் எல்லாரும் நம்புவான். இது என்ன உண்மையாவா நடக்கப் போகுது... மேலிடத்தைப் பயமுறுத்த ஒரு செட்அப் தானே...! நான் உன் பக்கத்துல இருக்கும் போது நீ ஏன் பயப்படுற...?" அவர் சொன்ன தைக் கேட்டு நம்பிக்கை வரப் பெற்றவனாய்,

"சரிண்ணே... அந்த மாதிரியே செஞ்சிரலாம்..."

"அதை நாளைக்கே செஞ்சா நல்லாயிருக்கும்..." மகாதேவனின் ஆழ்ந்த குரலில் திடுக்கிட்டவனாய்,

"என்ன சொல்றீங்கண்ணே...?"

"இல்ல... கண்டனப் பேரணியை நாளைக்கு வச்சுக் கிட்டா நல்லாயிருக்கும்னு சொன்னேன்..." அதில் நிம்மதிப் பெருமூச்சு விட்டவன், சரி என்றபடி கிளம்பினான். அவன் போவதைக் கண்டு மனதுக்குள் சிரித்துக் கொண்டார் மகாதேவன். நாளை என்ன நடக்கப் போகிறது என்பதை அவர் மட்டுமே அறிவார்... அதனால் எழுந்த சிரிப்புதான் அது.

அறையை விட்டு வெளியில் வந்த மகாதேவன், அங்கு சுவரோடு ஒட்டியபடி நின்று கொண்டிருந்த உமாவைக் கண்டு திடுக்கிட்டுப் போனார்.

"ஏய்... நீ இங்கே என்ன பண்ற...?" அவர் அதட்ட, அதை கண்டு பயப்படாமல் நிமிர்ந்து பார்த்த உமாவின் கண்களில் தெரிந்த தீ ஜ்வாலையில், மகாதேவன் அரண்டு போனார்.

"அக்காவைக் கொன்னது நீங்க தானேப்பா...?" நிதானமாய்க் கேட்டவளின் கேள்வியில் அவருக்கு உள்ளுக்குள் நடுக்கம் ஏற்பட்டது. யாருக்கும் தெரியக் கூடாது என்று அவர் நினைத்திருக்க, இப்போது மகளுக்குத் தெரிந்தது கண்டு அவருக்குப் பயம் பிடித்துக் கொண்டது.

"உளறாதே உமா... வீட்டுக்குப் போ..." மகளைக் கடிந்தவர் வீட்டிற்குள் செல்ல... அவரைப் பின் தொடர்ந்து

உள்ளே வந்த உமா, அவரின் கையைப் பிடித்து கொண்டு...

"ஏன் என் அக்காவைக் கொன்னீங்க...?" என்று கேட்க, பதில் சொல்லத் தெரியாமல் அவர் கையை உதறிச் செல்ல முயல, அவளோ விடாப்பிடியாக அவரின் கையைப் பற்றித் தொங்கிக் கொண்டே...

"ஏன் என் அக்காவைக் கொன்னீங்க...?" மீண்டும் மீண்டும் உரக்கக் கேட்டவளின் சத்தம் கேட்டுத் தனம் உள்ளே இருந்த வந்தார்.

கணவனையும் உமாவையும் கண்டவர் வேகமாக மகளின் அருகில் வந்து அவளின் கையிலிருந்து கணவனின் கையை விலக்கியவர்,

"என்ன உமா இது...? எதுக்கு இப்படிப் பிடிவாதம் பிடிக்கிற...?" அன்னை அதட்டியது கூடக் காதில் விழாமல், தன் தந்தையைப் பார்த்து,

"ஏன் என் அக்காவைக் கொன்னீங்க...?" திரும்பத் திரும்ப அந்த வார்த்தைகளைச் சொல்ல, தனம் அதில் திடுக்கிட்டுப் போனார்.

"என்னங்க இப்படிச் சொல்றா...?" அதிர்ந்து போனவராய்க் கணவரைப் பார்த்தார். அதைவிட அதிர்ந்து போயிருந்த மகாதேவன், என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் விழித்தார்.

அப்போதும் தனத்திற்குத் தன் கணவரைச் சந்தேகப் படத் தோணவில்லை. எந்தத் தகப்பனாவது தான் பெற்ற

பெண்ணைக் கொலை செய்வானா என்றுதான் அவர் நினைத்தார். அதனால் உமாவைத்தான் அவர் அதட்டினார்.

"உமா தேலையில்லாம இப்படிப் பேசக் கூடாது... அவர் உன்னோட அப்பா..."

"இல்லை, என்னோட அப்பா இவர் இல்லை. இவர் ஒரு கொலைகாரன். என் அக்காவைக் கொன்னவரு..."

உமாவின் வார்த்தையை நம்பி, மனைவி சந்தேகப் பட்டு விடுவாளோ என்ற பயத்தில், மகாதேவன் முந்திக் கொண்டார்.

"நான் அப்பவே சொன்னேன்... இவளைக் கண்டிச்சு வைன்னு... நீதான் கேட்கல.... இப்பப் பாரு... பெத்த தகப்பனையே கொலைகாரன்னு சொல்றா... இந்த வயசுல பேசுற பேச்சா இது...?" மனைவியிடம் அவர் எகிற...

இதற்குத் தான் என்ன செய்வது என்று தெரியாமல் தனம்தான் தவித்துப் போனார். கணவர் தப்புப் பண்ண மாட்டார் என்று உறுதியாக எண்ணியவர், மகளைத்தான் அடக்க நினைத்தார்.

உமாவோ தாயின் சொல்லுக்கு அடங்காமல், கண்களை உருட்டியபடி, தான் சொன்னதைச் சொல்லிக் கொண்டிருக்க, மகாதேவன் யோசனையுடன் மகளின் முகத்தைப் பார்த்தவர், அந்த வார்த்தைகளை உதிர்த்தார்.

"தனம்... எனக்கென்னவோ உமாவோட நடத்தையில் கொஞ்சம் சந்தேகம் இருக்கு... மாயா இறந்த அதிர்ச்சியில்

அவளுக்கு ஏதுமாகியிருச்சோ... அதாவது மூளை பிறண்டு போயிருச்சோ..."

ஒரு மகளைக் கொலை செய்த பழியில் இருந்து தப்பிக்க, இன்னொரு மகளைப் பைத்தியமாக்க முயன்றார் மகாதேவன்... அதில் தனம் திகைத்துப் போனார்.

"இல்லைங்க... உமாவுக்கு அப்படி எல்லாம் ஆகி யிருக்காது... எதுக்கும் அப்பாவை வரச் சொல்றேன்... அவர் வந்து உமாவைச் சமாதானப்படுத்தட்டும்..." தனம் சொன்னதும், மகாதேவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

"இப்போ எதுக்கு உங்கப்பாவுக்குச் சொல்லப் போற... அவர் வந்து என்னைக் கொலைகாரன்னு சொல்றதுக்கா...? சும்மாவே உங்கப்பாவுக்கு என்னைக் கண்டா பிடிக்காது..." அதற்கு மறுத்து அவர் பேச...

"ஐயோ... உங்களைப் போய் நான் அப்படி நினைப்பேனா...? அப்படியே அப்பா சொன்னாலும் அதை நான் நம்புவேனா...? உமாவைச் சமாதானப்படுத்த அவரால் மட்டும்தான் முடியும்..." என்ற தனத்தைச் சிறிது கர்வம் தாங்கிப் பார்த்த மகாதேவன், அதற்குச் சம்மதித் தார். மனைவி அவர் பக்கம் இருக்கும் வரை, வெற்றி அவர் பக்கமே...!

தனம் அழைத்ததும் அங்கே விரைந்து வந்த பெரியசாமி, உமா கூறியதைக் கேட்டு அதிர்ந்து போனார். ஆனாலும் அவராலும் மருமகனைத் தவறாக நினைக்க முடியவில்லை. ஒருவன் கெட்ட மகனாக, கணவனாக இருக்கக் கூடும். ஆனால், கெட்ட அப்பாவாக இருக்க

முடியாது. மகாதேவன் கெட்டவர்தான் என்றாலும் பெற்ற மகளைக் கொல்லும் அளவுக்கு அவர் கயவன் இல்லை என்றுதான் அவரும் நம்பினார். ஆனால், காலம் கடந்து தெரிந்த உண்மையால் எந்தவிதப் பயனும் இல்லாது போனதுதான் கொடுமை.

அதனால் பெரியசாமி பேத்தியைத்தான் சமாதானப் படுத்த முயன்றார். உமாவோ சொன்னதைச் சொன்னவள், யார் கூறியதையும் ஏற்க மறுத்தாள். அரும்பாடு பட்டு அவளுக்குப் பாலில் தூக்க மாத்திரையைக் கலந்து கொடுத்து உறங்க வைத்தனர். அன்று முழுவதும் அவளை உறக்கத்திலேயே வைத்திருந்தனர். பெரியசாமி பேத்தியுடனேயே இருந்து விட்டார்.

மறுநாள் காலையில் அழகாகப் பொழுது விடிந்தது. ஆனால், உமாவுக்கு மட்டும் அது நல்ல பொழுதாக விடியவில்லை.

மகாதேவன் அன்று நடக்க வேண்டிய கண்டனப் பேரணிக்குச் சென்றார். பேரணி அமைதியாகச் சென்று கொண்டிருந்தது, நான்கு வீதிகள் சந்திக்கும் அந்தப் பிரதான இடம் வரும் வரை... அந்த இடம் வந்ததும், அவர் அருகில் வந்து கொண்டிருந்த அவருடைய அல்லக்கை, பக்கத்தில் இருந்த ஒருவனிடம் இருந்து பெட்ரோல் கேனை வாங்கித் தன் மீது ஊற்றிக் கொண்டு,

"என்னோட தலைவருக்காக நான் உயிரையும் கொடுப்பேன். அவருக்கு சீட் கொடுத்காத கட்சி மேலிடம் ஒழிக... என்னோட சாவுக்கு கட்சியே பொறுப்பு..." என்று

முழங்கிக் கொண்டே தீக்குச்சியைப் பற்ற வைத்தவன், மகாதேவனைப் பார்க்க...

அவனின் பார்வையை உணர்ந்தவராய் மகாதேவன் அலறிக் கொண்டே, "வேண்டாம்... இப்படி எல்லாம் பண்ணாதே..." என்று சொல்லிக் கொண்டே அவனின் கையில் இருந்த தீக்குச்சியை வெளிப்பக்கமாகத் தட்டி விடுவதற்குப் பதில், அவன் மேலேயே தட்டி விட்டார்.

அவரின் செயலை அவன் திகைத்துப் பார்க்கும் போதே, பெட்ரோல் நெருப்பை ஆதரவாய்ப் பற்றிக் கொண்டு சடசடவென அவனது உடலை ஆக்கிரமித்து, அவனை உயிரோடு எரிக்க ஆரம்பித்தது. மகாதேவனின் நம்பிக்கைத் துரோகத்தை வாய் விட்டுச் சொல்ல முடியாமல், தனது உடல் வலியில் வேதனையில் அலறிக் கொண்டு துடித்தான் அவன்.

இப்போது போல் அப்போது அலைபேசி அவ்வளவாகப் பரவாத காலம் அது... இல்லை என்றால் அந்தக் காட்சியை யாராவது ஒருவர் படம் எடுத்து சமூக தளத்தில் உலவ விட்டிருப்பார். ஆனால், கண்ணிமைக்கும் நேரத்தில் நடந்து முடிந்த நிகழ்வை, யாராலும் படம் எடுத்திருக்க முடியாது என்பது வேறு விஷயம்.

"ஐயோ... என்னடா இப்படிப் பண்ணிட்டியே...." போலியாகக் கண்ணீர் விட்டு அலறியபடி அவனிடம் ஓடிய மகாதேவனை, மற்ற தொண்டர்கள் இழுத்துப் பிடித்துத் தடுத்தனர்.

அவனை மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லும் வழியிலேயே அவன் இறந்து போக, மாயாவின் கொலைக்கு இருந்த ஒரே சாட்சியும் மண்ணோடு மண்ணாய்ப் போனது.

காலையில் கண்விழித்த உமா, அருகில் இருந்த தாத்தாவிடம், "நீங்க கூட என்னை நம்பலையா...?" என்று பாவமாகக் கேட்டாள். நேற்று இருந்த ஆத்திரம் அவளிடம் சற்றுக் குறைந்திருந்தது.

"உன்னை நம்பாமலா உமா... ஆனா நம்ம அப்பா அப்படிச் செய்வாங்களா...? கொஞ்சம் யோசிச்சுப் பாருடா..." பெரியசாமி பேத்தியைச் சமாதானம் செய்ய...

"நான் உண்மையாத்தான் சொல்றேன் தாத்தா... என்னை நீங்க நம்பலைன்னா... அப்பா கூட இருப்பாரே அந்த அங்கிள்..." அவனது பெயரைச் சொன்னவள், "அவர் கிட்ட வேணும்னாலும் கேட்டுப் பாருங்க..."

உமாவின் இந்த வார்த்தையில், பெரியவரின் புருவங்கள் யோசனையாய்ச் சுருங்கியது.

"உமா... நீ சொல்றது உண்மையா...? அவனை எங்கே பார்த்த...?" தாத்தா, தான் சொன்னதை நம்பி விட்டார் என்பதை அறிந்த உமா, தந்தையும் அவனும் பேசியதை ஒன்று விடாமல் கூற, பெரியசாமிக்கு உலகமே தலைகீழாய்ச் சுழன்றது.

அன்று வீட்டிற்கு வந்த மகாதேவனிடம் அவர் அதைப் பற்றிக் கேட்க, அவரோ அலட்சியத்துடன், "உங்க

பேத்திக்குத்தான் பைத்தியம் முத்திப் போச்சுன்னா... உங்களுக்குமா பைத்தியம் பிடிச்சிருக்கு... அவ பேசுறதை வச்சா என்னைச் சந்தேகப்படுறீங்க...?" கோபத்துடன் கத்த,

தனம் கணவருக்கு ஆதரவாக, "அப்பா, ஏம்ப்பா இப்படி எல்லாம் பேசுறீங்க...?

உங்களுக்கு அவரைப் பிடிக்காததால கொலை காரன்னு சொல்றதா...?" ஆற்றாமையுடன் தந்தையிடம் கேட்க...

வெறுமையான பார்வையை மகள் பக்கம் பார்த்த பெரியசாமி, மகாதேவன் புறம் திரும்பி, "உன்கிட்ட என்ன பேச்சு...? நான் அவன்கிட்டயே பேசிக்கிறேன்..." என்று வெளியில் செல்ல முயல...

"அவன் இறந்து ஒரு மணி நேரமாச்சு மாமா..." கொஞ்சமும் அலட்டிக் கொள்ளாமல் கூறிய மகாதேவ னைக் கண்டு பெரியசாமி அதிர்ந்து போனார்.

"அவனை என்ன பண்ணின...?" கேட்கும் போதே அவரது குரல் நடுங்கியது.

"நான் ஒண்ணும் பண்ணலை... அவனே தீக் குளிச்சுச் செத்துட்டான்..." என்றவரை வெறுப்பாய்ப் பார்த்த பெரியசாமி,

"அவனையும் கொன்னுட்டியா...?"

"உண்மையில் உங்களுக்கும் உங்க பேத்தியோட சேர்ந்து பைத்தியம் பிடிச்சுப் போச்சு... முதல்ல மாயா வைக் கொன்னேன்னு... அதுக்கப்புறம் என்னடான்னா...

அவனையும் நான்தான் கொன்னேன்னு சொல்றீங்க... எனக்கு என்ன வேற வேலை இல்லையா...?" என்றவர் மனைவியிடம்,

"உங்கப்பா கிட்ட சொல்லி வை. ஒழுங்கு மரியாதையாப் பேசுறதா இருந்தா இங்கே வரச் சொல்லு... இல்லைனா அவர் வீட்டிலேயே இருக்கச் சொல்லு..." என்று கத்த தனம் தான் தவித்துப் போனார்.

"அப்பா, எதுக்கு அவரைத் தேவையில்லாமப் பேசுறீங்க...?"

"உன் புருசன் தப்பு மேல தப்பு பண்ற மாதிரி இருக்கு... இப்பவே இதுக்கு ஒரு முடிவு கட்டறேன்..." என்ற பெரியசாமி நேரே காவல் நிலையம்தான் சென்றார்.

அவர் தொலைபேசியில் அழைத்தால் காவல் நிலையம் வீடு தேடி வரும். இருந்தாலும் நேர்மையான அந்த அரசியல்வாதி இதிலும் நேர்மையைக் கடைப் பிடித்தார்.

அவருக்கு அங்கு செல்வாக்கு இன்னமும் இருப்பதால் மகாதேவனை விசாரிக்க உடனே அவர்கள் விரைந்து வந்தனர். வந்தவர்கள் அவரிடம் விசாரணை செய்ய... எல்லாம் மகாதேவனுக்குச் சாதகமாக இருந்தது.

கடைசியில் உமாவை விசாரிக்க வேண்டும் என்று சொன்னபோது தான் மகாதேவன் அந்தக் காகிதத்தை அவர்களிடம் நீட்டினார்.

அதைப் படித்துத் திகைத்துப் போனவர்கள், "சாரி சார்..." என்று மகாதேவனிடம் உரைத்து விட்டுப்

பெரியசாமியிடம் அந்தக் காகிதத்தைக் கொடுத்து விட்டு, "உங்க குடும்பத் தகராறில் எங்களை இழுக்காதீங்க சார்..." என்றபடி வெளியேறினர்.

பெரியசாமி அவசரமாய் அந்தக் காகிதத்தை எடுத்துப் பார்த்தார்.

மாயா இறந்த அதிர்ச்சியில் உமா மன அழுத்த நோயினால் பாதிக்கப்பட்டு இருக்கிறாள் என்று மருத்துவர் ஒருவர் சான்றிதழ் அளித்திருந்தார்.

வீட்டில் இருந்தபடி இடைப்பட்ட இந்த அரைமணி நேரத்தில் தீயாய் வேலை செய்த மருமகனின் குள்ளநரி வேலையே அவர் குற்றவாளி என்று நிரூபித்தது.

"ச்சீ! நீ எல்லாம் மனுசனே இல்லை... பெத்த பொண்ணையே பைத்தியம்னு சொல்றியே..." வெறுப் பாய்ப் பெரியசாமி பேச...

"ஐயா மாமா! என் பொண்ணைப் போய் நானே பைத்தியம்னு சொல்வேனா... நீங்க போன கொஞ்ச நேரத்துல உமா புலம்ப ஆரம்பிச்சுட்டா... டாக்டர் வந்து பார்த்திட்டு அவளுக்கு டிப்ரசன்னு சொல்லி மருந்து கொடுத்துட்டுப் போனார். ஏய் தனம், பார்த்துட்டு மரம் மாதிரி இருக்கியே... நடந்ததைச் சொல்றதுக்கு என்ன...?"

தலையாட்டி பொம்மையைச் சாட்சிக்குக் கூப்பிட்டால் அது என்ன செய்யும்? அது அவர் சொன்னதுக்கு ஏற்ப தலையைத் தலையை ஆட்டியது.

எல்லா வழிகளும் மூடப்பட்டதால் பெரியசாமியால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

இருவரையும் வெறுப்பாய்ப் பார்த்தவர், "இனியும் உமாவை உன்கிட்ட விட்டு வச்சா அவளையும் நீ கொலை பண்ணிருவ..." என்றவர் உமாவைத் தன்னுடன் அழைத்துச் செல்ல முயல,

தனம் அவரைத் தடுத்து, "அப்பா... அவரை இன்னமும் புரிஞ்சிக்க மாட்டேங்கிறீங்களே... அவர் அப்படி எல்லாம் செஞ்சிருக்க மாட்டார்ப்பா... பெத்த பொண்ணை யாராவது கொலை பண்ணுவாங்களா... நல்லா யோசிச்சுப் பாருங்கப்பா...!" என்று கெஞ்ச,

"யோசிக்க வேண்டியது நான் இல்லை. நீ..." என்றவர், உமாவை அழைத்துக் கொண்டு போவதில் தீவிரமாய் இருக்க... அதற்கு ஏற்ப உமாவும் தன் தாத்தா வோடு செல்ல வேண்டும் என்று பிடிவாதம் பிடிக்க, வேறு வழியின்றித் தனம் அதற்கு ஒத்துக் கொள்ள வேண்டிய தாய்ப் போயிற்று.

மகாதேவனோ உமாவைப் பற்றிச் சிறிதும் கவலைப் படாமல், அவள் தன் கண் முன் இருந்து ஒழிந்தால் சரி என்று எண்ணினார். அவள் தன் கண் முன் இருந்தால்... தானே அவளைக் கொன்று விடுவோம் என்று அஞ்சினார். அந்தளவுக்கு அவள் மேல் கொலைவெறியில் இருந்தார்.

தனக்குப் பொய்யாக மனநிலை சரியில்லை என்று சான்றிதழ் கொடுத்த மருத்துவரைக் கண்டு, அன்று உமாவின் மனதில் தானும் மருத்துவம் படித்து தன்னிடம் வரும் நோயாளிகளிடம் நேர்மையாக நடந்து கொள்ள வேண்டும் என்ற நல்விதை ஆழமாக விதைக்கப்பட்டது.

அதுதான் இன்று விருட்சமாக வளர்ந்து அவளை ஒரு மருத்துவராக்கி உள்ளது. அதுவும் மனநல மருத்துவராக என்பது அவளது ஆசை.

வீட்டிற்கு வந்த பெரியசாமி சும்மாயிருக்கவில்லை... கட்சி மேலிடத்துக்கு அழைத்து, மகாதேவனுக்குத் தேர்தலில் இடம் கொடுக்க வேண்டாம் என்று வேண்ட,

"நீங்க சொன்ன மாதிரி இந்தத் தடவை சங்கர னுக்குப் பதிலா வேறொருத்தருக்குத்தான் சீட் கொடுக்கிறதா இருந்தேன்... ஆனா இப்போ இருக்கிற நிலையில சங்கரனுக்குத்தான் சீட் கொடுக்க வேண்டி வரும் போல... ஏன்னா அவரோட மகள் கொலை, அவரோட ஆதரவாளர் தீக்குளித்தது எல்லாம் சேர்த்துச் சங்கரனுக்குத்தான் அனுதாப அலை வீசுது...

"யார் நின்னா என்ன... எனக்கு நம்ம கட்சி ஜெயிக்கணும். அவவளவுதான்... இந்த நேரத்துல சங்கரனைத் தவிர்த்து யாரை நிக்க வச்சாலும் அவங்க தோத்துப் போயிடுவாங்க..." என்று மேலிடம் முடித்துக் கொள்ள, மகாதேவனை எதிர்க்க முடியாமல் முடங்கிப் போனார் பெரியசாமி.

அந்தத் தேர்தலில் வெற்றி பெற்ற மகாதேவன், அதற்குப் பின் தோல்வியைச் சந்திக்கவில்லை... அந்தள விற்கு மாயா என்ற கன்னிப் பெண்ணின் கொலை மக்கள் மனதில் அனுதாப அலையை அழுத்தமாய்ப் பதித்து இருந்தது.

மகாதேவன் மாயாவைக் கொன்றதுக்கான ஒரே சாட்சி, அவரோடு கூட இருந்த அவரது ஆதரவாளன்

மட்டுமே... அவனையும் கொன்றாகி விட்டது. அவர்கள் இருவரும் பேசியதைக் கேட்ட உமாவையும் மனநிலை சரியில்லை என்று கூறி முடக்கியாகி விட்டது.

தன்னை எதிர்த்த மாமனாரையும் செல்லாக் காசாக்கி ஓரமாய் உட்கார வைத்தாகி விட்டது. தனக்கு எதிராகத் திரும்பியவர்களை எல்லாம் தோற்கடித்து விட்ட சந்தோஷத்தில் இருந்த மகாதேவன் ராஜரத்தினத்தை மறந்து போனார்.

செய்த கொலைக்கு முன்பணம் தவிர, இன்னமும் கூலி வராததால் கிட்டத்தட்ட ஒரு மாதத்துக்கு மேல் பொறுத்துப் பொறுத்துப் பார்த்த ராஜரத்தினம் மிகுந்த கோபத்துடன் அந்த அல்லக்கையைத் தேடி விழுப்புரம் வந்தான். அங்கு அவன் இறந்த விஷயம் கேட்டு நொந்து போனவன் வேறு வழியின்றி மகாதேவனைச் சந்திக்க சென்னை சென்றான். அவனுக்கு அந்தளவுக்குப் பணத் தேவை இருந்தது.

நேரே அவரது வீட்டிற்குச் சென்றவனைக் கண்டு காவலாளி உள்ளே செல்ல அனுமதி மறுக்க, அவன் அந்த ஆதரவாளரின் பெயரைச் சொல்லி அவன் சம்பந்தமாய்ப் பேச வந்திருப்பதாக மகாதேவனிடம் சொல்லச் சொல்ல... அடுத்த நிமிடம் அவனுக்கு அனுமதி வழங்கப்பட... ராஜரத்தினம் திமிராய்க் காவலாளியைப் பார்த்து கொண்டே உள்ளே சென்றான்.

மகாதேவன் அவனை அலுவலக அறைக்குக் கூப்பிட்டுப் போய், என்ன ஏதென்று விசாரிக்க... அவன் கூறிய செய்தியில் அவர் முகம் வெளுத்தது.

"நீ எதுக்கு இங்கே என்னைத் தேடிட்டு வந்திருக்க...? இதைச் சொல்லி என்னை ப்ளாக்மெயில் பண்ணவா...? உன்னால என்னை ஒண்ணும் பண்ண முடியாது..." என்று அவர் படபடக்க...

"என்ன சார்... இப்படிப் பேசறீங்க... ப்ளாக்மெயில் அது இதுன்னு...? நான் அப்படிப்பட்ட ஆள் எல்லாம் கிடையாது சார்... செஞ்ச வேலைக்குக் கூலி இன்னும் கொடுக்கல... அதுக்காக அந்தப் பொறம்போக்கப் பார்க்கப் போனேன். போன இடத்துல அவன் செத்துப் போயிட்டதா சொன்னாங்க... அதான் உங்களைப் பார்க்க வந்தேன்..." என்க...

"இந்த விசயத்தை யார் கிட்டயாவது சொன்ன... உன்னைத் தொலைச்சிருவேன் தொலைச்சு..." மகா தேவன் அவனை மிரட்டியபடி தனது காசோலையை எடுத்துப் பெரிய தொகையாக எழுதி அவனிடம் நீட்ட, அதை வாங்கிப் பார்த்த அவனோ வாயெல்லாம் பல்லாக உடலை வளைத்துக் கூழைக் கும்பிடு போட்டவன்,

"ஐயோ! நான் எங்கேயும் சொல்ல மாட்டேன் சார்... எம் பொழைப்பே இதுதான்... இதைப் போய் நான் வெளியில சொல்வேனா...? வேற எந்த விஷயம்னாலும் என்னைக் கூப்பிடுங்க சார்... ஆதாரம் இல்லாம சடுதியில் செஞ்சு முடிச்சிடறேன்..." என்றான்.

'உன் கூட கூட்டு வைச்சா நான் அவ்வளவுதான்...' மனதில் நினைத்த மகாதேவன், "தேவைப்பட்டா கூப்பிட றேன்... நீ கிளம்பு..." என, அவன் சென்றதும்தான் பெரு மூச்சு விட்டார்.

வெளியில் இருந்து வீட்டிற்கு வந்த ஹரி, ராஜ ரத்தினத்தைக் கண்டு யோசனையுடன் அவனை வழி மறித்தான்.

"ஏய் யார் நீ...? எப்படி வீட்டுக்குள்ள வந்த...?" சரமாரியாக அவன் கேள்வி கேட்க...

"சார்தான் வரச் சொன்னாரு..." என்றவன் கையிலிருந்த காசோலையில் ஹரியின் கண்கள் சென்றன. அதில் எழுதியிருந்த அதிகத் தொகையைக் கண்டு திகைத்துப் போனான்.

பின் ஏதோ நினைத்தவனாய், "சரி, நீ போ..." என்று அவனை அனுப்பி விட்டு, வீட்டினுள் நுழைந்த ஹரி வரவேற்பறையில் அமர்ந்திருந்த மகாதேவனிடம்,

"இந்த மாதிரி ஆளுங்க கூட எல்லாம் எதுக்கு டாட் பழக்கம் வச்சிருக்கீங்க...?" அவன் சத்தம் போட... மகாதேவன் என்ன சொல்வது என்று தெரியாமல் முழித் தார். எல்லோரையும் அரட்டும் அவரால் எதிர்த்துச் சுண்டு விரல் கூட அசைக்க முடியாமல் இருப்பது அபி மற்றும் ஹரியிடம் மட்டுமே...!

"அது வந்து...?" அவர் திணற...

"அவ்வளவு பெரிய அமவுண்டைக் கொடுக்கிற அளவுக்கு அப்படி என்ன விஷயம் உங்களுக்கும் அவனுக்கும் இடையில் இருக்கு...?"

அவன் பேசும் சத்தம் கேட்டு அபி வந்து விட்டார். "ஹரி... அவர் அரசியல் வாழ்க்கையில் ஆயிரம் இருக்

ும். அதை எல்லாம் உன்கிட்ட சொல்லிட்டு இருக்க முடியாது. போய் உன் வேலையைப் பாரு..." என்று மகனை அதட்ட... அதில் கோபமாய் அவன் தன் அறைக்குச் செல்ல... மனைவியை நன்றியுடன் பார்த்தார் மகாதேவன்.

ஹரி கல்லூரி வாழ்க்கையில் நல்ல பையனாகத் தான் இருந்தான். ஆனால் அவனை நல்லவனாக இருக்க விடவில்லை, அவனைச் சுற்றிய பெண்களும், அவனது நண்பன் சபரீசும்.

முதலில் பெண்களைக் கண்டு தயங்கிய ஹரி யிடம் பெண்கள் தாராளமாய் வலிய வந்து பழக வர... அப்போதுதான் அவனுக்குத் தன் தந்தையின் நிலை புரிய வந்தது. இது போல்தான் தனமும் தனது தந்தையை மயக்கி இருக்க வேண்டும் என்று நினைத்தான். அவனுக்குத் தனம் மேலிருந்த கோபத்தை அந்தப் பெண்களிடத்தில் காட்ட எண்ணினான்.

முதன் முதலாய் அவன் கை வைத்த பெண் நல்ல குடும்பத்துப் பெண். அவளை அனுபவித்து விட்டுக் கழற்றி விட எண்ணியவன், அதை அப்படியே செயலாற்றி யவன் அதை அவளிடம் சொல்லவும் செய்தான்.

அந்தப் பெண்ணிடம் அப்படிக் கூறும் போது, ஏனோ தனது தாயின் வாழ்க்கையைக் கெடுத்த தனத்தைப் பழி வாங்கி விட்டது போல் சந்தோஷமடைந்தான்.

அந்தோ பரிதாபம்! அந்தச் சந்தோஷத்தைக் கூட அவனுக்கு அந்தப் பெண் தரவில்லை. அவன் கூறிய

விஷயத்தைக் கேட்டு ஏதோ நகைச்சுவை கேட்டது போல் வாய்விட்டுச் சிரித்தவள்,

"இந்தச் சென்சுரியில இப்படி சில்லியாப் பேசாதே ஸ்வீட் ஹார்ட்... நெக்ஸ்ட் எப்போ மீட் பண்ணலாம்...?" என்று கண்ணடித்துக் கேட்டவளைக் கண்டு அவன்தான் அதிர்ந்து போனான்.

தன்னைத் திருமணம் செய்து கொள்ளும்படி அந்தப் பெண் கெஞ்சுவாள் என்று அவன் எதிர்பார்க்க... அவளோ அவனுக்கு வேறு விதமாய் அதிர்ச்சி அளித்தாள். ஒரு வேளை அந்தப் பெண் அவனிடத்தில் திருமணத்தைப் பற்றிப் பேசியிருந்தால், உண்மையில் ஹரி திருந்தியிருக்க வாய்ப்பு அதிகம் உள்ளது... இவ்வளவு ஏன், அவளது கண்ணீர் கண்டு அவளையே அவன் திருமணம் செய்யவும் வாய்ப்பிருந்தது. ஆனால் அவள் அப்படிப் பேசியது எரியும் நெருப்பில் எண்ணெயை ஊற்றியது போல் ஆயிற்று.

அந்த நிகழ்ச்சிக்குப் பின்னர் அவனுக்கு எந்தப் பெண்ணிடத்திலும் நம்பிக்கை வரவில்லை. கட்டில் சுகத்துக்கு மட்டுமே பெண் என்று எண்ணினான்.

அவன் அன்பு கொண்டிருந்தது அவனது அன்னையிடத்தில் மட்டுமே... அதனால்தான் அவரிடம் இருந்த பகட்டான டாம்பீகத்தை அறவே வெறுத்தாலும் அவரை அவனால் வெறுக்க முடியவில்லை.

தந்தையிடத்தில் சிறிது கோபம் இருக்கத்தான் செய்தது... தாய்க்குத் துரோகம் செய்தது ஒரு பக்கக்

கோபம் என்றால்... அவரது அநியாய அரசியல் அவனது மறு பக்கக் கோபத்தை அதிகரிக்கத்தான் செய்தது. இதில் அவனையும் அரசியலில் திணிக்க மகாதேவன் முயற்சிக்க... அதை உறுதியாய் மறுத்தவன் சபரீசுடன் சேர்ந்து தொழில் தொடங்கினான்.

அதன்பின் அவனது வாழ்க்கை பெண்கள், தொழில் என்று வெற்றிகரமாகச் சென்றது. திருமணம் என்ற ஒன்றே மறந்து போனவனாய் அவன் வாழ்ந்து வந்தான்.

அப்போதுதான் சங்கீதாவைச் சந்தித்தான்... அவளது வித்தியாசமான அழகில் கவரப்பட்டு நாளடைவில் அவளை மனதுக்குப் பிடித்து, அவளைத் தன்னவளாக்கிக் கொண்ட போதும், அவன் பெரிதாய்க் குற்றவுணர்வு அடைந்து விடவில்லை... எல்லாப் பெண்களைப் போல் அவளை நினைத்தாலும் தன் மனதுக்கு மிகவும் பிடித்த பெண் அவள் என்பது அவனால் மறுக்க முடியாத ஒன்று.

அவள் திருமணம் பற்றிப் பேசியதும் கொஞ்சம் குழம்பித்தான் போனான். அதனால்தான் அவனால் சட்டென்று தன் முடிவைச் சொல்ல முடியவில்லை. அதன் பின் அவள் அவனை விட்டு விலகியதும் தான் அவன் தன் காதலை, தன் மனதை, தான் இவ்வளவு நாளாய்த் தேடிக் கொண்டிருந்த பெண்ணை அவளிடத்தில் கண்டு கொண்டான்.

அதன்பின் அவன் ஒரு நிமிடம் கூடத் தாமதிக்க வில்லை... அவளைப் பெண் கேட்கச் செல்ல நினைக்கும் போது, உதய் பண்ணிய தகராறில் உதய்யைப் பழி வாங்க உமாவை இதில் திணிக்க விரும்பினான்.

அதை மகாதேவனிடத்தில் சொன்னபோது அவர் அதிர்ந்து போனார். தனத்திடம் இருந்து சொத்துக்களை இந்தத் திருமணத்தின் மூலம் திரும்பப் பெறப் போவதாக ஹரி சொன்னது சற்று அதிர்ச்சிதான்... உண்மை தெரிந்தால் ஹரி தன்னைக் காறி துப்புவான் என்று எண்ணியவர் பொய்யை நிலை நாட்ட வேறு வழியின்றி மகனிடம் தலையசைத்தார்.

"ஹரி, அவங்க வேற சாதி மாதிரி இருக்கேப்பா..." சாதிக்காக மகளைக் கொன்றவர் மகனிடத்தில் அதே சாதிக்காக ஆலோசனை கேட்டார்.

அப்போ நானும் வேற சாதிதான் டாட்... என்ன அப்படிப் பார்க்கறீங்க... எனக்கு உருவம் கொடுத்தது நீங்களா இருந்தாலும்... எனக்கு உயிர் கொடுத்து தன் ரத்தத்தில் சுமந்தது என்னோட மாம் தானே... அப்போ அவங்க சாதி ரத்தம்தான் என் உடம்பில் ஓடுது..." என்ற வனைக் கண்டு அவரால் வாயைத் திறக்க முடியவில்லை.

"இதனால உங்க அரசியல் வாழ்க்கை பாதிக்கப் படும்னு நினைக்க வேண்டாம்... இந்த இன்டர்காஸ்ட் மேரேஜால உங்க அரசியல் செல்வாக்கு அதிகரிக்கத்தான் போகுது..." அவன் சொல்லவும், அப்படியும் இருக்கலாமோ என்று மகாதேவன் சிந்திக்க ஆரம்பித்தார்.

"எனக்கு வேண்டியது எல்லாம்... அந்தம்மா கையில இருக்கிற உங்க சொத்துக்கள் திரும்ப வரணும்... அதுக்குக் கிடைச்சிருக்கிற ஒரே துருப்புச் சீட்டு கீத்து... கீத்துக்காக அவள் அண்ணன் எதுவும் செய்வான்... இந்தச்

சொத்துக்களைக் கொடுக்கலைன்னா கீத்து கூட நான் வாழ மாட்டேன்னு சொன்னா... வேற வழியில்லாம உதய் நான் சொன்னதைச் செய்வான்..."

ஹரி சொன்னதும் மகாதேவனுக்கும் அந்தத் திட்டம் மிகவும் பிடித்துப் போனது. ஏனெனில் உமாவை அடக்க, அவளிடமிருந்து சொத்தைப் பிடுங்குவது ஒன்றே ஒரே வழி... சரி என்று சம்மதித்தவர் கண் முன், உமா அவரிடம் விட்ட சவால் கண் முன் விரிந்தது.

பத்து வயதில் தாத்தாவோடு சென்ற உமா, அதன்பின் தன் வீட்டிற்குச் செல்லவில்லை... தனம் தான் வந்து பார்த்து விட்டுப் போவார். ஒவ்வொரு தடவையும் வரும் போதும் அவர் அழுது கொண்டே தான் போவார். இருக்கும் ஒற்றை மகளைப் பிரிந்திருப்பது அவருக்குமே மிகவும் கஷ்டமாக இருந்தது.

உமாவிற்குப் பதினெட்டு வயதாக இருக்கும்போது பெரியசாமி நோய்வாய்ப்பட்டு படுக்கையில் விழுந்தார். இனி, தான் பிழைக்க மாட்டோம் என்று நினைத்தவர், தனது வக்கீலை அழைத்துத் தனது சொத்துக்கள் அனைத்தையும் பேத்தி உமா பெயருக்கும், அவளுக்கு வரப் போகும் கணவன் பெயருக்கும் எழுதி வைத்தார். அப்போதுதான் பன்னிரண்டாம் வகுப்பு முடித்திருந்த அவள் மருத்துவப் படிப்பைத் தேர்ந்தெடுத்து இருந்தாள்.

உமாவை அழைத்து விவரத்தைச் சொன்னவர், "உமா இந்தச் சொத்துக்காக உன்னோட அப்பா உன்னைக் கொலை செய்யக் கூடத் தயங்க மாட்டான்.

ஏற்கெனவே பதவிக்காக மாயாவைக் கொன்னவன்தான் அவன்... அதனால நீ ரொம்ப ஜாக்கிரதையா இரும்மா... என்னோட சொத்துக்களை எல்லாம் உனக்கும் உனக்கு வரப் போற புருஷனுக்கும் சேர்த்து எழுதி வச்சிருக்கேன். அப்போதான் தனியா உன் கூட மோத மாட்டான்..." என்று அவர் சொல்லும் போதே...

"தாத்தா, அவனும் அப்பாவைப் போல் இருந்தால்..." என்று வெறுப்பாய்ச் சொன்ன பேத்தியைக் கனிவுடன் பார்த்த பெரியசாமி,

"ஏன்... நான் இல்லையா... ஜெகதீஷ் இல்லையா?" என்க...

அவரை வியப்புடன் பார்த்தாள் உமா.

"ஜெகதீஷ் அங்கிள்..."அவள் இழுக்க...

ஜெகதீசனைப் பற்றி அவளிடம் சொல்லலானார்.

"உனக்கு எந்த நேரத்தில் உதவி தேவைப்பட்டாலும் நீ அவன்கிட்ட கேட்கலாம்... எந்த நேரத்திலும் அவன் உனக்கு உதவி பண்ணுவான்..."

"தாத்தா, அக்கா கொலையானப்போ அவர்கிட்ட உதவி கேட்டு இருக்கலாமே..." என்று கேட்ட உமாவைக் கண்டு விரக்தியாய்ச் சிரித்தவர்,

"அதுக்கான எல்லாக் கதவையும் உங்கப்பா தான் மூடிட்டானே... சாட்சியாய் இருந்தவனை உயிரோட கொன்னுட்டான்... அவங்க பேசியதைக் கேட்ட உனக்கு மன அழுத்தம்னு சொல்லி விசாரிக்கக் கூட விடாமப்

பண்ணிட்டான். இனியும் நான் போராடினா என்னையும் பைத்தியக்காரன்னு சொல்லிடுவான்... யாரும் நான் சொல்றதை நம்பத் தயாராயில்லை. ஏன்... என் மகளே இதை நம்பத் தயாராயில்லையே...?"

தனது அக்காவைக் கொன்றது தன் அப்பாதான் என்பதை நிரூபிக்க முடியாமல் போன தன் நிலையை அறவே வெறுத்தாள் உமா. தன்னைப் பற்றிப் போலியாகச் சான்றிதழ் கொடுத்த அந்த மருத்துவரை எண்ணி எண்ணி மனதுக்குள் குமுறினாள்.

இப்போது மனநிலை சரியாக இருந்தாலும் கொலைக்கான ஆதாரங்கள் அழிக்கப்பட்டு விட்டது. கொலையாளி முகம் மட்டுமே ஆதாரமாய்... அதை வைத்துக் கொண்டு அவனை எங்கே போய் தேடுவாள் அவள்.

இதைச் சொன்னால் மீண்டும் பைத்தியம் என்கிற பட்டம் அவளைத் தேடித் தானாய் வந்து சேரும்.

தந்தைக்கு எதிராகத் தன் சுட்டு விரலைக் கூட அவளால் அசைக்க முடியாத நிலையில் இருந்தாள்.

"உமா... நீதான் தனத்தைப் பார்த்துக்கணும்... அவ ஒரு குழந்தை மாதிரி... சூதுவாது தெரியாது. அதான் அவன் இஷ்டத்துக்கு அவளை வளைக்கிறான்... நான் போனதுக்கு அப்புறம் நீ அங்கே போய் இருந்து உங்கம்மாவைப் பத்திரமாப் பார்த்துக்கோ...!" என்று உமாவிடம் சொல்ல, கண்ணீர் மல்க அவர் கையில் தன் கையை வைத்து அவருக்கு நம்பிக்கை அளித்தாள்.

ஒரு மாத காலம் உயிரை இழுத்துப் பிடித்துக் கொண்டிருந்த பெரியசாமி இறந்து போக... பெற்றோர் இருந்தும் அநாதையாக நின்றாள் உமா. தாத்தாவின் சொல்படி தாயுடன் சென்று இருந்தாள் உமா.

பெரியசாமி உமாவின் பெயருக்குச் சொத்துக்களை எழுதிக் கொடுத்திருப்பதை அறிந்த மகாதேவன் கொதித்துப் போனார். தனக்குப் பெரியசாமி துரோகம் இழைத்து விட்டதாய் மனைவியிடம் ஆக்ரோஷப்பட்டார்.

"உன் அப்பனுக்கு என்னைப் பார்த்தா மனுசனாத் தெரியாதா... அரசியல் வாழ்க்கையிலும் எனக்குத் துரோகம் செஞ்சான்... இப்போ என்னை நம்பாம உமா பெயருக்குச் சொத்தை எழுதி வச்சிட்டுப் போயிருக்கான். பார்க்கிறவன் எல்லாம் என்னைக் காறித் துப்ப மாட்டான்..." என்று பாய... தனத்துக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை.

மகாதேவன் மகளிடமும் கோபம் கொண்டு கத்தினார். "நீ எல்லாச் சொத்தையும் என் பெயருக்கு மாத்தி எழுதி வைக்கிற... நீ சும்மாவே என்னை மதிக்க மாட்ட... இதுல உன் பேருல இவ்வளவு சொத்து இருந்தா உன்னைய யாரும் கையில பிடிக்க முடியாது..."

"அது மட்டும் என்னால் முடியாது..." அழுத்தமாய்ச் சொன்னவளை மனைவி முன் ஒன்றும் பேசாமல் விட்டவர்... தனியே அவள் இருக்கும் போது அவளை மிரட்டத் துவங்க...

"என்ன... அக்காவைக் கொன்ன மாதிரி என்னையும் கொன்னுருவீங்களா... அதுவரைக்கும் நான் சும்மா

இருந்தாத்தானே... ஜெகதீஷ் அங்கிள் கிட்ட எனக்குப் பாதுகாப்பு கொடுக்கச் சொல்லிக் கேட்பேன்..." என்ற மகளிடம் ஒன்றும் பேசாமல் வந்தவர், அந்தக் கோபத்தை எல்லாம் மனைவி மீது காட்டினார்.

ஆம்! தனது பெல்ட்டைக் கழற்றித் தனத்தைப் போட்டு அடி அடி என்று அடித்து விட்டார்.

"என்னடி, உன் மகளை வச்சு என்னை மிரட்டு றியா...? அந்த ஜெகதீஷ் கிட்ட போனா... நான் பயந்திருவேனா என்ன...? அவன் யாருடி, என் குடும்ப விஷயத்தில் தலையிடறதுக்கு...? அவன் இந்த வீட்டுக் குள்ள காலடி எடுத்து வச்சா அடுத்த நொடி நான் இந்த வீட்டுக்கு வர மாட்டேன். உனக்கு நான் வேணுமா...? இல்லை, அந்த ஜெகதீஷ் வேணுமான்னு நீயே முடிவு பண்ணிக்க..."

அவரின் வார்த்தையில் பதறிப் போன தனம், "என்ன வார்த்தை பேசறீங்க...? கட்டிய புருசன் உங்களை விடவா எனக்கு அந்த ஆளு முக்கியம்..." என்று அவரின் காலைக் கட்டிக் கொண்டு கதற... அதில் கர்வம் கொண்ட மகாதேவன் மனைவியிடம்,

"அப்போ உன் பொண்ணுகிட்டசொல்லி, உங்கப்பா சொத்தை என் பேருக்கு எழுதி வைக்கச் சொல்லு... இதை ஏன் நான் சொல்றேன்னா... வயசுப் பொண்ணு கையில் அதிகமா காசு இருந்தா தேவையில்லாத கெட்டப் பழக்கம் எல்லாம் வந்து சேரும். அதுக்குத்தான் நான் சொல் றேன்... என் காலத்துக்கு அப்புறம் அவளோட பேருக்குத்

தான் ஆட்டோமேடிக்கா எல்லாச் சொத்தும் போகப் போகுது... அதை அந்தக் கழுதை புரிஞ்சிக்காம பேசுது..."

நயவஞ்சகமாக அவர் பேசிய வார்த்தைகளைத் தனம் உண்மை என்றே நம்பினார்.

அதைக் கேட்டு மகளிடம் அவர் பேசப் போக, அவர் பேசியதைக் கவனிக்காமல் உமா அம்மாவின் உடல் காயங்களைக் கவனித்தாள்.

"அம்மா, என்ன இது... அப்பா உங்களை அடிச் சாரா...?" பதற்றத்துடன் அவரின் காயங்களை வருடியபடி கேட்டவளின் கண்களில் கண்ணீர் மழை.

"நீ பண்றதுக்கு அவருக்குக் கோபம் வராம இருக் குமா உமா...? அவர் சொன்ன மாதிரி இந்தச் சொத்துக் களை உங்கப்பா பேருக்கே மாத்திக் கொடுத்திடேன்..."

"அதைத் தவிர வேறு எதை வேணும்னாலும் செய்யச் சொல்லுங்க செய்றேன்."

கண்டிப்பாய் மறுத்த மகளிடமும் அவரால் பேச முடியவில்லை. பிடிவாதம் பிடிக்கும் கணவனிடத்திலும் அவரால் பேச முடியவில்லை.

அன்னையின் காயங்களைக் காணச் சகிக்காமல் தந்தையிடம் பேசச் சென்றவள், "அம்மாவை அடிச்சீங் கன்னா... நான் சும்மா இருக்க மாட்டேன்..." என்று மிரட்ட...

"என்னடி, பண்ண முடியும் உன்னால...?" அமைச்ச ராய் எல்லோருக்கும் உதாரணமாக இருக்க வேண்டியவர் பேட்டை ரௌடி போல் பேசினார்.

"அப்படித்தான் அவளை அடிப்பேன்... நான் அடிக்காம இருக்கணும்னா... என் பேருக்குச் சொத்தை எழுதிக் கொடு."

எப்போதும் எதிர்க்கும் உமா, அன்னைக்காகச் சற்று அடங்கினாள். அதற்காகச் சொத்துக்களை எழுதிக் கொடுக்க அவள் தயாராக இல்லை. வெறுப்புடன் தந்தையைப் பார்த்தவள் அங்கிருந்து சென்று விட்டாள்.

அதன் பின் அவளுக்கு மதுரை மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைக்க... தனத்தைத் தனியே விட்டுச் செல்லத் தயங்கினாள்.

"என்னைப் பத்திக் கவலைப்படாதே உமா... நீ எதுத்துப் பேசறதால்தான் அப்பா அடிக்கிறார்... நீ எதுத்துப் பேசாம இருந்தா அவர் அடிக்க மாட்டார். நீ கவலைப் படாதே...!" என்று ஆறுதல் சொல்லித் தனம் அவளை அனுப்பி வைத்தார்.

தனம் சொன்னது போல் உமா இல்லாத நாட்களில் அவர் விழுப்புரம் வரவும் இல்லை... தனத்தை அடிக்கவும் இல்லை... இதே இது உமா விடுமுறைக்கு வந்து விட்டால் மகாதேவனும் அங்கு வந்து விடுவார்... வந்தவர் சும்மா இருக்காமல் உமாவைப் பழி வாங்குவதாக நினைத்துக் கொண்டு தனத்தை அடிக்கப் போக... அன்னைக்காக அந்த அடிகளை எல்லாம் உமா தன் உடம்பில் தாங்கிக் கொள்வாளே அன்றி, அவர் நினைத்ததை மட்டும் அவள் ஒரு போதும் நிறைவேற்றியது இல்லை.

ஆனால் மகாதேவன் தன் மனைவி மூலம் ஒரு காரியத்தை மட்டும் சாதித்துக் கொண்டார்... அது எல்லாத்

தொழில்களின் கணக்கு வழக்குகளையும் தானே பார்ப்பதாய் நயமாய் மனைவியிடம் கூறி அதை எல்லாம் தன் வசம் கொண்டு வந்து விட்டார்... தந்தையின் குள்ளநரி புத்தியைப் பற்றி அறியாத அன்னையை நினைத்து மனம் வருந்த மட்டுமே உமாவால் முடிந்தது.

அன்னைக்காக அதை மட்டும் அவரிடத்தில் விட்டு வைத்தாலும் அவ்வப்போது கணக்குக் கேட்டு அவள் அடி வாங்குவதும் உண்டு.

இந்த நிலையில்தான் அவளுடன் படிக்கும் விஷ்ணு அவளின் வீட்டிற்கு வந்தான். அங்கு அவனைக் கண்டதும் பதறிப் போனாள் உமா. ஏனெனில் விஷ்ணு வின் மனம் அவளுக்கு நன்கு தெரியும்... அதை விட மகாதேவன் அங்குதான் இருந்தார். அவனைக் கண்டதும் ஒன்றும் பேசாது வரவேற்ற மகாதேவன் மனதில் என்ன இருக்கிறது என்பதை அவளால் கணிக்க முடியவில்லை.

பேச்சுவாக்கில் விஷ்ணு இவர்களின் சாதி எனத் தெரியவும், மகாதேவன் சுவாரசியமாக

அவனுடன் பேச ஆரம்பித்தார்...

விஷ்ணுவின் கண்கள் வீட்டை ஆசையுடன் கண்டு களிப்பதையும், உமா மீது காதல் பார்வை வீசுவதையும் கண்டு கொண்டவர் மனதுக்குள் சிரித்துக் கொண்டார்.

அவன் சென்றதும் உமாவைக் கண்டு வாய் விட்டுச் சிரிக்கத் துவங்கியவரைக் கேள்வியாய் அவள் பார்த்தாள்.

"என் வேலையை இவ்வளவு லேசா சுலபமாக் கிட்டியே... இவனை மாதிரி ஒரு பையனைத்தான் நான்

தேடிக்கிட்டு இருந்தேன்... நாய்க்கு எலும்புத் துண்டைப் போடற மாதிரி வெளிநாட்டு ஆசை காண்பிச்சா... நான் காமிக்கிற பேப்பர்ல சைன் போட்டுருவான் போலிருக்கே..." மொட்டையாகப் பேசிய தந்தையைப் புரியாமல் அவள் பார்க்க...

"இவனைத்தான் உனக்குக் கல்யாணம் பண்ணி வைக்கலாமான்னு பார்க்கிறேன்..." என்றவரை அதிர்ச்சி யாய்ப் பார்த்தாள் அவள்.

"நீதானே சொத்தைத் தர மாட்டேன்னு சொல்ற... ஆனா உனக்கு வரப் போறவன் கிட்ட இருந்து எப்படிச் சொத்து வாங்கணும்னு எனக்குத் தெரியும்... அது இந்தப் பயலா இருந்தா என் வேலை சுலபம்... அந்தளவுக்கு அவனுக்கு வெளிநாட்டு மோகம் தலை விரிச்சு ஆடுது..." என்றவரை இகழ்ச்சியாய்ப் பார்த்த உமா...

"அதுக்கு நீங்க நிறையச் செலவழிக்கணுமே...?"

"உன்னை ஒண்ணும் இல்லாம ஆக்குறதுக்காக எவ்வளவு வேணும்னாலும் செலவழிக்க நான் தயாரா இருக்கேன். இது எனக்கும் உனக்கும் இடையில் நடக்கும் யுத்தம். அதுக்காக நான் என்ன வேணும்னாலும் செய்யத் தயாரா இருக்கேன். அதுக்கு என் சொல்படி தலையாட்டுற மருமகன் எனக்குக் கிடைக்கணும்... அதுக்கு அப்புறம் பாரு, என்ன செய்றேன்னு..." என்றவர்,

"எனக்கு வர்ற ஆத்திரத்துல உன்னைக் கொன்னுட லாமான்னு இருக்கு... ஆனா, கொல்ல முடியாத சூழ் நிலையில் மாட்டிக்கிட்டு முழிக்கிறேன்... ஏன்னா மூத்தவ

தான் கொலை செஞ்சு செத்துப் போனான்னா... இரண்டாவது பெண்ணும் கொலையால செத்துப் போனா வீணா என் மேலதான் சந்தேகம் வரும். ஏற்கெனவே உன் தாத்தன் தேவையில்லாம என் மேல கம்ப்ளைண்ட் கொடுத்திருக்கான்... அதையும் தோண்டி எடுத்து விசாரிப் பாங்க.

"இதெல்லாம் தேவையா எனக்கு...? அதான் கல்யாணம்ங்கிற பேருல உன்னை மீளவே முடியாத சிறையில் தள்ளப் போறேன்...?" என்று எக்காளமிட்டுச் சிரித்தவரை அலட்சியமாய்ப் பார்த்தவள்,

"என் இஷ்டம் இல்லாம என் கல்யாணம் நடக்காது..." என்று பதிலுக்கு அவள் சவால் விட...

"நடத்திக் காட்டுறேன்டி..." என்று சவால் விட்டு வந்தவர் இன்றுவரை அந்தச் சவாலில் ஜெயிக்க முடிய வில்லை.

அன்று பார்த்த விஷ்ணுவை அவரும் வேலைப் பளுவில் மறந்து போனார்.

இன்று ஹரி கூறிய வரனை உமாவைப் பழி வாங்குவதற்குப் பயன்படுத்திக் கொள்ள நினைத்தார். மகனுக்குப் பிடித்த பெண்ணைத் திருமணம் செய்து வைத்தது போலவும் ஆயிற்று... ஒரு கல்லில் பல மாங்காய்களை அடிக்க மகனைப் போல் திட்டமிட்டார் அவர்.

அத்துடன் அந்த நாட்குறிப்பேடு முடிந்தது. கடைசி யாக இருந்த நாட்குறிப்பேடைக் கையில் எடுத்த உதய்யின்

கைகள் நடுங்கின. நிச்சயம் அதில் தன்னைப் பற்றித்தான் உமா எழுதியிருப்பாள் என்று நினைத்தவன், அதைத் திறக்காமல் நெஞ்சோடு அணைத்தபடி கண்களை மூடிக் கட்டிலில் சாய்ந்து அமர்ந்தான்.

மழலை மொழியில் ஆரம்பித்து அழகான தமிழில் எழுதியிருந்த அவளது வாழ்க்கையின் அலங்கோலத்தைப் படித்தவனுக்கு மூளை வேலை செய்ய மறுத்தது.

உமா பட்ட துன்பங்களை உதய்யால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

வாழ்க்கையில் பட்ட அடியில் தன்னைத் தானே செம்மையாகச் செதுக்கிக் கொண்டு படிப்பு முதல் காதல் வரை அத்தனையிலும் உறுதியுடன் நின்றவளைக் கண்டு பிரமித்தவன் மனதுக்குள் அவளை வணங்காமல் இருக்க முடியவில்லை.

உமாவின் வயதில் தான் படிக்காமல் ஊரைச் சுற்றிக் கொண்டு, தாய் தந்தை அரவணைப்பில் சுகமாய் வாழ்ந்ததை எண்ணி அவன் மனதுக்குள் வெட்கினான்.

தந்தையால் அவள் பட்ட துன்பம் போதாது என்று, தானும் அவளைத் துன்பத்தில் தள்ளியதை நினைத்து நினைத்து அவன் வருந்தினான்... அவளது நாட்குறிப் பேடைத் திறக்கவே பயந்தவனாய் அமர்ந்திருந்தவன் அவளது மனதை அறிந்து கொள்வதற்காக அதைத் திறந்து படிக்கலானான்.

'இன்று காலையில்தான் அவனைப் பார்த்தேன்... யாருடா அது, எங்க காலேஜுக்குள் நுழைந்து எங்க கூடப்

படிக்கும் பையனை அடிப்பது என்ற கோபத்தில்தான் அங்கு சென்றேன்... சென்ற பின் தான் தெரிந்து, அது தினேஷ் என்று... அவன் பெண்களிடம் வம்பிழுக்கும் போதே தெரியும். அவன் யாரிடமாவது அடி வாங்கப் போகிறான் என்று... அது இன்று என்று தெரிந்ததும் சந்தோசப்பட்டேன்...

அப்போது தான் அடிக்கும் அவனைப் பார்த்தேன்... அப்பா! என்ன ஒரு ஆளுமை. கம்பீரம்... அதை எல்லாம் விடத் தன் தங்கைக்காக அவன் தினேஷைத் தட்டிக் கேட்ட விதம் என் மனதைக் கவர்ந்தது... அதுதான் என்னை அதிகமாய் அவனிடத்தில் ஈர்த்தது.

சுவாரசியமாய்ச் சண்டை போட்டுக் கொண்டிருந்தவனைப் பார்த்துக் கொண்டிருந்ததில் சண்டை முடிந்து விட்டதைக் கவனிக்கவில்லை. அவன் என்னைக் கூப்பிட்டதும் தான் நான் சுற்றுப்புறம் உணர்ந்தேன்.

அவன் அருகில் சென்றதும், "உனக்கு என்ன வேணும்...?" என்று அவன் கேட்ட போது...

நான் தேடிக் கொண்டிருந்த என்னவனைக் கண்டு கொண்டதாய் என் உள்ளம் துள்ளியது. நொடி நேரம் கூடத் தாமதிக்காமல், "நீதான் வேண்டும்..." என்று அவன் புறம் கையை நீட்டி விட்டேன்...

பின்னர் என் காதலுக்கு அச்சாணியமாக எதுவும் பேசி விடுவானோ என்ற பயத்தில் ஓடி வந்து மரத்தின் பின்னே ஒளிந்து கொண்டு அவனைப் பார்த்தேன். பின்னந்தலையைத் தட்டிக் கொண்டு அவன் சென்ற விதம் என் மனதைக் கவர்ந்தது.

ஜெய் கேட்கிறாள்... 'உனக்கு அவன் எந்த விதத்தில் பொருத்தம்...? பார்த்த உடன் காதல் வந்து விடுமா?' என்று.

ஆணுக்கு அழகு முக்கியம் இல்லை... வீரம்தான் முக்கியம் என்று அந்த மக்குக்கு யார் எடுத்துச் சொல்வது... என் அக்கா உயிருக்குத் துடித்துக் கொண்டு இருக்கும் போது அவளைக் காப்பாற்றாமல் தன்னுயிரைக் காத்துக் கொள்ள ஓடிய அவளது கோழைக் காதலன் அழகான வன்தான் என்பது ஜெய்க்குத் தெரிந்தால் அவளும் என்னைப் போல் அழகை வெறுத்து விடுவாளோ... என்னைப் போல் வீர ஆண்மகனை நேசிக்கத் தொடங்கி விடுவாளோ...?

ஏன் பார்த்த உடன் காதல் வராது...? தங்கைக்காக இன்று தட்டிக் கேட்பவன் நாளை எனக்காக என் தந்தை யிடம் தட்டிக் கேட்க மாட்டானா... இந்த எண்ணம் தோன்றும் போதே... தந்தையை எதிர்ப்பதற்காக மட்டும்தான் அவனைக் காதலிக்கிறேனோ...? என் சுயநலத்துக்காகத் தான் அவனைக் காதலிக்கிறேனோ என்ற சந்தேகம் மனதில் முளையிட்ட அடுத்த நொடி, அவனது கம்பீரமான உருவம் என் மனதில் வலம் வந்தது.

பார்த்த கொஞ்ச நேரத்தில் அவனது உருவம் அழுத்தமாய் என் மனதில் சிம்மாசனமிட்டு அமர்ந்திருக் கிறது என்றால் இது காதல் இல்லாமல் வேறு என்ன...?

அதனால் ஜெய்க்குப் புரியும்படி அழுத்தமாய், 'ஆம்' என்றேன்.

அன்று மதியமே கலையின் மூலமாக அவனின் பெயர் தெரிந்து கொண்டேன்...

அவன் என்று எழுதி அழிக்கப்பட்டு... அவர் என்று உதய்யின் பெயர் எழுதப்பட்டு இருந்தது. அதைக் கண்டதும் உதய்யின் முகம் மலர்ந்தது. மனைவி தன்னை முழுமனதோடுதான் நேசித்து இருக்கிறாள் என்பதை உணர்ந்தவனுக்கு அவ்வளவு நாளாய் மனதில் இருந்து பாறையாய் அழுத்திய பாரம் சட்டென்று பனியாய் உருகி ஒன்றுமில்லாததாய் ஆனது போல் லேசாக இருந்தது.

'உதய் பேசியது கேட்டு ஜெய்க்கு ரொம்பக் கோபம் வந்து விட்டது... ஹோட்டல்ல ரூம் போடலாம்னு கூப்பிடறவனைப் போய் காதலிக்கிறியே'னு என்னைத் திட்டினாள்.

ஆனா எனக்கு அவர் மேல் கோபம் வரலை. என்னை வேறு யார் கூப்பிட்டது? அவர்தானே!

என் கற்பைப் பொத்தி வைத்துப் பாதுகாப்பது அவருக்காகத்தானே... அதை அவர் கேட்டால் கொடுக்க எனக்கு என்ன தயக்கம் வேண்டியிருக்கிறது... என் மனதில் அவரை அழுத்தமாய்ப் பதிந்து இருக்கும் போது, உடலை மட்டும் வேறு ஒருவனுக்கா கொடுக்கப் போகிறேன்.

அவர் என்னைத் திருமணம் செய்யலைனாலும் அவர்தான் எனக்கு உயிர் மூச்சு... இருந்தாலும் திருமணத்துக்கு முன் எல்லை மீறுவது எனக்குப் பிடிக்க வில்லை... ஆனால் என்னைக் கேட்பது என் உயிரா யிற்றே...?'

இதைப் படித்தபோது உதய்யின் கண்கள் கலங்கி நெஞ்சில் வேதனை ஏறியது. இந்தளவுக்குக் காதலித் தவளைக் கைவிட வேண்டிய துர்பாக்கியமான தன் நிலையை எண்ணி இப்போது மனதுக்குள் புழுங்கினான்.

சிறிது நேரம் அமைதியாய் இருந்தவன் மனதைச் சரி செய்து கொண்டு மேலே படிக்க ஆரம்பித்தான்.

மேலே அவனும் அவளும் காதலித்த நாட்களை அவள் சுவைபட எழுதியிருந்தாள்... அவளின் ஒவ்வொரு வார்த்தையிலும் உதய் இருந்தான். அவளின் ஒவ்வொரு மூச்சிலும் அவன் கலந்திருப்பதை அவன் உணர்ந்தான். கடைசியில் அவன் மனதைக் கனக்கச் செய்யும் அந்தப் பகுதி வந்தே விட்டது...

'எத்தனை நம்பினேன் அவனை... என்னை மீட்க வந்த ரட்சகனாக அவனை எண்ணினேனே... கடைசியில் அவனும் எல்லா ஆண்மகன் போல் அவனது குடும்பம், அவனது தங்கை என்று போய் விட்டானே... எனக்கு மட்டும் ஏன் இந்தச் சாபம்...? வாழ்க்கையில் நல்ல ஆண்களைச் சந்திக்கக் கூடாது என்ற வரத்தை வாங்கிக் கொண்டு பிறந்து விட்டேனோ... இல்லை, இல்லை. அவன் நல்லவன் தான்... என்னை எனக்காகக் காதலித்தவன் தான்....

அன்று வைர மோதிரம் போட்ட போது கூட அவன் அதை வேண்டாம் என்று மறுத்தவன் தானே... அப்போது கூட என் குடும்பப் பின்புலத்தையோ, இல்லை என் வசதி வாய்ப்பையோ பற்றி ஒரு வார்த்தை அவன் கேட்க வில்லையே...! இந்த உமாவை அவளுக்காகக் காதலித் தவன்... ஏன் தங்கைக்காகப் பின்வாங்கினான்...?

அப்போ என்னை விட அவனுக்கு அவன் தங்கை தான் முக்கியமாய்ப் போயிற்றா...? அதுக்காகக் காதலித்தவளை மனதில் மனைவியாய் வரித்தவளை நொடியில் அவனால் எப்படித் தூக்கிப் போட முடிந்தது...?

அதைப் படிக்கும் போதே அவனது கண்கள் கலங்கின.

"இல்லைடி. சங்கீயை விட நீதான் எனக்கு முக்கியம்... அன்னைக்கு நான் என்ன மாதிரி தவிச் சேன்னு எனக்கு மட்டுந்தேன் தெரியும்..." அவளுக்குக் குறையாத வேதனையில் அவனும் புலம்பினான்.

'இறுதியில் அப்பாவுக்கும் எனக்கும் நடந்த யுத்தத்தில் அப்பாவே வெற்றி கொண்டார். நான் தோற்றுப் போய் விட்டேன்... மிகவும் மோசமாக... அதுவும், நான் உயிருக்கு உயிராய்க் காதலித்த காதலனாலேயே... வேறு வழியின்றி அம்மாவின் உயிரைக் காப்பதற்காக மனதைக் கல்லாக்கிக் கொண்டு நிச்சயத்திற்குத் தயாரானேன்.

ஆனால் அங்கு அப்பா பார்த்த மாப்பிள்ளையாக உதய்யைக் கண்டதும் நான் அடைந்த சந்தோஷத்திற்கு அளவே இல்லை... அந்த நொடி எல்லா மனஸ்தாபத் தையும் மறந்து அவரது நெஞ்சில் சாய்ந்து ஒரு மூச்சு ஓவென அழணும் போலிருந்தது... அன்று அவர் அவ்வளவு கோபமாய் பேசிய போதும், அப்பாவிடம் என்னை விட்டுக் கொடுக்காமல் நடந்து கொண்டது மனதுக்கு இதமாக இருந்தது.

அதை விட அவர் கொடுத்த முத்தம் என் இதயத்தின் ஆழ்வரை ஊடுருவிச் சென்று என்னை மயக்கியது. இந்தத்

தைரியம், தெனாவெட்டு என்னை அவரிடத்தில் மயங்கச் செய்தது என்னவோ உண்மைதான்... ஏனோ அதை ஒத்துக் கொள்ளத்தான் மனம் வரவில்லை...'

அவனுக்குமே அந்த இதழொற்றல் நல்ல ஞாப கத்தில் இருந்தது... ஒரு பெண்ணின் அருகாமை, முதல் முத்தம் அது தரும் கிறக்கம்... இதுவரை அனுபவித்து அறியாத புதுமை உணர்வு அவனையும் தாக்கத்தான் செய்தது. அதை நினைத்தவனுக்கு அன்றைய நாளின் கிறக்கத்தில் மனம் கிடந்து தவித்தது. வலுக்கட்டாயமாய் அதை ஒதுக்கி வைத்து விட்டு மீண்டும் படிக்க ஆரம் பித்தான்.

'திருமணம் நல்லபடியாக முடிந்ததில் மனதில் மகிழ்ச்சியோடு இருந்த நேரத்தில்... ஹரி பேசியது கேட்டு எனக்கு அதிர்ச்சியாய் இருந்தது... எங்கே மீண்டும் தங்கைக்காக உதய் என்னைக் கைவிட்டு விடுவாரோ என்ற பயத்தில் என் மனம் படபடவென அடித்துக் கொண் டது... ஆனால் அந்த இடத்தில் என்னை விட்டுக் கொடுக் காமல் பேசி என் மனதைக் குளிர வைத்து விட்டார் என்னோட மச்சான்...

இது போதும். இந்தப் புரிதல் போதும் என்று நான் சந்தோசப்படும் போது அந்த ஹரியுடன் உதய் கொஞ்சிக் குலாவிக் கொண்டிருக்கிறார். அவன் மன்னிப்புக் கேட்டா எல்லாம் சரியாப் போச்சா... உதய் உங்களை...'

நிச்சயம் இந்த இடத்தில் உமா தன் பல்லைக் கடித்து இருப்பாள் என்று கற்பனை செய்து பார்த்தவனுக்குச் சிரிப்பு வந்தது.

‘எல்லாவற்றையும் மறந்துட்டு வாழச் சொல்றாரு... எப்படி மறக்க முடியும்...? உதய் மட்டும் என் அப்பா பார்த்த மாப்பிள்ளையாக இல்லாமல் இருந்தா என் நிலை...? அதைக் கொஞ்சம் கூடப் புரிஞ்சிக்காம பேசுறாரு...

‘நேற்று மீனாட்சி அம்மன் கோவிலுக்குப் போயிட்டு வந்ததுல இருந்து உதய் பார்வையில் ஒரு மாற்றம் தெரியுது... ஆனாலும் அதுவும் பிடிக்கத்தான் செய்யுது. இன்னைக்கு என்னோட ஃபேக்டரிக்கு வந்து அப்பா வசம் இருந்த எல்லாக் கணக்கு வழக்குகளையும் என்னிடம் கொடுத்துட்டார்... இப்போ உதய்யை எனக்கு ரொம்ப ரொம்பப் பிடிச்சுப் போச்சு... ஐ லவ் மை மேன்...

‘இன்று அப்பா உதய்யை அடியாள்னு சொல்லிக் கேவலப்படுத்திட்டார்... அதை உதயும் நம்பியது தான் கொடுமை... அவருக்கு என்னைப் பற்றித் தெரியாதா... என் அப்பாவைப் பற்றித்தான் தெரியாதா...? ஏன் இப்படி நடந்து கொள்கிறார் என்று எனக்கு வருத்தமாக இருந்தது.

அவர் பேப்பரை எடுத்து எழுதும் போது என்னை டைவர்ஸ் பண்ணப் போறாரோன்னு ஒரு நிமிஷம் பயந்து போயிட்டேன்...

‘சொத்துக்களைக் கொடுத்துட்டு உனக்கும் எனக்கும் ஒத்து வராதுன்னு அவர் சொன்னப்போ... நான் உயிரோடு செத்துப் போனேன். அந்த நிமிடம் முடிவு செஞ்சேன்... அவரை விட சொத்தா முக்கியம்னு... இந்தச் சொத்து எதுவும் எனக்கு வேண்டாம்... என் உதய் மட்டும் எனக்குப் போதும். என்ன ஒண்ணு... அப்பா அவர் போட்ட

சவாலில் வெற்றி பெற்றுவிட்டார்... ஆனா, நான் என் வாழ்க்கையில் வெற்றி பெற்று விட்டேன்... திரும்ப அந்தச் சொத்துக்களை என்னிடம் மீட்டுக் கொடுத்த உதய்யைப் பார்த்து எனக்குப் பெருமிதமாய் இருந்தது... இவர் என் கணவர் என்று...

'அந்தச் செல்வி என்னைய விட அழகா இருப் பாளோ... இந்தக் கேள்விதான் நாள் பூரா என் மண்டையைக் குடைஞ்சது... அவளை நேரில் பார்த்த வுடன் மனசுல இருந்த பாரம் அப்படியே இறங்கிருச்சு... அதை விட உதய் சொன்ன வார்த்தையில் அந்தச் செல்வி என் கண்ணுக்கு அவ்வளவு அழகாய்த் தெரிந்தாள்... உதய் மனதில் நான் மட்டும்தான் என்கிற நினைப்பில் எல்லாமே எனக்கு அழகாய்த்தான் தெரிந்தது...

'இன்னைக்கு ஹரி வீட்டுப் பால் காய்ச்சுக்குப் போகிறோம்... கிளம்பிய நேரத்தில் இருந்து மச்சான் முகம் சரியே இல்லை... அது எதனாலன்னு தெரிஞ்சாலும் நான் எதையும் கேட்கல... பின்னே நான் செல்வி எப்படி இருப்பானு கேட்டதுக்கு, அவர் மட்டும் பதில் சொல்லல இல்ல... அதான் பழிக்குப் பழி... ஹா...ஹா...

அங்கே ஹரி என்னைப் பார்த்துப் பேசியதும் உதய் முகம் போன போக்கைப் பார்த்ததும் எனக்குச் சிரிப்பு வந்தது. உதய்க்காக ஹரி, சங்கீதா கிட்ட பேசினேன். அவங்க இரண்டு பேராால என் வாழ்க்கைப் பாதை மாறிப் போக இருந்ததை என்னால மன்னிக்க முடியல... ஆனாலும் உதயோட காதலுக்காக அவங்க பண்ணியதை

மறக்கப் பார்க்கிறேன்... மறந்திருவேன்னு நினைக் கிறேன்... ஏன்னா ஐ லவ் உதய்...

'உதயோட கையில் கட்டைப் பார்த்ததும் நான் ஒரு டாக்டர்ங்கிறதைக் கூட மறந்து துடிச்சுப் போயிட்டேன்... இந்த மாதிரிச் செஞ்சவனைப் போலீசில் பிடிச்சுக் கொடுக்க வேண்டாமா? ஆனா, உதய் இதை வேற மாதிரி டீல் பண்ணணும்னு சொல்றாரு... என்ன டீலிங்கோ... எனக்கு ஒரு இழவும் புரியல... எனக்குப் பயமா இருந்தது. அதான் மறுநாள் போலீஸ் ஸ்டேசன் போனேன். ஆனா இதைச் செய்தவன்... என் அக்காவைக் கொன்ன படுபாவி என்பதை நான் எப்படி உதயிடம் சொல்ல முடியும்... அவன் உதய்யை ஏதும் செய்துவிட்டால்...? அந்தப் பயத்தில்தான் கேஸை வாபஸ் வாங்கிட்டு உதய்யை இழுத்துக் கொண்டு வீட்டுக்கு வந்துட்டேன்.'

இதைப் படித்த உதய் அதிர்ந்து போனான்... ராஜரத்தினமா உமாவின் அக்காவைக் கொன்றது... அவனால் நம்ப முடியவில்லை. ஏனெனில் சின்னச் சின்ன அடிதடிப் பஞ்சாயத்து நடத்திக் கொண்டு இருப் பவன் இந்த ராஜரத்தினம்... இப்போதே அந்த ராஜரத்தினம் கையில் கிடைத்தால் கொன்றுவிட வேண்டும் என்ற வெறி அவனுள் எழுந்தது.

அடுத்து அவள் எழுதி இருப்பதன் மேல் கண்ணைப் பதித்தவன் நெருப்பின் மீது நிற்பது போல் துடித்துப் போய்விட்டான்.

'கடைசியில் என் அப்பாவைப் போல் உதய்யும் என்னைப் பைத்தியம் என்று சொல்லி விட்டார். அதைத்

தான் என்னால் தாங்க முடியவில்லை... நான் பைத்தியமா உதய்...? ஆம், ஒரு விதத்தில் நான் பைத்தியம்தான்... உங்கள் மேல் பைத்தியக்காரத்தனமான காதல் வைத்திருக்கிற நான் பைத்தியம் தான்...'

அந்தப் பக்கத்தில் சில சொட்டுக்கள் கண்ணீர் விழுந்து காய்ந்த கறை அப்பட்டமாய்த் தெரிந்தது... அதைக் கண்டு உதய்யின் கண்களிலும் மெல்லிய நீர்ப் படலம்.

'உயிருடன் துடிக்கத் துடிக்க
சிலுவையில் அறைந்த போதும்
வலிக்கவில்லை எனக்கு...
குற்றுயிராய்ச் சவப்பெட்டியில் வைத்து
அடக்கம் செய்த போதும்
வலிக்கவில்லை எனக்கு...
உயிர்மூச்சுக்கு ஏங்கித் தவித்த போதும்
வலிக்கவில்லை எனக்கு...
ஆனால் உன் ஒற்றை வார்த்தை
என்னை உயிரோடு கொன்ற போது
வலித்ததடா எனக்கு...
உயிர் போகும் வேதனையை
நான் உணர்ந்தேனடா...!
கோபத்தில் வரும் வார்த்தைக்கு
அர்த்தம் கிடையாதுதான்...

ஆனால் உன் கோபம் எனக்கு
ஆயிரம் அர்த்தம் கொடுக்கும்
அந்த ஆயிரம் அர்த்தம் எனக்கு
லட்சம் வலிகளைக் கொடுக்கும்
அதை நீ எப்படி மறந்தாயடா...!'

உமாவின் இந்த வரிகளில் உதய்யின் கலங்கிய கண்கள் கண்ணீரைச் சொட்டியது. தான் கண்ணீர் வடித்ததை நம்ப முடியாமல் தன் கை மீது விழுந்திருந்த கண்ணீர்த் துளிகளை வியப்பாய்ப் பார்த்தான். அவனுக்கே தன் கண்ணீரைக் கண்டு வெட்கமாய்ப் போய் விட்டது...

அவசரமாய் அதைத் துடைத்தவன் அந்தப் பக்கத்தைத் தன் நெஞ்சோடு அணைத்துக் கொண்டு கண்களை மூடிக் கொண்டு அமைதியாய் அமர்ந்திருந்தான்.

ஏனோ அவனுக்கு அந்த அமைதி தேவைப்பட்டது, அவள் எழுதிய விஷயங்களை ஜீரணிப்பதற்கு...

உமாவின் துன்பங்களை எண்ணிப் பார்த்தவனுக்குத் தன் மேலே சிறிது கசப்புணர்வு வரத்தான் செய்தது. ஏற்கெனவே தந்தையால் வாழ்க்கையில் மிகுந்த அடிபட்டு இருப்பவளுக்குத் தானும் அதிக துன்பத்தைக் கொடுத்து விட்டதை நினைத்து உள்ளுக்குள் மருகினான்.

அவனைப் பொருத்தவரையில் காதல் என்றால் அழகான பெண்ணைக் கண்டதும் மனதுக்குப் பிடித்துப்

போய் சிறிது காலம் அவளுடன் ஊர் சுற்றி விட்டுப் பின் அவளை மணந்து, எல்லோரையும் போல் மணவாழ்க் கையில் இணைவது... பெற்றோர் பார்த்த பெண்ணாக இருந்தாலும் அவனைப் பொருத்தவரையில் வாழ்க் கையைப் பற்றிய அவனது கண்ணோட்டம் இதுதான்...!

உமா அவனைக் காதலித்தது போல் உருகி உருகிக் காதலிப்பது என்பது எல்லாம் அவனுக்குத் தெரியாத விஷயம் மட்டுமல்ல... அது அவனுக்கு ஒவ்வாத விசயமும் கூட... உமாவை போல் காதலை மனம் சார்ந்ததாய்ப் பார்க்காமல் அவன் காதலை உடல் சார்ந்ததாய்ப் பார்த் திருந்தான்.

இரு மனம் இணைந்து இறுகிப் பின்னிப் பிணைந்து வரும் காதல் எந்தவ.ாவுக்கு அசைக்க முடியாததாய் சக்தி வாய்ந்ததாய் இருக்கும் என்பதை மனைவி தன் மேல் வைத்த காதல் மூலம் தெரிந்து கொண்டவனுக்கு அந்த வானத்தை வசப்படுத்திய உணர்வு...!

காதலிப்பதை விடக் காதலிக்கப்படுவது அதிக சுகம் என்று அவனது அனுபவித்த இதயம் கூறியது... அதே மாதிரிக் காதலைத் தன்னவளுக்குத் தரவும் அவனது காதல் மனம் ஆசை கொண்டது... இனி வரும் காலம் தன் அன்பால், காதலால் கண்ணின் இமை போல் அவளைப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று மன துக்குள் உறுதி எடுத்துக் கொண்டான். அவளைப் போல் தன்னலமில்லாக் காதலைத் தான் கொடுக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டவன் மனதில் மனங்கவர்ந் தவளின் எண்ண ஊர்வலமே...

அவளது நாட்குறிப்பேடைத் தான் எடுத்துப் படித்த சுவடு இல்லாமல் எடுத்த இடத்தில் அப்படியே வைத்து விட்டு வந்து படுத்தவன் மனதில் அவளுக்கான நியாயம் வழங்கத் தன்னால் என்ன செய்ய முடியும் என்று யோசித்தான்...

எல்லாவற்றையும் வழக்கறிஞராய் அலசி ஆராய்ந்து யோசித்துப் பார்த்தவனுக்கு, இப்போது மாயா கொலைக்கான ஆதாரமாய் அவன் கையில் இருக்கும் ஒரே துருப்புச் சீட்டு ராஜரத்தினம் மட்டும்தான். அவனை வைத்து என்ன செய்யலாம்...? அவனை எப்படி அணுகினால் இந்தக் காரியம் வெற்றி பெறும் என்று பல முறை யோசித்துப் பார்த்தவனுக்கு ஒரு திட்டம் மனதில் பளிச்சிட்டது.

அதைச் செயல் படுத்தும் விதத்தை எண்ணிக் கொண்டு படுத்தவனைத் தூக்கம் சுகமாய்த் தழுவிக் கொண்டது. மனதில் நிறைந்த காதலுடன் நிம்மதியான ஆழ்ந்த நித்திரையில் ஆழ்ந்தான் உதய்.

மறுநாள் பொழுதை வெட்டியாய் நெட்டிக் கழித்த வனுக்கு, எப்போதடா மாலை வரும்... எப்போதடா உமாவைக் கண்ணால் காண்போம் என்று இருந்தது.

அதைக் கண்ட அழகு கூட கேலி செய்து சிரித்தான்.

"என்ன மச்சான்... தங்கச்சியக் காணாம இடுப்புப் பெல்ட் கூட லூசாகிருச்சு போல...?"

எங்கோ யோசனையில் இருந்த உதய் குனிந்து, தனது பெல்ட்டைத் தொட்டுப் பார்த்தவன், "டேய், எல்லாம்

சரியாத்தான்டா இருக்கு. லூசு..." நேரம் செல்லாத கடுப்பில் அழகைப் பார்த்து முறைத்தான்.

"இது கன்ஃபார்மா பசலை நோய்தான்..." என்றவன் தான் சொன்னதை உவமான உவமேயங்களுடன் உதய்க்கு விளக்க... அதைக் கேட்டு அசடு வழிந்தான் உதய்.

"என்னய பார்த்தா அப்படியா தெரியுது அழகு..." என்றவனைப் பார்த்த அழகு அவனின் தோற்ற வித்தியாசத்தை ஆராய்ந்தான்.

முகம் சூரியனைப் போல் பிரகாசமாய் இருந்தாலும் மழிக்கப்படாத தாடியும், உயிர்ப்பை இழந்தார் போன்ற கண்களும் அவனது மனதை எடுத்துச் சொன்னது.

"ஒரு ரெண்டு நாள் பார்க்காம இருந்ததுக்கே இப்படியாகிட்டீங்களே மச்சான்... இதுல நீங்க வேற பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கப் போறதா வீஞ்சிக்கிட்டு போனீங்க...?" இடக்காய்க் கேட்டவனின் வார்த்தையில் உதய்யின் முகம் இறுகிப் போனது.

அதைக் கண்டு பதறிப் போனான் அழகு. "சாரி மச்சான்... நான் தெரியாம..."

"இல்ல அழகு... நீ சொல்றது நெசந்தேன்... முட்டாள்தனமா எவ்வளவு பெரிய காரியம் பண்ண இருந்தேன். என் மேல உயிரையே வச்சிருக்கிறவளைப் பிரிய நெனச்ச நான் முட்டாள் தான்டா அழகு... உன் தங்கச்சி காதல் முன்னாடி என் காதல் எல்லாம் தூசுடா...

காதல்னா என்னன்னு எனக்கு அவ காட்டிட்டா... அதே மாதிரி என் காதலையும் அவளுக்கு உணர்த்தணும்டா அழகு..." என்று உணர்ச்சி வசப்பட்ட உதய்யைப் புரியாமல் பார்த்தான் அழகு.

உதய் உமாவைப் பற்றி எல்லாவற்றையும் சொல்லச் சொல்ல... அழகுவின் முகம் மாறியது. கலகலப்பான உமாவுக்குள் இத்தனை சோகங்களா என்று துடித்துப் போனான், ஒரு சகோதரனாய்...!

"மச்சான், அந்தப் பாவியைக் கொன்னாத்தான் என் தங்கச்சி மனசு ஆறும்னா அவனை இப்பவே நான் கொன்னுப் போட்டுடறேன்..." உதடுகள் துடிதுடிக்கக் கூறியவனின் பாசம் உதய்யின் மனதைத் தொட்டது.

தனது நாற்காலியில் இருந்து வேகமாய் எழுந்து வந்தவன் அழகை நெகிழ்ச்சியுடன் அணைத்துக் கொண் டான். பின், "அதெல்லாம் வேணாம் அழகு..." என்றவன், தன் திட்டத்தை எடுத்துச் சொல்ல, அழகின் முகம் ஆயிரம் வாட்ஸ் பல்ப் போல் பிரகாசமானது.

"இதுல நான் என்ன செய்யணும், மச்சான்... சொல்லுங்க. என் தங்கச்சிக்காக எதையும் நான் செய் வேன்..." இலங்கைக்குப் பாலம் கட்ட ராமருக்கு உதவிய அணிலைப் போல் தானும் உமாவுக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்று எண்ணினான்.

"நீதான்டா இதுல முக்கியமானவன்..." என்ற உதய் மேலே சொல்லச் சொல்ல அழகின் முகம் மகிழ்ச்சியைத் தத்தெடுத்தது.

"வெற்றி உங்க பக்கம்தான் மச்சான்..." என்றவன் உதய்யைப் பார்த்து, "நீங்க வீட்டுக்குக் கௌம்புங்க மச்சான்... இப்படி அழுது வடியாமப் போய்ச் சவரம் எடுத்துட்டுக் குளிச்சிட்டு ஹேண்ட்சம்மா என் தங்கச்சியைப் பார்க்கப் போறீங்க... ஓடுங்க..." என்று விரட்ட...

"ஏன் சேவ் பண்ணலன்னா உன் தங்கச்சி என்னை வேணாம்னு சொல்லிடுவாளாக்கும்..." தாடையில் முள்ளாய் நீட்டிக் கொண்டிருந்த முடியைத் தடவிக் கொண்டு கேட்டவனைக் கண்டு,

"உம் சொல்லியிருக்கணும்... ஆனா அந்தப் பைத்தியக்காரப் புள்ள அப்படி என்னத்த உங்ககிட்ட கண்டதுன்னு விடாப்பிடியா பைத்தியமா உங்களை லவ் பண்ணுதுன்னு தெரியலையே...!"

கேலியாய்ச் சொன்னவன் முதுகில் இரண்டு தட்டு தட்டிய உதய், "உனக்கு இருக்கிற வாய்க்கு... கலை கிட்ட சொல்லி உன் வாயைத் தைக்கச் சொல்றேன்..."

கலையைப் பற்றிச் சொன்னவுடன் அழகின் முகம் பிரகாசமானது.

"போங்க மச்சான்..." என்று அழகாய் வெட்கப் பட்டான்.

அவன் வெட்கத்தைக் கண்டு சிரித்த உதய், அதே சிரிப்புடன் அங்கிருந்து கிளம்பினான்.

உமாவை அழைத்துச் செல்வதற்காக அவள் வரும் நேரத்திற்கு முன்பே மருத்துவமனை முன்பு வந்து காத் திருந்தான் உதய். புதிதாய்க் காதலில் விழுந்த விடலைப்

பையன் போல் மனம் முழுவதும் பரபரப்புடன் நின்றிருந்தவன்... தன்னை நினைத்துத் தனக்குத் தானே ஆச்சரியப் பட்டுக் கொண்டான்.

'அடேய்! மீசையைத் திருகி விட்டுட்டு தெனாவெட்டா திரிஞ்ச பயலடா நீ...? நீயா இப்படி ஒரு பொட்டப்புள்ளைக் காக ஏங்கிக்கிட்டு நிக்கற...?' அவனது மனசாட்சியே அவனைப் பார்த்து அதிசயித்து அங்கலாய்த்தது.

அவனைத் தவியாய்த் தவிக்க விட்டு விட்டு சரியாக ஏழு மணிக்கு வந்து சேர்ந்தாள் உமா. மருத்துவமனை நிர்வாகமே பேருந்து ஏற்பாடு செய்திருந்ததால் நேரே மருத்துவமனைக்குத்தான் வந்திறங்கினார்கள்.

உதய்யை அங்கே கண்டதும் ஒரு கணம் அவளது விழிகளில் வியப்பு வந்து போனது. அவசரமாய் ஜெயஸ்ரீ யிடம் விடைபெற்று வேக நடையுடன் அவனை நோக்கி வந்தாள்.

அவன் அருகில் வந்தவளுக்கு பேச நா எழ வில்லை... அவளது கண்களில் கண்ணீர் உருண்டோடியது. இரண்டு நாளாய் நிழற்படமாய் அவளோடு இருந்தவனின் நிஜ உருவத்தைக் கண்ணுக்குள் நிரப்பி... நிரம்பி வழிந்த மிச்சத்தை வீணாகி விடுமோ என்ற அச்சத்தில் வேகவேகமாய் இதயத்திற்கு அனுப்பினாள்.

அவனைக் காணாது வறண்டிருந்த அவளது இதயம் அவன் பிம்பத்தை ஆழமாய்த் தன்னுள் புதைத்து வைத்துக் கொண்டது. பாலை நிலம் மழை நீரை வேகமாய்க் கிரகித்துக் கொள்ளுமே, அது போல்...!

அவனும் அத்தனை நேரம் இருந்த துடிப்பு எல்லாம் அடங்கித் தன் முன் நின்றவளைப் பார்வையாலேயே அள்ளிப் பருகினான். இரு நாள் அலைச்சலில் உடல் சோர்ந்து காணப்பட்டாலும்... தன்னைக் கண்டதும் அவளது விழிகளில் வந்த வெளிச்சத்தைக் கண்டவன் மனதிலும் வெளிச்சம் பரவியது.

பிரிந்தவர்கள் மீண்டும் கூடியதால் அங்கு வார்த்தை களற்ற மௌனமே அரசாண்டது. மனதின் காதலை இரு கண்களும் பேசிக் கொண்டது, ஒலி வடிவம் இல்லாத மொழியால்... இது காதலர்களுக்கு மட்டுமேயான பிரத்யேக மொழி...

"உமா நல்லாயிருக்கியா...?" முதலில் அவன் தான் மௌனம் கலைத்தான்.

அதற்குத் தலையை மட்டும் ஆட்டியவளுக்குப் பேச நா எழவில்லை.

"பேக்கைக் கொடு..." அவன் தன் கையை நீட்ட, எதுவும் பேசாமல் அவனிடம் பையைக் கொடுத்தாள்.

பையை வண்டியின் முன்புறம் வைத்தவன், தானும் ஏறிக் கொண்டு அதை உதைத்து உயிர்ப்பித்தபடி அவளைப் பார்த்தான். அவனது பார்வையை உணர்ந்த வளாய் ஏறியமர்ந்தவளின் ஒரு கையை எடுத்துத் தன் தோளில் வைத்தவன், மறு கையை எடுத்துத் தன் இடுப்பில் வைத்துக் கொண்டவன், பின்னால் நகர்ந்து அவளை ஒட்டியபடி அமர்ந்தான்.

அதில் அவஸ்தையாய் நெளிந்தவளைக் கண்டு வாய் விட்டுச் சிரித்தவன் தனது மகிழ்ச்சியை வண்டியிடம் காட்ட, அது காற்றாய்ப் பறந்தது அவனது மனதைப் போல...!

அவனது சிரிப்பு அவளது மனதில் பல மாயங் களைச் செய்தது என்னவோ உண்மை.

வீட்டிற்கு வந்த பின்பும் விடாமல் அவளைத் துரத்திய அவனது பார்வை வித்தியாசமாய் இருந்தது அவளுக்கு...

'என்னவானது இவருக்கு...?' மனதில் கேள்வி முளைக்கக் குழப்பத்துடன் அறைக்குள் சென்றவள் நேரே குளியலறைக்குள் புகுந்து கொண்டாள்.

வரவேற்பறையில் தந்தையுடன் அமர்ந்து பேசிக் கொண்டிருந்த உதய்யின் மனம் தன்னவள் மீதே இருந்தது. முதன் முறையாய்க் கூட்டுக் குடும்பமாய் இருப்பதை வெறுத்தான் அவன்.

இரவு உணவு உண்ண அன்னை அழைத்த போதும் பொழுதை வேகமாய் நகர்த்தாமல் அடம் பிடிக்கும் கடிகார முள்ளை மனதுக்குள் சபித்தபடி உணவு உண்ணச் சென்றான்.

அங்கே குளித்து முடித்துப் புத்தம் புது மலராய் நின்றிருந்த மனைவியைக் கண்டதும், அவனது முகம் மலர்ந்தது. அவன் அருகில் வந்து அவள் பரிமாறும் போது, அவளிடம் இருந்து வந்த அவளது பிரத்யேக வாசனை அவனைக் கிறக்கியது.

வானத்தில் மிதப்பது போன்ற உணர்வுடன் உண்டு முடித்தவன் யாரிடமும் பேசத் தோன்றாமல் அறைக்குள் சென்று முடங்கிக் கொண்டான், தனது இதய தேவதையின் வரவிற்காக...!

அந்நேரம் அவர்களின் வீட்டுத் தொலைபேசி அடித்தது. எடுத்துப் பேசிய தங்கவேலுவின் முகம் மலர்ந்தது.

"ஏத்தா ஈசு... இங்கே வாத்தா... சங்கீ பொண்ணு உண்டாகியிருக்காம்..." மனைவியைச் சத்தமாய் அழைத்துத் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார் அவர்.

"ஆத்தா மீனாட்சி... கண்ணைத் தொறந்துட்டே..." என்றபடி உணவு உண்ட கையைக் கூடக் கழுவாமல் அங்கே விரைந்து வந்த மாரீஸ்வரி மகளிடம் சந்தோஷத்துடன் உரையாடினார்.

சங்கீதா குழந்தை உண்டாகி இருக்கும் விசயம் கேள்விப்பட்ட உதய், உடனே அங்கு வந்தவன் தங்கையிடம் நலம் விசாரித்தான். எல்லோரும் பேசி முடித்த பின் உமாவிடம் தொலைபேசி நீட்டப்பட, அதை வாங்கிய உமா சந்தோசத்துடன்,

"கங்கிராட்ஸ் அண்ணி..." என்று மனமார வாழ்த்தியவள்... ஒரு மருத்துவராய் இந்த மாதிரி நேரத்தில் சங்கீதா பின்பற்ற வேண்டிய வழிமுறைகளை எடுத்துச் சொல்ல அதில் சங்கீதாவின் மனம் நெகிழ்ந்தது.

"உங்களை மாதிரி ஒரு அண்ணியை எங்கண்ணன் கிட்ட இருந்து பிரிக்கப் பார்த்தேனே அண்ணி..." என்று சங்கீதா கண் கலங்கி விட்டாள்.

"அண்ணி, இந்த மாதிரி நேரத்துல சந்தோஷமா இருக்கணும். அதுதான் முதல் கண்டிஷனே..." என்று மருத்துவராய்க் கடிந்தாள் உமா.

நடந்து முடிந்ததை யாராலும் மாற்ற முடியாது. அதைப் பற்றிப் பேசி வருத்தப்பட்டு சங்கீதாவின் மன வேதனையை அதிகரிக்கச் செய்ய அவளுக்குமே விருப்ப மில்லை.

"இல்லங்கண்ணி... என்னோட சுயநலத்தால உங்க காதலைப் பிரிக்கப் பார்த்த பாவி நான்..." என்று அழுத சங்கீயால் அதற்கு மேலே பேச முடியவில்லை. அவளிடம் இருந்து அலைபேசியை வாங்கிய ஹரி உமாவிடம்,

"அதுக்கு நான்தான் காரணம் உமா..." என்க...

முதலில் அதைச் சாதாரணமாக எடுத்துக் கொண்ட உமா... ஹரி அதற்கான காரணத்தை முழுவதும் சொல்லி முடித்த போது அவள் கண்கள் கலங்க... தன் கணவ னைத் திரும்பிப் பார்த்தாள்.

உமாவின் பார்வை புரியாது, அவளிடம் என்ன என்று விழிகளால் கேட்டவனிடம், 'ஒன்றுமில்லை' என்பது போல் தலையாட்ட, அதில் அவளது கண்களில் தேங்கியிருந்த கண்ணீர்த் துளி கன்னங்களில் உருண் டோட, அதைக் கண்டதும் பதறியவனாய் உதய் அவள் அருகில் வந்து நின்று ஆறுதலாய் அணைத்துக் கொண் டான்.

மனைவியின் துன்பம் முன் தனது பெற்றோர் அங்கிருப்பது கூட அவனுக்குப் பின்னுக்குத் தள்ளப்

பட்டது. அவனின் செய்கையில் அவள்தான் சங்கோஜம் அடைந்தாள்.

"இப்போ எனக்கு எல்லாம் புரியுது. அவர் காரணம் இல்லாம ஒரு செயல் செய்ய மாட்டார்னு நான்தான் யோசிக்கலை. நான்தான் அவரைச் சரியாப் புரிஞ்சிக் கலை. தப்பு எல்லாம் என் பேரில்தான்..." ஹரியிடம் சொன்னவள், "அண்ணிகிட்ட ஃபோனைக் கொடுங்க..." என்க,

"அண்ணி, நான் எல்லாத்தையும் மறந்துட்டேன்... நீயும் மறந்திரு..." என்றவள் சங்கீ மனம் சந்தோசப்படும் படி பேசி விட்டு வைக்கும் போது உதய்க்கு எல்லாம் புரிந்து போனது.

அதற்குள் நுழைந்ததும், "உதய்..." என்று அவனைப் பாய்ந்து சென்று அணைத்துக் கொண்டாள் அவனது அருமை மனைவி.

அவளது அணைப்பில் சிறிது தடுமாறியவன் சுதாரித்துக் கொண்டு, "உம்மா..." என்று அவளை அணைத்துக் கொண்டான்.

அவனது மனதைப் புரிந்து கொள்ளாமல் தான் காயப்படுத்தியதற்கு அந்த அணைப்பு மட்டும் போது மானதாய் அவளுக்கு இருக்கவில்லை... அவனது முகத்தைத் தனது கைகளில் தாங்கி அவனது கண்களை ஊடுருவிப் பார்த்தவள்,

"சாரி உதய்..." என்றவளுக்கு, அவன் பதில் கூறும் முன் அவனது முகத்தில் தனது இதழ் முத்திரையை அழுத்தமாக பதிக்க ஆரம்பித்தாள்.

அவளது காதலில் கண்கள் மூடி கிறக்கமாய் இருந்தவனின் உணர்வுகள் அடுத்த கட்டத்திற்கு அவளை அழைத்துச் செல்ல துடித்தது. அதைச் செயலாக்க எண்ணியவனின் கைகள் அவளது இடையில் அழுத்தமாய்ப் பதிந்தும் விட்டது... எல்லாம் ஒரு கணம்தான்...

அவன் சற்று உணர்ச்சி வசப்பட்டு இருந்தாலும் அவர்களுக்குள் அழகான தாம்பத்தியம் அரங்கேறி இருந்திருக்கும்...

தன் மீது இத்தகைய காதலை வைத்திருப்பவளுக்குத் தான் என்ன செய்தோம்...? அவள் எதற்காகத் தன்னை நாடி வந்து வலியக் காதலித்தாளோ அதில் ஒன்றான அவளது சொத்துக்களைக் கைப்பற்றி அவளது ஒரு நம்பிக்கையை மட்டுமே அவன் காப்பாற்றி இருக்கிறான்...

அவளது மற்றொரு நம்பிக்கையை அவன் இன்னமும் காப்பாற்றவில்லை... அதைச் செய்து முடித்தபின் அவளது எல்லையில்லாத, ஆழமான காதல் கடலில் முக்குளிக்கப் பேராசைப் பட்டான் அந்தக் காதல் கணவன். காதலில் பேராசை கொள்வதில் எந்தத் தப்பும் இல்லையே!

உமாவை அழைத்து வரும்போது இருந்த உணர்வுகள் இப்போது அவனிடத்தில் இல்லை. அவன் மனம் தெளிவாய்ச் சிந்தித்தது.

முத்தமிட்டு முத்தமிட்டு சோர்ந்து போனவளாய், "சங்கீக்கு இப்படி ஆனதை ஏன் எங்கிட்ட சொல்லல?" கேட்டுக் கொண்டே அவனது நெஞ்சோடு ஒன்றினாள் உமா.

"இதை எப்படிச் சொல்லச் சொல்ற உமா...?"

அந்த நாட்களின் தாக்கத்தில் அவனது குரல் கரகரத்தது. அதனால்தானே தன் மீது உயிராய் இருந்த வளைப் பிரிய வேண்டியிருந்தது என்பதை எண்ணிய வனுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது.

"அதைப் புரிஞ்சிக்காம நானும் உங்களைத் தப்பாப் பேசிட்டேன்ல உதய்... ஐ அம் சாரி..." என்றவளிடம்,

'நானும் அதேபோல் உன்னைப் புரிந்து கொள் ளாமல் பேசி விட்டேன்... மன்னிச்சிக்கோ உமா...' என்று அவனால் கூற முடியவில்லை.

ஏனெனில் அதை அவன் சொன்னால் அவளது நாட்குறிப்பேட்டை அவன் படித்தது போலாகிவிடும்.... அவளது தந்தைக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்து அவளுக்கு இனிய அதிர்ச்சியாக அதைச் சொல்ல வேண்டும் என்று அவன் எண்ணினான். மாயாவுக்கான நியாயத்தைத் தான் வாங்கி வழங்க வேண்டும் என்று உறுதியாய் நின்றான்.

அதைக் கேள்விப்பட்டதும் சாசர் போல் கண்கள் விரிய ஆச்சரியத்துடன் தன்னை நோக்கும் மனைவியின் அந்தக் காதல் பார்வைக்காக அவன் எதையும் செய்யத் தயாராக இருந்தான். அதனால் இது எதையும் அவ ளிடத்தில் அவனால் வாய் விட்டுச் சொல்ல முடியவில்லை.

"நமக்குள்ள எதுக்கு உமா சாரி எல்லாம்..." என்றவன், "நேரமாச்சு தூங்கு..." என்று சொல்ல... அவனது பேச்சைக் கேட்டுத் தட்டாமல் அதைச் செய்த

வளுக்கு அவனிடம் வேறு எதையும் சொல்லத் தோணவும் இல்லை.

அவள் ஒருபுறமாகவும் அவன் மற்றொரு புறமாக வும் படுத்தவர்களின் மனதில் மட்டும் ஆயிரம் ஏக்கங்கள். அவனது கைகள் வந்து தன்னைத் தழுவாதா என்ற ஏக்கத்துடன் அவள் காத்திருக்க... அவனோ தங்களின் வாழ்வுக்கான விடியல் எப்போதோ என்ற ஏக்கத்துடன் தூங்காமல் விழித்திருந்தான்.

வெகு நேரம் சென்றும், அவன் தன்னருகில் வராததைக் கண்டு அவளது கண்கள் சத்தமின்றி கண் ணீரை உகுத்தது.

தன் தந்தை சொன்ன வார்த்தைகள் அவனை மிகவும் காயப்படுத்தி இருப்பதாய் நினைத்தவளுக்குத் தனது காதலை எப்படி நிரூபிப்பது என்று தெரியாமல் குழம்பிப் போய் தவித்தாள்.

அவனோ தனது காதலை அவளுக்கு நிரூபிப்ப தற்குச் செய்ய வேண்டிய வேலைகளை மனதுக்குள் வேகமாய்த் திட்டமிட்டான்.

இருவரும் தங்களுக்குள் யோசித்துக் கொண்டே விழித்திருக்க, அந்த நேரம் அவர்களது அறைக் கதவு படபடவெனத் தட்டப்பட்டது. அதில் இருவரும் திடுக்கிட்டு எழுந்தனர்.

தூங்காமல் விழித்திருந்த தங்களது இணையின் மீது கேள்வியாய்ப் பார்வையைப் படர விட்டனர் இருவரும். உமாவின் அழுது சிவந்த விழிகளைக் கண்டு துணுக்குற்ற

உதய் அவளிடம் கேள்வி கேட்கும் முன், மீண்டும் கதவு தட்டப்பட அவன் எழுந்து சென்று கதவைத் திறந்தான்.

"குமாரு... அப்பா நெஞ்சைப் பிடிச்சிட்டுத் துடிக்கிறாரு. சீக்கிரம் உம் பொஞ்சாதிய வந்து பாக்கச் சொல்லு."

படபடப்பாய்க் கூறிய முத்து வேகமாய்த் தந்தையின் அறையை நோக்கி ஓட... உதய் சொல்லும் முன் அவசரமாய் எழுந்த உமா தனது உடையைத் திருத்திக் கொண்டு உதய்யைப் பின் தொடர்ந்தாள்...

தங்கவேலுவைப் பார்த்ததும் அவளுக்குத் தெரிந்து போனது, அவருக்கு வந்திருப்பது மாரடைப்பு என்று... மருத்துவராகப் பயிற்சி பெறும் அவளால் அதற்கு ஒன்றும் செய்ய முடியாது என்று தெரிந்திருந்தாலும் தன்னால் இயன்ற முதலுதவியை அவருக்குச் செய்தபடி கணவனைக் காரை எடுக்கப் பணித்தாள்.

உதய் வேகமாய்ச் சென்று காரை எடுக்க உமா, மாரீஸ்வரி, தங்கவேலு மூவரும் காரிலேறி மருத்துவமனைக்குப் புறப்பட... முத்துவும், நித்யாவும் அஜித்துடன் இரு சக்கர வாகனத்தில் அவர்களைப் பின் தொடர்ந்தனர்.

தக்க நேரத்தில் தங்கவேலுவைக் கொண்டு வந்து மருத்துவமனையில் சேர்த்ததில் அவரது உயிர் தப்பிப் பிழைத்தது... முதலுதவி செய்த உமாவைப் பாராட்டினார் அந்த மருத்துவர்...

"அம்மாடி உமா... என் தாலியைக் காப்பாத்திக் கொடுத்திட்ட தாயி... நீ அந்த மீனாட்சி அம்மனே தான்..."

மாரீஸ்வரி கண்களில் கண்ணீர் வழிய மருமகளை இரு கரம் கூப்பித் தொழுதுவிட்டார். கணவரின் உயிரைக் காப்பாற்றிய உமா அவரைப் பொருத்தவரையில் தெய்வம் அன்றோ...!

"அத்தே என்ன இது... பெரியவங்க நீங்க போய் இப்படி..." என்ற உமா பதறிப் போனவளாய் அவரின் கையைக் கீழே இறக்கியவள், "இது என் கடமை அத்தே..." என்க...

அதில் மனம் நெகிழ்ந்த மாரீஸ்வரி மருமகளை அன்போடு அணைத்துக் கொண்டார்.

தந்தையின் உயிரைக் காப்பாற்றிய மனைவியை பார்த்த உதய்யின் பார்வையில் நன்றியை விடப் பெரு மிதமே அதிகம் பொங்கி வழிந்தது. நித்யா கூட எந்த விதப் பொறாமையும் இன்றி உமாவை மனமுவந்து பாராட்டினாள்.

மறுநாள் தங்கவேலு கண்விழித்ததும் தான் அனை வருக்கும் நிம்மதியாக இருந்தது. தங்கவேலுவுக்கு உடல் நலம் சரியில்லாத விசயத்தை சங்கீதாவிடம் சொல்லாமல் மறைத்து விட்டனர். இந்த நிலையில் சென்னையில் இருந்து அவளை அலைக்கழிக்க யாருக்கும் விருப்பம் இல்லை.

ஆனால் அவருக்கு உடல்நலம் சரியில்லாததை எப்படியோ தெரிந்து கொண்ட உறவினர் கூட்டம் ஒவ் வொன்றாய் அவரைப் பார்க்க மருத்துவ மனைக்குப் படை யெடுத்து வந்தது.

அப்படி அவரின் நலம் விசாரிக்க வந்தவர்கள் தான் நித்யாவின் பெற்றோரும்... அப்போது சங்கீதாவைப் பற்றிய பேச்சு வந்ததும், மாரீஸ்வரி மகள் குழந்தை உண்டாகி இருப்பதைச் சந்தோசத்துடன் தெரிவித்தார்.

"ஆமா, எங்க செல்வி கூட கொழந்த உண்டாகி யிருக்கா அண்ணி..." என்ற நித்யாவின் அம்மா, அங்கு தங்கவேலுவின் இரத்த அழுத்தத்தைப் பரிசோதித்துக் கொண்டிருந்த உமாவைப் பார்த்தபடி,

"எல்லாம் சரிதான் அண்ணி... உங்க மருமவ எப்போ உண்டாகப் போறா...? இவங்க கூடக் கல்யாணம் பண்ண சங்கீ உண்டாகிட்டா... இவங்களுக்கு அப்புறம் கல்யாணம் பண்ண செல்வி கூட முழுகாம இருக்கா... எதுக்கும் உங்க மருமவள டாக்டர் கிட்ட காண்பியுங்க... ஏதாச்சும் கொறை இருக்கப் போவுது...

"இதுக்குத்தே எங்க செல்வியைக் குமாருக்குக் கட்டுங்கன்னு தலைப்பாடா அடிச்சிக்கிட்டேன்... கட்டி யிருந்தா இந்நேரம் குமாரு கொழந்தைய செல்வி சொமந்திருப்பா..."

தங்கள் வீட்டுப் பெண்ணைக் கட்டவில்லை என்ற ஆதங்கத்தில் நித்யாவின் அம்மா சற்றே அதிகப்படியாய்ப் பேசி விட்டார்.

குனிந்து இரத்த அழுத்தத்தைப் பரிசோதித்துக் கொண்டிருந்த உமா நிமிரவே இல்லை... அவளது கண்கள் கண்ணீரைச் சொரிந்தன.

அவளது முகத்தைப் பார்த்த தங்கவேலு 'அழாதே!' என்பது போல் தலையை அசைக்க...

அவரின் உடல்நிலையைக் கருதித் தன் மன வேதனையை ஒதுக்கி வைத்து விட்டுப் போலியாய்ப் புன்னகைத்தாள் உமா.

அவளருகில் இருந்து ஆறுதல் படுத்த வேண்டிய கணவனோ அங்கு இல்லை. தங்கவேலுவை வீட்டிற்கு அழைத்துக் கொண்டு செல்வதைப் பற்றிப் பேசுவதற் காகப் பெரிய மருத்துவரைக் காணச் சென்றிருந்தான். முத்துவும் அவனுடன் சென்றிருந்தான்...

"எம்மா..." நித்யா அலறி விட்டாள்.

உமாவைக் கூடப் பிறந்த சகோதரியாய்ப் பார்ப்ப வளால் அன்னையின் இந்த வார்த்தைகளைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை... அவள் மேலே பேசும் முன் மாரீஸ்வரி வாயைத் திறந்தார்...

"எங்க வீட்டு கொல தெய்வத்தை நாக்குல நரம் பில்லாமக் கண்டபடி பேசாதீங்க... சம்பந்தின்னு பார்க் கிறேன், இல்ல, நடக்கிறதே வேற..." கோபத்தில் அவர் பேச...

"என்ன செய்வீங்க அண்ணி... நான் என்ன பொய்யா சொன்னேன்... உள்ளதைத் தானே சொன் னேன்..." நித்யாவின் தாய் நீட்டி முழக்க...

"என்ன உள்ளதைச் சொன்னீங்க... உங்க வீட்டுப் பொண்ணு பன்னிரண்டாம் கிளாசோட படிப்பை முடிச் சிட்டுக் கல்யாணம் பண்ணி அம்மாவானது ஒண்ணும் பெரிய விசயம் இல்லை... ஆனா, எம் மருமவ படிக்கிறது

உசுரக் காக்குற டாக்டர் படிப்பாக்கும்... அது முடியற வரைக்கும் கொழந்தை வேணாம்னு அவுங்க ரெண்டு பேரும் முடிவு பண்ணி இருப்பாங்களாக்கும்...

"எம் மருமவ தான் என் தாலியைக் காப்பாத்திக் கொடுத்து இருக்கா... உங்க பொண்ணு இல்ல... இனிமேக் கொண்டு எம் மருமவள இப்படிப் பேசினீங்க அதுக்கப் புறம் நான் இப்படிப் பேசிட்டு சும்மா இருக்க மாட்டேன்..."

கடுமையாய்ப் பேசிய மாரீஸ்வரியைக் கண்டு பயம் பிடித்துக் கொண்டது, நித்யாவின் அம்மாவிற்கு... தனது பேச்சால் தனது மகளின் வாழ்க்கை பாதிக்கப்பட்டு விடுமோ என்ற அச்சம் காலதாமதமாய் அவரின் நினை வுக்கு வர, மாரீஸ்வரியிடம் சமாதானமாகப் போக நினைத் தார்.

"அண்ணி அதுக்குச் சொல்லல... எதுக்கும் டெஸ்ட் பண்ணிப் பார்க்கிறது நல்லதுன்னு சொன்னேன். ஏன்னா இப்ப வர்ற வியாதிங்க அந்த மாதிரியில்ல இருக்கு..."

"எம்மா, நீ ஒண்ணும் சொல்ல வேணாம்... முதல்ல நீ நடையைக் கட்டு..." என்று நித்யா விரட்டாத குறையாக தனது பெற்றோர்களை அனுப்பி வைத்தாள்.

"நித்யா, என்னய தப்பா நெனச்சுக்காத. நீ எனக்கு எப்படியோ அதே மாதிரித்தே உமாவும்..." மாரீஸ்வரி தன் நிலையைப் பெரிய மருமகளுக்குப் புரிய வைக்க முயல...

"இதை நீங்க சொல்லணுமா அத்தை... உமா எனக்குத் தங்கச்சி மாதிரி... எங்கம்மா பேசியது எனக்கே

பிடிக்கல..." என்றவள் உமாவின் புறம் வந்து அவளை அணைத்துக் கொண்டு,

"எங்கம்மா பேசியதுக்கு நான் மன்னிப்பு கேட்டுக் கறேன், உமா... அவங்க தெரியாமப் பேசிட்டாங்கன்னு சொல்ல மாட்டேன்... தப்புன்னு தெரிஞ்சே தான் பேசிட் டாங்க... மன்னிச்சிக்கோ உமா..."

நித்யா மன்னிப்பு வேண்ட... உமா தனது மன வலியை மறைத்துக் கொண்டு,

"பரவாயில்லக்கா விடுங்க..." என்க... அவளது பெருந்தன்மை கண்டு எல்லோரும் பூரித்துப் போயினர்.

"எனக்காகப் பேசியதுக்கு தேங்க்ஸ் அத்தை..." மாரீஸ்வரியிடம் நன்றியுரைத்த உமாவை அவர் பாசத் துடன் அணைத்துக் கொண்டார்.

உதய், முத்து வந்ததும் நித்யாவே தன் கணவனிடம் தாய் பேசிய விவரத்தைக் கூற... மாரீஸ்வரி தலையிட்டு இந்தப் பிரச்சினையை சமாளித்ததால் அவர்கள் இருவரும் அதைப் பெரிதாய் எடுத்துக் கொள்ளவில்லை...

உதய் தனிமையில் உமாவிடம், "உமா எதையும் மனசுல வச்சுக்காதே... இதுக்கு நீ மட்டும் பொறுப்பு இல்ல... நானும்தேன் பொறுப்பு..." என்று அவளை சமா தானப்படுத்தியதோடு அதை அத்தோடு விட்டு விட்டான்.

அவர்கள் அளவில் அந்தப் பிரச்சினை முடிந்து விட்டதாய்த் தான் நினைத்திருந்தனர். ஆனால் உமா இந்தப் பிரச்சினையை விடவும் இல்லை. மறக்கவும்

இல்லை. தங்கவேலுவை வீட்டிற்கு அழைத்து வந்துவிட்ட நிம்மதியில் எல்லோரும் இருந்தனர்.

அன்றிரவு அறைக்குள் வந்த உதய்யைப் பார்த்து உமா, "நீங்க நினைச்சதை சாதிச்சிட்டீங்கல்ல உதய்..." அவளின் குரலில் இருந்த பேதத்தை அவன் உணர வில்லை.

அவனோ மகிழ்ச்சியில் வேறொரு நினைவின் தாக் கத்தில் இருந்தான்... உமாவின் பிரச்சினை சீக்கிரம் முடிந்து தங்கள் வாழ்க்கை மலர்ந்து, குழந்தை ஒன்று பிறந்தால் அது எப்படி இருக்கும் என்று கற்பனையில் அவன் திளைத்திருந்தான்.

"நான் நினைச்சதுல ஒரு ப்ரசென்ட் கூடச் சாதிக்கல. நீ என்னடான்னா சாதிச்சிட்டேன்னு சொல்றியே... இல்லையே உமா... இனிதான் என்னோட சாதனையை நீ பார்க்கப் போற..." என்றவனின் பார்வை அவளை ஆவலாய் ஆர்வத்துடன் மொய்த்தது.

அவனின் பார்வையை உணரும் நிலையில் அவள் இல்லை.

"கடைசியில் என்னைப் பார்த்து எல்லோரும் 'நீ ஒரு பொண்ணுதானா?' அப்படின்னு கேட்க வச்சிட்டீங் கல்ல... இப்ப உங்களுக்குத் திருப்தியா...? உங்களுக்குச் சந்தோசமா...? உங்க எண்ணம் நிறைவேறியிருச்சா...?"

ஆவேசத்துடன் வந்த அவளது வார்த்தைகளில் அவன் விக்கித்துப் போனான். அது கொடுத்த தாக்கத்தில்

அவன் மனதில் இருந்த காதல் உணர்வு சுத்தமாய் வழிந்து போயிருந்தது.

"உமா... நீ என்ன சொல்ற...?" புரியாமல் பரிதாப மாய் விழித்தான் அவன்.

"அதான் நம்ம நிச்சயம் அன்னைக்குச் சொன் னீங்களே... அதை அப்படியே நிரூபிச்சுக் காட்டிட்டீங் களே..." கண்களில் கண்ணீர் வழிய நின்றவளின் தோற்றம் அவன் மனதைக் கலங்கடிக்கச் செய்தது.

அன்று தான் கோபத்தில் கூறிய வார்த்தைகள் அவனுக்கு ஞாபகத்தில் வர, தலையில் அடித்துக் கொண் டான்.

"உமா, அது ஏதோ கோபத்துல சொன்னதுடி... அதை எல்லாமா நீ இன்னமும் ஞாபகத்துல வச்சிருக்க..." என்றவன், அவளருகில் வந்து அவளது கண்ணீரைத் துடைக்க...

"நீங்க சொன்ன மாதிரி அவங்க, நான் வாழாத கதையைக் கேட்கிறாங்க... நான் என்ன சொல்ல...? மனசு நிறையக் காதலைச் சுமந்துக்கிட்டு நாம வாழாம இருக்கிற கொடுமையான கதையை அவங்க கிட்டப் போய் நான் சொல்லவா...?

"ஏன் உதய் இப்படிப் பண்றீங்க...? இன்னுமா என்னை நீங்க நம்பலை. இன்னுமா நீங்க என்னைப் புரிஞ்சிக்கலை...? ஏன் என்னை அவாய்ட் பண்றீங்க...? இப்பவே எனக்குக் காரணம் தெரியணும். எதை எதையோ

நினைச்சு உள்ளுக்குள்ள நான் தினமும் செத்துக்கிட்டு இருக்கிறது எனக்குத்தான் தெரியும்... இப்பவே, இந்த நிமிஷம் எனக்கு நீங்க வேணும்... உங்களைக் கொடுப் பீங்களா, மாட்டீங்களா...?"

அவன் சட்டைக் காலரை இரு கைகளால் இறுக்கிப் பிடித்துக் கொண்டு கதறியவளின் கதறல், அவனது மனதை ஏதோ செய்தது.

"இவ்வளவு நேரம் கெஞ்சியும் உங்க மனசு அசைய லைல... உங்க மனசு என்ன பாறாங்கல்லா...? நான் வேணாம்ல உங்களுக்கு... போறேன், நான் போறேன்... உங்களை விட்டு... இந்த உலகத்தை விட்டு..." என்று ஆவேசமாய்க் கத்தியவள், தனது பிடியைத் தளர்த்திக் கொண்டு அவனிடம் இருந்து விலகிப் போக...

அவளது பேச்சு கொடுத்த தாக்கத்தின் விளை வாலோ... இல்லை தனது காதலை அவளுக்கு உணர்த் திடும் வேகத்திலோ... உதய் அவளது இடையில் கை கொடுத்துத் தன் புறம் திருப்பியவன், அவளது முகம் நோக்கிக் குனிந்தான்.

தனது காதலை அவளுக்கு உணர்த்தத் தனது இதழால் அவளது இதழை ஆவேசமாய் முற்றுகை யிட்டவன், அதன் மென்மையில் வன்மையைக் கைவிட்டவ னாய் அழகாகக் கவிதை படைக்கத் துவங்கினான்.

முதல் முறை போல் கோபமாய் இல்லாமல், இரண்டாவது முறை போல் அவசரமாய் இல்லாமல்... அன்பாய், காதலாய், மென்மையாய், நிதானமாய்... அதே

சமயம் அழுத்தமாய்த் தனது காதலை அவளுள் கொஞ்சம் கொஞ்சமாய் இறக்கினான் அவளது காதல் கணவன் உதய்.

கணவனின் ஒற்றை இதழொற்றல் உமாவின் ஆத்திரம், கோபம் எல்லா வற்றையும் மறைக்கச் செய்து, அவள் மனதிலிருந்த உதய் மீதான அன்பை, காதலை வெளிக் கொணரச் செய்தது. அவளின் கண்ணீர் மறைந்து, இப்போது காதல் அவள் மனதை ஆக்கிரமித் துக் கொள்ள, கணவனுக்கு ஏதுவாய்த் தலையைச் சாய்த்து நின்றவளின் ஊனும் உயிரும் உருகியது, அவன் காட்டிய காதலில்.

முற்றுப்புள்ளி இல்லாமல் நீண்ட முத்தக் கோலம் அலங்கோலமாகாமல், அழகான பூக்கோலமாய் மாறியது இருவரின் காதலினால். மூச்சுக் காற்றுக்குச் சிரமப்பட்டு அவளாய் அவனை விலக்கித் தள்ளும் வரை அவன் அவளை விட்டு விலகவில்லை.

"மூச்சு முட்டுது, விடுங்க உதய்..." அவனிடமிருந்து பிரிந்து மூச்சு வாங்க நின்றபடி தன்னைப் பார்த்தவளின் முகத்தை, இரு கைகள் கொண்டு தாங்கி வேகமாய்த் தன் புறம் இழுத்தவன்,

"எனக்கா உன் மேல காதல் இல்லைன்னு சொன்ன...? எனக்கா உன் மேல ஆசையில்ல...? நானாடி பாறாங்கல்லு...?" என்றபடி மீண்டும் அவள் முகத்தில்

முத்த ஊர்வலம் நடத்தியவன், அவளின் இதழில் வந்து இளைப்பாறினான்.

வெகு நேரமாய் நீண்ட முத்தத்தின் மூலம் தனது காதலை அவளுக்குப் புரிய வைக்க முயற்சித்தவன், அதில் வெற்றியும் கண்டான்.

"உதய்..." என்று முனகியபடி அவனின் கைகளில் சரணடைந்தாள் அவனது காதல் மனைவி.

கண்கள் மூடியபடி முகம் எல்லாம் மலர்ந்து விகசிக்க, தனது கைகளில் பூமாலையாய்த் தொய்ந்த மனைவியின் அழகை ரசித்தவன், அவளைத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டு, அருகில் இருந்த சுவரில் சாய்ந்தான்.

"எப்படிடி இப்படி எல்லாம் உன்னால பேச முடியுது...? நான் உன்னை வார்த்தையால குத்திக் கிழிச்சேன்னு பதிலுக்கு நீயும் அப்படிச் செய்றியா...? உன்னை மாதிரி தேவதைங்க எல்லாம் அப்படிச் செய்யலாமா உமா...?

"நீ எப்பவும் நல்லவளாவே இருக்கணும் உமா... உன்னை மாதிரி ஒருத்தியை யாருக்காவது பிடிக்காம இருக்குமா...? எனக்கு உன்னை ரொம்ப ரொம்பப் பிடிக்கும்... இந்த உலகத்திலேயே எனக்கு ரொம்பப் பிடிச்ச பொண்ணு நீதான்...

"நீ இந்த மாதிரிப் பேசறது எனக்கு ரொம்பக் கஷ்டமா இருக்கு... உன்னை அழ வைக்கவாடி உன் கழுத்துல நான் தாலி கட்டியிருக்கேன்... உன்னைச்

சந்தோஷமா வைக்கத்தான்டி நான் போராடுறேன்... ப்ளீஸ் உமா... என்னைப் புரிஞ்சிக்கோ..."

உதய்யின் குரலில் இருந்த பேதத்தை உணர்ந்த உமா, கணவனை நிமிர்ந்து பார்த்தாள். என்றும் இல்லாத வண்ணமாய் அவனது முகம் கலக்கத்தைச் சுமந்திருந்தது. அதை விட ஆச்சரியமாய் அவனது கண்கள் கூட சிறிது கலங்கியிருந்தது.

எப்போதும் கம்பீரமாய், எதற்கும் அஞ்சாதவனாய்ப் பார்த்துப் பழகிய உதய்யின் இந்தத் தோற்றம், அவளுக்குப் புதியதாய் இருந்தது. தன் பொருட்டுக் கலங்கி நிற்கும் அவனது தோற்றம், அவளின் மனதைக் கவர்வதாய் இருந்தது.

தனது வார்த்தைகள், அவனது மனதை எந்தளவுக்குக் காயப்படுத்தி இருக்கிறது என்பதை உணர்ந்தவளின் மனதும் அவனை விடச் சற்றும் குறைவில்லாமல் வேதனை கொண்டது. யாரோ பேசியதற்காகக் காதல் கணவனை பேசிய தன் நாக்குக்குச் சூடு வைத்தால் கூட தகும் என்று தன் மீதே அவளுக்குக் கோபம் வந்தது. வெறுப்பு வந்தது.

அவனே தனது தந்தையின் வார்த்தையில், தான் காதலித்த காரணத்தில் மனம் நொந்து இருக்கும் போது, தான் பேசிய வார்த்தைகள் சற்று அதிகப்படிதான் என்றே அவளுக்குத் தோன்றியது. கணவனின் மனதை உணராவிட்டால், அவள் மனநல மருத்துவம் படிக்க இருக்கும் குறிக்கோளே தவறாகிப் போய் விடுமே...!

மனைவியின் இமைக்காத பார்வையைத் தவறாகப் புரிந்து கொண்டவன், "இன்னுமா நீ என்னைப் புரிஞ்சிக் கலை...? யாரு என்ன பேசினா என்ன, நான் உன்னை ஏதாவது சொன்னேனா... இல்ல எங்க வீட்டாளுங்க உன்னை ஏதாவது பேசினாங்களா...? அப்புறம் எதுக்கு மனசு சொணங்குற...?

"உனக்காக உன் கூட நான் எப்பவும் இருப்பேன்... இனி யாராவது உன்னைக் கொற சொன்னா பழியை என் மேலே தூக்கிப் போடு... அதை நான் தாங்கிக்கிறேன்... அவங்க கிட்ட நான் பேசிக்கிறேன்... இதுக்காக இனிமேற் கொண்டு நீ வருத்தப்படக் கூடாது. என்ன...?"

அவனது ஆறுதல் வார்த்தையில் அவளது மனம் சடசடவெனச் சரிந்து, அவனது காலடியில் வீழ்ந்தது.

"சாரி உதய்..." அவளது பவள இதழ்கள் மெதுவே பிரிந்து வார்த்தைகளை உதிர்த்தது. அவனது நெஞ்சில் சாய்ந்து கொண்டவள்,

"அவங்க எல்லாம் பேச முடியாதபடி செய்திட்டா என்ன உதய்... இனியும் நாம எதுக்குப் பிரிஞ்சிருக்கணும் உதய்...?"

"உமா..." அவளது வார்த்தைகளுக்கு என்ன பதில் கொடுப்பது என்று தெரியாமல் அவன் தடுமாறினான்.

"இன்னும் என்ன தயக்கம் உதய்...? பொண்ணு நான், என்னோட தயக்கத்தை விட்டுக் கேட்கிறேன்... என்னை எடுத்துக்கோங்க உதய். இது அடுத்தவங்க

பேசின பேச்சுக்காக இல்லை. உங்க மேல உள்ள காதலாலதான் நான் இதைச் சொல்றேன்... இதுக்கு மேல நீங்க இல்லாம என்னால இருக்க முடியும்னு தோணலை..."

அவனது நெஞ்சில் ஆழமாய் முகம் புதைத்தவளைக் கண்டு அவனின் மனமும் தடுமாறத்தான் செய்தது.

"உமா..." இதைத் தவிர வேறு வார்த்தைகளின்றி அவனது நாக்கு அவனுக்கு எதிராய்ச் சதி செய்தது.

அவனது இந்த நிலையை, அவள் வேறு மாதிரி எண்ணிக் கொண்டாள்.

"இன்னும் அப்பா சொன்னதை நீங்க மறக்கலையா...? நான் அந்தக் காரணத்துக்காகத்தான் காதலிச்சேன்னு நினைக்கிறீங்களா...?" மேலே பேசப் போன உமாவின் வாயைத் தனது கரத்தால் மூடியவன்...

"ப்ளீஸ்... அதுக்காக எல்லாம் இல்ல... எனக்குக் கொஞ்சம் டைம் கொடு..." அவனது வார்த்தையில் முகம் வாட விலகியவளைத் தன் கையணைவில் கொண்டு வந்தவன்,

"ஏன்டி, கொஞ்ச நேரத்துக்கு முன்னாடிதானே என் காதலை உனக்கு அவ்வளவு ஸ்ட்ராங்கா சொன்னேன்... அதுக்குப்புறமும் இப்படி மூஞ்சியை வச்சிக்கிட்டா எப்படி...? ஒருவேளை நான் கொடுத்த ஸ்ட்ராங் பத்தலையோ... வேணும்னா இப்போ ஸ்ட்ராங்கா இன்னொண்ணு கொடுக்கவா...?"

சிரித்தபடி கேட்டவன், அவளின் முகம் நோக்கிக் குனிய... அவனது பேச்சில் முகம் சிவந்தவள், எதிர்பார்ப்பு கலந்த ஆர்வத்தோடு அவனது முகம் பார்த்தாள்.

அவளது நெற்றியில் முட்டியபடி, "உன்னை விட எனக்கும் அதிக ஆசையிருக்கத்தான் செய்யுது உமா... இப்ப எனக்கு ஒரு முக்கியமான வேலை ஒண்ணு இருக்கு... அது முடியற வரைக்கும் எனக்கு டென்ஷனா இருக்கு... அதனால எனக்குக் கொஞ்சம் டைம் கொடு... அந்த வேலையை முடிச்சதும் நீயே சொன்னாக்கூட நான் உன்னை விட மாட்டேன்.

"நீ கேட்டுட்டே இருக்கியே, என் மேல காதல் இல்லையான்னு... அப்போ காண்பிக்கிறேன்டி உன் மேல நான் எவ்வளவு காதல் வச்சிருக்கேன்னு... இந்த மதுரைக்காரனோட வீரத்தைப் பத்தி அப்போ தெரிஞ் சுக்குவ..."

கண் சிமிட்டியபடி பேசிய அவனது பேச்சில் முகம் சிவந்தவள், அவனைக் காண நாணம் கொண்டு, கண்களை மூடிக் கொண்டாள்.

அவனது வார்த்தைகள் எல்லையில்லா நிம்மதியை அளித்தது.

"என்னடி, பதிலைக் காணோம்...?" அவளது கேள்வி யில் மெல்லக் கண்களை மலர்த்தியவள், சரி என்பது போல் தலையை ஆட்டினாள்.

அவளது சம்மதத்தில் அவன் மனப்பாரம் அகன்று, அவனிடத்தில் உல்லாசம் திரும்பி இருந்தது.

"ஆமா... தெரியாமத்தான் கேக்குறேன்... குழந்தை குழந்தைன்னு சொல்றியே, உனக்குப் படிப்பை முடிக்கிற ஐடியா இருக்கா, இல்லையா...?"

அவனது பேச்சு வெட்கத்தையும், ஆசையையும் ஒருங்கே அவளுள் விதைக்க...

"எனக்கு உங்களை மாதிரி நிறையக் குழந்தைகள் பெத்துக்கணும்னு ஆசையா இருக்கு உதய்... படிப்புக்கு என்ன... இன்னும் த்ரீ மன்த்ல எம்.பி.பி.எஸ். முடிக்கப் போறேன்... அதனால குழந்தையைச் சீக்கிரம் பெத்துக் கலாம்..."

அவனது சட்டைப் பொத்தானைத் திருகியபடி கண்களில் கனவு மிதக்கக் கூறியவளைக் கண்டு அவனுள்ளும் காதலும், கர்வமும் ஒருங்கே தோன்றியது.

"ம்ஹூம்... அதெல்லாம் முடியாது. நீ சைக்கியாட் டிரிஸ்ட் ஆகுற வரைக்கும் குழந்தைக்குத் தடா தான்..." என்றவனை ஆச்சரியமாய்ப் பார்த்தாள் அவள்.

"சைக்கியாட்டிரிஸ்ட் ஆகணும்கிறதுதான் என்னோட எய்ம்... அது எப்படி உங்களுக்குத் தெரியும்...?"

"அது வந்து..." தன்னையும் அறியாமல் வாய் தவறி வந்த வார்த்தைக்காகத் தன்னைத்தானே திட்டிக் கொண்டான்.

"அன்னைக்கு நீதானே சொன்ன..." என்று அவன் சமாளிக்க...

"ஓ... நான்தான் சொன்னேனா... மறந்து போயிட் டேன்..."

"இப்படியே விடிய விடிய நின்னுக்கிட்டுப் பேச நல்லாத்தான் இருக்கு... உனக்குக் கால் வலிக்க லையா...?" அவன் கேட்டதும்தான், இருவரும் நின்று கொண்டு பேசிக் கொண்டிருப்பதை உணர்ந்தாள் அவள்.

அதிலும், தான் தனது முழு எடையையும் கணவன் மேல் பதித்து அவன் மீது சாய்ந்து நின்று பேசிக் கொண் டிருந்தது புரிய, அவசரமாய் அவனை விட்டு விலகியவள், அவனைப் பார்த்து அசடு வழிந்தாள்.

"சாரி உதய்..."

"பரவாயில்ல உமா... சும்மா சருகு மாதிரித்தான் நீ இருந்தே... நீ ஒண்ணும் பெரிய வெய்ட் இல்ல... என்ன ஒரு எண்பது கிலோ இருப்பியா...?" சட்டைச் சுருக்கங் களை நீவி விட்டவாறு தெரியாமல் கேட்டவனைக் கொலை வெறியுடன் பார்த்தவள்,

"உதய்..." என்று அவள் பல்லைக் கடிக்க...

"உமா..." என்று பதிலுக்கு அவனும் ராகம் இழுத் தான்.

"நான் ஒண்ணும் எண்பது கிலோ எல்லாம் இல்லை... ஜஸ்ட் சிக்ஸ்டி பைவ் கேஜிதான்..." கொஞ்சமும் கோபம் மாறாத குரலில் அவள் கூற...

அவனோ நமட்டுச் சிரிப்புடன், அவளை மேலும் கீழும் பார்த்தவன், "பார்த்தா அப்படித் தெரியலையே...?" குரலில் மட்டும் அல்ல, அவனின் பார்வையிலும் விஷமம் நிரம்பி வழிந்தது. அதைக் கண்டு உமா,

"உதய், உங்களை..." என்று கத்திக்கொண்டு அவன் அருகில் வர, அவள் கையில் அகப்படாமல் அவன் நழுவினான்.

அவள் விடாப்பிடியாய் அவனைப் பிடிக்க வர, அதைக் கண்டு அவன் ஓட, அவளும் விடாமல் துரத்தினாள். கட்டிலைச் சுற்றிக் கொண்டு அங்கும் இங்கும் ஓடிப் போக்குக் காட்டியவன், ஒரு கட்டத்தில் மூச்சு வாங்கக் கட்டிலில் அமர, அவள் அவனைப் பிடித்து விட்ட குதூகலத்தால் அவனை அணைத்துக் கொண்டு சந்தோஷத்தில் குதித்ததில், அவனோடு சேர்ந்து படுக்கையில் விழுந்தாள்.

"என் கிட்டேயேவா போக்குக் காட்டுறீங்க... இப்போ வின் பண்ணியது யாரு...? நான்தானே..." என்று கலகலவெனச் சிரித்தவளின் சிரிப்பில், அவளைக் கண்ணிமைக்காமல் பார்த்தான் அவன்.

பழைய உமா மெல்ல மெல்லத் திரும்பிக் கொண்டிருக்கிறாள் என்பதை அவளது மனம் விட்டுச் சிரித்த சிரிப்பு அவனுக்கு உணர்த்தியது. இவ்வளவு நாள் இந்தப் புன்னகை இல்லாமல் இருந்தவளைப் பழைய மாதிரி குறும்பும் கலகலப்பும் கொண்ட உமாவாய் மீட்டெடுத்து விடலாம் என்ற நம்பிக்கை அவனுள் தோன்றியது.

அவனது பார்வையில் அவளது சிரிப்பு நின்று லஜ்ஜை தோன்ற, "என்ன உதய்...?" என்றாள் கிசுகிசுப்பாக.

"உனக்கு இப்படி இருக்கிறது கஷ்டமா இருக்கா உமா...?" அவன் கேட்டதின் அர்த்தம் புரிந்தவள், தலையை மறுப்பாய் அசைத்து,

"நீங்க இந்த மாதிரிக் கலகலப்பா என் மேலே காதலோடு இருந்தா எனக்கு வேறு எதுவும் வேணாம்... எப்பவும் உங்களைக் காதலிச்சிட்டு இருக்கணும்... அது மட்டும்தான் எனக்கு வேணும்... உடல் சார்ந்த உறவை விட மனம் சார்ந்த உறவைத் தன்னோட இணையிடம் அழுத்தமாய்ப் பதிய வைக்கும் போது வேறு எந்த சிந்தனையும் தோணாது...

"மத்தவங்க பேச்சு கூடப் பெருசாத் தோணாது... இப்போ உங்க மனசை நீங்க எனக்குத் தெளிவாப் புரிய வச்சிட்டீங்க... இனி உங்களுக்காக எத்தனை நாள் என்ன, எத்தனை வருசமானாலும் காத்திருக்கத் தயார்... பட் ஒன் கண்டிஷன்..." என்றவளைக் கேள்வியாய்ப் பார்த்தவன் நெஞ்சில் சுகமாய்த் தலை பதித்துப் படுத்தவள்,

"நீங்க என்னைக் காதலிச்சிக்கிட்டே இருக்கணும்.. நானும் உங்களைக் காதலிச்சிக்கிட்டே இருப்பேன்..." என்றவளைக் காதலுடன் அணைத்துக் கொண்டான் உதய்.

அவளது பேச்சில் மனம் நெகிழ்ந்து போயிருந்தது அவனுக்கு. பணத்துக்கு மரியாதை கொடுக்கும் காலத்தில், மனதின் காதலுக்கு மரியாதை கொடுக்கும் மனைவியின் எண்ணம் அவன் மனதையும் தடம் புரளச் செய்து, அவனையும் அதே அளவு அவளைக் காதலிக்கச் சொல்லியது.

"உதய்..." அவனது நெஞ்சைச் சுரண்டியவளின் செயலில் நினைவு கலைந்தவன்,

"என்னடி...?"

"எனக்குத் தூக்கம் வருது..." அவள் கேட்ட விதத்தில் அவன் மனம் பெரிதாய்க் கற்பனை பண்ணியிருக்க... அவள் இப்படிச் சொன்னதும் அவனுக்குச் சிரிப்பு வந்தது.

"தூங்கு... யாரு வேணாம்னா..." அவனது கைகள் அவளின் தலையை வருட... அதில் சுகமாய் அவளது கண்கள் செருக...

"ம்... ம்..." என்றவள், அதற்கு மேல் பேசவில்லை. அவளிடம் இருந்து சத்தம் வரவில்லை என்றதும், அவன் குனிந்து அவளைப் பார்க்க, அவளோ ஆழ்ந்த நித்திரையில் இருந்தாள்.

அவனோ உறக்கம் வராமல், ஆழ்ந்த சிந்தனையில் ஆழ்ந்தான். அவன் மனம் முழுவதும் ராஜரத்தினத்தை எப்படி அணுகுவது...? என்ற யோசனை மட்டுமே நிரம்பியிருந்தது.

உதய்யின் மனம் போல் ராஜரத்தினத்தை அணுக நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது. அதிக வட்டி வாங்குவதாக யாரோ ராஜரத்தினத்தின் மீது புகார் அளிக்க, அவனை உடனடியாகக் கைது செய்தது காவல்துறை.

சிறைக்குச் செல்வது அவனுக்கு ஒன்றும் புதிது இல்லை என்றாலும், அவனிடம் அதிக வட்டிக்கு வாங்கி யவன் வட்டியைக் கட்ட முடியாமல் பண நெருக்கடியில்

தற்கொலை செய்து கொள்ள, ராஜரத்தினம் மீதிருந்த அந்த வழக்கு இன்னமும் வலுவானது.

அவனது சகாக்கள் அவனுக்கு ஜாமீன் எடுக்க வக்கீலைத் தேடிய போது, உதய் தானே அந்த வழக்கை ஏற்று நடத்துவதாகக் கூற, முதலில் ராஜரத்தினம் இதை நம்பவில்லை.

"வேணாம் குமாரு... நீ பழி வாங்க ஏதாச்சும் பண்ணிடுவ... வேணாம்..." என்று அவன் மறுக்க...

"அண்ணே... இது சாதாரண மீட்டர் வட்டி கேசு இல்லை... தற்கொலைக்குத் தூண்டியதா உன் மேல கேசு ஸ்ட்ராங்கா இருக்கு... இதுல இருந்து வெளியில வர்றது அவ்வளவு ஈசியில்ல..." உதய் சொல்லவும், அவன் யோசிக்க ஆரம்பித்தான்.

உதய் தனது கடைசி அஸ்திரத்தைப் பயன்படுத்தினான்.

"என் மேல நம்பிக்கை இல்லையாண்ணே... என் பொஞ்சாதி உமா மினிஸ்டர் பொண்ணுண்ணே... அதான் மினிஸ்டர் மகாதேவன் இருக்காருல்ல அவரோட பொண்ணு... எப்பாடு பட்டாவது அவரு மூலமாவது உன்னை நான் வெளியில எடுத்துருவேன்..."

மகாதேவனின் பெயரைக் கேட்டதும் ராஜரத்தினத்துக்குச் சந்தோஷமாய் இருந்தது.

"அவரு பொண்ணையா நீ கட்டி இருக்கிற குமாரு... நீ மொதல்லயே இதை சொல்லியிருக்கக் கூடாதா... பாரு,

தேவையில்லாம உன் கையைக் கிழிச்சு, உன் பொஞ்சாதி கிட்ட வீணா கெட்ட பேரு வாங்கிட்டேன்..." என்று அவன் வருத்தப்பட...

"இதுல என்னண்ணே இருக்கு... உனக்குப் பதிலா உமா கிட்ட நான் பேசிக்கிறேன்... முடிவா நீ என்ன சொல்லுற..." அதற்கு அவன் சரி என்று ஒத்துக் கொள்ள, உதய் அவனுக்காக வாதாடக் களம் இறங்கினான்.

தற்கொலை செய்தவர் கடன் தொல்லையில் சாகவில்லை. குடும்பப் பிரச்சினை காரணமாகத் தற்கொலை செய்து கொண்டார் என்று கூறி வாதாடினான். அதற்குச் சாட்சியாகத் தற்கொலை செய்து கொண்டவரின் மனைவியை அங்கு அழைத்து வந்து விசாரணை செய்து, அவர் வாயாலேயே தன் கணவர் குடும்பத் தகராறு காரணமாகத்தான் தற்கொலை செய்து கொண்டதாக ஒப்புதல் வாக்குமூலத்தைப் பெற்று, ராஜ ரத்தினத்திற்கு விடுதலை வாங்கிக் கொடுத்தான்.

உதய்யின் பராக்கிரமத்தில் மகிழ்ந்து போன ராஜரத்தினம், "நீ சின்ன புள்ளயிலேயே வெடிச்சிப் போயிருந்தவன்யா... அப்பவே எனக்குத் தெரியும், நீ பெரிய ஆளா வருவேன்னு... பெரிய படிப்பு படிச்சவன்னு நிரூபிச்சிட்ட குமாரு..." என்று தனது மகிழ்ச்சியை அவன் வெளிப்படுத்தினான்.

அதற்குள் காவலர் வந்து அவனை அழைக்க... "குமாரு, நான் உன்னை வீட்டுல வந்து பார்க்கிறேன்..." என்றபடி காவல்துறை வண்டியில் ஏறிப் போனவனைக் கண்டு, மனதுக்குள் சிரித்துக் கொண்டான் உதய்.

"எலி மசால் வடைக்கு ஆசைப்பட்டுத் தானா வந்து பொறியில மாட்டுதே மச்சான்..." என்றபடி, அழகு அவன் அருகில் வந்து நின்றான்.

அதைக் கேட்டுப் புன்னகைத்த உதய், "இத்தோட என்னோட வேலை முடிஞ்சது அழகு... இனி நீதான் களத்துல இறங்கணும்..."

"சொல்லிட்டீங்கல்ல... கவலையை விடுங்க மச்சான். இனி நான் பார்த்துக்கிறேன்..." என்றான் உற்சாகமாக.

"பார்த்துடா... ஆளு பாக்கத்தான் பேக்கு மாதிரி இருப்பான்... ஆனா ரொம்ப ஆபத்தானவன்..." உதய் அழகை எச்சரிக்க...

"அடப் போங்க மச்சான்... நாங்க பார்க்காத டேன்ஜரஸ் ஆளுங்களா...? இவன் எல்லாம் எனக்கு ஜுஜுபி..."

காலரைத் தூக்கி விட்டுக் கொண்டவனைக் கண்டு தலையில் அடித்துக் கொண்ட உதய்,

"உன்னோட வெளையாட்டுத்தனத்தை இதுல காட்டாதே அழகு... உன் தங்கச்சி மனக் காயத்துக்கான மருந்து உன் கிட்டத்தான் இருக்கு... அதை நல்லா ஞாபகம் வச்சிக்கோ..."

மீண்டும் உதய் அவனை எச்சரிக்க, உமாவின் பெயரைக் கேட்டதும் அழகின் முகம் தீவிரமானது.

"இதை வெற்றிகரமா முடிச்சிட்டு வந்து உங்களைப் பார்க்கிறேன் மச்சான்..." அவன் கண்களில் கொலைவெறி தாண்டவமாடியது.

உமா அவனுக்குத் தங்கை என்றால், அவளின் சகோதரி அவனுக்கும் சகோதரியல்லவா... அந்த சகோதரியின் இறப்பிற்குக் காரணமான ராஜரத்தினத்தைக் கொன்றுவிடத் துடித்தது அவனது உள்ளம். முள்ளை முள்ளால் எடுக்க நினைக்கும் உதய்யின் எண்ணம் அவனுக்குப் பிடிக்கவே, அவன் அதற்கு ஒத்துக் கொண்டான்.

நீதிமன்றத்தில் இருந்து நேரே உதய் சென்றது தற்கொலை செய்து கொண்டவன் வீட்டிற்குத்தான்... அவரின் மனைவியைக் கண்டு கையெடுத்துக் கும்பிட்டவன்,

"ரொம்ப நன்றிக்கா... நீங்க செஞ்ச உதவியை என் உசுரு இருக்குற வரை நான் மறக்க மாட்டேன்கா..."

தனக்குச் சாதகமாகப் பேசியவரை அவன் தெய்வமாகத் தொழுதான். தன்னவளுக்கு நியாயம் கிடைப்பதற்காக அவரைப் பொய் கூற வைத்தான்.

"எதுக்குத் தம்பி பெரிய வார்த்தை எல்லாம் சொல்லிக்கிட்டு... எப்படியும் அவனுக்குத் தண்டனை கெடைக்கப் போறது உறுதி... அது எந்தக் கேசுல கெடச்சா என்ன...?"

அவர் ஆறுதலாய்ப் பேசினார். கணவர் இறந்த துக்கம் இருந்த போதும், உதய் உதவி கேட்ட போது மறுக்காமல் அவனுக்கு உதவி செய்தார்.

எப்படியும் கணவன் தற்கொலை வழக்கில் ராஜரத்தினம் எந்தத் தண்டனையும் இல்லாமல் வெளிவந்து

விடுவான்... அதை எதிர்த்துப் போராடும் நிலையில் அவரும் இல்லை... அந்தளவுக்குப் பொருளாதார வசதியும் அவருக்கு இல்லை.

உதய்க்கு உதவி செய்வதன் மூலம் அந்த ராஜரத்தினத்துக்குத் தண்டனை கிடைத்தால் அது அவருக்குச் சந்தோஷம்தானே...!

"இவன் பேரு அழகு... நாளைக்கு உங்களுக்கு தையல் மெஷினும், பசு மாட்டையும் கொண்டு வந்து கொடுப்பான்... மறக்காம வாங்கிக்கணும்..."

"இதெல்லாம் எதுக்குப்பா..." அவர் மறுக்க...

"நீங்க எனக்குப் பண்ணுன உதவிக்கு இதெல்லாம் சாதாரணம்கா... என்னை உங்க தம்பியா நெனைச்சா இதெல்லாம் நீங்க வாங்கிக்கணும்..." அவன் சொல்ல, அந்தப் பெண்மணி அவனை நன்றியுடன் வணங்கினார்.

வீட்டிற்கு வந்த உதய்யை ராஜரத்தினத்திற்கு வாதாடியதற்காக வாசலிலேயே நிற்க வைத்துக் கேள்வி களைக் கேட்டார் தங்கவேலு.

"இதை நான் உங்க கிட்ட இருந்து எதிர்பாக்கலை குமாரு..." அவர் கோபத்துடன் கடிந்தார்.

"உமா வீட்டில இருக்காப்பா..."

"அது இன்னமும் வரலை..." முகத்தைக் கடுப்புடன் வைத்துக் கொண்டு அவர் கூற, அதைப் பொருட்படுத்தாது அவர் அருகில் அமர்ந்தவன், மெல்லிய குரலில் உமாவின் துன்பத்தை எடுத்துக் கூற, அதைக் கேட்டு தங்கவேலு வாயடைத்துப் போனார்.

"ச்சே! இப்படியும் ஒரு மனுஷன் இருப்பானா...? சொந்தப் பொண்ணை கொலை பண்ணிட்டு..." மகாதேவனை நினைத்து வெறுப்பில் முகம் சுளித்தார் அவர்.

"சரி குமாரு... நீ உன் இஷ்டப்படி செய்... இந்த மாதிரி நேரத்துல அந்தப் பொண்ணுக்கு நீதான் ஆறுதலா இருக்கணும்..." தங்கவேலு கூற, அவரின் பேச்சில் நிம்மதி அடைந்தவனாய் அவன் சம்மதமாய்த் தலையை ஆட்டினான்.

உதய்யின் திட்டப்படி அழகேசன், ராஜரத்தினத்தின் குடும்ப வக்கீலாக மாறி, எந்நேரமும் அவனுடன் சுற்றினான். அதற்காக அவன் பட்டபாடு கொஞ்சம் நஞ்சமில்லை.

"ஏன் அழகு... கொஞ்ச நாளா இந்தப் பயலுவ எல்லாம் ஒழுங்கா வுட்டியைக் கொடுக்க மாட்டேங் கிறாய்ங்க... இவனுங்க மேல ஏதாச்சும் கேசு போட முடியுமா...? அப்படியாவது இவனுங்களுக்கு பயம் வருதான்னு பார்ப்போம்..." என்றவனின் பேச்சில், தலையில் அடித்துக் கொள்ளலாம் போலிருந்தது அழகுக்கு.

'வாங்குறது அநியாய வட்டி... இதுல நீ அவனுங்க பேருல கேசு போடுறியா... அவனுங்க உன் பேருல கேசைப் போடாம பார்த்துக்கடி... எங்க மச்சான் வந்து உன்னை வெளியில எடுக்க மாட்டாரு... அப்புறம் காலம் பூரா களிதான்டி உனக்கு...'

மனதில் நக்கலாய் நினைத்தவன், வாய் விட்டுச் சொன்னால் முதல் வெட்டு தன் கழுத்தில்தான் என்பதை அறிந்தவனாய் அடக்கி வாசித்தான் அழகு.

"இவனுங்களுக்காக எதுக்குண்ணே காசைச் செலவழிச்சுக் கேசு போடணும்... அவனுங்க மூஞ்சியில கத்தியால ரெண்டு கோடு போடுண்ணே... தன்னால கொடுக்க போறாய்ங்க... இதெல்லாம் உனக்குச் சொல்லியா கொடுக்கணும்ணே..." அழகு அவனுக்கு ஐஸ் வைக்க...

அதில் குளிர்ந்து போன ராஜரத்தினம், "நீ சொல்றது சரிதான் அழகு... நான் அதுக்கெல்லாம் பயப்பட மாட்டேன்தான்... நீ எந்தளவுக்கு வக்கீல் படிப்பு படிச்சிருக்கன்னு சும்மா உன்னைச் செக் பண்ணிப் பார்த்தேன்..." என்று அவன் சிரிக்க...

"காலக்கொடுமை..." மெதுவே முணுமுணுத்துக் கொண்ட அழகுக்குக் கொலை வெறி கிளம்பியது. தற்காலிகத் தன்னை அடக்கிக் கொண்டான்.

படிக்காத ராஜரத்தினத்தால், படித்த அழகு பலமுறை பரீட்சித்துப் பார்க்கப்பட்டான். தான் கல்லூரி படித்த போது கூட அழகு தேர்வுக்குப் பயந்தது இல்லை... ஆனால், தினம் தினம் அவனுக்குப் பரீட்சை வைக்கும் ராஜரத்தினத்தைக் கண்டு அவன் பயந்ததுதான் அதிகம். அதில், தான் படித்த சட்டப் படிப்பு கூட அழகுக்கு மறந்து போனது.

ராஜரத்தினத்தின் நம்பிக்கையைப் பெறுவதற்குள் அழகு பலவித சோதனைக்கு உள்ளாக்கப்பட்டான்.

ஒருவாறு அவன் ராஜரத்தினத்தின் நம்பிக்கையைப் பெறும் போது, முழுதாய் மூன்று மாதங்கள் கடந்திருந்தன.

ஒருநாள் இரவு ராஜரத்தினத்துடன் மது அருந்திக் கொண்டிருந்த அழகு, மெதுவே அவனிடம் அவனைப் பற்றிய விஷயங்களைக் கேட்க ஆரம்பித்தான். அதைத் தன் சட்டைப் பொத்தானில் ஒளித்து வைத்திருந்த ஸ்பை கேமிராவில் பதிவு செய்ய ஆரம்பித்தான்.

"அண்ணே... இந்த வயசுலேயே நீங்க இவ்வளவு தில்லா இருக்கீங்களே... அப்போ சின்ன வயசுல எவ்வளவு தில்லா இருந்திருப்பீங்க...?"

"அடேய் மடப்பய மவனே... நான் இப்பவும் கொமரன் தான்டா... இப்ப கூட என்னால இளவட்டக் கல்லைத் தூக்க முடியும்... உன்னால முடியுமா...? அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டுல ஒத்தக் கையால காளையை அடக்க என்னால முடியும்... உன்னால முடியுமா...? அப்புறம் என்னத்துக்கு நீ வயசைப் பத்திப் பேசுற..."

"ஆமாண்ணே... உன்னைப் போல யாருண்டு..." அழகு தன் விதியை நொந்தபடி அவனைப் புகழ்ந்தான்.

"அண்ணே... இந்த மாதிரி சின்னச் சின்ன வேலையைப் பார்த்து எம்புட்டுத்தான் சம்பாதிக்க முடியும்? ஏதாவது பெருசா ஒரு சம்பவத்தைச் செஞ்சுட்டு லம்பா ஒரு தொகையை வாங்கிட்டு செட்டிலாக வேணாமாண்ணே..."

"அதைச் செய்யாமலா... அன்னைக்கு அதை செய்யப் போய்த்தான் இன்னைக்கு நான் நிம்மதியா

இருக்கேன்...” என்றவன், சிறிது நேரம் கண்ணை மூடி அமைதி காத்தான்.

அழகு அவன் சொல்லப் போகும் விஷயத்திற்காகக் காதைத் தீட்டிக் கொண்டு அமர்ந்திருந்தான். அது உமாவின் அக்கா மாயா சம்பந்தப்பட்ட விஷயமாகத்தான் இருக்கும் என்று அவன் உள் மனம் உறுதியாய்க் கூறியது.

ராஜரத்தினம் தொண்டையைச் செருமிக் கொண்டு, மாயாவைக் கொன்ற கதையையும், அதற்கு மகாதேவன் மூலம் கிடைத்த பெரும் தொகையையும் கூறலானான். உதய், மகாதேவன் மருமகன் என்பதால் உதய் மூலம் அவருக்கு எந்த ஆபத்தும் வராது என்று நினைத்தானோ, இல்லை தனது வீர பராக்கிரமத்தை அழகிடம் சொல்ல ஆசைப்பட்டானோ தெரியவில்லை. ஏனோ தனது மனதில் இருந்ததை அழகிடம் சொல்லி முடித்தான்.

அவன் கூறியதைக் கேட்டு, அழகு பிரமை பிடித்தாற் போன்று அமர்ந்திருந்தான்.

‘பாவி... படு பாவிப் பயலே... இப்படியாடா ஒரு பொண்ணை முதுகுல இருந்து தாக்கிக் கொல்லுவ... கோழைப்பயலே...’ மனதுக்குள் கதறி அலறினான்.

“அந்தத் தொகையை வாங்கித் தான்டா இந்த வட்டித் தொழிலைப் பண்ண ஆரம்பிச்சேன்...”

அவனின் குரலில் அழகு தன் நினைவை ஒதுக்கிக் கொண்டு, அவனை உணர்ச்சியில்லாமல் பார்த்தவன், போலியாய் உற்சாகத்தை வரவழைத்தவனாய்...

"அண்ணே... எப்படிண்ணே இப்படி... உன்னை மாதிரி ஒரு வீரனை நான் பார்த்தது இல்லை.. அதுக்கப்புறம் நீ இந்த மாதிரிக் கொலை எல்லாம் செய்யலையாண்ணே..."

"இல்லை..." என்று தலையசைத்து மறுத்தவன்,

"அதுக்கப்புறம் எந்தப் போலீசைக் கண்டாலும் நம்மளை அறியாம ஒரு பயம் இருந்துக்கிட்டே இருக்கும்... எவனைப் பார்த்தாலும் நம்மளத்தான் பார்க்குறாங்களோன்னு குத்தவுணர்வு கொடையும்டா... அதெல்லாத்தையும் விட என்னைப் பிடிச்சுத் தூக்குல போட்டுருவாய்ங்களோன்னு எனக்கு ஒரே பயம்...

"நாம கஷ்டப்பட்டு சம்பாதிக்கிறது எதுக்குச் சொல்லு... சந்தோஷமா வாழத்தானே... அதை விட்டுட்டுப் பயந்து பயந்து வாழ முடியுமா...? இதே இது, இந்த தொழிலுல என்னைப் பார்த்து நாலு பேரு பயப்படுறான்... மரியாதை கொடுக்கிறான்... கையில நாலு காசு சேருது... இது போதும்டா எனக்கு..."

அடுத்து அவன் ஏதேதோ உளற, அது எல்லாம் அழகின் கேமிராவில் அழகாய்ப் பதிவானது.

உதய்யிடம் அதைக் கொண்டு வந்து அழகு கொடுக்க, அவன் உணர்ச்சி வசப்பட்டு அழகைக் கட்டிக் கொண்டான்.

"மாப்புள்ள சொன்னதைச் செஞ்சு காமிச்சு அசத்திட்டியேடா..." என்று சந்தோஷப்பட்டவன்,

"நீ எதுக்கும் கொஞ்ச நாளு ஜாக்கிரதையா இரு. இல்லன்னா ஒண்ணு பண்ணு... கொஞ்ச நாளைக்கு எங்க வீட்டுல வந்து தங்கிக்கோ... எங்கப்பாரை மீறி அவனால ஒண்ணும் பண்ண முடியாது..."

"சரி மச்சான்..." என்ற அழகு, உதய்யின் வீட்டில் தங்கச் சம்மதித்தான்.

அந்தக் காணொளிப் பதிவைத் தன் நண்பன் மூலம் தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அனுப்பி வைத்த கையோடு உதய், உமாவை அழைத்துக் கொண்டு தனத்தைப் பார்ப்பதற்காக விழுப்புரம் சென்றான். என்ன ஏது என்று கேட்ட உமாவைத் தொழிலைப் பார்க்கப் போவதாகக் கூறி அவளின் வாயை அடைத்தான்.

ஏனெனில் மகாதேவனின் உண்மை முகம் தெரிய வரும் போது தனத்திற்கு இது மிகப் பெரிய அதிர்ச்சியை அளிக்கும் என்று அவனுக்கு நன்கு தெரியும். அந்த நேரம் உமா அவளது அன்னைக்கு ஆறுதலாய் அவர் அருகில் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் இதைச் செய்தான்.

அன்றிரவே அந்தக் காணொளியை யூ ட்யூபில் பதிவேற்றம் செய்து, தனது நண்பர்கள், அழகின் நண்பர்கள் என எல்லோரின் வாயிலாக சமூக வலைத்தளத்தின் மூலம் பகிரச் செய்து, உலகம் முழுவதும் அதைப் பரவச் செய்தான்.

அந்தக் காணொளிக் காட்சி சட்டக் கல்லூரி மாணவர்களிடம் இருந்து மற்ற கல்லூரி மாணவர்

களிடமும் காணொளி வைரலாக அது காட்டுத் தீயாய்ப் பரவியது.

மறுநாள் அந்தத் தனியார் தொலைக்காட்சியின் தலைப்புச் செய்தியில், "சாதி வெறி மற்றும் பதவி வெறி காரணமாகத் தன் சொந்த மகளை பதிமூன்று வருடங் களுக்கு முன் கௌரவக் கொலை செய்த அமைச்சர் மகா தேவன்" என்று மகாதேவனின் புகைப்படம் பெரியதாய் ஒளிபரப்பப்பட்டது.

அதிகாலையில் எழுந்ததில் இருந்து உதய்க்குப் பரபரப்பாக இருந்தது. இன்னும் சற்று நேரத்தில் அந்தத் தனியார் தொலைக் காட்சியில் மகாதேவனைப் பற்றி செய்தி வரப் போகிறது... அதை என்ன சொல்லி உமா, தனத்தைப் பார்க்க வைப்பது, என்று யோசித்துக் கொண்டே வரவேற்பறைக்கு வந்து தொலைக்காட்சிப் பெட்டியை உயிர்ப்பித்து விட்டுச் சோபாவில் அமர்ந்தான்.

அரை மணி நேரம், கால் மணி நேரம் என்று நேரம் சென்று கொண்டே இருந்தது. கடைசி ஐந்து நிமிடங்களில் தாங்க முடியாமல் எழுந்தவன், நேரே சமையலறைக்கு வந்தான்.

அங்கு மருமகனுக்காகத் தனம் சமைத்துக் கொண் டிருக்க, உமா அன்னையுடன் பேசியபடி காய் வெட்டிக் கொண்டிருந்தாள். சமையல்காரம்மா பாத்திரம் கழுவிக் கொண்டிருந்தார்.

"உமா..." என்று குரல் கொடுத்தபடி அவளருகில் வந்தவன், அவளது தோளின் இருபுறமும் கை வைத்து,

"ஹாலுக்கு வாயேன்..." என்று அவளைத் தள்ளிக் கொண்டு செல்ல...

"எதுக்கு...?" என்று கேட்டாலும், கணவன் இழுத்த இழுப்பிற்கு உடன்பட்டாள் அவள்.

"உங்கம்மாவையும் கூட்டிட்டு வா..." அவன் சொன்னதும்,

"அவங்க எதுக்கு...?" புரியாமல் கணவனைப் பார்த்தாள்.

"காரணம் கேக்காதே... கூப்பிடு..." அவன் அழுத்திச் சொல்ல... ஏன் அழைக்கிறான் என்று தெரியா விட்டாலும், அவன் சொன்னபடி அன்னையை அழைத்தாள்.

சமையல் வேலை பாதியில் இருந்தாலும், அழைப் பது மருமகன் என்பதால் தனம் மறுக்காமல் உடனே வந்தார்.

மூவரும் வரவேற்பறைக்குள் நுழையும் போது, அப்போதுதான் தொலைக்காட்சியில் செய்திகள் ஆரம் பித்து இருந்தது. உமா இயல்பாய்க் கணவன் அருகில் அமர்ந்து கொண்டு,

"நியூஸ் பார்க்கவா கூப்பிட்டீங்க..?" என்றவள், திரையில் கண்ணைப் பதித்தாள்.

உதய் இருப்பதால் மரியாதை நிமித்தம் அமராமல், தனம் தனியாக ஓரமாய் நின்று கொண்டார்.

"அத்தே, வந்து உட்காருங்க..." உதய் அழைத்தும் அவர் மறுத்து விட்டார்.

அவர் நிற்பது கண்டு அவனுக்குத்தான் வருத்தமா யிருந்தது. அதிர்ச்சியில் மயக்கம் போட்டு அவர் விழுந்து விட்டால்... அவனுக்கு மனதுக்குள் கவலையாக இருந்தது.

அவன் நினைத்தபடி ராஜரத்தினம், மகாதேவனைப் பற்றிச் சொன்னது ஒளிபரப்பானது.

"சாதி வெறி மற்றும் பதவி வெறி காரணமாகத் தன் சொந்த மகளைப் பதிமூன்று வருடங்களுக்கு முன் கௌரவக் கொலை செய்த அமைச்சர் மகாதேவன்..." என்று மகாதேவனின் புகைப்படம் பெரியதாய்க் காட்டப்பட்டு, அதன் பின் ராஜரத்தினம் பேசியது ஒளிபரப் பப்பட்டது. அதில் அழகு பேசியது எல்லாம் எடுக்கப்பட்டு, ராஜரத்தினம் பேசியது மட்டுமே இருந்தது.

உமாவுக்கு அதிர்ச்சி ஒரு பக்கம், மகிழ்ச்சி ஒரு பக்கம் என்று கலவையான உணர்வுகள் மனதில் சூழ, அருகில் அமர்ந்து இருந்த உதய்யின் கையை இறுகப் பற்றிக் கொண்டாள். உணர்ச்சிவசப்பட்டதில் அவளது தளிர் மேனி நடுங்கியது.

உதய்க்கு மனைவியின் மனம் புரிந்தாலும் அவனது கண்கள் தன் மாமியாரைத்தான் பார்த்துக் கொண்டி ருந்தது. உமாவை விட அவளது அன்னைக்குத்தான் இது பெரிய அதிர்ச்சியாக இருக்கக் கூடும் என்று எண்ணினான்.

தொலைக்காட்சியில் வந்த செய்தியை நம்ப முடியாமல் பார்த்துக் கொண்டிருந்தார் தனம். கணவன்

தான் தன் மகளைக் கொன்றதற்குக் காரணம் என்பதை அறிந்த அவருக்கு, அது உச்சபட்ச அதிர்ச்சியைக் கொடுத்தது. அதிலும் மாயாவைக் கொலை செய்ததை அவன் விவரித்த விதத்தில், அவரது பெற்ற வயிறு தடதடவெனத் துடித்தது.

கண்கள் கரகரவெனக் கண்ணீர் மழை பொழிந்தது. அதிர்ச்சியில் உடல் நடுங்க, நிற்க முடியாமல் அருகில் இருந்த சோபாவைப் பிடித்துக் கொண்டார். கண்கள் இருட்டிக் கொண்டு வருவது போலிருந்தது.

"உமா... அத்தையைப் பாரு..." உதய் குரல் கொடுக்கவும்தான், உமாவுக்கு அன்னையின் ஞாபகம் வந்தது.

'ஐயோ... அம்மா இதை எப்படித் தாங்கப் போறாங்க...?'

மனதுக்குள் துடித்தவள், அன்னையின் அருகில் விரைந்தாள். அவள் செல்லவும், அவர் மயங்கி விழவும் சரியாக இருந்தது.

வேகமாய்த் தாயைத் தன் கைகளில் தாங்கிய உமா, "உதய்.. இங்கே வாங்க..." என்க... அதற்குள் தனத்தின் நிலை அறிந்து அவனே உமாவின் அருகில் வந்திருந் தான்.

இருவரும் சேர்ந்து மயங்கிய தனத்தை சோபாவில் கிடத்தினர். உமா உள்ளே சென்று தண்ணீர் எடுத்து வந்து தனத்தின் முகத்தில் தெளிக்க, அதில் மயக்கம் தெளிந்து கண் விழித்தவர், உமாவைக் கண்டதும்,

"டி.வி.யில அவன் சொன்னது எல்லாம் உண்மையா உமா...? அது பொய்தானே..."

இன்னமும் அவரால் அந்தச் செய்தியை நம்ப முடிய வில்லை. பெற்ற பெண்ணை யாராவது கொல்வார்களா என்று அவரது இளகிய மனம் நினைத்தது. அவருக்குத் தெரியவில்லை... அவரது கணவருக்கு இரும்பை விட இறுகிய மனம் என்று!

"ஐயோ அம்மா... இன்னுமா நீங்க அந்த ராட்சசனை நம்புறீங்க... அவன்தான்மா நம்ம அக்காவைக் கொன்றது... டி.வி.யில பேசினானே, அவன் அக்காவைக் கொன்னதை நான் என் இரண்டு கண்ணாலப் பார்த் தேன்... அதுக்கு உடந்தையா இருந்தவன், அன்னைக்கு தீக்குளிச்சு இறந்து போனானே அவன். அதை நான் தாத்தா கிட்டச் சொல்லி அவர் போலீசுக்குப் போனப் போதான்... எனக்கு மனநிலை சரியில்லைன்னு சொல்லி உங்க புருசன் என்னைனப் பேச விடாமப் பண்ணிட்டான்..."

"அம்மா, இனியும் அந்தாளை நம்பாதீங்க. அக்கா சாவுக்குக் காரணமான அவனுக்கு இனியாவது தண்டனை கிடைக்கணும்... அதுக்குத் தடங்கலா நீங்க இருந்துடா தீங்க... ப்ளீஸ்மா..."

கண்களில் கண்ணீர் வழிய இரு கரம் கூப்பிக் கெஞ்சிய உமாவைக் கண்டு பரிதாபமாக இருந்தது என்றால், அவள் சொன்ன செய்தி பயங்கரமாக இருந்தது.

உமா கூறியதைக் கேட்டு தலையில் அடித்துக் கொண்டு அழுத தனம்,

"நல்ல மனைவியா இருந்த நான்... நல்ல மகளாகவும், நல்ல தாயாகவும் இருக்கலையே உமா... இவ்வளவு நாளா என் மகளைக் கொன்ன பாம்புக்குப் பால் வார்த்து ஏமாளியா இருந்திருக்கிறேனே... என் பொண்ணு என்ன பாவம் பண்ணினா...? இப்படி அநியாயமாக் கொன்னுட்டீங்களே..." என்று வாய் விட்டுக் கதறியவர், அடுத்து அவரது வாயில் இருந்து, 'மாயா என்னை மன்னிச்சிரு...' இந்த வார்த்தைகள் தவிர வேறு எதுவும் வரவில்லை.

"அம்மா... அம்மா..." உமா உலுக்கியும் அவரிடம் இருந்து எந்த அசைவும் இல்லை. எங்கோ வெறித்த பார்வையுடன அவரது வாய் மூத்த மகளின் பெயரை விடாமல் உச்சரித்து, அவளின் ஆன்மாவிடம் மன்னிப்புக் கேட்டது. அறியாமை நிறைந்த அந்தத் தாயை நிச்சயம் மன்னித்திருக்கும், மாயாவின் அன்பு ஆன்மா.

"உதய்... அம்மா..." கணவனைப் பரிதாபமாய்ப் பார்த்தாள் உமா.

"உமா... இது அவங்களுக்கு அதிர்ச்சியாத்தான் இருக்கும்... அவங்களைக் கூட்டிட்டுப் போய்ப் படுக்க வை..." என்ற உதய், உமாவையும், தனத்தையும் அனுப்பி விட்டுச் சோபாவில் அமர்ந்தான்.

இந்தச் செய்தியைப் பார்த்து விட்டு மகாதேவனின் அடுத்தக் கட்ட நடவடிக்கை என்னவாக இருக்கும்...? அப்படி அவர் இதை ஒத்துக் கொள்ளாமல் மறுக்கும் பட்சத்தில், தான் அடுத்துச் செய்ய வேண்டியது என்ன என்பதை நிதானமாக யோசிக்க ஆரம்பித்தான்.

ஏனெனில், மகாதேவனின் குண இயல்புப்படி, இதற்கு எல்லாம் அடங்கும் ரகமாக அவனுக்குத் தெரியவில்லை. இதைப் பொய் என்று நிரூபிக்க அவரா லான முயற்சிகளை மேற்கொள்வார் என்பதும் அவனுக் குத் தெரியும்.

பெத்த பெண்ணையே பதவிக்காகக் கொன்ற கொடூரனைக் குற்றவாளிக் கூண்டில் ஏற்றுவது அத்தனை எளிதல்ல. ஆனாலும் அவரைக் குற்றவாளிக் கூண்டில் ஏற்றாமல் அவனும் ஓயப் போவது இல்லை. இது உமா அவன் மேல் வைத்திருக்கும் தூய்மையான காதலுக்கு அவன் கொடுக்கும் காதல் பரிசு.

தன் பதவி பலத்தால் அவர் நீதியை வளைத்தாலும், மக்கள் சக்தியின் முன் அவரால் ஒன்றும் செய்ய முடியாது என்று உணர்ந்துதான் அவன் இந்தச் செயலைச் செய்தது. சட்டத்தை ஏமாற்றிய மகாதேவனால் மக்கள் மன்றத்தை ஏமாற்ற முடியாது. அது இனி அவருக்கு ஆயுசுக்கும் மந்திரி பதவி கொடுத்து அலங்கரிக்காது.

தனத்தை வலுக்கட்டாயமாக உறங்க வைத்து விட்டு வந்த உமா, உதய்யின் அருகில் வந்து, "உதய்..." என்றழைக்க... அவன் தன் நினைவை ஒதுக்கி வைத்து விட்டு அவளை ஏறிட்டான்.

கண்களில் கண்ணீர் மல்கத் தவித்தபடி அவள் நின்றிருந்த தோற்றம் அவனின் மனதைப் பிசைய, கண நேரம் கூடத் தாமதிக்காமல், தன் இரு கைகளையும் விரித்து அவளை வாவென அழைக்க...

"உதய்..." என்ற கதறலோடு அவனின் கைகளுக்குள் சரண் புகுந்தாள் அவனது இனிய இல்லாள்.

சிறு குழந்தையை ஆதரவாய் அணைப்பது போல் அவளை அணைத்துக் கொண்டவன் அணைப்பில், காமமோ காதலோ இல்லை. மாறாக அன்பு மட்டுமே நிரம்பி வழிந்தது.

"இப்போ உனக்குச் சந்தோஷமாடி உமா..." அவளது காதில் குனிந்து சொன்னவனின் வார்த்தையில், அவள் திடுக்கிட்டுப் போய் நிமிர்ந்தாள்.

"உன் ஆசையை நான் நிறைவேத்தி வச்சிட்டேனா... நான் என்ன செய்யணும்னு நீ நெனச்சியோ அதை நான் செய்திட்டேனா..." என்றவனை முகம் மலரப் பார்த்தவள்,

"இது உங்க வேலையா...? நீங்கதானா...? எப்படி...?" உள்ளத்தில் பொங்கிய மகிழ்ச்சியில் அவளுக்கு வார்த்தைகள் கோவையில்லாமல் தடுமாறி வந்தது.

"ம்... நானேதான்... ஆனா அந்த ராஜரத்தினத்தைப் பேட்டி எடுத்தது உன்னருமை அண்ணன் அழகுதான்... அவன்தான் படாத பாடு பட்டு இந்த விஷயத்தை வெளிக்கொண்டு வந்திருக்கான்... நன்றி சொல்றதா இருந்தா அவனுக்குத்தான் நீ சொல்லணும்..."

"அழகா...?" இன்னமும் ஆச்சரியமாய் இருந்தது அவளுக்கு...! அதே சமயம் அழகை நினைத்து மனம் பெருமிதம் கொண்டது. தந்தை ஒருவர்தான் சரியில்லை... மற்றபடி அவளைச் சுற்றியுள்ளவர்கள் அனைவரும் நல்லவர்களே...!

"உதய்..." மன நெகிழ்ச்சியுடன் அவனது தோளில் அவள் சாய்ந்து கொண்டாள்.

சிறிது நேரம் அவளுக்குப் பேச்சு எழவில்லை. மௌனமாய் அந்தச் சந்தோஷத்தை உள் வாங்கிக் கொண்டிருந்தாள். அவனும் அவளின் மகிழ்ச்சியில் பங்கெடுத்துக் கொள்பவன் போல் அமைதி காத்தான். அவர்கள் இருவருக்கும் இடையில் இருந்த ஒரே தடையும் அகன்று விட்ட சந்தோஷம், அவனது உள்ளத்தை நிறைத்தது.

"ஆமா... இதெல்லாம் எப்படி உங்களுக்குத் தெரியும்...?" ஏதோ ஞாபகம் வந்தவளாய்க் கேட்டவளிடம்...

"உன்னோட டைரி..." என்றான் அவன்.

"ஓ..." என்றவள், மௌனமானாள். பின்,

"தேங்க்ஸ் உதய்..." என்றவள், தன் மனதை அவனுக்கு உணர்த்தும் பொருட்டு, அவனது கையை இறுக்கிக் கட்டிக் கொண்டு, அவனை ஒட்டி அமர்ந்தாள்.

அவள் மீதான அவன் காதலை எண்ணி எண்ணி அவள் மனம் எல்லையில்லாச் சந்தோஷத்தில் திளைத்தது. தனது எண்ணத்திற்கு மதிப்புக் கொடுத்து, அதற்குச் செயல் வடிவம் கொடுத்த கணவனின் காதல் அவளைத் திக்குமுக்காடச் செய்தது.

"உதய்.. நான் உங்களை அந்த மாதிரி நினைக்கலை... அதாவது அடியாளா..." அவள் சொல்லி முடிக்கும் முன், அவளது வாயில் கை வைத்துத் தடுத்தவன்...

"அதையும் உன் டைரியில படிச்சுத் தெரிஞ்சுக் கிட்டேன்... என்னை எந்தளவுக்குக் காதலிச்சு இருக்கேன் னும் புரிஞ்சுக்கிட்டேன்... உம் மனசு தெரியாம நானும் உன்னை ரொம்பக் கஷ்டப்படுத்திட்டேன்ல உமா...

"உன் காதலுக்கு முன்னாடி என் காதலு எல்லாம் ஒண்ணுமே இல்லை... அப்படி என்ன இருக்கு என் கிட்ட..." அவளின் காதலை நினைத்து அவனுக்குக் கண்கள் கலங்கின.

தேவதை சாமானியனுக்கு வரம் கொடுத்துக் கொண்டாடினால், அந்தச் சாமானியன் எந்தளவுக்கு நெகிழ்ந்து மகிழ்வானோ... அந்தளவுக்கு அவன் நெகிழ்ந்து மகிழ்ந்திருந்தான்.

"ம்... ஒண்ணா ரெண்டா... அது நிறைய இருக்கு..."

தன்னைக் கணவன் புரிந்து கொண்ட மகிழ்ச்சியில் கண்களையும், கைகளையும் அகல விரித்து அவனை நோக்கியவளின் செயல், அவனை முற்றிலும் வீழ்த்தியது. அவனது பார்வை அவளைக் காதலோடு நோக்க...

அவனது பார்வையில் அவளது முகம் செவ்வான மாய் மாற... "உதய்... இது ஹால்..."

"யாரு இல்லைன்னது... இது ஹால், இது நீ, இது நான்..." என்றவன், பார்வையை மட்டும் அவள் புறமிருந்து அங்கும் இங்கும் திருப்பவில்லை. அதில் நாணமுற்று அவன் பார்வையில் இருந்து தப்பும் பொருட்டு, அவள் அவனது நெஞ்சத்திலேயே சரணடைந்

தாள். சிறிது நேரம் இருவரும் மோன நிலையில் ஆழ, உமா மெல்ல...

"உதய்... அம்மாவை நினைச்சாத்தான் பாவமா யிருக்கு... என்ன செய்யப் போறாங்களோ தெரியல...?"

"ம்... அதான் உன்னை இங்கே கூட்டிட்டு வந்தது... உங்கம்மா மனசு சரியாகுற வரை நீ இங்கே இருந்து பார்த்துக்கோ... நான் மட்டும் ஊருக்குக் கெளம்புறேன்..." என்றவனைக் கலக்கமாய்ப் பார்த்தவள்,

"நீங்களும் என்னோட இருங்களேன் உதய்..."

பரிதவிப்புடன் வந்தது அவளது வார்த்தைகள். ஏனெனில் இதைப் பார்த்து விட்டு, அவளது தந்தையின் தாக்குதல் எவ்வாறு இருக்கும் என்று அவளுக்குத் தெரியவில்லை.

அந்தத் தாக்குதல் தன் மீதா, இல்லை தாயின் மீதா என்று அவளால் உறுதியாய்க் கணிக்க முடியவில்லை.

"இது ஒரு சின்னப் பொறிதான் உமா... இது பத்திக்கிட்டு எரியறதும் புஸ்வாணமாப் போறதும் மக்கள் கையில்தான் இருக்கு... உங்கப்பா தன்னோட குறுக்கு புத்தியைக் காட்டி மக்கள் மனதைத் திசை திருப்பிட்டா, அதுக்கும் நாம தயாரா இருக்கணும்... இந்தத் தடவை உங்கப்பாவுக்கு ஜெயில் களி உறுதி..."

உறுதியுடன் கூறியவனைக் கண்டு அவளுக்குச் சந்தோஷமாக இருந்தாலும், ஏதோ ஒரு துக்கம் தொண்டையை அடைக்காமல் இல்லை.

"ஏன் உதய், எனக்கு மட்டும் இப்படி ஒரு அப்பா...? எல்லோரையும் போல அன்பான அப்பா எனக்கு மட்டும் ஏன் கிடைக்கலை...? அப்படி நான் என்ன பாவம் செஞ் சேன்... என்னை விடுங்க, என் அம்மா, அக்கா, அவருக்கு என்ன பாவம் செஞ்சாங்க..."

மனம் வருந்திச் சொன்னவளுக்கு, என்ன சொல்லி ஆறுதல் படுத்துவது என்று அவனுக்குத் தெரியவில்லை.

"உனக்கு நானிருக்கேன்டி... எல்லாமுமா நானி ருப்பேனடி..."

அவனுக்கு வார்த்தைகளைக் கவிதையாய் கோக்கத் தெரியவில்லை என்றாலும், அவளுக்காகத் தான் இருப்பதை திருக்குறள் போல் இரண்டடியில் உணர்த்தி னான். அவனது வார்த்தையில் அவளது கலக்கம் அகன்று நிம்மதி வந்தது.

அந்நேரம் அவளது அலைபேசி அழைத்தது... ஜெகதீசன்தான் அழைத்தார்... உதய் கேள்வியாய் அவளைப் பார்க்க, அவள்,

"ஜெகதீஷ் அப்பா..." என்றவள், "அவரை...?"

"தெரியும்... நீ பேசு..." என்றான்.

"சொல்லுங்கப்பா..."

"லெக்ஷ்மி எப்படிம்மா இருக்கா...?" பதற்றத்துடன் ஒலித்தது அவரது குரல். தாய் மீதான அவரது அன்பில் அவளது கண்கள் பனித்தன.

"கொஞ்சம் அதிர்ச்சிதான்.. அவங்களால இதை நம்ப முடியலை..."

"எனக்கு அப்பவே சந்தேகம் இருந்தது. அதான் ஐயா கிட்ட கேட்டேன்... விசாரிக்கச் சொல்லவான்னு... ஆனா உங்கப்பனே இதைப் பண்ணியிருப்பான்னு நினைச்சுக் கூடப் பார்க்கலம்மா... உங்க ரெண்டு பேரையும் என் பொண்ணாத்தான் நினைச்சேன்...

"மாயாவுக்கு இப்படியானது என்னால ஜீரணிக்க முடியலை... நான் அடுத்த ஃப்ளைட்ல அங்கே வர்றேன்... மேற்கொண்டு என்ன பண்ணலாம்னு கட்சித் தலைமை கிட்டப் பேசணும்... இது மட்டும் உண்மையா இருந்தது... உங்கப்பாவுக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்காம நான் ஓயமாட்டேன்மா...

"லெக்ஷ்மி வாழ்க்கையைக் கெடுத்ததும் இல்லாம அவளோட பெண்ணின் வாழ்க்கையையும் கெடுத்த வனைச் சும்மா விடக் கூடாது..."

"இது எனக்கு முன்னமே தெரியும்ப்பா... ஆனா, அப்பாதான் எனக்கு டிப்ரஷன்னு சொல்லி என்னோட பேச்சை யாரும் கேட்க விடாமப் பண்ணிட்டார்... என் அக்காவை என் கண் முன்னாடி கொன்னும் என்னால ஒண்ணும் செய்ய முடியாமப் போச்சு..." அழுதவளை ஆறுதலாய் அணைத்துக் கொண்டான் உதய்.

உமா சொன்னதைக் கேட்டு ஜெகதீசனுக்கு அதிர்ச்சி யாக இருந்தது. மகாதேவனைப் போன்று கேவலமான ஒரு பிறவியை அவர் பார்த்தது இல்லை. தான் மரியாதை வைத்திருக்கும் பெரியசாமியின் குடும்பத்திற்கு மகாதேவன் செய்த துரோகத்தை அவரால் சகித்துக் கொள்ள முடிய வில்லை.

"நீ கவலைப்படாதே உமா... நான் வந்து பார்த்துக் கிறேன்..." என்றவர் சென்னை கிளம்ப ஆயத்தமானார்.

இந்தச் செய்தியைப் பார்த்த மாரீஸ்வரி உடனே மருமகளுக்கு அழைத்து ஆறுதலாய்ப் பேசிவிட்டு வைத் தார். ஆனாலும் அவரின் மனம் ஆறவில்லை. அவர்கள் இனத்தில் இந்த மாதிரி விஷயம் சகஜம் என்றாலும் இது வரை இந்த மாதிரி விஷயத்தைச் செவி வழிச் செய்தியாகத் தான் கேட்டிருந்தார்.

இந்த மாதிரி நிஜத்தில் நடந்ததைப் பார்த்தது இல்லை. கொலையைப் பற்றி ராஜரத்தினம் சொன்ன வாக்குமூலம் அவரது மனதில் திகிலை ஊட்டியது.

ராஜரத்தினம் குணம் அறிந்த தங்கவேலு மச்சினன் குடும்பத்தைத் தன் வீட்டோடு பாதுகாப்பாய் இருக்கச் செய்தார். அவரின் எண்ணத்தைப் பொய்யாக்காமல் விசயம் கேள்விப்பட்ட ராஜரத்தினம் கொலை வெறியுடன் அழகேசனைத் தேடிப் புறப்பட்டான்...

அவனது குடும்பமே தலைமறைவானதைத் தொடர்ந்து அவன் நேரே தங்கவேலுவைப் பார்க்க வந்து விட்டான்.

"யோவ், எங்கேய்யா அந்த அழகு...?" என்று தங்க வேலுவிடம் எகிறியவன் வாயில் வந்ததைக் கண்டபடி பேச, அதைக் கேட்டு சகிக்க முடியாமல் அழகு அவன் முன்னாடி வந்து,

"என்னடா, ரொம்ப சவுண்டு விடுற... இதோ உன் முன்னத்தேன் நிக்கிறேன்... உன்னால முடிஞ்சதைப்

பண்ணிக்கோ...” என்று தெனாவெட்டாகப் பேச, அதைக் கேட்டு ஆத்திரமேறிய ராஜரத்தினம்,

“வீடு மாறி ஒளிஞ்சிட்டு இருக்கிற கோழைப்பய நீ மப்பு கர்ட்டுறியா...? துரோகி... நல்லவன் மாதிரி நடிச்சி எனக்குத் துரோகம் பண்ணிட்டியேடா நாயே...”

கையில் கத்தியுடன் தன் மீது பாயப் போனவனைக் கண்டு பயப்படாமல் கையில் அருவாளை ஏந்தி நின்றான் அந்த மதுரை மைந்தன்.

“வாடா, வந்து வெட்டு பார்ப்போம்... உனக்கு மட்டுந்தேன் மதுர ஊரு இல்ல... நான் பொறந்து வளர்ந்ததும் இந்த மண்ணுதான்டி... ஏதோ மச்சான் சொன்னாரேன்னு அவர் வீட்டுக்கு வந்து இருந்தா, நீ நாக்குல நரம்பு இல்லாமப் பேசுவியோ...” என்று தன் கையில் இருந்த அருவாளை எடுத்து நீட்டியபடி பேச...

“நீயெல்லாம் அருவாள எடுத்தா அதுக்கு மரியாதையே இல்லடா...” என்று அதற்கும் அடங்காமல் அவன் அழகை நெருங்க... அந்நேரம் சரியாக அங்கே வந்த காவல்துறை ராஜரத்தினத்தை அள்ளிக் கொண்டு போய்விட்டது.

“அட அடடே...! எம் மருமவன் இம்பூட்டு தைரிய மானவனா? பெருமையா இருக்குடே, உன்னைய பார்க்கும் போது...” என்று தங்கவேலு அழகைப் பாராட்ட...

அழகின் அப்பா கூட மகனின் வீரம் கண்டு பிரமித்துப் போய் விட்டார்...

"அழகு... இம்பூட்டு நாளா இந்தத் தெகிரியத்தை எங்கேடா மறைச்சு வச்சிருந்த... எம் ராசா..." என்று அவன் தாய் அவன் கன்னம் வழித்துத் திருஷ்டி கழிக்க...

நிமிடத்தில் கதாநாயகனான அழகுவோ திருதிரு வென விழித்தான்.

"நான் எங்கே மாமா தைரியசாலியா ஆனேன். போலீசுக்கு ஃபோன் பண்ணி வரச் சொல்லிட்டுத்தேன் அவன் கிட்ட தில்லாப் பேசிக்கிட்டு இருந்தேன்... ரெண்டு தெரு தள்ளியிருக்கிற போலீசு வர எவ்வளவு நேரமாகும்னு எனக்குத் தெரியாதா...? நான் நெனச்ச மாதிரி போலீசு வந்து என்னயக் காப்பாத்திருச்சு..." என்றவன் சட்டைக் காலரை ஏத்தி விட்டபடி,

"ரொம்பப் புழுக்கமா இருக்குப்பா... அந்த ஃபேனைப் போடு... எம்மா, கூலா ஆப்பிள் சூசு இருந்தா கொண்டு வா..." என்று கூறியபடி அங்கிருந்த நாற்காலியில் அமரப் போக, அனைவரும் அவனைக் கொலைவெறியுடன் பார்க்க...

"மீ பாவம்... எஸ்கேப்..." என்று சடுதியில் அங் கிருந்து மாயமாய் மறைந்து போனான்.

"புள்ளய பெத்துக் கொடுன்னா வானரத்த யில்ல பெத்துப் போட்டுருக்க... கொஞ்சமாவது புத்தியிருக்கா அதுக்கு...?"

தலையில் அடித்தபடி அவனின் தந்தை வெளி யேற... அவனின் தாயோ பல்லைக் கடித்தார்... இனி அழகுக்கு வீட்டில் நோ சோறு... அது மட்டும் கன்ஃபார்ம்.

விஷயம் கேள்விப்பட்ட ஹரி சற்று ஆடித்தான் போய் விட்டான்... அவனைப் பொருத்தவரையில் மகாதேவன் ஒரு நல்ல தந்தையாகத்தான் இருந்திருக்கிறார்... ஆனால் அது பொய்முகம் என்பதை இப்போது உணர்ந்தவனுக்கு மகாதேவன் மீது வெறுப்பு வந்தது...

மாயா கொலையானது அவனுக்குத் தெரியும்தான். ஆனால் அதன் பின்னணியில் தந்தை இருப்பார் என்று அவன் சத்தியமாக எண்ணவில்லை. ஒரு பக்கம் பெத்த மகளைக் கொன்று விட்டு மறுபக்கம் மகனிடம் அன்பு காட்ட அவருக்கு எப்படி மனம் வந்தது...?

மனம் என்ற ஒன்று அவருக்கு இருக்குமேயானால் அவர் ஏன் மகளைக் கொலை செய்யும் அளவுக்குப் போகப் போகிறார் என்று நினைத்தவனுக்கு விரக்தியாய் இருந்தது.

தொலைக்காட்சியில் காட்டப்பட்ட காணொளியில் வந்தவன் முகம் அவனுக்கு மிகவும் பரிச்சயமான முகமாய் இருந்தது.

யோசித்து யோசித்துப் பார்த்தவனுக்கு அதில் பேசியவன் கூறிய செய்தி ஞாபகத்தில் வர, அவனது மனதில் அந்தக் கயவனைச் சந்தித்த நாள் ஞாபகத்தில் வந்தது.

அன்று தந்தையிடம் இருந்து அதிகத் தொகையைக் காசோலையாக அவன் வாங்கிக் கொண்டு போனது கண்டு, தான் தந்தையிடம் சண்டையிட்டதும் அவனுக்கு ஞாபகம் வந்தது.

'அப்போ உங்க மேல் கொலைப் பழி விழாமல் மறைக்கத்தான் பணம் கொடுத்தீங்களா, டாட்... எனக்குத் தெரிஞ்சது எல்லாம் நீங்க ஒரு அன்பான டாட்... ஆனா மாயாவுக்கு மட்டும் நீங்க எப்படி டாட் கொலைகாரனா மாறுனீங்க...

'மாயா உங்க பொண்ணுங்கிறதை விடுங்க... ஆனா அவளை ஒரு பொண்ணா, சக மனுசியா ஒரு உயிரா எப்படி டாட் பார்க்காமப் போனீங்க... அவள் சாகறப்போ என்ன மாதிரித் துடிச்சாளோ தெரியலையே...! நீங்கதான் அவளைக் கொல்ல ஏற்பாடு பண்ணியிருக்கீங்கன்னு அவளுக்குத் தெரிஞ்சுருந்தா அந்த நிமிசமே அவள் உயிர் போயிருக்குமே டாட்...

'அந்தளவுக்கா பதவி வெறி உங்களைப் பிடிச்சு ஆட்டுது... உங்ககிட்ட இருந்து இதைச் சத்தியமா நான் எதிர்பார்க்கல... ஐ ஹேட் யூ டாட்...' மனதுக்குள் குமுறிய வனின் கண்களில் கண்ணீர் வழிந்தன.

அதைக் கண்டு அவன் அருகே வந்தமர்ந்த சங்கீதா அவனை ஆறுதலாய் அணைத்துக் கொள்ள... ஆறுதல் வேண்டி அவளது மடியில் முகம் புதைத்தவன் வாய் விட்டுக் கதறி விட்டான்...

ஏனெனில் தந்தையின் மறுபக்கம் அவனுக்குக் கொடுத்த அதிர்ச்சி அப்படிப்பட்டது.

கணவனின் வேதனை தீரும் மட்டும் அமைதியாய் இருந்த சங்கீதா, அவனது குமுறல் சிறிது குறைந்ததும் அவனின் தலையை ஆறுதலாய்க் கோதிக் கொண்டே,

"அண்ணிகிட்ட பேசலையா...? பாவம் இதைப் பாத்து அவங்க மனசு ரொம்பக் கஷ்டப்பட்டு இருக்கும்..."

அவள் சொன்னதும்தான் ஹரிக்குத் தனம் மற்றும் உமாவின் ஞாபகம் வந்தது... தனக்கே இப்படி என்றால் அவர்களின் நிலை...? அவனது கைகள் வேகமாய் அலைபேசியை எடுத்து உமாவுக்கு அழைத்தது...

மறுபக்கம் அவள் எடுத்ததும், "உமா... நம்ம அப்பா இப்படிப் பண்ணுவாருன்னு நான் நினைச்சுக் கூடப் பார்க்கல..." வேதனையுடன் வந்தது அவனது வார்த்தைகள்...

"எனக்கு முன்னமே தெரியும்ண்ணா... ஆனா அவரை எதிர்த்து என்னால ஒண்ணும் பண்ண முடியல..." என்றவள் தங்களது தந்தையின் கொடூர மனதைத் தனது சகோதரனிடம் பகிர்ந்து கொள்ள, அதைக் கேட்ட ஹரிக்குத் தான் மனம் தாங்கவில்லை.

அந்தச் சின்ன வயசில் தந்தை கொலைகாரன் என்று தெரிந்தும்... அதுவும் தனது சகோதரியைக் கொன்றவன் என்று தெரிந்தும், அவரோடு ஒரே வீட்டில் வாழ்ந்த உமாவின் நிலையை எண்ணிப் பார்த்தவனுக்கு அந்த நினைவே பயங்கரமாய் இருந்தது என்றால் அனுபவித்த அவளுக்கு எப்படி இருந்திருக்கும் என்று எண்ணியவனுக்கு அவள் பால் இரக்கம் சுரந்தது.

"கவலைப்படாதே உமா... அப்பாவா இருந்தாலும் தப்பு செஞ்சவங்க தண்டனை அனுபவிச்சுத்தான் ஆகணும். நான் உனக்கு ஹெல்ப் பண்ணுவேன்.." என்றவன் அடுத்து உதய்யிடம் பேசினான்.

உதய் தான் இதை வெளிக் கொண்டு வந்ததை அறிந்த ஹரி அவனை வெகுவாகப் பாராட்டினான்.

"மச்சான்... எங்கப்பா லேசுப்பட்டவர் இல்ல... இதில் இருந்து தப்பிக்கத்தான் பார்ப்பாரு... அப்படித் தப்பிக்க நினைச்சாருன்னா இதை வேறு விதமாத்தான் ஹேண்டில் பண்ணணும்... என்னோட உதவி எப்போதும் உண்டு..." என்றவன், "பெரியம்மா என்ன செய்றாங்க..." என்று கேட்க,

அவர் தூங்குவதாகச் சொல்லவும், அவன் அலை பேசியை அணைத்தான்.

ஹரி பேசியது உதய்க்குச் சற்று தைரியத்தைக் கொடுத்தது... இனி என்ன வந்தாலும் பார்த்துக் கொள்ள லாம் என்று தைரியம் வந்தது. ஹரி சொன்னது போல் இந்தக் குற்றச்சாட்டை மகாதேவன் மறுக்கும் பட்சத்தில் அடுத்த கட்ட நடவடிக்கையாகத் தான் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி ஒரு வழக்கறிஞராக யோசித்தான்.

ஹரி சொன்னது போல், உதய் நினைத்தது போல் மகாதேவன் ராஜரத்தினம் கூறியதைத் திட்டவட்டமாக மறுத்தார். தொலைக்காட்சியில் இந்த மாதிரிச் செய்தி வந்ததும் எல்லா ஊடகங்களும் அவர் வீட்டின் முன் குவிந்து விட்டது.

ராஜரத்தினம் பேசியதைக் கேட்டு மகாதேவனுமே சற்று அதிர்ச்சியடையத்தான் செய்தார். அவர் செய்த கொலைக்கான சாட்சியங்களை அழித்த நிம்மதியில்

இருந்தவருக்கு ராஜரத்தினம் சோதனையாய் வந்து சேர்ந்தது அதிர்ச்சியாய் இருந்தது.

'பதிமூன்று வருசமா எங்கிருந்தான்னு கூடத் தெரியாமல் இருந்த பய... இப்போ எதுக்கு இதைப் பத்திப் பேசியிருக்கிறான்... இவன் வேணும்னே இதைப் பேசியது மாதிரித் தெரியலையே... யாரோ வேணும்னே போட்டு வாங்கியது போல் தெரிகிறதே... இதன் பின்னணியில் யார் இருக்காங்க..?'

ராஜரத்தினம் வெறும் அம்பு. அவனை எய்தவன் வேறு யாரோ என்று மிகச் சரியாகக் கணித்தார். இந்தக் கணிப்பு கூட இல்லாமல் இருந்தால் அவரால் இத்தனை வருடங்கள் அரசியலில் பழம் தின்று கொட்டைப் போட்டிருக்க முடியுமா...?

அவர் யோசித்துக் கொண்டிருக்கும் போதே அபிநயா அங்கு வந்து சேர்ந்தார். வந்தவர் படபடப்புடன், "என்னங்க அவன் ஏன் அப்படிச் சொல்றான்...?"

அதில் திடுக்கிட்டவர் தன்னைச் சமாளித்துக் கொண்டு, "இதை நீ நம்புறியா...?"

"ச்சே ச்சே...! எவனோ குடிகாரன் சொல்றதை நம்பி உங்களைப் போய் நான் சந்தேகப்படுவேனா...?"

மனைவி கூறியதும் தான் மகாதேவனுக்குச் சற்று நிம்மதியாய் இருந்தது... அபியின் பார்வையில் தான் தரம் தாழ்ந்து போவதை அவர் விரும்பவில்லை.

"தேங்க்ஸ் அபி..." மனதார அவருக்கு நன்றி யுரைத்தவர், "முதல்ல அந்தச் சேனல்காரன் மேல கேஸ்

போடணும் அபி... எவ்வளவு தைரியமிருந்தா என்னை இப்படிக் கேவலப்படுத்துவான்...” என்று அவர் பல்லைக் கடிக்க...

“அதைச் செய்யுங்க முதல்ல... அப்போதான் மத்தவங்களுக்குப் பயம் வரும்...” என்றபடி உள்ளே சென்ற மனைவியைப் பார்த்துக் கொண்டிருந்தவர், அடுத்து என்ன செய்வது என்று யோசிக்க ஆரம்பித்தார்.

இரண்டாவது மனைவி மனம் பற்றி, அவரின் பாதுகாப்பைப் பற்றி யோசித்த மகாதேவன், அங்கே தன் மேல் உயிரை வைத்திருக்கும் ஒரு ஜீவன் இந்தச் செய்தியைக் கேட்டு என்ன பாடு படும் என்பதைப் பற்றி மட்டும் யோசிக்க மறந்து விட்டார்...

தனம் மீது காதல் இருந்தால்தானே... அந்த மாதிரி எண்ணம் வருவதற்கு...? அவரைப் பொருத்தவரையில் தனம் தேவைப்படும் போது வெற்றிக்காக மட்டுமே பயன் படுத்திக் கொண்ட துருப்புச் சீட்டு. அவ்வளவே... மற்ற நேரங்களில் அவர் வெறும் ஜோக்கர் மட்டுமே...!

மகாதேவன் யோசிக்கும் போதே, கட்சித் தலைமை இடத்தில் இருந்து அழைப்பு வந்தது... அவர் எடுத்ததும் எடுத்த எடுப்பிலேயே,

“இந்த விஷயத்துக்குத் தார்மீகப் பொறுப்பேற்று நீங்க உங்க பதவியை ராஜினாமா செய்யுங்க சங்கரன்... இல்லைன்னா வீணா கட்சிக்குத்தான் கெட்ட பெயர் வரும்...”

“என்ன இப்படிச் சொல்றீங்க...? எவனோ குடிகாரன் சொன்னதைக் கேட்டு என் மேலேயே சந்தேகப்படுறீங்

களா? கட்சிக்காக நான் எத்தனை வருசம் உழைச்சிருக் கேன்... பாடுபட்டு இருக்கேன்... நீங்க இப்படிப் பேசுறது சரியில்லை..."

மகாதேவன் தனது பதவி பறி போவது குறித்து அச்சத்தில் படபடத்தார்... பதவி இல்லை என்றால் அவர் உயிரற்ற பிணம் அல்லவா...!

"நீங்க சொல்றது புரியாம இல்ல சங்கரன்! ஆனால் உங்க மேல சுமத்தப்பட்ட பழி பெத்த மகளைக் கொலை செய்துட்டதா சொல்லப்பட்டு இருக்கிறது. இதை இல்லைனு ப்ரூவ் பண்ணுங்க... அடுத்த நிமிசம் பதவி உங்களைத் தேடி வரும்... அதுவரைக்கும் கொஞ்சம் விலகி இருங் கன்னுதான் சொல்றேன்..." என்று கறாராய்ப் பேசிய மேலிடத்தின் முன் அவரால் வாயைத் திறக்க முடிய வில்லை.

"தேவைப்பட்டா உங்க மேல விசாரணைக் கமிஷன் வைக்கவும் தயங்க மாட்டேன்... கட்சிக்காக நான் எதையும் செய்வேன்..."

மிரட்டலாய்க் கூறியபடி பேச்சைத் துண்டித்த தலைவரின் பேச்சில் மகாதேவனுக்கு உள்ளுக்குள் நடுக்கம் ஏற்பட்டது.

இப்போது பதவியைத் தக்க வைத்துக் கொள்வதை விட, தன்னை ஒரு நல்ல மனிதனாக வெளி உலகுக்குக் காட்ட வேண்டிய அவசியத்தை உணர்ந்தவராய்க் கண்களை மூடிச் சிந்தித்தவர் அடுத்த சில நிமிடங்களில் தனது செயலாளரை அழைத்து அனைத்து ஊடகவிய லாளர்களையும் உள்ளே அழைக்கச் சொன்னார்.

"உங்களுக்கு என்ன சந்தேகமோ, அதை நீங்க கேட்கலாம்..." என்று கம்பீரமாகக கேட்டவரைக் கண்டு, ஊடகவியலாளர்களே சற்று அசந்து தான் போய் விட்டனர். ஆனாலும் சரமாரியாகக் கேள்விக் கணை களைத் தொடுக்கவும் அவர்கள் மறக்கவில்லை.

"ஒரு குடிகாரன் பேச்சை நம்பி என்னை ஒரு குற்றவாளி போல் நீங்கள் எல்லோரும் சித்திரிப்பது எனக்கு மிகுந்த வருத்தமாக இருக்கிறது. காவல்துறை அவனைப் பிடித்து விசாரித்தால் இது பொய் என்கிற உண்மை வெட்ட வெளிச்சமாகத் தெரிந்து விடப் போகிறது.

"அவனுக்கு நான் ஏன் பணம் கொடுத்தேன்னு நீங்க எல்லாம் என்னைக் கேள்வி கேட்குறீங்க... ஆமாம், நான் அவனுக்குப் பணம் கொடுத்தேன்தான்... ஏன்னா தீக் குளிச்சு இறந்து போன என்னோட ஆதரவாளர் அவர் மகள் கல்யாணத்துக்கு அவனிடம் வட்டிக்குப் பணம் வாங்கியிருந்தார்... அதைத்தான் அவர் சார்பாக என்னோட சொந்தப் பணத்தில் இருந்து அந்தக் கடனை அடைத் தேன். நல்லது செய்யப் போன எனக்குக் கடைசியில் கிடைத்தது என்னமோ கெட்ட பெயர்தான்...

"என் மீது படிந்திருக்கும் இந்தக் கறை போகும் வரை நான் என் அமைச்சர் பதவியை ராஜினாமா செய்கிறேன்... ஆனால் ஒன்று மட்டும் சொல்லிக் கொள் கிறேன்... என் மீது எந்தத் தவறும் இல்லை என்று நிரூபிக்கப்பட்டதும் அந்தத் தனியார் தொலைக்காட்சி மீது நான் சட்டப்படி நடவடிக்கை எடுப்பேன்... மான நஷ்ட வழக்கு அவர்கள் மீது தொடுப்பேன்... அதற்குத் தயாராக

இருக்கச் சொல்லுங்கள் அவர்களை..." வீரமாய் முழங்கியவர், அதோடு பேச்சு முடிந்தது என்று உள்ளே எழுந்து சென்று விட்டார்.

அவரின் நல்ல நேரமோ, என்னவோ ராஜரத்தினம் மகாதேவனைப் பற்றித், தான் பேசியது எல்லாம் பொய்... அவரைப் பற்றி அவதூறாகப் பேசும்படி உதய் தான் தன்னை அடித்துத் துன்புறுத்தியதாக உதய்யின் மீது பழியைப் போட்டான்.

அவனது பேச்சில் காவல்துறையே குழம்பிப் போய் விட்டது... அமைச்சரின் மருமகன் அவரைப் பற்றி அவதூறாகப் பேசச் சொல்வானா என்று குழம்பியவர்கள் மகாதேவனின் செயலாளரை அழைத்து விசயத்தைச் சொல்ல, அவன் நேரே மகாதேவனிடம் சொன்னான்.

இப்போது மகாதேவனுக்கு எல்லாம் புரிந்து போனது. விசயம் எங்கிருந்து புறப்பட்டது என்று... சாதாரணமானவன் என்று எண்ணிய மருமகன் தனக்கு எதிராக இதைச் செய்திருக்கிறான் என்றால் இதற்குப் பின்னணியில் மகளின் தூண்டுகோல் இருக்கிறது என்பது தெள்ளத் தெளிவாகப் புரிந்து போனது.

"உமா... உன்னை..." பல்லைக் கடித்தவர், அந்தக் காவல்துறை அதிகாரியிடம் பேசி ராஜரத்தினத்திடம் போதையில் தான் உளறியதாக வாக்குமூலம் வாங்கிக் கொண்டு விடச் சொன்னவர், நேரே கட்சித் தலைமையை சந்திக்கச் சென்றார்.

ஆனால் அங்கே அவருக்கு முன் ஜெகதீசன் அங்கு வந்திருந்து அவரை வெறுப்பேற்றினார்.

அவரைப் பார்த்து முகத்தைத் திருப்பிக் கொண்ட மகாதேவன், "நான்தான் அப்பவே சொன்னேன்ல... ஒரு குடிகாரன் பேச்சைக் கேட்டு என்னை சந்தேகப்படாதீங்க ன்னு... இப்போ பாருங்க, போலீசுல அவனே போதை யில் பேசிட்டதாச் சொல்லியிருக்கான்... அதுல வேற என் மருமகனே என்னைப் பத்தி இப்படிப் பேசச் சொன்னதா சொல்லியிருக்கான்...

"என் மருமகன் எதுக்கு என்னைப் பத்தி அந்த மாதிரிப் பேசச் சொல்லணும்... இதுலயே தெரியலையா? அவன் ஒரு பைத்தியக்காரன்னு..." படபடவெனப் பேசிய வரை உற்றுப் பார்த்த கட்சித் தலைவர்,

"எல்லாம் சரிதான்... உங்க பொண்ணு கொலை வழக்கும், உங்களோட ஆதரவாளர் தீக்குளிச்ச வழக்கும் அப்படியே நிலுவையில்தான் நிற்கிறது இல்லையா...! அந்த வழக்கின் விசாரணையை முடுக்கி விடலாம் என்று இருக்கிறேன்... அதில் நீங்க குற்றவாளி இல்லைன்னு நிரூபிக்கப்படட்டும். அதற்குப் பின் உங்களுக்குப் பதவி கொடுப்பதைப் பற்றி யோசிக்கலாம்..." என்று அவர் முடித்து விட...

இதற்கு எல்லாம் காரணம் ஜெகதீசன் தான் என்பதை உணர்ந்த மகாதேவனால் அவரை முறைத்து மட்டுமே பார்க்க முடிந்தது.

"நான் குற்றவாளி இல்லைன்னு நிரூபிச்சிட்டு வந்து உங்களைச் சந்திக்கிறேன்..." என்று நிமிர்வோடு கூறிய மகாதேவன் அங்கிருந்து வேகமாய் வெளியேறினார்.

சென்னையில் இருந்து கிளம்பிய ஜெகதீசன் தனத்தைப் பார்க்க விழுப்புரம் சென்றார்.

தனமோ தனது கணவனை எண்ணி எண்ணி உள்ளுக்குள் மருகிப் போனார்... இத்தனை விசயங்கள் நடந்தும் தன்னைப் பார்க்க வராத கணவனைக் குறித்து அவர் மனதில் ஒரு வலி ஏற்படத்தான் செய்தது.

இதைத் தான் செய்யவில்லை என்பதை சொல்வதற் காகவாவது அவர் தன்னைச் சந்திக்க வருவார் என்று அவர் நம்பினார்.

மகாதேவன் அவரது நம்பிக்கையைப் பொய்த்துப் போகச் செய்ததோடு மட்டும் இல்லாமல் அவரது காதலை யும் பொய்த்துப் போகச் செய்து விட்டார்.

'காதலாம் காதல்... மகளைக் கொன்றவனிடத்தில் காதலை எதிர்பார்க்கிறாயா நீ...? அதற்கு நீ உயிரை விட்டு விடலாம்...' என்று அவரது மனசாட்சி அவரைக் கேலி செய்ய... அப்போது நெஞ்சில் முணுக்கென்று எழுந்த வலியானது அவரது உடல் எல்லாம் பரவுவது போல் தோன்ற உடல் வியர்க்க நெஞ்சைப் பிடித்தபடி,

"உமா..." என்று அலறிக் கொண்டு கீழே விழுந்தார்.

தனத்தின் நிலையைக் கண்டு பதறியபடி உதய்யும் உமாவும் உடனே மருத்துவமனையில் சேர்த்தனர். அதே நேரம் ஜெகதீசனும் அங்கு வந்து சேர்ந்தார்...

"லெக்ஷ்மி எப்படிம்மா இருக்கிறாள்...?" கவலையுடன் கேட்டவரைக் கண்டு,

"கிரிட்டிகல் ஸ்டேஜ்னு சொல்றாங்க..." உதய் தான் பதில் கூறினான்.

உமா தான் மருத்துவர் என்பதையும் மறந்து கண்ணீரில் மூழ்கியிருந்தாள்.

"நான் பார்க்கலாமா...?" அவர் கேட்டதும், அவரைத் தனத்தின் முன் நிறுத்தினான் உதய்... அவர்களைத் தொடர்ந்து உமாவும் அங்கு வந்தாள்.

"லெக்ஷ்மி..." வயதில் பெரியவரான அந்த அமைச்சர் தனது நேசத்துக்குரியவளை அந்த நிலையில் பார்த்ததும் மனம் உடைந்து போய் அழுதார்.

அவரது வரவை உணர்ந்தோ என்னவோ தனத்தின் விழிகள் மெல்லத் திறந்தன. தன் முன் அழுகையில் குலுங்கியவரைக் கண்ட தனத்திற்கும் கண்கள் கரித்தது...

மகளின் வாயிலாக அவரின் மனதை அறிந்து கொண்டவருக்கு, ஜெகதீசனைக் கண்டு இரக்கம் தான் கொள்ள முடிந்தது... தன் பொருட்டு தனது வாழ்க்கையைத் தொலைத்து நிற்கும் அவர் மேல் பரிதாபம் தான் வந்தது.

தனம் தன் கைகள் இரண்டையும் கூப்பியபடி கண்களால் அவரிடம் மன்னிப்பை வேண்டினார். அதைக் கண்டு ஜெகதீசனின் கண்ணீர் மேலும் பெருகியது.

ஜெகதீசனிடம் மன்னிப்பை வேண்டிய தனம் உமாவைப் பார்த்தார். பின் உதய்யைப் பார்த்தார்... மகளுக்காவது நல்லவனை மணம் முடித்த திருப்தியில்

கடைசியாய் எல்லோரையும் பார்த்துப் புன்னகைத்தவர் தனது விழிகளை மூடிக் கொண்டார்.

இறக்கும் போது கணவனின் நினைவுகளால் மனதின் ஓரம் வலிக்கத்தான் செய்தது அவருக்கு. அதே நேரம் இறந்து போன மாயாவின் முகம் அவரது வலியை மேலும் அதிகரிக்கச் செய்தது.

ஏமாளியாக இருந்த தனக்கு வேண்டிய தண்டனை தான் இது என்று நினைத்தவர் அந்த வலியைச் சுகமாய்த் தாங்கிக் கொண்டார். அதன் பின் அவரது மூடிய விழிகள் திறக்கவே இல்லை. மீள முடியா ஆழ்ந்த துயிலில் ஆழ்ந்தார் அந்த அப்பாவி அன்னை...

அவர் உடல் நிலையைக் கணிக்கும் மானிட்டர் 'பீப்' என்ற ஒலியுடன் தனது இயக்கத்தை நிறுத்திக் கொண்டது, அவரைப் போல்...

அதைக் கவனித்த உமா, "அம்மா..." என்று அலறிய படி அவரது நெஞ்சில் கையை வைத்து அழுத்தத் துவங்க, அதற்கு எல்லாம் அசையவில்லை அவரது இதயம்... அது தனது துடிப்பை நிறுத்தி வெகு நேரமாகி இருந்தது...

சந்தோசம் என்பதே அனுபவிக்காமல் வாழ்க்கை முழுவதும் கணவனால் ஏமாற்றப்பட்ட அந்தப் பெண்மணி உடல் இறுதி யாத்திரைக்கு நிம்மதியுடன் செல்லத் தயா ரானது... அந்த நிம்மதியைக் கெடுக்கும் வண்ணம் மகாதேவன் அங்கு வந்து சேர்ந்தார்.

ஏற்கெனவே அங்கு உதய்யின் குடும்பத்தினர், அழகு, ஹரி மற்றும் சங்கீதா அனைவரும் வந்திருந்தனர்.

தனத்திற்குக் கொள்ளி போட கணவன் என்ற முறையில் மகாதேவன் தயாராக...

எங்கிருந்துதான் உமாவுக்கு அவ்வளவு ஆத்திரம் வந்ததோ...

"ச்சீ! நீ எல்லாம் ஒரு மனுசன்னு எங்கம்மாவுக்குக் கொள்ளி போட வந்துட்ட... ஒரு நல்ல கணவனா நடந்து இருக்கியா...? இல்லை ஒரு நல்ல அப்பாவாத்தான் நடந்திருக்கியா...? எந்த மூஞ்சிய வச்சிக்கிட்டு இங்கே வந்தே... எங்கம்மா மூஞ்சில முழிக்கக் கூட உனக்கு அருகதை இல்லை..."

"உன்னாலதான் எங்கம்மா செத்தாங்க... உன்னைக் கொள்ளி வைக்கச் சொன்னா... என் அம்மா ஆன்மா என்னை மன்னிக்காது... போ இங்கிருந்து. முதல்ல வெளியில போ..." என்று அவள் கத்த...

"என்னம்மா இது... புருசன்தானே பொண்டாட்டிக்குக் கொள்ளி போடணும்... அதை அவரைச் செய்ய விடு..." அங்கிருந்த பெரியவர்கள் அவளை அதட்ட...

"அவர் எனக்கு அப்பாவே இல்லை... இதோ இவர் தான் என் அப்பா..." என்று ஜெகதீசன் பக்கத்தில் வந்தவள்,

"மனசு நிறைய நேசத்தை வச்சிருக்கிற இவரை விட அந்தாளு ஒண்ணும் எங்கம்மாவுக்குப் பெரிசா எதுவும் செஞ்சிடல..."

உமாவின் பேச்சில் மகாதேவன் அவமானத்தில் தலை குனிந்தார்.

பெற்ற தன்னை விட்டு விட்டு வேறு ஒருத்தனை மகள் தன் தந்தையாக அடையாளம் காட்டுகிறாள் என்றால் அதை விடக் கேவலம் அவருக்கு வேறு உண்டோ?

ஜெகதீசன் கண்ணீர் மல்க, "அம்மாடி உமா... நீ சொன்னாலும் சொல்லலைன்னாலும் நீ என் மகள் தான்ம்மா... ஆனா லெக்ஷ்மிக்குக் கொள்ளி மட்டும் என்னை வைக்கச் சொல்லாதே..." அவரது பேச்சில் அவள் திகைத்துப் போனாள்.

"அப்பா..."

"அப்பா - மகள் உறவு யார் வேணும்னாலும் யாரோடும் சொல்லிக்கலாம்... ஆனா கணவன் - மனைவி உறவு அப்படிக் கிடையாதும்மா... என்னதான் கெட்டவனா இருந்தாலும் உங்கப்பாதான் உங்கம்மாவோட கணவன்கிறது மறுக்க முடியாத உண்மை... அதை மாத்தி என் கையால லெக்ஷ்மிக்குக் கொள்ளி போட்டு அவளோட நடத்தையை எல்லோரும் சந்தேகப்பட வைக்க என்னால முடியாது... அதை லெக்ஷ்மியே விரும்ப மாட்டாள்... உங்கப்பாவே அவளுக்குக் கொள்ளி வைக்கட்டும்..." என்று அவர் சொல்ல,

உமா அவரை அணைத்துக் கொண்டு அழுதாள்...

ஜெகதீசன் சொல்வது போல் அவளது அன்னை உயிரோடு இருந்திருந்தால் இதற்கு ஒத்துக் கொள்ள மாட்டார் தான்... அதையும் மீறித் தான் இதைச் செய்தால் அவரது ஆன்மா அவளை மன்னிக்காது... அதே சமயம்

மகாதேவனைக் கொள்ளி வைக்கச் சொல்லவும் அவளுக்குப் பிடிக்கவில்லை...

"அவரோட மகனான நான் கொள்ளி போடலாம் இல்லையா...?" என்றபடி முன்னே வந்த ஹரியை நன்றியுடன் பார்த்தவள், கண்ணீர் மல்கச் சம்மதமாய்த் தலையை அசைத்தாள்.

ஹரி கொள்ளி வைக்க, தனத்தின் மிச்ச அடை யாளமும் எரிந்து சாம்பலானது... இந்த அவமானம் தாங்காத மகாதேவன் சென்னை கிளம்பிச் சென்றார்.

காரியங்கள் முடிந்து, அவரவர் ஊருக்கு அவரவர் போய்ச் சேர்ந்து விட்டனர். உதய்யும் உமாவும் கூட மதுரைக்கு வந்து சேர்ந்தனர்.

மகாதேவன் மீது விசாரணை கமிஷன் வைத்தது கேட்டு உமாவுக்கு மகிழ்ச்சியாக இருந்தது... ஆனால் உதய்க்கு அது போதாது என்றே தோன்றியது. ஏனெனில் அது எவ்வளவு நாள் இழுக்குமோ தெரியாது... அதுவரை மகாதேவன் சுகமாய் உண்டு உறங்கி வாழ்வது அவனுக்குப் பிடிக்கவில்லை.

வெகு தீவிரமாய் யோசித்தவன் உமாவின் பேரில் மகாதேவன் மீது ஒரு குற்றப் பத்திரிக்கையை நீதி மன்றத்தில் தாக்கல் செய்தான். அதன் சாராம்சம் இது தான்...

"எனது தந்தையான சங்கரமகாதேவன் பதிமூன்று வருடங்களுக்கு முன் எனது அக்கா மாயாதேவியைக் கொலை செய்து விட்டார்... அந்தக் கொலையை நேரில்

பார்த்த என்னை மனநிலை சரியில்லை என்று கூறி காவல் துறையை என்னை விசாரிக்க விடாமல் செய்து விட்டார்... கொலையாளியை நேரில் பார்த்ததோடு அவர் இந்தக் கொலையைச் செய்ததாக அவர் வாயால் கூறியதை நான் கேட்டும் விட்டேன்...

"அன்றிலிருந்து இந்த பதிமூன்று வருடங்களாக எனக்கு அவர் உயிர் அச்சுறுத்தல் கொடுத்து வருகிறார்... இப்போது என் கணவர் துணையுடன் அவர் மீது வழக்குத் தொடுத்து இருக்கிறேன்... எனக்கு உயிர் மிரட்டல் விடுக்கும் எனது தந்தையிடம் இருந்து என்னைக் காப் பாற்றுங்கள்... அது தொடர்பாக அவரை விசாரிக்க வேண்டும் என்றும் நீதிமன்றத்தைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்..."

"ஹரி, நீ எனக்கு எதிரா சாட்சி சொல்லப் போகக் கூடாது..."

திட்டவட்டமாகத் தெரிவித்த தந்தையை எந்தவித உணர்ச்சியும் இல்லாமல் பார்த்த ஹரியின் மனதும் எந்தவித உணர்ச்சியும் இல்லாமல் கல் போல் இறுகிப் போயிருந்தது...

அபிநயா அழைத்ததின் பேரில் அவன் தன் அன்னையைப் பார்க்க அங்கு வந்திருந்தான்.

என்ன தான் அவர் அவனிடம் கோபப்பட்டாலும் அவனால் அன்னையின் மீது கோபம் கொள்ள முடிய வில்லை.

அதனால்தான் அவர் அழைத்ததும் என்னவோ ஏதோ என்று பதறிக் கொண்டு பார்க்க வந்தான். வந்த இடத்தில் தான் தெரிந்தது, இது மகாதேவனின் வேலை என்று...!

உதய்... உமாவின் மூலமாக நீதிமன்றத்தில் தொடுத்திருக்கும் வழக்குக்குச் சாட்சியாக ஹரி மதுரை செல்லப் போவதை அறிந்த மகாதேவன் ஆத்திரத்தின் உச்சியில் இருந்தார்.

இந்த வழக்கில் அவர் மீது விசாரணை செய்ய முடியாதபடி இரண்டு முறை நீதிமன்றத்துக்கு வராமல் உடல்நலக் குறைவு காரணமாகத் தான் மருத்துவ மனையில் இருப்பதாகக் கூறி வழக்கை இழுத்துக் கொண்டே இருந்தார்.

அதில் கடுப்பான நீதிபதி, அடுத்த முறை வழக்கின் போது மகாதேவன் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும். இல்லை எனில் நீதிமன்றத்தை அவமதிப்பு செய்ததாக வழக்கு ஒன்று அவர் மீது தொடர்வதோடு மட்டும் இல்லாது அவரைக் கைது செய்து இந்த வழக்கை விசாரிக்கக் காவல் துறைக்கு அதிகாரம் அளிக்கப் போவதாக அவர் மகாதேவனை எச்சரித்து இருந்தார்.

அது மட்டும் இல்லாமல் காவல்துறையிடம் சிக்கிய ராஜரத்தினம் இன்றுவரை தன்னைப் பற்றி எந்தத் தகவலையும் சொல்லாதிருப்பது அவருக்குச் சற்று நிம்மதி அளித்தாலும், எந்நேரம் வேண்டுமானாலும் அவன் உண்மையை ஒப்புக் கொண்டு தன்னைக் காட்டிக் கொடுக்க வாய்ப்பு அதிகம் இருப்பதை உணர்ந்து திகிலில்

இருந்த மகாதேவனை இன்னும் திகிலில் ஆழ்த்தினான் ஹரி.

இந்த வழக்குப் பற்றி மகாதேவன் மகனான அவனது கருத்தைக் கேட்ட ஊடகவியலாளர்களிடம், "எனது தந்தை நீதிமன்றத்துக்கு வரும் நாளைத் தான் நான் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்... தவறு யார் செய்து இருந்தாலும் அவர்களுக்குத் தண்டனை கிடைப்பது உறுதி... அது என் தந்தையாக இருந்தாலும் சரி..."

"உங்கள் தந்தைக்குத் தண்டனை கிடைப்பது உறுதி என்று எப்படி அவ்வளவு உறுதியாகச் சொல்றீங்க...?" பத்திரிகையாளர் ஒருவர் கேட்க...

"அவருக்கு எதிரான முக்கியமான சாட்சியில் ஒருவர் அவரது மகள்... எனது தங்கை உமா... மற்றொரு சாட்சி..." என்று இடை நிறுத்தியவன் புன்னகையுடன் அவர்களைப் பார்த்து,

"இன்னொரு சாட்சி அவரது மகனான நான்... இதை விட வேறு என்ன சாட்சி வேணும்... அவர் கொலையாளி என்று நிரூபிப்பதற்கு..."

அது மறுநாள் எல்லாச் செய்தித்தாள்களிலும் தலைப்புச் செய்தியாக வந்து பரபரப்பைக் கிளப்ப... அதைக் கண்டு மகாதேவன் கடுப்பானார்.

அவரது கோபம் கண்ட அபிநயா மகனைக் கண்டித்து வைப்பதற்காக அவனை அழைக்க, அவனும் அன்னையின் மீதான பாசத்தில் அங்கு வந்தான்.

சங்கீதாவும் அவனை அங்கு செல்ல வற்புறுத்தவும், அவன் கிளம்பி வந்தான். வந்த இடத்தில் மகாதேவன் அவனுக்குக் கட்டளை விதித்துக் கொண்டிருந்தார்.

"நான் கண்டிப்பா போய்த்தான் ஆவேன்..."

உறுதியாய்க் கூறியவனைக் கண்டு மகாதேவனுக்கு ஆத்திரம் வந்தது... எப்போதுமே தன் வழி தனி வழி என்று பிடிவாதம் பிடிக்கும் மகனிடத்தில் அடங்கிப் போயே பழகி விட்ட மகாதேவனுக்கு என்ன செய்வது என்று தெரியாமல் மனைவியைப் பார்த்தார்...

கணவனின் பார்வையை உணர்ந்த அபி, "ஹரி... அப்பா தப்பு செய்திருக்க மாட்டார்... அப்படி அவர் தப்பு செஞ்சதுக்கு என்ன ஆதாரம் உன்கிட்ட இருக்கு... சும்மா அவர் மேல் பழி போடாதே..."

"சும்மா பழி போட எனக்கு என்ன லூசா பிடிச் ிருக்கு... டிவியில காண்பிச்சாங்களே, அவனை இதுக்கு முன்னே நம்ம வீட்டில பார்த்து இருக்கேன்..." என்ற வனைக் கண்டு திகைத்துப் போய் பார்த்தார் அபி.

மகாதேவனின் முகம் பயத்தில் வெளுத்துப் போனது. மகனின் ஞாபக சக்தி கண்டு ஒரு காலத்தில் பெருமை கொண்டவர்... இன்று அதற்காக அவனை மனதுக்குள் சபித்தார்.

"என்ன சொல்ற ஹரி...?"

"உங்களுக்கு ஞாபகம் இருக்கா! அன்னைக்கு ஒரு நாள் யாரோ ஒருத்தனுக்கு அதிகப் பணம் ஏன் கொடுத் ார்னு கேட்டு நான் டாட் கிட்ட சண்டை போட்டேனே..."

ஹரி ஞாபகப்படுத்த, அபி தன் நினைவடுக்கில் அதைத் தேடிக் களைத்தவர் தலையை மறுப்பாய் அசைத்தார்...

"உங்களுக்கு ஞாபகம் இல்லைன்னா பரவா யில்லை... எனக்கு அது நல்லாவே ஞாபகம் இருக்கு... இவரு தப்பு செய்யலைன்னா அவனுக்கு ஏன் பணம் கொடுக்கணும்...?"

"என்னங்க இவன் என்னென்னமோ பேசறான்...?"

"அது வந்து அபி..." என்று இழுத்த மகாதேவன், "அதான் ஏற்கெனவே சொன்னேனே! என்னோட இருந் தவன் தீக்குளிச்சு இறந்துட்டான்னு... அவனோட மகள் கல்யாணத்துக்கு அவன் வாங்கின கடனை நான் அடைச் சேன்னு..." என்று சமாளிக்க...

"ஹரி, அப்பாதான் அதுக்குக் காரணம் சொல் றாரே..." கணவனுக்காக அபி மகனிடம் வாதாட...

"அவன் என்ன லட்சக்கணக்கிலா கடன் வாங்கி அவனோட மகள் கல்யாணத்தைப் பண்ணினான்... சொல்ற பொய்யை நம்பும்படியா சொல்லச் சொல்லுங்க உங்க ஹஸ்பெண்ட் கிட்ட..." என்ற ஹரியின் முகம் வெறுப்பைத் தேக்கி இருந்தது.

"நான் எதுக்குப் பொய் சொல்லணும்... உண்மையைத்தான் சொல்றேன்..." ஒரே மறுப்பாய் மகாதேவன் தன் நிலையில் நின்று கொண்டு சாதிக்க...

"திரும்பத் திரும்ப நீங்க பொய் சொல்றதால பொய் உண்மையாகி விடாது டாட்... நீங்க தப்பு செய்யலைன்னா

அதைக் கோர்ட்ல வந்து நிரூபியுங்க... அதை விட்டுட்டு என்னைப் போக வேண்டாம்னு சொல்லாதீங்க..."

"கோர்ட்ல என்னோட மச்சான் கேட்பார்... அவன் தீக்குளிச்சு இறந்து போனப்போ கூட அவ்வளவு பணம் கொடுக்காத நீங்க... அவன் வாங்கின கடனா அவ்வளவு பணம் கொடுக்க வேண்டிய அவசியம் என்ன...?

"அப்புறம் நீங்க, இறந்தவன், ராஜரத்தினம் மூவருக்கும் என்ன சம்பந்தம்... அவன் ஏன் உங்களைத் தேடி இங்கே வந்தான்...? இதுக்கு எல்லாம் பதிலைத் தயாரா வச்சிக்கிட்டு போங்க..." என்றவனை ஆத்திரமாய்ப் பார்த்த மகாதேவன்,

"என்ன விட்டா ஓவராப் பேசிட்டே போற...? நீயே அவனுக்குப் பாயிண்ட் எடுத்துக் கொடுப்ப போலிருக்கே... கடைசியாச் சொல்றேன். நீ போகக் கூடாது... அப்படி என்னை மீறிப் போனா அதோட விளைவுகள் விபரீதமாக இருக்கும்..."

"என்ன மிரட்டுறீங்களா...? உங்களால என்ன செய்ய முடியும்... மாயாவை மாதிரி என்னையும் கொலை செஞ்சிருவீங்களா? ஆனா மாயா மாதிரி நான் பெண் இல்லை. என்னைக் கொல்ல வந்தவனைப் பதிலுக்குக் கொல்றதுக்கு எனக்குத் தைரியம் இருக்கு..." தந்தையைப் பார்த்து தைரியமாய்ச் சொன்ன ஹரியைக் கண்டு அபி அலறி விட்டார்.

"ஹரி..."

மகாதேவனோ மகனை முறைத்துப் பார்ப்பதைத் தவிர வேறு எதையும் செய்ய முடியாதவராய் நின்றிருந்தார்.

"என்கிட்ட கத்தி எந்த விதப் பிரயோஜனமும் இல்லை. உங்க ஹஸ்பெண்ட்க்கு எடுத்துச் சொல்லிப் புரிய வைங்க..." என்று கிளம்பப் போன ஹரி நின்று தனது தாயிடம் வந்து, அவரின் கையைப் பிடித்துக் கொண்டு,

"மாம், இப்பவும் சொல்றேன். நீங்க என் கூட வந்துடுங்க. இனியும் நீங்க இங்கே இருந்தா அரசியல் லாபத்துக்காக உங்களையும் இவர் கொல்லத் தயங்க மாட்டார். ப்ளீஸ் மாம், வாங்க..." என்று கெஞ்சிய மகனிடம் போக முடியாதபடி அவரது சுய கௌரவம் ஒரு பக்கம் தடுத்தது என்றால், மறுபக்கம் கணவன் மீதான காதல் தடுத்தது.

"ஹரி..." என்று கதறியபடி அவனை அணைத்துக் கொண்டு அழுத அபி, "உன்னை மாதிரி ஒரு மகன் கிடைக்க நான் கொடுத்து வச்சிருக்கணும்... நான் அவ்வளவு திட்டிப் பேசியும் எதையும் மனசுல வச்சுக்காம நான் கூப்பிட்டதும் வந்தது எனக்குச் சந்தோசமா இருக்குப்பா..."

அன்னையின் வார்த்தையில் ஹரியின் மனம் நெகிழ்ந்து போனது.

"மாம்..." அவனுக்கும் கண்ணோரம் கரித்தது. எந்த வொரு உணர்ச்சிகளுக்கும் கட்டுப்படாத ஹரி அன்று ஏனோ உணர்ச்சி வசப்பட்டான்.

"சரி மாம், நான் கிளம்பறேன்..." என்றவனிடம்,

"உன் வொய்ஃப் எப்படி இருக்கா...?" என்று மெதுவாய்க் கேட்டார் அபி...

அவர் கேட்டதும் அவனது முகத்தில் மந்தகாசப் புன்னகை ஒன்று படர்ந்தது.

"ம்... நல்லாயிருக்கா. கூடிய சீக்கிரம் உங்களுக்குப் பேரனோ பேத்தியோ வரப் போறாங்க..." சந்தோசமாய்ச் சொன்னவனின் சந்தோசம்... அபியையும் தொற்றிக் கொண்டது.

"ரொம்பச் சந்தோசமாயிருக்கு, ஹரி..." என்று தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியவர் தயக்கத்துடன், "மருமக கிட்ட சொல்லு. மனசுல எதையும் வச்சுக்க வேண்டாம்னு... நாளைக்கு நான் அவளைப் பார்க்க வர்றேன்னு சொல்லு."

"நிச்சயம் மாம்..."

"ஹரி, இனியாவது நீங்க ரெண்டு பேரும் இங்கே வரலாம் இல்ல..." அடுத்த தலைமுறையைப் பார்க்கப் போகும் சந்தோசத்தில் மகனையும், மருமகளையும் மன்னித்து ஏற்றுக் கொள்ளத் தயாராய் இருந்தார்.

"அது மட்டும் முடியாது, மாம்... ஒரு நாள் இல்லை ஒரு நாள் நீங்களே இவரை வெறுத்து என்னைத் தேடி வருவீங்க... அதுக்காகவாவது நான் தனியா இருந்தாத் தான் நல்லது..." என்றவன் கிளம்ப ஆயத்தமாக...

அபி அவனிடத்தில் வடுமாங்காய் ஊறுகாயை ஒரு பாட்டிலில் போட்டுக் கொண்டு வந்து கொடுத்து, சங்கீதா விடம் கொடுக்கச் சொன்னார். கார் வரை சென்று மகனை வழியனுப்பி வைத்து விட்டு வந்தார்.

காரிலேறிச் சென்ற மகனை யோசனையாய்ப் பார்த்துக் கொண்டே நின்றிருந்தார் மகாதேவன்.

மகாதேவனின் மூளை குறுக்கு வழியில் வேகமாய்ச் சிந்தித்தது. மகளுக்குப் பைத்தியக்காரப் பட்டம் கட்டியது போல் மகனுக்குப் பட்டம் கட்ட முடியாது என்பதை உணர்ந்தவர்... அவனை எப்படித் தடுத்து நிறுத்துவது என்று யோசிக்க ஆரம்பித்தார்.

கடைசியில் அவருக்கு ஒரே ஒரு யோசனை மட்டுமே மிஞ்சி எஞ்சியது. அன்று பதவிக்காக மகள் மாயாவைக் கொன்றது போல், இன்று பதவியைத் தக்க வைத்துக் கொள்ள மகன் ஹரியைக் கொல்வது ஒன்றுதான் சரி என்று அவருக்குத் தோன்றியது.

மகனுக்காகப் பார்த்துப் பார்த்துச் சேர்த்த சொத்துக்கள் எத்தனை? அவனது ஆசைகள் ஒவ்வொன்றையும் எப்பாடு பட்டாவது நிறைவேற்றிய அவரது பாசம் தான் எவ்வளவு.... இது எதையும் எண்ணிப் பார்க்காமல் தன் மீதே பழி சுமத்தித் தனக்கு எதிராகச் சதி வேலையில் மகன் ஈடுபடும்போது அவரும் அவனுக்கு எதிராய்ச் சதி வேலையில் ஏன் ஈடுபடக் கூடாது...?

பதவி என்று வந்ததும் பாசம் பின்னுக்குத் தள்ளப் பட்டு விட்டது. அதை உடனே செயலாக்க எண்ணியவர், அங்கிருந்த தன் மனைவியைக் கூட மறந்து போய் மகனை அழிப்பதற்காகத் தனக்கு உதவியாகக் கூடவே இருக்கும் தாதாவுக்கு அழைத்தார். இதுதான் ஆத்திரக் காரனுக்குப் புத்தி மட்டு என்பார்களோ...?

கணவரிடம் ஏதோ கேட்க வந்த அபி, மகாதேவன் பேசியது அனைத்தையும் ஒன்று விடாமல் கேட்டு விட்டார். யாரோ பெற்ற பெண்ணைத் தன் கணவன் கொன்ற தாகச் சொன்ன போது நம்பாத அவர் இப்போது தன் மகனைக் கொல்ல ஆள் ஏவும் கணவனைக் கண்டு உண்மை என்னவென்று புரிந்து கொண்டார்.

அவருக்கு அதிர்ச்சியில் உடல் நடுங்கியது. வியர்த்து வழிந்தது. இதற்கு மேல் இங்கே நின்றால் தன்னைக் கொல்லக் கூடத் தயங்க மாட்டார் மகாதேவன் என்பதை உணர்ந்த அபி வேகமாய் அங்கிருந்து அகன்றார்.

அறைக்குள் வந்து கதவைப் பூட்டிக் கொண்டு கட்டிலில் அமர்ந்தவருக்குப் படபடப்பாய் இருந்தது. பெத்த மகனைக் கொல்லும் அளவுக்குப் பதவி மோகம் பிடித் தாடும் கணவனிடத்தில் முதன் முறையாய் வெறுப்பு வந்தது. மாயாவைத் தன் கணவன் கொலை செய்திருக்கக் கூடும் என்று இப்போது நம்பினார்.

மாயாவுக்காக வருத்தப்பட்ட அபி, அதே சமயம் தனத்தை நினைத்து முதன் முறையாய் மனம் வருந்தி னார். பெற்ற பெண்ணைக் கணவன்தான் கொன்றான் என்று தெரியாமல் அவனோடு வாழ்வது என்பது எவ்வளவு பெரிய கொடுமை என்பது இப்போது அவருக்குப் புரிய தனத்தின் மீது பரிதாபம் வந்தது.

ஒரு தாயாய் தனத்தின் உணர்வுகளை அவரால் புரிந்து கொள்ள முடிந்தது. ஆனால் மகாதேவனின் மனைவியாய்த் தனத்தின் உணர்வுகளைப் புரிந்து கொள்ள

இப்போதும் அவரது காதல் மனம் ஒத்துக் கொள்ள வில்லை. இது வேறு, அது வேறு என்றே எண்ணினார்.

ஆனால் தனத்தைப் போல் கோழையாகக் கணவனுக்குப் பயந்து வாழ அவர் எண்ணவில்லை.

என்று தன் மகனைக் கொலை செய்ய முடிவு செய் தாரோ, அப்போதே கணவனுக்கும் தனக்குமான பந்தம் முடிவுக்கு வந்து விட்டதை உணர்ந்தார்... எந்தக் கணவனுக்காக மகனிடத்தில் பொய் சொன்னாரோ...

எந்தக் கணவனுக்காக மகனை விட்டுப் பிரிந்திருந் தாரோ அந்தக் கணவனை முற்றிலும் வெறுத்து விட்டார் அபிநயா.

இனியும் மகாதேவனை இப்படியே விட்டு வைத்தால் சரி வராது என்று எண்ணியவர், அடுத்துத் தான் என்ன செய்ய வேண்டும் என்பதைக் கண் மூடி யோசித்தார்.

அதற்கு ஒரு வழி கிட்டவே நிம்மதியுடன் மகனை அழைத்து மகாதேவுன் செய்யப் போகும் காரியத்தைச் சொல்ல...

அவனோ கூலாக, "அவர் அப்படித்தான்னு எனக்கு ஏற்கெனவே தெரியும், மாம்... அதனாலதான் நான் பாதுகாப்பு இல்லாம இப்போது எல்லாம் வெளியில் போறது இல்லை... என்னைப் பத்தி நீங்க கவலைப் படாதீங்க. எனக்கு இருக்கிற ஒரே கவலை நீங்கதான். இப்பவும் ஒண்ணும் கெட்டுப் போகலை... உடனே நீங்க கிளம்பி இங்கே வாங்க."

மகனது அன்பு உயிர்வரை சென்று ஊடுருவ...

"நிச்சயம் வரேன், கண்ணா... ஆனா அதுக்கு முன்னாடி நான் செய்ய வேண்டிய வேலை ஒண்ணு இருக்கு... அதை முடிச்சிட்டு நிரந்தரமா உன் கூட வந்து இருக்கப் போறேன்..." என்ற தாயைக் கண்டு அவனுக்கு மகிழ்ச்சியாய் இருந்தது. ஆனால் அதன் அர்த்தம் தான் அவனுக்கு அப்போது புரியவில்லை.

"ரொம்பச் சந்தோசம் மாம்..." என்று அலைபேசியை அவன் அணைக்க...

அபியின் கண்களில் கண்ணீர் சுரந்தது, மகனின் அன்பை நினைத்து!

அதே சமயம் தனது காதல் பொய்த்துப் போனதை நினைத்து, தவறானவனிடத்தில் அன்பை வைத்த தனது முட்டாள்தனத்தை நினைத்துக் கண்ணீர் மேலும் பெருகியது.

கதவு தட்டும் சத்தத்தில் அவசரமாய்த் தன் கண்களைத் துடைத்துக் கொண்டு கதவைத் திறந்தவர், அங்கு நின்றிருந்த மகாதேவனைக் கண்டு போலியாய்ப் புன்னகைக்க முயன்றார்.

அதைக் கவனிக்கும் நிலையில் மகாதேவன் இல்லை.

"நான் வெளியில் போயிட்டு வர்றேன்..." என்றவர் மனைவியின் முகத்தைக் கூடப் பார்க்காமல் வெளியேறினார்.

அவர் போவதைக் கசப்பான புன்னகையுடன் பார்த்த அபி, தன்னிடம் இருந்த சாவியை எடுத்து, அறையின்

மூலையில் ரகசியமாய் வைக்கப்பட்டு இருந்த அந்த லாக்கரைத் திறந்து அதில் இருந்த கணக்கில் காட்டப்படாத அத்தனை சொத்துப் பத்திரங்கள், பணம், நகைகள் எல்லாவற்றையும் எடுத்து அறை முழுவதும் பரப்பி வைத்தார்.

தனது மகனை இல்லாது ஆக்கி விட்டு, இந்தச் சொத்துக்களையும் பணத்தையும் வைத்துக் கணவன் என்ன செய்யப் போகிறார் என்ற கோபம் அவர் மனதை ஆக்கிரமித்து இருந்தது.

அடுத்து அவர் செய்யப் போகும் செயலின் விளை வால், கணவனுக்கு ஏற்படப் போகும் ஆபத்தை அறிந்த வராய், அதைத் தன்னால் காண சகிக்க முடியாது என்ற உண்மை நிலை அறிந்தவராய்...

அவரது மனம் தற்கொலை செய்து கொண்டு உயிர் விட முடிவு எடுத்தது.

அவர் செய்யப் போகும் செயல் மகாதேவன் மீதுள்ள கோபத்தால்... அவரது தற்கொலை மகாதேவன் மீதுள்ள காதலால்... அபியின் இரு செயலில் தான் எவ்வளவு முரண்பாடு...!

அதன் பின் கனத்த மனதோடு தூக்க மாத் திரையைக் கையில் எடுத்தவர் ஒவ்வொன்றாய் எடுத்து முழுங்கினார்.

எந்தளவு உட்கொண்டால் நிரந்தரத் தூக்கம் வருமோ அந்தளவு உட்கொண்டவர் ஒரு தாளை எடுத்துக் கணவருக்கு ஒரு கடிதம் எழுதத் துவங்கினார்.

ஏதேதோ எழுதச் சொல்லி அவரது காதல் மனம் அலை பாய்ந்தது... கணவருடன் காதலுடன் வாழ்ந்த வாழ்க்கையானது கண் முன் வந்து அவரை அலைக் கழித்தது.

இன்னமும் கணவரை முழு மனதாய் வெறுக்க அவரால் இயலவில்லை. கடிதத்தை எழுத விடாமல் கண்களில் கண்ணீர் மறைத்தன.

நிறைய எழுத வேண்டும்... நினைத்தவரின் கைகள் ஒன்றையும் எழுத விடாமல் வேலை நிறுத்தம் செய்தது.

ஆறே வார்த்தையில் தனது மனதை உரைத்தவர், அதை அருகில் இருந்த மேஜை மீது வைத்தார். பின் ஏதோ நினைத்தவர் காவல் துறைக்கு வேக வேகமாய் ஒரு கடிதத்தை எழுதினார்.

பிறகு நேரத்தைப் பார்த்தவர் மாத்திரை வேலை செய்ய ஆரம்பித்து விடும் என்பதை உணர்ந்தவராய்த் தனது அலைபேசியை எடுத்து நிதானமாய் வருமான வரி அலுவலகத்தின் எண்களை அழுத்தினார்.

முதலில் அவர் சொன்னதை நம்ப மறுத்தவர் களிடம், தான் மகாதேவனின் மனைவி என்றதும் அவர்களும் உடனே கிளம்பினர்.

அலைபேசியை அணைத்து விட்டுப் படுக்கையில் படுத்தவருக்குத் தூக்கம் கண்களைச் சுழற்றியது.

ஆழ்ந்த உறக்கம் தன்னை ஆழ்த்தப் போவதை உணர்ந்தவரின் உதடுகள் மெதுவே முணுமுணுத்தன.

"ஐ லவ் யூ தேவ்."

அடுத்த நொடி கண்கள் இருண்டு கொண்டு வர, தான் ஏதோ வேறு உலகத்திற்குப் பயணப்படுவதை அவரால் உணர முடிந்தது. அதற்காக அவர் வருத்தப் படவில்லை. மனமுவந்து மகிழ்ச்சியோடு அந்தப் பயணத்தை ஏற்றுக் கொண்டார். கடைசி முறையாக அவரது நினைவில் நின்றது, ஹரியும் அவனது 'மாம்' என்றழைப்பும்.

"ஹரி..." மகனின் பெயரை உச்சரித்தபடி தனது இறுதிப் பயணத்தைத் துவங்கினார்.

வெளியில் சென்றிருந்த மகாதேவன் வீட்டிற்குள் நுழைந்தார். வரவேற்பறையில் இருந்த சோபாவில் களைப்புடன் அமர்ந்தவர், மனைவியைக் காணாது தேடினார். எப்போதும் அவரின் வருகையை உணர்ந்து அவரின் தாகம் தணிக்கக் காபி, பழச்சாறு என ஏதாவது ஒன்றைக் கொண்டு வந்து நீட்டும் மனைவியைக் காணாது யோசனையாய் எழுந்தார்.

நேரே தங்களின் அறைக்குத்தான் சென்றார். ஒருவேளை அவள் தூங்குகிறாளோ என்ற சந்தேகத்தில் அங்கே சென்றார். அங்கே அறை முழுவதும் பரப்பி வைக்கப்பட்டிருந்த பொருட்களைக் கண்டு திகைத்துப் போனார்.

அங்கு படுத்திருந்த அபியின் அருகில் ஆத்திரத் துடன் சென்றவர், "என்ன காரியம் பண்ணி வச்சிருக்க அபி....? எதுக்கு இப்படிப் பண்ணினே...?" என்று சத்தம்

போட்டவர், மனைவியை எழுப்பக் கூடத் தோன்றாமல், அதை எல்லாம் எடுத்து லாக்கரில் திணிக்க ஆரம்பித்தார். தான் அவ்வளவு சத்தம் போட்டும் மனைவி எழுந்திருக்க வில்லையே என்ற சந்தேகம் கூட அவருக்கு வரவில்லை. அவருக்கு இருந்த படபடப்பில் அதைக் கவனிக்கவும் நேரமில்லை.

அதே நேரம் வருமானத்துறை அதிகாரிகள் அங்கு வந்து நின்றனர். கையும் களவுமாக மாட்டியதில் ஸ்தம்பித்துப் போய் அவர் நிற்க... அவரை அங்கே நிற்க விடாமல் அப்புறப்படுத்தி வெளியே அழைத்துச் சென்றனர் அவர்கள்.

மீண்டும் அங்கு வந்தவர்களின் பார்வையில் அபிநயா விழ, அதில் இருந்த ஒரு பெண் அதிகாரி அவரது அருகில் சென்று எழுப்ப... அவரது உடல் சில்லென்று இருந்து, அவர் இறந்து வெகு நேரமானதை அந்த அதிகாரிக்குச் சொல்லாமல் சொல்லியது. அவர் அருகில் இருந்த மேஜை மீது இருந்த இரு காகிதத்தையும் எடுத்துப் படித்தவர், அதை மற்றவர்களிடம் கொடுக்க... அதில் ஒன்று மட்டும் மகாதேவனிடம் கொடுக்கப்பட்டது.

யோசனையாய் அதை வாங்கிப் பார்த்தவர், அதைப் பிரித்துப் படித்தார். "ஐ லவ் யூ தேவ்... என்னை மன்னிச்சிருங்க..." அது சொன்ன விஷயம் அவரது மூளையைத் தாக்க,

"அபி..." என்று கத்தியவர் அறையை நோக்கி ஓடினார். அவரது நிலை உணர்ந்தவர்களாய் அதிகாரிகள் அவருக்கு வழி விட்டனர்.

"அபி..." கதறிக் கொண்டு மனைவியின் அருகில் சென்றவரின் கண்களில் கண்ணீர் வழிந்தது.

என்னே ஆச்சரியம்...! பெத்த பெண்ணைக் கொன்ற போது வராத கண்ணீர்... மூத்த மனைவி இறந்த போது வராத கண்ணீர்... இப்போது மகனைக் கொல்ல முடிவு செய்த போதும் வராத கண்ணீர், அபிக்காக வந்தது.

இதுதான் காதலோ... அதனால்தான் ஆயுதம் தாங்கி இரக்கமில்லாமல் மக்களைக் கொன்று குவிக்கும் தீவிரவாதிக்கும் ஒரு பெண்ணின் மீது காதல் தோன்று கிறதோ... காதல் என்பது நல்லவன் கெட்டவன் என்பதை எல்லாம் தாண்டி, மனதில் பூக்கும் அற்புத அதிசயக் குறிஞ்சிப் பூவோ...!

விஷயம் கேள்விப்பட்டு ஹரியும் சங்கீதாவும் உடனே ஓடி வந்தனர். முன்னாள் அமைச்சரின் வீட்டில் வருமான வரித் துறையினர் திடீர் சோதனை நடத்தியதை மோப்பம் பிடித்த ஊடகவியலாளர்கள், அங்கு ஒன்று கூடினர். அதைத் தொடர்ந்து காவல்துறையும் அங்கு வந்து சேர்ந்தது.

அபிநயா காவல்துறைக்கு எழுதிய கடிதத்தை எடுத்து அவர்களிடம் கொடுத்தனர் வருமான வரித் துறை அதிகாரிகள். அதில் தெளிவாகத் தனது கணவரைப் பற்றிச் சொல்லியிருந்தார் அபிநயா.

"எனது மகன் ஹரியை அவருக்கு எதிராகச் சாட்சி சொல்ல விடாமல் தடுப்பதற்காக, அவனைக் கொல்ல அவர் சதித் திட்டம் தீட்டினார். அதைக் கேட்ட எனக்கு மனம்

வெறுத்துப் போய் விட்டது. உயிர் வாழவே எனக்கு விருப்பம் இல்லை. ஆனால், என் மகனைக் கொல்ல ஏற்பாடு செய்தவரை, நிம்மதியாக விட்டுச் செல்ல நான் விரும்பவில்லை. அதனால்தான் வருமான வரித் துறை அதிகாரிகளுக்குப் போன் செய்து வரவழைத்தேன். அதேபோல் எனது கணவரிடம் இருந்து எனது மகனைக் காப்பாற்றி அவனுக்கு உரிய பாதுகாப்பு கொடுங்கள். இது பற்றி நீங்கள் அவரிடம் விசாரணை செய்ய வேண்டும். எனது சாவுக்கு யாரும் காரணமில்லை...”

என்ற ரீதியில் கடிதம் எழுதியவர், ஹரியைக் கொல்வதற்காக மகாதேவன், யாருடன், எத்தனை மணிக்கு அவரது அலைபேசியில் இருந்து பேசினார் என்பதை எல்லாம் தெளிவாக எழுதி வைத்தவர், இறுதியாகத் தனக்குத் தனது மகன் ஹரிதான் இறுதிச் சடங்கு செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

தனத்தைப் போல் கோழையாகச் சாக விரும்பாமல், வீரமாய்த் தனது கணவனது இன்னொரு முகத்தைத் தோலுரித்துக் காட்டிய அபி, அதே சமயம் தனது காதலையும் கணவனுக்குப் புரிய வைக்கத் தவற வில்லை.

அவர் கடந்து வந்த பாதை தவறாக இருந்தாலும் இப்போது அவர் செய்த செயல் மிக்ச் சரியானதே.

மகனைக் கொலை செய்யத் திட்டம் தீட்டியதற்கான வழக்கிலும், அதிகமான சொத்துக்கள் சேர்த்த வழக்கிலும் மகாதேவன் கைது செய்யப்பட்டார். மனைவி இறந்ததில்

இறுகிப் போயிருந்தவருக்கு, அதன் பின் நடந்தது எதுவும் மூளையில் ஏறவில்லை. அத்தோடு அவரது மூளை வேலை நிறுத்தம் செய்து கொண்டது. அந்தளவுக்கு அபியின் மரணம் அவரின் மனதைத் தாக்கி இருந்தது.

ஹரியோ தந்தையை விடுத்துத் தாயின் உடல் அருகே அமர்ந்து கதறிக் கொண்டிருந்தான். அத்தனை முறை தான் அழைத்தும் வராத அன்னையைக் கண்டு அவன் மனம் வேதனையடைந்தது.

அப்படி வந்திருந்தால் அவரது உயிராவது தப்பி யிருக்குமே என்று அவன் மருகினான்.

இரு மனைவி இருந்தும், அவர்கள் இருவருக்கும் இறுதிச் சடங்கு செய்ய முடியாமல் போனது மாகாதேவ னின் துரதிஷ்டம். இது அவர் செய்த பாவத்தினாலோ...?

விஷயம் கேள்விப்பட்ட உதய் குடும்பத்தினர் விரைந்து அங்கு வந்தனர். ஹரிக்காக உமாவும் அங்கே வந்திருந்தாள். அபிநயாவின் தைரியமான செயலைக் கண்டு மனதுக்குள் அவர் மேலிருந்து கோபம் கூடச் சிறிது குறைந்தது அவளுக்கு.

மகன் இறுதிச் சடங்கு செய்ய, அபிநயாவின் உலக வாழ்வு முடிவுக்கு வந்தது.

அன்று நீதிமன்றத்தில் மகாதேவன் மீதான வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டு இருந்தது. ஹரி சாட்சி சொல்வதற்காக சங்கீதாவுடன் மதுரைக்கு வந்திருந்தான்.

அவன் தனக்குச் சாதகமாகச் சாட்சி சொல்ல வந்திருப்பதை அறிந்த உமா, அவனுக்கு நன்றி

கூறினாள். சகோதரன் என்ற வார்த்தை சொல்லளவில் இருக்காமல், செயலளவிலும் இருந்தவனைக் கண்டு அவளுக்கு மகிழ்ச்சியாய் இருந்தது.

அந்நேரம் அங்கு வந்த அழகைக் கண்டதும் கண்ணீர்ப் பெருக்கெடுக்க, அவனை நன்றியுடன் பார்த்த உமா, "அண்ணா..." என்றாள் மானசீகமாக.

அவளின் கண்ணீரைக் கண்டு அவனுக்கும் கண்கள் கலங்கின.

அவளின் வார்த்தையைக் கேட்டு அழகின் மனம் நிறைந்தது. அவளை அண்ணா என்று அழைக்கச் சொல்லி அவன் பட்டபாடு அவனுக்குத்தானே தெரியும்..!

அன்னை இறந்த வீட்டில் அவனைப் பார்த்தது... அப்போது இருந்த துக்கத்தில் உமாவால் அவனிடம் பேசக் கூட முடியவில்லை. அதன் பின் வழக்குச் சம்பந்தமாக அழகு அலைந்ததில், அவனாலும் அவளைப் பார்க்க முடியவில்லை. நீண்ட நாட்களுக்குப் பின் இன்றுதான் இருவரும் சந்திக்கின்றனர்.

அழகு நெகிழ்ந்த மனதைச் சமாளித்து கொண்டு, "அண்ணன்னா அது யாரு உமா...?" என்று சுற்றும் முற்றும் அழகு தேட... அதைக் கண்டு உமா,

"அழகு..." என்று பல்லைக் கடிக்க...

"ஆங்... என்னைத்தான் சொன்னியா உமா...? நான் கூட வேற யாரையோ சொல்லுறியோன்னுல்ல நெனைச்சேன்..."

"போடா அழகு... உன்னைப் போய் அண்ணான்னு சொன்னேன் பாரு... என்னை..."

"ம்... இதுதான் எங்க உமாவுக்கு அழகு... இதுல நீ வேற அண்ணே அது இதுன்னு சொல்லி எனக்கு ஹார்ட் அட்டாக் வரவழைச்சுப்புடாதே புள்ளே..." என்று அவன் சிரிக்க... உமா அவனைத் துரத்த... அவன் ஓட... வெகு நாட்களுக்குப் பின் கலகலப்பாய் இருந்த உமாவைச் சந்தோசத்துடன் பார்த்துச் சிரித்தனர் அங்கிருந்த அனை வரும்.

நீதிமன்றத்தில் காலையில் வழக்கிற்காகத் தயார் செய்து கொண்டிருந்த உதய்யின் முன் இருவர் நின்றனர். யோசனையாய் அவர்களைப் பார்த்தவன், அவர்கள் சொன்னதைக் கேட்டு மலர்ந்தான்.

முதலில் விசாரிக்கப்பட்ட ஹரியின் சாட்சியம் முக்கியமானதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. குற்றவாளிக் கூண்டில் இருந்த மகாதேவன், மறந்தும் மகனை நிமிர்ந்து பார்க்கவில்லை. ஆனால், ஹரி அவரை நன்கு உற்று நோக்கினான்.

மெலிந்து கறுத்து உயிர்ப்பு இல்லாமல் நின்றிருந் தவர் தோற்றம், அவன் மனதை வருத்தியது. என்ன இருந்தாலும் மார்பிலும் தோளிலும் தூக்கி வளர்த்த தந்தையன்றோ...! அவருடைய சுயநலத்துக்காகத் தன்னைக் கொல்ல முயன்றவர் என்ற எண்ணம் கூட அவனுக்குப் பின்னுக்குத் தள்ளப்பட்டு விட்டது. அவரது உருவ மாற்றத்துக்குக் காரணம் தன் அன்னையின்

மரணம் என்பது தெள்ளத் தெளிவாக அவனுக்குப் புரிந்தது. அவருக்குள்ளும் காதல் இருப்பது கண்டு அவனுக்கு அதிசயமாய் இருந்தது.

அதன் பின் உதய் அந்த இருவரை விசாரிக்க அனுமதி கேட்க, அதற்கு அனுமதி அளிக்கப் பட்டது. முதலில் வந்தவனைக் கண்டு உமா திடுக்கிட்டாள்.

"மாமா..." அவளையும் அறியாமல் அவளது உதடுகள் முணுமுணுத்தது.

ஆம்... வந்தது மாயாதேவியின் காதலன் ஆதித்யா தான். ஆளே அடையாளம் தெரியாத அளவுக்கு அவன் உருமாறி இருந்தான்.

அவன், ராஜரத்தினம்தான் தன் கண் முன்னால் தன் காதலியைக் கொலை செய்தான் என்று உறுதியாகக் கூறினான். அன்று தனக்கு இருந்த பயத்தில் கொலையைப் பற்றி வெளியில் மூச்சு விடவில்லை. அதனால் தன் மனச்சாட்சி தினமும் தன்னைக் கொன்று தின்பதாய்க் கூறியவன், இன்று உமா தொடுத்த வழக்கைப் பார்த்துத் தான் செய்த பாவத்துக்குப் பிராயச்சித்தம் தேடி இங்கு வந்ததாகக் கூறினான். அவனது சாட்சி மகா தேவனையும் ராஜரத்தினத்தையும் குற்றவாளிகளாக நிரூபித்தது.

அதன் பின் வந்தவர், அன்று உமாவைக் காப் பாற்றிய பெண்மணி. இன்று வயதின் காரணமாகச் சற்றுத் தளர்ந்திருந்தார். உமா சிறு வயது முதல் தன் தந்தையினால் கஷ்டப்படுவதைச் செய்தித் தாளில் படித்து

விட்டுத் தானும் வருந்தியதாகக் கூறியவர், உமாவிற்காகத் தான் இங்கு சாட்சி சொல்ல வந்ததாகக் கூறியவர்... கொலையாளியான ராஜரத்தினத்தை நன்கு அடையாளம் காட்டினார்.

கடைசியாக உமா விசாரிக்கப்பட்டாள். மகாதேவனும் அவரது இறந்து போன ஆதரவாளரும் பேசியதை ஒன்று விடாமல் அவள் கூற, அதை அப்படியே ஏற்ற நீதிபதி, வழக்கிற்கான தீர்ப்பை அப்போதே எழுதத் துவங்கினார்.

பெற்ற மகளைக் கொலை செய்ய முயன்றதற்காக மகாதேவனுக்கும், அதைச் செயலாற்றிய ராஜரத்தினத் துக்கும் மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார். பதிமூன்று வருடங்கள் கழித்து நீதி வென்றது. தனக்குத் தண்டனை கிடைத்ததைக் கூட உணராமல், தனக்குள் மூழ்கிப் போயிருந்தார் மகாதேவன்.

உமாவிற்குச் சந்தோஷத்தில் அழுகை வந்தது. அருகில் இருந்த மாரீஸ்வரியின் தோளில் சாய்ந்து கொண்டாள். அவளது கண்கள், தள்ளி நின்று கொண்டி ருந்த கணவனைத்தான் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தது. தனக்காக அற்புதமாக வாதாடித் தனது சதோதரியின் கொலைக்குத் தன் கணவன் நியாயம் செய்ததை எண்ணிப் பெருமிதம் கொண்டது அவளது மனம், அவனது மனைவியாய்.

நீதிமன்றத்தை விட்டு வெளியில் வந்ததும், உமா உதய்யைத் தேடிச் சென்று அணைத்துக் கொண்டாள். பெற்றோர் இருந்தாலே மனைவியை விட்டு விலகி

இருப்பவன், இன்று அத்தனை பேர் முன்னிலையில் அவளை அணைத்துக் கொண்டு நின்றிருந்தான், அவளது மனநிலையை அறிந்தவனாய்.

அப்போது ஆதித்யா அங்கு வந்தான். "உமா..." என்று அவன் அழைக்க... அவன் அழைப்பில் திரும்பிப் பார்த்தவள், வெறுப்புடன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

"உமா, என்னை நீ மன்னிச்சிரு... அன்னைக்கு நான் நடந்து கொண்டது பக்கா சுயநலம்தான்... ஆனா அதுக்கு அப்புறம் மாயாவை நினைக்க நினைக்க எனக்கு என் மேலே ஆத்திரம் ஆத்திரமா வந்திச்சு... அவள் மேலே அஞ்சு வருசமா வச்ச காதல் என்னைப் பார்த்துக் கேலி செஞ்சுச்சு... காதலிச்ச பெண்ணைக் காப்பாத்தத் துப்பில்லாத நான் எதுக்கு உயிரோட இருக்கணும்னு தற்கொலை முயற்சி கூடப் பண்ணிப் பார்த்தேன்... பட் அதுக்குக் கூட என்னைப் பிடிக்கலை போல... எங்க வீட்டுல என்னைக் காப்பாத்திட்டாங்க... வாழவே பிடிக்காம உயிர் வாழ்ந்திட்டு இருக்கேன்... உனக்கு ஒண்ணு தெரியுமா...! நான் இப்போ வரைக்கும் கல்யாணமே பண்ணிக்கலை..." அதில் ஆச்சரியம் அடைந்தவளாய் அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

"ஆமாம் உமா... ஒரு பெண்ணோட உயிரைக் காப்பாத்தத் துப்பில்லாத நான் எப்படி இன்னொரு பொண்ணுக்கு நல்ல கணவனா, அவளோட கற்பைக் காப்பாத்துபவனா இருக்க முடியும்...? மாயாவைத் தவிர

இன்னொரு பொண்ணை என் மனைவியாகக் கற்பனை பண்ணிக் கூடப் பார்க்க முடியலை. இப்பவும் மாயாவுக் காகத்தான் வாழறேன்... என் மாயா என்னை மன்னிப்பாள்னு எனக்கு நம்பிக்கை இருக்கு... அதே மாதிரி நீயும் என்னை மன்னிச்சிரு..." என்றவன் சொன்ன செய்தி, உமாவின் மனதை நெகிழ்த்தினாலும்... அவன் செய்த செயல் அவளால் மன்னிக்க முடியவில்லை.

"உமா... அவரை மன்னிச்சிரு உமா... தப்பை உணர்ந்து மன்னிப்புக் கேட்குறார்ல..." உதய் சொல்லவும்.

"சரி..." என்றாள் முணுமுணுப்பாய்... அதுவும் கணவனின் சொல்லுக்காக.

அதில் முகம் மலர்ந்த ஆதித்யா, "என்னை மன்னிச்சது உண்மைன்னா இதை வாங்கிக்கோ..." என்று அவள் முன் தன் கையை நீட்டினான்.

அவன் கையிலிருந்த பொருளைக் கண்டு ஆச்சரி யத்தில் அவளது கண்கள் அகல விரிந்தது... அவள் மனதைத் துக்கமும் மகிழ்ச்சியும் சரி பாதியாய் ஆக்கிரமித்தது. அதில் இருந்தது ஆதித்யா எப்போதும் அவளுக்கு வாங்கி கொடுக்கும் அவளுக்குப் பிடித்தமான சாக்லெட்.

கண்கள் பனிக்க மறுத்தவளைக் கண்டு, அவன் முகம் சுருங்கியது. "அப்போ நீ என்னை மன்னிக்கலை... நீ மன்னிச்சேன்னா உன் அக்காவும் என்னை மன்னிச்சது போல... நீயே என்னை வெறுத்தா...?" அவன் முகம் வேதனையில் கசங்கியது.

"உமா, இவ்வளவு சொலறாருல்ல... எடுத்துக் கோயேன்..."

உதய் அவளை வற்புறுத்த... உமா அதை அரை மனதாய் எடுத்துக் கொண்டாள்.

உதய் அதைப் பிரித்து அவள் வாயில் வைக்கப் போக, அதை அவள் மறுத்தாள் அக்காவின் நினைவில்.

"உங்கக்காவுக்குக் கெடைச்ச நீதியைக் கொண்டாட வேணாமா...?"

உதய்யின் வார்த்தையில் அவளது உதடுகள் பிரிந்து, அந்தச் சாக்லெட் கட்டியை உள் வாங்கிக் கொண்டது.

அன்று எந்த சாக்லெட்டுக்காகத் தவறான ஒருவனை அக்காவின் கணவனாக அடையாளம் காட்டி, அவளின் மரணத்திற்குத் தான் காரணமாகி விட்டோமோ என்று இத்தனை வருடங்களாக வேதனைப்பட்டாளோ... இன்று அதே அக்காவின் மரணத்திற்கு நியாயம் செய்து விட்ட அக்காவின் காதலனை மன்னித்தவள், அந்த இனிப்பை யும் மகிழ்ச்சியுடன் உண்டாள்.

அதைக் கண்டு ஆதித்யா மனதில் என்றும் இல்லாத வண்ணமாக நிம்மதி நிறைந்தது.

அவளுக்குச் சாதகமாகச் சாட்சி சொன்ன அந்தப் பெண்மணியையும் சந்தித்து நன்றி கூறி விட்டுக் கணவனுடன் வந்த உமா, மகாதேவனின் வக்கீல் பத்திரிகையாளர்களிடம் பேசியதைக் கேட்டு அப்படியே நின்றாள்.

"இந்தத் தீர்ப்பை எதிர்த்து நாங்கள் உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடுப்போம். என்னுடைய கட்சிக்காரர் நிரபராதி என்ற நிரூபிக்கும் வரை நான் ஓய மாட்டேன்..." என்று அந்த வக்கீல் பேட்டி கொடுத்தான்.

அதைக் கேட்டு ஸ்தம்பித்து நின்ற உமாவின் கையைப் பிடித்து ஆறுதல் படுத்திய உதய், "அவன் ஹை கோர்ட் என்ன சுப்ரீம் கோர்ட் போனாலும் நான் இருக்கேன் உனக்கு... நான் பார்த்துக்கிடறேன் உமா..." என்று அவளின் கவலையைப் போக்க... அதில் மனம் தெளிந்த வள், அவனுடன் அவனது வண்டியை நோக்கி நடந்தாள்.

அப்போது ராஜரத்தினத்தின் கையாள் ஒருவன் உதய்யை கண்டு கோபம் கொண்டவனாகக் கத்தியை எடுத்துக் கொண்டு அவனைக் குத்த வர, ஏதோ யோசித்து கொண்டு சென்ற உதய், அவனைக் கவனிக்கவில்லை. ஆனால், உமா அதைக் கவனித்தவள், அவன் உதய்யைக் குத்த வரும் முன் இருவருக்கும் இடையில் வேகமாய் அவள் பாய்ந்தாள்.

உதய் மீது விழ வேண்டிய கத்திக் குத்தை அவள் தன் வயிற்றில் தாங்கி நின்றாள். கண்ணிமைக்கும் நேரத்தில் எல்லாம் நடந்து முடிந்து போனது.

இரத்த வெள்ளத்தில் கீழே விழுந்தவளைக் கண்டு பதறிப் போய் உதய் தன் இரு கரம் கொண்டு தாங்கிப் பிடித்தான்.

"உமா... உமா..." என்று அவளின் கன்னம் தட்டி அரட்டியவனைக் கண்டு உமா மெல்லப் புன்னகைத்தாள்.

"ஏன்டி இப்படிப் பண்ணினே...?" கண்ணீர் மல்கக் கேட்டவனைக் காதலாய்ப் பார்த்தவள்,

"என் உயிரை விட எனக்கு உங்க உயிர்தான் பெரிசு... என்னை விட எனக்கு நீங்கதான் முக்கியம்... ஐ லவ் யூ உதய்..." என்றவளின் கண்கள் தாமாகச் செருக...

"உமா..." உதய் கத்திய கத்தலில். அந்த நீதிமன்ற வளாகமே கிடுகிடுத்தது.

26

உமாவைக் கத்தியால் குத்தியவனை அங்கிருந்த காவலர்கள் மடக்கிப் பிடித்து இழுத்துச் சென்றனர். அவன் உதய்யை அசிங்கமாய்த் திட்டியபடி செல்ல, அதைக் கவனிக்கும் மன நிலையில் உதய் இல்லை.

அவனது கவனம் எல்லாம் தன் மடி மீது தாங்கி யிருந்த உமாவின் மீதே இருந்தது.

அவள் சுயநினைவு இழந்ததைக் கண்டு, அவளைத் தூக்கிக் கொண்டு மருத்துவ மனைக்குச் செல்ல வேண்டும் என்ற எண்ணம் கூடத் தோன்றாமல்... ஸ்தம்பித்துப் போயிருந்தான் அவன்.

உதய் குடும்பத்தினர் வீட்டிற்குக் காரிலேறப் போகும் போதுதான் இந்தச் சம்பவம் நடக்க, ஹரியும் அழகுவும் பதறிப் போய் ஓடி வந்தனர்.

தங்கவேலும் மாரீஸ்வரியும் அதிர்ச்சியுடன் அவர் களின் பின் விரைந்து சென்றனர்.

விரைந்து செயல்பட்ட ஹரி, தங்களது காரில் உதய்யையும் உமாவையும் ஏற்றியவன், தானும் அவர்களோடு ஏறியமர்ந்தவன், உதய்யின் பெற்றோரை அழைத்து வரும் பொறுப்பை அழகுவிடம் ஒப்படைத்து விட்டு மருத்துவ மனை நோக்கிப் புறப்பட்டான்.

அடுத்து கடந்த ஒவ்வொரு நொடியும் உதய்க்கு நரகமாய் இருந்தது. அவனது மனம், மூளை எல்லாம் ஆக்கிரமித்து இருந்த ஒரே சொல் உமா... உமா... உமா மட்டுமே... எதற்குமே கலங்காதவன், மனைவிக்காகக் கலங்கி அமர்ந்ததைக் கண்டு, அவனது பெற்றோருக்குக் கூட கண்கள் கலங்கின.

எல்லாரையும் ஒரு நாள் முழுவதும் தவிக்க விட்டு விட்டு, மறுநாள் உமா கண் விழித்தாள். குடும்பத்தினர் ஒவ்வொருவராய் அவளின் நலம் விசாரித்து விட்டுக் கணவன் மனைவிக்குத் தனிமை கொடுத்து வெளியில் சென்றனர்.

உமாவின் நலுங்கிய தோற்றம் ஒரு பக்கம் அவனை வேதனைப்படுத்த, தனக்காக அவளது உயிரையும் கொடுக்கத் துணிந்த உமாவின் காதல் அவனை முற்றிலுமாய் அலைக்கழிக்க, அவன் மொத்தமாய்ச் சரணடைந்தான், அவளது காலடியில்.

அவளது கையை இறுக்கிப் பிடித்துக் கொண்டு அமர்ந்திருந்தவன், "என் மேல அவ்வளவு லவ்வாடி..." என்று கேட்டவனின் குரலில் இருந்த காதல் கலந்த வலி, அவளையும் தாக்கியது. இருவரும் பட்ட வேதனைகள்

இத்துடன் முடியட்டும் என்று நினைத்தவள்... அதை மாற்ற எண்ணியவளாய்,

"உதய்... உங்க உம்மாவுக்கு ஒரு உம்மா கொடுக்க மாட்டீங்களா...?" குறும்புக் குரலில் கேட்டவள், நாவால் தன் உதட்டைத் தடவியபடி கேட்க... அவள் கேட்ட விதத்தில் அவனுக்குக் கவலை மறந்து சிரிப்பு வந்தது.

"ஏன்டி... எந்த நேரத்துல எதைக் கேக்கணும்னு வெவஸ்தை இல்லையா...?" சிரித்துக் கொண்டே அவன் சொல்ல...

"உதய்... உம்மா..." அவள் அவளது பிடியில் நிற்க...

"ம்.... விட மாட்ட..." என்றவன், சிரித்தபடி அவள் முகம் நோக்கிக் குனிந்தான்...

கண்களை மூடிக் கொண்டு எதிர்பார்ப்பு கலந்த ஆர்வத்துடன் உதடுகள் துடிக்கப் படுத்திருந்தவளின் தோற்றம், அவனின் கண்களைக் கலங்கச் செய்து மனதையும் கலங்கச் செய்தது. தன்னைத் தேற்றிக் கொண்டு வறண்டு காய்ந்து போய் உயிர்ப்பை இழந்திருந்த அவளது உதட்டில், தனது ஈர உதட்டால் ஒத்தடம் கொடுப்பது போல் மென்மையாய் முத்தமிட்டுத் தனது உயிரைக் கொடுத்து அவளது உயிர்ப்பை அவன் மீட்டெடுத்தான். காமம் இல்லா இதழ் முத்தமும் உண்டு என்பதை இருவருமே அன்றுதான் உணர்ந்தனர்.

அவளது உடல் நிலையைக் கருதி வினாடி நேரத்தில் விலகியவனைக் கண்டு அவளது முகம் வாடியது. "என்னா

மச்சான்... ஸ்ட்ராங்கா ஒண்ணு கொடுப்பீங்கன்னு பார்த்தா... இப்படிப் பண்ணிட்டீங்களே..." கேலி செய்தவளின் குறும்புக் குரலில் அவனுக்கும் சிரிப்பு வந்தது.

"உன் உடம்பு இருக்கிற இருப்புக்கு ஸ்ட்ராங்கா வேணுமா... ஹாஸ்பிட்டல்ல ரொமான்சாடி கேக்குது உனக்கு...? உடம்பு சரியாகட்டும், ஸ்ட்ராங்க் என்ன... டபுள், ட்ரிபுள் ஸ்ட்ராங்க்காக் கொடுக்கிறேன்..." என்றபடி அவள் நெற்றியில் விளையாட்டாய் முட்டியவன், அதற்கு மேல் தாங்க முடியாதவனாய்ச் சட்டென்று உடைந்து போய் அவளின் முகம் மீது முகம் வைத்துக் கண்ணீர் உகுத்தான். அவனது முதுகு குலுங்கியது அழுகையில்.

அவனது அழுகையில் திகைத்துப் போன உமா, அவனை அணைத்து ஆறுதல் படுத்த... அதில் இன்னமும் அவனது அழுகை கூடியது. எதற்கும் கண் கலங்காதவன், தன் பொருட்டுத் தன் மீது வைத்த நேசத்தின் பொருட்டு அழுதது அவளது காதலை அதிகரிக்கச் செய்து, அவளின் கண்களையும் கலங்கச் செய்தது. இரு மனங்கள் இணைந்தது போல் அவர்களது கண்ணீரும் ஒன்றுடன் ஒன்று கலந்து இணைந்து அவளது காதோரம் வழிந்து ஓடியது.

"ஏன்டி நமக்கு மட்டும் இப்படி எல்லாம் நடக்குது...? மனசுல காதல் இருந்தும் நம்மைச் சேர விடாம இந்த விதி ஏன் இப்படிச் சதி செய்யுது...? இப்போ நீ தவிக்கிறதைப் பார்க்கிறப்போ என்னால் தாங்க முடியலைடி..." அவனது குரலில் நிரம்பி வழிந்த ஏக்கம், தாபம் புரிந்தவளின் அணைப்பு இன்னமும் இறுகியது.

அவள் உணர்ச்சி வசப்படுவதை உணர்ந்து, அவளை தான் விலகி அமர்ந்தான்.

"உதய்..." அவள் உணர்ச்சிக் கொந்தளிப்பில் இருப்பதைக் கண்டு, அவன் தன்னைத் தானே மன நொந்து கொண்டான்.

"உமா... நமக்குக் காலம் நீண்டு இருக்கு..." என்றவன், அவளின் மனதை மாற்றும் பொருட்டு, "நூறு வயசு வரைக்கும் உயிரோட இருந்து நீ என்னைக் கொடுமைப் படுத்துவேன்னு நான் நெனச்சிருக்கேன்... நீ என்னடான்னா இப்பவே இப்படிக் கண்ணு கலங்குற..."

"அதென்ன நூறு வயசு... கஞ்சூஸ்... ஒரு ஆயிரம்... இல்ல இல்ல லட்சம்... இல்ல இல்ல கோடி..." என்று பேசிக் கொண்டே போனவளின் வாயைக் கை கொண்டு மூடியவன்,

"ஆத்தாடி! அம்புட்டு வருசம் எல்லாம் என் உடம்பு அடி தாங்காது... என்னய ஆள விடு தாயி..."

போலியாக அவன் அலறிய அலறலில் வெளியில் இருந்தவர்கள் என்னவோ ஏதோ என்று பதற்றத்துடன் உள்ளே எட்டிப் பார்க்க... அவர்களைக் கண்டு இருவரும் அசடு வழிந்தனர்.

அன்று உமாவைப் பார்க்க தலைவாணி வந்திருந்தாள்.

உமாவிடம் நலம் விசாரித்து விட்டு வெளியில் வந்தவள், அப்போதுதான் அங்கு வந்து கொண்டிருந்த அபூர்வாவைக் கண்டதும் ஒரு நொடி தயங்கி நின்றாள்.

அவளைக் கண்டதும் அவனும் மேலே செல்லாமல் தேங்கி நின்றவன் அவளைப் பார்த்து, "நல்லாயிருக்கியா புள்ள...?"

"ம்..." என்று விழிகளை உயர்த்தி அவனது விழி களைச் சந்தித்தவள்... மறுகணம் தலையைக் குனிந்து கொண்டாள்.

வெட்கம் கொள்ளும் பெண்கள் அழகு என்றால்... தன்னைக் கண்டு வெட்கப்படும் பெண் அந்த ஆணின் கண்ணுக்குப் பேரழகியாய்த் தெரிவர். அப்படித்தான் கலை அழகின் கண்ணுக்கு உலக அழகியாகத் தெரிந்தாள்.

என்ன பேசுவது என்று தெரியாமல் சிறிது நேரம் மௌனம் காத்தார்கள் இருவரும்.... அழகு தான் மௌனம் கலைந்தவன், "நீ எப்படி போற? பஸ்சிலயா... இல்ல ஆட்டோ புடிச்சி தரவா...?" என்று கேட்க,

"பஸ்ல தான்..." என்றவள், "நான் வாரேன்..." என்று கிளம்ப எத்தனிக்க...

"இரு புள்ள! நானும் வாரேன்..." என்றவன் அவ ளுடன் இணைந்து நடந்தான்.

"நீங்கத்தே அண்ணிக்கு உதவுனதா அண்ணே சொன்னாக! ரொம்பத் தேங்க்ஸ். பாவம் இல்ல அண்ணி."

அவளின் பேச்சை ஆமோதிக்கும் வண்ணம் தலையை ஆட்டினான் அழகு.

"உண்மையில நீங்க ரொம்பத் தைரியசாலி தான்.. இப்படி ஒரு வீரமான ஒருத்தரை நான் பார்த்தது இல்ல..." அவளது பேச்சில் கண்கள் மின்ன அவளைப் பார்த்தான்.

தன் காதலி வாயால் வீரன் என்ற வார்த்தையைக் கேட்பது எந்தவொரு ஆணுக்கும் கர்வத்தையும், பெரு மிதத்தையும் ஒருங்கே கொடுக்கும். அதை அழகு இப்போது அனுபவித்தான். மீசையை முறுக்கிக் கொண்டு நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு நடக்க வேண்டும் என்று தோன்றிய உணர்வைச் சுற்றுப்புறம் உணர்ந்து தன்னை அடக்கிக் கொண்டான்.

"உமாவுக்காக நான் எதையும் செய்வேன். அவளுக் காக இதை நான் செய்ய மாட்டேனா..."

உமாவுக்குப் பரிந்து அழகு பேசியதில் அவளின் மனதில் உமாவின் மீது சிறிது பொறாமை தோன்றியது. காதலில் முக்கிய இடம் வகிப்பதில் பொறாமைக்கு முதலிடம் எப்போதுமே உண்டு.

பேருந்து நிலையம் வந்து நின்றவர்களிடையே மீண்டும் மௌனம் வந்து அழையா விருந்தாளியாய் வந்து ஒட்டிக் கொண்டது. அவளது பேச்சில் அவன் மகிழ்ச்சியில் திளைத்திருக்க... அவன் மனதில் தன்னை விட மற்றொரு பெண்ணுக்கு முக்கியத்துவம் கொடுப்பதை அவள் மனம் ஆதரிக்கவில்லை.

ஏனோ அவன் தனக்கு மட்டும் சொந்தமாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் அவள் மனதில் ஓட, அதில் திடுக்கிட்டுப் போனாள் கலை.

அந்த வீரத் தமிழச்சி மனதையும் காதல் வெட்டி வீழ்த்தி விட்டது. ஒரு நொடி நேரம் மட்டுமே யோசித்தவள், அந்த மண்ணின் மணத்திற்குரிய வெட்கம், தயக்கம்

எல்லாப் பெண்களிடம் இருந்தாலும் அதே போல அவர் களிடத்தில் வீரமும் இருக்கும். அதே போல் கலையின் மனதில் இருந்த வீரம் அவளின் காதலைச் சொல்ல உந்தித் தள்ளியது.

அவள் செல்ல வேண்டிய பேருந்து வந்ததும் நொடி நேரம் கூடத் தாமதிக்காமல், "உங்க வீரம் மட்டும் இல்ல... உங்களையும் எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு... " என்றவள் ஓடிச் சென்று பேருந்தில் ஏறிக் கொள்ள...

அவள் சொன்னது கேட்டு முதலில் குழம்பிய அழகு, பின் புரிந்தவுடன் கர்வமாய்த் தன் மீசையை முறுக்கியபடி அவளைப் பார்த்தான். அதே சமயம் அவளது தைரி யத்தை மனதுக்குள் மெச்சாமல் அவனால் இருக்க முடிய வில்லை

ஜன்னலோர இருக்கையில் அமர்ந்தவள் அவனைப் பார்த்துப் புன்னகைக்க... அவளது ஒற்றைப் புன்னகை யில் அவனது உலகம் வண்ணமயமானது.

உமா மருத்துவ மனையில் இருந்து வந்து இரண்டு மாத காலமாகிறது. அவளது உடலும் ஓரளவு தேறிவிட்டது.

ஆனாலும் அவளை நோயாளியாய்த் தான் பார்த் தான் உதய்.

அதில் அவன் மேல் கடுமையான கோபத்தில் இருந்த உமா, தன் மனதை எப்படி அவனுக்குப் புரிய வைப்பது என்று தெரியாமல் குழம்பிப் போனாள்.

அன்று ஏனோ உமாவின் முகம் சரியில்லாததை உணர்ந்த ஜெயஸ்ரீ அவளுக்கு ஆதரவாக, "என்ன உமா!

எல்லாம் சரியாகிப் போச்சுன்னு நினைச்சேன். இப்போ பழையபடி உன் முகம் டல்லடிக்குதே... என்ன அய்யனார் மறுபடியும் பிரச்சினை பண்றாரா...? சொல்லு. நான் வந்து தட்டிக் கேட்கிறேன்..." என்று கோபப்பட,

"ம்ப்ச்... அதெல்லாம் ஒண்ணும் இல்லைடி..." உமா சலித்துக் கொள்ள...

"உன் பேச்சிலேயே ஒரு விரக்தி தெரியுது. உன் பிரச்சினை என்னன்னு என்கிட்ட சொல்லு...?"

"இன்னமும் அவரு என்னை ஒரு பேஷண்ட்டா நான்டி பார்க்கிறாரு..." சோகமாகச் சொன்ன உமாவைக் கண்டு முறைத்த ஜெயஸ்ரீ,

"கைவசம் டாக்டரை வச்சுக்கிட்டு இதுக்கு எல்லாமா கவலைப்படறது...?" என்றவள், தனது பையில் இருந்து ஒரு காகிதத்தை எடுத்து எதையோ மடமடவென எழுதி அவளிடம் கொடுத்தாள்.

கோழி கிண்டியது போல் அவள் கிறுக்கியிருந்தது மருத்துவரான உமாவுக்குக் கூடப் புரியவில்லை...

"என்னடி எழுதி இருக்க? ஒண்ணுமே புரியல..."

"உன்னை மாதிரி பேபிக்கு எல்லாம் இது புரியாது!" என்ற ஜெயஸ்ரீ, அவள் காதில் ரகசியம் பேச... அவள் சொல்லச் சொல்ல உமாவின் முகம் சிவந்து போனது.

"ச்சீ... த்தூ... ஜெய் குரங்கே... இதையாடி எழுதிக் கொடுத்த..." என்று காகிதத்தை அவள் மேல் தூக்கி எறிந்தவள் அவளை அடிக்கத் துவங்க...

"ஏய்! இதுல என்னடி இருக்கு... இத்தனையும் நெட்டில் இருந்து எவ்வளவு கஷ்டப்பட்டு சுட்டு மனப்பாடம் பண்ணி வச்சிருக்கேன், தெரியுமா... நீ என்னடான்னா ஈசியா ச்சீ... த்தூன்னு சொல்ற..."

ஏனெனில் ஜெயஸ்ரீ எழுதியது எல்லாம் அந்த மாதிரிச் சமாச்சாரம் அடங்கிய மருந்துகளின் பெயர்கள்.

"கர்மம்... கர்மம். இதைப் பார்க்கத்தான் நாள் பூரா நெட்ல உட்கார்ந்து இருக்கியா...? நான் கூட மேலே படிக்கிறதுக்குத்தான் பார்க்கிறியோன்னு நினைச்சேன்... பக்கி நெட்ல மேய்ஞ்ச லட்சணத்தைப் பாரு..."

இன்னமும் கோபம் அடங்காமல் தோழியின் முதுகில் நாலு அடி வைத்தாள் உமா.

"இதுலதான்டி நான் ஸ்பெஷலைஸ் பண்ணப் போறேன்... அது உனக்குத் தெரியாதா...?" என்று கூறி, உமாவுக்கு நெஞ்சு வலி வரவழைத்தாள் ஜெயஸ்ரீ.

"இது என்னடி புதுக் கூத்தா இருக்கு...?" உமா வாயைப் பிளக்க...

"புதுசு எல்லாம் இல்லை... எல்லாம் பழசுதான்... தமிழ்நாட்டுல மாத்ருபூதம், நாராயணரெட்டிக்கு அடுத்து இந்த ஜெயஸ்ரீ தான்னு பேரு வாங்குறேனா இல்லை யான்னு பாரு..." என்ற ஜெயஸ்ரீயைத் தோழியாய்ப் பார்க்காமல் மருத்துவராய்ப் பிரமிப்பாய்ப் பார்த்தாள் உமா.

"ஆமாம் உமா... நம்ம நாட்டில் முறையான செக்ஸ் கல்வி இல்லாமத்தான் இத்தனை பாலியல் வன்முறைக்

கொடுமைகள் நடக்குது... அதை எல்லாம் ஒரு டாக்டரா மாத்தணும்னு நான் நினைக்கிறேன்... சின்ன வயசில் இருந்து நமது குழந்தைகளுக்குப் புரியற மாதிரி இதை எப்படிச் சொல்லிக் கொடுக்கிறது என்பதைப் பற்றி ஆராய்ச்சி செஞ்சு புக் எழுதணும்.

"எனக்கு முன்னாடி எத்தனையோ பேர் இதைச் செய்திருக்கலாம்... ஆனா, இதை நான் வித்தியாசமா செய்யணும்னு நினைக்கிறேன்... வருங்காலத்திலாவது பெண்களைச் சக தோழியாய், மனுசியாய் மதிக்கும் வளமான, வலிமையான சமுதாயம் படைக்கணும்கிறது தான் என்னோட ஆசை..." என்ற தோழியைப் பெருமை பொங்க அணைத்துக் கொண்டாள் உமா.

"நிச்சயம் நீ சாதிப்ப ஜெய்... எனக்கு நம்பிக்கை இருக்கு..." என்றாள் மகிழ்ச்சியுடன்.

மாலை உமாவைக் கூட்டி செல்ல உதய்யிடம் ஜெயஸ்ரீ, "சார் காதலிச்சுக் கல்யாணம் பண்ணிக்கிட்டா மட்டும் போதாது. வொய்ஃபோட மனசையும் புரிஞ்சு நடந்துக்கணும்..." படபடப்பாய்ப் பேசியவள் அவனின் பதிலை எதிர்பார்க்காமல் சென்று விட்டாள்.

"என்னடி இது... உன் ஃபிரெண்டுக்கு என்னாச்சி... இப்படிப் பேசிட்டுப் போகுது அந்தப் புள்ள... உன் மனசு கஷ்டப்படுற மாதிரி நான் நடந்துக்குறேனா...?" என்று கேட்ட கணவனிடத்தில் உமா என்ன்தான் சொல்வாள்!

"அவளுக்கு வேற வேலை இல்லை. நீங்க வண்டி எடுங்க..." என்றவள் பின்னால் ஏற அவன் வண்டியைக் கிளப்பினான்.

அன்று இரவு அறைக்குள் வந்த உமாவின் வயிற்றில் இருந்த காயத்தின் தழும்பு மீது அது மறைவ தற்கான களிம்பை எடுத்து உதய் கர்மசிரத்தையுடன் பூச... அவன் விரல்கள் அவளது வயிற்றில் ஊர்ந்ததில் அவள்தான் அவஸ்தையாய் நெளிந்தாள்.

"ஏய் அசையாமப் படுடி..." என்று அவன் அதட்ட...

அவளோ, "ஜடம்... ஜடம்..." என்று வாய்க்குள் முணு முணுத்தாள்.

"படிக்கிறதுதான் பெரிய டாக்டரு படிப்பு... ஆனா தன்னோட உடல் காயத்தை எப்படிப் பாத்துக்கிறதுன்னு தெரியாது. எல்லாம் நான்தேன் சொல்லிக் கொடுக்க வேண்டி இருக்கு..." அவன் அலுத்துக் கொள்ள...

"எல்லாம் சரியாப் போச்சு. நீங்க ஒண்ணும் மருந்து தடவ வேண்டாம்..." என்று கோபத்துடன் தனது சேலை முந்தானையைச் சரி செய்தவள், திரும்பிப் படுத்துக் கொண்டாள்.

அவன் கைகளால் மருந்து தடவ வேண்டும் என்ப தற்காகவே சேலையைக் கட்டும் அவளது மனதை அறியாத மக்காய் இருந்தான் அவளது மச்சான்.

"க்கும். இந்தக் கோபத்துக்கு ஒண்ணும் கொறைச்சல் இல்லை..." என்று நொடித்துக் கொண்டே எழுந்தவன், கையைக் கழுவிக் கொண்டு வந்து அவளை அணைத்துக் கொண்டு படுத்தான்.

"நான் கோபமா இருக்கேன்..." என்று அவள் முறுக்கிக் கொள்ள...

"ஆனா, நான் கோவமா இல்லையே..." என்று சிரித்தபடி சொன்ன உதய், அவள் மேலிருந்த கையை விலக்காமல் உறங்க... அவள்தான் கடுங்கோபத்தில் உறங்காமல் தவித்திருந்தாள்.

மறுநாள் உமாவின் தவிப்பை உணர்ந்த நித்யா அவளின் மனம் புரிந்த சகோதரியாய் அந்தக் காரியத்தைச் செய்தாள்.

மதியம் உணவு உண்ண வந்த உதய் அங்கிருந்த உணவு வகைகளைக் கண்டதும் நக்கல் சிரிப்புடன்,

"என்ன அண்ணி... இன்னைக்குச் சாப்பாட்டுல பாக்யராஜ் ஐட்டமா போட்டுத் தாக்கி இருக்கீங்க..." என்று கேட்டுக் கொண்டே அண்ணனிடம் தணிந்த குரலில்,

"அண்ணே! அண்ணி அஜித்துக்குத் தம்பியோ, தங்கச்சியோ எதிர்பார்க்கிறாங்கன்னு நெனக்கிறேன்... சீக்கிரம் ரெடி பண்ணிரு..." என்று ரகசியம் பேச...

"கொழுந்தனாரே! இது எம் புருசனுக்கு ஆக்குனது இல்ல... உங்களுக்கு ஆக்குனது. நல்லாச் சாப்பிடுங்க..." என்று அவன் இலை நிறைய முருங்கைக் காய்களை எடுத்து வைக்க அப்போதுதான் உதய்க்கு உறைத்தது.

"ஹி... ஹி... அது வந்து அண்ணி... " என்று அசடு வழிய...

"போதும் கொழுந்தனாரே... ரொம்பத்தே வழியுது. துடைச்சுக்கோங்க..." என்று நித்தியா தன் அருகில் நின்று இருந்த உமாவின் முந்தானையை இழுத்து உதய்யிடம் நீட்ட...

அதற்கும் அசடு வழிந்தவன் வேக வேகமாய்ச் சாப்பிட்டு விட்டு மனைவியிடம் கூடச் சொல்லிக் கொள்ளாமல் தப்பித்தோம், பிழைத்தோம் என்று அங்கிருந்து ஓடி விட்டான்.

அன்றிரவு வீட்டிற்கு வந்த உதய்யின் பார்வையில் வேறுபாட்டை உணர்ந்த உமா,

'அட! நம்மாளுக்குக் கூட ஒரு வழியா பல்ப் எரிஞ் சிருச்சே...' நக்கலாய் நினைத்துக் கொண்டாலும்... அவனது பார்வை அவளுக்குச் சிலிர்ப்பை ஏற்படுத்தத் தவறவில்லை.

வேலையை முடித்து விட்டு அறைக்குள் நுழைந் தவளை இரு கைகளில் அள்ளிக் கொண்டவன், "ஏன்டி, உனக்குச் சப்போர்ட்டுக்கு அண்ணியவா கூப்பிடுற... உன்னைய..."

"அவங்ககிட்ட நான் ஒண்ணும் சொல்லலப்பா... அவங்களே பார்த்திருப்பாங்க. கொழுந்தன் இந்தளவுக்கு ட்யூப் லைட்டா இருக்காரேன்னு... அதான் நேரடியா அவங் களே களத்துல இறங்கிட்டாங்க போல..."

நமட்டுச் சிரிப்புடன் சொன்ன உமாவைப் படுக்கை யில் சரித்தவன், "நானாடி ட்யூப் லைட்டு... " என்றவனின் பார்வை கணவனாக மாறித் தனது காதலைச் செயலில் அவளிடம் காட்டத் துவங்கினான்.

அவ்வளவு நாள் அடக்கி வைத்திருந்த அவனது காதல் காட்டாற்றில் அவள் அடித்துச் செல்லப்பட்ட போது தாங்க முடியாது மூச்சுத் திணறியவள்...

"உதய்... முடியல உதய்... ப்ளீஸ் மெதுவா..." என்ற வளின் வார்த்தையில் அவள் உடல் நிலையை உணர்ந்த வனாய் அவன் பதறி விலகினான்.

"இதுக்குத்தேன்டி! நான் விலகியே இருந்தேன்... உன்கிட்ட வந்தாலே என்னை என்னால கண்ட்ரோல் பண்ண முடியலடி..."

பாதி வருத்தமாகவும் மீதியை ஏக்கமாகவும் சொன்ன வனைக் கண்டு அவள் மனம் அவன்பால் உருகியது.

அவன் தனக்காகத் தன் நலத்திற்காகத்தான் தள்ளி இருந்திருக்கிறான் என்பதை உணர்ந்தவள் அவன் முகத்தைத் தன் கைகளில் தாங்கிச் சற்று முன் அவன் தனக்குக் கற்பித்த பாடத்தைப் பிழையில்லாமல் திருப்பிக் கற்பிக்க ஆரம்பித்தாள்.

காத்திருந்த காதல் நெஞ்சங்கள் தங்கள் காதலை அழகிய இல்லறமாக ஆக்கும் முயிற்சியில் வெற்றிக் கனியை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர்.

வெற்றிக்கனியைப் பறித்த போது அவர்களது மனதின் ஏக்கங்கள், தேடல்கள் எல்லாம் மறைந்து மனம் நிறைந்து இருந்தது. மீண்டும் மீண்டும் வெற்றிக்கனியைச் சுவைத்துப் பார்க்க எண்ணியது அவர்களது காதல் மனம்.

மறுநாள் காலையில் ஐந்து மணிக்கு அலாரம் அடித்த சத்தத்தில் அடித்துப் பிடித்துக் கொண்டு எழுந்த வனை எழ விடாமல் செய்தது உதய்யின் கரங்கள்...

"ப்ளீஸ் உதய்... டைம் ஆயிருச்சு..."

அவனின் கையை விலக்கப் போராடிக் கொண்டே அவனைக் கெஞ்சிக் கொண்டிருந்தாள்,

"அஞ்சு மணிதானே ஆகுது..." என்றவன், அவளை இழுத்துத் தன் மீது போட்டுக் கொண்டான். அவன் கண்கள் மூடி இருந்தபோதும் அவனது கைகள் தனது பணியைச் செவ்வனே செய்தன.

அதில் நெளிந்தவள்... "அத்தை என்ன நினைப் பாங்க...?"

"ஒண்ணும் நெனைக்க மாட்டாங்க..." என்றவன் இப்போது கண்களை விழித்திருந்தான்.

"நித்யாக்கா ஓட்டியே மனுசனைக் கொன்னுரு வாங்க... ப்ளீஸ் உதய்..."

"அவங்களுக்கு வேற வேலையில்லை..." என்றவன் தன் கடமையில் கண்ணாயிருந்தான்.

இருவரும் அறையை விட்டு வெளியில் வரும் போது மணி ஒன்பதாகி இருந்தது.

தங்கவேலு கடைக்கும், முத்து அலுவலகத்துக்கும் சென்றிருந்தனர். அஜித் கூட பள்ளிக்குச் சென்றிருந்தான்.

நித்யா அவர்களைக் கண்டு கேலியாய்ச் சிரித்தவள், "என்ன உமா... நேத்து சாப்புட்ட முருங்கக்கா நல்லா வேலை செஞ்சுச்சா...?" என்று கண்ணடித்துக் கேட்க...

"அய்யோ அக்கா... என்ன இப்படிப் பேசுறீங்க...?" என்று அழகாய் வெட்கப் பட்டவள் உதய்யின் முதுகின் பின் ஒளிய...

"என்ன அண்ணி... எம் பொண்டாட்டியையே ஓட்டு றீங்களா...?" தன் கையைப் பின்னால் கொண்டு சென்று மனைவியை முன்னால் இழுத்த உதய் அவளை ஆறுத லாய் அணைத்துக் கொண்டு கேட்க...

அவனது செயலில் நித்யாதான் வெட்கப்பட வேண் டியதாய்ப் போயிற்று. மேலே அங்கு நிற்க முடியாமல் அங்கிருந்து ஓடி விட்டாள்.

"அது... அந்தப் பயம் இருக்கணும் அண்ணி..." என்று நித்யா சென்ற திசையை நோக்கிச் சத்தமிட்டவன் வாய் விட்டுச் சிரித்தான்.

அவனின் சிரிப்பை ஆசையுடன் பார்த்துக் கொண் டிருந்தாள் அவனது காதல் மனைவி.

சிறையில் இருந்த மகாதேவனுக்குச் சுற்றுப்புறம் மறந்து போனது.

தான் யார்? எதுக்காகச் சிறையில் இருக்கிறோம் என்பதை மறந்து போனார்.

அவரது மூளையில் இருந்த ஒரே நினைவு, அபி மட்டுமே...!

'அபி ஏன் அப்படிச் செய்தாள்? என்னை விட்டுட்டுச் சாக அவளுக்கு எப்படி மனசு வந்திச்சு...? ஏன்... ஏன்... ஏன்...?' இந்தக் கேள்விகள் மட்டுமே அவரின் மனதை ரணமாபித்து இருந்தது.

ஏனெனில் அபியின் மரணத்தோடு அவரது நினை வுகள் நின்று போனது. அவர் ஹரியைக் கொல்ல

முயற்சித்தாக அபி எழுதிய கடிதத்தைக் காவலர்கள் படிக்கும் போது, அவர் அபி இறந்த அதிர்ச்சியில் இருந்த தால் அது அவர் மனதில் பதியவில்லை.

'அபி ஏன் என்னைத் தனியா விட்டுட்டுப் போனா?' என்ற கேள்வி மட்டுமே அவரது மனதில் தேங்கிப் போனது. அந்தளவுக்கு மனைவியை நேசித்தார் அவர்.

தனக்கு எதிராய் மகன் திரும்புகிறான் என்று அவனைக் கொல்லத் துணிந்தவர்... அபியும் அவருக்கு எதிராகச் சதி செய்யப் போகிறார் என்று தெரிந்து இருந்தால் ஒருவேளை அபியையும் கொன்றிருப்பாரோ...?

நல்ல வேளை. அபி மேல் கொண்ட காதலோடு அவரது நினைவுகள் நின்றது கூட ஒருவிதத்தில் நல்லது தான்...

அப்படியாவது அபி மேல் வைத்த காதலுக்காக வாவது அவர் உண்மையாக இருக்கட்டுமே...!

தனக்குள் சிந்தித்துக் கொண்டிருந்த மகாதேவன் ஒரு நாள் வாய் விட்டுச் சிரித்தார்... பின் தனக்குள் ஏதோ பேசிக் கொண்டு திரிந்தார்.

சிறைச் சுவர் முழுவதும் அபி, அபி என்று எழுத... அவரது நடவடிக்கையில் சந்தேகப்பட்ட ஜெயிலர் அவரை மருத்துவப் பரிசோதனைக்கு அனுப்ப அவருக்கு மனநலம் பாதிக்கப்பட்டு இருப்பது நிரூபணமானது.

அதற்கென்று இருந்த மருத்துவ மனையில் அவர் அனுமதிக்கப்பட்டார். அவரது தண்டனை கூட, அவரது

உடல் நலம் கருதி தள்ளி வைக்கப்பட்டது. மனநலம் பாதிக்கப்பட்ட குற்றவாளிகளுக்குத் தான் நம் நாட்டில் எந்தத் தண்டனையும் கிடையாதே...!

ஹரி தான் அவ்வப்போது அவரை வந்து பார்த்து விட்டுப் போவான். அவனைக் கூட அவரால் அடையாளம் காண முடியவில்லை.

இந்நிலையில் உமா கருவுற்றாள். விசயம் கேள்விப் பட்ட குடும்பத்தினர் அவளைக் கொண்டாடினர். உதய்தான் அவளை முறைத்துக் கொண்டிருந்தான்.

முன்னே குழந்தைக்காகப் பெண்கள் அரச மரப் பிள்ளையாரைச் சுற்றுவார்கள். இல்லை, கணவனைச் சுற்றுவார்கள்.

ஆனால் உமா வித்தியாசமாக மாமியாரை அல்லவா சுற்றினாள்!

ஆம்... உமா படிப்பு முடிக்கும்வரை குழந்தை வேண்டாம் என்று உதய் பிடிவாதம் பிடிக்க, அவள் இந்த விசயத்தை மாரீஸ்வரியிடத்தில் கொண்டு செல்ல... அவர் மகனைத் திட்டி விட்டார்.

"உமா படிச்சாப் படிக்கட்டும். அதுக்கும் குழந்தைக்கும் என்னடா சம்பந்தம்...? வீட்டுல இத்தன பேரு எதுக்கு இருக்கோம்...? உன் குழந்தையை நாங்க பார்த்துக்க மாட்டோமா...?" என்று சண்டை பிடிக்க,

அவரோடு சேர்ந்து மொத்தக் குடும்பமும் உமாவுக்கு ஆதரவாக... உதய் தான் தன் பிடிவாதத்தைத் தளர்த்த

வேண்டியதாய்ப் போயிற்று... அதன் விளைவு, உமாவின் வயிற்றில் கருவாய்...!

"மச்சான்... என் மேல கோபமா...?" தனிமையில் அவனிடம் கேட்டபடி அவனை நெருங்கி அமர்ந்தவளைக் கண்டு அவனாலும் அதற்கு மேல் முறைக்க முடியவில்லை. அவளது மச்சான் என்றழைப்பில் அவன் டோட்டல் சரண்டர்.

"கோபம் எல்லாம் இல்ல... இந்த மாதிரி நேரத்துல உன் மேல நான் கோபப்படுவேனாடி!"

அவளது வார்த்தையில் அவன் தன் உள்ளத்து மகிழ்ச்சியை வெளிப்படுத்த, அவள் நிம்மதியாய் அவன் தோளில் தலை சாய்ந்தாள்.

"உன்னைய மாதிரி ஒரு பொண்ணைப் பெத்துக் கொடுடி."

"ம்ஹூம். உங்களை மாதிரிப் பையன்தான் வேணும், எனக்கு..." அவன் மீசையைப் பிடித்து இழுத்தபடி சொன்னவளைக் கண்டு,

"இல்ல பொண்ணுதேன்..." என்க...

"இல்ல பையன்..." என்று அவள் வேகமாய் மீசையைப் பிடித்து இழுத்ததில் அவனது உதடும் அவளது உதடும் உரச...

தங்களது விவாதத்தை மறந்தவர்களாய் தங்களது இதழ்களை ஒட்டி உறவாட விட... அதில் மன வேறுபாடு மறந்து தங்களுக்குள் ஐக்கியமாயினர்.

சங்கீதாவின் வளைகாப்பு வர, உமாவின் உடல் நிலையை முன்னிட்டு அவளால் சென்னை செல்லக் கூடாது என்று மருத்துவர்கள் சொன்னதால்...

ஹரி தங்கையின் உடல் நலம் முன்னிட்டு, சங்கீதாவை அழைத்துக் கொண்டு மதுரைக்கே வந்து விட்டான்.

"சாஸ்திரம், சம்பிரதாயம்னு ஒண்ணு இருக்கே மாப்பிள்ளை..." மாரீஸ்வரி இழுத்தபோது...

"அங்கே எடுத்துச் செய்ய யார் இருக்கா அத்தை...? நமக்குள்ள எதுக்கு ஃபார்மாலிட்டீஸ் எல்லாம்..." என்று அவரைச் சமாதானப்படுத்தி விட்டான்.

ஹரியின் அன்பில் உமா முற்றிலும் நெகிழ்ந்து போனாள். உடன்பிறந்த சகோதரனாக இருந்தால் கூட இந்தளவுக்கு அன்பாக இருந்திருப்பானா... என்று தெரியாது. ஆனால் ஹரி அதை விட ஒரு படி மேலே நின்றான்.

வளைகாப்பு நல்லபடியாக முடிந்தது... உமாவும் ஆசையோடு தனது இரு கைகளிலும் கண்ணாடி வளையல்களை அடுக்கிக் கொண்டாள்.

இரவு உதய் அவளது கைகளைப் பார்த்து, "உனக்குக் கண்ணாடி வளவி பிடிக்காதே, உமா... பிடிங்கலைன்னா கழட்டிரு..." என்க,

"உங்களுக்குப் பிடிக்குமே..." என்றவளின் வார்த்தையில் காதல் நிரம்பி வழிந்தது.

அன்றைய நாள் நினைவில் ஓட, அவன் அவளைத் தன் அருகில் அழைத்தவன் காதலாய் அணைத்துக் கொண்டான்.

இரண்டு மாதம் கழித்து சங்கீதா பெண் மகவைப் பெற்றெடுத்தாள்...

தனது மகளை ஆசையுடன் தூக்கிய ஹரி, மகளது தோற்றத்தில் ஆச்சரியப்பட்டுப் போனான்...

அவனையும் அவனது அன்னையையும் கலந்து பிறந்திருந்த மகளை அணைத்துக் கொண்டவனின் கண்கள் கலங்கின.

"நிச்சயம் வரேன் கண்ணா... ஆனா, அதுக்கு முன்னாடி நான் செய்ய வேண்டிய வேலை ஒண்ணு இருக்கு... அதை முடிச்சிட்டு நிரந்தரமா உன் கூட வந்து இருக்கப் போறேன்..."

அன்று அவனது அன்னை கூறிய வார்த்தைகள் இன்று அவன் காதில் ஒலித்தன.

அன்று அவர் கூறியதற்கான அர்த்தம் இன்று அவனுக்குப் புரிந்தது.

கணவனின் கண்களில் கண்ணீர் வழிந்ததை உணர்ந்த சங்கீதா, அவனது கையை ஆறுதலாய்ப் பற்றினாள்.

"கீத்து... மாம்..." என்று மகளை அவளிடம் காட்டியவன், மகளோடு சேர்த்து மனைவியையும் அணைத்துக் கொண்டான்.

பதினாறாம் நாள் ஹரி - சங்கீதாவின் பெண்ணுக்குப் பெயர் சூட்டும் விழா வைக்கப்பட்டது.

ஹரி தனது அன்னையின் நினைவாக மகளுக்கு அபிநயா என்று பெயர் வைத்தான்.

சங்கீதாவும் அவனது மனம் புரிந்தவளாய் அதற்குச் சம்மதித்தாள்.

குட்டி அபியின் அழகில் மயங்கிய அஜித், அவனது அன்னையிடம், "அம்மா... சைலு நோ... வேணாம். எனக்கு அபி பாப்பாதான் வேணும்... அபிதான் எமி மாதிரி அழகா இருக்கா... " என்று சொல்ல...

நித்யா கொலைவெறியுடன் மகனை முறைத்துப் பார்த்தாள். அண்ணன் மகளை விட்டுக் கொடுக்கவும் முடியாமல், அதே சமயம் நாத்தனார் மகளைக் குறை சொல்லவும் முடியாமல், மகனைக் கண்டிக்கவும் முடியாமல் சங்கடப்பட்டுப் போனாள்.

"கொழுந்தனாரே... இப்ப உங்களுக்குச் சந்தோசம் தானே..." என்று உதய்யைப் பார்த்து அவள் கடுகடுத்தாள்.

"இல்லையா பின்னே ... எங்க சிங்கக்குட்டி சூப்பரா செலக்ட் பண்றானே... அப்படியே என்னை மாதிரி..." என்று சொன்னவன், உமாவைப் பார்த்துக் கண் சிமிட்டினான்.

லேசான மேடிட்ட வயிறுடன் அழகாய் இருந்தவளைக் கண்டு அவனுக்குக் கணவனாய்ப் பெருமிதமாய் இருந்தது.

உதய் பேசியதைக் கேட்டு அனைவரும் சிரிக்க...

அழகு, "ம்... எங்க மச்சான் யோகம் யாருக்கு வரும்...?" என்று பெருமூச்சு விட...

"என்ன அழகு... பெருமூச்சு எல்லாம் பலமா இருக்கு..." உதய் அடிக் குரலில் கேட்க...

"ஏன் மச்சான்... நீங்க எல்லாம் கல்யாணம் பண்ணிக்கிட்டு சந்தோசமா இருக்கீங்களே... இந்தச் சின்னப் பையனை பத்திக் கொஞ்சமாவது நெனைச்சுப் பார்த்தீங்களா...?"

"டேய், ரொம்பத்தான் கவலைப்படாதே... அழகர் மலை, திருப்பரங்குன்றம், நாயக்கர் மகால் எல்லாம் உன் காதலைக் கதை கதையாச் சொல்லுதாமே..."

"மச்சான், உங்களுக்கு எப்படி இது தெரியும்...?" அழகு திகைத்தான்.

"ஓய்... எங்களுக்கு எல்லாப் பக்கமும் கண்ணு இருக்கு... எனக்கு எல்லாம் தெரியும்... அதே மாதிரி எதை எப்போச் செய்யணும்னும் எனக்குத் தெரியும்... நீ பொத்திக்கிட்டு இரு..."

உதய் சொன்னதும் அழகு கை கட்டி, வாய் பொத்தி, "இது ஓ.கே.வா மச்சான்..." என்க... அதைப் பார்த்து,

"ஆகா... காதலு என்னம்மா ஆட்டுதுடா உன்னை... சூப்பர்... என் தங்கச்சி கிட்டேயும் இதையே ஃபாலோ பண்ணு... லைஃப்புல நீ சக்சஸ்தான்..." என்றான் சீனியராக.

"அனுபவம் பேசுதோ மச்சான்..." சிரியாமல் கேட்டவனை முறைத்த உதய்யை உமா கூப்பிட,

"இதோ வர்றேன் உமா..." என்றபடி அவன் அழகை மறந்தவனாய் ஓட, அழகின் சிரிப்பு உதய்யைத் துரத்தியது.

இரவின் தனிமையில் யோசனையாய் இருந்த உமாவின் அருகில் அமர்ந்த உதய், அவளது மூக்கை ஆட்டியபடி,

"என்ன, யோசனை எல்லாம் பலமாயிருக்கு?"

"உதய்... நம்ம குழந்தைக்கு என்ன பேர் வைக்கலாம்...? ப்ளீஸ், சொல்லுங்களேன்... எனக்கு ஆசையா இருக்கு..." என்று கெஞ்சியவள், பின் ஏதோ தோன்ற,

"நயன்தாரா, த்ரிஷான்னு சினிமா நடிகை பேர் சொன்னீங்க... நான் பொல்லாதவளா ஆகிருவேன்..."

"என்ன உமா இப்படிச் சொல்லிட்ட... நம்ம பொண்ணுக்கு இந்த ஆன்ட்டிங்க பேரை வைப்பேனா...?" என்றவனை அவள் நிம்மதியுடன் பார்க்க...

"ஸ்ரீதிவ்யா பேரு உனக்குப் பிடிச்சிருக்கா...?"

அதைக் கேட்டு முகம் மலர்ந்தவள், "சூப்பர் உதய்..." என்று அவனை அணைத்துக் கன்னத்தில் முத்தமிட்டவளின் சந்தோசம், அடுத்து அவன் பாடிய பாடலில் அப்படியே வடிந்தது.

"ஊதா கலரு ரிப்பன், உனக்கு யாரு அப்பன்... ஊதா கலரு... ஊதா கலரு..." என்று அவன் பாட...

"உதய்..." என்று பல்லைக் கடித்தவள் அருகில் இருந்த தலையணையால் அவனை அடி மொத்தினாள்.

"ஏய்... விடுடி..." என்று சொன்னாலும் அவள் கொடுத்த அடிகளைச் சுகமாய்த் தாங்கிக் கொண்டான்.

ஆண் என்ற நினைவில் திமிராய் கர்வமாய் சிங்கம் போல் வலம் வந்த உதய்யைத் தனது காதலில் கட்டிப் போட்ட பெருமை இந்தப் பெண்மானையே சேரும்.

அவனை அடித்து அடித்துச் சோர்ந்தவளை அணைத்துக் கொண்டவன்,

"பாரு... எம்புட்டு மூச்சு வாங்குதுன்னு... இதுக்குத் தான் சொல்றது, ரொம்பக் கோபப்படக் கூடாதுன்னு..."

"பின்னே... நீங்க சொன்னதுக்கு உங்களைக் கொஞ்சுவாங்களாக்கும்..." என்றவளிடம்,

"கொஞ்சுனாத்தான் என்னடி..." என்றவன், "உம்மா... ஒரு உம்மா கொடுடி... " என்று தன் இதழைக் காட்டிக் கண் சிமிட்டிக் கேட்க...

வெகு நாட்கள் கழித்து அவன் வாயில் இருந்து வந்த அந்த வார்த்தையில், அவளது மனம் அவன் மீதான காதல் பக்கத்தை வேகமாய்ப் புரட்ட...

அதில் உணர்ச்சி வசப்பட்டவள், அவனது கழுத்தை வளைத்து அவனது இதழில் தனது இதழை அழுத்தமாய்ப் பதிக்க...

அதற்காகக் காத்திருந்தாற் போன்று அவன் அவளை அள்ளிக் கொண்டான்.

ஆறு வருடங்கள் சென்று...

"ஏய் அபி... ஒழுங்கா பால் போடல... உன் மண்டை யில கொட்டிருவேன்..." என்ற மித்ரா பேட்டைப் பிடித்துக் கொண்டு அபிநயாவின் பந்திற்காகக் காத்திருந்தாள்.

"மச்சான்... மித்து கள்ள ஆட்டம் ஆடுறா... நீங்க ளாவது சொல்லுங்க..." என்று கண்ணைக் கசக்கினாள் அபி.

அஜித்துக்கு அபியை மிகவும் பிடிக்கும் என்றாலும் ஐந்து வயதுத் தங்கை சங்கமித்ராவிடம் அவனுக்குச் சற்றுப் பயமே... ஏனெனில் வீட்டின் இளவரசிக்கு அந்தள வுக்கு எல்லோரிடத்திலும் செல்லம். அவனால் தங்கையை எதிர்த்துச் சுட்டு விரலைக் கூட அசைக்க முடியாது.

இருந்தாலும் அபிக்காகத் தங்கையிடம் பரிந்து பேசினான். "மித்து... நீயே பேட் பண்ணிட்டு இருந்தா எப்படிம்மா...? அபிக்குக் கொஞ்சம் குடும்மா..." நயந்து தான் அவன் பேசினான்.

"அண்ணே... என்னை எப்படி நீ இப்படிச் சொல்ல லாம்...?"என்று அவனிடம் கோபித்தவள், "பெரியம்மா..." என்று அலற,

மித்ராவின் சத்தத்தில் அங்கு வந்த நித்யா, என்ன ஏது என்று கூட விசாரிக்காமல், "அஜித்து... பாப்பாவை அழ வைக்காதேடா..."

"அம்மா... மித்து, அபிக்குப் பேட் கொடுக்க மாட்டேங் கறாம்மா..."

"அபி, நீ பெரிய பொண்ணுதானே... பாப்பாவுக்கு விட்டுக் கொடு..." என்று சொல்லிட்டு நித்யா உள்ளே செல்ல...

மித்ராவை விட ஆறேழு மாதம் மூப்பான அபி திருதிருவென விழித்தாள்.

"போடுடி பாலை..." தெனாவெட்டாய்ச் சொன்ன மித்ராவை, அபியால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

அபி குணத்தில் அவளது அன்னை சங்கீதாவைப் போல் பயந்த சுபாவமாய் இருந்தாள்.

மித்ராவின் செயலிலேயே புரிந்து இருக்குமே அவள் யார் மகள் என்று...!

ஆம், உமா உதய்யின் மகள்தான் அவள்...

உருவத்தில் அன்னையை உரித்து வைத்திருந்தாலும், குணத்தில் தந்தையைக் கொண்டு இருந்தாள்.

உமா தனது அன்னையின் ஞாபகமாக தனலெஷ்மி என்று அவளுக்குப் பெயர் வைத்தாலும் பள்ளியில் அவள் சங்கமித்ராதான்.

விளையாடிக் களைத்துப் போய் அமர்ந்த மித்ரா, தன் அருகில் அமர்ந்த அபியைப் பார்த்து, "போய் அம்மா கிட்டச் சொல்லி ஜூஸ் வாங்கிட்டு வா..." என்று அதிகாரம் செய்ய...

"போடி, முடியாது..." என்று அபி கோபத்தில் முறுக்கிக் கொள்ள...

"அப்போ எங்கண்ணனை உங்க கூடப் பேசக் கூடாதுன்னு சொல்லிருவேன்..." என்றாள் மித்ரா தீர்மானமாக.

ஐந்து வயது அபிக்கு, அஜித்தை மிகவும் பிடிக்கும்.

"இல்ல வேணாம்... நான் போய்க் கொண்டு வர்றேன்..."

மித்ராவின் வார்த்தைக்குப் பயந்து வீட்டினுள் ஓடினாள்.

என்னே ஆச்சரியம்! தனத்தின் சொல்லுக்கு அபி கட்டுப்பட்டு நடக்கிறாளே... இதுதான் கடவுளின் கணக்கு என்பதா...?

அன்று அபியின் பிறந்த நாள் என்பதால், ஹரி குடும்பத்தினருடன் மதுரைக்கு வந்திருந்தாள்.

ஒவ்வொரு வருடமும் பிறந்த நாளுக்கு இங்கு வந்துவிடுவர் ஹரி குடும்பத்தினர்.

அதற்கு அழகு, தன் மனைவி கலைவாணி, இரண்டு வயது இரட்டைப் பையன்களுடன் வந்திருந்தான்.

கலைக்குப் படிக்கும்போதே அவளது தந்தை மாப்பிள்ளை பார்க்க, உதய் அவரிடம் பேசி கலையை அழகுக்குத் திருமணம் செய்து வைத்தான்.

இப்போது இரண்டாவது குழந்தை உண்டாகி இருந்தாள் கலை. அதுவும் இரட்டைக் குழந்தை என்று மருத்துவ ஸ்கேனில் பார்த்துத் தெரிந்து கொண்டாள்.

பிறந்த நாள் விழா முடிந்ததும் எல்லோரும் பேசிக் கொண்டிருந்தனர்.

அப்போது தங்கவேலு, "என் மாப்புள்ளையைப் பாருங்க... வீரனாட்டம் ரெண்டாவது ரெட்டைக் கொழந் தையை ரெடி பண்ணிட்டான்... நீங்க எல்லாம் எப்போ ரெண்டாவது கொழந்தை பெத்துக்கப் போறீங்க...?" என்று கேட்கவும்,

உதய் - உமா, ஹரி - சங்கீதா, முத்து - நித்யா மூன்று ஜோடியும் வெட்கத்தில் நெளிந்தனர்.

"அபி இன்னும் கொஞ்சம் வளருட்டும் மாமா... " என்று மட்டும் ஹரி சொன்னான்.

"ஐயோ பெரியப்பா... அவுகளாவது நிம்மதியா இருக்கட்டும்... இதுங்களைப் பெத்துட்டு நான் படுற பாடு எனக்குத்தான் தெரியும்... ரெண்டும் அப்பனை மாதிரி ரெட்டை வாலுங்க...

"இதுல மூணாவதா இவரு வேற... அடுத்த ரெண்டு வயத்துக்குள்ள... எப்படித்தான் சமாளிக்கப் போறேனோ தெரியலை..." என்று கலை சலித்து கொள்ள... அழகோ காதலுடன்,

"செல்லம்... நீ சொல்றதைப் பார்த்தா சலிச்சுக்குற மாதிரித் தெரியலையே... சந்தோசமா சொல்ற மாதிரி யில்ல இருக்கு..." என்றவனை அவள் முறைக்க...

அதைப் பார்த்து மற்றவர்கள் சிரிக்கப் பெரியவர்கள் சிரிப்பதைக் கண்டு சிறியவர்களும் வாய் விட்டுச் சிரித் தனர்.

அன்றிரவு மகள் இல்லாமல் அறைக்குள் வந்த உமாவைப் பின்னால் இருந்து அணைத்தான் உதய்.

"எங்கடி உன் ஒட்டுப்புல்ல காணோம்...?"

"அத்தை கிட்ட தூங்கப் போயிட்டா..."

"அப்பாடி, நிம்மதி..." என்றவன், அவளை அள்ளிக் கொண்டு கட்டிலை நோக்கி நடக்க...

"என் பொண்ணு இல்லைன்னா உங்களுக்கு நிம்மதியா...?" என்று உமா அவனை முறைக்க...

"பின்னே என்னடி... எப்பப் பார்த்தாலும் அம்மாவை பேட் டச் பண்ணாதேன்னு என்னைச் சும்மா சும்மா மிரட்டிக்கிட்டே இருக்கா..." என்று முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டான்.

எல்லோரையும் மிரட்டுபவனை மிரட்டினாள் அவனது செல்ல மகள்.

ஜெயஸ்ரீதான் மித்ராவுக்கு இந்தப் பழக்கத்தைச் சொல்லி கொடுத்து இருக்கிறாள்.

பள்ளி செல்லும் அவளுக்கு நல்லது கெட்டது தெரிய வேண்டும் என்பதற்காக இது அவளது ஏற்பாடு.

"அவள் சொன்னாங்கிறதுக்காக அய்யா என்னை பேட் டச் பண்ணாமத்தான் இருக்கீங்களாக்கும்...?"

சரசமாகக் கேட்டவளைக் கண்டு கண்கள் மின்ன அள்ளிக் கொண்டவன், அவசரமாய் அவளை நோக்கிக் குனிந்தவன், வேகமாய்ச் செயலில் இறங்கினான்.

"எதுக்கு இந்த அவசரம்? மித்துதான் இல்லையே!" அவனது அவசரத்திற்கும் வேகத்திற்கும் அவள் அணை போட முயல...

"இது அதுக்கு இல்லடி... செகண்ட் ரவுண்ட்ல உங்கண்ணன் எங்கண்ணன் எல்லாரையும் நான் வின் பண்ணணும்கிற வேகம்டி..."

அவன் சொன்னதன் அர்த்தம் புரிந்தவளின் முகம் செவ்வானமாய்ச் சிவந்தது.

கணவனின் எண்ணம் புரிந்தவளாய், அவனின் செயலுக்குக் காதலுடன் உடன் பட்டாள் அவள்.

இனி அவர்கள் வாழ்வில் மகிழ்ச்சி... மகிழ்ச்சி... மகிழ்ச்சி மட்டுமே...!

இணைந்தது இரு இதயங்கள்...!

தமிழ்நேசன் மின்நூலகம்
www.tamilnesan1981.blogspot.in



ஸ்ரீகலாவின்

திணையுமோ திருதயம்?